பல வித்வான்கள் பாடிய

தனிப்பாடற்றிரட்டு

மூலமும் உரையும்

B. ரத்தின நாயகர் ஸன்ஸ்
சென்னை

பல வித்துவான்கள் பாடிய

தனிப்பாடற் றிரட்டு

முதற் பாகம்

திருநெல்வேலி
திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்
(எம். ஏ., எம். எல்., அட்வகேட்)
இயற்றிய
உரையுடன்

சென்னை:
B. இரத்தின நாயகர் ஸன்ஸ்
அவர்களால் பதிப்பித்தது

காபிரையிட்] 1948 [விலை ரூ. 5.

முன்னுரை

செந்தமிழ்ப் பாடல்களின் செவ்விய நயங்கள் முற்காலத்திற் றெருகுக்கப் பெற்ற புறநானூறு, அகநானூறு முதலிய எட்டுத்தொகை நூல் களால் இனிதறியக் கிடப்பன. சங்கத்தார் காலத்திற் றிகழ்ந்த பற்பல பெரும் புலவர்களின் கவித் திறமையும், மனப்பாங்கும் அந் நூல்களாலே தெள்ளிதிற் புலனுதற்போல, பிற்கால மூவேந்தர் அவையிலும், அவர் களுக்குப் பின் தமிழை வளர்த்து வந்த வள்ளல்கள், செல்வர்கள் ஆதாவிலும் சிறப்புற்றேங்கிய புலவர்களின் எண்ணிறந்த சொற்பொரு ணயங்கள் 'தனிப்பாடற்றிரட்டு' என்னும் தொகை நூலினுலேயே நாம் தெரியலாயினேம். முற்காலப் புலவர் கருத்து நூட்பத்தையும், பிற்காலப் புலவர்கள் சொல் நூட்பத்தையும் குறிக்கோளாகக் கொண்டனர். ஆதலால், இரு வகையார் பாடல்களும் தமிழன்னையின் திருவடிக் கமலங் களுக்கு உவப்பாகச் சாத்தப் பெற்ற பாமாலைத் தொகுதிகளே.

அவற்றுள் தனிப்பாடற்றிரட்டுக்கு உரைகள் பல விருப்பினும், அதன்கணுள்ள பாடல்களே வாலாற்று முறைக்குத் தக்கபடி வரிசைப் படுத்திப் பாடல்களின் பொருளே நன்கு தெளிவுபடுத்திக் காட்டும் விளக்க வுரை இன்றியமையாததா யிருப்பதைக் கருதி இந் நூலானது அத் தேவையை நிறைவேற்றும் நோக்கத்தோடு இயற்றப் பெற்றுள்ளது. இதன்கண் சரித்திர முறைக் கேற்றவாறு புலவர்களின் வரிசை ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. புலவர்கள் பாடல்கள் திருத்தம் பெற வேண்டிய விடங்களில் திருத்தமான பாடபோதங்களே தழுவப் பெற்றுள்ளன. யாவரும் எளிதில் வாசிக்கத் தக்க விதமாய் இதனே யமைக்கக் கருதின மையால் விரிவான குறிப்புக்கள் சேர்க்கப்படவில்லை. பாட்டின் நோக்கத் திற்கும், பொருள் விளக்கத்திற்கும் அவசியமான குறிப்புக்கள் ஆங் காங்கே சுருக்கமாகவும் தெளிவாகவும் சேர்க்கப்பட்டுள்ளன.

இது தனிப்பாடற்றிரட்டின் முதற்பாகம். இதன்கண் கி. பி. 17-ம் நூற்றாண்டு வரை திகழ்ந்த புலவர்களின் அரிய பாடல்களே தொகுக்கப் பெற்றுள்ளன. இதனிரண்டாம் பாகத்தில் அதற்குப் பிற்பட்ட பெரும் புலவர்களின் பாடல்கள் தெரிந்தெடுத்துக் கோவை செய்யப் பெற்றுள்ளன. புலவர் பெயர் குறிப்பிடாமற் கிடைத்த நயமான பாடல்கள் பலவும் இரண்டாம் பாகத்தின் பிற்பகுதியிற் சேர்க்கப் பெற்றுள்ளன. இரு பகுதிகளும் சேர்ந்து சுமார் ஆயிரம் ஆண்டுகளாகத் திகழ்ந்த தமிழ்ப் புலவர்களுட் சிறந்து விளங்கிய பெரும் பாவலர்கள் தனிப் பாடல்கள் யாவும் அடங்கிய கருவூலமாக அமைகின்றன. ஆதலால் தமிழன்பர்கள் யாவரும் தனிப்பாடற்றிரட்டு இரண்டு பாகங் களையும் வாங்கி வாசித்துப் பெரும் பயனெய்துமாறு வேண்டிக் கொள்கிறேன்.

மணிவாசக மன்றம்
திருநெல்வேலி
18—9—39

இங்ஙனம்,
கா. சுப்பிரமணிய பிள்ளை.

பொருளடக்கம்

எண்.	புலவர்களின் பெயர்.		பாடற் றொகை.	பக்க எண்.
	காப்பு	...	1	1
1	ஔவையார்	...	70	3
2	ஔவையார் முதலிய எழுவர்	...	7	33
3	திருவள்ளுவ நாயனார்	...	10	36
4	இடைக்காடர்	...	3	41
5	மதுரை சொக்கநாதர்	...	4	42
6	திருஞான சம்பந்தமூர்த்தி	...	1	44
7	திருமங்கையாழ்வார்	...	1	45
8	சங்கத்தார்	...	2	46
9	திருமழிசையாழ்வார்	...	1	48
10	ஒட்டக்கூத்தர்	...	41	49
11	கம்பர்	...	68	70
12	ஏகம்பவாணர்	...	7	97
13	காளமேகப் புலவர்	...	187	100
14	பொய்யாமொழிப் புலவர்	...	8	182
15	ஒப்பிலாமணிப் புலவர்	...	27	186
16	இரட்டையர்	...	12	198
17	சத்திமுத்தப் புலவர்	...	2	203
18	வாதுங்காமம பாண்டியன்	...	3	205
19	பட்டினத்துச் சுவாமிகள்	...	1	207
20	சிவப்பிரகாச சுவாமிகள்	...	16	207
21	அந்தகக்கவி வீராராகவ முதலியார்	...	20	218
22	பொற்களத்தைப் படிக்காசுத் தம்பிரான்	...	21	229
23	சொக்கநாதப் புலவர்	...	40	238
24	பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்	...	65	257
25	காளிமுத்துப் புலவர்	...	20	286
26	நமச்சிவாயப் புலவர்	...	23	295
27	மதுர கவிராயர்	...	13	307
28	சவ்வாதுப் புலவர்	...	3	313
29	இராம கவிராயர்	...	3	314
30	நயாண்டிப் புலவர்	...	4	316
31	சுப்பிரமணியப் புலவர்	...	1	318
32	கடிகைமுத்துப் புலவர்	...	107	320
33	நாகூர்முத்துப் புலவர்	...	50	375
34	இராமச்சந்திரக் கவிராயர்	...	7	405
35	எல்லீசு துரை	...	1	412
		ஆக பாடல்	870	

செய்யுளகராதி

செய்யுள்.	பக்கம்.
அக்குவடம்புனை	269
அங்கம்வளர்க்க	44
அச்சுதனளிப்பனில	211
அச்சங்கபாணி	363
அஞ்சக்கஞ்ச	384
அஞ்சம்பிளைலெய்து	311
அஞ்சலென்றகாதல	205
அடகெடுவாய்	229
அடல்கொண்டெழு	412
அடிசிற்கினியாளே	40
அடிதங்கச்சி	392
அடிநந்திசேர்தலால்	111
அடிபட்டீர்கல்லா	241
அடுத்துவருந்தொண்ட	213
அட்டாவதானமும்	246
அண்டத்தமரரு	265
அதிமதுரமென்	166
அத்தன்கண்ணுக்கு	382
அத்திக்குதையன்றி	364
அத்திதனை	368
அத்திமுதலெறும்	34
அத்திரம்வேலாவலய	418
அந்தங்கரும்பள்ளி	280
அந்தநாள்வந்திலை	187
அந்தாசலவன்	386
அந்திக்கார்வந்து	252
அந்திராமன	352
அந்திவெடிமுல்லை	307
அப்பனிரந்துண்ணி	132
அப்பாகுமாக்கோ	120
அப்பிலேதோய்	197
அப்பூருஞ்செஞ்சடை	124
அம்பலவாவின்னெரு	255
அம்பமாமுனிவாய்	404
அம்பிகையன்ற	210
அம்பேந்துகையா	143
அரகதத்தை	392
அரகாதிருச்சிற்	112
அரகாசலங்	395
அராவுக்கே	399
அரசனகளங்கன்	77
அரமியஞ்சேர்	339
அரவங்கரந்ததோ	191
அரனவனிடத்தி	209
அரிசிராவணத்தா	389
அரிமருகாகருணை	423
அரியதுகேட்கின்	27
அருந்திணனண்ட	140
அரும்பாக்கிய	276
அரும்பாலகாமுன	,,
அரைத்தசந்தனம்	339
அரையின்முடியி	116
அலங்கலணிமார்ப	84
அலையான்கவடு	314
அல்லைமாலை	400
அல்லிமலர்ப்பண்ணவ	218
அவிசெட்டிவாங்கு	295
அழகிசக்க	373
அற்றதலைபோக	8
அனங்கலக்க	331
அனங்கனம்	393
அன்றுசெல்ல	184
அன்றையிலும்வைய	80
அன்னவயல்சூழ்	161
அன்னவயிற்றி	35
அன்பீன்றதாயென்	266
ஆகத்திலேயொரு	260
ஆசகவியாலகில	202
ஆடல்புரிந்தானென்	115
ஆடாரோபின்னை	135
ஆடிக்குடத்தடையு	102
ஆடுங்கடைமணி	54
ஆடுந்தியாகரே	139
ஆடெரிபடர்ந்த	186
ஆட்டுக்கிசைந்தவ	165
ஆணிவரையுறலால்	110
ஆண்டதனலெனை	217
ஆண்டிகுயவா	140

செய்யுள்.	பக்கம்.
ஆயனுக்குக்கண்மூன்று	156
ஆயன்பதியில	15
ஆய்முத்துப்பந்த	262
ஆசந்திர	349
ஆராயுமுத்தமிழ்	172
ஆரார்தலைவணங்கா	73
ஆரிச்சந்தரயம்படி	362
ஆர்க்குங்குளிரு	290
ஆர்த்தசபை	21
ஆலங்கிடக்கு	251
ஆலங்குடியானை	148
ஆலெங்கேயங்கே	284
ஆலைப்பலாவாக்க	28
ஆவீனமழைபொழிய	415
ஆழியாளுழியயனெழு	76
ஆழியான்பள்ளி	71
ஆழிவாய்ச்சத்தம்	190
ஆளுக்கேயழக	331
ஆறுபெருக்கற்றரு	188
ஆறும்பதினுறும்	134
ஆற்றங்கரையி	42
ஆஞரிலேயே	145
ஆனைகுதிரைதரு	161
ஆனையுரித்தமத	262
இக்கோடிவளைப்ப	346
இடுவோர்சிறி திங்	190
இட்டங்கட்டிய	403
இட்டடிநோவ	89
இட்டமுடனென்	33
இட்டிட்டுவாங்குதலா	112
இத்தாமே	327
இந்தக்கா	378
இந்தவிடை	255
இந்திரன்கலே	243
இந்திரச்செல்வன்	366
இந்துமுடிக்குஞ்	182
இந்தோதிலகநுத	113
இங்காளிதுவிளையு	93
,, ,,	,,
இப்பளப்பாறை	348
இம்பர்வானெல்லை	219
இம்மென்னுமுன்	127

செய்யுள்.	பக்கம்.
இரவலனேயுனக்	414
இரவலாளரேபெரும்	67
இருதன	394
இருந்தவளைப்போ	76
இருந்தாரைகேள்	171
இருந்துமுகந்திருத்தி	7
இருபந்தந்த	379
இருப்போமென்று	252
இருமிருமென்றுசொ	39
இருளிரிருள்வீழுங்கி	96
இலகுபுகழாரை	99
இலக்கணகவிஞர்	15
இலக்கார	348
இல்லெனுஞ்சொல்	220
இழையொன்றிரண்டு	58
இனியதுகேட்கின்	25
இன்றல்லோ	51
இன்றல்லோகம்ப	52
இன்றெழுக்கவே	263
இன்னங்கலிங்கத்	55
இன்னங்கலிமகன்	228
ஈதலறந்தீவினை	30
ஈயாதபுல்ல	231
உங்களிலேயாளெருவ	185
உடுத்ததுவுமேய்த்ததுவு	115
உத்திரத்திற்கோர்	147
உபைய	383
உமையவளுரீயு	74
உம்பரைவாழ்வித்த	250
உருகியுடல்கருகி	91
உரைக்க	360
உலங்கொண்டமணி	309
உரையேனுன்பேரை	270
உலக்குரியபண்டம்	81
உள்ளக்கவலையெலா	273
உள்ளங்கால்வெள்	158
உள்ளவழக்கிருக்க	22
உனக்கின்றியான்	277
உன்னக்கா	361
உன்னுயிருமென்னுயிரு	255
ஊரைச்சுடுமோ	284
எங்கண்மடத்துக்கு	113

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
எடுத்தசனனங்கு	257	ஓங்கியாமா	333
எடுத்து	341	ஓடுஞ்சுழிசுத்த	108
எட்டிகுளத்திலி	151	ஓடுமிருக்குமத	104
எட்டெழுத்தைக்	68	ஓட்டங்கடியதா	107
எட்டேகாலகூணை	9	ஓரானேவனத்தே	411
எட்டொருமாவென்காணி	130	ஓரா	354
எண்ணூயிரத்தாண்டு	24	ஓர்தட்டிலேபொன்னு	230
எண்ணீர்மை	292	கஞ்சர	396
எந்தவூரென்றீர்	38	கஞ்சமுகைபு	144
எப்படியெப்படி	274	கஞ்சிகுடியாரே	196
எல்லப்பனம்மையப்ப	239	கடகரி	377
எவ்வுயிருங்காக்க	36	கடந்தூங்கு	293
எழுத்தாணிதுபெண்	113	கடம்பவனச்சொக்க	160
எனக்குடந்தை	332	கடம்பற்கெண்டோ	157
என்சிவிகையென்	82	கடல்கிழக்கு	70
என்றுபெறுவேன்	60	கடியுண்டகெடு	44
என்னில	395	கடுக்கைமுடி	148
என்னவா	397	கட்டித்தழுவுதலா	105
என்னுடையபே	198	கட்டியடிக்கையால்	108
என்னைக்கொடுத்தா	133	கணிகண்ணன்போ	48
ஏகாம்பர	373	கணிகண்ணன்போக்	49
ஏசியிடலினிடாமை	17	கண்டக்காற்கிட்டுங்	155
ஏதிலேவறியவர்க்கு	407	கண்டாயோபார்	74
ஏமிராவோரியென்பாள்	181	கண்டீரோகாணம்	92
ஏய்ந்ததனங்களிரண்டு	150	கண்டீரோபெண்	137
ஏராட்டும்பூந்தொங்க	283	கண்ணனிடுங்கறி	155
ஏராளைக்காவிலுறை	1	கண்ணபுரங்கோயிற்	157
ஏவைக்குங்கூன்சீலை	279	கண்ணுழையாக்காட்	35
ஏழாளையடித்தபுலி	180	கத்துகடல்சூழ்நா	129
ஏழேழுசங்க	301	கந்தமலர்ப்பிரம	75
ஏறுகட்டியகொட்டிலரங்	177	கர்த்தர	385
ஐம்பொருளுநாற்பொருளு	41	கம்பத்தானைக்கடை	163
ஐயின்சென்னி	207	கம்பமதகடகளிற்	173
ஐயென்றுரைத்தீ	37	கம்மாளனங்கிக்	158
ஒட்டாகவொட்டி	282	கயக்காவிரா	417
ஒருகொம்பிருசெவி	11	கயல்வாய்த்தகண்	216
ஒருபாதிமால்கொள	275	கரஞ்சொண்ணங்	275
ஒருவர்க்கிடமா	254	கரண்டகண்ட	53
ஒருவாணுதல்	294	காமடிய	320
ஒன்றிரண்டுமூன்	114	காரிக்காய்பொரி	123
ஓகாமாவீதோ	,,	காரியதானேயேயுரி	123
ஓங்கியசெந்தமிழ்	66	காரியாய்ப்பரியா	17

செய்யுள்.	பக்கம்.
கரியொன்றுபொன்	170
கருக்கோட்டை	322
கருங்காலிக்கட்டை	24
கருங்குளவிசூறை	23
கருணையாலிந்த	12
கருத்த	357
கருந்தலைசெந்தலை	181
கருப்பைக்குண்	34
கரைக்குவடக்கி	94
கலக்கட	326
கலக்கை	350
கலங்கற்றுறை	176
கலையான்முலைமூடி	100
கலைவாணிகீயுல	49
கல்லங்காடுதனி	88
கல்லடிக்குமுளரி	237
கல்லாதவொருவனை	414
கல்லாலயமாந்தே	419
கல்லெத்தான்மண்ணை	415
கல்வளைக்குண்டி	364
கல்விகரை	372
கல்வியுடையீர்	32
கவளவளை	366
கவியாகுமாதினை	281
கவரிகமலாயர	212
கழியும்பிழைபொ	166
கள்ளிக்கேன்முள்வேலி	417
கற்றனமின்	330
கற்றதைகம்மண்	18
கனதனந்தன	378
கனத்துவரை	333
கனகனங்கம்	376
கன்றுதொட்டு	320
கன்னியுன்றன்	337
கன்னிக்கலசமுலை	85
கன்னபுமாலே	160
கன்னன்வெங்க	371
காக்கைக்காகூகை	141
காஞ்சியிற்பிள்ளை	29
காணக்கண்கூசுதே	8
காணுமல்வேணதெல்லாங்	5
காதமிருபத்து	86

செய்யுள்.	பக்கம்.
காப்பிட்டபிள்ளை	249
காம்புவனம்புக்க	292
காய்ந்துசிவந்து	231
காரொன்றுபோர்படை	180
கார்படைத்த	309
காலப்புயனிகர்	95
காலனையுங்காமனையு	131
காலாற்படியளக்கு	159
காலைஞாயிறு	47
காலையாவிந்தங்	285
காலையிலும்வேலை	153
காலையிலொன்றுவர்	18
காவலனெங்கள்	149
காவொன்றுங்	302
காளத்திகண்ட	256
காளைமுகிற்குலம்	289
காளைந்தேன்	3
கான்றெண்டனி	265
கிட்டாதுபெண்குடி	304
கிளையாளன்சேது	313
குடகர்குணகடலென்	76
குடக்கோடுவா	214
குட்டுதற்கோப்பிள்ளை	237
குண்டைக்கொ	279
குதியானமனை	263
குமிண்டியும்பண்ணை	87
குரங்கனலில்வீ	174
குரங்கிக்காய்ந்திளங்	351
குருவடியை	336
குழற்காலாவிந்தம்	193
குறுமுனிவன்	40
குறையுளாரெங்	77
குன்றுங்குழியு	201
கூடல்புனவா	153
கூதிக்கட்டேழு	124
கூத்தாள்வீழி	133
கூரம்பொறுத்த	290
கூரியவாளாற்	6
கூழைப்பலாத்தழைக்க	7
கூவராயன்றியா	198
கூற்றுவனைவின்மதனை	178

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
கூன்கலிங்	374	சற்றேபருத்ததன	90
கெஞ்சுமா	347	சாதியிலேதொண்ணூற்	38
கொக்குப்பறக்கும்	310	சாரங்கபாணியர்	163
கொங்குதேர்வாழ்க்கை	42	சித்திரமாமண்டபங்க	308
கொங்குலவுதென்றில்லே	139	சித்திரமுங்கைப்	5
கொங்கைகும்ப	369	சிந்தாமணிசங்கு	252
கொடிக்கத்	353	சிரம்பார்த்தானீசன்	72
கொடியதுகேட்கி	25	சிரப்பான்மணி	14
கொட்டமிடு	327	சிரித்துப்புரமெரித்	148
கொட்டைப்பாக்கும்	122	சிறுவனேபயறு	118
கொம்பிலேயேதீனி	109	சின்னஞ்சிறுபிள்ளே	235
கொள்ளுகையானீரிற்	106	சீதமா	390
கொற்கையான்மாறன்	73	சீதாரவிந்தபுயன்	197
கொன்றைமலர்தரித்தா	157	சீமானுநாமகள்	194
கோக்கண்டுமன்னர்	60	சீரங்கத்தாரும்	147
கோரத்துக்கொப்போ	53	சீராடையற்ற	226
கோலெடுத்துக்கோ	306	சீரிலங்குமாடகூட	410
கோளரவேந்துல	224	சீர்கமுத்தமுகில்	238
கோளரிருக்குமூர்	162	சுண்ணும்புதீட்ட	278
சங்காரவையகமும்	355	சுத்தபாற்கடலில்	124
சங்காற்குமாறு	146	சுரதந்தனிலிவேத்த	5
சங்கதாதாளங்கா	383	சுருக்கவிழ்ந்த	127
சங்கறுப்பதெங்	44	சுரும்பேய்க்கும்	291
சங்கநிதி	372	சுற்றுங்கருங்குளவி	21
சங்குதீர்த்தம்	120	செகத்தாயெனவந்த	267
சடங்க	335	செகமதின்மிக்க	268
சடம்பழுக்கு	293	செங்கைவரிச்சிலே	316
சட்டியிலேபாதியந்த	136	செட்டிமக்கள்வாசல்	87
சண்டைப்பைக்குள்	34	செஞ்சுடரின்மைந்த	206
சண்டாளிசூர்ப்ப	9	செந்தமிழ்ச்செல்வ	412
சதாரங்கர்சங்கத்	154	செந்திற்குமரன்	189
சத்தம்பயிலும்	56	செப்பத்திலுன்னே	274
சத்தாதியைந்தை	168	செம்மான்காத்த	19
சத்திக்கும்	402	செய்யாதசெய்த	162
சந்தனத்தை	355	செய்யுட்கிடைமறி	109
சந்தானமே	323	செருத்தாக்கு	341
சந்திரனுக்குட	245	செருப்புக்குவீரை	123
சம்புதைக்குங்	362	செல்லப்பன்கச்சி	315
சராஜசம்பு	289	செல்லன்புதல்வன்	61
சரந்தரா	398	செல்லாரும்பொழி	242
சருக்கரை	343	செல்லுக்கு	365
சலமேதோசங்கந்தா	410	செற்றலரைவென்ற	125

செய்யுள்.	பக்கம்.
சென்றலந்தார்	374
சென்னபுரிமேவி	315
சென்னிமுகமாறு	118
சேதுபதிகாத்த	299
சேமங்குருகையோ	46
சேய்கொண்டாரும்	214
சேய்மொழியோ	41
சோலர்கோன்	12
சோததேவேடன்	282
சோதாளெல்லா	311
சேற்றுக்கமலவய	83
சேனைதழையாக்கி	97
சொலங்க	397
சொல்லாமலேபெரியர்	15
சொல்லுக்கினிய	248
சொல்லுமல்லும்	223
சொன்னசந்தக்கவி	62
சொன்னமன்னமா	418
சோ, கா, மா, வ, வா, தா	122
சோதிச்சவரி	248
சோமன்புறப்பட	175
சோனையுங்காத்து	226
ஞாலத்தவரும்	299
ஞானசபைகனக	119
ஞானவாணென்று	37
தங்கள்குல	373
தங்கடனமிருக்க	189
தடக்கடலிற்பள்ளி	125
தடக்கும்பகிம்புரி	302
தடக்கயத்	349
தடக்கடக்கய	359
தடத்தத்தளி	365
தடங்கொண்டகல்	194
தடிக்கவில்லை	400
தண்டாங்கூர்மா	152
தண்டாமலீவ	21
தண்டமிழ்	369
தண்ணமுத	368
தண்ணீருங்காவிரி	9
தத்தித்தானதுதி	141
தந்தப்பாது	377
தந்துகந்து	381
தந்தைபிறந்திற	144
தமிட்டார	324
தம்பலிக்கு	334
தரகலாதனங்	379
தரைகண்டமட்டும்	233
தலையவிழ்	78
தற்கோலிப்பூ	69
தனதனுக	375
தனதிமெய்	402
தனம்பொன்பணம்	311
தன்னுடன்கூடப்பிறந்த	64
தாண்டித்திரியு	259
தாண்டியொருத்தி	139
தாண்டுபரி	371
தாதிதூதோதீது	145
தாலமுற்றும்	327
தாயோடறுசுவை	30
தானவாரண	351
திகிரிவட்டக்குடை	63
திக்குளெட்டுக்கயம்	67
திங்கட்குடையுடை	14
திங்கணுதலார்	140
திடக்குவட	347
திமிரமறுதபுலா	421
தியாண்டிமையோர்	169
திருகலகு	343
திருக்குடந்தை	121
திருநெடுமாலவதார	54
திருத்தலரி	340
திருந்தாடாவணி	158
திருந்துதமிழி	215
திருமாலே	323
திருமால்வாகன	178
திருவிருக்கு	336
திரைக்கலைக்குத்	374
தினங்கொடுக்கும்	232
தினவிலோத்தார்	77
தீத்தாணுன்கண்ணிலே	150
துங்கவரைமார்	307
துங்காதாதல	247
துடித்துத்துடித்து	142

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
துடியார்கரத்து	274	நானேயினியுனை	57
துணையானநாரி	260	நிட்டூரமாக	16
துதிவாணிவீரம்	134	நிட்டையிலே	215
துப்பரையுமரகத்தி	240	நிணம்போதத்த	278
துயிலெயிலேயிடர்	249	நிருதராக	359
துரையத்தந்தி	352	நிலமாது	325
தூளபடுமாமரம்	247	நிலமேழளந்த	280
தெந்தனம்	344	நிலவாய்விளங்கு	104
தெருமுட்டப்பாளை	126	நில்லாதபல்லு	79
தெள்ளுதமி	369	நிலைதந்தார்	50
தென்னவன்றென்	55	நில்லுநில்லென்	39
தென்னவாமீனவா	98	நிழலருமைவெய்	29
தென்னெக்குஞ்	170	நிறையவளதோ	213
தேங்குபுகழாங்கூர்	199	நின்றுபடியளக்கு	257
தேட்டாளன்	232	நீகாவிதூரா	375
தேட்டேதுமில்லை	273	நீச்சாற்பெருத்திடு	175
தேருளப்புரவி	83	நீரிலுளவானிறம்பச்சை	110
தேரையார்செவ்	89	நீரொளுஞ்சேற்று	86
தேன்பொழிந்த	218	நீரோபிறவாநெறிகா	117
தொடுக்கவத்	389	நீளத்திரிந்துழன்	308
தோய்ந்தான்மேய்த்தான்	116	நீறுவாய்நெற்றி	174
நகத்துவா	357	நூலாநாலாயிர	126
நங்கைப்பயணமக்கென்	254	நூலெனிலோகோல்	19
நங்கையொருத்தியை	254	நூற்றுப்பத்தாயிர	16
நச்சரவம்பூண்ட	128	நெருப்புக்கறுக்க	251
நஞ்சிருக்குந்தோலுரிக்கு	102	நெல்லேச்சொன்னு	286
நஞ்சுகுடிகொண்ட	150	நெற்படி வீளகழனி	96
நமக்கின்றெருவம்	261	நேசனேக்காணு	28
நம்பனடியவர்க்கு	6	நேசித்துவந்த	231
நம்பாக்கை	381	நேற்றிராவந்தொருவ	137
நல்லதொருபுதமை	136	நேற்றிருந்த	358
நல்லம்புலியணி	195	நையும்படி	64
நல்லாளையிட	242	பகருங்கான்மேட	119
நற்றமிழ்வா	371	பங்கப்பழனத்தூழுமுழவர்	59
நற்றோணவீதி	284	பங்கஜமேன்மேவி	224
நாட்டிற்சிறந்த	286	பங்கயமுமேரிகளும்	305
நாட்டுக்குளாட்டுக்கு	138	படங்குமா	387
நாணியென்பதை	217	படுபருத்துஞ்சூர்	80
நாணென்ரு	201	படைத்தாமவேற்கண்	301
நாப்பிளக்கப்பொய்	207	பணியாரந்தோசை	225
நாராயணனே	152	பண்காணுந்தமிழ்	243
நாராய்நாராய்	203	பண்டனேப்பண்டனை	246

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
பண்டோதரியமறை	267	புடவிகடக	330
பண்ணப்பம்பர	360	புரசைவடமலையப்	248
பண்புளருக்கோர்	154	புரந்தணமாலை	195
பதிவீரசம்பு	198	புராதனமான	202
பத்தாவுக்கேற்ற	8	புல்லுக்கட்டும்	406
பத்துக்கொண்டன	51	புவிக்காதி	328
பரத்துவசத்து	325	புள்ளிருக்குந்தார்மா	59
பரப்போதஞாலம்	94	பூசத்தந்தி	354
பருதியானவ	403	பூங்கமலன்கலசை	312
பருப்பதங்க	298	பூசுகந்தந்	390
பலகையிடுமுள்ளே	111	பூணித்திலத்து	291
பழியும்புகழுமெவர்க்கு	63	பூத்தக்கி	370
பழுத்தான்மாத்தி	286	பூநக்கியாறுகால்	132
பள்ளமாஞ்செய்யி	65	பூமாதிருத்தென்	303
பறவாததும்பி	172	பூரிக்கு	356
பனிப்பகையோன்	92	பூவிலயனும்புரந்தானு	36
பாகப்பா	322	பூவேந்தர்முன்போல்	184
பாங்குயர்பளிக்கு	295	பூவலாரை	384
பாங்குபெறுந்திரு	168	பெரியதுகேட்கி	26
பாடல்பெருனே	18	பெரியவிடமேசேரும்	103
பாடுந்தமிழ்க்கு	265	பெருமாளுநல்ல	127
பாட்டானதைவண்டு	193	பெற்றவொருபிள்ளை	229
பாணர்க்குச்சொல்லுவது	119	பேயல்லவோவொரு	266
பாணன்மதுரை	82	போரசர்தேவிமார்	81
பாணியிலேபுள்ளிமான்	258	பொதியிலகத்தி	183
பாண்டியனேப்பேர்	82	பொய்யருக்கு	227
பாண்டியன்மாலை	226	பொரக்கலக்க	326
பாண்டியன்றாரானேன்	191	பொரவிசைய	329
பாரத்தலைவிரிக்கு	106	பொரடக்கயம்பிடி	281
பாரைக்குந்தூது	159	பொருகோட்டு	300
பாரவிளநீர்சுமக்க	253	பொருவதற்கு	344
பாரார்சொல்லாரார்	305	பொருந்த	342
பாரிபறித்தபறியும்	11	பொருவாசி	328
பாரூரறியப்பலிக்கு	165	பொருப்புக்குஞ்	391
பாரைச்சுமந்த	72	பொல்லாதமூர்க்கரு	233
பாலியிலாள்பின்னங்கால்	314	பொன்போலுங்கள்ளி	185
பாவைமணங்கமுழுகின்ற	176	பொன்போலுங்கூடல்	269
பாணுகிரணம்	314	பொன்மாரிபெய்யு	13
பிள்ளைவயதினில்	239	பொன்னஞ்சடை	149
பீலிக்குஞ்சர	399	பொன்னிலங்கை	337
புகார்மன்னன்	11	பொன்னேவாளர	179
புத்தியின்	367	பொன்னுகத்தார்	279

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
பொன்னுர்மருமத்தன்	287	மாடேறுதாளுமதி	250
பொன்னேபொரு	272	மாட்டுக்கோன்றங்கை	138
பொன்னேமலைய	268	மாதங்கங்கோடி	324
போசனீயோர்புயலா	285	மாதாணிமென்மூலை	222
போதத்தைமேவு	287	மாதமந்தி	380
போதாகிவகுருநாதா	250	மாதவா	393
போந்தவுதாரனுக்கு	30	மாதர்க்கிதங்கவி	192
போமெனவுரைத்தீ	39	மாதாபிதாவுமவ	199
போலநிறமாவர்க்குப்	155	மாதாம்படியுண்டு	264
போற்றினும்போற்றுவர்	85	மாதானை	363
மங்கையொருபங்கர்	72	மாந்தையிலேவா	187
மஞ்சலக்	401	மாப்பைந்தார்க்கல்ல	98
மஞ்சுமஞ்சுங்கை	304	மாமனுக்கு	396
மட்டாருந்தென்கள	283	மாயனூர்போற்று	129
மட்டாருஞ்செங்கழு	66	மாயன்றுயின்றதுவு	115
மட்டார்குழல்	271	மாலைமணி	332
மட்டூப்படாக்கொங்கை	93	மாவாரிமுத்த	223
மண்ணென்றமண்டல	263	மாவுறங்கினபுள்ளுறங்கின	79
மண்டலத்திலுளு	153	மானமேகண்ணு	142
மதிமலிபுரிசை	43	மானவனுனந்த	57
மதியாதார்முற்ற	20	மானிற்குமோவிந்த	56
மதுமேவுகுவளையணி	312	மாண்பிடித்தீர்	297
மதுரமொழிநல்	3	மின்னமருங்கொடி	335
மய்க்கிணையான	95	முக்கட்பராபரை	270
மய்வடிவக்	91	முக்கண்ணனெ	258
மருகிருக்கும்	173	முக்காலுக்கேகா	131
மறந்தாகிலும்	236	முடிக்கு	365
மற்கொண்டதிண்	89	முட்டத்துப்பன்றிமுளரி	192
மற்றெப்பிலாக்	294	முத்திருக்குங்கொம்பசைக்கு	101
மன்னவனுநீயோ	86	முத்தெறியும்பெண்ணை	13
மன்னன்வெங்க	368	முந்தவிளையோன்	65
மன்னீரிலேபிறக்கு	105	முன்காண்கிலொன்	145
மன்னுதிருவண்ணு	121	முலையுங்குழலுமுளைப்பதற்கு	191
மாகத்தத்தும்	303	முற்கரையப்பரை	235
மாகமழைக்கான்	287	முற்றுதகாஞ்சியினு	143
மாகுன்றனைய	66	முனசநங்கை	386
மாக்கைக்கிரங்கும்	169	முன்னநின்னன்னை	234
மாங்காட்டுவேளாளன்	201	முன்னமொருதமிழ்ப்புலவன்	216
மாங்குயிலால்	52	முன்னுட்டுத்தவ	228
மாசற்றிடுதிருமேனியி	405	முன்னுளிருவர்க்கும்	220
மாடில்லான்	28	முன்னுனைக்கூப்பி	261
மாடுதின்பான்பார்ப்பான்	156	முன்னேகடிவாள	134

செய்யுள்.	பக்கம்.
முன்னேயிரண்டுமூலை	253
மூங்கிலிலேயொளி	408
மூச்சுவிடுமுன்னே	167
மூடர்முன்னே	200
மூப்பான்மழுவு	130
மூவர்கோவையும்	31
மூவேந்துமற்று	234
மூவொன்பதென்	310
மெச்சுபுகழ்வேங்கடவா	121
மெய்க்கேயணியு	259
மெய்யன்வெங்க	370
மெய்யாரப்புலிகாண	296
மெய்யிலேயொருபாதி	240
மெலக்கணக்காப்	338
மேலாடையின்றி	317
மேவிலுடனேவிடியு	256
மேழிபிடிக்குங்	88
மேற்குப்பவளமலை	71
மேற்பார்க்கமைந்த	31
மைக்கார்க்குழற்	271
மைப்போதகமும்	303
மையூருங்கண்ணூர்	90
மோட்டெருமைவாவி	74
மோனைமுத்தமிழ்	62
யாக்கையெனும்	205
யாவருக்கும்ரஞ்சனை	107
வஞ்சகத்திலொன்றுனை	409
வஞ்சகர்பானடந்தலை	416
வடக்குத்திசை	70
வடவைக்கனலை	221
வடிகொண்டசெங்	268
வட்டமதிபோலிருக்கும்	97
வணக்கம்வரும்	405
வண்டமிழைத்தேர்	32
வண்டாங்கிசைபயின்	288
வண்டிட்டகூந்தலும்	272
வண்டுகிண்டியதொங்க	244
வண்டுறைசோலை	300
வண்ணங்கரிய	131
வந்தனந்த	223
வந்துவா	388
வம்பிறைக்குங்கடம்பிறை	408

செய்யுள்.	பக்கம்.
வாகரிசிச்சோறு	17
வருது	380
வருக்கைகறுங்கனி	45
வரைத்தூற்று	340
வல்லரியாயுற்றிட	103
வழக்குடையா	22
வழிமேல்விழிவைத்து	230
வளவனேகே	321
வள்ளலெனுப்பெரிய	135
வள்ளிகொண்டான்	317
வனக்கொந்தளவஞ்சி	288
வாசக்கா	387
வாசமலர்மடந்தை	79
வாட்டானைத்தென்ன	78
வாணன்புகழ்க்கெல்லை	84
வாணன்பெயரெழுதா	81
வாணியன்பாடிட	166
வாதக்காலாந்தமக்கு	146
வாதக்கோளுளையென்றுன்	20
வாதமணிசேறி	116
வாய்த்தவயிரபுர	182
வாரணங்களெட்டும்	117
வாரிக்களத்தடிக்கு	101
வாரிட்டுவிம்மி	318
வாலிமடிந்ததுவு	161
வாலெங்கேனீண்ட	128
வாழிசோழவென்	183
வாழுமிலங்கைக்கோ	221
வாழ்த்ததிருகாகை	152
வாழ்நிலைசேர்	196
வானமுளதான்மழை	24
வான்குருவியின்கூடு	4
வான்பணிந்தால்	258
விக்காவுக்கா	68
விடங்காட்டிக்கண்டத்தி	194
விண்ணுக்குமாமதி	277
விண்ணீரும்வற்றி	164
விண்ணுக்கடங்காமல்	114
விண்ணுக்குமண்ணு	236
விண்பட்டகொக்கென	61
விதுவையம்பதி	306
வியந்தநிசாசரனு	299

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
வீரகரிருவர்புகழ்	4	வெண்பாவிருகாவில்	23
வீரவலராய்வாழ	142	வெண்ணெய்க்கட்டி	407
வீரித்தான்சடை	271	வெண்ணெய்திருடி	151
விருத்தப்பா	345	வெம்புங்காலை	188
வில்லம்புசொல்லம்பு	96	வெய்தாய்நறுவிதா	10
வில்லாலடிக்க	167	வெள்ளத்தடங்காச்சின	58
வில்லைவளையாதே	188	வெள்ளாறதுவடக்கா	70
விழுந்ததளரி	186	வெள்ளைக்கலையுடுத்து	100
விள்ளப்புதுமையொன்	164	வெள்ளையானேறு	136
விறகுதரிக்கக்கறி	413	வெறிக்குங்குமம	290
விற்கம்பத்தடி	316	வெறும்புற்கையுமரி	204
வீமனுக்குமைந்தனுர்	412	வெற்றிபுனைதாதகிக்கு	75
வீமனெனவலிமிகுத்த	176	வென்றிவளவன்	63
வீரஞ்சொரிகின்ற	225	வேண்டியபோதின்பம்	99
வீரமுண்டோமதன்	90	வேம்பாகிலுமினிய	99
வீரவண்டயப்பிரதாப	420	வேயீன்றமுத்தர்தமை	200
வீறுதர்மே	346	வேல்கொடுத்தாய்	233
வெங்கண்சிவந்து	92	வேழமுடைத்துமலைநாடு	33
வெங்காயஞ்சுக்காஞல்	253	வையைத்துறைவன்	12
வெஞ்சத்த	367		

கணபதிதுணை

தனிப்பாடற்றிரட்டு

மூலமும் - உரையும்

காப்பு

வெண்பா

ஏரானைக் காவிலுறை யென்னானைக் கன்றளித்த
போரானைக் கன்றுதனைப் போற்றினால்—வாராத
புத்திவரும் பத்திவரும் புத்திரவுற் பத்திவரும்
சத்திவருஞ் சித்திவருந் தான்.

உரை:—ஏர் ஆனைக்காவில் = அழகிய திருவானைக்காவிலே, உறை = தங்கி யருளுகின்ற, என் ஆனைக்கு = எனது (தாயாகிய) பெண் யானை வடிவெடுத்த அம்மைக்கு, அன்று = முற்காலத்தில், அளித்த = மகவாகக் கொடுத்தருளிய, போர் ஆனைக் கன்றுதனை = போர்புரிவதிற் சிறந்த ஆனைமுகக் கடவுளாகிய பிள்ளையாரை, போற்றினால் = துதித்து வழிபட்டால், வாராத = (பிற முயற்சிகளால்) வாக்கூடாத, புத்திவரும் = அறிவு உண்டாகும், பத்திவரும் = அன்பு உண்டாகும், புத்திர உற்பத்தி வரும் = பிள்ளைப் பேறு உண்டாகும், சத்தி வரும் = வல்லமை யுண்டாகும், சித்தி வரும் = காரிய வெற்றி யுண்டாகும், என்றவாறு.

தெய்வப்புலமை

ஔவையார்

அவ்வவ்வமயங்களிற் பாடியது

சுந்தாமூர்த்தி சுவாமிகளும், சேரமாளுயனுரும் பொன்வண்ணத்தந்தாதி யும் ஆதியுலாவும் பாடிக் கைலாயத்தில் அரங்கேற்றப் போகும்போது, விநாயகரைப் பூசித்துக்கொண்டிருந்த ஔவையையுந் தம்முடன் வரும்படி யழைத்தனர். ஔவை பூசையைச் சீக்கிரத்தில் முடித்துப்போக எண்ணினதை விநாயக ரறிந்து அவர்களுக்குமுன் உன்னைக் கைலாயத்தில் சேர்க்கிறேன் அவசரப்படாதே யென, ஔவை அவ்வாறே சாவதானமாகப் பூசித்துச் "சிதக்களப" மென்னும் அகவலைப் பாடித் துதித்தனள். விநாயகர் விசுவரூபங்கொண்டு ஔவையைத் துதிக்கையாற் றூக்கிக் கைலாயத்தில் வைத்தனர். தனக்கு முன் ஔவை வந்திருப்பதைக் கண்டு சேரமாளுயனுர் வினவின போது பாடியது.

1. மதுரமொழி நல்லுமையாள் சிறுவன் மலரடியை
முதிரநினையவல்லார்க் கரிதோ முகில்போன் முழங்கி
அதிரவருகின்ற யானையுந் தேருமதன் பின்சென்ற
குதிரையுங் காதங் கிழவியுங்காதங் குலமன்னனே.

உரை:—குல மன்னனே=உயர்குடிப் பிறந்த அரசனே! மதுரமொழி நல் உமையாள் சிறுவன்=இனிய சொற்களைக் கூறுகின்ற நன்மைதரும் உமாதேவியாரது குமாராராகிய விநாயகப் பெருமானுடைய, மலரடியை=திருவடித் தாமரையை, முதிர நினையவல்லார்க்கு=அழுத்தமாகப் பயன் தரும்படி தியானிக்கக்கூடியவர்களுக்கு, அரிதோ=எக்காரியமும் அருமையாகாது. (ஆகையால் இங்கே முன்வந்திருப்பது அரிதல்ல), முகில்போல் முழங்கி=மேகம்போ லிடித்து, அதிர வருகின்ற=(நிலம்) அதிர்ச்சியடையும்படி செல்கின்ற, யானையும் தேரும்....., அதன்பின் சென்ற குதிரையும்=அதற்குப் பின்னே புறப்பட்டு வந்த குதிரையும், காதம்=(ஒரு நாழிகைக்கு) காதவழி நடக்கும், கிழவியும் காதம்=(நடக்க வியலாத) கிழவியும் வந்தது காத வழியே, எ - று.

சோழன் ஔவையை எந்தவூரென்று கேட்டதற்குப் பாடியது.

2. காலெந்தே னெந்தேன் கடுகி வழிநடந்தேன்
யான்வந்த தூர மெளிதன்று—கூனல்

கருந்தேனுக் கண்ணுந்த காவிரிசூழ் நாடா
இருந்தேனுக் கெங்கே யிடம்.

உரை:—கூனல்=சங்கானது, கருந்தேனுக்கு அண்ணுந்த=மிகுதியாகிய தேனைப் பருகுவதற்கு வாய்திறந்த, காவிரி சூழ் நாடா=காவிரி நதி சூழப் பெற்ற தேசத்தையுடைய சோழனே! கடுகி வழி நடந்தேன்=விரைந்து பாதையில் நடந்து வந்தேன், யான் வந்த தூரம் எளிதன்று=நான் நடந்த வழியின் நீளம் அதிகம், (ஆதலால்) கால் நொந்தேன் நொந்தேன்=கால் வலியால் மிகவும் வருந்தினேன், இருந்தேனுக்கு=(அதனால்) நடக்க முடியாது உட்கார்ந்த எனக்கு, எங்கே இடம்=எந்தவிடம் சொந்தவூர் என்று சொல்லக்கூடும், எ - று.

சோழன் ஔவையென்றறியாமற் கம்பர்பாட்டை வியந்தபோது பாடியது.

3. விரகரிருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரனிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டு மவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனு நன்று.

உரை:—விரகர் இருவர் = தந்திரக்காரர்கள் இரண்டுபேர், புகழ்ந்திடவே வேண்டும்=(பரிச பெறக் கருதும் பாவலர் கூடவிருந்து) அவரை யிகழாது துதிக்கவே வேண்டும், விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும்=ஒவ்வொரு விரலிலும் கணையாழி தரித்திருக்க வேண்டும், அரையதனில்=இடுப்பினில், பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்=பஞ்சு நூலினால் அல்லது பட்டு நூலினால் நெய்த நல்ல உடை தரித்திருக்க வேண்டும், (அப்படியானால்) அவர் கவிதை=அத்தகைய புலவர்களது பாட்டு, நஞ்சேனும் வேம்பேனும் நன்று=நஞ்சுபோலக் கெடுதியாகவிருப்பினும் வேம்புபோலக் கசப்பாகவிருப்பினும் நல்லதென்று ஏற்றுக்கொள்ளப்படும், எ - று.

சோழன் கம்பர்போலப் பாரகாவியம் பாடுவோ ரொருவரு மில்லை யென்றபோது பாடியது.

4. வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது.

உரை:—வான்குருவியின் கூடு=தூக்கணங் குருவியின் அழகிய கூடும், வல்லரக்கு=உறுதியான இயற்கை அரக்கும், தொல் கரையான்=பழமையான கரையான் புற்றும், தேன் சிலம்பி=தேன் கூடும் சிலந்திக் கூடும்,

யாவர்க்கும் செய்யரிதால் = எல்லாரும் செய்யக்கூடியதல்ல, யாம் பெரிதும் வல்லோமே என்று = நாம் மிகவும் திறமையுடையோம் என்று நினைத்து, வலிமை சொல வேண்டாம் காண் = பெருமை பிதற்றுதல் கூடாது என் றறிக, எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது = ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு செயல்செய்து முடிப்பது எளியதாகும், எ - று.

இதுவுமது.

5. சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையு நடைப்பழக்க நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

உரை:—சித்திரமும் கைப்பழக்கம் = படம் எழுதுவது கைப்பழக்கத்தி னுற் சிறப்படையும், செந்தமிழும் நாப்பழக்கம் = சிறந்த தமிழின் தேர்ச்சி நாவின் பயிற்சியினு லேற்படுவது, வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் = நல்ல பொருள் பொதிந்த கல்வித் தேர்ச்சி உள்ளப் பயிற்சியினு லுண்டா கும், நித்தம் நடையும் = தினந்தோறும் அதிக தூரம் நடத்தல், நடைப் பழக்கம் = நடந்து பழகுவதால் ஏற்படக்கூடியது, நட்பும் = சினேகத்தன்மை யும், தயையும் = இரக்கமும், கொடையும் = கொடுக்கும் குணமும், பிறவிக் குணம் = அவரவர் கருவிலமைந்த இயல்புகளாகும், எ - று.

சோழன் கம்பனை யார்வெல்வார் என்றபோது பாடியது.

6. காணுமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணுமல் வாய்திறக்கக் கூடாதே—நாணுமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி.

உரை:—காணுமல் வேணதெல்லாம் கத்தலாம் = (படித்தவர்கள்) பாராதவிடத்து விரும்பியவற்றை யெல்லாம் உரத்துப் பேசலாம், கற்றோர் முன் = படித்தவர்களுக்கு எதிரிலே, கோணுமல் வாய்திறக்கக் கூடாது = வளைந்து பணியாமல் ஒன்றைப் பேசுதல் பொருத்தாது, கிளி = கிளியானது, நாணுமல் பேச்சுப் பேச்சு என்னும் = அஞ்சாமல் (கற்பித்தவற்றை) மிகுதியாகப் பேசும், பெரும் பூனை வந்தக்கால் = (தன்னைப் பிடிக்கக்கூடிய) பெரிய பூனை அதன்முன் வந்தால், கீச்சு கீச்சு என்னும் = (அச்சத்தால்) கீச்சுக் கீச்சென்று கதறும், எ - று.

சோழன் மனிதர்களுக்கு அழகு என்ன வென்றதற்குப் பாடியது.

7. சுரதந் தனிலினித்த தோகை சுகிர்த
விரதந் தனிலினித்த மேனி—நிரதம்

கொடுத்திளைத்த தாதா கொடுஞ்சமரிற் பட்ட
வடுத்துளைத்த கல்லபிரா மம்.

உரை:—சுரதம் தனில் இளைத்த தோகை = இன்ப அனுபவத்தினால் உடல் மெலிந்த பெண்ணும், சுகிர்த விரதம் தனில் இளைத்த மேனி = நன்மைதரும் நோன்பிருந்து அதனால் மெலிந்த உடம்பும், நிரதம் கொடுத்து இளைத்த தாதா = எக்காலத்திலும் வறியவர்களுக்கு மிகுதியாகக் கொடுத்து வாடிய வள்ளலும், கொடும் சமரில் பட்ட = கொடுமையான போரில் உடம்பிற் பொருந்திய, வடு துளைத்த கல் = காயம் குறிக்கப்பட்ட வீரக்கல்லும், அபிராமம் = அழகான பொருள்களாகக் கருதப்படும், எ - று.

சோழன் பொருளை யெவ்வாறு செலவிடலா
மென்றதற்குப் பாடியது.

8. நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காம்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்.

உரை:—நம்பன் அடியவர்க்கு = சிவபெருமானது தொண்டர்களுக்கு, நல்காத் திரவியங்கள் = அளிக்கப்படாத பொருள்கள், பம்புக்கு ஆம் = (சூனிய மாகிய) மாணவித்தைக்குப் பயன்படும், பேய்க்கு ஆம் = பிசாசு வழிபாட்டிற்குப் போகும், பரத்தையர்க்கு ஆம் = பொது மாதர்க்குக் கொடுக்கப்படும், வம்புக்கு ஆம் = வீண்செயல்களுக்குக் கொடுக்கும், கொள்ளைக்கு ஆம் = கூட்டுக் கொள்ளையிடப்படுதற்கு உரியதாகும், கள்ளுக்கு ஆம் = மதுபானம் செய்வதற்குச் செலவழிக்கப்படும், கோவுக்கு ஆம் = வேந்தன்பொருட்டு வசூலிக்கப்படும், சாவுக்காம் = மாணக் கிரியைக்குப் பயன்படும், கள்ளர்க்கு ஆம் = திருடர்களுக்கு உரியதாகும், தீக்கு ஆகும் = தீ வைக்கப்பட்டு நாசமாகும், காண், அசை, எ - று.

ஒரு குறவனுக்கு இரண்டு ஸ்திரீகளிருந்தார்கள். அவர்களுள் புருஷனுக்கு இளையாள்பேரில் மோகம். ஒரு நாள் அவன் ஒரூருக்குப்போய் வருகிறேன்; நான் அன்பாக வளர்க்கும் பலாவை நீங்களிருவரும் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்களென்று சொல்லிப்போயினன்; இளையாள் அம்மரத்தை வெட்டிவிட்டு மூத்தாள்மேற் பழிசுமத்தினள். நிரபராதியாகிய மூத்தாள் கணவன் என்னசெய்வானோவென்று துக்கித்துக்கொண்டிருந்தனள். ஔவையார் அவளை வினவிப் பயப்படாதே யென்று பலாத்தழைக்கப் பாடியது.

9. கூரிய வாளாற் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்று வுயர்மரமா—சீரியதோர்

வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின்பழமாய்ப்
பண்டுபோ னிற்கப் பலா.

உரை:—கூரிய வாளால் = தீட்டப்பட்ட அரிவாளினால், குறைத் திட்ட = தரிக்கப்பட்ட, கூன் பலா = வளைந்த பலாமரமானது ஓர் இதழாய் = ஒரு இலையுடையதாய், கன்று ஆய் = சிறுசெடியாகி, உயர்மரம் ஆய் = வளர்ந்து மாமாகி, சீரிய ஓர் வண்டு போல் = மேன்மையானதொரு வண்டுபோல, கொட்டை ஆய் = வித்துடையதாகி, வண்காயாய் = செழிப்பான காய்கள் காய்த்து, தின்பழம் ஆய் = தின்னத்தக்கப் பழங்களையுடையதாய், பண்டுபோல் பலா நிற்க = முன்னே நின்றதுபோல முழுப்பலாவாய் நிலைபெறுவதாக, எ-று.

ஔவை கையிலிருந்த மூட்டையை என்ன வென்று சோழன் கேட்டதற்குப் பாடியது.

10. கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
மூழக் குழக்குத் தினைதந்தாள்—சோழாகேள்
உப்புக்கும் பாடிப் புளிக்கு மொருகவிதை
ஒப்பிக்கு மென்ற னுளம்.

உரை:—சோழா கேள் = சோழமன்னனே கேட்பாயாக! கூழைப் பலாத் தழைக்கப் பாட = குறப்பெண்ணினுடைய வெட்டுப்பட்ட சிறு பலா மரமானது தளிர்த்து ஓங்கும்படி நான் பாடியதற்காக, குறமகளும் = அவளும், மூழக் குழக்குத் தினை தந்தாள் = ஒருபடி தினை எனக்கு அளித்தாள், என்றன் உளம் = என் மனமானது, உப்புக்கும் பாடி = உப்புக்காகவும் கவி சொல்லி, புளிக்கும் ஒரு கவிதை ஒப்பிக்கும் = புளி வேண்டுமானாலும் அதற்கும் ஒரு பாட்டுப் பாடிக்கொடுக்கும், எ - று.

குறிப்பு:—மூழக்கு என்பது மூவுழக்கு என்பதன் மரூஉ. மூன்றுழக்கும் ஒரு உழக்கும் சேர்ந்து நான்கு உழக்காகும். அது ஒரு படி.

கணவன் ஔவைக்கு அமுதிடவெண்ணி மனைவிக்குக் கூறியது.

11. இருந்து முகந்திருத்தி யீரொடுபேன் வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக
ஆடினுள் பாடினு ளாடிப் பழமுறத்தால்
சாடினு ளோடோடத் தான்.

உரை:—இருந்து முகம் திருத்தி = (ஒருவன் தன் மனைவியின் பக்கத் தில்) உட்கார்ந்து அவளது முகத்தைத் தடவிச் சீர்செய்து, ஈரொடு பேன் வாங்கி = சிறிய பேனையும் பெரிய பேனையும் தலையினின்றும் எடுத்து விட்டு, விருந்து வந்தது என்று விளம்ப = விருந்தினர் வந்தாரென்று கூறவும், மிக வருந்தி = அதிக மனத்தியாமுற்று, ஆடினுள் = அவள் கூத்தாடினுள்,

பாடிஞன்=கோபப்பாட்டு ஓதினுள், ஆடி ஓடோடத்தான் பழமுறத்தால் சாடினுள்=ஆடியபின் கணவனை அவன் பலமுறை ஓட்டமெடுக்கும்படியாகப் பழைய சூளுகால் தாக்கினுள், எ - று.

கணவன் மிகவும் வேண்டிக்கொள்ள அவள் அன்னமிட்டபோது பாடியது.

12. காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணெக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லா ளிட்ட வமுது.

உரை:—அன்பில்லாள் இட்ட அமுது=விருப்பமில்லாதவள் அளித்த சோற்றை, காணக் கண் கூசுதே=காண்பதற்குக் கண்கள் நாணுகின்றன, கை எடுக்க நாணுதே=கை எடுத்துண்பதற்குக் கூசுகின்றது, மாண் ஒக்க வாய்திறக்க மாட்டாதே=பெருமை நிறைந்த வாயானது அதனை ஏற்றுக் கொள்வதற்குத் திறவாதிருக்கின்றது, வீணுக்கு=யாதொரு பயனு மின்றி, என் என்பு எல்லாம் பற்றி எரிகின்றது=எனது எலும்புகளெல்லாம் முற்றிலும் கொதிக்கின்றன, ஐயையோ=பரிதாபம்!, எ - று.

ஔவை பிரமனை நிந்தித்துப் பாடியது.

13. அற்றதலை போக வருததலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனே—வற்றும்
மரமனையாட் கிந்த மகனை வகுத்த
பிரமனையான் காணப் பெறின்.

உரை:—வற்றும் மரம் அனையாட்கு=பட்ட மரம்போன்ற தன்மை யுடையவளுக்கு, இந்த மகனை வகுத்த=இந்த ஆண்மகனைக் கணவனுகத் தலையில் எழுதிய, பிரமனை யான் காணப்பெறின்=அயனை நான் பார்க்க நேர்ந்தால், அற்ற தலை போக=(அவனது) முன்பு சிவனுல் கிள்ளப்பட் டொழிந்த ஒரு தலை தவிர, அறுத தலை நான்கினையும்=எஞ்சிய நான்கு தலைகளையும், பற்றித் திருகிப் பறியேனே=என் கையிலகப்படுத்தி வளைத்துக் கொய்யமாட்டேனு?

மனைவாழ்க்கையை விட வெண்ணினபோது ஔவை அவனுக்குப் புத்தி சொன்னது.

14. பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானுல்
எத்தானுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றுக விருப்பளே யாமாயிற்
கூறுமற் சன்னியாசங் கொள்.

உரை:—பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதை உண்டானால் = ஆண் மகனுக்கு ஏற்ற கற்புடைய இல்லாள் கிடைத்திருந்தால், எத்தாலும் கூடி இருக்கலாம் = எந்த வகையிலும் இருவரும் இசைந்து வாழலாம், சற்றேனும் = கொஞ்சமேனும், ஏறுமாறாக இருப்பாளேயாமாயில் = முறைகேடாக மனைவி இருப்பாளானால், கூறுமல் சங்கியாசம் கொள் = யாரிடமும் பேசாமல் துறவு வேடம் பூணுவாயாக! எ - று.

இதுவுமது.

15. சண்டாளி சூர்ப்பநகை தாட்கையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே—தொண்டா
செருப்படிதான் செல்லாவுன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுத னேர்.

உரை:—சண்டாளி = புலைச்சியாய், சூர்ப்பநகை தாடகையைப்போல் வடிவு கொண்டாளை = சூர்ப்பநகை, தாடகை முதலிய அரக்கிகளைப் போன்ற மேனியுடையவளை, பெண் என்று கொண்டாயே = இல்லாளாக நீ மணந்தனையே, தொண்டர் செருப்படிதான் செல்லா = அடியார்களின் மிதியடியின் சுவட்டிற்குக் கூட ஒப்பாகாத, உன் செல்வம் = உன்னுடைய பொருள், என்ன செல்வம் = எப் பயனைத் தரக்கூடிய பொருள்? நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர் = தீயிலே விழுந்து மடிதல் தக்கதாகும், எ - று.

சிலம்பி யென்னுந் தாசி 500-பொன் கொடுக்கக் கம்பர் பாடிய பாதிப் பாட்டை ஔவை கூழுக்குப் பாடியது.

16. தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணுவ துஞ்சோழ மண்டலமே—பெண்ணுவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

உரை:—தண்ணீரும் காவிரியே = நல்ல நீரென்று போற்றப்படுவது காவிரி நீரே, தார்வேந்தன் சோழனே = வெற்றிமாலை தரித்த மன்னன் சோழவரசனே, மண்ணுவதும் சோழமண்டலமே = நிலம் என்று புகழப்படுவது சோழநாடே, பெண்ணுவாள் அம்பொற் சிலம்பி = தக்க மாதென்று மதிக்கப்படுபவள் மிக்க அழகுடைய சிலம்பியே, சிலம்பு = தக்க காற் சதங்கையாவது, அரவிந்த தாள் அணியும் செம்பொற் சிலம்பே = அவளுடைய கமலம் போன்ற அடிகளில் அணியப்பட்ட சிறந்த பொன்னாலாகிய கழலே ஆகும், எ - று.

இதைக்கண்டு கம்பன் பொருமையால் ஔவையை அடியென்று சொல்ல விரும்பி ஒருகாலடி நாலிலிப்பந்த லடியென்று சிலேடையாகச் சொல்லிப் பொருள்கேட்டபோது பாடியது.

17. எட்டேகா லட்சணமே யேமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் றூதுவனே
ஆரையடா சொன்ன யடா.

உரை:—எட்டேகா லட்சணமே = அவலட்சண முடையவனே, ஏமன் ஏறும் பரியே = நமன் ஏறிவருகின்ற ஊர்தியாகிய எருமையே, மட்டில் பெரியம்மை வாகனமே = அளவு கடந்த சீர்கேடான மூதேவியைத் தாங்கிவரும் கழுதையே, முட்டமேற் கூரை இல்லா வீடே = முழுதும் முகடு வேயப் பெறுத மனையின் குட்டிச் சுவரே, குலராமன் தூதுவனே = உயர்குடிப் பிறந்த இராமபிரானது தூதனுகிய அனுமானே, அடா ஆரை சொன்னாய் அடா = அடே நீ கூறியது ஆரைக்கீரையைக் குறிக்குமடா, எ - று.

செருமலைத் தெய்வீகனுடைய திருக்கோவலூரில் பெண்ணை நதிக்குத் தென்கரையில் குடிசைபோட்டுக்கொண்டிருந்த பாரி யென்னும் இடையன் வீட்டிற்கு ஔவை மழையில் நனைந்து நடுங்கிக்கொண்டு போயினள். அவ் வீட்டிலிருந்த கலியாணமில்லாத அங்கவை, சங்கவையென்னும் பெண்கள், தங்கள் கறுப்புச் சிற்றுடையைக் கொடுத்து நெருப்பிட்டுக் குளிர்காயச் செய்து, முருங்கைக்கீரையை நெய்விட்டுச் சமைத்துக் கேழ்வரகு களிக் கிளறிச் சாப்பிடச் செய்தனர். ஔவை அதை வியந்து பாடியது.

18. வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தா னளாவி நிறம்பசந்த—பொய்யா
அடகென்று சொல்லி யமுதத்தை யிட்டார்
கடகஞ் செறிந்தகை யார்.

உரை:—கடகம் செறித்த கையார் = வளையலணிந்த கைகளை யுடைய அங்கவை சங்கவை யென்னும் பெண்கள், வெய்தாய் = வெப்பமுடையதாய், நறுவிதாய் = நல்ல வாசனை யுடையதாய், வேண்டளவும் தின்பதாய் = விரும்பிய அளவு தின்றாலும் கெடுதி செய்யாததாய், நெய்தான் அளாவி = நெய் யுடன் விரவப்பட்ட, நிறம் பசந்த பொய்யா அடகு என்று சொல்லிய = பசிய நிறமுடைய மெய்யான கீரைக்கறி யென்று கூறி, அமுதத்தை யிட்டார் = (உள்ளபடியே) தேவாமிர்தத்தையே உண்ணும்படி இலையில் வைத்தனர், எ - று.

குறிப்பு:—அளாவிய என்பது அளாவி என நின்றது.

நீலச் சிற்றுடையை வியந்து பாடியது.

19. பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி கொடுத்த களாக்கொட்டும்—சேரமான்
வாரா யெனவழைத்த வாய்மையு மிம்மூன்றும்
நீலச்சிற் றுடைக்கு நேர்.

உரை:—பாரி பறித்த பறியும்=பாரியென்னும் பெயருடைய வள்ளல் எங்ஙனேப் போகக்கூடாதென்று தடுத்ததற்காக ஆடையைப் பிடித்திழுத்த தும், பழையனூர் காரி கொடுத்த களாக்கொட்டும்—பழையனூர் என்னும் ஊரிற் குடியிருந்த காரியென்னும் உழவன் (சொந்தம் பாராட்டி) தன்னேப் போல, களா வெட்டும்படி கொடுத்த களாபிடுங்கு கருவியும், சேரமான் வாராய் என அழைத்த வாய்மையும்=சேரமன்னன் வருக வென்று அழைத்த உண்மை அன்பும், இம் மூன்றும்=ஆகிய இம் மூன்றும், நீலச் சிற்றுடைக்கு நேர்=அங்கவை சங்கவை என்பவர்கள் குளிர்காயக் கொடுத்த நீலநிறச் சிறு புடவைக்குச் சமமாகும், எ - று.

அங்கவை சங்கவை யென்னும் பெண்களேச் சோழனுக்கும், பாண்டியனுக்கும் கலியாணஞ் செய்துகொடுக்க எண்ணி மணவோலே எழுத விநாயகரை வரும்படி பாடியது.

20. ஒருகோம் பிருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் காளாய்—பரிவுடனே
கண்ணுல வோலே கடிதெழுத வாராயேல்
தன்னுண்மை தீர்ப்பன் சபித்து.

உரை:—ஒரு கொம்பு இரு செவி மும்மதத்து நால்வாய்=ஒரு கொம் பையும் இரண்டு செவிகளேயும் மூன்றிடத்திற் பொழியும் மதங்களேயும் தொங்கும் வாயையும் உடையவராய், கரியுரிவை கங்காளன் காளாய்= யானேத்தோற் போர்வையையும் என்பையும் அணிந்த சிவபிரானது குமார ராகிய விநாயகக் கடவுளே, பரிவுடனே=தயவாய், கண்ணுல ஓலே=திரு மணத் தாளினே, கடிது எழுத வாராயேல்=விரைவாய் வரைதற்கு நீ வரா மாட்டாயாஞல், சபித்து தன் ஆண்மை தீர்ப்பன்=சாபத்தினுல் உன் வீரத்தை அகற்றிவிடுவேன், எ - று.

சோழனேக் கலியாணத்துக்கு வரும்படி பாடியது.

21. புகார்மன்னன் பொன்னிப் புனலுட்ன் சோழன்
தகாதென்று தானங் கிருந்து—நகாதே
கடிதின் வருகக் கடிக்கோவ ஞர்க்கு
விடியப் பதினெட்டா நாள்.

உரை:—புதார் மன்னன் = காவிரிப்பூம் பட்டினத்திற்கு அதிபதியாகிய, பொன்னிப் புனல் நாடன் = காவிரியின் நீர் பரவப்பெற்ற தேசத்தையுடையவனுகிய, சோழன் — சோழமன்னனே, தகாது என்று தான் அங்கு இருந்து = கலியாணம் செய்துகொள்வது தக்கதல்ல வென்று நினைத்து இருந்த விடத்திலேயே இருந்துகொண்டு, நகாதே = சிரித்துக்கொண்டிராமல், கடிக் கோவலூர்க்கு = காவல் அமையப்பெற்ற திருக்கோவலூருக்கு, பதினெட்டாம் நாள் விடிய = இற்றைக்குப் பதினெட்டாவது நாள் காலையில், கடிதின் வருக = வேகமாய் வருவாயாக, எ - று.

பாண்டியனைக் கலியாணத்துக்கு வரும்படி பாடியது.

22. வையைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியவீ ரொன்பாளுள்
ஈண்டு வருக விசைந்து.

உரை:—வையைத் துறைவன் = வைகைநதி துறைக்கு அதிபனுகிய, மதுராபுரி தென்னன் = மதுரையில் வீற்றிருக்கும் பாண்டியனே! செய்யத் தகாது என்று தேம்பாதே = கலியாணம் செய்துகொள்வது தகுந்த செய்கையல்ல வென்று நினைத்து மனம் வாடாமல், தையலர்க்கு வேண்டுவன கொண்டு = மணப்பெண்டிர்க்கு உரியவற்றை எடுத்துக்கொண்டு, ஈரொன் பான் நான் விடியல் = பதினெட்டாநாள் காலையில், இசைந்து ஈண்டு வருக = ஒத்த உள்ளத்தோடு இங்கே வருவாயாக, எ - று.

சேரனை வரும்படி பாடியது.

23. சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவுந் தான்வருக வுட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள வரசர் மனமிசைந்தார்
சங்கவை யையுங்கூட்டத் தான்.

உரை:—சேரலர்கோன் சேரன் = சேர நாட்டினர்க்குத் தலைவனுகிய சேரமன்னனே! பாரிமகள் = பாரியின் புதல்வியர்களாகிய, அங்கவையை சங்கவையையுங் கூடத்தான் கொள்ள = அங்கவையையும் சங்கவையையும் ஏககாலத்தில் மணஞ்செய்துகொள்ள, அரசர் மனம் இசைந்தார் = சோழன் பாண்டியன் ஆகிய அரசர் இருவரும் மனமார ஒப்புக்கொண்டனர், செழும் பூந் திருக்கோவல் ஊரளவும் உட்காதே தான்வருக = வளமும் வனப்பும் பொருந்திய திருக்கோவலூர்வரை அஞ்சாதே நீ வருவாயாக! எ - று.

வருணனைப் பொன்மாரிபெய்யப் பாடியது.

24. கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவல்—திருமணத்தில்

முன்மாரி பெய்யு முதுவாரி யைமாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி.

உரை:—கருணையால் இந்தக் கடலுலகம் காக்கும் வருணனே = இந்தக் கடல் சூழ்ந்த பூமியை இரக்கத்தினாலே காப்பாற்றி வருகின்ற வருணனாகிய தெய்வமே! மாமலையன் கோவல் = சிற்றரசனாகிய மலையமானுக்குரிய திருக்கோவலூரிலே, திருமணத்தில் = கடைபெறும் கலியாணகாலத்தில், முன் மாரி பெய்யும் முதுவாரியை மாற்றி = பழைய கடல் நீரை முன்னே முகந்து பின்னர் மழைபாகப் பெய்வதை மாற்றி, பொன் மாரியாகப் பொழி = பொன் மழை வடிவமாக மழை பொழியச் செய்வாய், எ - று.

பெண்ணை நதியைப் பால் நெய்யாக பெருகிவரும்படி பாடியது.

25. முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திய நெய்பா றலைப்பெய்து—குத்திச்
செருமலைத்தெய் வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கொண்டோடி வா.

உரை:—முத்தெறியும் பெண்ணை = முத்துக்கள் கொழிக்கின்ற பெண்ணையாறே, முதுநீர் அது தவிர்ந்து = நெடுங்காலமாக உன்னிடை வருகின்ற தண்ணீரை அகற்றி, தத்திய நெய் பால் தலைப்பெய்து குத்தி = நெய்யும் பாலும் குதித்து வரும்படி எடுத்துக்கொண்டு கரைகளைத் தாக்கிக்கொண்டு, செருமலைத் தெய்வீகன் திருக்கோவலூர்க்கு வருமளவும் கொண்டோடி வா = செருமலைத் தெய்வீகனுடைய திருக்கோவலூர் கரைக்கு வரும் வரை அவற்றோடு ஓடி வருவாயாக, எ - று.

திருக்கோவலூரைச் சிறப்பித்துப் பாடியது.

26. பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி யாடையாம்
அந்நாள் வயலரிசி யாகுமூர்—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்குந் திருக்கோவ லூர்.

உரை:—எந்நாளும் = எக்காலத்திலும், தேங்கு புகழே படைத்த = நிறைந்த கீர்த்தியையே பெற்ற, சேதிமா நாடதனில் = பெருமையுடைய சேதிநாட்டில், ஓங்கும் திருக்கோவலூர் = வளர்ந்தோங்கும் திருக்கோவலூரானது, பொன்மாரி பெய்யும் ஊர் = பொன் மழை பெய்கின்ற திருப்பதியாகும், பூம் பருத்தி யாடையாம் = அங்கே பருத்திச் செடியே புடவையாக காய்க்கின்றது, அந்நாள் வயல் அரிசி ஆகும் ஊர் = அக்காலத்தில் நெல்வயலே அரிசியைத் தருகின்ற பதியாகும், எ - று.

பனந்துண்டந் தளிர்க்கப் பாடியது.

கலித்தாழிசை அல்லது அந்தத்தடி நீண்டிசையாமையின் ஐந்தடிக் கலித்துறை என்னலுமாம்.

27. திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் ருர்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே.

உரை:—பனம் துண்டமே = துண்டுப் பனையே! திங்கள் குடை யுடைய சோனும் சோழனும் பாண்டியனும் = சந்திரன்போன்ற வெண்கொற்ற குடையையுடைய சேரன் சோழன் பாண்டியனென்னும் மூவரும், மணப் பந்தலிலே மங்கைக்கு அறுகிட வந்து நின்ருர் = கலியாணப் பந்தலிலே மணப் பெண்டிர்க்கு அறுகிட்டு வாழ்த்துதற்கு வந்து நின்ருர்கள், சங்கு ஒக்க வெண் குருத்து ஈன்று = சங்கைப்போல் வெள்ளிய குருத்துவிட்டு, பச்சோலை சலசலத்து = சலசல வென்ற வொலியுடன் பச்சை யோலை தழைக்கப்பெற்று, நுங்குக்கண் முற்றி = நுங்குகள் முதிர்ந்த கண்ணுடையன வாகவும், அடிக்கண் கறுத்து = அடியிலே கருகிறமும், நுனி சிவந்து = முனையில் சிவப்பு நிறமுமுடைய, மூன்று பழம் பங்குக்குத் தரவேண்டும் = ஒவ்வொருவருக்கும் மூன்று பழம் ஈயக்கடவாய், எ - று.

அங்கவை சங்கவை யென்னும் பெண்களுக்கு இடையர் மரபின்படி சீதனங்கொடுக்கச் சேரராஜனை ஆடுகேட்டனள். அவன் பொன் ஆடுகொடுத்தான். அதைச் சிறப்பித்துப் பாடியது.

28. சிரப்பான் மணிமவுலிச் சேரமான் றன்னைச்
சுரப்பா டியான்கேட்கப் பொன்னுடொன்—றீந்தான்
இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவார் தன்கொடையின் சீர்.

உரை:—சிரப்பான் = தலையின்மீது, மணிமவுலி = இரத்தின கிரீடத்தை யணிந்த, சேரமான் தன்னை = சேர அரசனிடம் நோக்கி, யான் சுரப்பு ஆடு கேட்க = நான் பால் கொடுக்கின்ற ஆடு ஒன்று வேண்டுமென்று கேட்கவும், பொன் ஆடு ஒன்று ஈந்தான் = அவன் தங்கத்தினுலாகிய ஒரு ஆட்டினை எனக்குக் கொடுத்தான், இரப்பவர் என் பெறினும் கொள்வர் = பிச்சைக் காரர்கள் எத்தகைய பொருள் கிடைத்தாலும் அதனைத் தமக்குரிய தென்றே கொள்வார்கள், கொடுப்பவர் தன் கொடையின் சீர் தாம் அறிவார் = கொடையாளி தான் கொடுக்கின்ற பொருளின் சிறப்பினைத் தானே நன்கு தெரிவர், எ - று.

சோழனையும் பாண்டியனையும் ஆசீர்வதித்து இந்தப் பெண்களை எப்போதும் அன்பாகப் பாதுகாக்கும்படி பாடியது.

29. ஆயன் பதியி லரன்பதிவந் துற்றளகம்
மாயனூ துங்கருவி யாலுலும்—தூயமணிக்
குன்றுபோல் வீறு குவிமுலையா டன்னுடனீர்
இன்றுபோ லென்று மிரும்.

உரை:—(அரசர்களே) ஆயன்பதியில் அரன்பதி வந்துற்று=கண்ணன் இருப்பிடமாகிய ஆலிலைபோன்ற வயிற்றின்மீது சிவபெருமானது இடமாகிய மலைபோன்ற ஸ்தனங்கள் சரிந்து பொருந்தி, அளகம்=கூந்தலானது, மாயன் ஊதும் கருவியானலும்=திருமால் ஒலிக்கும் சங்குபோல நரைத்தாலும், தூய மணிக் குன்றுபோல் வீறு குவி முலையாள் தன்னுடன்=குற்றமற்ற இரத்தினக் குன்றுகள்போல உயர்வுற்றுக் குவிந்த ஸ்தனங்களையுடைய இப் பெண்டினுடன், நீர் இன்றுபோல் என்றும் இரும்=நீங்கள் இப்போது மனமுற்றிருப்பது போலவே எப்போதும் இருக்க வேண்டும், எ - று.

30. சொல்லாம லேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

உரை:—நல்ல குலா மாலை வேற்கண்ணாய்=அழகிய அசைகின்ற மாலையைச் சூடிய வேல் போன்ற கூரிய கண்ணையுடையவளே! சொல்லாமலே பெரியர் செய்வர்=உயர்ந்தோர்கள் தாம் செய்யும் உதவியைப் பிறர்க்கு அறிவிக்காமலே செய்து முடிப்பர், சிறியர்=அவரிலும் தாழ்ந்தவர்கள், சொல்லிச் செய்வர்=தாம் செய்யும் உதவியைப் பிறர்க்கு எடுத்துக் கூறி அதனைச் செய்வர், சொல்லியும் செய்யார் கயவரே=உதவி செய்வதாகச் சொல்லிச் செய்யாதிருப்பவர்கள் கீழ்மக்களே, கூறு உவமை நாடி=இவர்களுக்கு ஒப்பாகச் சொல்லக் கூடிய பொருள்களை ஆராய்ந்தால், பலா மாவை பாதிரியைப் பார்=பூக்காது பழுக்கும் பலா மரத்தையும், பூத்துக் கனி தரும் மாமாத்தையும், பூத்தும் பழம் உதவாத பாதிரி மரத்தையும் பார்த்துக் கொள்க, எ - று.

விருத்தம்

31. இலக்கணக் கவிஞர்சொ லின்பந் தேடுவர்
மலக்குசொற் றேடுவர் வன்க ணாளர்கள்
நிலத்துறுங் கமலத்தை நேடும் வண்டதீ
தலைக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல்.

உரை:—வண்டது = வண்டானது, நிலத்துறும் கமலத்தை நேடும் தன்மைபோல் = பூமியில் விளங்குகின்ற தாமரைப் பூவினை நாடி அடையும் இயல்புபோல, இலக்கணக் கவிஞர் சொல் இன்பம் தேடுவர் = பாட்டின் இலக்கண மறிந்த பாவலர்கள் அதிற் கூறப்பட்டுள்ள சொன்னயம் பொருணயங்களை நாடுவர், ஈ தலைக்குறை கமலத்தைச் சாரும் தன்மைபோல் = ஈயானது மலத்தைச் சேருகின்ற இயற்கைபோல, வன்கணாளர்கள் = புல்லறிவுடைய கொடியர்கள், மலக்கு சொல் தேடுவர் = கலக்க முண்டாக்கக் கூடிய சொற்களை விரும்பி யடைவர்.

குறிப்பு:—தலைக்குறை கமல மென்பது கமல மென்பதில் முதலெழுத்துக் குறைந்த விடத் தண்டாகும் சொல்லைக் குறிக்கும். அச்சொல், மலமென்பது.

32. நிட்டூர மாக நிதிதேடு மன்னவனும்
இட்டதனை மெச்சா விரவலனும்—முட்டவே
கூசிநிலை நில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும்.

உரை:—நிட்டூரமாக நிதி தேடு மன்னவனும் = கொடுமையான முறையிற் பொருள் சேர்க்கின்ற வேந்தனும், இட்டதனை மெச்சா இரவலனும் = கொடுத்ததைப் புகழாத பிச்சைக்காரனும், முட்டவே கூசி நிலை நில்லாக் குலக் கொடியும் = முற்றிலும் நாணமுடையவளாய்க் கற்புநிலையில் நிலைபெறுத இல்லறப் பெண்டிரும், கூசிய வேசியும் = வெட்கமுடைய பரத்தையும், கெட்டுவிடும் = அழிந்து ஒழிவர்.

சோழனுக்குத் தன் பாடலைச் சிறப்பித்தது.

33. நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினு நூற்சீலை
நாற்றிங்க ளுளுக்கு ணேந்துவிடும்—மாற்றலரைப்
பொன்றப் பொருதடக்கைப் போர்வே லகளங்கா
என்றுங் கிழியாதென் பாட்டு.

உரை:—மாற்றலரைப் பொன்ற = பகைவர்கள் இறக்கும்படி, பொருதடக்கை போர்வே லகளங்கா = போர் செய்ய வல்ல விசாலமான கைகளில் யுத்தத்தில் வெற்றிதரும் வேலையுடைய களங்கமில்லாத மன்னனே! நூற்சீலை = நூலினாலாகிய புடவை, நூற்றுப் பத்தாயிரம் பொன் பெறினும் = பத்துலக்கம் பொன் விலை பெறக்கூடியதா யிருந்தாலும், நாற்றிங்கள் நாளுக்குள் நைந்து விடும் = நான்கு மாத காலத்திற்குள் திரிதிரியாய்ப் பிரிந்து கெட்டுவிடும், என் பாட்டு என்றும் கிழியாது = என்னுடைய பாடலானது என்றைக்கும் அழியாது நிலைபெறும், எ - று.

வேளூர்ப்பூதன் விருந்திட்டதைப் புகழ்ந்து பாடியது.

34. வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்—திறமுடனே
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும்.

உரை:—புல் வேளூர்ப் பூதன்=சிற்றூராகிய வேளூரிற் குடியிருக்கும் பூதனென்பவன், புரிந்து=விருப்பத்துடன், திறமுடனே=சாமர்த்திய மாக, வரகரிசி சோறும்=கேழ்வரகுச் சாதமும், வழுதுணங்காய் வாட்டும்=கத்தரிக்காய்த் துவட்டலும், முரமுரெனவே புளித்த மோரும்=வாசனை கெடாத நுரைத்த புளிப்புடைய மோரும், விருந்திட்டான்=உணவாக விருந்தினர்க் களித்தான், ஈது எல்லாம் உலகம் பெறும்=இந்த உணவுக்கு உலக முழுதும் கொடுத்தாலும் தகும், எ - று.

இதனினு மிது நன்றெனல்.

35. ஏசி யிடலி னிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாதலே நன்று.

உரை:—ஏசி இடலின்=பிச்சைக்காரரைக் கடுஞ் சொற் சொல்லி அவருக்கு ஏதாவது கொடுப்பதைப்பார்க்கினும், இடாமையே நன்று=பிச்சையிடாமலிருப்பதே சிறந்ததாகும், எதிரில் பேசு மனையாளில் பேய் நன்று=(கணவனை) மறுத்துப் பேசுகின்ற இல்லாளைப் பார்க்கினும் பேய் சிறந்ததாகும், நேசம் இலா வங்கணத்தில் வலிய பகை நன்று=அன்பில்லாத நட்பிலும் பெரும்பகை சிறந்ததாகும், வாழ்வில்லா சங்கடத்தில் சாதலே நன்று=உயிர் வாழ்தற்கு இன்றியமையாத பொருளில்லாது துன்புறுவதினும் உயிரை விட்டுவிடுவதே சிறந்தது, எ - று.

கோரைக்காலி லிருக்கும் ஆழ்வான் கொடையை நிந்தித்தது.

36. கரியாய்ப் பரியாகிக் காரெருமை தானுய்
எருதாய் முழப்புடைவை யாகித்—திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்துகா லோய்ந்ததே
கோரைக்கா லாழ்வான் கொடை.

உரை:—கோரைக்கால் ஆழ்வான் கொடை=கோரைக்காலிலுள்ள ஆழ்வான் என்னும் பெயருடையானது ஈகையானது, கரியாய்=படிப்படியாக யானையாகியும், பரியாகி=குதிரையாகியும், கார் எருமை தானுய்=நல்ல எருமையாகியும், எருதாய்=காளையாகியும், முழப்புடவை ஆகி=ஒரு முழத்

தூணியாகியும், திரிதிரியாய்=நூல் நூலாய்ப் பிரிந்தபோன உடையாகியும், தேரைக்கால் பெற்று மிகத் தேய்ந்து கால் ஒய்ந்ததே=தேரைக்காலின் இயல்பை யுடையதாய் அதிகமாகக் குறைந்து குறைந்து உடையற்றுப் போயிற்று, எ - று.

ஈகையில்லானைக் குறித்துப் பாடியது.

37. பாட்டல் பெருனே பலர்மெச்ச வாழானே
நாடறிய நன்மணங்க ளுடானே—சேடன்
இவன்வாழும் வாழ்க்கை யிருங்கடல்சூழ் பாரில்
கவிழ்ந்தென் மலர்ந்தென்னைக் காண்.

உரை:—சேடன்=சேடனென்பான், பாடல் பெறுனே = (செல்வ முடையவனுயிருந்தும் ஈகையில்லாமையால்) நல்ல பாவலர்களால் பாடப் பெறுவதில்லை, பலர் மெச்ச வாழானே=எல்லாரும் புகழும்படி வாழ்க்கை நடத்துவதில்லை, நாடறிய நல் மணங்கள் நாடானே=பலர்க்கும் தெரியும்படி சிறந்த மங்கல காரியங்களை விரும்பி நடத்துவதில்லை, இரும் கடல் சூழ் பாரில்=விசாலமான சமுத்திரஞ் சூழ்ந்த உலகத்தில், இவன் வாழும் வாழ்க்கை=இவனுடைய இழிவான பிழைப்பானது, கவிழ்ந்தென் மலர்ந் தென்ன=ஒழிந்தாலும் கெடுவதில்லை நிலைத்தாலும் பயனில்லை. காண் - அசை, எ - று.

38. காலையிலொன் ருவர் கடும்பகலி லொன்ருவர்
மாலையிலொன் ருவர் மனிதரெல்லாம்—சாலவே
முல்லானைப் போல முகமுமக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோ நாம்.

உரை:—மனிதர் எலாம்=மக்கள் பலரும், காலையில் ஒன்ருவர்=விடி யற்காலத்தில் ஒரியல்புடையவரா யிருப்பர்; கடும்பகலில் ஒன்ருவர்=மத்தி யான நேரத்தில் வேறியல்புடையவரா யிருப்பர்; மாலையில் ஒன்ருவர்= சாயங்காலத்தில் அதற்கும் மாறுபட்ட இயற்கையராவர்; முல்லானைப் போல=(அவ்வாறில்லாது) முல்லானென்னும் வள்ளலைப் போல, சாலவே முகமும் அகமும் மலர்ந்த=நன்ருக எந்நேரத்திலும் முகமும் உள்ளமும் ஒரு தன்மையான மகிழ்ச்சியைக் காட்டும், நல்லானைக் கண்டு அறியோம் நாம்= நன்மையான ஒருவனை நாம் பார்த்துத் தெரிந்ததில்லை, எ - று.

ஒரு புலவன் கையில் மண்ணை வைத்துக்கொண்டு இதென்ன வென்று கேட்டதற்குப் பாடியது.

39. கற்றதுகை மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமட்டை யோதுகிருள்—மெத்த

வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்.

உரை:—புலவீர் = புலவர்களே! உற்ற கலைமடந்தை = (பிரமனது நாவிலே) பொருந்திய சரஸ்வதியானவள், கற்றது கை மண் அளவு கல்லாதது உலகு அளவு என்று = தான் படித்தது ஒரு கைப்பிடி மண்ணளவே எனவும் இன்னும் கற்க வேண்டியது எஞ்சிய உலகத்தின் அளவாகு மென்றும் நினைத்து, ஓதுகிறாள் = (இன்னும்) படித்துக்கொண்டிருக்கிறாள், மெத்த வெறும் பந்தயம் கூறவேண்டாம் = அதிகமாக வீண் பெருமை பாராட்ட வேண்டியதில்லை, எறும்பும் தன் கையால் எண் சாண் = சிறிய எறும்புங் கூட அதன் கையளவுக்கு எட்டுச் சாண் நீளமுள்ளதாகும், எ - று.

அரசன் மந்திரியாக யாரை வைக்கலா மென்று கேட்டதற்குப் பாடியது.

40. நூலெனிலோ கோல்சாயு நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ வாங்கே குடிசாயும்—நாலாவான்
மந்திரியு மாவான் வழிக்குத் துணையாவான்
அந்த வரசே யரசு.

உரை:—அரசனே! நூல் எனிலோ கோல் சாயும் = பூணூலணிந்த பிராமணன் அமைச்சனுனல் நீதிமுறை மாறும், நுந்தமரேல் வெம் சமராம் = மந்திரி உன்னினத்தவரா யிருந்தால் பெரிய சண்டையுண்டாகும், கோல் எனிலோ அங்கே குடிசாயும்—தாசு கோலையுடைய வைசியன் அமைச்சனுனல் உடனே குடிகளுக்குக் கேடுண்டாகும், நாலாவான் மந்திரியும் ஆவான் = நாலாவதாகக் கருதப்படும் வேளாளன் அமைச்சனுவதற்குத் தகுதியானவன், வழிக்குத் துணை யாவான் = அரசர் பின்பற்றும் முறைக்குத் தக்க உதவிபுரிவான், அந்த அரசே அரசு = அவனை அமைச்சனுக உடைய அரசாங்கமே சிறந்த அரசாங்கமாகும், எ - று.

41. செம்மான் கரத்தனருள் சேயா நெடியோனே
அம்மா னெனப்பெற் றருள்வேலா—இம்மான்
கரும்பிறைக்கும் வெண்பிறைக்குங் கண்ணம் பிறைக்கும்
அரும்பிறைக்குங் கூந்த லணை.

உரை:—செம்மான் கரத்தன் = செவ்விய மானைத் திருக்கையிலுடைய சிவபெருமான், அருள் சேயா = பெற்றருளிய செவ்வேளே! நெடியோனே அம்மான் எனப் பெற்றருள் வேலா = பெருமாளை மாமனுகப் பெற்ற கருணை நிறைந்த வேலாயுதத்தைத் தரித்த முருகனே! இம்மான் = மான்போன்ற இந்த மாது, கரும்பு இறைக்கும் = கரும்பினை வில்லாகக்கொண்ட மன்மதன் காரணமாகவும், வெண் பிறைக்கும் = வெள்ளிய நிலவைப் பார்த்தும், கண்

அம்பு இறைக்கும்=கண்ணீர் சிந்துகின்ற, அரும்பு இறைக்கும் கூந்தல் அணை=மலர் மொட்டுக்களே உதிர்க்கின்ற தலையையுடைய இவளை நீ அணைத்துக் கொள்ளுதல் வேண்டும், எ - று.

ஒவ்வொன்று கோடி பெறுமென்று பாடியது.

42. மதியாதார்முற்ற மதித்தொரு காற்சென்று
மிதியாமை கோடி பெறும்
உண்ணீருண்ணீரென் றுபசரியார் தம்மனையி
லுண்ணுமை கோடி பெறும்
கோடிகொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்
கோடானுகோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்.

உரை:—மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று மிதியாமை கோடி பெறும்=தம்மைப் பொருட்படுத்தாதவர்களுடைய வீட்டு வாசலைப் பொருளாகக் கருதி ஒருதாங்கூடப் போய் அங்கே அடி வையாதிருத்தல் கோடி பொன் பெறத்தக்கது, உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம் மனையில் உண்ணுமை கோடி பெறும்=உண்ணுங்கள் உண்ணுங்களென்று மதித்து அழையாதவர் வீட்டில் உணவு கொள்ளாதிருத்தல் ஒருகோடி பொன் பெறத்தக்கது, கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடிபெறும்=கோடி பொருளை அளித்தாயினும் சிறந்த குடியில் பிறந்தவரோடு இணங்குதல் ஒருகோடி பொன் பெறத்தக்கது, கோடானுகோடி கொடுப்பினும் தன்னுடைய நா கோடாமை கோடி பெறும்=எத்தனை கோடி பொருளை அளித்தாலும் தன்னுடைய நாவானது பிறழாதிருத்தல் ஒருகோடி பொன் பெறத்தக்கது, எ - று.

43. வாதக்கோ ணூலையென்ரு மற்றைக்கோன் பின்னையென்ரு
ஏதக்கோன் யாதேனு மில்லையென்ரு—ஓதக்கேள்
வாதக்கோன் சொல்லதிலும் மற்றைக்கோன் சொல்லதிலும்
ஏதக்கோன் சொல்லே யினிது.

உரை:—ஓதக் கேள்=கூறுவதைக் கேட்பாயாக! வாதக்கோன் நாலை என்ரூன்=(உடம்பில்) வாதத்தின் தலைநாடி அது நாலைவரை நிலைத்திருக்கும் என்று காட்டிற்று, மற்றைக்கோன் பின்னை என்ரூன்=அதற்கு வேறுகிய பித்தத்தின் தலை நாடி சற்று நேரங் கழித்த பிறகு உடல்போகும் என்று காட்டிற்று, ஏதக்கோன் யாதேனும் இல்லை என்ரூன்=சிலேத்தும நாடி உடம்பில் சத்து யாது மில்லை என்று காட்டிற்று, வாதக்கோன் சொல்லதிலும் மற்றைக்கோன் சொல்லதிலும் ஏதக்கோன் சொல்லே இனிது=(ஈகை விஷயத்தில்) வாத நாடியைப்போல நாளை யென்று

கூறுவதைப் பார்க்கிலும், பித்த நாடியைப்போல பிற்பாடென்று சொல் வதைப் பார்க்கிலும் சிலேத்தும நாடிபோல கொடுக்க யாது மில்லாது இருந்தால் உடனே இல்லை யென்று சொல்லி விடுவது நல்லது, எ - று.

குறிப்பு.—வாதநாடி யடங்கின் ஒருநாளிலும், சேத்துமநாடி யடிங்கின் ஒரு நாழிகையிலும், பித்தநாடி யடங்கில் ஒரு நிமிஷத்திலும் உயிர் நீங்கும்.

44. சுற்றுங் கருங்குளவி தூரைத்தூ ருரியப்பேய்
எற்றுஞ் சுடுகா டிடிகரையின்—புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததே னெக்கும்
தளர்ந்தோர்க்கொன் றீயார் தனம்.

உரை:—தளர்ந்தோர்க்கு ஒன்று ஈயார் தனம் = இளைத்தவர்களுக்கு யாதும் அளிக்காதவர்களுடைய செல்வமானது, கருங்குளவி சுற்றும் = கொடிய வண்டு சூழ்ந்திருப்பதாயும், தூரைத்தூது = நெட்டிப் புல்லின் தூறிலுள்ளதாயும், ஆரியப்பேய் எற்றும் சுடுகாடு இடிகரையின் = மிலேச்சப் பிசாசு தாக்கிய சுடுகாட்டின் இடிகரையில் வைக்கப்பட்டும், புற்றில் = பாம்புப் புற்றில் வைக்கப்பட்டும், வளர்ந்த மடல் பனைக்குள் வைத்த = உயர்ந்த ஓலை கழியாத பனையினுள் வைக்கப்பட்டும், உள்ள தேன் ஒக்கும் = தேன் போல்வ தாகும். (எளிதில் எடுக்க முடியாதென்பது கருத்து) எ - று.

பொற்கிழியறும்படி பாடியது.

45. ஆர்த்தசபை நூற்றொருவ ராயிரத்தொன் றும்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு.

உரை:—பூத்த மலர் தண் தாமரை திருவே = விரிந்த குளிர்ந்த தாமரைப் பூவில் வீற்றிருக்கும் திருமகளே! ஆர்த்த சபை நூற்றொருவர் = நூறுபேரில் ஒருவர்தான் தக்க சபையில் இருப்பதற்கு உரியாவர், ஆயிரத்தில் ஒன்றும் புலவர் = ஆயிரம் பேரில் ஒருவர்தான் கல்வி யறிவு உடையவரா யிருப்பர், வார்த்தை பதினாயிரத்தில் ஒருவர் = அவருள்ளும் தக்க மொழியைத் தக்க விடத்திற் சொல்லக் கூடியவர்கள் பதினாயிரம்பேரில் ஒருவரே ஆகும், தாதா கோடிக்கு ஒருவர் = கோடி பேரில் ஒருவனே வள்ளலாய் இருப்பான், உண்டாயின் உண்டு என்று அறு = இது உண்மை யானால் உண்மையென்று காட்டுவதற்கு (இப் பொற்கிழியை) அற்று விழும் படி செய், எ - று.

46. தண்டாம லீவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை—அடுத்தடுத்துப்

பின்சென்ரு லீவது காற்கூலி பின்சென்றும்
ஈயானைச் சம்போ லறு.

உரை:—தண்டாமல் ஈவது தாளாண்மை=ஒன்றைக் கேளாதபோது குறிப்பறிந்து அளிப்பது சிறந்த ஈகை முயற்சியாம், தண்டி அடுத்தக்கால் ஈவது வண்மை=ஒன்றைக்கேட்டு நெருங்கிய பிற்பாடு அளிப்பது ஈகை யென்னப்படலாம், அடுத்து அடுத்துப் பின் சென்ரூல் ஈவது கால் கூலி= மீட்டு மீட்டும் தொடர்ந்து போய்க் கேட்டபின் கொடுப்பது கால் நடைக்குக் கொடுக்கும் கூலியாகும், பின் சென்றும் ஈயான் எச்சம்போல்=அவ்வாறு தொடர்ந்து போய்க் கேட்ட பின்னும் ஒன்றும் தாராதவனுடைய மக்களைப் போலத் தொடர்பு அறும்படி, அறு=இப்பொற் கிழியை அற்று விழச் செய், எ - று.

47. உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி —எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்குங் காலறுவான் றன்கிளையும்
எச்சமறு மென்ரு லறு.

உரை:—உள்ள வழக்கு இருக்க=உண்மையான வழக்கு ஒருபுற மிருக்கவும், ஊரார் பொது இருக்க=ஊரிலுள்ளவர்களின் சபை அவ்வழக்கிற் கனுசரணையாக விருக்கவும், வழக்கதனைத் தள்ளித் தான் பேசி=அவ் வழக்கு நிறைவேரூவண்ணம் அதனை ஒழிக்கும் வகையை முனைந்து கூறி, எள்ளளவும் கைக்கூலி தான் வாங்கும்=லஞ்சம் அற்பமாயினும் அதனையும் விரும்பி ஏற்கின்ற, கால் அறுவான் தன் கிளையும்=பிள்ளையில்லாமற் போவா னுடைய உறவினரும், எச்சம் அறும் என்ரூல்=பரம்பரைத் தொடர்பு அற்றுப் போவாரென்பது உண்மையானூல், அறு=இப்பொற் கிழியை அற்று விழச் செய், எ - று.

48. வழக்குடையா னிற்ப வலியானைக் கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறு மென்ரு லறு.

உரை:—வழக்குடையான் நிற்ப=வழக்குக்கு உரியவன் இருக்கவும், வலியானைக் கூடி=அவனைத் தவரூக எதிர்க்கும் திறமையுடையானுடன் சேர்ந்து, வழக்கை அழி வழக்கு செய்தோன்=வழக்குத் தோல்வியுறும்படி செய்தவனும், வழக்கிழந்தோன் சுற்றமும் தானும் தொடர்ந்தழுத கண் ணீரால்=தோற்றவனும் அவனுடைய உறவினரும் இடைவிடாது வருந்தி யழுத கண்ணீர் காரணமாக, எச்சம் அறும் என்ரூல்=கால் வழியற்றுப் போவானென்பது உண்மையானூல், அறு=இப்பொற் கிழியை அற்றுவிழச் செய், எ - று.

ஒரு ராஜகுமாரத்தி அழகுடைய ஒரு ராஜகுமாரனைக் கல்வி யில்லாதவனென் றறியாமல் ஒரு சத்திரத்தில் இன்ன காலத்தில் நீ வந்திருந்தால் நான் வருகிறன் இராமிக்கலாமென் றெழுதினள். அதை வாசித்த ஒருவனுக்குக் காண்பித்தனன். அவன் அதன் கருத்தை யறிந்து இராஜகுமாரனை நீ யிவ்விடத்திலிருந்தால் அரசன் உன்னைச் சிரச்சேதஞ் செய்வானென்று அவனைப் போகச்செய்து தான் அக்காலத்தில் அந்த ராஜகுமாரனைப்போல வேஷங்கொண்டு அங்கிருந்தனன். இராஜகுமாரத்தி அவ்வாறே வந்து அந்நியனென்று அறியாமற் கூடி ரமித்தபின்பு தெரிந்து பிராணத்தியாகஞ் செய்துகொண்டு பிசாசாய் அச்சத்திரத்தில் வருகிறவர்களைத் தொந்தரை செய்துகொண்டிருந்தாள்; அங்கு ஔவை வந்தனள்; அவளையுஞ் சாமந் தோறும் தொந்தரை செய்தபோது காலு சாமத்திலும் பாடியது.

49. வெண்பா விருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையா லெழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

உரை:—வெண்பா இருகாலில் கல்லானை=வெண்பா என்னும் வகையைச் சேர்ந்த பாட்டினை இருமுறை கற்பித்தும் படித்துக் கொள்ளாதவனையும், வெள் ஓலை கண் பார்க்கக் கையால் எழுதானை=வெள்ளிய ஓலையேட்டினில் எழுத்துத் தெரியும்படி கையால் எழுதத் தெரியாதவனையும், பெண்பாவி பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப் பெற்றாளே=பாவஞ் செய்த தாயே பெற்றிருக்க வேண்டும்; அவள் பெற்றது மற்றவர்கள் அவளை ஏளனம் செய்வதற்கே ஆகும், எற்று எற்று எற்று=பேயே அவர்களை முக்காலும் தாக்குவாயாக, ஓ, மற்று=அசை, எ - று.

50. கருங்குளவி சூரைத்தூ றீச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன் றீயாதான் வாழ்க்கை—அரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரே
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

உரை:—கரும் குளவி=வண்டுகளால் சூழப்பெற்ற, சூரைத்தூறு=எட்டிப்புல் புதரிலுள்ள, ஈச்சங்கனிபோல்=பேரீச்சம் பழம்போல, வருந்தினர்க்கு ஒன்று ஈயாதான் வாழ்க்கை=வறுமைப்பட்டவர்களுக்கு யாதும் கொடாதவனுடைய வாழ்க்கையில், இச்சித்திருந்த பொருள் அரும்பகலே தாயத்தார் கொள்வர்=விரும்பிவைத்திருந்த செல்வத்தைப் பட்டப்பகலிலே அவன் இனத்தார் கொள்ளை கொள்வர், எற்று எற்று எற்று=(பேயே! அவனை) முக்காலும் அடிப்பாயாக, ஓ, மற்று=அசை.

51. வான முளதான் மழையுளதான் மண்ணுலகில்
தான முளதாற் றயையுளதால்—ஆனபொழு
தெய்த்தோ மிளைத்தோமென் றேமாந் திருப்பாரை
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

உரை:—வானம் உளது=ஆகாயமிருக்கின்றது, மழையுளதால்=ஆகாயத்திலிருந்து பெய்யும் மழையிருக்கின்றது, மண்ணுலகில்=பூமியில், தானம் உளது=தங்க இடமிருக்கிறது, தயை உளது=(கொடையாளிகளின்) கருணை இருக்கிறது, ஆனபொழுது=இவையெல்லாம் ஏற்பட்டிருக்கும் பொழுது, எய்த்தோம் இளைத்தோம் என்று=அவற்றைப் பயன்படுத்த அறியாது சோம்பேரிகளாயிருந்து மிகத் தளர்ந்தோ மென்று சொல்லி, ஏமாந்திருப்பாரை=ஏமாற்றமடைந்திருப்பவர்களே, எற்று எற்று எற்று=(பேயே!) முக்காலும் அடிப்பாயாக, ஆல், ஓ, மற்று=அசை, எ - று.

52. எண்ணு யிரத்தாண்டு நீரிற் கிடந்தாலும்
உண்ணீரம் பற்றுக் கிடையேபோல்—பெண்ணுவாய்
பொற்றொடி மாதர் புணர்முலைமேல் சாராரை
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

உரை:—பெண்ணுவாய்=மாதர் வடிவ முடையவளே! எண்ணுயிரத் தாண்டு நீரில் கிடந்தாலும்=எண்ணுயிர வருடகாலம் தண்ணீருக்குள் போடப்பட்டிருந்தாலும், உள் ஈரம்பற்றுக் கிடையேபோல்=உள்ளே ஈரம் ஏறப்பெறுத கிடைச்சியைப்போல, பொற்றொடி மாதர்=தங்கக் கங்கண மணிந்த குலப்பெண்டிருடைய, புணர் முலைமேல் சாராரை=சேரத்தக்க தனங்களின்பால் உள்ளன்போது கலந்து வாழாதவர்களே, எற்று எற்று எற்று=(பேயே!) முக்காலும் அடிப்பாயாக! ஓ, மற்று=அசை, எ - று.

குறிப்பு:—கற்புடைய பெண்டிரை மணந்து அவருடன் பலநாள் பழகியும் அவரிடம் உள்ளன்பு வையாது பிறர் பெண்டிர்பால் சார்வாரை இப்பாட்டு கண்டிருக்கிறது. ஈரம் என்பதில் 'அம்' சாரியை.

சுப்பிரமணியர் எருமை மேய்க்கிற பிள்ளைகளைப்போல நாவல் மரத்தில் ஏறியிருந்தனர். ஔவை, 'அப்பா! நாவற்பழம் போ'டென்று சொல்லினள். அதற்குச் சுடுகிறபழம் போடவா சுடாதபழம் போடவா வென்றனர். ஆச் சரியப்பட்டு சுடுகிறபழம் போடென்றனள். அளிந்த பழத்தை மணலில் போட்டனர். ஔவை ஊதினள். குமரர் சுடப்போகிறது என்றதற்குப் பாடியது.

53. கருங்காலிக் கட்டைக்கு நாணக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானில்

காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்ரேற்ற
தீரிரவு துஞ்சாதென் கண்.

உரை:—கருங்காலிக் கட்டைக்கு = (உறுதியான) கருங்காலி மரத் தண்டினை வெட்டுதற்கு, நாணுக் கோடாலி = பின்னடையாத கோடாரி யானது, இரும் கதலித் தண்டுக்கு நாணும் = (திருப்பிடிப்பதனால்) நல்ல வாழைத்தண்டினுள் வைக்கப்படுவதற்கு அஞ்சும், பெரும் கானில் = விசால மான கானகத்தில், கார் எருமை மேய்க்கின்ற காளைக்கு = கருப்பு நிறம் பொருந்திய எருமைகளை மேய்ப்பவனாகிய சிறு வீரனுக்கு, நான் தோற் றது = நான் தோற்றுப்போனதை (என் மனம் நினைத்துக் கொண்டிருப்ப தால்) என் கண் ஈரிரவும் துஞ்சா = என் கண்கள் இரண்டு இராத்திரிக ளாகத் தூக்கங் கொள்ளவில்லை, எ - று.

முருகர் கொடியது முதலியன கேட்க ஔவை பாடிய ஆசிரியப்பா.

கொடியது.

54. கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றெணாக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது
இன்புற வவர்கையி லுண்பது தானே.

உரை:—நெடிய வெவ் வேலோய் = நீண்ட வெப்பம் பொருந்திய வேலாயுதத்தையுடைய மன்னனே! கொடியது கேட்கின் = (உலகில்) கொடுமையானது எதுவென்று கேட்டால், கொடிது கொடிது வறுமை கொடிது = எழ்மையே கொடியவற்றுள் மிகவும் கொடியதாகும், அதனினும் கொடிது இளமையில் வறுமை = இளமைப்பருவத்தில் வருகின்ற எழ்மையே அதைப் பார்க்கிலும் தீயது, அதனினும் கொடியது ஆற்றெணாக் கொடு நோய் = அதைப் பார்க்கிலும் தீமையைத் தருவது தாங்க முடியாத துன்ப வியாதி, அதனினும் கொடிது அன்பிலாப் பெண்டிர் = அதைப் பார்க்கிலும் தீயது, நேசமில்லாத மாதரைச் சேர்தல், அதனினும் கொடிது இன்புற அவர் கையில் உண்பதுதானே = அதைப் பார்க்கிலும் தீயது, விருப்பமாய் அவர்கள் கையா லிடப்பட்டதை யுண்பதே ஆகும், எ - று.

இனியது.

55. இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்த மினிது

அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினு மினிது அறிவுள் ளாரைக்
கனவினு நனவினுங் காண்பது தானே.

உரை:—தனி நெடி வேலோய்=ஒப்பற்ற நீண்ட வேலாயுதத்தை யுடையவனே! இனியது கேட்கில்=இன்பந்தருவது யாதென்று கேட்டால், இனிது இனிது ஏகாந்தம் இனிது=இனியவற்றுள் இனியது பிறர் தொந்தரவின்றித் தனியே இருப்பது, அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்=முதல்வனுகிய கடவுளைத் தொழுதல் அதைப் பார்க்கிலும் இனிது, அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்=அறிவுடையாரைப் போயடைதல் அதைப் பார்க்கிலும் இனியதாகும், அதனினும் இனிது அறிவுள்ளாரைக் கனவிலும் நனவிலும் காண்பது தானே—அறிஞரைச் சாக்கிரத்திலும் சொப்பனத்திலும் பழகிக் காண்பது அதைப் பார்க்கிலும் இன்பந் தருவதாகும், எ - று.

பெரியது

56. பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன்
கரிய மாலோ வலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி யங்கையி லடக்கம்
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ வரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ வுமையவள் சிறுவிரன் மோதிரம்
உமையோ விறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

உரை:—எரி தவழ் வேலோய்=வெப்பம் பரவிய வேலினையுடைய வனே! பெரியது கேட்கின்=பெரிய பொருள் யாதென்று கேட்டால், பெரிது பெரிது புவனம் பெரிது=உலகிலுள்ள பெரிய பொருள்களைப் பார்க்கிலும் உலகமே மிகப் பெரியது, புவனமோ நான்முகன் படைப்பு=உலகமோ அயனால் படைக்கப்பட்ட பொருளாகும், நான்முகன் கரியமால் உந்தி வந்தோன்=அயனை கருநிறமுடைய பெருமாளின் உந்திக் கமலத்தில்

தோன்றியவன், கரியமாலோ அலைகடல் துயின்றோன் = அப்பெருமாளோ அலைகளையுடைய கடலிற் பள்ளி கொண்டவன், அலைகடல் குறுமுனி அம் கையில் அடக்கம் = அக்கடலோ அகத்தியருடைய உள்ளங்கையில் அடங்கி விடுவது, குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன் = அகத்தியரோ கும்பத்தி னின்று தோன்றியவர், கலசமோ புவியில் சிறு மண் = கும்பமோ பூமியி லுள்ள சிறிய அளவுள்ள மண்ணிலுலாகியது, புவியோ அரவினுக்கு ஒரு தலைப் பாரம் = பூமியோ பாம்பாகிய ஆதிசேஷனது தலையிலுள்ள ஒரு சுமை, அரவோ உமையவள் சிறு விரல் மோதிரம் = பாம்போ உமையம்மையின் சுண்டு விரலில் தரிக்கப்பட்ட கணையாழி, உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம் = உமா தேவியோ கடவுளாகிய சிவபிரானது இடது பக்கத்தில் அடங்கி யிருப்பவள், இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம் = கடவுளோ அடியாருடைய இருதயத்தில் அடங்கி நிற்பவர், தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே = (ஆதலால்) அடியார்களுடைய உயர்வு பேசுதற்கு அடங்காத பெருமை வாய்ந்தது, எ - று.

அரியது

57. அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிட ராத லரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையும்
தானமுந் தவமுந் தான்செய லரிது
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

உரை:—வரி வடி வேலோய் = ரேண்ட கூர்மையான வேலாயுதத்தை யுடையவனே! அரியது கேட்கின் = (உலகத்தில்) அருமையானது என்ன வென்று கேட்டால், அரிது அரிது மானிடர் ஆதல் அரிது = அருமையான வற்றுள் மிக அருமையானது மக்கட் பிறவி எடுப்பதாகும், மானிடர் ஆயினும் = மக்கட் பிறவி எடுத்தாலும், கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது = உடல் வளைவு, கண் தெரியாமை, காது கேளாமை, அலியாதல் முதலிய குறைகளில்லாமல் பிறத்தல் அருமையாகும், பேடு நீங்கிப் பிறந்த காலையும் = அலியாதல் முதலிய குற்றங்கள் ஒழியப்பெற்றுப் பிறந்த போதிலும், ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது = நல்ல வியற்கை அறிவையும் நூற் படிப்பையும் விரும்புதல் அருமையாகும், ஞானமும் கல்வி

யும் நயந்த காலையும் = அவ்விரண்டையும் விரும்பின போதிலும், தானமும் தவமும் தான் செயல் அரிது = ஈகையும் நோன்பொழுக்கமும் கையாளுதல் அருமையாகும், தானமும் தவமும் தான் செய்வாராயின் = அவ் விரண்டையும் மக்களாய்ப் பிறந்தவர்கள் இயற்றுவராயின், வானவர் நாடு வழி திறந் திடுமே = விண்ணுலகம் அவர்கள் தம்முள் புகுவதற்கு வழி திறந்து காட்டும், எ - று.

58. மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபநன்
ஓடில்லான் செங்கோ னடாத்துவதுங்—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லான் வீடும் விழல்.

உரை:—மாடு இல்லான் வாழ்வும் = செல்வ மில்லாதவனுடைய பிழைப் பும், மதி இல்லான் வாணிபம் = அறிவற்றவன் செய்யும் வர்த்தகமும், நல் நாடு இல்லான் செங்கோல் நடாத்துவதும் = காப்பதற்கு நன்கமைந்த நாடில் லாத மன்னன் நீதியாக ஆட்சி புரிவதும், கூடும் குரு இல்லா வித்தை = கை கூடுதற்கு இன்றியமையாத ஆசாரியன் உதவி யில்லாமற் கற்ற கல்வியும், குணம் இல்லா பெண்டு = நற்பண் பில்லாத இல்லாளும், விருந்து இல்லா வீடும் = விருந்தினரை ஓம்பாத வீடும், விழல் = பயனற்றவையாகும், எ - று.

59. நேசனைக்கா லுவிடத்தி னெஞ்சார வேதுதித்தல்
ஆசானை யெவ்விடத்து மப்படியே—வாச
மனையாளைப் பஞ்சணையின் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில்.

உரை:—நேசனை = சினேகிதனை, காணு இடத்தில் = அவனைப் பாராத போது, நெஞ்சு ஆரவே துதித்தல் = மனம் திருப்தி யடையும்படி உயர்த்திப் பேசுக, ஆசானை = ஆசாரியனை, எவ்விடத்தும் அப்படியே = எல்லா விடங் களிலும் அவ்வாறே துதிக்க, மனையாளை வாச பஞ்சணையில் = இல்லாளை வாசனைப் பொருள்கள் தூவப்பெற்ற படுக்கையி லிருக்கும்போது போற்றுக, மைந்தர்தமை நெஞ்சில் = பிள்ளைகளை மனத்திலுள்ளே மதித்துக் கொள்க, வினையாளை வேலை முடிவில் = வேலைக்காரரைக் காரியம் முற்றுப்பெற்ற விடத்தே பாராட்டுக, எ - று.

60. ஆலைப் பலாவாக்க லாமோ வருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூக்கணைச்சீ ராக்கலா மோ.

உரை:—ஆலப் பலா வாக்கலாமோ = ஆல மரத்தைப் பலா மரமாக்க முடியுமா ? அரும் சுணங்கள் வாலை நிமிர்க்க வசமாமோ = நேர் படுத்துவதற் கருமையான நாயின் வளைந்த வாலினை நேராக்க அது வசப்பட்டு வருமா ? நீல நிறக் காக்கைதனைப் பேசுவிக்கலாமோ = கரிய காகத்தை (கிளிபோல) பேசும்படி செய்ய முடியுமோ ? கருணை இலா மூர்க்கனைச் சீர் ஆக்க லாமோ = தயாளகுண மில்லாத மூடனைக் குணவானாக்க முடியுமா ? = முடி யாது, எ - று.

சோமனென்னும் பிரபுவின்மேற் பாடியது.

61. நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய்.

உரை:—நிழல் அருமை வெய்யிலிலே நின்று அறிமின் = நிழலின் அருமையான பயனை (அறியவேண்டுமானால்) வெயிலில் நிற்பதனாலே அறிந்துகொள்வீர்களாக, ஈசன் கழல் அருமை வெவ்வினையில் காண்மின் = இறைவன் திருவடியை வழிபடுவதினாலுண்டாகும் அருமையான பயனைத் கொடிய கர்மத்தின் வசமாக இருக்கும்பொழுது காண்பீர்களாக, பழுது தமிழ்ச் சொல் அருமை நாலிரண்டில் = கற்றவர்கள் பயிலுகின்ற நற்றமிழின் நயத்தை நான்கு அடிகளாலாகிய நாலடியாரினும், இரண்டடிகளாற் செய்யப் பட்ட திருக்குறளினும் கண்டு கொள்க, சோமன் கொடை அருமை புல்ல ரிடத்தே போய் அறிமின் = சோமனென்னும் வள்ளலினுடைய கையின் தனிச் சிறப்பைக் கீழ்மக்களாகிய (செல்வரிடத்தில்) போய் தெரிந்து கொள்க, எ - று.

62. காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம்
பேசுமுலா விற்பெதும்பை புலி—ஆசு
வலவர்க்கு வண்ணம் புலியாமற் றெல்லாப்
புலவர்க்கும் வெண்பா புலி.

உரை:—காசினியில் = பூமியில், பிள்ளைக்கவிக்கு அம்புலி புலியாம் = பிள்ளைக்கவியில் அம்புலிப் பருவம் பாடுதல் அரிய செயலாகும், பேசும் உலாவில் பெதும்பை புலி = சிறப்பாகப் பேசுகின்ற உலாவென்னும் நூல் வகையில் பெதும்பைப் பருவம் பாடுதல் அரிதாகும், ஆசு வலவர்க்கு வண்ணம் புலியாம் = நினைத்ததை உடனே பாடவல்ல ஆசு கவிகளுக்கு வண்ணப் பாட்டுப் பாடுதல் கடினமாகும், மற்று எல்லாப் புலவர்க்கும் வெண்பா புலி = பிற பாவலர் எல்லார்க்கும் வெண்பாப் பாடுதல் முயற்சி மிக்க செயலாகும், எ - று.

தர்ம்மார்த்த காமமோக்ஷங்களை ஒரு கவியிற் சொன்னது.

63. ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

உரை:—ஈதல் அறம் = இல்லையென்னுது கொடுத்தலே சிறந்த அறச் செய்கையாகும், தீவினை விட்டு ஈட்டல் பொருள் = தீய முயற்சியை விடுத்து நல்ல வழியிற் சம்பாதிக்கப்படுவது நல்ல பொருளாகும், எஞ்ஞான்றும் = எப்போதும், காதல் இருவர் = அன்பினால் பிணிக்கப்பட்ட கணவனும் மனைவியும், கருத்து ஒருமித்து = ஒத்த மனமுடையவர்களாய், ஆதரவு பட்டதே = ஒருவர்க்கொருவர் ஆதரவாய்க் கலந்திருப்பதே, இன்பம் = சிறந்த இன்பமாகும், பரனை நினைந்து = தெய்வத்தைத் தியானித்து, இம் மூன்றும் விட்டதே = இம் மூன்றையும் கடந்து நிற்பதே, பேரின்ப வீடு = பேரின்பத்தையே யளிக்கும் மோட்சத்திற்கு வழியாகும், எ - று.

64. தாயோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்
வுற்ற ருடன்போ முடற்பிறப்பாற் ரோள்வலிபோம்
பொற்ருலி யோடெவையும் போம்.

உரை:—தாயோடு அறுசுவைபோம் = (அன்போடு குழந்தைக்கு உணவூட்டும்) அன்னை இறந்ததும் ஆறு சுவையோடு கூடிய உணவு கிடைப்பது அரிதாகும், தந்தையொடு கல்விபோம் = தந்தை யிறந்தபின் குழந்தைகளுக்குக் கல்விப் பயிற்சி அரிதாகும், சேயோடு தான்பெற்ற செல்வம்போம் = குழந்தை இறந்த பின் ஒருவன் பெற்ற செல்வம் நிலைபெறாது ஒழியும், ஆய வாழ்வு உற்ருருடன் போம் = சிறப்பாக வாழும் வாழ்க்கை சுற்றத்தார் ஒழிந்தபோது இல்லாதாகும், உடன் பிறப்பால் தோள்வலிபோம் = சகோதரரில்லாதபோது பக்கத்துணையால் வரும் புயவலிமை ஒழிந்துபோகும், பொற்ருலியோடு எவையும் போம் = பொன்னிலுலாகிய மங்கல நாணணிந்த மனையாளிறந்தபோது எவ் வகையான நலன்களும் இல்லனவாம், எ - று.

குறிப்பு:—அறுசுவையாவன : இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்பன.

65. போந்த யுதாரனுக்குப் பொன்றுரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பு—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி யருந்துரும்பா மில்லத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு.

உரை:—போந்த உதாரனுக்குப் பொன் தரும்பு=ஈகைக்குணத்தோடு பிறந்தவனுக்குப் பொன்னைத தரும்புபோல அற்பமாகும், சூரனுக்குச் சேர்ந்த மரணம் சிறு தரும்பு=உயிரைப் பொருட்படுத்தாத வீரனுக்கு வரக்கூடிய சாவு சிறிய தரும்பாகத் தோன்றும், ஆய்ந்த அறிவோர்க்கு=சிறந்த நூல்களே நுட்பமாயாராய்ந்த புலவர்கட்கு, நாரி அரும் தரும்பு=பெண்மயல் அற்பமான தரும்பு போல்வதாகும், இல்லம் துறவோர்க்கு வேந்தன் தரும்பு=மனையைத் துறந்தவர்கட்கு மன்னன்கூடத் தரும்பு போலத் தோன்றுவான், எ - று.

66. மேற்பார்க் கமைந்தருண் மூவா வெருதும் விளங்குகங்கை
நீர்ப்பாய்ச் சலுநன் னிலமுமுண் டாகியு நின்னிடத்திற்
பாற்பாக் கியவதி நீங்கா திருந்தும் பலிக்குழன்றீர்
ஏற்பார்க் கிடாமலன் றேபெருங் கோயி லிறையவனே.

உரை:—பெரும் கோயில் இறையவனே=பெரிய கோயிலில் வீற்றிருக்கும் கடவுளே! மேற்பார்க்க மைந்தரும்=செல்வத்தைக் கவனித்துப் பார்க்கக் குமாரர்களும், மூவா எருதும்=வாகனமாக இளங்காளையும், விளங்கு கங்கை நீர்ப்பாய்ச்சலும்=நீர்வளமுள்ள கங்கை நீர்ப்பாய்தலும், நல் நிலமும்=நல்ல பூமியும், (நன்னிலம் என்ற ஸ்தலமும்) உண்டாகியும்=ஏற்பட்டிருந்தும், நின் இடத்தில்=உமது இடப்பாகத்தில், பால் பாக்கியவதி நீங்கா திருந்தும்=அன்பர்கட்குப் பாலமுதம் அளிக்கின்ற செல்வியாகிய உதாதேவி பிரியாதிருந்தும், ஏற்பார்க்கு இடாமல் அன்றே=பிச்சை கேட்பார்க்குப் பிச்சை யிடாத காரணத்தினாலல்லவா, பலிக்கு உழன்றீர்=பிச்சை கேட்டுத் திரிவீராயினீர், எ - று.

அகவல்

67. மூவர் கோவையு மூவிளங் கோவையும்
பாடிய வென்றன் பனுவல் வாயால்
என்னையும் பாடுக வென்றனிர் யெங்ஙனம்
பாடுது மியாங் களிறுபடு செங்களம்
கண்ணிற் காணீர் வெளிறுபடு நல்யாழ்
விருப்பமாய்க் கேளீர்
இலவ வாய்ச்சிய ரிளமுலை புல்லீர்
புலவர் வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கிலீர்
ஊடி நுண்ணீர் கோடீர் கொள்ளீர்
ஓவாக் கானத் துயர்மரம் போலத்
தாவாக் கனியிற் றேன்றி னீரே.

உரை:—மூவர் கோவையும் மூவிளங் கோவையும்=(அயன் அரி அரன் என்னும்) மூவருக்கும் தலைவராகிய கடவுளையும் இளமையுடைய தமிழ் நாட்டு மூவேந்தர்களையும், பாடிய என்றன் பனுவல் வாயால்=புகழ்ந்து கவி சொல்லிய என்னுடைய பாட்டு மணங்கமழும் வாயிலுலே, என்னையும் பாடுக என்றனிர்=உம்மையும் நான் பாடவேண்டுமென்று கேட்டீர், எங்ஙனம் பாடுதும் யாம்=உம்மை எப்படி நான் பாட முடியும், களிறு படு செங்களம் கண்ணில் காணீர்=யானைகள் சண்டையிட்டுச் சாகின்ற இரத்தத் தால் சிவந்த யுத்தகளத்தை நீர் கண்ணிலுற்கூடப் பார்த்திருக்கமாட்டீர், வெளிறுபடு கல் யாழ் விருப்பமாய்க் கேளீர்=குற்றம் நீங்கிய நல்ல யாழி னிசையைப் பிரியப்பட்டுக் கேட்கமாட்டீர், இலவ ஆய்ச்சியர் இளமுலை புல்லீர்=முருக்கம்பூப் போன்ற சிவந்த இதழை யுடைய நல் மாதரைச் சேர்ந் திருக்கமாட்டீர், புலவர் வாய்ச்சொல் புலம்பலுக்கு இரங்கிலீர்=புலவர்கள் குறை கூறி யிரக்கும் செயலைக் கண்டு இரங்கமாட்டீர், ஊடீர்=பெண்க ளோடு ஊடல்கொண் டறியமாட்டீர், உண்ணீர்=நல்ல உணவுகளையும் உண்ணமாட்டீர், கோடீர்=ஏழைகட்குக் கொடுக்கமாட்டீர், கொள்ளீர்= நற்பொருட்களை ஏற்றுக்கொள்ளமாட்டீர், ஓவா கானத்து உயர் மரம் போல=மரங்கள் நீங்காத காட்டிலுள்ள நெடிய மரம் போலவும், தாவாக் கனியில்=எட்டி எடுக்க முடியாத அதன் பழம் போலவும், தோன்றினீரே= பிறந்திருக்கின்றீரே, எ - று.

68. கல்வி யுடையீர் கருங்கா னகத்திடையே
நெல்லி யிலையுதிர்ந்து நிற்பதெவன்—வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போன் மாண்டு.

உரை:—வல்லாய் கேள் கல்வியுடையீர்=நிறமையான ஆராய்ச்சியும் கேள்வியுமுடைய கல்விமான்களே! கரும் கானகத்தினிடையே=பெரிய காட்டினிடத்தே, வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்=நிறை வேறக் கூடாத வழக்கை லஞ்சம் வாங்கி வெற்றி பெறுவிக்கும், வல்லாளன் சுற்றம்போல் மாண்டு=நிறமையாளனது இனத்தாரைப்போலப் பட்டுப் போய், நெல்லி=நெல்லி மரமானது, இலை உதிர்ந்து நிற்பதெவன்=இலை யுதிர்ந்து மொட்டை மரமாகி நிற்பதற்குக் காரண மென்ன? எ - று.

பாண்டியன் கல்யாணத்தில் விருந்துண்டது.

69. வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்டபெருக்க முரைக்கக்கேள்—அண்டி
நெருக்குண்டேன் றள்ளுண்டே னீள்பசியினுலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன்.

உரை:—வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்து=வளப்ப மான தமிழ் இலக்கியங்களிற் றேர்ச்சி பெற்ற பாண்டியன் திருமணத்தில், உண்ட பெருக்கம் உரைக்கக் கேள்=விருந்துண்ட சிறப்பை விரித்துரைப் பேன் கேட்பாயாக! அண்டி நெருக்குண்டேன்=சமீபத்திற் போய்க் கூட்டத்திற் கசங்கினேன், தள்ளுண்டேன்=இடத்துத் தள்ளப்பட்டேன், நீள் பசியினலே=நெடுநேரம் பசித்திருந்ததனலே, சுருக்குண்டேன்= வயிறு சுருங்கப் பெற்றேன், சோறு உண்டிலேன்=சாதம் கிடைக்கப் பெறாது உணவின்றி வந்தேன், எ - று.

70. வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னுடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றண்டை
நன்னுடு சான்ரோ ருடைத்து.

உரை—மலை நாடு வேழம் உடைத்து=மலையாள நாடானது யானை களைப் பெற்றிருப்பது, மேதக்க=மேம்பாடுடைய, சோழவள நாடு= செழிப்பான சோழ நாடானது, சோறு உடைத்து=சோற்றுச் செல்வ முடையது, பூழியர்கோன் தென்னுடு=பாண்டியனது அழகிய தேசம், முத்து உடைத்து=முத்து எடுத்து வழங்குவது, தெண்ணீர் வயல் தொண்டை நன்னுடு=தெளிவான நீர் பாயும் வயல்களை யுடைய சிறந்த தொண்டை மண்டலமானது, சான்ரோர் உடைத்து=பண்பிற் சிறந்த உயர்ந்தோர்களை உடையது, எ - று.

ஔவையார் முதலிய எழுவர்

பாடியது

ஔவை.

1. இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானே—முட்டமுட்டப்
பஞ்சமே யானலும் பாரமவ னுக்கன்னுய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

உரை:—அன்னுய்=அம்மையே! இட்டமுடன்=மன மிசைந்து, என் தலையில்=எனது தலையில், இன்னபடி என்று=வினைப்பயன்களை இவ்வாறு அனுபவிக்கவேண்டுமென்று, எழுதிவிட்ட=விதித்து முடித்த, சிவனும்

செத்துவிட்டாலே = சிவன் மரணமடைய வில்லையே, முட்டமுட்டப் பஞ்சமே ஆனாலும் = மிகவும் கடுமையான வறுமை ஏற்பட்டாலும், பாரம் அவனுக்கு = நம்மைக் காக்கவேண்டிய பொறுப்பு அவனுக்கே ஆகும், நெஞ்சமே அஞ்சாதே நீ = உள்ளத்திலே நீ பயம் வைத்துக்கொள்ளாதே, எ - று.

உப்பை.

2. அத்தி முதலெறும்பீ றனவுயி ரத்தனைக்கும்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகன்—முற்றவே
கற்பித்தான் போனலே காக்கக் கடனிலையோ
அற்பனே வன்ன யரன்.

உரை:—அன்னாய் = அம்மையே! அத்திமுதல் எறும்பு ஈறான உயிர் அனைத்துக்கும் = பெரிய யானை முதல் சிறிய எறும்பு வரையுள்ள எல்லாவுயிர்களுக்கும், சித்தம் மகிழ்ந்து அளிக்கும் தேசிகன் = திருவுள்ளத்திலுவகையோடு உணவு முதலியவற்றை உதவுகின்ற ஆசாரியனாகிய கடவுள், முற்றவே கற்பித்தான் = உண்மை முழுதும் எனக்கு அறிவுறுத்தியவன், போனலே = அவன் இல்லாமல் ஒழிந்தாலே? காக்கக் கடன் இலையோ = எல்லாரையும் காத்தல் அவன் கடமையல்லவா? அரன் அற்பனே = அச்சிவபிரான் குறைவான ஆற்றலுடையவனே? எ - று.

அதிகமான்.

3. கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன்—உருப்பெற்றுல்
ஊட்டி வளர்க்காலே வோகெடுவா யன்னுய்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்.

உரை:—அன்னாய் கேள் = அம்மையே கேட்பாயாக! கருப்பைக்குள் = கருப்பையில் தங்கும் உயிருக்கும், முட்டைக்குள் = முட்டையிலடங்கியுள்ள உயிருக்கும், கல்லினுள் தேரைக்கும் = கல்லினுள்ளே தங்கும் தேரைக்கும், விருப்புற்று அமுது அளிக்கும் மெய்யன் = கருணையுடன் உணவுகொடுக்கின்ற மெய்யான கடவுள், உருபெற்றால் = உடம்பெடுத்துப் பிறந்தால், ஊட்டி வளர்க்காலே = உணவளித்து வளர்க்கமாட்டாலே, ஓ கெடுவாய் = ஓ மனம் வருந்துபவனே! உனக்கு வாட்டம் என் = நீ ஏன் தளர்ச்சியடைகின்றுய்? மகிழ் = மனங்களித்திரு, எ - று.

உறுவை.

4. சண்டைப்பைக் குள்ளுயிர்தன் றுயருந்தத் தானருந்தும்
அண்டத் துயிர்பிழைப்ப தாச்சரியம்—மண்டி

அலைகின்ற வன்னு யரனுடைய வுண்மை
நிலைகண்டு நீயறிந்து நில்.

உரை:—மண்டி அலைகின்ற அன்னுய்=பிரியும் துயரநிறைந்து சஞ் சலப்படுகின்ற அம்மையே! சண்டைப்பைக்குள் உயிர்=கருவுண்டாகும் பையினுள்ள உயிரானது, தன் தாய் அருந்த தான் அருந்தும்=அதன் அன்னை உணவுகொள்ள அவ்வுணவின் சாரத்தை தான் புசித்துப் பிழைக் கும், அண்டத்து உயிர் பிழைப்பது ஆச்சரியம்=முட்டையிலடங்கிய உயிர் எங்ஙனம் வாழ்கின்றதென்பது வியப்பைத் தருகின்றது, அரனுடைய உண்மை நிலைகண்டு=கடவுளுடைய மெய்யான கருணைத் தன்மையை அறிந்து, நீ அறிந்து நில்=நீ ஞானமுள்ளவளாய் இருப்பாயாக! எ - று.

கபிலர்.

5. கண்ணுழையாக் காட்டிற் கருங்கற் றவளைக்கும்
உண்ணும் படியறிந் தூட்டுமவர்—நண்ணும்
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குத் தொழிலென்ன தான்.

உரை:—நாரியோர் பாகர்=உமாதேவியை இடப்பாகத்திலுடைய கடவுள், கண் துழையாக் காட்டில்=கண்புகுந்து பார்க்கமுடியாத மாமடர்ந்த கானகத்தில், கருங்கல் தவளைக்கும்=கரிய கல்லினுள் தோன்றியுள்ள தேரைக்கும், உண்ணும்படி அறிந்து ஊட்டும் அவர்=உணவு கொள்ளும் வகையறிந்து உணவுகொடுக்கின்ற தன்மையுடையவர், நண்ணும் நமக்கும் படி அளப்பார்=அவரை விரும்பியடைகின்ற நமக்கும் நமக்குரிய உணவைத் தந்தருளுவர், தமக்குத் தொழில் என்னதான்=அவருக்கு வேறு கடமை யாதுளது? எ - று.

வள்ளியம்மை.

6. அன்னை வயிற்றி லருத்தி வளர்த்தவன்றன்
இன்னும் வளர்க்காலே வென்றுயே—மின்னரவம்
சூடும் பெருமான் சுடுகாட்டி னின்றுவிளை
யாடும் பெருமா னவன்.

உரை:—என் தாயே=என்னைப் பெற்றவளே! மின் அரவம் சூடும் பெருமான்=மினுங்குகின்ற பாம்பை அணிந்த இறைவன், சுடுகாட்டில் நின்று விளையாடும் பெருமான்=எல்லாம் ஒடுங்கிய விடமாகிய சுடுகாட்டில் தான் தன் தேவியுடனின்று திருவிளையாடல் செய்யும் பேரியோனுகிய, அவன்=அப்பெருமான், அன்னை வயிற்றில் அருத்தி வளர்த்தவன்=பெற்ற

வள் வயிற்றினுள்ளே நான் இருக்கும்போது எனக்கு உணவளித்து வளர்த் தான், இன்னும் வளர்க்காளே = இனிமேலும் வளர்க்கமாட்டானே? எ - று.

திருவள்ளுவர்.

7. எவ்வுயிருங் காக்கவொரு வீசனுண்டோ வில்லையோ
அவ்வுயிரில் யானெருவ னல்லனே—வவ்வி
அருகுவது கொண்டிங் கலைவதே னன்னே
வருகுவது தானே வரும்.

உரை:—அன்னே = அம்மையே! எவ்வுயிரும் காக்க = உயிர்கள் எல்லா வற்றையும் பாதுகாத்தற்கு, ஒரு ஈசன் உண்டோ இல்லையோ = ஒரு கடவுள் இருக்கிறார் அல்லவா? அவ்வுயிரில் யான் ஒருவன் அல்லனே = அப்படிக் காக் கப்படும் உயிர்களில் யான் ஒருவனல்லவா? அருகுவது வவ்வி = குறைத்து ஒழிந்துபோம் பொருளில் ஆசைப்பட்டு, கொண்டு இங்கு அலைவது என் = அதனைக் கையிலெடுத்துக்கொண்டு திரிவதினாலே என்ன பயன்? வருகுவது தானே வரும் = விதிப்படி நடைபெறுவது நாம் எண்ணுமலே நடைபெறும், எ - று.

தெய்வப்புலமைத்

திருவள்ளுவ நாயனார்

பாடியது

சங்கத்தார் கேட்டதற்கு விடை கொடுத்தது.

1. பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவில்
இழைநக்கி நூனெருடு மேழை யறிவேனே
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.

உரை:—பூவில் அயனும் = தாமரைப் பூவில் வீற்றிருக்கும் படைப்புக் கடவுளும், புரந்தரனும் = விண்ணவர் தலைவனும், பூவுலகைத் தாவி அளந் தோனும் = நிலவுலகத்தைக் கடந்து மேலுலகங்களையும் தனது திருவடியால் அளந்து காட்டிய பெருமாளும், தாம் இருக்க = (கூத்தின்) உண்மை யறிந்து கூறக் கூடியவர்களாயிருக்கவும், நாவில் இழை நக்கி நூல் நெருடும் ஏழை = நாக்கினால் நூலிழையை நனைத்து அதனை உருட்டித் தடவுகின்ற எளியவனான், குழை நக்கும் பிஞ்ஞகன் தன் கூத்து = குண்டலம்

விளங்குஞ் செவியினை யுடைய சிவபெருமானது நடனத்தின் நுட்பத்தை, அறிவேனே=தெரியக்கூடுமா ? எ - று.

குறிப்பு:—இறைவர் ஊர்த்துவ தாண்டவம் இயற்றிய காலத்தில் அவர் காதிலிருந்து விழுந்த குண்டலத்தைக் காலினு லெடுத்து பிறறறியாத படி தரித்துக் கொண்டதாகவும், அதைப்பற்றியே திருவள்ளுவர் இப் பாட்டிற் குறிப்பித்ததாகவும் கூறுவதுண்டு.

2. ஐயரென் றுரைத்தீர் நாயேற் கடுக்குமோ வருளி லேனை
பொய்யொடு களவு மற்றுப் புலன்களை யொடுக்கிக் கொண்டு
உய்யவே புலன்க ளைந்து முயர்பர வெளியுள் ளாக்கி
வெய்யவன் மதியம் போல விரவுவ ரையர் ராவர்.

உரை:—அருள் இலேனை=அருட்கு ணமில்லாத என்னை, ஐயர் என்று உரைத்தீர்=ஐயரென்று நீங்கள் அழைத்தீர்கள், நாயேற்கு அடுக்குமோ=அந்தப் பட்டம் நாய்போன்ற எனக்குத் தகுமா ? பொய்யொடு களவும் அற்று புலன்களை ஒடுக்கிக்கொண்டு=பொய் சொல்லுதலும் திருடுதலும் இல்லாதவர்களாய் ஐம்பொறிகளையும் அடக்கினவர்களாய், உய்யவே=மேலான கதியடைதற் பொருட்டு, புலன்கள் ஐந்தும் உயர் பரவெளியுள் ஆக்கி=ஐம்பொறி யறிவையும் மேலான அருள் வெளியுள் ளடங்கும்படி செய்து, வெய்யவன் மதியம்போல விரவுவார்=சூரிய ஒளியில் சந்திரவொளி அடங்கி விடுதல்போலக் கடவுளுடைய அறிவு ஒளியில் தம்முடைய அறிவு அடங்கும்படி கலந்து நிற்பவரே, ஐயர் ஆவர்=ஐயரென்ற பதத்திற்கு உரியராவர், எ - று.

3. ஞானவா னென்று சொன்னீர் நாதவிந் துவுங்க டந்து
கானலை வரையுஞ் சுட்டுக் கடுவெளி பரமா நந்தந்
தானெனு மவையி ரண்டுந் தவிர்ந்துதன் வசமுங் கெட்டு
மோனமுங் கடந்தே யப்பான் முடிந்தவர் ஞானி யாவர்.

உரை:—ஞானவான் என்று சொன்னீர்=என்னை ஞானி யென்று அழைத்தீர்கள், நாதவிந்துவும் கடந்து=நாதம் விந்து எனப்படும் மூல தத்துவங்கட்கு அப்பாற் பட்டு, கானல் ஐவரையும் சுட்டு=கானல் போல நிலையில்லாத ஐம்பொறிக்கு விடயமாகும் பொருள்களை அறவே அகற்றி, கடுவெளி பரம் ஆனந்தம் தான் எனும் அவை இரண்டும் தவிர்ந்து=காவலாயுள்ள அருள் வெளியிற் கிட்டக்கூடிய பேரின்பமும் தானும் வேறு வேறு என்ற உணர்ச்சி நீங்கப்பெற்று, தன் வசமும் கெட்டு=தன் னுணர்ச்சியும் ஒழியப்பெற்று, மோனமுங் கடந்தே அப்பால் முடிந்தவர்=பேசாத நிலையையுங் கடந்த உயர் நிலையை யடைந்தவன், ஞானி ஆவன்=ஞானி யென்று சொல்லப்படுதற் குரியவனவன், எ - று.

4. சாதியிலே தொண்ணூற்றொன் பானுஞ்சாதி
சமயத்திற் பதின்மூன்றுஞ் சமயமாகும்
நீதியிலே சிவனுடைய நீதியாகும்
நிலைமையிலே வேதாந்த நிலைமையாகும்
ஆதியிலே யெங்களூர் கருவூராகும்
அந்தத்திற் போயடைவோம் பேரூர்தன்னில்
சோதியிலே பரஞ்சோதிக் கூட்டமாகும்
சொல்லுதற்கு மெங்கள்குலஞ் சுக்கிலமதாமே.

உரை:—சாதியிலே தொண்ணூற்று ஒன்பான் ஆம் சாதி = குலத்திலே தொண்ணூற்றாறு தத்துவங்களையும் நாத விந்துக்களையும் தாண்டிய தொன்னூற்று ஒன்பதாவது குலமாகும், சமயத்தில் பதின்மூன்றும் சமயம் ஆகும் = மதத்தில் அகச்சமயம் ஆறினையும் புறச்சமயமாறினையும் கடந்த பதின்மூன்றாவது மதமாகும், நீதியிலே = நியாய முறையிலே, சிவனுடைய நீதியாகும் = யாதொரு பற்றுமில்லாத கடவுளுடைய நடுநிலையான நெறியே எங்கள் நெறியாகும், நிலைமையிலே வேதாந்த நிலைமையாகும் = நிற்கும் நிலையைக் கவனித்தால் ஞான நூல்களில் முடிவாகக் கூறப்பட்ட அறிவு நிலையாகும், ஆதியிலே எங்கள் ஊர் கரு ஊர் ஆகும் = முதலிலே நாங்கள் இருந்தவிடம் தாயின் கருவாகிய பதியாகும், அந்தத்தில் பேரூர் தன்னில் போய் அடைவோம் = கடைசியாக பெரிய விடமாகிய வீட்டினிற் சென்று சேர்வோம், சோதியிலே பரஞ்சோதிக் கூட்டமாகும் = ஒளியாவில் சூரியன் சந்திரன் அக்கினியைக் கடந்த மேலான பேரொளியில் விளங்குகின்ற இனத்தாராவோம்; சொல்லுதற்கும் எங்கள் குலம் சுக்கிலமதாமே = எங்கள் குடிப்பிறப்பின் தன்மை என்ன வென்று கூறவேண்டுமானால் களங்கமற்ற குடியென்பது, எ - று.

5. எந்தவூ ரென்றீ ரிருந்தவூர் நீர்கேளீர்
அந்தவூர்ச் செய்தி யறியீரோ—வந்தவூர்
முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாலும் பாழென் றறி.

உரை:—எந்த ஊர் என்றீர் = எங்களுடைய ஊர் எந்த ஊர் என்று கேட்டீர்கள், இருந்த ஊர் நீர் கேளீர் = நாங்கள் தங்கியிருந்த ஊரின் தன்மையை நீங்கள் கேட்பீர்களாக, அந்த ஊர் செய்தி அறியீரோ = அந்த ஊரின் தன்மையை நீங்க ளறியமாட்டீர்களா ? அந்த ஊர் = அந்த விடமானது, முப்பாழும் பாழாய் = மூன்று மாயையு மில்லாத விடமாய், முடிவில் ஒரு சூனியமாய் = முடிவான தன்னுணர்ச்சியும் இல்லாத விடமாய், அப்பாலும் பாழ் என்று அறி = அதனைக் கடந்தும் யாதொரு பற்று மில்லாத தன்மையது என்று எண்ணுக, எ - று.

6. நில்லுநில் லென்று சொன்னீர் நேசபா சங்க ளைந்தும்
புல்லறி வோடுங் வரங்காப் புலைகொலை களவு மற்றுச்
சொல்லுதற் கரிய ஞானச் சுழிமூனை முடியின் மீதில்
எல்லையுங் கடந்தே யப்பா லேகமா னவர்க ணிற்பார்.

உரை:—நில்லு நில்லு என்று சொன்னீர்=நிற்க நிற்க வென்று பணித்தீர்கள், நேச பாசங்கள் ஐந்தும்=பற்றுக்குக் காரணமாகிய ஐந்து மலங்களையும், புல்லறிவோடு=கீழான அறிவையும், வாங்கா=ஒழித்து, புலை கொலை களவும் அற்று=புலால் புசித்தல், கொல்லுதல், களவு செய்தல் என்பவைகளை நீக்கி, சொல்லுதற்கு அரிய ஞான சுழிமூனை முடியில்=இன்னதென்று கூற முடியாத உயர்ந்த ஞானத்திற்குக் காரணமாகிய சுழிமூனை நாடியின் உச்சியிலுள்ள, எல்லையும் கடந்து=துவாதசாந்தத்திற்கும் அப்பாற் சென்று, அப்பால் ஏகமானவர்கள் நிற்பார்=அப்பாலுள்ள ஒரு பொருளோடு கலந்தவர்கள் உயர்ந்த பொருளோடு நிற்பவர்களாவர், எ - று.

7. இருமிரு மென்று சொன்னீ ரேற்குமோ வேழை யேற்குத்
தருபொரு ளுணர்ந்து சைவ சமயமு மனைத்து நீங்கி
மருடரு வினையு நீங்கி மாசிலா வுண்மை ஞானம்
பொருந்தின ரிருப்பர் பின்பு பொருதவ ரிறப்பர் தாமே.

உரை:—இரும் இரும் என்று சொன்னீர்=உட்கார்ந்திருக்கும்படியாக உபசரித்தீர், ஏற்குமோ ஏழையேற்கு=எளியனுகிய எனக்கு அது பொருந்துமா? தருபொருள் உணர்ந்து=மேலான நற்கதி பெறுகின்ற உண்மையறிந்து, சைவசமயமும் அனைத்தும் நீங்கி=சைவ சமய முதலிய சமயங்களெல்லாவற்றையும் கடந்து, மருள் தரு வினையும் நீங்கி=மயக்கம் தரும் கரும மலத்தையும் ஒழித்து, மாசிலா=அழுக்கற்ற, உண்மை ஞானம்=மெய்யுணர்வு, பொருந்தினர்=கைவந்தவர்கள், இருப்பர்=நிலையான விடத்தில் அழியாதிருப்பார்கள். பின்பு பொருதவர்=உண்மை ஞானத்தைப் பெற்றும் அது நன்கு கைவரப் பெறுதவர், இறப்பர் தாமே=மரணமடைவர், எ - று.

8. போமென வுரைத்தீ ரென்னைப் பொறியொடு புலன்க ளைந்தும்
ஆமெனு மவிச்சை யோடு மங்ஙனே மதித்துக் கொண்டே
ஏமமுஞ் சாம மற்றே யிரவொடு பகலு மற்றுச்
சோமனூர் பதியை விட்டுத் துறந்தவர் போவ ரன்றே.

உரை:—என்னைப் போம் என உரைத்தீர்=என்னைப் போவீராக வென்று எவினீர், பொறியொடு புலன்கள் ஐந்தும்=ஐம்பொறிகளும் அவற்றிற்கு விடயமாகும் ஐவகைப் பொருள்களும், ஆம் எனும் அவிச்சையோடு=

அவை யேற்கத் தக்கன வென்னும் அறிவையும், அங்ஙனம் மதித்துக் கொண்ட = அவ்வாறு அவற்றைப் பொருட்படுத்தி யனுசரித்த, ஏமமும் சாமம் அற்று = பாதுகாவலும் உபாயங்களும் ஒழிந்து, இரவொடு பகலும் அற்று = கருவிகளோடு கூடாத நிலையும் கூடிய நிலையும் ஒழிந்து, சோமனூர் பதியை விட்டு = யோக நிலையைச் சந்திரமண்டலத்திற்கு அப்பாற் சென்று, துறந்தவர் போவர் — பற்றற்றவர் மேலான கதிக்குச் செல்வர், அன்றே — அசை, எ - று.

நாயனூர் தமது மனைவியாரின் பிரிவாற்றுமையால் பாடியது.

9. அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் றவருத பாவாய் — அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என்றூங்கு மென்கண் ணிரா.

உரை: — அடிசிற்கு இனியாளே = நல்லுணவு அளித்தற்கு இனிய வளே ; அன்புடையாளே = என்பாற் காதலுடையவளே ! சொற்படி தவறுத பாவாய் = எனிய வண்ணம் நடத்தலிற் பிசகாத பெண்ணே ! அடி வருடி = நான் தூங்கும்பொழுது என் பாதங்களைத் தடவிக்கொண்டிருந்து, பின் தூங்கி = நான் தூங்கியபின் உறங்கி, முன் எழுந்த பேதையே = எனக்கு முன் துயில் நீங்கி யெழுந்த அடக்கமுடையவளே ! போதியோ = நீ என்னை நீங்கிச் செல்கின்றாயோ ? (இறக்கின்றாயோ) இரா என் கண் என் தூங்கும் = இனி இரவிலே என் கண்கள் எவ்வாறு நித்திரை செய்யும், எ - று.

10. குறுமுனிவன் முத்தமிழு மென்குறளும் நங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்.

உரை: — குறுமுனிவன் முத்தமிழும் = அகத்தியருடைய முத்தமிழிலக் கணமும், என் குறளும் = எனது திருக்குறள் நூலும், நங்கை சிறு முனிவன் = உமையின் புதல்வனுகிய முருகக்கடவுளின் வாய்மொழியின் சேய் = உபதேசத்தின் பயனுகிய பிள்ளைகளாகும், எ - று.

குறிப்பு: — நங்கை சிறுமுனிவன் என்பதற்கு உடைய நங்கையின் புதல்வராகிய சடகோபரென்றும், வாய் மொழி யென்பதற்குத் திருவாய் மொழியென்றும் உரை கூறுவது முண்டு.

இடைக்காடர்

பாடியது

---

1. ஐம்பொருளு நாற்பொருளு முப்பொருளும் பெய்தமைத்த
செம்பொருளே யெம்மறைக்குஞ் சேட்பொருளைத்—தண்குருகூர்ச்
சேய்மொழிய தென்பர் சிலரியா னிவ்வுலகில்
தாய்மொழிய தென்பேன் றகைந்து.

உரை:—ஐம்பொருளும் = இறைவனது ஐந்துவகை வடிவத்தையும், நாற்பொருளும் = நால்வகை யுறுதிப் பொருளையும், முப்பொருளும் = கடவுள் உயிர் உலக மென்னும் மூன்று பொருளையும், பெய்து அமைத்த = வைத்துப் பாடப்பெற்ற, செம்பொருளே = கடவுளைக் கூறும் பாடலே, எம்மறைக்கும் சேண் பொருளை = எந்த வகையான வேதங்கட்கும் அப்பாற்பட்ட பொருளைக் கூறும் நூலை, சிலர் தண் குருகூர்ச் சேய் மொழிய தென்பர் = குளிர்ந்த பதியாகிய திருக் குருகூரி லவதரித்த குழந்தையின் திருவாக்கென்று சிலர் கூறுவார்கள், இவ்வுலகில் யான் தகைந்து தாய்மொழிய தென்பேன் = அவர்கள் சொல்வதை யொழித்து நான் அது இந்த வுலகத்தில் அன்னை சொல்லாகிய வேத மென்பேன், எ - று.

குறிப்பு:—ஐம்பொருள் என்பன : திருமாலின் பாமபத இருக்கை திருப்பாற் கடலிலிருத்தல், அவதாரங்கள், வியாபகங்கள், உருவத்திருமேனி என்னுமிவ் வைந்தையுங் குறிக்கும். அறம், பொருள், இன்பம், வீடு என்பன நாற்பொருள்.

2. சேய்மொழியோ தாய்மொழியோ செப்பி லிரண்டுமொன்றே
வாய்மொழியை யாரு மறையென்பர்—வாய்மொழிபோல்
ஆய்மொழிகள் சாலவு ளவெனினு மம்மொழியும்
சாய்மொழிய வென்பேன் றகைந்து.

உரை:—சேய் மொழியோ தாய் மொழியோ செப்பில் இரண்டும் ஒன்றே = சேய் மொழியென்று சொன்னாலும், தாய் மொழியென்று சொன்னாலும் இரண்டும் ஒரு கருத்தையே குறிக்கும், வாய் மொழியை யாரும் மறை யென்பர் = திருவாய்மொழியை எல்லாரும் வேதமென்று கூறுவர், வாய் மொழிபோல் ஆய்மொழிகள் சால உள எனினும் = திருவாய் மொழியைப் போல ஆயத்தக்க நூல்கள் மிகுதியாக உள்ளன வெனினும், தகைந்து = அச் சொல்லைத் தடுத்து, அம்மொழியும் சாய்மொழிய என்பேன் = அந்நூல்களும் திருவாய் மொழியின் சார்பான சொற்களையுடையன வென்று கூறுவேன், எ - று.

3. ஆற்றங் கரையி னருகிருக்கு மாமரத்தில்
காக்கை யிருந்து கககவெனக்—காக்கைதனை
எய்யக்கோ லில்லாமல்.....என்றனே
வய்யக்கோ னின் மகன்.

உரை:—ஆற்றங்கரையின் அருகிருக்கும் மாமரத்தின்=நதிக்கரையின் பக்கத்திலிருக்கும் மாமரத்தில், காக்கை இருந்து=காக்கையானது தங்கி, ககக என=கா கா கா என்று கத்த, வய்யக்கோனின் மகன்=வையக்கோன் என்பவனுடைய புதல்வன், காக்கைதனை எய்யக் கோல் இல்லாமல்=அப்படிக் கூவின காகத்தைத் துரத்துவதற்குக் கழியில்லாமல் (எய்வதற்கு அன்பு இல்லாமல்)....என்றனே=ஆயுத வோசையோடு கூடிய ககர ஒலியை எழுப்பினன், எ - று.

மதுரை சொக்கநாதர்

பாடியது

---

1. கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

உரை:—கொங்கு தேர் வாழ்க்கை=தேனை யாராய்ந்து சேர்க்கின்ற பிழைப்புத் தொழிலையுடைய, அம் சிறைத் தும்பி=அழகிய சிறகினையுடைய வண்டே, பயிலியது கெழீஇய நட்பின்=பழகிய காரணத்தினற் பொருந்திய சிநேகம்பற்றி, காமம் செப்பாது=பட்சபாதமாகப் பேசாது, கண்டது மொழிமோ=நேரே தெரிந்ததை யுள்ளபடி கூறுவாயாக, மயிலியல்=மயில்போன்ற சாயலையும், செறி எயிற்று=வரிசையாகப் பொருந்திய பற்களையுமுடைய, அரிவை கூந்தலின்=கற்புடைய நங்கையின் தலைமயிரைப் பார்க்கிலும், நீ அறியும் பூவே=நீ தெரிந்த பூக்கள், நறியவும் உளவோ=வாசனையுள்ளனவா யிருக்கின்றனவா? எ - று.

குறிப்பு:—சண்பக பாண்டியன் தனது தேவியின் கூந்தலின் இயற்கை மணத்தை ஒருநாள் முகர்ந்து கூந்தலுக்கு இயற்கை மண முண்டோவென்று தெரிவதற்காகத் தன் கருத்தறிந்து பாடலியற்றுவார்க்கு ஆயிரம்பொன் முடிப்பொன்று தருவதாக அதனைச் சங்கத்தார் சபையிற் றெரிவித்தான். தருமி யென்ற ஆதிசைவ இளைஞன் ஆலவாய்ப்பெருமானை

வழிபட்டுத் தன் வறுமை தீரும்படி அரசன் கருத்தமைந்த பாடலொன்றை இறைவன்பாற் பெற்றனன். அதுவே இப்பாட்டாகும். இப்பாட்டிற்குக் குறை கூறிய நக்கீரரைக் கண்டிக்கும்பொருட்டுச் சிவபெருமானே ஓர் அந்தணன் வடிவமாக வந்தன ரென்பதைத் திருவிளையாடற் புராணத்திற் காண்க.

அகவல்

2. மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பாலிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிந்திடு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
கொருமையி னுரிமையி னுதவி யணிதிகழ்
குருமா மணிதிகழ் குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன் றன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

உரை:—மதிமலி புரிசை = திங்களளூர்ந்து செல்லுகின்ற மதிற் சுவரும், மாடம் = மேல் வீடுகளும் நிறைந்த, கூடல் பதிமிசை நிலவும் = கூடற் பதியில் தங்குகின்ற, பால்நிற வரிச்சிறகு அன்னம் = பால் போன்ற வெள்ளை நிறமும் ரேகைகள் பதிந்த சிறகுமுடைய அன்னங்கள், பயில் பொழில் ஆல வாயில் = நிலவுகின்ற சோலையையுடைய திருவாலவாய்ப் பதியில், மன்னிய சிவன் யான் = எப்போதும் வீற்றிருக்கும் சிவனாகிய நான், மொழிந்திடு மாற்றம் = தெரிவிக்கும் செய்தியாவது, பருவக் கொண்மூ படி என = கார் காலத்து மேகத்தின் தன்மையைப்போல, பாவலர்க்கு ஒருமையின் உரிமையின் உதவி = தன்பால் வரும் புலவர்கட்கு ஒத்த மனத்தோடு அவ்வவர் கட்கு ஏற்றபடி பொருள்களை யளித்து, அணி திகழ் = அழகாக விளங்குகின்ற, குரு மா மணி திகழ் = நல்ல நிறமுடைய உயர்ந்த இரத்தினங்கள் ஒளி வீசுகின்ற, குலவிய குடைக்கீழ் = விரிந்த கொற்றக்குடையின் கீழிருந்து, செரு மா உகைக்கும் = யுத்தத்தில் யானையை நடத்துகின்ற, சேரலன் காண்க = சேர மன்னனே! நீ இதனைப் பார்ப்பாயாக, பண்பால் யாழ் பயில் = சிறந்த பண்ணமைந்த யாழினை வாசிக்கும், பாணபத்திரன் = பாணபத்திர னென்னும் பெயருடையவன், தன்போல் என்பால் அன்பன் = தன்னைப்போல என்பால் பக்தி யுடையவன், தன்பால் காண்பது கருதிப் போந்தனன் = உன்னைப் பார்க்க எண்ணி வருகின்றான், மாண் பொருள் கொடுத்து வர விடுப்பதுவே = அவனுக்கு வளமான செல்வத்தைக் கொடுத்து இங்கே வரும்படி அனுப்பவும், எ - று.

குறிப்பு:—பாணபத்திரர் என்பவர் தனது வறுமை தீருவதற்காகத் திருவாலவாய்ப் பெருமானிடம் சேர்ந்து மன்னனுக்குத் திருமுகம் பெற்று அவன்பாற் சென்று பொருள் பெற்ற விவரம் திருவிளையாடற் புராணத்திற் காணவும்.

3. அங்கம் வளர்க்க வரிவாளி னெய்தடவிப்
பங்கப் படவிரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்
கீருகீ ரென்றறுக்குங் கீரனே வென்கவியைப்
பாரிற் பழுதென் பவன்.

உரை:—அங்கம் வளர்க்க=உடலோம்புதற் பொருட்டு, அறிவாளின் நெய் தடவி=சங்கறுக்கின்ற வாளில் நெய்யைத் தடவி, பங்கப்பட இரண்டு கால் பரப்பி=பிறர் குறை கூறும்படியாக இருகால்களையும் விரித்துட்கார்ந்து கொண்டு, சங்கதனை=சங்குகளை, கீருகீரு என்று அறுக்கும் கீரனே=கீரு கீரென்று ஒலி கேட்கும்படியாகக் கூறுசெய்கின்ற நக்கீரனே, என் கவியை=எனது பாட்டினை, பாரில் பழுது என்பவன்=பிழையுள்ளதென்று இவ்வுல கிற் கூறக் கூடியவன், எ - று.

நக்கீரர் பாடியது.

4. சங்கறுப்ப தெங்கள்குலஞ் சங்கரர்க்கங் கேதுகுலம்
பங்கமுறச் சொன்னற் பழுதாமோ—சங்கை
அரிந்துண்டு வாழ்வோ மரனரைப் போல
இரந்துண்டு வாழோ மினி.

உரை:—சங்கு அறுப்பது எங்கள் குலம்=சங்கறுக்குந் தொழில் எங்கள் சாதிக் குரியது, சங்கார்க்கு ஏது குலம்=சிவபெருமானுக்குச் சாதி யாதென்று கூறமுடியும், பங்கம் உற சொன்னல் பழுது ஆமோ=இருக்கின்ற குறையைப் பொருத்தமாகக் கூறினல் அது தப்பாகுமா? சங்கை அரிந்து உண்டு வாழ்வோம்=சங்கரிக்குந் தொழிலைச்செய்து கூலிபெற்று அதனல் உணவருந்திப் பிழைக்கின்றோம், அரனரைப்போல இரந்து உண்டு வாழோம் இனி=சிவபெருமானைப் போல இனிமேலுங்கூட நாங்கள் பிச்சையெடுத் துப் பிழைக்கமாட்டோம். அங்கு=அசை, எ - று.

திருஞானசம்பந்தமூர்த்தி

பாடியது

---

1. கடியுண்ட நெடுவாளை கராவிற் றப்பிக்
கயத்துக்கு ளடங்காமல் விசும்பிற் பாய
அடியுண்ட வுயர்தெங்கின் பழத்தாற் பூகம்
அலையுண்டு குலைசிதறு மாலி நாடா

படியுண்ட பெருமானைப் பறித்துப் பாடிப்
பதம்பெற்ற பெருமானே தமியேன் பெற்ற
கொடியொன்று நின்பவனிக் கெதிரே சென்று
கும்பிட்டா ளுயிரொன்றுங் கொடுவந் தாளே.

உரை:—கடியுண்ட பெருவாளை = தன்னைக் காத்துக்கொள்ளக் கருதிய பெரிய வாளை மீனுனது, காவில் தப்பி = முதலை வாயினின்றும் பிழைத்தோடி, கயத்துக்குள் அடங்காமல் விசும்பில் பாய = குளத்திற் றங்கியிராமல் வானத்தில் பாயவும், அடியுண்ட உயர் தெங்கின் பழத்தால் = அவற்றூல் தாக்கப்பட்ட உயர்ந்த தென்னமரத்தின் நெற்றுக்கள் கீழே விழும்போது, பூகம் அலையுண்டு = கமுக மரங்கள் அவற்றூல் அசைவுற்று, குலை சிதறும் = பாக்குக் குலைகளைச் சிதறுகின்ற, ஆலி நாடா = திருவாலி நாட்டாழ்வாரே! படியுண்ட பெருமானை = பூமியை விழுங்கிய திருமாலை, பறித்துப் பாடி = (அவர் பிராமண வழிப்போக்கனுய் வந்தபோது) வழிப்பறி பறித்து (அவர் இன்னுரென்று உணர்ந்த பிற்பாடு அவர்மீது) பாட்டுப் பாடி, பதம்பெற்ற பெருமானே = அவருடைய திருவடியை அடைந்த பெரியோனே! நின் பவனிக்கு எதிரே = உன் ஊர்கோலம் வரும்போது அதற்கு எதிர் முகமாக, தமியேன் பெற்ற கொடி ஒன்று சென்று கும்பிட்டாள் = எனக்குப் பிறந்த கொடிபோன்ற பெண்ணரசி போய் வணங்கினுள், உயிர் ஒன்றும் கொடு வந்தாளே = (உள்ளமும் உடலும் உன் வசமாகி விட) உயிரை மாத்திரம் என்னிடம் கொண்டுவந்தாள், எ - று.

குறிப்பு:—இது தாயொருத்தி தன் மகளின் இயல்பைத் தலைவனுக்குத் தெரிவிக்கின்ற துறையமைத்துப் பாடிய பாட்டாகும். திருமங்கையாழ்வார் வழிப்போக்கரை வழிமறித்து பறித்த பொருளைக் கொண்டு திருமாலடியார் கட்குத் தொண்டு செய்தவர். திருமாலே அந்தண வடிவமாக வந்தபோது அவரை வழிப்பறி பறித்து அவர் மந்திரம் செபிப்பதைப் பார்த்து அதனைத் தனக்கு உபதேசிக்கும்படி வற்புறுத்தி உபதேசம் பெற்றபோது உண்மையுணர்ந்து மனம் உருகித் திருமங்கையாழ்வார் கடவுளைப் பாடின தென்பது சரித்திரம்.

திருமங்கையாழ்வார்

பாடியது

1. வருக்கைநறுங் கனிசிதறிச் செந்தேன் பொங்கி
மடுக்கரையிற் குளக்கரையின் மதகி லோடப்
பெருக்கெடுத்து வண்டோலஞ் செய்யுங் காழிப்
பிள்ளையார் சம்பந்தப் பெருமாள் கேளீர்

அருட்குலவு மயிலைதனி லனலால் வெந்த
அங்கத்தைப் பூம்பாவை யாக்கி னேமென்
றிருக்குமது தகவன்று நிலவால் வெந்த
இவளையுமோர் பெண்ணாக்க லியல்பு தானே.

உரை:—வருக்கை நறும் கனி சிதறி = பலா மரமானது வாசனையுள்ள பழங்களைச் சிதறுவதால், செந்தேன் பொங்கி = மூழ்கிய நல்ல தேன் மிகுதிப் பட்டு, படுக்கையில் குளக்கரையில் மதகில் ஓட = சிறு குட்டைகளின் கரைகளிலும் பெரிய குளத்தின் கரைகளிலும் மடைகளிலும் ஓடும் படி, பெருக்கு எடுத்து = வெள்ளமாகப் பரவுவதால், வண்டு ஓலம் செய்யும் = வண்டுகள் பேரோசை யிடுகின்ற, காழிப் பிள்ளையார் = சீகாழியில் வாழும் ஆளுடைய பிள்ளையாராகிய, சம்பந்தப் பெருமான் கேளீர் = திரு ஞான சம்பந்தப் பெருமானே கேட்பீராக! அருள் குலவும் மயிலை தனில் = சிவபெருமானது திருவருள் விளங்குகின்ற திரு மயிலாப்பூரிலே, அனலால் வெந்த அங்கத்தை = தீயினாற் சுடப்பட்ட எலும்பை, பூம்பாவை ஆக்கினேம் என்று இருக்குமது தக அன்று = பூம்பாவையாகிய கன்னி வடிவமாகச் செய்தோமென்று நினைத்திருப்பது போதாது, நிலவால் வெந்த இவளையும் ஓர் பெண் ஆக்கல் இயல்புதானே = உம்மைத் தரிசித்து உமது அழகாகிய நிலவினொளியின் வெப்பத்தால் வாடிய இப் பெண்ணையும் மகிழ்ச்சியுடைய மாதாகச் செய்தல் உமது கடமைதான், எகாரம் - அசை, எ - று.

குறிப்பு:—திரு மயிலாப்பூரில் சிவநேசச் செட்டியாருக்குப் பிறந்து ஏழு வயதில் பாம்பு கடித்து இறந்த பூம்பாவை யென்ற கன்னியைத் திருஞான சம்பந்தர் பாடி உயிரெழுப்பினர் என்ற விவரம் பெரிய புராணத்திற் காண்க. முன் பாட்டைப்போலே இதுவும் அகத்துறை யமைத்துப் பாடப்பட்டது.

சங்கத்தார்

பாடியது

சங்கத்தார் நம்மாழ்வாரைப் புகழ்ந்து பாடியது.

1. சேமங் குருகையோ செய்யதிருப் பாற்கட்லோ
நாமம்ப ராங்குசனே நாரணனே—தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கோ
உளவோ பெருமா னுனக்கு.

உரை:—பெருமான் உனக்கு சேமம் குருகையோ = பெருமானே உனக்குப் பாதுகாப்பாய் இருக்குமிடம் திருக்குருகூரோ, செய்ய திருப்பாற்

கடலோ = சிறந்த திருப்பாற்கடலோ, நாமம் பாரங்குசனே நாரணனே = உன் திருப்பெயர் பாரங்குசனென்பதோ நாராயணனென்பதோ, தாமம் துளவோ வகுளமோ = உனக்கு விருப்பமான மாலை துளசிமாலையோ மகிழம்பூ மாலையோ, தோள் இரண்டோ நான்கோ = கைகள் இரண்டோ நான்கோ, உளவோ = இருப்பன, எ - று.

குறிப்பு:—பாரங்குசன் = பிறசமயங்கட்கு அங்குசம் போன்றவன். திருமாலுக்கும் நம்மாழ்வாருக்கும் வேறுபாடின்மை இங்கே குறிக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சகாலத்தில் எங்கிருந்தீர்களென்று பாண்டியன் வினவியதற்கு விடையாகச் சங்கத்தார் பாடிய அகவல்.

2. காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
வேலையுங் குளனும் வெடிபடச் சுவறித்
தந்தைதாய் மக்கண் முகம்பா ராமல்
வெந்த சாகமும் வெவ்வே றருந்திக்
குணமுட னுளுங் கொடுத்துற வாண்ட
கணவனை மகளிர் கண்பா ராமற்
பழுத்த வுடலம் பசையற வற்றி
விழித்த விழியெலாம் வேற்றது விழியா
அறவுரை யன்றி மறவுரை பெருகி
உறவற மொழிந்த வூழிகா லத்தில்
தாயி லார்க்குத் தாயே யாகியும்
தந்தை யிலார்க்குத் தந்தையே யாகியும்
இந்த மாநிலத் திடுக்கண் டீர
வந்து தோன்றிய மாநிதிக் கிழவன்
நீலஞ் சேரி நெடுமா லானன்
ஆலஞ் சேரியி னின்ற சடையன்
மறந்தும் பிறர் கேடு நினையான்
பிறர்பொருள் வவ்வான் வாய்மையுங் குன்றான்
இறந்து போகா தெம்மையுங் காத்தான்
வருந்தல் வேண்டாம் வழுதி
இருந்தன மிருந்தன மிடர்கெடுத் தனனே.

உரை:—வழுதி வருந்தல் வேண்டாம் = பாண்டியனே! நாங்கள் பஞ்சத்தில் என்ன செய்தோமென்று கவலைப்படவேண்டாம், காலை ஞாயிறு கடும் கதிர் பரப்பி = காலைக்காலத்திலுதிக்கும் சூரியன் வெப்பமான கதிர் களை வீசுவதனால், வேலையும் குளனும் வெடிபடச் சுவறி = கடலும் குளமும் அவற்றின் அடிநிலம் தோன்றும்படியாக வற்றிப்போய், தந்தை தாய் மக்கள் முகம்

பாராமல்=பெற்றோர்கள் பிள்ளைகளை முகம்பார்த்திரங்காமல், வெந்த சாகமும் வெவ்வேறு அருந்தி = வேகவைத்த கீரையைத் தனித்தனியே புசித்திருப்ப, குணமுடன் காளும் கொடுத்து உறவு ஆண்ட=நல்ல குணத்தோடு உண்பவைகளைத் தினந்தோறும் ஆக்கித் தந்து நட்புப் பாராட்டிய, மகளிரைக் கணவன் கண் பாராமல்=நாயகிகளை ஆண்மக்கள் கவனியாமல், பழுத்த உடலம் பசை அற வற்றி=முதிர்ந்த வுடம்பு சத்தில்லாமல் உலர்ந்து போய், விழித்த விழி எலாம் வேற்றது விழியாய்=நன்கு பார்க்கும் திறமுடைய கண்களெல்லாம் ஒளி இழந்து வேறான மங்கிய பார்வையுடையனவாய், அற உரை அன்றி மற உரை பெருகி=தருமசிந்தையோடு கூடிய சொல் லொழிந்து பகைச் சொற்கள் மிகுதிப்பட்டு, உறவு அற மொழிந்த ஊழி காலத்தில்=பற்று நீங்கும்படியாக மக்கள் பேசிய இறுதிக்காலம்போன்ற பஞ்ச காலத்தில், தாய் இலார்க்குத் தாயே ஆகியும்=தாயில்லாதவர்கட்குத் தாய் போலவே உதவிபுரிந்தும், தந்தை இலார்க்குத் தந்தையே ஆகியும் = தகப்பனரில்லாதவர்கட்குத் தகப்பனரைப்போல உதவிபுரிந்தும், இந்த மாநிலத்து இடுக்கண் தீர=இந்த பெரிய நிலவுலகத்தில் வறுமைத் துன்பம் நீங்கும்படியாக, வந்து தோன்றிய மாநிதிக்கிழவன்=புண்ணியத்தாற் பிறந்த பெருஞ் செல்வத்திற்குரியவனான, நீலஞ்சோரி நெடுமால் ஆனான்=நீலஞ்சோரியிற் றங்கிய பெருமாள்போலக் காக்கும் தன்மையனானான், ஆலஞ்சோரியின் ஆன்ற சடையன்=ஆலஞ்சோரியிற் குடியிருப்பவனான சிறந்த சடையனென்பான், மறந்தும் பிறர் கேடு நினையான்=மறதியினுங்கூட மற்றவர்கட்குக் கெடுதி செய்ய எண்ணுதவன், பிறர்பொருள் வவ்வான்=மற்றவருடைய பொருளைக் கவராதவன், வாய்மையும் குன்றான்=சத்தியமும் தவறாதவன், இறந்து போகாது எம்மையும் காத்தான்=பஞ்சத்திற் சாகாதபடி எங்கட்கு உணவு முதலியவை கொடுத்துக் காப்பாற்றினான், இருந்தனம் இருந்தனம் இடர் கெடுத்தனன்=நீண்டகாலம் அவனிடத்திற் றங்கியிருந்தோம் அக்கால முழுதும் எங்கள் துன்பத்தை யொழித்தான், எ - று.

திருமழிசையாழ்வார்

பாடியது.

---

29. கணிகண்ணன் போவென்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீயிங்கி ராதே—துணிவுடனே
செந்நாப் புலவன்யான் செல்கின்றே னீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.

உரை:—கணி கண்ணன் போ என்றான்=நமது சீடனான கணி கண்ணன் காஞ்சியை விட்டு வெளிப் போவதாகக் கூறுவதை என்னையும்

வெளியே போகும்படி சொல்வதாகக் கருதுகின்றேன், காமரு பூங்கச்சி மணிவண்ணா=யாவரும் விரும்பும் அழகிய காஞ்சிப்பதியில் வீற்றிருக்கின்ற நீலமணி போன்ற நிறமுடைய பெருமானே! நீ இங்கு இராதே=நீர் இந்த விடத்திற் றங்கியிருக்க வேண்டாம், துணிவுடனே செந்நாப் புலவன் யான் செல்கின்றேன்=திண்ணமாக உம்மைப் பாடுவதால் செம்மை யடைந்த நாவினை யுடைய பாவலனாகிய நான் இவ்வூருக்கு வெளியே போகின்றேன், நீயும் உன்றன் பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்=நீரும் உமது படமுடைய பாம்பாகிய பாயைச் சுருட்டிக் கொள்வீராக! எ - று.

குறிப்பு:—திருமழிசை யாழ்வாராகிய கணி கண்ணனைக் காஞ்சிபுரத்தி லாசாண்ட பல்லவராயன் தன்னைப் பாடும்படி கேட்க, அவர் நானைப் பாடுவதில்லை யென்றமையால், அவரை ஊரை விட்டுப் போகும்படி அவன் கட்டளை யிட்டான். அதை அவர் திருமழிசை யாழ்வாருக்குத் தெரிவிக்க, அவர் தாமும் உடன் செல்வதாகக் கூறி, பெருமானையும், அவ்வாறு செய்யும் படி பாடியது. பெருமானும் அவ்வாறு செய்யவே, காஞ்சியில் ஒளி யற்றுப் போனதைக் கண்ட பல்லவராயன் அவர்களைத் திரும்பி வரும்படி வணங்கி வேண்ட, அவர்கள் பெருமானோடு திரும்பினார்கள். அப் பெருமா னுக்குச் சொன்னவண்ணஞ் செய்த பெருமாள் என்று பெயர் ஏற்பட்டது. வடமொழியில் யதோத்காரி யென்று பெயர்.

திரும்பியபோது ஆழ்வார் சொன்ன பாட்டு வருமாறு:—

கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும்—துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தே னீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்.

ஒட்டக்கூத்தர்

பாடியது

சிரச்சிங்காதனத்திலிருந்து ஒட்டக்கூத்தன் பாடியது.

கலைவாணி நீயுலகி லிருப்பதுவுங் கல்வியுணர் கவிவல் லோரைத்
தலையாகக் காப்பதுவு மவர்நாவில் வாழ்வதுவுஞ் சத்தியமே யன்றே
சிலைவாண ஞவிருந்தா யிரம்புயங்க டுணிந்துமுயர் சீவ னுற்றுன்
தலையாவி கொடுத்திடுஞ்செங் குந்தருயிர் பெற்றிடநீ தயைசெய் வாயே.

உரை:—கலைவாணி நீ உலகில் இருப்பதுவும்=கலைகட்குத் தெய்வ மாகிய அம்மையே நீ அன்பர்கட்கு அருள் செய்ய இப்பூமியில் தங்கியிருப்பதும்,

கல்வி உணர் கவி வல்லோரை = கற்கத்தக்கவற்றைக் கற்றுணர்ந்த பாவலரை, தலையாகக் காப்பதுவும் = முதன்மையாகக் காப்பாற்றுவதும், அவர் நாவில் வாழ்வதுவும் = அவர் சொல்லில் வீற்றிருப்பதுவும், சத்தியம் அன்றே = உண்மையல்லவா, சிலைவாணன் நா இருந்து = வில் வித்தையில் வல்ல வாணசுரன் நாவில் நீ இருந்தமையால், ஆயிரம் புயங்கள் துணிந்தும் = அவனுடைய ஆயிரம் தோள்களும் கண்ணனால் வெட்டப்பட்டும், உயர் சிவன் உற்றான் = மேலான உயிர் போகாது பிழைத்திருந்தான், (ஆதலால்) தலை யாவி கொடுத்திடும் செங்குந்தர் = தலையையே பாட்டுக்குப் பரிசாகக் கொடுப்பதால் உயிரையும் அளித்த செங்குந்தர் (கைக்கோளர்), உயிர் பெற்றிட நீ தயை செய்வாயே = மீளவும் உயிர் பெற்றுப் பிழைக்கும் வண்ணம் அருள்புரிய வேண்டும், எ - று.

குறிப்பு:—ஈட்டியெழுபது என்னும் நூல் தங்களைப்பற்றிப் பாடுவதற் காக ஒட்டக்கூத்தற்குத் தமது தலைகளைப் பரிசாக அளிக்க, அத் தலைகளா லாகிய சிம்மாசனத்தி லிருந்து அவர் இப்பாட்டைப் பாடின ரென்ப.

ஒட்டக்கூத்தன் கைக்கோளரைப் புகழ்ந்து பாடியது.

2. நிலைதந்தா ருலகினுக்கு மியாவருக்கு மானமதை
நிலைக்கத் தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச் சீவனஞ்செய் திடவென்றே
கையிற் றந்தார்
விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்த ரென்கவிக்கே
விலையா கத்தந்
தலைதந்தா ரெனக்குமொட்டக் கூத்தனெனப் பெயரினையுந்
தாந்தந் தாரே.

உரை:—செங்குந்தர் = (கைக்கோளர்கள்), உலகினுக்குள் நிலைதந்தார் யாவருக்கும் = உலகினுள் நாகரிகமாக வாழும் மக்களெல்லோருக்கும், மான மது நிலைக்கத் தந்தார் = (ஆடை) அளிப்பதால் மானத்தைக் காத்தார்கள், கலைதந்தார் வணிகருக்கு = வியாபாரிகட்கு விற்கும்பொருட்டு ஆடை கொடுத் தார்கள், சீவனம் செய்திட என்றே கையில் தந்தார் = அவர் அதனால் பொருள் தேடிப் பிழைக்கும்பொருட்டு துணிச் சரக்குகளை அவர் கையில் ஒப்புவித்தார்கள், தமிழினுக்கு விலை தந்தார் = தமிழ்ப் புலவர்கட்கு அவர் பாடிய பாட்டுக்களுக்கு மதிக்கத் தக்க பொருளைக் கொடுத்தார்கள், என் கவிக்கே விலையாகத் தம் தலை தந்தார் = என் பாட்டினுக்கு மதிப்பான பரிசாகத் தங்கள் தலையைக் கொடுத்தார்கள், எனக்கும் ஒட்டக்கூத்தன் எனப் பெயரினையும் தந்தார் = (யான் தலைகள் ஒட்டும்படி பாடியதனால்) எனக்கு ஒட்டக்கூத்தன் என்னும் பெயரினை அவர்கள் எனக்கு அளித் தார்கள். (கூத்தன் என்னும் பெயரே அவருக்கு முதலி லிருந்தது.), எ - று.

சோழராஜன் ஒரு வித்துவானுக்கு விருது கொடுத்தபோது ஒட்டக்கூத்தன் பாடியது.

3. பத்துக் கொண்டன திக்கும் பதறிப்போ யுலையப்
பைம்பொற் ருரகை சிந்தப் பகிரண்டத் திடைநீள்
மத்துக் கொண்டு மதிக்குந் திரையாழி நெடுமால்
வடிவாகிப் புவி கைக்கொண் டருண்மாலு பரணு
முத்துப் பந்தரி னிற்குங் குருஞக்குஞ் சினவேன்
முருகற் கும்பொதி யைக்கோ முனிவற்குஞ் சலடிக்
கொத்தற் கும்பது மக்கொந் தயனுக்கு லமதிக்
கூழைத் தண்டமி ழுக்கேன் கொடியுங்கா ளமுமே.

உரை:—பத்துக்கொண்டன திக்கும்=பத்து என்னும் எண்ணைக் கொண்ட திசைகள் அனைத்தும், பதறிப்போய் உலைய=அஞ்சி நடுங்கவும், பைம்பொன் தாரகை சிந்த=புதிய அழகிய நட்சத்திரங்கள் வீழும்படி யாகவும், பகிரண்டத்து இடை நீள் மத்துக்கொண்டு=வெளியே புலனுக இருக்கின்ற பெரிய அண்டத்தின் உச்சிவரை நீண்ட (மந்திரமலை யென்னும்) மத்தை நாட்டி, மதிக்கும் திரையாழி=கடையப்படுகின்ற அலையையுடைய பாற்கடலிற் பள்ளிகொள்ளும், நெடுமால் வடிவு ஆகி=பெரிய திருமாலின் அவதாரமாகி, புவி கைக்கொண்டு அருள்=பூவுலக முழுவதையும் தன் கைக்கீழ் அடக்கி யாளுகின்ற, மாணபரணு=மானத்தை அணியாகக்கொண்ட மன்னனே! முத்துப் பந்தரில் நிற்கும் குருஞக்கும்=முத்துப்பந்தரின் கீழே யுலாவும் குழந்தையாகிய திருஞான சம்பந்தப் பெருமானுக்கும், சின வேல் முருகற்கும்=போரில் கோபங்கொள்ளும் வேலாயுதத்தையுடைய முருகப் பிரானுக்கும், பொதியைக் கோ முனிவற்கும்=பொதியமலையில் தங்கும் முனிவர் தலைவராகிய அகத்தியற்கும், சடிலக் கொத்தற்கும்=சடைத் தொகுதியையுடைய சிவபெருமானுக்கும், பதும கொந்து அயனுக்கும்=தாமரைப் பூங்கொத்தி லிருக்கும் பிரமனுக்கும், அலது=அவர்கள் பாடிய பாடலுக்காக உரியனவேயன்றி, இக்கூழைத் தண் தமிழுக்கு=குளிர்ந்த தமிழைப் பாடும் இச்சிறு புலவனுக்கும், கொடியும் எக்காளமும் என்=கொடியும் எக்காளமும் என் விருதாவாய்க் கொடுக்க வேண்டும், எ - று.

ஒட்டக்கூத்தர் கம்பரைப்பற்றிப் பாடிய சரமகவி.

4. இன்றல்லோ கம்ப னிறந்தநா ளென்கவிதை
இன்றல்லோ ராசசபைக் கேற்காநாள்—இன்றல்லோ
பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருக்க
நாமடந்தை நூல்வாங்கு நாள்.

உரை:—இன்று அல்லவோ கம்பன் இறந்த நாள்=இந்த நாளிலல்லவா கம்பர் இவ்வுலகம் நீத்த நாளாகும், இன்று அல்லோ என் கவிதை இராச சபைக்கு ஏற்கா நாள்=இந்த நாளிலல்லவா என்னுடைய பாட்டும் அரசாது அவைக்களத்து ஏற்றுக் கொள்ளப்படும், பூ மடந்தை வாழ புவி மடந்தை வீற்றிருக்க = திருமடந்தை வாழவும் புவிமடந்தை சிறப்பாக விளங்கவும், இன்று அல்லோ நாமடந்தை நூல் வாங்கு நாள்=கலைமடந்தை மங்கல நாண் இழக்கும் நாளாக இந்நாளமைந்ததே, எ- று.

கம்பரை ஒட்டக்கூத்தர் புகழ்ந்தது.

5. இன்றல்லோ கம்ப னெழுந்தநா ளென்கவிதை
இன்றல்லோ ராசசபைக் கேருநாள்—இன்றல்லோ
பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருக்க
நாமடந்தை நூல்பூட்டு நாள்.

உரை:—இன்று அல்லோ கம்பன் எழுந்த நாள்=இந்த நாளி லல்லவா கம்பர் கீர்த்தியோடு வெளிப்பட்ட நாளாகும், இன்று அல்லோ என் கவிதை இராச சபைக்கு ஏறு நாள்—இந்த நாளிலல்லவா என்னுடைய பாட்டு அரசாது அவைக்களத்து ஏற்றுக்கொள்ளாத நாளாயிற்று, பூமடந்தை வாழ புவி மடந்தை வீற்றிருக்க=தாமரைப் பூவில் வீற்றிருக்கும் திருமகள் வாழவும் பூமிதேவி மகிழ்ச்சியோடிருக்கவும், நாமடந்தை=கலைமகள், நூல் பூட்டும் நாள்=மங்கல நாண் அணியும் நாள், இன்று அல்லோ=இந்த நாளல்லவா, எ - று.

கட்டளைக் கலித்துறை.

6. மாங்குயி லால்வில்லி தன்னம்பி னுற்கம்ப வாரியால்
ஓங்கிய பூமெல் லணையொன்றி னுலும்ப சூர்மதியால்
தீங்குறு மேநல் லெழில்குன்று மேகொம்பு சீர்கெடுமே
காங்கைய னேசொல்ல களங்கனே கம்பைக் காவலனே.

உரை:—அகளங்கனே கம்பைக் காவலனே=கம்பை நாட்டுக்கு மன்ன னுகிய அகளங்கனே! காங்கையனே=கங்கை மைந்தனுகிய வேளாளனே! மாங்குயிலால்=மாமரத்தினின்று கூவுங் குயிலோசை கேட்டும், வில்லை தன் அம்பினுல்=கரும்பு வில்லையுடைய மன்மதன் செலுத்திய அம்புகாரண மாகவும், கம்பவாரியால்=அலைகடலொலி கேட்டும், ஓங்கிய பூ மெல்லணை ஒன்றினுலும்=உயர்ந்த பூக்கள் பொருந்திய மென்மையான படுக்கையைச் சேர்வதாலும், உம்பர் ஊர் மதியால்=வானில் தவழுகின்ற சந்திரனது ஒளியினுலும், கொம்பு=என் மகளானவள், தீங்கு உறுமே=துன்பமடை கின்றுள், நல் எழில் குன்றுமே=அவளுடைய சிறந்த வனப்பு குறைகின் றதே, சீர் கெடுமே=அவளுடைய மதிப்பு மாறுகின்றதே, சொல்=அவ ளுய்யும் வழியை நீ கூறுவாயாக! எ - று.

கண்டசுத்தி.

7. கரண்ட கண்டத் தொனிக் கஞ்சிய மான்கருங் கங்குலிலே
திரண்ட வெள்ளத்திற் பிணமீது சென்றனள் சேர்ந்தவனே
அரண்ட வின்பங் கொடுமீளக் கராம்பற் றவங்கொலுசால்
குரண்ட கன்னத்தி லுதைத்தனள் காணங் குலோத்துங்கனே.

உரை:—அம் குலோத்துங்கனே = அழகிய குலோத்துங்க மன்னனே! கரண்ட கண்டத்தொனிக்கு அஞ்சியமான் = நீர் காக்கையின் குரலினால் (விடியற்காலம் வந்துவிட்டதே என்று) அச்சமுற்ற மாதானவள், கருங்கங்கு லிலே = இருள் நிறைந்த இரவிலே, திரண்ட வெள்ளத்தில் = மிகுந்த ஆற்று வெள்ளத்தில், பிணமீது சென்றனள் = பிணத்தைத் தோணியாகக்கொண்டு கடந்து, அவனைச் சேர்ந்து = கள்ளக் கணவனைச் சேர்ந்து, அரண்ட இன்பம் கொடு = அச்சத்தோடு கூடிய இன்பத்தைப் பெற்றுக்கொண்டு, மீள = திரும்பி வரும்போது, கராம்பற்ற = முதலை காலைக் கவ்வ, அம் கொலுசால் = அழகிய காற்சதங்கையினால், குரண்ட கன்னத்தில் உதைத்தாள் = சுருங்கிய கன்னத்தில் தாக்கியுதைத்தாள், காண் = அசை, எ - று.

ஒட்டக்கூத்தன் சோழனுக்குப் பெண் கேட்டபோது பாண்டியன் சோழனுக்கு என்ன பெருமை யென்றுசொல்லப் பாடியது.

8. கோரத்துக் கொப்போ கனவட்ட மம்மானே
கூறுவதுங் காவிரிக்கு வையையோ வம்மானே
ஆருக்கு வேம்புநிக ராகுமோ வம்மானே
ஆதித்த னுக்குநிக ரம்புலியோ வம்மானே
வீரர்க்குள் வீரனெரு மீனவனே வம்மானே
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ வம்மானே
ஊருக் குறந்தைநிகர் கொற்கையோ வம்மானே
ஒக்குமோ சோணாட்டுக்குப் பாண்டிநா டம்மானே.

உரை:—கோரத்துக்கு ஒப்போ கனவட்டம் = சோழன் குதிரையாகிய கோரத்துக்குப் பாண்டியன் குதிரையாகிய கனவட்டத்தைச் சமமாகச்சொல்ல முடியுமா? கூறுவதும் காவிரிக்கு வையையோ = (நீர்நிறைந்த) காவிரிக்கு (நீரற்ற) வைகையை ஒப்பாகச் சொல்ல முடியுமா? வேம்பு ஆருக்கு நிக ராகுமோ = பாண்டியனுடைய (கசப்புள்ள) வேப்பமாலை சோழனது (குளிர்ந்த) ஆத்திமாலைக்குச் சமமாகுமா? ஆதித்தனுக்கு நிகர் அம்புலியோ = சோழகுலத் தலைவனுகிய கதிரவனுக்குப் பாண்டிய குலத்தலைவனுகிய சந்திரன் சமமாவனு? வீரருக்குள் வீரன் ஒரு மீனவனே = வீரருக்குத் தலைவனு யிருப்பவன் சோழனன்றிப் பாண்டியனல்லனே! வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ = ஜெயம்பெறும் புலிக்கொடிக்குச் சமமாக மீன்கொடி

யாகுமா ? ஊருக்கு உறந்தை நிகர் கொற்கையோ = அரசர் பதிகளில் உறையூருக்குக் கொற்கை சமமாகுமா? ஒக்குமோ சோணாட்டுக்குப் பாண்டியநாடு = சோழமண்டலத்திற்குப் பாண்டியமண்டலம் சமமாகுமா ? எ - று.

குறிப்பு:—அம்மானை யென்பது பெண்கள் விளையாட்டு வகைகளில் ஒன்று.

அதற்கு மாறுகப் புகழேந்தி பாடியது.

9. திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ வம்மானை
சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ வம்மானை
ஒருமுனிவ னேரியிலோ வுரைதெளிந்த தம்மானை
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ வம்மானை
கரையெதிரே டேறியது காவிரியோ வம்மானை
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ வம்மானை
பரவை படிந்ததுஞ் சோழன்பதந்தனிலோ வம்மானை
பாண்டியனுர் பராக்கிரமம் பகரெளிதோ வம்மானை.

உரை:—திருநெடுமால் அவதாரம் சிறு புலியோ = திருமகளோடு கூடிய பெரியபெருமாள் எடுத்த அவதாரம் (மச்சாவதாரமா) அற்பமான புலியவதாரமா ? சிவன் முடியில் ஏறுவதும் செங்கதிரோ = சிவபெருமானுடைய திருமுடியிற் சூட்டப்பட்டது (சந்திரஞ) சிவந்த கதிரையுடைய சூரியனு ? ஒருமுனிவன் உரைதெளிந்தது நேரியிலோ = ஒப்பற்ற அகத்திய முனிவர் தமிழ் மொழியிற் றெளிவு பெற்றது (பொதியை மலையிலா) அல்லது சோழனுடைய நேரிமலையிலா ? ஒப்பரிய திருவிளையாட்டு உறந்தையிலோ = சொல்லுதற் கருமையான திருவிளையாடல்களைச் சிவபெருமான் நிகழ்த்தியது (மதுரையிலா) அல்லது உறையூரிலா ? கரை எதிர் ஏடு ஏறியது காவிரியோ = திருஞான சம்பந்தர் விடுத்த ஏடு ஆற்றிற்கு எதிரே சென்று கரையேறியது (வைகையிலா) அல்லது காவிரியிலா ? கடிப்பகைக்குத் தாதகி அம் கண்ணியோ = பேய் முதலியவற்றின் எதிர்ப்பை நீக்கிக் காவல் செய்வதற்குப் பயன்படுவது (வேம்போ) அல்லது அழகிய ஆத்திமாலையோ, பரவை படிந்ததும் சோழன் பதந்தனிலோ = கடல் வந்து அடியில் பணிந்தது (உக்கிரகுமாரன் திருவடியிலா) அல்லது சோழனது அடியிலா ? பாண்டியனுர் பராக்கிரமம் பகர் எளிதோ = பாண்டிய மன்னர்களுடைய வீரச்செயல்கள் விளம்புதல் இலேசாகுமா ? எ - று.

அரசன் பவனிவரும்போது ஒட்டக்கூத்தன் அரசனைப் புகழ்ந்து இரண்டடி பாடச் சோழனிரண்டடி பாடியது.

10. ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெங்கும்
நீடுங் குடையைத் தரித்தபி ரானிந்த நீணிலத்தில்
பாடும் புலவர் புகழொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயென்னைச் சொல்லுவரே.

உரை:—ஆடும் கடைமணி = இயற்கையாக அசையும் வாயிற் கதவி லுள்ள மணிகள், நா அசையால் = நாவானது இயங்காதபடி, அகிலம் எங்கும் ஈடும் குடையே = உலகமெங்கும் பாவிய கொற்றக்குடையை, தரித்த பிரான் = தனக்குமேற் பிடிக்கப் பெற்ற வள்ளல், இந்த ஈண் நிலத்தில் = இந்த விரிந்த புவியில், பாடும் புலவர் புகழ் ஒட்டக்கூத்தன் = பாவலரெல் லாரும் துதிக்கின்ற ஒட்டக்கூத்தருடைய, பதாம்புயத்தை = திருப்பாத கமலங்களை, சூடும் குலோத்துங்க சோழன் என்றே = தலையிற் சூடிய குலோத்துங்க சோழமன்னனுவானென்றே, என்னைச் சொல்லுவரே = என்னைப்பற்றி யுலகோர் சொல்வார்கள், எ-று.

ஒட்டக்கூத்தன் சோழனேறிய யானைச் சங்கிலி யவிழ்க்கப்பட்டதைக் குறித்துப் பாடியது.

11. இன்னங் கலிங்கத்தில் வேந்தருண் டென்றே
தென்னன் றமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி
அகளங்கா வுன்ற னயிரா வதத்தின்
நிகளங்கால் விட்ட நினைவு.

உரை:—சென்னி அகளங்கா = சோழ மன்னனுகிய அகளங்கனே! உந்தன் அயிராவதத்தின் = உன்னுடைய பட்டத்து யானையின், நிகளம் = தளை யானது, கால்விட்ட நினைவு = அதன் காலினின் றெடுக்கப்பட்டதற்குக் கருத்து, இன்னம் கலிங்கத்து இகல் வேந்தர் உண்டு என்றே = இனி மேலும் கலிங்க நாட்டில் எதிர்க்கும் மன்னர்கள் இருக்கின்றார்கள் என்பது பற்றியோ, தென்னன் தமிழ்நாட்டைச் சீறியோ = பாண்டியனது செந்தமிழ் நிலத்தின்மீது படையெடுக்குஞ் சினங் காரணமாகவோ? (பணிக்க) எ-று.

குறிப்பு:—ஐராவத மென்பது இந்திரனது வெள்ளையானை; உபசாரமாக சோழன் யானைக்கு அப்பெயர் கொடுக்கப்பட்டது.

புகழேந்தி பாண்டியனேறிய யானைச்சங்கிலி யவிழ்க்கின் வரும்பயன் பாடியது.

12. தென்னவன் றென்னர் பெருமான் றிறன்மதுரை
மன்னவன் கோக்களிற்றின் வல்லிக்கும்—பொன்னிநா
டாலிக்கும் வேந்தா மபயகுலன் மகளிர்
தாலிக்கு மொன்றே தகை.

உரை:—தென்னவன் தென்னர் பெருமான் = பாண்டியனுகவும் தமிழ் நாட்டினர்க்குத் தலைவனுகவுமுள்ள, திறல் மதுரை மன்னவன் = திறமை யுடைய மதுரையில் வீற்றிருக்கும் அரசனின், கோ களிற்றின் வல்லிக்கும் = பட்டத்து யானையின் விலங்கிற்கும், பொன்னி நாடு ஆலிக்கும் = காவிரி பாயும் நாட்டில் மகிழ்ந்து வீற்றிருக்கும், வேந்தாம் = அரசனுகிய, அபய குலம் மகளிர் = சோழனுடைய கற்புடையப் பெண்டிரின், தாலிக்கும் = திரு

மங்கிலியத்திற்கும், தலை ஒன்றே=முடிப்பு ஒரு தன்மையதே ஆகும் எ - று.

குறிப்பு:—பட்டத்து யானையின் கட்டு அவிழ்க்கப்பட்டால், அது சோழநாட்டினரைப் போய்த் தாக்குமாதலின், சோழனது குல மகளினது தாலி அவிழு மென்றார்.

அரசன் யாரென வினவ ஒட்டக்கூத்தன் புகழேந்தியைப் பித்தனென்றதற்குப் புகழேந்தி பாடியது.

13. சத்தம் பயிலும் புலவோர் கதலித்தண் டோட்டம்புகும்
பித்த னிவனென்ப ரென்னைக் கண்டாற் பெருத்துப்பணைத்துத்
தத்தம் பிறகிடும்பார் வேந்தர் தங்க டடமகுட
சத்தம பசத்தங்காண் கங்குல் யானைச் சயதுங்கனே.

உரை:—கங்குல் யானைச் சய துங்கனே=இரவி னிருள்போலக் கருகிற முடைய யானைகட்கு அதிபனுகிய வெற்றியிற் சிறந்த சோழனே! பெருத்துப் பணைத்து=மிகப் பெரியவர்களா யிருந்தும், தத்தம் பிறகிடும் பார் வேந்தர் தங்கள்=(உன்னைக் கண்டு) ஒருவருக்குப் பின் ஒருவராகப் பின் வாங்குகின்ற இவ்வுலக மன்னருடைய, தட மகுட சத்தம்=பெரிய கிரீடங்கள் ஒன்றோடொன்று தாக்கி யுண்டாகும் ஒலி, அப சத்தம் காண்=இழிவான ஓசையாகும், சத்தம் பயிலும் புலவோர்=நல்ல வொலியி னிலக்கணத்தை யாய்ந்தறிந்த கல்விமான்கள், என்னைக் கண்டால்=என்னைப் பார்த்தால், கதலித்தண் டோட்டம் புகும் பித்தன் இவன் என்பர்=குளிர்ந்த வாழை மாங்கள் செறிந்த காவினுள்ளே போகின்ற பைத்தியக் காரன் இவனென்று சொல்வர், எ - று.

குறிப்பு:—பித்தத்தினு லுண்டாகிய வெப்பம் தணியும்படியாக வாழை நிழலிலிருத்தல் வைத்திய நூலிற் கூறப்படும்.

அரசனல்ல புலவன் என ஒட்டக்கூத்தன் அல்லவென்று பாடியது.

14. மானிற்கு மோவிந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானிற்கு மோவிவ் வெரியுந் தணன்முன் கனைகடலின்
மீனிற்கு மோவிந்த வெங்கண் சுரமுனம் வீசுபனி
தானிற்கு மோவிக் கதிரவன் றேற்றத்திற் ருர்மன்னனே.

உரை:—தார் மன்னனே=ஆத்திமாலை யணிந்த அரசனே! இந்த வாள் அரி வேங்கைமுன் மான் நிற்குமோ=ஒளியுள்ள வரிகள் விளங்கும் பெரும் புலியாகிய என் முன்னே மான்போன்ற அப்புலவன் நிற்க முடியுமா? இவ் வெரியும் தணல்முன் வற்றிச் செத்த கான் நிற்குமோ=இந்த கொழுந்துவிட் டெரிகின்ற தீயின் முன்னே ஈரமற்றுக் காய்ந்து போன காடு நிலைபெறுமா? இந்த வெங்கண் சுரமுனம் கனைகடலின் மீன்

நிற்குமோ = இந்தக் கொடிய சுறுமீனின் முன்னே ஓசை மிகுகின்ற சமுத்திரத்திலுள்ள அற்பமான பிற மீன்கள் தலை காட்ட முடியுமா ? இக் கதிரவன் தோற்றத்தில் வீசு பனிதான் நிற்குமோ = இந்தச் சூரியன் பார்வைக்கு முன்னே அலைகின்ற பனித்துளி நிலை பெறுமா ? (என் முன் புகழேந்தி நிற்கமாட்டா னென்பது கருத்து,) எ - று.

அரசன் சொற்படி புகழேந்தி யொட்டியும், வெட்டியும் பாடியது.

15. மானவ னனந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானவ னனவ் வெரியுந் தணன்முன் கனைகடலின்
மீனவ னனந்த வெங்கண் சுருமுனம் வீசுபனி
தானவ னனக்க திரவன் ரேற்ற நற்ரர்மன்னனே.

உரை:—நல் தார் மன்னனே = நல்ல மலர் மாலை சூடிய வேந்தனே ! அவர் மான் நான் அந்த வாள் அரி வேங்கை = அப் புலவன் மான் போல்வான் நான் அந்த மான்களைத் தாக்குகின்ற ஒளி மிக்க வரிப்புலியாவேன், அவன் முன் வற்றிச் செத்த கான் = அவன் எனக்கு முன் ஈரமற்றுக் காய்ந்துபோன காடுபோல்பவன், நான் அவ் எரியும் தணல் = நான் அந்தக் காட்டினைக் கொளுத்துகின்ற தழலாவன், அவன் கனைகடலின் மீன் = அவன் ஓசையிடுகின்ற சமுத்திரத்திலுள்ள சிறு மீன் போல்வான், நான் முனம் அந்த வெங்கண் சுரு = அந்த மீனுக்கு முன் சென்று அதனை விழுங்கும் பொல்லாத சுறுமீனுவேன், அவன் முனம் வீசு பனிதான் = அவன் விடியற்காலத்திற் பெய்கின்ற பனி போல்வான், நான் அக் கதிரவன் தோற்றம் = நான் அப்பனியை யோட்டும் பகலவனது உதயம் போல்வேன், எ - று.

இராசபத்தினி கதவை மூடிக்கொள்ளக் கதவு திறக்கும்படி ஒட்டக்கூத்தன் பாடியது.

16. நானே யினியுனை வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே கபாடந் திறந்திடுவாய் திறவா விடிலோ
வானே றனைய விரவிகு லாதிபன் வாயில்வந்தால்
தானே திறக்குநின் கையித ழாகிய தாமரையே.

உரை:—நளின மலர் தேனே = கமலத்தில் வீற்றிருக்கும் திருமகள் போன்ற இனிய சொல்லுடைய பெண்ணே ! கபாடம் திறந்திடுவாய் = உன் வீட்டு வாயிற் கதவைத் திறப்பாயாக ! திறவா விடிலோ = திறவாமற் போனாலும், இனி நானே உனை வேண்டுவதில்லை = இனிமேல் நானுன்னைக் கேட்டுக்கொள்ளுத லவசியமில்லை, வான் ஏறு அனைய இரவிகுலாதிபன் = மேகத்திலுள்ள பகைவர்கட்கு இடிபோன்ற சூரிய வமிசத்து மன்னன், வாயில் வந்தால் = உன் வாசலுக்கு வந்தால், நின் கை இதழாகிய தாமரையே = தாமரை இதழ் போன்ற (விரல்களை யுடைய) உன் கையானது,

தானே திறக்கும்=ஒருவரும் சொல்லாமலே கதவினைத் திறந்துவிடும், எ - று.

இராஜபத்தினி ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்று போடப் புகழேந்தி கதவு திறக்கும்படி பாடியது.

17. இழையொன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை யேந்துவள்ளைக்
குழையொன் றிரண்டு விழியணங்கே கொண்ட கோபந்தணி
மழையொன் றிரண்டு கைமான பரணனின் வாயில்வந்தால்
பிழையொன் றிரண்டு பொருரோ குடியிற் பிறந்தவரே.

உரை:—இழை ஒன்று இரண்டு வகிர் செய்த நுண்ணிடை=நூலிழை ஒன்றை இரண்டு கூறு செய்தால் அதன் ஒரு கூறுபோல மிகச் சிறிய அளவினை யுடைய இடையை யுடையவளே! ஏந்து வள்ளைக் குழை ஒன்று இரண்டு விழி அணங்கே=காது தாங்குகின்ற கொடி துழைந்தாற் போன்ற தோட்டினைச் சென்று பொருந்துகின்ற இரண்டு கண்களை யுடைய மாதே! கொண்ட கோபம் தணி=நீ கொண்ட சினத்தை ஆற்றிக் கொள்வாயாக! மழை ஒன்று இரண்டு கை மான ஆபரணன்=மேகத்தின் இயல்பு பொருந்திய இரு கைகளினாலும் கொடுக்கின்ற மானத்தை அணியாகப் பூண்ட மன்னன், நின் வாயில் வந்தால்=உன் வாசலுக்கு வரின், குடியில் பிறந்தவர் பிழை ஒன்று இரண்டு பொருரோ = உயர்ந்த குடும்பத்திற் பிறந்த உன்னைப் போன்றவர்கள் ஒரு குற்றம் அல்லது இரண்டு குற்றத்தை மன்னிக்க மாட்டார்களா? எ - று.

ஒட்டக்கூத்தனை மூன்றுபிறைவர ளைவைபாடச் சொன்னது.

18. வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக்கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்து மழைத்துளி யோடிறங்குஞ் சோணாடா
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டெம்பேதை பெரிய மதி யுமிழந்தாளே.

உரை:—வெள்ளத்து அடங்காச் சின வாளை=ஆற்று வெள்ளத்திலடங்காது கோபித்துக் குதிக்கின்ற வாளை மீன்கள், வேலிக் கமுகின் மீது ஏறி=வேலி கட்டப்பட்ட கரையிலுள்ள பாக்கு மரத்தில் தாவி, துள்ளி=அங்கிருந்து மேலே குதித்து, முகிலைக் கிழித்து=மேகத்தைப் பிளந்து உட்புகுந்து, மழைத்துளியோடு இறங்கும்=மழை நீருடன் கீழே வருகின்ற சோணாடா=சோழநாட்டு வேந்தனே! கள்ளக் குறும்பர் குலம் அறுத்த=(உனக்குக் கீழ்ப்படியாத) வஞ்சகம் பயின்ற சிற்றரசர்களது கூட்டத்தைத் தொலைத்த, கண்டா=கையாளினை யுடையவனே! அண்டர் கோபாலா=இடையர்களது பசுக்களைக் காப்பாற்றின திருமால் வடிவானவனே! எம் பேதை=பேதைப் பருவத்திலுள்ள எனது மகள், பிள்ளை மதிகண்டு=பிறைச் சந்திரனைப் பார்த்து, பெரிய மதியும் இழந்தாளே=தனது உயர்ந்த அறிவு நீங்கப் பெற்றாள், எ - று.

குறிப்பு:—விஷ்ணு மன்னர்களுக்கு அதிதேவதை யாதலின் கோபாலா என்றார். ஏழு வயது வரையு முள்ள பருவம் பேதைப்பருவ மெனப்படும்.

ஔவையார்

ஒட்டா வொருமதி கெட்டா யென்று சொல்லிப்
புகழேந்தியை மூன்று பிறைவரப் பாடச்சொல்லப் பாடியது.

19. பங்கப் பழனத் துழுமுழவர் பலவின் கனியைப்
பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண் டெறியுந்
தமிழ்நாடா
கொங்கைக் கமரா பதியளித்த கோவே ராஜ
குலதிலகா
வெங்கட் பிறைக்குங் கருப்பிறைக்கும் மெலிந்தப் பிறைக்கும்
விழிவேலே.

உரை:—குரங்கு பலவின் கனியைப் பறித்ததென்று=குரங்கு பலாப் பழத்தைப் பறித்ததற்காக, பங்கப்பழனத்து உழும் உழவர்=சேறு நிறைந்த வயலில் உழவு செய்கின்றவர்கள், சங்கிட்டு எறிய=அவ் வயலி லுள்ள சங்குகளே எடுத்து அதன்மீது வீசவும், இளநீர்தனைக்கொண்டு எறியும் தமிழ் நாடா=அதற்குப் பதிலாகக் குரங்கானது இளநீர்க் காய்களே எடுத்து வீசும் வளமுடைய தமிழ் நாட்டிற்குத் தலைவனே! கொங்கு ஐக்கு அமராபதி அளித்த கோவே=கொங்கு தேசத்து அரசனே வென்று அவனுக்கு விண் ணுலகம் கொடுத்த மன்னனே! ராஜ குல திலகா=அரசர் கூட்டத்திற்குத் தலைவனே! வெம் கண் பிறைக்கும்=வெப்பமுள்ள பிறைத் திங்களின் நில வொளியாலும், கரும்பு இறைக்கும்=கரும்பு வில்லினையுடைய மன்மதன் காரணமாகவும், மெலிந்து=உடல் தளர்ந்து, விழி வேலே=வேல்போன்ற கண்ணுடைய பெண், அம்பு இறைக்கும்=கண்ணீர் சிந்துகின்றாள், எ - று.

குறிப்பு:—அமராபதி யென்பதற்கு வானகம் என்று பொருள் கொண்டு, வானகம் என்பதை வால்+நகம் என்று பிரித்து வெள்ளையான நகத்தின் குறியைப் பெண்களின் கொங்கைக் களித்தாரென்றுங் கூறுவது முண்டு. அம்பு இறைக்கும் என்பதில் அம்பு என்பது அப்பு என்பதன் மெலிவு. அப்பு=நீர்.

ஒட்டக்கூத்தன்

20. புள்விருக்குந் தார்மார்பன் பூம்புகார் வாழ்களியேம்
சுள்விருக்குங் கள்ளையுண்டு சோர்விலேம்—உள்ளபடி
சொல்லவா வாலிது ரோபதையை மூக்கரிந்த
தல்லவா மாபா ரதம்.

உரை:—புள்ளிருக்கும் தார் மார்பன் = வண்டுகள் தங்கும் மாலையை அணிந்த மார்பினையுடைய சோழனது, பூம் புகார் = சிறந்த காவிரிப்பூம் பட்டினத்தில், வாழ் களி யேம் = குடியிருக்கின்ற மகிழ்ச்சியை யுடையவர்கள் நாங்கள், சுள்ளிருக்கும் கள்ளே உண்டு சோர்விலோம் = (மகிழ்ச்சியாகிய கள்ளே யுண்பதே அன்றி) மயக்கந் தருகின்ற கள்ளைக் குடித்து நாங்கள் மறதியை அடைவதில்லை, உள்ளபடி சொல்லவா = உண்மையான விஷயத்தைக் கூறலாமா? (அதாவது) மா பாரதம் = மகா பாரதக் கதை யாதென்றால், வாலி தாரோபதையை மூக்கு அரிந்தது அல்லவா = வாலுடைய பாம்பெழுதிய கொடியினையுடைய துரியோதனன் தாரோபதையை அவமானஞ் செய்யக் கருதிய வரலாறல்லவா? எ - று.

குறிப்பு:—வாலி என்பது சொல்லளவில் இராமாயணத்திற் கூறப்படும் குரங்கின் தலைவனைக் குறித்தாலும், இந்த விடத்திற் துரியோதனனைக் குறிப்பதாகும். மூக்கரிதல் என்பது பொதுவான மானக்கேட்டை யுணர்த்திற்று. சுள் என்பது கடுப்பையு முணர்த்தும். முதிர்ந்த கள்ளுக்குக் கடுப்புண்டு.

தலைவிதி திங்களை நோக்கி இரங்கிக் கூறியது.

21. என்று பெறுவேன் யானீசன் திருமுடிமேல்
சென்று விளையாடு கின்றதீபமே—என்றும்
செருப்புக்குத் தோல்வாங்குஞ் சென்னி யகளங்கன்
பொருப்புக்குத் தோலாப் புயம்.

உரை:—ஈசன் திருமுடிமேல் சென்று விளையாடுகின்ற தீபமே = சிவபெருமானுடைய தலையின்மீது சூட்டப்பெற்று விளங்குகின்ற விளக்குபோன்ற பிறைச் சந்திரனே! என்றும் செரு புக்கு = எக்காலத்திலும் யுத்தகளத்திற் போய், தோல் வாங்கும் = எதிரிகளின் யானைகளைத் தன் வசப்படுத்துகின்ற, சென்னி அகளங்கன் = சோழனுடைய அகளங்கனது, பொருப்புக்குத் தோலா புயம் = வலிமையில் மலைக்குப் பின்னிடையாத தோள்களை, யான் என்று பெறுவேன் = நான் எப்போது அணையப்பெறுவேன், எ - று.

குறிப்பு:—'செருப்புக்குத் தோல் வாங்கும்' என்பதற்கு செருப்பு தைப்பதற்காகத் தோல் வாங்கும் என்ற சாதாரண பொருளிருந்தாலும், இங்கே கூறிய பொருளே பொருத்தமானது. அது ஒரு சொல்லழகு.

கொலுவிலிருக்கும்போது ஒட்டக்கூத்தன் கேட்டதற்கு வேளாளன் முதலிய புலவர்கள் பாடியது.

22. கோக்கண் டுமன்னர் குரைகடற் புக்கிலர் கோகநகம்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூமுழுதும்
காக்கின்ற மன்ன கவியொட்டக் கூத்தனின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர் களோதமிழ் பாடிய பாவலரே.

உரை:—பூ முழுதும் காக்கின்ற மன்னன்=உலக முழுவதையும் ஒரு குடைக்கீழ் வைத்துக் காப்பாற்றுகின்ற சோழ வேந்தரது, கவி ஒட்டக் கூத்த=அரண்மனைப் பாவலராகிய ஒட்டக்கூத்தரே! கோகண்டு மன்னர் குரை கடல் புக்கிலர்=பெரிய சக்கரவர்த்தியைப் பார்த்து சிறிய வேந்தர்கள் முழங்குகின்ற கடலிலே விழுந்து ஒளிக்கவில்லை, கோகநகப் பூக்கண்டு கொட்டியும் பூவாது ஒழிந்தில=தாமரைப் பூவினைக்கண்டு கிழங்குப் பூண்டு பூக்கள் பூவாதிருக்கவில்லை, நின் கட்டுரையாம் பாக்கண்டு=உனது வன்மை யான சொல்லமைந்த பாட்டுகளைப் பார்த்து, தமிழ் பாடிய பாவலர் ஒளிப் பார்களோ=தமிழ்ப் பாட்டுப் பாடும் பிற கவிஞர்கள் மறைந்து ஓடமாட் டார்கள், எ - று.

கருமான் பாடியது.

23. செல்லன் புதல்வன் றிருவேங் கடவன் செகத்குருவாம்
கொல்லன் கவியைக் குறைசொல்லு வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர்முன்னே
அல்லும் பகலு மடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே.

உரை:—செல்லன் புதல்வன் திருவேங்கடவன்=செல்லப்பனுடைய மகனுகிய திருவேங்கடவாசாரியாகிய நான், சகத்குருவாம் கொல்லன்= கொல் தொழிலில் உலகத்திற்கு ஆச்சாரியனுயிருக்கிற என்னுடைய, கவியைக் குறை சொல்லுவோரை=பாட்டுக்குக் குற்றம் கூறுகின்றவர்களை, குறடு கொண்டு பல்லைப் பிடுங்கி=இடுக்கியினுலே அவர்களுடைய பல்லை யுடைத்தெடுத்து, பருந்தாட்டம் ஆட்டி=பருந்துபோல துன்பத்தினுல் திண்டாடும்படி செய்து, பகைவர் முன்னே=எதிரிகள் முன்னிலையில், கவி இருப்பாணி கொண்டே=பாட்டாகிய எனது இரும்பாணியினுலே, அல்லும் பகலும் அடிப்பேன்=நாள் முழுவதும் தாக்குவேன், எ - று.

பாதிப்பாட்டு ஒட்டக்கூத்தனும் பாதிப்பாட்டு அம்பட்டப்புலவனும் பாடியது.

24. விண்பட்ட கொக்கென வெல்லும் வல்லூ றின் விலவிலத்துப்
புண்பட்ட நெஞ்சொடு மிங்குநின் ருய் பொட்டையாய் புகலாய்
கண்பொட்டை யாயினு மம்பட்ட னுகவி வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப் பாடுவனே.

உரை:—பொட்டையாய்=கூசிய கண்ணுடையவனே! விண்பட்ட வெல்லும் வல்லூறின் கொக்கு என=தன்னை வெல்லக்கூடிய ராசாளிப் பறவையை வானத்திற் பொருந்திய கொக்கானது பார்த்து அஞ்சுவது போல, விலவிலத்து=நடுநடுங்கி, புண்பட்ட நெஞ்சொடும் இங்கு நின்ரூய்= துன்புறுகின்ற உள்ளத்தோடு இங்கே நிற்கின்றவனே! புகலாய்=நீ யாரென்று சொல்வாயாக! (என்று ஒட்டக்கூத்தர் வினவ), கண்பொட்டை

யாயினும் அம்பட்டன் நான் = கண் குருடாயிருந்தாலும் நான் அழகிய கல்வி மான் (அல்லது நாவிதன்), கவிவாணர் முன்னே = பாவலர்க்கு முன்னிலையில், பண்பட்ட செந்தமிழ் = செப்பமமைந்த சிறந்த தமிழ்ப் பாட்டுகளை, நீயும் திடுக்கிடப் பாடுவனே = நீயும் திகிலடையும்படியாக நானியற்றுவேன், (என்று அம்பட்டன் விடை கூறினான்.) எ - று.

இதுவுமது குயவன் பாடியது.

25. மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்தவ னூரடா
கூனையுங் குட முங்குண்டு சட்டியும்
பானையும் வனை யங்குசப் பையல்யான்.

உரை:—மோனை முத்தமிழ் = சீரின் முதலெழுத்து ஒற்றுமையாகி மோனை முதலிய பாட்டுறுப்புக்க ளமைந்த இயல், இசை, நாடகம் எனும் மூன்றிற்கு முரிய கவிகளாகிய, மும்மத மும்பொழி = மூன்றுவகை மதங்களையும் பொழிகின்ற, யானை முன் வந்து எதிர்த்தவன் ஊரடா = யானை போன்ற என் முன்னே தைரியமாக நிற்பவன் யார் (என்று வினவி), கூனையும் குடமும் குண்டு சட்டியும் பானையும் வனை = வளைந்த பாண்டமும், குடமும் ஆழ்ந்த சட்டியும் பானையும் மண்ணினலுண்டாக்கும், அம் குசப் பையல் யான் = அழகிய குயவகுலத்து ஆண் மகன் நான், (அல்லது) அங்குசம் பையல் யான் = யானையை அடக்குகின்ற தோட்டிபோன்ற ஆண் மகன் நான், (என்று குயவன் கூறினான்) எ - று.

தச்சன் பாடியது.

26. சொன்ன சந்தக் கவியாவருஞ் சொல்லுவர் சொற்சுவைசேர்
இன்ன சந்தக் கவியேதென்ற போதி லெதிர்த்தவரை
வன்ன சந்தங் கெடவாயைக் கிழித்திந்த வாய்ச்சியினல்
கன்ன சந்தங் களினிற் கவியாப்பைக் கடாவுவனே.

உரை:—சொன்ன சந்தக் கவி யாவரும் சொல்லுவர் = நீ பாடிய வண்ணப் பாட்டினை எல்லாரும் இயற்ற முடியும், சொற் சுவை சேர் இன்ன சந்தக்கவி ஏதென்ற போதில் = சொன்னயம் பொருணயமமைந்த என்னுடைய இந்த அழகான பாட்டினை இது என்ன பாட்டென்று இகழ்ந்த காலத்தில், எதிர்த்தவரை = அங்ஙனம் பகைத்துக் கூறியவரை, வன்ன சந்தம் கெட = அவர்களுடைய நிறமும் வனப்பும் குலையும்படியாக, இந்த வாய்ச்சியினல் வாயைக் கிழித்து = இந்த மரம் வெட்டியினல் அவருடைய வாயைக் கூறுசெய்து, கன்ன சந்தங்களினில் = அவர்களுடைய செவித்துளைகளிலே, கவி ஆப்பைக் கடாவுவனே = என் பாட்டாகிய ஆப்பினை அடித்துச் செலுத்துவேன், எ - று.

தட்டான் பாடியது.

27. திகிரி வட்டக் குடைச்செங்கோ லபயன் செழுஞ்சிலம்பிற்
பகுதி யொட்டக் கூத்தபட்டனை நானப் பணைக்கவியில்
மிகுத வொட்டத் தட்டிவிட்ட கையோட்டி லுருக்கிக்குத்திப்
புகுத வொட்டித் தட்டிமே லணுகாவண்ணம் போர்செய்வனே.

உரை:—திகிரிவட்டக் குடை செங்கோல் அபயன் = எங்கும் செல்லுகின்ற ஆஞ்ஞாசக்கரத்தையும் சந்திரன்போன்ற வெண்குடையையும் நீதி முறையையும் உடைய சோழமன்னனின், செழும் சிலம்பின் = வளம்பொருந்திய மலைபோன்ற சபையில், பகுதி ஒட்டக்கூத்தபட்டனை—இடம் பெற்றுள்ள ஒட்டக்கூத்தனுகிய பாவலனே, நான் அப் பணைக்கவியில் = நான் அந்தப் பாட்டாகிய கொம்பினால், மிகுத ஒட்டத்தட்டி = மிகுதியும் பொருந்தும் படியாக அடித்து, விட்ட கையோட்டில் உருக்கி = இற்றுவிழுந்த சிறு ஓட்டுத் துண்டில் வைத்துருகச்செய்து, குத்தி = அடக்கி, புகுத ஒட்டத் தட்டி = நகையாவதற்குத் தக்கபடி இசைத்துச் சேர்த்து, மேல் அணுகா வண்ணம் போர் செய்வனே = மீறித் தாக்காதபடி யுத்தம் நடாத்துவேன், எ - று.

ஒட்டக்கூத்தனும் புகழேந்தியும் பாடியது.

28. வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்று முதுகுக் கிடான்கவசம்—துன்றும்
வெறியார் தொடைகமழு மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடிக்கி னென்று.

உரை:—துன்றும் வெறியார் தொடை கமழும் மீனவர் கோன் = மிகுந்த தேன் நிறைந்த மலர் மாலையின் வாசனை வீசப்பெற்ற பாண்டியன், புறங் கொடுக்கின் = எதிரிகள் புறங்காட்டி யோடினால், கைவேல் எறியான் என்று = தன் கையிலுள்ள வேலாயுதத்தை அவர்கள் முதுகின்மீது வீசமாட்டா னென்று நினைத்து, வென்றி வளவன் = செயமிகுந்த சோழனுகிய, விறல் வேந்தர் தம்பிரான் = திறமையுடைய அரசர்க்கரசன், என்றும் கவசம் முதுகுக்கு இடான் = எப்போதும் தன் முதுகின்மேல் அங்கி அணியான், எ - று.

குறிப்பு:—இப்பாட்டில் முன் பாதியை ஒட்டக்கூத்தர் பாடியவுடன் பிற்பாதியைப் புகழேந்திப் புலவர் பாடி முடித்துவிட்டார்.

விற்கொடியுர் மீனக்கொடியுர் சோழனுக்குத் தோற்றாலும்,
பெண்ணின் புருவமும் கண்ணுமாக உருவெடுத்துச் சோழனை
அவை வெல்கின்றன வென்று பாடியது.

29. பழியும் புகழு மெவர்க்கு முண்டாமிந்தப் பாரினுனக்
கழியுஞ் சிலையுங் கயலு மென்ரு லகளங்கதுங்கா

மொழியும் பொழுதெங்கள் பெண்சக்ர வர்த்தி முகத்திரண்டு
விழியும் புருவமு மாகியந்தோ வுனை வெல்கின்றதே.

உரை:—அகளங்க துங்கா = அகளங்கனுகிய சிறந்த மன்னனே! இந்தப் பாரில் உனக்கு சிலையும் கயலும் அழியுமென்றலும் = இந்த உலகத்தில் உன் எதிரே பாண்டியனது மீன்கொடியும் சோனது விற்கொடியும் தோற்றுத் தாழுமென்றலும், மொழியும்பொழுது = அவற்றைக் கூறுங்கால் அவை, எங்கள் பெண் சக்ரவர்த்தி முகத்து இரண்டு விழியும் புருவமுமாகி = எங்கள் பேராசியின் திருமுகத்திலுள்ள இருகண்களும் புருவங்களுமாக உரு வெடுத்து, அந்தோ உனை வெல்கின்றதே = ஐயோ உன்மேல் வெற்றியடை கின்றனவே (இது எதைக் காட்டுவதெனில்) பழியும் புகழும் எவர்க்கும் உண்டாம் = உலகத்தி லிகழ்ச்சியும் புகழ்ச்சியும் எல்லார்க்கும் உள்ளன என்பது, எ - று.

புகழேந்தி பாடிய விருத்தம்.

தொண்டைமண்டலத்தார் தலைவிக்கு வருத்தம் வரும்படி பொய்சொல்லா ரென்று பாடியது.

30. நையும் படியே நாங்கொற்ற நங்கோன் செஞ்சி வரைமீதே
ஐயம் பெறுநுண் ணிடைமடவா யகிலின் றூப முகிலன்று
பெய்யுந் துளியோ மழையன்று பிரசத்துளியே பிழையாது [ரே.
வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டா

உரை:—நாம் கொற்றம் நையும்படியே = நாம் அபஜெயப்படும்படியாக, நம்கோன் செஞ்சி வரைமீது = நமது தலைவனுடைய செஞ்சிக் குன்றத்தி னிடம், ஐயம்பெறும் நுண் இடை மடவாய் = உண்டோ இல்லையோவென்று ஐயுறும்படியாக அவ்வளவு சிறிய இடையினையுடைய மாதே! (இப்போது தோன்றுவது) முகில் அன்று அகிலின் தூபம் = மேகமல்ல அது அகிற் கட்டை யெரிவதனலுண்டாகிய புகையே, பெய்யும் துளியோ மழை அன்று பிரசத் துளியே = இப்போது பெய்வது மழையல்ல மலரிலிருந்து விழுகின்ற தேன் திவலையே, தொண்டை நாட்டார் = தொண்டை நாட்டினராகிய உன் தலைவர், வையம் பெறினும் = உலகமெல்லாம் பெற்றலும், பிழையாது பொய் உரைக்கமாட்டார் = தப்பிக்கூட இல்லாததைக் கூறுவாரல்லர், எ - று.

செங்கலங்கை வடுகநாத முதலியார்மேற் பாடியது.

31. தன்னுடன் கூடப் பிறந்த சகோதரத் தம்பியுயிர்
அந்நிலை மாண்டது தோன்றுமன் மூடிவைத் தன்னமிட்டான்
மன்னவர் போற்றிட வாழ்செங் கலங்கை வடுகனுக்குக்
கன்னலுஞ் சோமனு மோவினை யாகக் கழறுவதே.

உரை:—தன்னுடன் கூடப்பிறந்த சகோதரத் தம்பி = தன்கூட ஒரு அன்னைவயிற்றி லுதித்த இளைய சகோதரன், அந்நிலை உயிர் மாண்டது

தோன்றுமல்=விருந்துண்ணப்போன அந்த விடத்தில் இறந்துபோனது தெரியாதபடி, மூடிவைத்து அன்னம் இட்டான்=சவத்தை ஒரு புறம் மூடி வைத்துவிட்டு உணவளித்தவனுகிய, மன்னவர் போற்றிட வாழ் செங் கலங்கை வடுகனுக்கு=வேந்தரும் புகழும்படியாக வாழ்க்கை நடத்துகின்ற செங்கலங்கை யென்னும் ஊரிலுள்ள வடுகராத முதலியாருக்கு, கன்னனும் சோமனுமோ இணையாகக் கழறுவதே=கர்ணனையும் சோமனையுமோ சம மாகச் சொல்லுதல் கூடுமோ? (கூடாது என்றபடி) எ - று.

இவர் குமாரருடைய வீட்டில் அசுப நடந்தகாலத்தில் புகழேந்திப் புலவர் தமது கலியாணத்துக்கு வரச்சொன்னது.

32. முந்தவிளை யோன்மாள முத்தமிழோர்க் கன்னமிட்ட
அந்தவடு கன்மக ளயின்—வந்தென்
தலைக்கலி யாணத்துக் கேதான் பிணத்தைமூடி
இலக்கண மாச்செய்குவை நீயே.

உரை:—முந்த இளையோன் மாள முத்தமிழோர்க்கு அன்னம் இட்ட=விருந்தினர்க்கு உணவளிக்குமுன் தம்பி சாகவும், அதனை மறைத்து மூன்று தமிழிலும் தேர்ச்சி யுடையவர்கட்குச் சோறளித்த, அந்த வடுகன் மகன் ஆயின்=கீர்த்திபெற்ற அந்த வடுகராத முதலியாருடைய குமாரனுக நீ இருந்தால், பிணத்தை மூடி=யாராவது இறந்தாலும் இறந்தவர் சவத்தை மூடிவைத்துவிட்டு, என் தலைக் கலியாணத்துக்கே தான் வந்து=என்னு டைய முதல் திருமணத்திற்கு வந்துசேர்ந்து, இலக்கணமாச் செய்குவை= முறையாக எல்லாம் நடாத்துவாயாக, எ - று.

வெண்ணூறு வெள்ளம் பெருகியபோது அடங்கும்படி பாடியது.

33. பள்ளமாஞ் செய்யிற் பயிரையெலாங் கொள்ளைகொள்ளும்
வெள்ளமே யுன்றனைநாம் வென்றேமே—புள்ளலம்பு
பொற்காவி வாவிவல்லைப் பூபதிகா ளத்தியெனும்
நற்காரெனுங் கரையை நாட்டி.

உரை:—பள்ளமாம் செய்யில்=ஆழமாகிய வயலிலுள்ள, பயிரையெல் லாம் கொள்ளைகொள்ளும் வெள்ளமே=பயிரை முழுவதும் அடித்துக்கொண்டு போகின்ற ஆற்றுவெள்ளமே! புள் அலம்பு=பறவைகள் சூழ்ந்து ஒலிக் கின்ற, பொற்காவி வாவி, வல்லை=அழகிய நீலோற்பலங்கள் பொருந்திய பொய்கையையுடைய வல்லை நகரிலே வாழ்கின்ற, பூபதி காளத்தியெனும்= நிலத்ததிபராகிய காளத்தியப்ப முதலியாரென்னும், நல்கார் எனும் கரை யை நாட்டி=நல்ல கொடை மேகமாகிய கரையை நிலைநிறுத்தி, உன்றனை நாம் வென்றேமே=உன்னை நாம் அடக்கிவிட்டோம், எ - று.

கூவம் தியாக சமுத்திரமென்னும் ஊரிலுள்ள புலவர்கட்குத் தொண்டுசெய்து பாடல்பெற்றமை புகழேந்தி பாடியது.

34. ஓங்கிய செந்தமிழ்த் தாதாக் கடிமையவ் வூரதனுல்
நாங்கவி சொல்வது மில்லையென் றேகம்ப நாடன்சொல்ல
ஆங்கவ னேறுஞ் சிவிகை சுமந்து மடப்பையிட்டும்
தாங்கவி கொண்டது கூவந் தியாக சமுத்திரமே.

உரை:—ஓங்கிய செந்தமிழ்த் தாதாக்கு அடிமை அவ்வூர் அதனுல்= சிறந்த தமிழ்ப் புலவர்கட்குக் கொடையாளியாகிய சடையப்பவள்ளலுக்கு அந்த ஊரார் அடிமைகள் என்ற காரணத்தால், நான் கவி சொல்வதும் இல்லை என்றே=நான் புகழ்ந்து பாடுவது இல்லை என்று, கம்பநாடன் சொல்ல=கம்பர் கூற, ஆங்கு அவன் ஏறும் சிவிகை சுமந்தும்=அப்புலவர் பெருமா னேறிவரும் பல்லக்கினைத் தாங்கியும், அடைப்பு இட்டும்=தம்பலப் பாத்திரத்தை யேந்தியும் தொண்டுசெய்து, தான் கவிகொண்டது=அவரால் தான் பாடப்பெற்றது, கூவன் தியாக சமுத்திரமே=கூவமெனப்படும் கொடைக்கடலே! எ - று.

கூவமென்னும் ஊரிலுள்ளவர்களின் தியாகத்தைப்பற்றிப் பாடியது.

35. மட்டாருஞ் செங்கழுநீர் மணிமார் பரைவாழ்த்து மந்தக்
கிட்டாத யாசகர் கிட்டிவந்தா லதைக்கேட்டு முன்னுட்
பட்டோலை வாசித் தவரவர்க் குள்ள பரிசிலெல்லாம்
தட்டா தளிப்பதுங் கூவந் தியாக சமுத்திரமே.

உரை:—மட்டாரும் செங்கழுநீர் = தேன் நிறைந்த செங்கழுநீர்ப் பூவினைச் சூடிய, மணி மார்பரை = அழகிய திருமார்பினை யுடைய கடவுளே, வாழ்த்தும் அந்தக் கிட்டாத யாசக=வழிபடுகின்ற அதிதியான பிச்சைக் காரர்கள், கிட்டி வந்தால்=பிச்சைக்காக நெருங்கி வரின், அதைக் கேட்டு மூன்னாள் பட்டோலை வாசித்து=அவர்கள் பெயரெழுதிய ஓலைச் சுவடியை முந்திய நாளில் தயார் செய்த முறையைப் பார்த்து, அவரவர்க்குள்ள பரிசி லெல்லாம் தட்டாது அளிப்பது=அவ்வவர்க்குரிய வெகுமதியைத் தவறுமற் கொடுப்பது, கூவன் தியாக சமுத்திரமே=கொடைக் கடலாகிய கூவ மென்னும் ஊரிலுள்ளவர்களே! எ - று.

தலைவி அயன்றைப் பதியிலுள்ள சடையனுக்குத் தூது விடுவதாக புகழேந்தியார் பாடியது.

36. மாகுன் றனைய பொற்ரோளான் வழுதிமன் வான்கரும்பின்
பாகொன்று சொல்லியைப் பார்த்தெனைப் பார்க்கிலன் பையப்பை
போகின்ற புள்ளினங் காள்புழற் கோட்டம் புகுதுவிரேல் [யப்
சாகின்றன லென்று சொல்வீ ரயன்றைச் சடையனுக்கே.

உரை:—பையப் பையப் போகின்ற புள்ளினங்காள் = மெதுவாகச் செல்கின்ற பறவைக் கூட்டங்களே! மாகுன்றை பொற்றேளான் = பெரிய மலைபோன்ற புயங்களை யுடையவனுகிய, வழுதிமன் = பாண்டிய மன்னன், வான் கரும்பின் பாகு ஒன்று சொல்லிய = சிறந்த கருப்பஞ்சாற்றினை யொத்த இனிய சொல்லுடைய பெண்ணைப் பார்த்தபின், எனைப் பார்க்கிலன் = என்னைக் கவனிக்கவில்லை, புகல் கோட்டம் புகுவிரேல் = புழற் கோட்டமென்னும் ஊருக்கு நீங்கள் செல்வீர்களானுல், அயன்றைச் சடையனுக்கே = அங்கிருக்கும் அயன்றைச் சடையனுகிய வள்ளலிடம், சாகின்றனள் என்று சொல்வீர் = யான் இறக்கும் தருவாயி லிருக்கின்றே னென்று சொல்லுங்கள், எ - று.

அயன்றைப் பதித்தலைவனுகிய சடையனென்னும் வள்ளலின் அறத்தைப் புகழேந்தியார் புகழ்ந்து பாடியது

37. இரவ லாளரே பெருந்திரு வுறுக
அரவுமிழ் மணியு மலைகட லமிர்தும்
திங்கட் குழவியுஞ் சிங்கப் பறழும்
குதிரை மருப்பு முதிர்சுவை சுரபியும்
ஈகென மொழியினு மில்லென மொழியான்
சடையனை யயன்றைத் தலைவனை நீர்போய்
உடையது கேண்மின் னுறுதியுள் ளோரே.

உரை:—இரவலாளரே = கொடை யேற்பவர்களே! அரவு உமிழ் மணியும் = நாகங் கக்குகின்ற இரத்தினத்தையும், அலைகடல் அமிர்தும் = திருப்பாற்கடலி லுண்டான அமிர்தத்தையும், திங்கள் குழவியும் = பிறை மதியையும், சிங்கப் பறழும் = சிங்கக் குட்டியையும், குதிரை மருப்பும் = பரிக் கொம்பையும், முதிர் சுவை சுரபியும் = முற்றிய ருசியுள்ள காமதேனு வின் பாலையும், ஈக என மொழியினும் = கொடுப்பாயாக வெனச் சொல்லினும், இல்லன மொழியான் = இல்லை யென்னுத, அயன்றைத் தலைவனை = அயன்றையூருக் கதிபதியாகிய, சடையனை = சடையனென்னும் வள்ளலை, நீர் போய் = நீங்கள் சார்ந்து, உறுதியுள்ளோர் = நிடமுள்ளவராய், உடையது கேண்மின் = நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பியதைக் கேட்பீர்களாக! (அப்போது) பெரும் திரு உறுக = பெரிய செல்வத்தைப் பெறுவீர்கள், எ-று.

திருக்குறுங்குடி யென்னும் பதியிற் றிருக்கோயில் கொண்டெழுந் தருளிய பெருமானின் மேல் வலிய வோசை தரும்படி கட்டளைக் கலித் துறை யியற்றுமாறு சோழமன்னன் புகழேந்திப் புலவர்க்கும் ஒட்டக்கூத்தருக்குங் கட்டளையிட்டபோது ஒட்டக்கூத்தர் பாடியது.

38. திக்கு ளெட்டுக் கயந்துக்க முற்றுத் திடுக்கிட்டலற
மைக்க டற்குட் சரந்தைக்க விட்டோர்க் கிடமாமதுர

இக்கு முற்றிக் கணுச்சற்றுவிட்டுத் தெறித்திட்ட முத்தைக்
கொக்கு மொக்கிக் கக்கிவிக்கு மச்சோலைக் குறுங்குடியே.

உரை:—திக்குள் எட்டுக் கயம் = எட்டுத் திசைகளிலு முள்ள யானை கள், துக்கமுற்றுத் திடுக்கிட்டு அலற = துயரமடைந்து அஞ்சிக் கதறும்படி யாக, மைக் கடற்குள் = கருநிறமுடைய சமுத்திரத்திலே, தைக்க = அமுங் தும்படி, சரம் விட்டோர்க்கு = அம்பு விட்டவராகிய ராமாவதார மெடுத்த திருமாலுக்கு, இடம் = தலமாவது, மாமதுர இக்கு முற்றி = மிகுந்த தித்திப் புடைய கரும்புகள் நன்றாக வினைந்து, கணுச் சற்றுவிட்டு = அதன் வரைகள் சிறிது விரிய, தெறித்திட்ட முத்தை = உள்ளிருந்து வெளியே பாய்ந்த முத்துக்களை, கொக்கு மொக்கி = கொக்கானது எடுத்துட்கொண்டு, கக்கி விக்கும் = வெளியே உமிழ்ந்து விக்கலுறுகின்ற, அச்சோலை = அழகிய பொழில்கள் நிறைந்த, குறுங்குடியே = திருக்குறுங் குடியே ஆகும், எ - று.

ஒட்டக்கூத்தர் பாடியதைக் கேட்டப் புகழேந்திப்
புலவர் பாடியது.

39. எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுநித் தம்பரவும்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கத்தருமவ்
வட்டநெட் டைப்பணி மெத்தையத் தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலந் தத்திமுத் தீனுங் குறுங்குடியே.

உரை:—எட்டெழுத்தைக் கருத்தில் குறித்திட்டு = அஷ்டாச்சர மந்திரத்தை யுள்ளத்தில் நிலைநாட்டி, நித்தம் பரவும் சிட்டர்களுக்கு = தினந் தோறும் வழிபடுகின்ற அன்பர்கட்கு, திரு பொற்பதத்தைச் சிறக்கத் தரும் = தமது அழகிய திருப்பாதங்களை அவர்கள் மேம்படும்படி யளித் தருளும், அவ்வட்ட நெற்றைப் பணி மெத்தை = அழகிய வட்டமாகச் சுற்றும் நெடிய ஆதிசேடனாகிய பாயினையுடைய, அத்தற்கு. இடம் = அப்ப னுக்குரிய தலமாவது, வாரிச பொகுட்டில் = தாமரைப் பூவிலுள்ள கொட்டை யில், நத்துக் குலம் தத்தி முத்து ஈனும் = சங்கினங்கள் பாய்ந்து தங்கி முத்துக் களைப் பெற்றளிக்கின்ற, குறுங்குடியே = திருக்குறுங்குடியே ஆகும், எ - று.

நெய்த்தானைப் பெருமானை ஒட்டக்கூத்தர் பாடியது.

40. விக்கா வுக்கா வித்தா விப்போய் விட்டா னட்டார் சுட்டூர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே யிற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்கா டப்பேய் தொக்கா டச்சூ ழப்பா டத்தீ வெப்பா டப்பூண்
நெக்கா டக்கா னத்தா டப்பேர் நெய்த்தா னத்தா னைச்சே வித்தே.

உரை:—விக்கா = விக்கி, உக்கு = தளர்ந்து, ஆவி தாவி போய் விட்டால் = உயிர் உடலைக் கடந்து போய்விட்டால், நட்டார் = உறவினர், சுட்டு ஊர் புக்கார் = பிணத்தைத் தகனஞ் செய்துவிட்டு ஊர்க்குள் போய்

விடுவர், இக்காயத்து ஆசைப் பாடுற்றே=இந்த இயல்புடைய உடம்பில் பற்றுவைத்து, இல் தேடிப்போய் வைப்பீர்=செல்வத்தைச் சம்பாதித்து வீட்டிற் கொண்டு வைக்கின்றவர்களே! அக்காட=தாமணிந்திருக்கும் எலும்புமாலை அசையவும், பேய் தொக்காட=பேய்கள் ஒருங்கு கூடிக் கூத்தாடவும், சூழ் அப்பு ஆட=சடையிற் சூழ்ந்திருக்கும் கங்கையானது அசையவும், தீ வெற்பு ஆட=திருக்கையில் வைத்திருக்கும் வெப்பமான நெருப்பு அசையவும், பூண் நெக்கு ஆட=காதிலணிந்திருக்கும் அணிகள் நெகிழ்ந்து அசையவும், அக்கானத்து ஆடு=அந்தச் சுடுகாட்டினிடத்தில் நடனஞ் செய்கின்ற, அப்பேர் நெய்த்தானத்தானே சேவித்தே = அந்தப் பெருமை பொருந்திய நெய்த்தான மென்னும் திருப்பதியில் வீற்றிருக்கும் சிவ பெருமானே வழிபட்டு, நிற்பீர்=நிலையான கதியைப்பெற் றுய்வீராக, எ - று.

நெய்த்தானப் பெருமானைப் புகழேந்திப் புலவர் பாடியது:

41. தற்கோ லிப்பூ சற்பா சத்தே தப்பா
மற்சா கைக்கே நிற்பீர்
முற்கோ லிக்கோ லிப்பூ சித்தே
முட்டா மற்சே வித்தே நிற்பீர்
வட்டா நெட்டோ டைப்பா ரைச்சேல்
மைப்பூ கத்தே றித்தா விப்போய்
நெற்ரு ஞற்ரு லப்பா கிற்சேர் நெய்த்தா
னத்தா னத்தியா னித்தே.

உரை:—தன் கோலி=தன்னைச் சுற்றி யிருப்பதாகிய, பூசல் பாசத்தையே தப்பாமல்=சண்டையிடும் பாசங்களினிடையே அகப்பட்டு அவற்றினின்று விலகிப் போகாமல், சாகைக்கே நிற்பீர்=மரணமடைதற்கே தகுதியா யிருப்பீர்கள், (நீங்கள்) முற்கோலி=முன்னதாகவே ஆயத்தமாய், வட்டா நெற்ரேடே=வற்றிப்போகாத நீண்ட நீர்க் கால்வாயில்களிலுள்ள, பாரைச் சேல்=பெரிய சேல் மீன்கள், மைப் பூகத்து ஏறித் தாவி போய்=கரிய மேகத்தைத் தொடக்கூடிய உயர்ந்த பாக்குமரத்தில் பாய்ந்து சென்று, நெல் தாள் உற்று=நெற்கதிரி னடியிற் சேர்ந்து, ஆலைப்பாகில் சேர்=ஆலையிலிருந் தெடுத்துக் கொதிக்க வைக்கப்படும் கருப்பஞ்சாற்றிற் கலக்கின்ற, நெய்த்தானத்தானைத் தியானித்து=நெய்த்தான பெருமானே மனதில் நினைத்து, கோலப் பூசித்தே=பூசைக்கு வேண்டுவன தயார் செய்து பூசனை புரிந்து, முட்டாமல் சேவித்தே நிற்பீர்=தவறாமல் வழிபட்டு நிலையான கதியைப் பெறுவீர்களாக! எ - று.

கம்பர்

பாடியது

சோழநாட்டு எல்லையைக் குறித்துப் பாடியது.

1. கடல்கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணட்டுப் பண்ணை யிருபத்து நாற்காதம்
சோணட்டுக் கெல்லையெனச் சொல்.

உரை:—சோணட்டுக்கு = சோழதேசத்திற்கு, கிழக்கு எல்லை கடல் = கீழ்த்திசையில் எல்லை சமுத்திரமாகும்; தெற்கு எல்லை கரைபொரு வெள்ளாறு = அதற்குத் தென்னெல்லை நீர் நிரம்பிக் கரைகளைத் தாக்குகின்ற வெள்ளாறுகும், குடதிசையில் கோட்டைக்கரை = மேலைத்திக்கில் கோட்டைக் கரையென்பது எல்லையாகும், வடதிசையில் ஏணட்டுப் பண்ணை = வடக் கெல்லை ஏண் நாட்டினுடைய வயல் நிலங்களாகும், (இவற்றுள்) இருபத்து நாற்காதம் = இருபத்து நான்கு காததூரம் சோழ தேசமாகும், எனச்சொல் = என்று செப்புக! எ - று.

குறிப்பு:—ஒருகாதம் அல்லது காவதமென்பது பத்து மைல் தூரம்.

பாண்டியநாட்டு எல்லையைக் குறித்துப் பாடியது.

2. வெள்ளா றதுவடக்கா மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்ட கடல்கிழக்கா மைம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி.

உரை:—பாண்டிநாட்டு எல்லை = பாண்டிய தேசத்திற்கு எல்லைகளாவன, வெள்ளாறது வடக்காம் = வெள்ளாறு வடக்கெல்லையாகும், மேற்குப் பெருவழியாம் = மேற்குத் திசையிலுள்ள பெருவழி அத்திக்கிலுள்ள எல்லையாகும், தெள்ளார் புனல் கன்னி தெற்காகும் = தெளிந்த நீரோடும் கன்னிநதி தெற்கெல்லையாகும், உள்ளார ஆண்ட கடல் கிழக்காம் = ஒரு காலத்தில் உள்ளே பொருந்தி தூறைமுகமாகப் பயன்பட்ட சமுத்திரம் கிழக்கெல்லையாகும், ஐம்பத்தறு காதம் பதி = ஐம்பத்தாறு காத தூரமுள்ள விடம் பாண்டிய நாடாகும், எ - று.

சோணட்டு எல்லையைக் குறித்துப் பாடியது.

3. வடக்குத் திசைபழனி வான்கீழ் தென்காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம்—கடற்கரையின்
ஓரமோ தெற்காகு முள்ளெண் பதின்காதம்
சேரனுட் டெல்லையெனச் செப்பு.

உரை:—சோணாட்டு எல்லை=சோழநாட்டுக்கு எல்லைகளாவன, வடக்கு திசை பழனி=வடக்குத் திக்கில் பழனி யெல்லை அடையாளமாக இருப்பது, வான் கீழ் தென்காசி=சிறந்த கீழ்த்திசையில் தென்காசி எல்லையாக இருப்பது, குடக்குத் திசை கோழிக்கோடாம்=மேலைத் திக்கில் கோழிக்கோடு அல்லது கள்ளிக்கோடென்பது எல்லையாக இருப்பது, கடற்கரையின் ஓரம் தெற்காகும்=சமுத்திரக்கரை விளிம்பே தென்னெல்லையாக இருப்பது, உள் எண்பதின் காதம் சோ நாடு=இவற்றிற் குள்ளாயிருக்கும் எண்பதின் காத தூரம் சோனது நாடு, என செப்பு=என்று கூறுக! எ - று.

தொண்டை நாட்டு எல்லையைக் குறித்துப் பாடியது.

4. மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்கு—பார்க்குளுயர்
தெற்குப் பிணகி திகழிருப தின்காதம்
நற்றொண்ட நாடெனவே நாட்டு.

உரை:—மேற்குப் பவளமலை=மேலைத்திசையில் பவளமலையும், நேர் வடக்காம் வேங்கடம்=நேரே வடதிசையில் திருவேங்கட மலையும், அணி கிழக்கு ஆர்க்கும் உவரி=அழகிய கிழக்குத் திசையில் ஒலிக்கின்ற கடலும், தெற்கு பார்க்குளுயர் பிணகினி=தென்றிசையில் உலகிற் சிறந்த பெண்ணை யாறும், (எல்லையாக வுடைய) திகழ் இருபதின் காதம்=இவற்றுள் விளங்கு கின்ற இருபது காத தூரமுள்ள நிலம், நல் தொண்டைநாடு=சிறந்த தொண்டமண்டலமென்று, என நாட்டு=உறுதியாகக் கூறுக! எ - று.

கம்பர் இராமாயணத்தை யரங்கேற்றச் சிதம்பரத்திலிருக்கும் தீக்ஷிதரிடங் கொண்டுபோய் 12-வருஷம் காத்தும் அவர்கள் ஒன்றுகூடி அந்நூலைக் கேளாதிருந்தனர். ஒருநாள் ஒரு தீக்ஷிதருடைய குழந்தையைச் சர்ப்பந்தீண்டி இறந்தது; அதை யெல்லாருங்கூடி மயானத்திற்குக் கொண்டுபோயினர். அங்குக் கம்பர் சென்று என் னிராமாயணத்தைக் கேட்பீர்களாயின் குழந்தையை எழுப்புகிறே னென்றனர். அவர்கள் ஒத்துக்கொண்டபோது பாடியது.

5. ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே யகல நட.

உரை:—ஆழியான் பள்ளி அணையே=சக்கரமுடைய திருமாலின் படுக்கையாகிய மெத்தையே! அவன் கடைந்த ஆழிவரையின் மணித் தாம்பே=அவன் அமுதங் கடைதற் பொருட்டு திருப்பாற்கடலில் நாட்டிய மந்திர மலையைச் சுற்றிக் கட்டப்பட்ட அழகிய கயிறே! பூழியான் பூணே=திருநீற்றுத் தூளைப் பூசிய சிவபிரான் அணியும் அணியே! பரம் எரித்த

பொற்சிலையில் = முப்புரத்தை யெரிப்பதற்காக வளைத்த மேருவாகிய பொன் வில்லில், பூட்டுகின்ற நாணே = கட்டப்பட்ட கயிறே! அகல நட = விலகிச் செய்வாயாக! எ - று.

6. மங்கை யொருபங்கர் மணிமார்பி லாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே—திங்களையும்
சீறியதன் மேலூருந் தெய்வத் திருக்கோளே
ஏறிய பண்பே யிறங்கு.

உரை:—மங்கையொரு பங்கர் மணி மார்பில் ஆரமே = மாதினைத் திரு மேனியிலொரு பக்கத்தி லுடையவராகிய அரனுர் தனதழகிய மார்பில் தரிக்கின்ற மாலையே!, பொங்கு கடல் கடைந்த பொன் கயிறே = கொந் தளிக்கின்ற திருப்பாற்கடலி லமுதங் கடைதற்கு உதவிய அழகிய கயிறே! திங்களையும் சீறி அதன்மேல் ஊரும் தெய்வத்திருக்கோளே = சந்திரனைச் சினந்து அதன்மேல் பாய்ந்து மறைக்கின்ற கடவுட் டன்மையுடைய திருக் கிரகமே!, ஏறிய பண்பே இறங்கு = விடமேறிய முறையிலேயே அதனை இறக்குவாயாக!, எ - று.

7. பாரைச் சுமந்த படவரவே பங்கயக்கண்
வீரன் கிடந்துறங்கு மெல்லணையே—ஈரமதிச்
செஞ்சடையான் பூணுந் திருவா பரணமே
நஞ்சுடையாய் தூர நட.

உரை:—பாரைச் சுமந்த பட அரவே = நிலவுலகத்தைப் படத்தின்மீது தரித்த ஆதிசேடனே!, பக்கயங்கண் வீரன் = கமலம்போன்ற கண்ணையுடைய உத்தம புருடராகிய பெருமாள், கிடந்து உறங்கும் மெல் அணையே = படுத்துத் தூங்கும் மென்மையான மெத்தையே! ஈரமதிச் செஞ்சடையான் பூணும் திருவாபரணமே = குளிர்ந்த திங்களைச் சூடிய சிவந்த சடைமுடியுடைய பரமசிவன் அணிகின்ற அழகிய நகையே!, நஞ்சுடையாய் = விஷத்தைத் தன்னிடத்திற் கொண்டவனே! தூர நட = தூரச் செல்வாயாக! எ - று.

சீராமனெனும் வண்ணன் தனக்குச் சலவைசெய்து
கொடுத்ததை மெச்சிப் பாடியது.

8. சிரம்பார்த்தா னீசனயன் றேவிதனைப் பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன்—உரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வண்ணன் சீராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு.

உரை:—உரம் சேர் மலை வெளுத்த = திண்மையுடைய கைலை மலையும் வெளுத்துப் போவதற்குக் காரணமான, திண் புயத்து வண்ணன் சீராமன் = உறுதியான கைகளையுடைய சீராமனென்னும் பெயருடைய வண்ணன், கலை வெளுத்த நேர்த்திதனைக் கண்டு = துணிகளை முற்றிலும் வெள்ளை

யாக்கிய அழகினைப் பார்த்து, ஈசன் சிரம் பார்த்தான்=சிவபிரான் தமது முடியிலிருந்து வெள்ளிய கங்கை விலகிப் போய்விட்டதே என்று பார்த்தார் அயன் தேவியினைப் பார்த்தான்=பிரமதேவர் சரஸ்வதியின் நிறம் வண்ணன் துணிக்குப் போய்விட்டதோ என்று கவனித்தார், செம் கமலக் கண்ணன்= சிவந்த தாமரைபோன்ற கண்களையுடைய பெருமாள், கரம் பார்த்தான்= (சங்கு ஒடிப் போய்விட்டதோ என்று சங்கு தரித்த தம்) கையைப் பார்த்தார், எ - று.

சிதம்பரத்தி லிருந்த தம்பிபுகான் என்னும் அம்பட்டன் இவருக்கு க்ஷவரஞ் செய்ததை வியந்து பாடியது

9. ஆரார் தலைவணங்கா ராரார்தாங் கையெட்டார்
ஆரார்தாஞ் சத்திரத்தி லாருதார்—சீராரும்
தென்புலியூர் மேவுஞ் சிவனருள்சே ரம்பட்டத்
தம்பிபுகான் வாசலிலே தான்.

உரை:—சீர் ஆரும் தென்புலியூர்=சிறப்புப் பொருந்திய அழகிய புலியூராகிய சிதம்பரத்தில், மேவும் சிவன் அருள் சேர்=தங்கி நடனஞ் செய்யும் நடராசப் பெருமானது திருவருள் பெற்ற, அம்பட்ட தம்பிபுகான் வாசலிலே=தம்பி புகானென்னும் பெயருடைய நாவிதன் வாயிலிற் சென்று, ஆர் ஆர் தலை வணங்கார்=மயிர் கழித்தற்காக தலைகுனியாதவர்கள் யாருமில்லை, ஆர் ஆர்தான் கை எடார்=அதன் பொருட்டு கையைத் தூக்காதவர்கள் யாருமில்லை, ஆர் ஆர்தாம் சத்திரத்தில் ஆருதார்=அவனுடைய கத்தி வேலையினல் சூடுதணிந்து சுகம் பெறுதவர்கள் எவருமில்லை, எ - று.

தானும் தன்மனைவியுஞ் சயனகிரகத்தி லிருக்கும்போது காற்று கதவை மோதினது, யாரென்று பார்த்து காற்றெனத் தெளிந்தபோது பாடியது.

10. கொற்கையான் மாறன் குலசேகரப் பெருமான்
பொற்கையா லனகதை போதாதோ—நற்கமல
மன்றலே வாரிமணி வாசலே யசைக்கத்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

உரை:—தென்றலே =மந்தமாருதமாகிய தென்காற்றே! கொற்கையான் மாறன் குலசேகரப்பெருமான் = கொற்கையிலரசாண்ட பாண்டியனாகிய குலசேகர மன்னன், பொற்கையான் ஆன கதை போதாதோ = இரவில் ஒருவர் வீட்டுக் கதவைத் தட்டியதற்காக தன் கையைத் தரித்து அதற்குப் பதிலாகப் பொன் கை யணிந்துகொண்ட செய்தி மாத்திரம் காணுதோ, நல் கமலம் மன்றலே வாரி=நல்ல தாமரைப்பூவின் வாசனையைத் தாங்கிக் கொண்டு, மணி வாசலே அசைக்க=அழகிய வாசற் கதவைத் தட்டுவதற்கு, என் வந்தாய் செப்பு=நீ வந்த காரணம் யாதென்று கூறுக! எ - று.

அரசன் காட்டிற் கழுகோட்டுங்கை யென்று சொல்லியதைப் பாடிய கண்டசுத்தி.

11. கண்டாயோ பார்வேந்தா கானகத்துக் கள்ளியின்கீழ்
வெண்டாழை பூத்து விளக்கெரிய—பெண்டாலி
பூட்டுதற்கு முன்னமொரு புத்திரனைப் பெற்றெடுத்தாள்
காட்டிற் கழுகோட்டுங் கை.

உரை:—பார் வேந்தா = நிலவுலகத்தை யாட்சி செய்கின்ற மன்னனே! கானகத்து கள்ளியின்கீழ் = வனத்திலுள்ள கள்ளிச் செடியினடியில், வெண் தாழை பூத்து விளக்கு எரிய = வெள்ளை நிறமுடைய தாழம்பூ விளக்குப் போல் நிமிர்ந்து தோன்ற, பெண் = ஒரு மாது, தாலி பூட்டுதற்கு முன் னம் ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தாள் = மணத்திற்கு முன்னேயே தவறுக நடந்து ஒரு மகனை யீன்றாள் (அதைக்கண்டு சிலர் அவளைக் கொன்று ஆற் றிற் போட்டார்கள்) காட்டில் கை கழுகு ஓட்டும் = அவள் பிணத்தின் கை அசைதலினாலே தன்னைக் குத்தவருகின்ற கழுகை யோட்டுகின்றது, எ - று.

கம்பர்-மங்கையர்க்கரசியாரைப் புகழ்ந்து பாடியது.

12. உமையவளு நீயு மொருங்கொப்பே யொப்பே
உமையவளுக் குண்டங்கோ சூனம்—உமையவட்ன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியனின்
ஆகந்தோய்ந் தாண்டா னரசு.

உரை:—உமையாளும் நீயும் ஒருங்கு ஒப்பே ஒப்பே = பார்வதியும் நீயும் முற்றிலும் ஒத்தவர்களே யாவீர்கள், உமையாளுக்கு அங்கு ஓர் ஊனம் உண்டு = எனினும் பார்வதிக்குச் சொல்லக்கூடிய ஒரு குறை பாடுண்டு, உமையாள் தன் பாகந்தோய்ந்து ஆண்டான் = உமையாளைப் பாகத்திற்கொண்ட ஆண்டவன், பலிக்கு உழன்றான் = ஐயமேற்று அலைந் தான், பாண்டியன் நின் ஆகம் தோய்ந்து அரசு ஆண்டான் = பாண்டிய மன்னன் உன்னுடைய உடம்பிற் பொருந்தி அரசாண்டான், எ - று.

கம்பர்-சடையப்பமுதலியாரைப் புகழ்ந்து பாடியது.

13. மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டில்
அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லும்
உடையான் சடையப்ப னூர்.

உரை:—நாட்டில் = இந்த தேசத்தில், அடையா நெடும் கதவும் = எப் போதும் அடையாத பெரிய வாசலும், அஞ்சல் என்ற சொல்லும் = யாச கனைப் பார்த்துப் பயப்படாதே என்று கூறும் இனியமொழியும், உடை யான் சடையப்பன் ஊர் = உடைய சடையப்பவள்ளல் தங்கும்பதியாவது, மோட்டு எருமை = வலிமையுடைய எருமைகள், வாவி புக பொய்கை

களிற் சென்றபோது, முட்டுவரால்=அவற்றை மடுவில் தாக்கிய வரால் மீன்களை, கன்று என்று=தன்னுடைய கன்றுக்குட்டிகளென்று எண்ணி, வீட்டளவும் பால் சொரியும்=வீடுபோய்ச் சேரும்வரை பாலைச் சிந்திக்கொண்டு செல்லுகின்ற, வெண்ணெயே=திருவெண்ணெய் நல்லூராகும், எ - று.

ஆதொண்டைச் சக்கரவர்த்தி கம்பருக்கு
உபசாரஞ்செய்தபோது பாடியது.

14. வெற்றிபுனை தாதகிக்கும் வேம்புக்கும் பெண்ணைக்கும்
சுற்றும் பெருநிழலாய்த் தோன்றுமே—கற்றோர்
திறந்தாங்குந் தாங்குஞ் செகமுழுதுந் தாங்கும்
அறந்தாங்குந் தொண்டை யரசு.

உரை:—தொண்டை அரசு=தொண்டைமண்டலத்துக்குத் தலைவனுகிய ஆதொண்டை வேந்தன், வெற்றி புனை தாதகிக்கும்=ஜெயத்தைக் குறிக்கும் ஆத்திமாலையைத் தரித்த சோழ அரசனுக்கும், வேம்புக்கும்=வேப்பமாலையணிந்த பாண்டியமன்னனுக்கும், பெண்ணைக்கும்=பனம்பூமாலையைத் தரித்த சேரமன்னனுக்கும், சுற்றும் பெருநிழலாய்த் தோன்றும்=அவர்களைச் சூழ்ந்து மிகுந்த நிழலைச் செய்கின்ற குடைபோலக் காணப்படுவான், கற்றோர் திறம்தாங்கும்=படித்தவரினத்தைப் போற்றுவன், தாங்கும் செகமுழுதும் தாங்கும்=நம்மைத் தாங்குகின்ற பூவுலக முழுவதையும் தனது தோளில் தாங்கும் ஆற்றலுடையவன், அறம் தாங்கும்=தருமத்தைக் காப்பாற்றுபவன், எ - று.

குறிப்பு:—அரசு என்பதற்கு அரசமரமெனப் பொருள்கொண்டு அரசமரத்தின் நிழல், ஆத்தி, வேம்பு, பனை முதலியவற்றின் நிழலைப் பார்க்கிலும் பெரியதென்று தொனிப்பொருள் கொள்வது முண்டு. எ - று.

வல்லியென்னுந் தாசியை இகழ்ந்து பாடியது.

15. கந்த மலர்ப்பிரமன் கன்னிமட வார்க்கெல்லாம்
அந்த விளநீரை முலையாக்கினன்—சுந்தரஞ்சேர்
தோற்றமிகு வல்லிக்குத் தோப்பைமுலை யாக்கினன்
ஏற்றமிதில் யார்தா னியம்பு.

உரை:—கந்தமலர்ப் பிரமன்=வாசனையுள்ள தாமரைப் பூவில் வீற்றிருக்கும் அயன், கன்னி மடவார்க்கு எல்லாம்=மணமாகாத மங்கையரெல்லாருக்கும், அந்த இளநீரை முலையாக்கினன்=அழகிய இளநீர்க் காய்களென்னும்படி தனங்களை யமைத்தான், சுந்தரம் சேர் தோற்றமிகு வல்லிக்கு=அழகான பார்வைப் பொலிவுடைய வல்லியென்னும் தாசிக்கு, தோப்பை முலை ஆக்கினன்=இளநீர்த் தோப்பை அல்லது தோற்பையை அவளது தனங்களாக அமைத்தான், ஏற்றம் இதில் யார்தான் இயம்பு=இவ்வகையில் உயர்ந்தவர்கள் யாரென்று கூறுக! எ - று.

கத்தரிக்காயும் - முளைக்கீரையுங் கொடுத்த தோட்டக்கார மாதத்தன்மேற் பாடியது.

16. இருந்தவளைப் போனவளை யென்னை யவளைப்
பொருந்தவளை பறித்துப் போனன்—பெருந்தவளை
பூத்தத்தத் தேன்சொரியும் பொன்னிவள நன்னாட்டில்
மாத்தத்தன் வீதியினில் வந்து.

உரை:—பெரும் தவளை = பருத்த தவளைகள், பூ தத்த = தாமரைப் பூவின்மீது தாவ, தேன் சொரியும் = அதனால் பூக்கள் மலர்ந்து தேனைச் சிந்துகின்ற, பொன்னிவள நல் நாட்டில் = காவிரியினால் வளஞ்செறிந்த சிறந்த சோழதேசத்திலுள்ள, மாதத்தன் வீதியினில் வந்து = மாதத்த னென்னும் ஆடவன் தெருவிற் சென்று, இருந்தவளை போனவளை என்னை அவளை = அங்கே இருந்தவள் போனவள் யான் என் பக்கத்திலுள்ளவள் ஆகிய எல்லாருடைய, பொருந்த வளை பறித்துப் போனன் = கையில் பொருந்திய அழகிய வளையல்கள் கழலும்படியாக மெலிவித்து அவற்றைக்கொண்டு சென்றான், எ - று.

கருமாரச் சிங்கன்மேற் பாடியது.

17. ஆழியா னழி யயனெழுத் தாணியென்பார்
கோழியான் குன்றெறிய வேலென்பான்—பூழியான்
அங்கை மழுவென்பா னருள்பெரிய மாவண்டூர்ச்
சிங்க னுலக்களத்திற் சென்று.

உரை:—அருள் பெரிய = இரக்கத்தில் மிகுந்த, மாவண்டூர் சிங்கன் உலக்களத்தில் சென்று = மாவண்டூரிலிருக்கும் சிங்கனென்னும் கொல்லனது வேலைக்கூடத்திற் போய், ஆழியான் ஆழி = பெருமாள் சக்ராயுதத்தைச்செய்து கொடுக்கவேண்டு மென்பார், அயன் எழுத்தாணி என்பார் = பிரமதேவர் எழுத்தாணி அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்பார், கோழியான் குன்று எறிய வேல் என்பான் = கோழிக் கொடியையுடைய குமரக்கடவுள் மலையைத் தாக்குவதற்கு வேலாயுதம்செய்து கொடுக்கும்படி கூறுவார், பூழியான் = திருநீறணிந்த பெருமான், அங்கை மழுவென்பான் = உள்ளங்கையில் வைத்துக்கொள்வதற்கு வேண்டிய மழுவாயுதத்தைச் செய்யும்படி கட்டளை இடுவர், எ - று.

அச்சுதன் கடைவாயிலில் முழங்கும் பேரிகை யோசையைக் கேட்டு புகழ்ந்து பாடியது.

18. குடகர் குணகட லென்பர் குடகுக்
கிடகர் வடகட லென்பர்—வடகடலோர்
தென்கட லென்பர் திருந்துதா ரச்சுதநின்
முன்கடை நின்றார்க்கு முரசு.

உரை :—திருந்து தார் அச்சுத = செவ்வையான மாலையைச் சூடிய அச்சுதவள்ளலே! நின் முன் கடை நின்று ஆர்க்கும் முரசு = உன் முற்றத்தி லொலிக்கின்ற முரசினை, குடகர் குணகடல் என்பர் = மேலைத்திக்கில் வாழ்பவர் கீழ்க்கடலின் முழக்கமெனக் கூறுவர், குடகுக்கு இடகர் = குடகுக்குத் தென்றிசையிலிருப்பவர்கள், வடகடல் என்பர் = வடக்குச் சமுத்திரத்தின் ஓசையென்பர், வடகடலோர் தென்கடல் என்பர் = வடசமுத்திரத்திலுள்ளவர்கள் அதனைத் தென்சமுத்திரத்தின் ஓசையென்பர், எ - று.

அச்சுதனைப் புகழ்ந்து பாடியது.

19. தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்குஞ் செந்நெல்
தனைவிளைத்தார் முற்றமது தானும்—கனையு
முரசுணங்கச் சங்குணங்கு மூரித்தேர்த் தானை
அரசுணங்கு மச்சுதன் முற்றம்.

உரை :—தினை விளைத்தார் முற்றம் தினை உணங்கும் = தினைப்பயிரை வளர்த்தவர்கள் வாயிலில் தினையானது காயும், செந்நெல்தனை விளைத்தார் முற்றம் அது தானும் = சிறந்த நெல்லினை விளைத்தவர் வாயிலில் அந்த நெல் காயும், மூரித்தேர்த்தானை = பலமுள்ள தேரும் படையுமுடைய, அரசு உணங்கும் = மன்னர்கள் அடங்கி வாடி நிற்கும், அச்சுதன் முற்றம் = அச்சுதவள்ளலின் வாயிலில், கனையும் முரசு உணங்க சங்கு உணங்கும் = ஒலிக்கின்ற பேரிகையும் வெற்றிச் சங்கங்களும் காய்ந்து கிடக்கும், எ - று.

அச்சுதன் தலைவாயிலைப் புகழ்ந்து பாடியது.

20. குறையுளா ரெங்கிரார் கூர்வேலி ராம
விறையாறு திங்க ளிருந்தான்—முறைமையால்
ஆலிக்குந் தார்மார்பா வச்சுதா வந்நாளில்
வாலிக் கினையான் கடை.

உரை :—ஆலிக்கும் தார் மார்பா = அசைகின்ற பூமாலையை யணிந்த அழகிய மார்பினையுடையவனே! அச்சுதா = அச்சுத வள்ளலே! அந்நாளில் = முற்காலத்தில், வாலிக்கு இடையான் கடை = வாலி தம்பியாகிய சுக்ரீவன் வாயிலில், கூர் வேல் இராம இறை = தீட்டிய வேலாயுதத்தையுடைய இராமனாகிய அரசன், முறைமையால் = விதி வசத்தால், ஆறு திங்கள் இருந்தான் = ஆறு மாதங் காத்திருந்தான், குறையுளார் எங்கு இரார் = குறைபாடுடையவர்கள் எந்தவிடத்திற்ரு னிருக்கமாட்டார்கள், எ - று.

குறிப்பு:—அச்சுதன் தலைவாயிலில் அரசர்கள் காத்திருப்பார்களென்பது கருத்து.

இதுவும்.

21. அரச னகளங்க னச்சுதன் முற்றத்
தரச ரவதரித்த வந்நாள்—முரசதிரக்

கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றனையை
வெட்டிவிடு மோசை மிகும்.

உரை:—அரசர் அவதரித்த அந்நாள்=மன்னரது பிறந்த நாளில், மூசு அதிர கொட்டிவிடும் ஒசையினும்=பேரிகை முழங்கும்படியாக அடிக்கும்படியாக அடிக்கும் சத்தத்திலும், அரசன் அகளங்கன் அச்சுதன் முற்றத்து=குற்றமற்ற அச்சுதமன்னன் வாசலில், கோவேந்தர் கால் தனையை=பெருமன்னரது கால்களிற் பூட்டிய விலங்கை, வெட்டிவிடும் ஓசை மிகும்=தறித்தெறிகின்ற சத்தமே அதிகமாய் இருக்கும், எ - று.

பவனி கண்ட பெண்ணின் கூற்று.

22. தனையவிழ் நாண்மாலைத் தாயரே யாவி
கனையினுமென் கண்டிறந்து காட்டேன்—வனைகொடுபோம்
வன்கண்ணன் மாவிசயன் மால்யானை தன்னெடும்வந்
தென்கண் புகுந்தா னினி.

உரை:—தனை அவிழ் நாண் மாலைத் தாயரே=முறுக்கு நெகிழ்ந்த அன்றெடுத்த பூமாலையைச் சூடிய அன்னைமாரே!, வனை கொடு போம்=எனது உடம்பை மெலிவித்து என் வளையல்களைக் கழலும்படி செய்து சென்ற, வன் கண்ணன்=கொடியவனுகிய, மாவிசயன்=மாவிசயனென்பவன், மால் யானை தன்னெடும் வந்து=மயக்கமிகுந்த யானையிலேறி வந்து, என் கண் புகுந்தான்=என் கண்ணிற்குட் புகுந்தான், ஆவிகளையும்=எனது உயிரைப் போக்கினும், என் கண் திறந்து காட்டேன்=என் கண்ணை விழித்து அவனை உங்கட்குத் தெரியும்படி செய்யமாட்டேன், எ - று.

வாணன் வீரத்தைப் புகழ்ந்து பாடியது

23. வாட்டானைத் தென்னவர்கோன் மாகதற்குத் தோற்றசெய்தி
கேட்டானத் தீங்குரலுங் கேட்டதற்பின்—நாட்டம்
பொருந்தா யிரவிழியான் பொன்முடியைச் சாய்த்தங்
கிருந்தானிங் கென்னுகு மென்று.

உரை:—வாள் தானை=வாளாயுதத்தைத் தரித்த சேனையையுடைய, தென்னவர் கோன்=பாண்டிய நாட்டினர்க்குத் தலைவனுனவன், மாகதற்குத் தோற்ற செய்தி=மகத நாட்டு மன்னனுகிய ஏகம்பவாணனுக்குத் தோற்றுப் போன சங்கதியை, நாட்டம் பொருந்து ஆயிரவிழியான் கேட்டான்=கவலையோடு கூடிய ஆயிரங்கண்ணனுகிய இந்திரன் கேள்விப்பட்டான், அத்தீங் குரலும் கேட்டதற் பின்=அச்செய்தி கூறும் இனிய வோசையைக் கேட்ட பிற்பாடு, பொன் முடியைச் சாய்த்து=தனது அழகிய தலையை அசைத்து, இங்கு என்னுகுமோ என்று=இந்த விண்ணுலகில் அவன் வந்தால் என்ன

நேருமோ என்று பயந்து, அங்கு இருந்தான் = அவ் வுலகத்திலேயே தங்கி விட்டான், எ - று.

திருவிடைமருதூர்த் தாசிகளைச் சிறப்பித்துப் பாடியது.

24. வாச மலர்மடந்தை போல்வார் மருதவனத்
தீச னடியா ரெழுபதின்மர்—நேசத்
திரவலர்மே னீட்டுவர் கையீண் டுலகையாளும்
புரவலர்மே னீட்டுவர்பொற் ருள்.

உரை :—மருதவனத்து = திருவிடை மருதூரிலுள்ள, வாச மலர் மடந்தை போல்வார் = மணம் பொருந்திய தாமரைப் பூவில் வீற்றிருக்கும் திருமகளைப் போன்றவர்களாகிய, ஈசன் அடியார் எழுபதின்மர் = திருவிடை மருதூர்ச் சிவபெருமான் கோயிலுக்குரிய தாசிகள் எழுபதுபேரும், நேசித்து = அன்பாய், இரவலர்மேல் கை நீட்டுவர் = ஐயமெடுப்பவர்களுக்கு அமுதமளிக்கும் பொருட்டு தங்கள் கையை நீட்டுவர், ஈண்டு உலகை ஆளும் புரவலர்கள் = இவ் வுலகை யாட்சி புரிகின்ற மன்னர்கள்மேல், பொன் தாள் நீட்டுவர் = தமது அழகிய அடிகளை வைப்பர், எ - று.

கம்பர் கற்றுச்சொல்லி.

25. மாவுறங்கின புள்ளுறங்கின வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின வெங்கண்மானிரு கண்ணுறங்கில வாயகோ
கோவுறங்கு கடைத்தலைக்குல தீபவள்ளுகு தட்டிவாய்
ஆவுறங்கு புகாரசஞ்சல வஞ்சலென்ன வடுக்குமே.

உரை :—கோ உறங்கு கடைத்தலை குலதீப = (கப்பங்கொணர்ந்த) அரசர்கள் (அதைச் செலுத்தச் சமயம் பெறாது) தூங்குகின்ற முற்றத்தையுடைய அரசர் கூட்டத்திற்கு விளக்குப் போன்றவனே!, வள்ளுகு தட்டி வாய் = வள்ளுக் கொடியை வாயில் அசைபோட்டுக்கொண்டு, ஆ உறங்கும் = பசுக்கள் தூங்குகின்ற, புகார் = காவிரிப்பூம் பட்டினத்திலிருக்கும், அசஞ்சல—மனக் கவலையற்றவனே!, மா உறங்கின = விலங்குகள் தூங்கின, புள் உறங்கின = பறவைகள் துயின்றன, வண்டு உறங்கின = வண்டுகள் நித்திரை செய்தன, தண் தலை கா உறங்கின = குளிர்ந்த நிலமுடைய பொழில்கள் தூங்கின, எங்கள் மான் = எங்கள் மகளோ, இரு கண் உறங்கில = இரண்டு கண்ணும் விழித்திருக்கின்றுள், ஐயகோ = பரிதாபம்!, அஞ்சல் என்ன அடுக்குமே = நீ அவளைப் பயப்படாதே என்று சொல்லுதல் பொருத்தமாகும், எ - று.

26. நில்லாத பல்லும் பறிபட்ட கூந்தலு நீண்டகரிப்
பொல்லா வழுக்குப் புடவையு மாய்வெரு பூச்சியம்போய்ச்
செல்லாப் பணத்துக்குத் தேட்டுணு மற்றுத் தியங்கியொன்றும்
இல்லாத பாவிதனக் கார்துணை பொன்னி ராட்டினமே.

உரை :—நில்லாத பல்லும் = அசைந்து விழக்கூடிய பல்லும், பறிபட்ட கூந்தலும் = மயிர் பறிபட்ட மொட்டத்தலையும், நீண்ட கரிப் பொல்லா அழுக்குப்புடவையுமாய் = கரி நிறமுள்ள மிகுந்த அழுக்குடைய நெடுநாள் துவைக்கப்படாத சேலையுமுடையவளாய், வெகு பூச்சியம் போய் = மதிப் பிழந்து, செல்லாப் பணத்திற்குத் தேட்டு = செல்லாக்காசினை மாற்றத் தேடுபவளாய், ஊணும் அற்று = உணவில்லாது, தியங்கி ஒன்றுமில்லாத பாவி தனக்கு = தளர்ந்து யாதுங் கைப் பொருளில்லாத ஏழைக்கு, துணை யார் = துணை யாவார் யார் ?, பொன் இராட்டினமே = அழகிய நெசவுக் கருவி யாகிய இராட்டினமே துணையாகும், எ - று.

சோழராஜனிடத்தில் கம்பர் போனபோது அரசர் எதிர்கொண்டு ஏழடி வந்து மரியாதை செய்தான் அப்போது பாடியது.

27. படுபருந்துஞ் சூர்ப்பேயும் பன்மிருகஞ் செந்நாய்
கொடிகழுகு மித்தனையுங் கூடி—வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்.

உரை :—வடிவுடைய கோமான் களப்பாளன் = நல்ல தோற்ற முடைய சக்கரவர்த்தியாகிய சோழனுடைய, கொல் யானை = எதிரிகளை உயிர்போக்கு கின்ற யானையானது, போமாறு போமாறு போமாறு = செல்லும் வழிக ளெங்கும் விடாது தொடர்ந்து (கொல்லப்பட்டவர் ஊனைத் தின்னுவதற் காக) படு பருந்தும் = பெரிய பருந்துகளும், சூர்ப்பேயும் = பயத்தை விளைக்கும் பேய்களும், பல் மிருகம் செந்நாய் = செந்நாய் முதலிய பல விலங்குகளும், கொடி கழுகும் = காக்கைகளும் கழுகுகளும், இத்தனையும் கூடிப்போம் = இவைகளெல்லாம் ஒன்றாய்க் கூடிப்போகும், எ - று.

28. அன்றையிலும் வைய மகன்றதோ வல்லவென்று
குன்றெடுத்து நீதிருத்திக் கொண்டாயோ—என்றும்
அடைந்தாரைக் காக்கு மகளங்கா துங்கா
நடந்தாயே நாலா றடி.

உரை :—என்றும் அடைந்தாரைக் காக்கும் அகளங்கா துங்கா = எப் போதும் தன்னைச் சேர்ந்தவர்களைக் காப்பாற்றுகின்ற குற்றமற்றவனே, சிறப்புடையவனே, அன்றையிலும் வையம் அகன்றதோ = முன்காளிலும் நிலவுலகம் அதிகமாக இப்போது அகலமாயிற்று ? அல்ல என்று குன்று எடுத்து நீ திருத்திக் கொண்டாயோ = அப்படி உலகம் அகலமாக வில்லை யென்றெண்ணி மலைகளை எடுத்தெறிந்து விட்டு நீ நிலத்தை அகலப்படுத்திக் கொண்டாயோ ? நாலாறு அடி நடந்தாயே = பத்தடி தூரம் அல்லது இரு பத்து நான்கடி தூரம் நடந்து வந்தாயே, எ - று.

ஆறைநகரிலிருக்கும் வாணனைப் புகழ்ந்து பாடியது.

29. பேரரசர் தேவிமார் பெற்ற மதலையர்தம்
மார்பகலங் கண்டு மகிழ்வரே—போர்புரிய
வல்லா னகளங்கன் வாணன் றிருநாமம்
எல்லா மெழுதலா மென்று.

உரை:—பேரரசர் தேவிமார் = பெருமன்னருடைய தேவிகள், பெற்ற மதலையர்தம் = தாங்களீன்ற பிள்ளைகளுடைய, மார்பு அகலங்கண்டு = மார்பினுடைய விசாலத்தைப் பார்த்து, போர் புரிய வல்லான் அகளங்கன் வாணன் = யுத்தத்திற் றிறம்படைத்த களங்கமில்லாதவனுகிய ஏகம்பவாணனுடைய, திருநாமம் எல்லாம் = திருப் பெயர்களெல்லாவற்றையும், எழுதலா மென்று = அவர்கள் மார்பிலெழுதக் கூடுமென்றெண்ணி, மகிழ்வரே = மகிழ்ச்சி யடைவார்கள், எ - று.

30. உலக்குரிய பண்ட முவந்திரக்கச் சென்றுல்
கொலக்குரிய வேழங் கொடுத்தான்—தலைக்குரிய
வாணர்கோ னறை மகதேவ னுக்கிந்தப்
பாணனே டென்ன பகை.

உரை:—இந்தப் பாணன் = இந்தப் பாட்டு வல்லவன், உலக்கு உரிய பண்டம் உவந்து இரக்கச் சென்றுல் = சமையலுலக்கு வேண்டிய சரக்காகிய அரிசியைப் பிரியப்பட்டு ஏற்பதற்குப் போனால், தலைக்கு உரிய வாணர் கோன் = தலைமை யிடத்திற்குத் தகுதிவாய்ந்த ஏகம்பவாணன் என்னும் தலைவன், கொலைக்கு உரிய வேழம் கொடுத்தான் = பகைவரைக் கொல்லக் கூடிய யானையை அளித்தான், ஆறைமகதேவனுக்கு = ஆறையிலிருக்கும் அந்தப் பெருமானுக்கு, இந்தப் பாணனேடு என்ன பகை = இந்தப் பாணனிடத்தில் என்ன விரோத மிருக்கின்றது, எ - று.

31. வாணன் பெயரெழுதா மார்புண்டோ மாகதர்கோன்
வாணன் புகழுரையா வாயுண்டோ—வாணன்
கொடிதாங்கி நில்லாத கொம்புண்டோ வுண்டோ
அடிதாங்கி நில்லா வரசு.

உரை:—மாகதர்கோன் வாணன் பெயர் எழுதா மார்பு உண்டோ = மகதநாட்டிற்குத் தலைவனுகிய ஏகம்பவாணனுடைய நாமம் வரையாத மார்பு இருக்கின்றதா? வாணன் புகழ் உரையா வாய் உண்டோ = ஏகம்பவாணன் புகழினை எடுத்துப் பேசாத வாய் இருக்கின்றதா? வாணன் கொடி தாங்கி நில்லாத கொம்பு உண்டோ = ஏகம்பவாணனது ஜெயக்கொடி கட்டப்பெறுதமாக்களை இருக்கிறதா? அடிதாங்கி நில்லா அரசு உண்டோ = அவனது பாதத்தைச் சுமக்காத மன்னர் உளரோ? (இல்லை) எ - று.

32. பாண்டியனைப் பேர்மாற்றிப் பாணர்க் கரசளித்த
வாண்டகை யென்றுன்னை யறியேனே—மூண்டெழுந்த
கார்மாற்றுஞ் செங்கைக் கடகரிவா ணுவனது
பேர்மாற் றுவதரிதோ பேசு.

உரை:—மூண்டெழுந்த = கூடிக்கிளம்பிய, கார் மாற்றும் = மேகத்தின் நிறத்தை மாற்றுவிக்கின்ற, செம் கை = சிறந்த கையையும், கடகரி = மதம் பொழிகின்ற யானையையுமுடைய, வாணு = எகம்பவாணனே! பாண்டியனைப் பேர் மாற்றி = பாண்டியன் கீர்த்தியை மாறும்படி செய்ய, பாணர்க்கு அரசு அளித்த = பாணர்கட்கு அரசர்களது விருதுகளைக் கொடுத்த, ஆண்டகை என்று உன்னை அறியேனே = வீரன் நீ என்று நான் தெரியமாட்டேனே? உனது பேர் மாற்றுவது அரிதோ பேசு = உன்னுடைய பேரை மாற்றுவது கடினமோ கூறுக! எ - று.

குறிப்பு:—எகம்பவாணனென்பவன் தனக்கு நன்றி செய்த ஏகனென்பவன் பெயரை முதலிலும், தகப்பன் பெயராகிய வாணன் என்பதை இறுதியிலும், தனது ஆசிரியராகிய கம்பர் பெயரை நடுவிலும் வைத்துத் தன் பெயரை அழைத்துக்கொண்டான் என்ப. வாணன் ஒருவனுக்குப் பாண்டிய அரசு கொடுத்ததாகவுங் கூறுப.

33. பாணன் மதுரைப் பதியாள வைத்தபிரான்
வாணர் புகழவரு மேகம்ப—வாணன்
கரும்போ தகமேநின் கால்பணிவேன் மீண்டு
வரும்போ தகமே வரின்.

உரை:—பாணன் மதுரைப் பதியாள வைத்த பிரான் = பாணனொருவரை மதுரையூரில் ஆட்சி செய்யும்படி ஏற்பாடு செய்த வள்ளலாகிய, வாணர் புகழவரும் எகம்பவாணன் = பாவாணர் இகழாது எப்போதும் புகழும் எகம்பவாணனுடைய, கரும்போ தகமே = பெரிய யானையே, மீண்டு வரும்போது அகமே வரின் = மீளப்போகுங் காலத்தில் என் வீட்டிற்கு வந்தால், நின் கால் பணிவேன் = உன்னைக் கும்பிடுவேன், எ - று.

குறிப்பு:—இச்செய்யுள் வாணனை விரும்பிய ஒருத்தி அவன் யானையைப் புகழ்ந்து பாடியது.

34. என்சிவிகை யென்கவிகை யென்றுவச மென்கவசம்
என்பரியீ தென்கரியீ தென்பரே—மன்கவன
மாவேந்தன் வாணன் வரிசைப் பரிசுபெற்ற
பாவேந்த ரைவேந்தர் பார்த்து.

உரை:—மன்கவனம் மாவேந்தன் வாணன் = அதிவிரைவினையுடைய குதிரையோட்டுவதில் வல்லவனாகிய எகம்பவாணன் மன்னனுடைய, வரிசை பரிசுபெற்ற பாவேந்தரை = தகுதிபற்றிய வெகுமதியை ஏற்றுவரும் பாவில்

வல்ல புலவரை, வேந்தர் பார்த்து = மன்னர்கள் கண்டு, ஈது என் கவிகை = இது என் குடை, இது என் சிவிகை = இது என்னுடைய பல்லக்கு, என் கவசம் = இது என்னுவடய அங்கி, என் துவசம் = இது என் கொடி, என்கரி ஈது = இது என்னுடைய யானை, என்பரி ஈது = இது என்னுடைய குதிரை, என்பரே = என்று (புலவர்கள் வைத்திருக்கின்ற குடை முதலியவற்றைப் பார்த்துக்) கூறுவார்கள், எ - று.

குறிப்பு:—ஏகம்பவாணன் பிற அரசர்களை வென்று அவர்களிடம் கொண்ட குடை முதலியவைகளைப் பாவலர்க்குப் பரிசாகக் கொடுத்தா னென்பது கருத்து.

35. சேற்றுக் கமலவயற் றென்னுறை வாணனையான்
சோற்றுக் கரிசிதரச் சொன்னக்கால்—வேற்றுக்
களிக்குமா வைத்தந்தான் கற்றவர்க்குச் செம்பொன்
அளிக்குமா றெவ்வா றவன்.

உரை:—சேற்றுக் கமலவயல் தென் ஆறை வாணனை = வயலிலுள்ள சேற்றில் தாமரைகள் பூக்கும் அழகிய ஆறைப்பதியில் அல்லது ஆற்றூரில் வீற்றிருக்கும் ஏகம்பவாணனை, யான் சோற்றுக்கு அரிசிதரச் சொன்னக் கால் = சோறு சமைத்தற்கு அரிசிவேண்டுமென்று நான் கேட்டபொழுது, வேற்றுக் களிக்குமாவைத் தந்தான் = அதற்கு மாறாக களிகிண்டுவதற்குரிய மாவினை (அல்லது களிப்புடைய யானையை) அளித்தான், இவன் கற்ற வர்க்கு செம்பொன் அளிக்குமாறு எவ்வாறு = படித்தவர்கட்கு இவன் செம் பொன்னைத் தருவதெப்படி ? எ - று.

ஏகம்பவாணன்பாற் பரிசு பெற்றுவந்த புலவன் மற்றொரு புலவனுக்கு அடையாளஞ் சொன்னதுபோலப் பாடியது.

36. தேருளப்புரவி வாரணத்தொகுதி திறைகொணர்ந்து வருமன்னநின்
தேசமேதுனது நாமமேது புகல்செங்கையாழ் தடவுபாணகேள்
வாருமொத்த குடிநீரு நாமுமக தேவனுறை நகர்காவலன்
வாணபூ பதிமகிழ்ந் தளிக்கவெகு வரிசைபெற்று வருபுலவன்யான்
நீருமிப் பரிசுபெற்று மீளவர லாகுமேகுமவன் முன்றில்வாய்
நித்திலச்சிகர மாடமாளிகை நெருங்குகோபுர மருங்கெலாம்
ஆருநிற்கு முயர்வேம்பு நிற்கும்வளர் பனையுநிற்கு மதனருகிலே
அரசுநிற்கு மரசைச்சுமந்த சிலவத்திநிற்கு மடையாளமே.

உரை:—தேர் = தேர்களையும், உளப்புரவி = பிடரி மயிருடைய குதிரைகளையும், வாரணத்தொகுதி = யானைத் திரள்களையும், திறை கொணர்ந்துவரும் மன்ன = கப்பமாகப் பெற்று வருகின்ற வேந்தனே! (என்று ஒரு புலவனை நோக்கி), தேசம் எது—உனது நாடு எது, உனது நாமம் எது = உனது பெயரென்ன, புகல் = கூறுக (என்று ஒரு பாணன்

கேட்கப் புலவன் சொல்வதாவது) செங்கையாழ் தடவு பாண கேள்= செங்நிறமான கையினுலே யாழினைத் தடவுகின்ற பாணரே கேட்பீராக! வாரும்=வருக! ஒத்தகுடி நீரும் நானும்=காமிருவரும் ஒரே குலத்தான், மகதேவன் ஆறை நகர் காவலன்=மகதேவனுகிய ஆற்றூர்ப் பதிக்குத் தலை வனுகிய, வாணபூபதி=ஏகம்பவாணனுகிய மன்னன், மகிழ்ந்து அளிக்க= விரும்பித் தர, வெகு வரிசைபெற்று வருபுலவன் யான்=மிகுந்த வெகுமதி களைக் கைக்கொண்டு வருகின்ற புலவன் நான், நீரும் இப்பரிசுபெற்று மீள வரலாகும்=நீரும் இவ்வகையான வெகுமதிகளை வாங்கிக்கொண்டு திரும்பி வரலாம், அவன் முன்றில் வாய் ஏகும்=அவனது முற்றத்திற்குப் போய் வாரும், அடையாளம்=அவனுடைய முற்றத்திற்கு அறிகுறி யாதெனில், நித்திலச் சிகரம் மாடமாளிகை நெருங்கு கோபுரம் மருங்கெலாம்=முத்தினு லாகிய முடிகளையுடைய மாடங்கள் பொருந்திய பெரிய வீடுகளில் நெருக்க மான கோபுரப் பக்கங்களிலெல்லாம், ஆரும் நிற்கும்=ஆத்திமரம் நிற்கும், உயர் வேம்பும் நிற்கும்=நீண்ட வேப்பமரங்கள் வளர்ந்திருக்கும், வளர் பனையும் நிற்கும்=பெரிய பனைமரமும் நிலைபெறும், அதன் அருகிலே=அதன் பக்கத்திலே, அரசு நிற்கும்=அரசமரமுண்டு, அரசைச் சுமந்து சில அத்தி நிற்கும்=அந்த அரசமரத்தைச் சுமக்கும் சில அத்திமரங்களும் உள்ளன, எ-று.

குறிப்பு:—ஆர், வேம்பு, பனையென்பன சோழ பாண்டிய சேரர்களையும், அரசமர மென்பது பிற அரசர்களையும், அத்தியென்பது யானைகளையும் குறிப் பாக உணர்த்தும்.

37. அலங்கலணி மார்பனு றையர்கோன் வாணன்
விலங்கு கொடுவருக வென்றுன்—இலங்கிழையீர்
சேரற்கோ சோழற்கோ தென்பாண்டி நாடாளும்
வீரற்கோ யார்க்கோ விலங்கு.

உரை:—இலங்கிழையீர்=விளங்குகின்ற அணிகள் பூண்ட பாங்கியரே! அலங்கல் அணி மார்பன்=மாலைதரித்த மார்பினையுடையவனுகிய, ஆறையர் கோன் வாணன்=ஆற்றூரிலுள்ளவர்கட்குத் தலைவனுகிய ஏகம்பவாணன், விலங்கு கொடு வருக என்றுன்=தளை கொணரும்படி ஏவினன், விலங்கு= அத்தளை, சேரற்கோ = சேரனுக்காகவோ, சோழற்கோ = சோழனுக்கா கவோ, தென்பாண்டி நாடாளும் வீரற்கோ=தெற்கேயுள்ள பாண்டி நாட்டை யாட்சி செய்கின்ற பாண்டியனுக்கோ, யார்க்கோ=வேறு யாருக்கோ தெரியவில்லை, எ-று.

38. வாணன் புகழ்க்கெல்லை வாழ்த்துவோர் நாவெல்லை
வாணன் செயத்தெல்லை மண்ணெல்லை—வாணன்
படைக்கெல்லை திக்கெல்லை பைந்தமிழ்தேர் வாணன்
கொடைக்கெல்லை யேற்பவர்தங் கோள்.

உரை :—வாணன் புகழ்க்கு எல்லே வாழ்த்துவோர் நா எல்லே=எகம்ப வாணனது புகழுக்கு அளவு யாதெனில் புகழ்வோருடைய சொல்லாற்றல் அளவே யாகும், வாணன் செயத்து எல்லே மண் எல்லே=எகம்பவாணனது வெற்றியினளவு நிலவுலகத்தினளவே யாகும், வாணன் படைக்கு எல்லே திக்கு எல்லே=எகம்பவாணனுடைய சேனையினளவு திசைகளினளவே யாகும், பைந்தமிழ் தேர் வாணன் கொடைக்கு எல்லே=புதுமை மாறாத தமி ழாராய்ச்சியுடைய எகம்பவாணனுடைய ஈகையினளவு, ஏற்பவர்தம் கோள்= ஏற்றுக்கொள்பவருடைய ஆற்றலே எ - று.

பொன்னிக்குக் கம்பரெழுதிக்கொடுத்த முறிச்சீட்டைச் சோழன் கம்பருக்குக் காட்டியபோது கம்பர் இது பொன்னிக்கல்ல இலக்குமிக் கென்று காட்டியது.

39. கன்னிக்கலச முலையாடன்
காமக்குரோத பஞ்சத்தில்
என்னுக்கெழுதிக் கொடுத்தேனென்
றியம்பக்கேளா யிகல்வேந்தே
மின்னுக்கெழுதி யிடைக்கெழுதி
வேண்டும்பொருட்கு மெழுதியருட்
பொன்னுக்கெழுதிக் கொடுத்தேன்யான்
பொய்யுமுரையேன் புகழ்வேந்தே.

உரை :—இகல் வேந்தே=பகையை வெல்லும் அரசனே! கன்னி கலச முலையாள்தன் காமக்குரோத பஞ்சத்தில்=இளமையான குடம் போன்ற தனங்களையுடைய விருப்பும் வெறுப்பும் நிலைபெறுத குறைவான நிலையில், என்னுக்கு எழுதிக் கொடுத்தேன் என்று இயம்பக் கேளாய்=என் இதை யெழுதிக் கொடுத்தாயென்று கேட்பாயானால் சொல்லுகிறேன், அருள் பொன்னுக்கு=அருள் சுரக்கக்கூடிய திருமகளின், மின்னுக்கு எழுதி= ஒளியைப்பற்றி யெழுதியும், இடைக்கு எழுதி=இடையைப்பற்றி யெழுதி யும், வேண்டும் பொருட்கும் எழுதி=விரும்புகின்ற பொருளைக் கேட் டெழுதியும், கொடுத்தேன் யான்=நான் சமர்ப்பித்தேன், பொய்யும் உரை யேன் புகழ் வேந்தே—கீர்த்தியையுடைய மன்னனே நான் பொய் சொல்ல மாட்டேன், எ - று.

அதற்குச் சோழராஜன் சொன்னது.

40. போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடில்
தூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினு மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும்பாவலர் கொடிய ராவரே.

உரை :—பாவலர்=பாடவல்ல புலவர்கள், போற்றினும் போற்றுவர்= துதிக்கக் கருதினால் துதிப்பர், பொருள் கொடாவிடில்=பணம் தாவிட்

டால், தூற்றினும் தூற்றுவர் = குறை கூறக் கருதின் குறைகூறுவர், சொன்ன சொற்களே மாற்றினும் மாற்றுவர் = கூறிய வார்த்தைகளின் கருத்தை மாற்றி யுரைத்தாலும் உரைப்பர், வன்கணாளர்கள் = (ஆதலால்) அவர்கள் கொடுமையுடையவர்கள், கூற்றினும் கொடியவர் ஆவர் = எமனைப் பார்க்கினும் பொல்லாதவராவர், எ - று.

சோழராஜன் என் தேகத்தை விட்டுப் போவென்று சொல்லியபோது கம்பர் சொன்னது.

41. மன்னவனு நீயோ வளநாடு முன்னதோ
உன்னையறிந்தோ தமிழை யோதினேன் — என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு.

உரை :—மன்னவனும் நீயோ = உலகத்தி லரசனுயிருப்பவன் நீ ஒருவன்தானே, வள நாடும் உன்னதோ = செழிப்புடைய நாடு உன் நாடொன்றுதானே, உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன் = உன்னைத் தெரிந்த பிறகோ நான் தமிழைக் கற்றேன், குரங்கு ஏற்றுக் கொள்ளாத கொம்பு உண்டோ = குரங்கு தாவும்போது அதனைத் தாங்காத மரக்கிளை யுளதோ, (அதுபோல) என்னை விரைந்து ஏற்றுக் கொள்ளாத வேந்தனுண்டோ = என்னைச் சீக்கிரத்தில் வரவேற்று மதியாத மன்னனிருக்கின்றனனே (இல்லையென்றபடி), எ - று.

இதுவுமது

42. காத மிருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ — மேதினியில்
கொல்லிமலைத் தேன்சொரியுங் கொற்றவா நீமுனிந்தால்
இல்லையோ வெங்கட் கிடம்.

உரை :—தேன் சொரியும் கொல்லிமலைக் கொற்றவா = தேனை வாளமாகச் சிந்துகின்ற கொல்லிமலையினையுடைய அரசனே! காதம் இருபத்து நான்கு ஒழிய = இருபத்துநான்கு காததூரமுள்ள சோழநாடு தவிர, காசினியை = எஞ்சிய நிலப்பகுதியை, ஓதக்கடல் = முழங்குகின்ற சமுத்திரமானது, கொண்டு ஒளித்ததோ = அடித்துக்கொண்டு போய்விட்டதோ, நீ முனிந்தால் = நீர் சீற்றங் கொண்டாயானால், மேதினியில் இல்லையோ எங்கட்கு இடம் = உலகத்தில் நாங்கள்போய்த் தங்குவதற்குத் தலம் பிறிதில்லையோ? எ - று.

கம்பர் கொங்குதேசத்திற்குப்போனபோது அவ்வூரிலுள்ளோர் இவருக்கு மரியாதை செய்யாமையால் அந்நாட்டையும் அந்நாட்டவரையு மிழித்துப் பாடியது.

43. நீரெலாஞ் சேற்றுநாற்ற நிலமெலாங் கல்லுமுள்ளும்
ஊரெலாம் பட்டிதொட்டி யுண்பதோ கம்பஞ்சோறு

பேரெலாம் பொம்மன்திம்மன் பெண்களோ நாயும்பேயும்
காருலாங் கொங்குநாட்டைக் கனவிலு நினைக்கொணதே.

உரை:—நீரெல்லாம் சேற்று நாற்றம்=(கொங்கு தேசத்தில்) தண்ணீரெல்லாம் சகதியின் கெட்டவாசனை வரக்கூடியது, நிலமெலாம் கல்லும் முள்ளும்=பூமியெங்கும் காடு முரடான கல்லும் முள்ளும் நிறைந்திருக்கும், ஊரெலாம் பட்டி தொட்டி=அங்குள்ள ஊர்களெல்லாம் சிறியனவாய் பட்டி தொட்டியென்னும் பெயரினையுடையன, உண்பதோ கம்பஞ்சோறு=அங்குள்ளவர்கள் சாப்பிடும் அன்னம் கம்பங்கூழ்சாதம், பேரெல்லாம் பொம்மன் திம்மன்=அங்குள்ள மக்கள் பெயர்களெல்லாம் அநாகரிகமான பொம்மன் திம்மன் என்பவைகளாம், பெண்களோ நாயும் பேயும்=அங்குள்ள மாதர்கள் நாய் சூரைப்பதுபோலக் கூக்குரலிட்டுக்கொண்டு பேய்போல விரித்த தலையுடன் திரிவார்கள், கார் உலாம் கொங்கு நாட்டை=முகில்கள் உலாவுகின்ற கொங்கு நாட்டினை, கனவிலும் நினைக்க ஒணதே=சொப்பனத்திலும் எண்ண முடியாது, எ - று.

கம்பர் வன்னியரை நிந்தாஸ்துதியாகப் பாடியது.

44. குமிண்டியும் பண்ணையுங் கூட முளைக்கின்ற கொல்லைக்கம்பை
நிமிண்டியு முதியுந் தின்ன வல்லோரிந்த நீணிலத்தில்
துமிண்டியங் காய்தன்னை மொட்டையம் பாலெய்யுஞ் சூரர்கண்
நமிண்டியிற் பள்ளிக ளத்தனை பேர்களு நல்லவரே. [டீர்

உரை:—குமிண்டியும் பண்ணையும் கூட முளைக்கின்ற கொல்லை=குமுட்டித்தழையும் வயற்கீரையும் சேர்த்துண்டாகின்ற தோட்டங்களில் வீளையும், கம்பை=கம்பங்கதிரை, நிமிண்டியும் ஊதியும் தின்ன வல்லோர்=கையினுற் கசக்கியும் வாயினுலூதியும் அருந்தக்கூடியவர்கள், இந்த நீண்நிலத்தில்=இந்த நீண்ட பூமியில், துமிண்டியங் காய்தன்னை=துமிண்டிக்காயை, மொட்டை அம்பால் எய்யும்=மழுங்கிய பாணத்தை வீசிப் பறிக்கின்ற, சூரர்=தைரியசாலிகளிருக்கும், நமிண்டியில்=நமிண்டியென்னும் பதியிலிருக்கும், பள்ளிகள் அத்தனைபேர்களும் நல்லவரே=வன்னியர்கள் யாவரும் தக்கவர்களே, கண்டீர்=ஜனங்களே இதைத் தெரிந்து கொள்ளுங்கள்!, எ - று.

கம்பர் பிராமணன் வீட்டிற்கும், வியாபாரி வீட்டிற்கும்,
வாணியன் வீட்டிற்கும் போனபோது அவர்க
ளுபசரிக்காமையால் அவர்களை நிந்தித்தும்
வேளாளரைப் புகழ்ந்தும் பாடியது.

45. செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே—முட்டிபுகும்
பார்ப்பா ரகத்தையெட்டிப் பாரோமே யெந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்.

உரை :—செட்டிமக்கள் வாசல் வழிச் செல்லோமே=வியாபாரிகளிருக்கும் தெருவழியாக நாம் போகமாட்டோம், செக்காரப் பொட்டிமக்கள் வாசல் வழிப் போகோமே=செக்கோட்டிப் பிழைக்கும் வாணியர் தெருவழியே செல்லோம், முட்டிப்புகும் பார்ப்பார் அகத்தை எட்டிப் பாரோமே=ஐயமேற்றுண்ணும் அந்தண நிலத்தை ஒரு சிறிதும் பார்க்கப் போவதில்லை, எக்காளும் காப்பாரே வேளாளர்=எந்த நாளிலும் எம்மைக் காப்பாற்றுகின்றவர் வேளாள மக்களே ஆவர், எ - று. காண் - அசை.

செல்லனென்னும் வேளாளன் மனைவி கம்பஞ் சோறிட்டதைப் புகழ்ந்து பாடியது.

46. கல்லங்காடு தனில்விளையாக் கடுகநிலத்திற் முன்முளையா
அல்லங்கிருந்த கருங்கூந்த லணங்குக்கணங்கு போலாவாள்
செல்லன்றேவி மனைகடொறுந் தேடித்திரிந்துங் காணுத
நெல்லஞ்சோறே கம்பஞ்சோற்றினை நீசுமந்து திரிவாயே.

உரை :—கல்லங்காடுதனில் விளையா=பாறைக்காட்டில் உண்டாகாததும், கடிய நிலத்தில் தான் முளையா=இறுகின பூமியில் விளையாததாய், அல் அங்கு இருந்த கரும் கூந்தல்=இருள்போன்ற கருநிறமுடைய தலைமயிரைக் கொண்டிருந்த, அணங்குக்கு அணங்குபோல் ஆவாள்=தேவமாதையும் தன் அழகால் வென்றவளாகிய, செல்லன் தேவி=செல்லனென்னும் வேளாளனுடைய இல்லாள், மனைகள்தோறும் தேடித் திரிந்தும் காணுத=பக்கத்திலுள்ள வீடுகள்தோறும் போய்க் கேட்டும் கிடைக்கப் பெறாத, நெல்லஞ்சோறே=நெல் சாதமே, கம்பஞ் சோற்றினை நீ சுமந்து திரிவாயே=அவள் வீட்டிலுள்ள கம்பங்கூழ்ச் சாதத்திற்கு நீ தோற்றுப் போனதாதலின் அதனை நீ தூக்கிச் சுமந்து அலைவாயாக, எ - று.

இதுவுமது.

47. மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர் நோக்குங்கை
ஆழி தரித்தே யருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கை யென்று நிலைக்குங்கை நீடுழி
காக்குங்கை காராளர் கை.

உரை :—காராளர் கை=மேகத்தை யாளுகின்ற உழவர்கள் கையானது, மேழி பிடிக்கும் கை=கலப்பையைத் தாங்கும் கையாகும், வேல் வேந்தர் நோக்கும் கை=வேலாயுதத்தை யுடைய மன்னர்கள் விரும்பிப் பார்க்கும் கையாகும், ஆழி தரித்தே அருளும் கை=மோதிரமணிந்து உதவி செய்யும் கையாகும், சூழ்வினையை நீக்கும் கை=நம்மைச் சூழ்ந்த தீவினையால் வரும் தரித்திர துன்பத்தை யொழிக்கும் கையாகும், என்றும் நிலைக்கும் கை=எப்போதும் அழியாதிருக்கும் கையாகும், நீடுழி காக்கும் கை=நெடுங்காலம் உயிர்களைக் காப்பாற்றும் கையாகும், எ - று.

வேலியென்பவள் அநேகருக்கு மோசமாகச் சுவர்வைக்கச்சொல் லிப் பிர்மராக்ஷியால் விழச்செய்து கூலிகொடாமலனுப்புகிற வழக்கத்தையறிந்து கம்பர் பாடியது.

48. மற்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட் டிங்குவந்து
சொற்கொண்ட பாவின் சுவையறிவா ரிங்கிலையே
விற்கொண்ட வாணுதலாள் வேலிதருங் கூலி
நெற்கொண்டு போமளவு நில்லாய் நெடுஞ்சுவரே.

உரை:—மல்கொண்ட திண்புயத்தான் = மல்லுத்தத்தில் வல்ல அல்லது வளம்பொருந்திய வலிய தோள்களையுடைய மன்னனது, மாநகர்விட்டு இங்கு வந்தேன் = பேரூரை யகன்று இந்த விடத்திற்கு வந்து சேர்ந்தேன், சொல் கொண்ட பாவின் சுவை அறிவார் இங்கு இல்லையே = நல்ல மொழிகளமைந்த கவியின் நயத்தைத் தெரிந்தவர்கள் இந்த விடத்திலில்லையே, வில்கொண்ட வாள் நுதலாள் வேலிதரும் = வில்லைப்போன்ற வடிவுள்ள ஒளியுள்ள நெற்றியினளாகின்ற வேலி யென்பாள் தருகின்ற, கூலி நெல் கொண்டு போம் அளவும் = கூலியாகிய நெல்லை யானெடுத்துக்கொண்டு போகும் வரை, நெடும் சுவரே நில்லாய் = நீண்ட சுவரே நீ விழாமலிருப்பாயாக, எ - று.

சேரனுடைய மனைவி அரசன் சால்வையைக் கம்பர் போர்த்துக் கொண்டிருந்ததால் அரசனென்றெண்ணிக் கூடப்படுத்துக் கொண் டிருந்தபோது பாடியது.

49. தேரையார் செவ்விளநீ ருண்ணப் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவார் நாமவரை நத்தாமை
கோரைவாய்ப் பொன்சொரியுங் கொல்லிமலை நன்னுடா
ஊரைவாய் மூடவுலை மூடிதா னிலையே.

உரை:—கோரைவாய்ப் பொன் சொரியும் கொல்லிமலை நன்னுடா = கோரைச் செடியின் அடிகளிலே ஆறு பொன்னைச் சிதறுகின்ற கொல்லி மலை இருக்கும் வளமான தேசத்திற்கு அதிபனே!, தேரையார் செவ்விளநீர் உண்ணப் பழி சுமப்பர் = தேரைகள் சிறந்த இளநீர்க்காய்க்குளிருந்தும் அதனை யருந்தாமலே குறைகூறப்படும், நாரியார் நாமவரை நத்தாமை தாமறிவார் = அரசன் தேவியார் அருகிருந்தும் நாம் அவர்பால் ஆசை வையாமையைத் தாமே தெரிவார், (எனினும்) ஊரை வாய் மூட உலை மூடி தான் இல்லையே = ஊரிலுள்ளார் பேச்சைத் தடுப்பதற்கு உலையை மூடும் பலகையைப் போன்ற தடைக் கருவி யாதுமில்லை, எ - று.

சோழராஜன் பெண்ணை அப்பிகாபதி கிறப்பித்துப் பாதிப்பாட்டு பாட மற்றப்பாதியுங் கம்பர் பாடியது.

50. இட்டடி நோவ வெடுத்தடி கொப்புளிக்க
வட்டில் சுமந்து மருங்கசையக்—கொட்டிக்

கிங்கோ கிழங்கென்று கூறுவா ஞவில்
வழங்கோசை வையம் பெறும்.

உரை :—இட்ட அடி நோவ = பூமியில் வைத்த பாதம் வருந்தவும், எடுத்த அடி கொப்புளிக்க = நிலத்திலிருந்து தூக்கிய பாதம் வெப்பத்தினால் கொப்புள முடையதாகவும், வட்டில் சுமந்து மருங்கு அசைய = உண்ணும் கலத்தை இடையானது தாங்கி யலையவும், கொட்டிக் கிழங்கோ கிழங்கு என்று கூறுவாள் = கொட்டிக் கிழங்கு விலைக்கு வேண்டுமா என்று உரத்துக் கேட்பவளுடைய, நாவில் வழங்கு ஓசை = வாயிலிருந்து வரும் இனிய ஒலி யானது, வையம் பெறும் = உலகமுற்றும் விலைபோகப் பெறக் கூடியது, எ-று.

அரசன்-அம்பிகாபதியைப் பார்த்துச் சிற்றின்பமாகப்பாடாமல் நாறு கவி சுவாமி விஷயமாகப்பாடினால் விட்டுவிடுகிறோமென்று சொல்லினன்; அவ்வாறே பாடிக்கொண்டு வரும்போது ராசன்புத்திரி மகறவாக விருந்து [illegible] எண்ணிக்கொண்டு வந்து-99 ஆனதைத் தப்பாகக் காப்புடன் 100-என்று நினைத்து எதிர்ப்பட்ட போது பாடியது.

51. சற்றே பருத்த தனமே குலுங்கத் தரளவடந்
துற்றே யசையக் குழையூச லாடத்து வர்கொள்செவ்வாய்
நற்றே னெழுக நடன சிங்கார நடையழகின்
பொற்றே ரிருக்கத் தலையலங் காரம் புறப்பட்டதே.

உரை :—சற்றே பருத்த தனமே குலுங்க = சிறிது பருத்த இள முலைகள் அசையவும், தரளவடம் துற்றே அசைய = முத்துச்சரடு நெருங்கி யாடவும், குழை ஊசலாட = தோடுகள் அங்குமிங்கு மாடவும், துவர்கொள் செவ்வாய் = பவளம்போன்ற சிவந்த வாயிலிருந்து, நல்தேன் ஒழுக = தேன் சிந்தவும், நடன சிங்கார நடையழகின் = நிருத்தம்போன்ற நயமான நடை யுடைய அழகியின், பொன் தேர் இருக்க = பொன் தேர் போன்ற அல்குல் மறைந்திருக்கவும், தலையலங்காரம் புறப்பட்டதே = தலையினழகு வெளியே தோன்றியது, எ-று.

அம்பிகாபதி தனக்குத் தண்டனை கிடைத்தபோது வருந்திப் பாடியது.

52. வீரமுண்டோ மதன்கை யம்பினில் வெந்து வீழுகைக்கு
நேரமுண்டோ வஞ்சி நேர்பட்ட காலையில் நெஞ்சைவிட்டப்
பேரமுண்டோ சொல வொண்ணுத காமப் பெருநெருப்புக்
கீரமுண்டோ வையனே யென்னபாவ மினிச் சொல்வதே.

உரை :—ஐயனே = தலைவனே !, மதன் கை அம்பினால் வெந்து வீழ் கைக்கு வீர முண்டோ = மன்மதனுடைய கையிலிருந்து செலுத்தப்பட்ட அம்பின் வலுமையால் வாடி வீழ்ந்தார்க்கு வீரம் நிலைபெறுமா ?, வஞ்சிநேர்

பட்ட காலையில் நேரமுண்டோ = பெண்ணின் காட்சி நேர்பட்டபொழுது (தடையை நினைப்பதற்கு) பொழுதுண்டா ?, நெஞ்சை விடப் போமுண்டோ = உள்ளத்தை யளிப்பதன்றி மற்ற வழக்குக்கு இடமுண்டோ ?, சொல்ல ஒண்ணுத காமப் பெருநெருப்புக்கு ஈரமுண்டோ = அளவுகூற முடியாத காதல் பெருந்தீயில் ஈரம் நிலைபெறுமா ?, என்ன பாவம் = குற்றம் யாதிருக்கிறது, இனிச் சொல்வதே = இதற்குமேற் கூறக் கூடியது யாது, எ — று.

அம்பிகாபதி அரசன் மகளைப் புகழ்ந்து பாடியது.

53. உருகி யுடல்கருகி யுள்ளீரல் பற்றி
எரிவ தவியா தென்செய்கேன் — வரியரவ
நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

உரை:—வரி அரவம் நஞ்சிலே தோய்ந்த = வரிகளையுடைய பாம்பினது விடத்திலே தோய்ந்த, நளின விழி = தாமரை போன்ற கண்ணையுடைய, பெண் பெருமாள் = பெருமாட்டி, நெஞ்சிலே இட்ட நெருப்பு = உள்ளத்திலே தோற்றுவித்த (காதல்) தீயினாலே, உருகி = உள்ளங் குழைந்து, உடல் கருகி = உடம்பு வெப்பமாகி, உள் ஈரல் பற்றி எரிவது = உள்ளே இருக்கின்ற ஈரலில் அது பொருந்தி எரிகின்றது, அவியாது = அது தணிவதில்லை, என் செய்கேன் = அதனை யொழிக்கும் உபாயமாக எதனை நாடுவேன், எ—று.

இதுவுமது.

54. மய்வடிவக் குழலியர்தம் வதனத்தை
நிகரொவ்வா மதியே மானே
செய்வடிவைச் சிற்றிடையைத் திருநகையை
வேய்த்தோளைத் தெய்வ மாக
இவ்வடிவைப் படைத்தவடி வெவ்வடிவோ
.யானறியே னுண்மை யாகக்
கய்படியத் திருமகளைப் படைத்திவளைப்
படைத்தனனற் கமலத் தோனே.

உரை:—மானே = மான் போன்ற பார்வையுடைய மாதே ! மதிமய் வடிவக் குழலியர்தம் வதனத்தை நிகர் ஒவ்வா = சந்திரன் கருநிறக் கூந்தலையுடைய பெண்களின் திருமுகத்திற்குச் சமமாகாது, செய் வடிவை = அவர்களுடைய சிவந்த மேனியை, சிற்றிடையை = சிறிய இடையையும், திருநகையை = அழகான பற்களையும், வேய்த்தோளை = மூங்கில் போன்ற மென்மையான தோள்களையும், தெய்வமாக = திவ்வியமாக உடைத்தாயிருக்கும்படி, இவ்வடிவை = இந்த உருவத்தை, படைத்த வடிவு = உண்டாக்கிய தெய்வம், எவ்வடிவோ = எவ்வகையான வடிவத்தையுடையதோ, யான் அறியேன் = எனக்குத் தெரியவில்லை, நல் கமலத்தோன் = அழகிய

தாமரைப் பூவிலிருக்கின்ற அயன், உண்மையாக=மெய்யாகவே, கைபடிய=கை பழகுவதற்கு, திருமகளைப் படைத்து=இலக்குமியை யுருவாக்கிப் பின், இவளைப் படைத்தனன்=இவளை யுண்டாக்கி யிருத்தல் வேண்டும், எ - று.

அதைக் கண்டு அரசன் ஒட்டக்கூத்தனுக்குச் சொல்லியது.

55. கண்டீரோ காணம்பி காபதி செயும்பிழையைக்
கண்டீரோ நம்மீதிற் கள்ளமில்லை—உண்டோகாண்
ஆற்றாது கோப மடங்கவிவ னேயொட்டக்
கூத்தாவென் செய்திடலாங் கூறு

உரை:—ஒட்டக்கூத்தா=ஒட்டக்கூத்தரே! அம்பிகாபதி செயும் பிழையைக் கண்டீரோ=அம்பிகாபதி செய்த குற்றத்தைக் கவனித்தீரா? நம்மீதில் கள்ளம் இல்லை=நம்மிடத்திற் கலங்கமில்லை, உண்டோகாண்=களங்க மென்னிடத்திலுண்டாஞல் கூறும், கோபம் ஆற்றாது=என்னுடைய சினம் தணியாதிருப்பது, அடங்க=அது தணியும்படி, இவனை என் செய்திடலாம் கூறு=இவனுக்கு என்ன தண்டனை விதிக்கலா மென்று தெரிவிப்பாயாக! எ - று.

அதற்கு ஒட்டக்கூத்தர் சொல்லியது.

56. பனிப்பகையோன் மாமரபின் பார்த்திபனே சோழா
உனக்கினியான் சொல்லுவதொன் றுண்டோ—கனத்த
பிழைசெய்தா னன்னைக்குப் பின்பார்க்க வேண்டாம்
கழுவினிலே யேற்றிவிடல் காண்.

உரை:—பனிப்பகையோன் மாமரபின் பார்த்திபனே சோழா=சூரியனது பெரிய வமிசத்தில் தோன்றிய பெரிய அரசனுகிய சோழனே! உனக்கு இனியான் சொல்வது ஒன்று உண்டோ=இனிமே லுனக்கு தெரியாததாய் யான் கூறக்கூடிய தொன்றிருக்கிறதா? அன்னைக்குக் கனத்த பிழை செய்தான்=தாய்போன்ற நம்முடைய மகளுக்குப் பெரிய குற்றத்தை இழைத்தான், பின் பார்க்கவேண்டாம்=இனி இரக்கங்கொள்ள வேண்டாம், கழுவினிலே ஏற்றிவிடல் காண்=இவனைக் கழுவேற்றுதலே தக்க தண்டனையாகும், எ - று.

அம்பிகாபதியை அரசன் யானையின்காலி லிடறச் சொன்னபோது பாடியது.

57. வெங்கண் சிவந்து வெடிவான் முறுக்கி வெகுண்டெழுந்தென்
அங்கம் பிளக்க வருங் கவிறேயன் றிரணியனைப்
பங்கம் படவுரங் கீண்டே யுதிரம் பருகுநர
சிங்க மிருக்குதுகாண் கெடுவா யென்றன் சிந்தையிலே.

உரை:—வெங்கண் சிவந்து=வெப்பமான கண்கள் கோபத்தால் சிவக்கப்பெற்று, வெடிவால் முறுக்கி=இறுகி வெடிப்பது வாலை முறுக்கிக்

கொண்டு, வெகுண்டு எழுந்து=சீற்றத்தோடு புறப்பட்டு, என் அங்கம் பிளக்க வரும் களிறே=என் உடலைக் கூறுசெய்ய வருகின்ற யானையே! அன்று=முற்காலத்தில், இரணியனை=இரணியனென்னும் அசுரனை, பங்கம் பட உரம் கீண்டே=மானக்குறைவாய்ச் சாகும்படி அவனது மார்பைக் கீறி, உதிரம் பருகும்=அவனுடைய இரத்தத்தை யுட்கொண்ட, நரசிங்கம்=நரசிங்கப்பெருமாள், என்றன் சிந்தையிலே இருந்து=என்னுள்ளத்திலே வீற்றிருக்கிறார், கெடுவாய் காண்=நீ என்னிடத்தில் வந்தால் இறந்தொழி வாய், எ - று.

கம்பர் பாடியது.

58. இந்நா ளிதுவினையு மென்றெழுத்துத் தானிருக்க
என்னுலே யாவதொன்று மில்லையே—உன்னுலே
வந்ததுதா னப்பா மகனே தவிர்ப்பவரார்
முந்தையினீ செய்தவினை யே.

உரை:—இந்நாள் இது வினையும் என்ற எழுத்துத் தானிருக்க=இந்த நேரத்தில் இன்ன வினைப்பயன் தோன்றுமென்று அயன் எழுதிய வெழுத்து தலையி லிருக்கும்பொழுது, என்னுலே ஆவது ஒன்றுமில்லையே=என்னுலே உனக்குச் செய்யக்கூடிய உதவிகள் யாதுமில்லையே, அப்பா மகனே உன்னுலே வந்தது தான்=இப்போது நேர்ந்த தீமை நீயே விளைவித்துக் கொண் டதுதான், முந்தையில் நீ செய்த வினை=முந்திய சென்மத்தில் நீ செய்த கருமத்தின் பலனை, தவிர்ப்பவர் யார்=ஒழிக்கக் கூடியவர்கள் யார்? எ - று.

அதற்கு அம்பிகாபதி பாடியது.

59. இந்நா ளிதுவினையு மென்றெழுத்துத் தானிருக்க
என்னுலே யாவதொன்று மில்லையே—என்னுலே
வந்ததுகா ணையா வரும்விதியை யார்தடுப்பார்
எந்தைமக தேவர்செய லே.

உரை:—ஐயா=அப்பாவே! இந்நாள் இதுவினையும் என்ற எழுத்துத் தானிருக்க=இன்ன நேரத்தில் இன்னசெயல் நிகழுமென்று அயன் விதித்த விதியிருக்கவும், என்னுலே ஆவது ஒன்று மில்லையே=என்னுலே அதைத் தடுப் பதற்குச் செய்யக்கூடியது யாதுமில்லையே, என்னுலே வந்ததுகாண்=இத் தீமை என் செயலாலே விளைந்ததாகும், வரும்விதியை யார் தடுப்பார்=நிக ழக்கூடிய வினைப்பயனை யார் தடைசெய்ய முடியும், எந்தை மகாதேவர் செயலே=அது எமது அப்பனுகிய மகாதேவரது கட்டளையாகும், எ - று.

கம்பர் அம்பிகாபதியை வெட்டினபோது பாடியது.

60. மட்டுப்ப டாக்கொங்கை மானுர் கலவி மயக்கத்திலே
கட்டுப்பட் டாயென்ன காதல்பெற் ருய்மதன் கையம்பினுல்

பட்டுப்பட் டாயினுந் தேறுவை யேயென்று பார்த்திருந்தேன்
வெட்டுப்பட் டாய்மக னேதலை நாளின் விதிப்படியே.

உரை:—மகனே = குமாரனே! கொங்கை மாஞர் = முலை நலங்காட்டும் மான்போன்ற பெண்டிரது, கலவி மட்டுப்படா மயக்கத்திலே = சேர்க்கையால் வரும் எல்லையற்ற மயலிலே, கட்டுப்பட்டாய் = அகப்பட்டனை, என்ன காதல் பெற்றாய் = காதலித்த எதை நீ கைவரப்பெற்றாய், மதன்கை அம்பினல் = மன்மதன் கணையினல், பட்டுப்பட்டாயினும் = பலகால் துன்புற்ற பிற்பாடு, தேறுவையே என்று பார்த்திருந்தேன் = தெளிவடைவாயென்று கருதினேன், தலைநாளின் விதிப்படியே வெட்டுப்பட்டாய் = ஊழின் முறைப்படி நீ வெட்டுண்டு இறந்தனை, எ - று.

அம்பிகாபதி இறந்ததைப்பற்றிக் கம்பர் பாடியது.

61. பரப்போத ஞால மொருதம்பி யாளப் பனிமதியம்
துரப்போ னொருதம்பி பின்வரத் தானுந் துணைவியுடன்
வரப்போன மைந்தர்க்குத் தாதைபொ ருதயிர் மாய்ந்தனனெஞ்
சுரப்போ வெனக்கிங் கினியா ருவமை யுரைப்பதற்கே.

உரை:—பரப்பு ஓத ஞாலம் = விரிந்த கடல் புடைசூழ்ந்த நிலவுலகத்தை, ஒரு தம்பி ஆள = ஒப்பற்ற தம்பியாகிய பரதன் ஆட்சிசெய்யவும், பனிமதியம் துரப்போன் ஒரு தம்பி பின்வர = தண்மையுடைய சந்திரனைத் தோற்றவண்ணமுடைய தம்பியாகிய இலக்குமணன் தன் பின்னுலே வரவும், தானும் துணைவியுடன் = தான் தன் தேவியாகிய சீதையொடு, வரப்போன மைந்தர்க்கு = பதினலுவருடம் காடுசென்று மீளக்கருதிய வீரர்க்கு, தாதை பொருது உயிர் மாய்ந்தனன் = தகப்பனுராகிய தசரதன் மகன் போய் வருமளவும் பொறுத்திராது இறந்தனர், நெஞ்சுரப்போ = மனவலிமையினுலே, (நான் இறவாமலிருப்பது) இங்கு இனி யார் உவமை உரைப்பதற்கே = இனி கடின சிந்தையில் எனக்கொப்பாக யாரைக் கூறுதல் முடியும், எ - று.

ஒருநாளிரவு சேரன் நகர்சோதனை வரும்போது காளி கோயிலில் ஒருவன் சந்தனம் அரைத்ததைக் கண்ட ஒரு பேய் அச் சந்தனத்தைத் தீண்ட, அவன் அப்பேயின் கையைக் கத்தியால் வெட்டக்கண்ட சேரமன்னன் கம்பர் வீடடைந்து கதவைத் தட்டியபோது காளி கோயிலில் நடந்ததை நேரிற் கண்டாற்போல அம்பிகாபதியும் கம்பரும் பாடியது.

62. கரைக்கு வடக்கிருக்குங் காளிகா ளம்மைக்
கரைத்து வழிசாந்தைத் தொட்டப்பேய்—உரைத்தும்
மறைக்க வறியா தவன்பேயின் கையைக்
குறைக்குமாங் கூன்கத்தி கொண்டு.

உரை:—கரைக்கு வடக்கு இருக்கும் காளிகாள் அம்மைக்கு = ஆற்றங் கரையின் வடபாகத்திற் கோயில்கொண் டிருக்கும் காளியாகிய காளம்மனுக்

காக, அரைத்து வழிசாந்தை = அரைத்தபோது கல்லிலிருந்து மிகுந்து வழி சந்தனத்தை, தொட்ட பேய் உரைக்கும் = கையினல் தொட்ட பேயானது தான் பேயென்று தெரிவித்தும், மறைக்க அறியாதவன் = அப்போய்க்கு மறை வாகச் சந்தனத்தை வைக்க அறியாதவன், கூன் கத்திகொண்டு பேயின் கையைக் குறைக்குமாம் = வளைந்த கத்தியினல் பேயின் கையை வெட்டு வான், எ - று.

வேளாளரைப் புகழ்ந்து பாடியது.

63. காலப் புயனிகர் காராளர் தம்மைக் கடலுடுத்த
தாலக் குலமங்கை பெற்றதனற் சதாகா லமுமால்
கோலத்தை திருமுகத் தாலே முகந்தனன் கூடலிலே
சூலக் கரப்படை யான்றலை மீது சுமந்தனனே.

உரை :—காலப் புயல் நிகர் காராளர் தம்மை = உரியகாலத்தில் மழை பொழிகின்ற மேகத்திற்குச் சமானமான வேளாளரை, கடல் உடுத்த தாலக் குலமங்கை பெற்றதனல் = சமுத்திரமாகிய உடையைத் தரித்த மேன்மை யான பூமகள் தோற்றுவித்தமையால், தலைக்காலம் = ஆதியூழியிலே, மால் = பெருமாள், கோலத் திருமுகத்தாலே முகந்தனன் = தனது வராகத் திரு மேனியின் முகத்திலுள்ள கோட்டினல் கடலினின்று தூக்கி யெடுத்தார், கூடலிலே = திருவாலவாய்ப் பதியில், சூல கரப் படையான் = சூலாயுதத் தைத் தரித்த கடவுள், தலைமீது சுமந்தனன் = (பிட்டுக்கு மண் சுமந்த போது) தனது சிரசின்மேல் தாங்கினன். எ - று.

கம்பரிடத்தில் பாடல் கேட்க விரும்பிய ஒரு கைக்கோளன் மனைவி தன் புருஷனை ஒளித்துவைத்துக் கம்பரைத் தன் னிடம் வருப்படி செய்தனள். கம்பர் வீட்டில்வர அவள் புருஷன் கம்பரை அடிக்க வந்தபோது பாடியது.

64. மய்க்கிணை யான விழிக்கணை கொண்டு மருட்டி யிருட்டறையில்
பொய்க்கள வாக புகுந்தது முண்டு புணர்ந்தது மில்லையடா
கய்க்கிசை வான குருந்தடி கொண்டு கழுத்தைநெ ரிக்கவரும்
கய்க்கள வாவென் றங்கைய டாநின் ருரமடா விடடா.

உரை :—மய்க்கு இணையான விழிக் கணைகொண்டு மருட்டி = மை போன்ற கருங்கண்ணுகிய அம்பினல் (உன் மனைவி என்னை) மயக்கவே, இருட்டு அறையில் பொய்க்களவாக புகுந்ததும் உண்டி = இருள் நிறைந்த வீட்டில் வேடிக்கையான தந்திரத்தால் வந்தது உண்மையே, புணர்ந்ததும் இல்லையடா = நான் அவளைச் சேர்ந்ததில்லை, கைக்கு இசைவான குறும் தடி கொண்டு கழுத்தை நெரிக்கவரும் கைக்களவா = உன் கைக்கேற்ற குறுகிய கோலினல் என் கழுத்தை நெரித்துக் கொல்லவரும் செங்குந்தனே! என் தங்கையடா = (உன் மனைவி எனக்குத்) தங்கையாவாள், நின் தாரமடா =

உனக்கு எப்போதும்போல அவள் மனைவியே, விடடா=என்னை விட்டுவிடு எ - று.

வலையர் வீட்டிலும் அவர்கள் முற் கூறியவாறே செய்தபோது பாடியது.

65. இருளை யிருள்விழுங்கி யெவ்விடமுந் தோன்று
திருவிழியுங் கோல்வழியே செல்ல—வருமெல்லை
வந்ததுண்டு சேர்ந்ததில்லை மாலேயல் லாமலே
அந்தமனை யுந்தன் மனையே.

உரை:—இருளை இருள் விழுங்கி எவ்விடமும் தோன்றாது=பேரிருள் நிறைந்து எந்தத் திசையும் கண்ணுக்குத் தெரியாமலிருக்க, இருவிழியும் கோல் வழியே செல்ல=இரண்டு கண்களும் வழி காட்டுகின்ற கைத்தடியைப் பின் பற்றவும், வரும் அல்லில்=ஏற்பட்ட இராத்திரியில், வந்தது உண்டு=நான் உன் வீட்டுக்குப் போனதுண்டு, மாலே யல்லாமல்=விருப்பம் வைத்த தொழிய, சேர்ந்தது இல்லை=உன் மனைவியைக் கூடவில்லை, அந்த அம் மனை=அந்த அம்மணி, உந்தன் மனையே=உன் தாரமே ஆவள், எ - று.

அப்பிகாபதியை அரசன் கொன்று னென்னும் பகையைக் கொண்டிருந்த கம்பர் ஒரு நாள் அரசன்மகனை யானை யூரத்த அதற்கஞ்சிய மன்னன் மகன் கம்பர் வீட்டுள் புக, கம்பர் அரசன் புதல்வனை எழுத்தாணியாற் குத்திக் கொல்ல, தன்மகனைக் கம்பர் கொன்றா ரென அரசன் கம்பர்மேல் அம்புவிட்டுக் கொன்றபோது பாடியது.

66. வில்லம்பு சொல்லம்பு மேதினியில் இரண்டுண்டு
வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம்—வில்லம்பு
பட்டதடா வென்மார்பிற் பார்வேந்தா நின்குலத்தைச்
சுட்டதடா வென்வாயிற் சொல்.

உரை:—பார் வேந்தா=பெரிய மன்னனே! வில்லம்பு சொல்லம்பு மேதினியில் இரண்டுண்டு=பூமியில் வில்லிலிருந்து விடும் கணை சொல்லினாலாகிய பாணம் என அம்பு இருவகைப்படும், வில்லம்பில் சொல்லம்பே மேலதிகம்=வில்லம்பைப் பார்க்கினும் சொல்லம்பே பெரிய கடுமையானது, வில்லம்பு பட்டதடா என் மார்பில்=வில்லிலிருந்து வீவிட்ட பாணம் எனது மார்பில் பாய்ந்தது, என் வாயில் சொல்=யான் சொன்ன வார்த்தையானது, நின் குலத்தைச் சுட்டதடா=உனது குடியை அழித்துவிட்டது, எ - று.

கம்பன் வீட்டு வேலைக்காரி பாடியது.

67. நெற்படி விளைகழனி புடைசூழ் நென்மலிவாழ் தச்சன்
கற்படி பணைதோளான் பெயரோ கங்கண கணகணவன்

விற்படி வாணுதலாண் மனவி மின்மினி மினிமி னிமி
சொற்படி வேலைசெயு மவளோ துந்துயி துரிது ரிதி.

உரை:—நெற்படி விளை கழனி = நெற்பயிர் மேலும் கீழுமான பல வகைகளாகப் பயிரிடப்பட்டு வளர்கின்ற பயிர்கள், புடை சூழ் தென்மலி வாழ் தச்சன் = பக்கமெங்குஞ் சுற்றியுள்ள தென்மலி யென்னும் பதியிற் குடியிருக்கின்ற தச்சன், கல்படி பணை தோளான் = கல்லைப்போன்ற வலிமையான தோள்களையுடையவன், பெயரோ = அவன் நாமம் யாதெனிலோ, கங்கண கணகணவன் = ... விற்படி வாள் நுதலாள் மனவி = வில்லைப் போன்ற வடிவுடைய பிரகாசமான நெற்றியினளாகிய அவன் இல்லாளின் பெயராவது, மின்மினி மினிமினிமி....., சொற்படி வேலை செய்யும் அவளோ = அவ்வில்லாளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் வேலைக் காரியின் பெயர், துந்துமி துரிதுரிதி..... எ - று.

இப்பாடலும் அவ்வேலைக்காரி அம்பல சோமாசிவித்வானைப் பார்த்துப் பாடியது.

68. வட்டமதி போலிருக்கும் வன்னிக் கொடிதாவும்
கொட்டுவார் கையினின்று கூத்தாடும்—சுட்டால்
அரகரா வென்னுமே யம்பலசோ மாசி
ஒருநாள்விட் டேனீ துரை.

உரை:—அம்பல சோமாசி = அம்பல சோமாசி யென்னும் பெயருடைய கல்விமானே! வட்டமதிபோலிருக்கும் = வட்டமான திங்களைப்போலிருப்பதும், வன்னிக்கொடி தாவும் = தீயின் உச்சியைக் கடந்து செல்லும், கொட்டுவார் கையில் நின்று கூத்தாடும் = அதைத் தட்டுபவர்களுடைய கைகளில் ஒட்டி அசையும், சுட்டால் அரகரா என்னும் = வேகவைத்தால் அரகரா வென்று சொல்லித் தரிப்பதற்குதவும், ஈது உரை = இது யாதென்று சொல்வாயாக, ஒருநாள் விட்டேன் = அதைச் சொல்வதற்கு ஒருநாளளவும் யோசிக்க இடங் கொடுக்கிறேன், எ - று.

ஏகம்பவாணர்

பாடியது

சேரசோழபாண்டியர்கள் ஏகம்பவாணமுதலியார் வீட்டிற்கு வந்து முதலியா ரெங்கே யென்க, அவர் மனைவி கழனிக்குப் போனரென, அரசர்கள் மூடி நடப்போனரோ வென்றறிவது அவர்மனைவி பாடியது.

1. சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த வருஞ்சேற்றில்—மானபரன்

பாவேந்தர் வேந்தன் பறித்துநட்டா னேகம்பன்
மூவேந்தர் தங்கண் முடி.

உரை:-மானபான் = மேலான பெருமையுடையவனாகிய, மாவேந்தர் வேந்தன் = பெரிய மன்னர்க்கு மன்னனாகிய, ஏகம்பன் = ஏகம்பவாணன், சேனைத் தழையாக்கி = படைகளே வயலிலுள்ள இலையுரம்போலாக்கி, செங்குருதி நீர் தேக்கி = சிவந்த இரத்தமாகிய நீரை யுத்தகளத்தில் படியும்படி செய்து, யானை மிதித்த அரும் சேற்றில் = யானை காலால் உழக்கிய கடத்தற்கரிய சகதியில், மூ வேந்தர் தங்கள் முடி = சேர சோழ பாண்டிய மன்னர்களாகிய மூவர் களுடைய கிரீடமாகிய நாற்றை, நட்டான் = நிலைப்படுத்தினான், எ - று.

இப்படி அரசர்கள் சொன்னதை ஏகம்பவாணமுதலியார் மனைவி கனவனுக்குச்சொல்ல, அவர் சோதித்துக்கொண்டு பூதத்தை யனுப்பிச் சேரனையும், சோழனையும் தன் சிறைச்சாலையி லடைத்து விட்டுப் பாண்டிய னிடத்திற் கனுப்ப, அவனிடத்தில் வேப்ப மாலை யிருப்பதால் பூதம் போகவில்லை; அம்மாலையை வாங்க நான்குபெண்களை யனுப்ப அப்பெண்கள் பாடியது.

2. தென்னவா மீனவா சீவிலிமா ருமதுரை
மன்னவா பாண்டி வராமா—துன்னும்
சுரும்புக்குத் தாரளித்த துய்யதமிழ் நாடா
கரும்புக்கு வேம்பிலே கண்.

உரை:—தென்னவா = தெற்கிலுள்ளார்க்குத் தலைவனே! மீனவா = மீன் கொடியை யுடையவனே! சீவிலிமாறு = ஸ்ரீ வில்லிப்புத்தூரினையுடைய பாண்டியனே! மதுரை மன்னவா = மதுரைக்கு வேந்தனே! பாண்டிவள நாடா = செழிப்பான பாண்டிய நாட்டை யுடையவனே! தன்னும் சுரும்புக் குத் தார் அளித்த துய்ய தமிழ் நாடா = தெருங்கிய வண்டுகளுக்குத் தன் மாலையை யீந்த புனிதமான தமிழ் நாட்டிற் கதிபதியே! கரும்புக்கு வேம் பிலே கண் = கரும்புபோன்ற என் மகளுக்கு நீ யணிந்திருக்கும் வேப்பந் தாரிலே நோக்க மிருக்கின்றது, எ - று.

3. மாப்பைந்தார்க் கல்லமுத்து வண்ணத்தார்க் கல்லவஞ்சி
வேப்பந்தார்க் காசைகொண்டு விட்டாளே—பூப்பைந்தார்
சேர்ந்திருக்கு நெல்வேலிச் சீவிலிமா ருதமிழை
ஆய்ந்திருக்கும் வீரமா ரு.

உரை:—பூப்பைந்தார் சேர்ந்திருக்கும் = பசிய மலர்மாலையை அணிந் திருக்கும், நெல்வேலிச் சீவிலி மாறு = திருநெல்வேலிச் சண்டையில் வென்ற சீவிலிமாறனென்னும் பெயருடைய பாண்டியனே! தமிழை ஆய்ந்திருக்கும் வீரமா ரு = தமிழ் நூலை ஆராய்ந்த அறிவுடைய வீர பாண்டியனே! என் பெண் = எனது புதல்வி, மாப்பைந்தார்க்கு அல்ல = பெரிய புதிய மாலைக்கு

ஆசைப்படவில்லை, வேப்பந்தாருக்கு ஆசை கொண்டுவிட்டாளே = உனது வேப்பமாலைக்கு வேட்கையுடையவ ளாளுள், எ - று.

4. வேம்பா கிலுமினிய சொல்லிக்கு நீபுனைந்த
வேம்பா கிலுமுதவ வேண்டாமோ—மீன்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா நின்புயத்து
மாலையிலே மாலைவைத்தாண் மான்.

உரை:—மீன்பாயும் வேலையிலே வேலைவைத்த மீனவா = மச்சங்கள் பாய்ந்து விளையாடுகின்ற சமுத்திரஞ் சுவரும்படி வேலாயுதத்தை வீசிய பாண்டியனே ! மான் = எனது மகள், நின்புயத்து மாலையிலே மாலை வைத் தாள் = உன் தோளில் தரித்த வேப்பமாலையிலே ஆசைகொண்டாள், வேம் பாகிலும் இனிய சொல்லிக்கு = வேகின்ற கரும்பஞ்சாற்றுப் பாகிலும் இனிய மொழியையுடையாளுக்கு, நீ புனைந்த வேம்பாகிலும் உதவ வேண்டாமோ = நீ யணிந்துள்ள வேப்பந்தாரையாவது அளிக்கக் கூடாதோ, எ - று.

5. இலகு புகழாறை யேகம்ப வாணன்
அலகை வருமென் றஞ்சி—உலகறிய
வானவர்கோன் சென்னிமிசை வண்கை வளையெறிந்த
மீனவர்கோன் கைவிடான் வேம்பு.

உரை:—உலகறிய = பூமியிலுள்ளார் தெரியும்படி, வானவர்கோன் சென்னிமிசை = இந்திரனது தலையின்மேலே, வண்கை வளை எறிந்த = வலிமை வளம் பொருந்திய கையிலுள்ள வளையினைச் செலுத்திய, மீனவர் கோன் = பாண்டியன், இலகுபுகழ் ஆறை ஏகம்பவாணன் = பிரகாசிக்கின்ற கீர்த்தியையுடைய ஆற்றூருக்கு அதிபனுகிய ஏகம்பவாணன் ஏவிய, அலகை வரும் என்று அஞ்சி = பேய் தன்னை வந்து தாக்கு மென்று பயந்து, வேம்பு கைவிடான் = வேப்பமாலையைத் தன்னுடம்பினின்று நீக்கமாட்டான், எ- று.

விலைமகளி னில்லம்விட்டு வந்த தன் நாயகனைப் பாத்துப்
பாண்டியன் மனைவி பாடியது.

6. வேண்டியபோ தின்பம் விளைக்கு மடந்தையரைத்
தீண்டியகை யாலென்னைத் தீண்டாதே—பாண்டியா
முல்லைக் கதிபா முகம்பார்த் தகலநின்று
சொல்லைக் கடவவெல்லாஞ் சொல்.

உரை:—பாண்டியா = பாண்டியனே ! முல்லைக்கு அதிபா = முல்லை யென்ற ஊருக்குத் தலைவனே! வேண்டியபோது இன்பம் விளைக்கும் மடந்தை யரை = இச்சித்த காலத்தில் இன்பமளிக்கும் விலைமகளிரை, தீண்டிய கையால் என்னைத் தீண்டாதே = பற்றிய காரத்தால் என்னைப் பற்றாதே, அகல நின்று = விலகி நின்று, முகம் பார்த்து = தலை குனியாமல், சொல்லைக் கடவது எல்லாம் சொல் = கூறக் கருதுவதெல்லாம் கூறுவாயாக, எ - று.

இதுவுமது

7. கலையான் முலைமூடிக் கண்வலைக்குள் ளாக்கும்
விலைமாதர் தாம்வர விட்டாரோ—விலைமாதர்
கொங்கையிலே தோய்ந்த குரைதீரத் துய்யசிவ
கங்கையிலே நீராடி வா.

உரை:—கலையால் முலை மூடி = நல்ல புடவையால் தனங்களை மூடுவது போலக் காட்டி, கண் வலைக்குள்ளாக்கும் = கண்ணாகிய வலைக்குள் (ஆடவரைச் சிக்கும்படி செய்கிற) விலை மாதர் தாம் வர விட்டாரோ = பொது மகளிர் உன்னை என்பால் வருவதற்கு இடம் கொடுத்தாரா, விலை மாதர் கொங்கையிலே தோய்ந்த குரை தீர = அப் பொதுமகளிருடைய தனங்களில் பொருந்திய குற்றம் நீங்கும்படியாக, துய்ய சிவ கங்கையிலே நீராடி வா = புனிதமான சிவகங்கைத் தீர்த்தத்திலே போய் ஸ்நானஞ் செய்து திரும்பு வாயாக, எ - று.

வித்வசிரோமணியாகிய

காளமேகப் புலவர்

அவ்வவ்வமயங்களிற் பாடியது

திருமலைராசன் சபையில் காளமேகப்புலவர் போனபோது, அச் சமஸ்தான வித்வான்கள் இவருக்கு இடங்கொடாம லிருந்த போது இந்த வெண்பாவைப் பாடினர். உடனே அரசனுடைய சிங்காசனம் இரண்டுமுழம் வளர்ந்து இடங்கொடுத்தது.

1. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

உரை:—வெள்ளைக் கலையுடுத்து = வெள்ளை நிறம் உள்ள ஆடையைத் தரித்துக்கொண்டு, வெள்ளைப் பணிபூண்டு = வெண்ணிறமான நகைகளை அணிந்துகொண்டு, வெள்ளைக் கமலத்தில் = வெண்தாமரைப் பூவின்மீது, வீற்றிருப்பாள் = சிறப்பாகத் தங்கியிருப்பவளாகிய சரசுவதி அம்மன், வெள்ளை அரியாசனத்தில் = குற்றம் அற்ற சிம்மாசனத்தின்மீது வீற்றிருக்கும், அரசரோடு = மன்னர் மேனாடு, என்னை = அடியேனை, சரியாசனம் = சமமாக வீற்றிருக்கக் கூடிய இருப்பிடத்தை, வைத்த = அமைத்தருளிய, தாய் = என்னுடைய அன்னையாவாள், (எனை அறிக.) எ - று.

ஆமணக்குக்கும், யானைக்கும்.

2. முத்திருக்குங் கொம்பசைக்கும் மூரித்தண் டேந்திவரும்
கொத்திருக்கு நேரே குலைசாய்க்கும்—எத்திசைக்கும்
தேமணக்குஞ் சோலைத் திருமலரா யன்வரையில்
ஆமணக்கு மால்யானை யாம்.

உரை :—எத்திசைக்கும் = எந்தத் திசையிலும், தேமணக்கும் = இனிய வாசனை வீசும், சோலை = சோலைகளையுடைய, திருமலராயன் வரையில் = திருமலராயனுடைய மலைமீது, ஆமணக்கு = ஆமணக்கு மரம், முத்திருக்கும் கொம்பசைக்கும் = முத்துப்போன்ற வித்துக்கள் பொருந்தியுள்ள கிளைகளை அலைத்துக் காட்டும், மூரித்தண்டு = (அதன்) வலிமையான மரக் கிளைகள், ஏந்தி வரும் = தாங்கி வரும், கொத்திருக்கும் = பூங்கொத்துக்கள் விளங்கும், நேரே குலை சாய்க்கும் = அவைகள் காயோடு கூடிய குலைகளை நேராகத் தொங்கவிட்டு விளங்கும்; (பெரிய யானையானது) முத்திருக்கும் கொம்பசைக்கும் = முத்துக்கள் விளையக்கூடிய தந்தக் கொம்புகளை அசைத்துக்கொண்டு நிற்கும், மூரித்தண்டு ஏந்தி வரும் = வலிமையான கட்டைகளை துதிக்கையில் தூக்கிக்கொண்டு வரும் கொத்திருக்கும் = (அதன் மத்தகத்தில்) அங்குசத்தால் குத்திய வடுக்கள் இருக்கும், நேரே குலை சாய்க்கும் = அது அங்குள்ள வாழைக் குலைகளைக் கீழே விழும்படி தள்ளும், ஆதலால் ஆமணக்கு—, மால்யானையாம் = பெரிய யானைக்குச் சமமாகும், எ- று.

வைக்கோலுக்கும், யானைக்கும்.

3. வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும்—சீருற்ற
செக்கோல மேனித் திருமலரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம்.

உரை :—சீர் உற்ற = புகழ் பொருந்திய, செக்கோல = சிவந்த அழகிய, மேனி = உடம்பையுடைய, திருமலராயன்வரையில் = திருமலராயன் மலையின்மீது, வைக்கோல் = வைக்கோலானது, வாரிக்களத்தடிக்கும் = வயலில் இருந்து எடுக்கப்பட்டு நெற்களத்திலிட்டுத் துவைக்கப்படும், வந்து பின்பு கோட்டை புகும் = பிற்பாடு புரியாகத் திரிக்கப்பட்டு நெற்கோட்டையைச் சூழ்ந்திருக்கும், போரிற் சிறந்து பொலிவாகும் = பெரிய குவியலாகக் குவிக்கப்பட்டு (மலைபோல) உயர்ந்து தோன்றி விளங்கும்; மால் யானை = பெரிய யானையானது, களத்து = யுத்தகளத்தில், வாரியடிக்கும் = (எதிரியின்) சேனைகளை நிலத்தில் தாக்கிக் கொல்லும், வந்து பின்பு கோட்டை புகும் = யுத்தம் முடிந்தபின் அரசனுடைய கோட்டைக்குள்ளே செல்லும், போரில் = சண்டை செய்வதில், சிறந்து = மற்றப் படைகளைப் பார்க்கிலும் மேம்பட்டுப் பொலிவாகும் = நன்கு விளங்கும், ஆதலால் வைக்கோல் கூட யானைக்குச் சமமாகும், எ - று.

இலக்கணக் குறிப்பு :—செங்கோல என்பது செக்கோல என்று வலித்தல் விகாரம் பெற்றது.

பாம்புக்கும், வாழைப்பழத்துக்கும்.

4. நஞ்சிருக்குந் தோலுரிக்கு நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டான் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.

உரை :—விஞ்சுமலர் = மிகுதியான பூக்களிலிருந்து, தேம்பாயும் = தேன் பொழிந்து செல்லுகின்ற, சோலை = சோலையையுடைய, திருமலராயன் வரையில் = திருமலராயன் மலையின்மீது, பாம்பு = பாம்பானது, நஞ்சிருக்கும் = விஷத்தை யுடையதாய் இருக்கும், தோலுரிக்கும் = சட்டை கழற்றும், நாதர் முடிமேல் இருக்கும் = சிவபெருமானது முடிமீது அணியப்பட்டிருக்கும், வெஞ்சினத்தில் = அது கொடிய கோபமாயிருக்கும்போது, பல் பட்டால் = யார் உடம்பின் மேலாவது தன் பல் படுமானால், மீளாது = அதன் விஷம் தீராது, (மரணத்தை விளைவிக்கும்); வாழைப் பழம் = வாழைப் பழமானது, நஞ்சிருக்கும் = கைந்து கனிவாய் இருக்கும், தோல் உரிக்கும் = தோல் உரித்து உட்கொள்ளப்படும், நாதர் முடிமேல் இருக்கும் = பஞ்சாமிர்தமாகக் கலந்து சிவபெருமான் திருமுடியின்மீது அபிஷேகம் செய்யப்படும், வெஞ்சினத்தில் = மிகுந்த கோபமுண்டாக்கும் பசி நேரத்தில், பற் பட்டால் = மனிதர்கள் பல்லில் அது படுமானால், மீளாது = அவர்கள் வயிற்றினிற் செல்லுவதன்றி வெளியே துப்பப்படுவதில்லை, ஆகும் = (ஆதலால்) பாம்பு வாழைப் பழம் போல்வதாகும், எ - று.

பாம்புக்கும், எள்ளுக்கும்.

5. ஆடிக் குடத்தடையு மாடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்—ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பின் ணுக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது.

உரை :—பாம்பு = பாம்பானது, ஆடிக்குடத்தடையும் = படமெடுத்து ஆடிக் குடத்தினுள் புகும், ஆடும்போதே இரையும் = படமெடுத்து ஆடும் போதே சீத்துச் சீத்து என்று ஓசை உண்டாக்கும், மூடித்திறக்கின் = குடத்திலிட்டு மூடியபின் அதைத் திறந்து பார்த்தால், முகம் காட்டும் = தனது தலையை எடுத்துக் காட்டும், ஓடி மண்டை பற்றில் = அது ஓடித் தலையில் தீண்டுமானால், பரபரெனும் = பரபரென்ற உணர்ச்சி உண்டாகும், பின் ணுக்கு உண்டாம் = அதற்குப் பிளவு உள்ள நாக்கும் உண்டு; எள் = எள்ளானது, ஆடிக் குடத்தடையும் = செக்கிலே ஆட்டப்பட்டுக் குடத்தில் எடுத்து அடைக்கப்படும், ஆடும்போதே இரையும் = செக்கிலே ஆட்டும்

போதே இரைச்சல் ஓசையை உண்டாக்கும், மூடித் திறக்கின் முகங் காட்டும்=குடத்தில் அசையாமல் வைத்து மூடித் திறந்து பார்த்தால் பார்ப் பவர்களுடைய முகம் அதில் தெரியும், ஓடி மண்டை பற்றில்=தலையில் ஊற்றித் தேய்க்கப்பட்டால் குளிர்ச்சியான உணர்ச்சி உண்டாகும், பிண்ணுக்கும் உண்டாம்=எள்ளுப் பிண்ணுக்கு எண்ணை ஆட்டும்போது உண்டாகும், (ஆதலால்) இவ் வுலகத்தில் உற்றிடும்பாம்பு எள்ளுப்போல்வ தாகும், எனவே யோது=என்றே சொல்லுக, எ - று.

பாம்புக்கும், எலுமிச்சம்பழத்துக்கும்.

6. பெரியவிட மேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணு முப்புமே லாடும்—எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம்.

உரை:—தேம் பொழியும் சோலை=தேன் பாய்கின்ற பூச்சோலைகளை யுடைய, திருமலராயன் வரையில்=திருமலராயனுடைய மலையின்மீது, பாம்பு=பாம்பானது, பெரிய விடமே சேரும்=உயிரைக் கொல்லக்கூடிய நஞ்சை உடையதாகும், பித்தர் முடி யேறும்=பித்தன் என்னும் பேரை யுடைய சிவபெருமான் திருமுடியின்மீது தங்கியிருக்கும், அரியுண்ணும்= காற்றைப் புசிக்கும், உப்பும்=காற்றினாலே உடல் பருக்கும், மேல் ஆடும்= தலை தூக்கி ஆடும், எரிகுணமாம்=கோபக் குணமுடையதாகும்; எலுமிச்சம் பழம்=எலுமிச்சம்பழமானது, பெரிய இடமே சேரும்=பெரியவர்கள் கையிற் கொடுக்கப்படும், பித்தர் முடியேறும்=அதன் சாறு சிவபெருமான் முடியின் மீது அபிஷேகஞ் செய்யப்படும், அரியுண்ணும்=(ஊறுகாய்க்காக அது துண்டு துண்டாக) அரியப்படும், உப்புமேல் ஆடும்=உப்பு அதன்மேல் தூவப்படும், எரி குணமாம்=அதன் சாறுபட்டால் எரிச்சல் உண்டாகும், (ஆதலால்) பாம்பு எலுமிச்சம்பழத்துக்குச் சமமாகும், எ - று.

முகுந்தனுக்கும், முறத்துக்கும்.

7. வல்லரியா யுற்றிடலான் மாதர்கையிற் பற்றிடலான்
சொல்லரிய மாப்புடைக்கத் தோன்றுதலால்—வல்லோர்
அகந்தனிலே வாழ்தலா லன்றுலக ளந்த
முகுந்தனுமே யாகு முறம்.

உரை:—அன்று உலகளந்த முகுந்தன்=வாமனவதாரத்தில் தமது ஈரடிகளால் மூவுலகத்தையும் அளந்த திருமால், வல்லரியாய் உற்றிடலால்= வலிமையுடைய நரசிம்ம வடிவமாகத் தோன்றியபடியாலும், மாதர் கையில் பற்றிடலால்=பெண்கள் கையாற் பிணிக்கப்பட்டமையாலும், சொல்லரிய மாப்புடைக்கத் தோன்றுதலால்=சொல்லுதற்கு அருமையான வலிமை யுடைய குவலயாபீட மென்னும் யானையைக் கொல்ல அவதரித்தமை

யாலும், வல்லோர் அகந்தனிலே வாழ்தலால்=பெரியவர்களுடைய உள்ளத்திலே வீற்றிருத்தலாலும், முறம்=முறமானது (சுளகானது), வல்லரியாய் உற்றிடலால்=கொழித்தற்குரிய நல்ல கருவியாய் அமைதலாலும், மாதர் கையிற் பற்றிடலால்=பெண்கள் கையிற் பிடித்து உபயோகிக்கப் படுதலாலும், சொல்லரிய மாபுடைக்க தோன்றுதலால்=சொல்லுதற்கு அருமையான மாவைத் தெள்ளுவதற்குப் பயன்படுதலாலும், வல்லோர் அகந்தனிலே வாழ்தலால்=பலருடைய வீட்டில் இருப்பதாலும், ஆகும்=பெருமாள் முறம்போல்வதாவர், எ - று.

குறிப்பு :—பல்லோர் - வல்லோர் என்று முதல் திறந்தது.

சந்திரனுக்கும், மலைக்கும்.

8. நிலவாய் விளங்குதலா னீள்வான் படிந்து
சிலபோ துலாவுதலாற் சென்று—தலைமேல்
உதித்து வரலா லுயர்மா மலையை
மதிக்கு நிகராக வழுத்து.

உரை :—உயர் மாமலை=உயர்ந்த பெரிய மலையானது, நிலவாய் விளங்குதலால்=நிலத்தின்மீது தோன்றி உயர்வாய் விளங்குதலாலும், நீள்வான் படிந்து=பெரிய மேக மண்டலத்தை அளாவி, சிலபோது உலாவுதலால்=(குறிஞ்சிக்குரிய) சில பூக்கள் தோன்றி விளங்கப் பெறுதலாலும், சென்று தலைமேல் உதித்து வரலால்=நிலத்தின்மீது தொடர்ச்சியாகப் பரவி, அழகாக விளங்குதலாலும்; மதி=சந்திரன், நிலவாய் விளங்குதலால்=நிலவொளி கொடுப்பதாலும், நீள்வான் படிந்து=நீண்ட ஆகாயத்திற் பொருந்தி, சிலபோது உலாவுதலால்=சில காலங்களில் திரிவதாலும், சென்று தலைமேல் உதித்து வரலால்=நிலத்திற்கு மேலாக உதயஞ்செய்து நமது தலைக்கு மேல் ஆகாயத்தின் உச்சியில் வருதலாலும், உயர் மாமலையை மதிக்கு நிகராக வழுத்து=உயர்ந்த பெரிய மலையைச் சந்திரனுக்குச் சமானமாகச் சொல்லித் துதி, எ - று.

நாய்க்குந், தேங்காய்க்கும்.

9. ஓடு மிருக்குமத னுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலதனக்கு நாணுது—சேடியே
தீங்கான தில்லாத் திருமலரா யன்வரையில்
தேங்காயு நாயுமெனச் செப்பு.

உரை :—சேடியே=தோழியே, தீங்கானதில்லா=தீமையானது என்றும் இல்லாத, திருமலராயன் வரையில்=திருமலராயன் மலையின்மீது, தேங்காய்=தேங்காயானது, ஓடும் இருக்கும்=சிரட்டையோடு கூடியிருக்கும், அதன் உள்வாய்=அதன் உட்பக்கமானது, வெளுத்திருக்கும்=வெண்மையான பருப்போடு கூடியிருக்கும், நாடுங் குலதனக்கு நாணுது=எல்லா

காலும் விரும்பப்படும் தேங்காய்க்குலையிற் கோணமல் இருக்கும்; காய்= காயானது, ஓடும்=விரைவாக ஓடிச் செல்லும், இருக்கும்=இளைத்தால் ஓர் இடத்தில் இருக்கும், அதன் உள்வாய்=அதன் வாயின் உட்பக்கம், வெளுத் திருக்கும்=வெண்மையா யிருக்கும், காடும்=இரைதேடி அதனை விரும்பிச் செல்லும், மக்களிடத்தில் துள்ளி விளையாடவும் காடும், குலதனக்கு காணுது=குரைப்பதற்கு வெட்கப்படாது, தேங்காயும் காயு மெனச் செப்பு= தேங்காய் காய்போலு மெனச் சொல்லு, எ - று.

மீனுக்கும், பேனுக்கும்.

10. மன்னீரி லேபிறக்கு மற்றமலையி லேமேயும்
பின்னீச்சிற் குத்தும் பெருமையால்—சொன்னேன்கேள்
தேனுந்து சோலைத் திருமலரா யன்வரையில்
மீனும்பே னுஞ்சரியா மே.

உரை:—தேனுந்து சோலை=தேனைக் கொப்பளிக்கின்ற பூஞ்சோலை யையுடைய, திருமலராயன் வரையில்=திருமலராயன் மலையில், மீன்= மீனானது, மன்னீரிலே பிறக்கும்=நிலை பெற்ற நீரிலே (அதாவது) கீர் நிலை யிலே உண்டாகும், மற்று அலையிலே மேயும்=மேலும் கீர் அலையின்மீது அங்கும் இங்கும் செல்லும், பின் நீச்சில் குத்தும் பெருமையால்=நீந்து மிடத்து பின்னுக வந்து கொத்தும் பெருமையை யுடையது; பேன்=பேனு னது, மன் ஈரிலே பிறக்கும்=தலையிலே நிலைத்த பேன் முட்டையிலே உண் டாகும், மன் தலையிலே மேயும்=தலை மயிரிலே திரிந்து செல்லும், பின் ஈச்சில் குத்தும் பெருமையால்=பிற்பாடு மக்களால் எடுத்து ஈச்சு என்று ஒலியோடு குத்தப்படும் இயல்புடையது, (மீனும் பேனும் சமமென்று) நான் சொன்னதைக் கேட்பாயாக, எ - று.

குறிப்பு:—மன் - ஆல், என்பன அசைச் சொற்கள்.

பனைமரத்துக்கும், வேசைக்கும்.

11. கட்டித் தழுவுதலாற் கால்சேர வேறுதலால்
எட்டிப் பன்னுடை யிழுத்தலால்—முட்டப்போய்
ஆசைவாய்க் கள்ளை யருந்துதலா லப்பனையும்
வேசையென லாமே விரைந்து.

உரை:—பனை = பனைமரமானது, கட்டித் தழுவுதலால் = ஏறும் பொருட்டுக் கட்டித் தழுவப் படுதலாலும், கால் சேர ஏறுதலால்=இரு காலும் சேர்த்து ஏறப்படுதலாலும், எட்டிப் பன்னுடை யிழுத்தலால்=ஏறு பவர்களால் பாளைச் செருவலானது எட்டி யிழுத்துக் கட்டப் படுவதாலும், முட்டப் போய்=அதனை நெருங்கிப் போய், ஆசையாய்=குடிக்கும் ஆசை காரணமாக, கள்ளை அருந்துதலால்=மக்கள் அதன் கள்ளைக் குடிப்பதாலும்; வேசை=வேசையானவள், கட்டித் தழுவுதலால்=தன்னை அடைந்த மக்களால்

கட்டித் தழுவப் படுதலாலும், கால் சோர ஏறுதலால் = கால்கள் பொருந்த அணு பவிக்கப் படுதலாலும், எட்டிப் பன்னுடை யிழுத்தலால் = சிறப்பாகப் பேசப் படும் காமுகர் ஆடையானது அவளால் எட்டி யிழுக்கப்படுதலாலும், முட்டப் போய் = காமுகர் நெருங்கிச் சென்று, ஆசை = ஆசையினாலே, வாய்க்கள்ளே = அவள் வாயிலே உண்டாகும் இனிய நீரை யருந்துதலால் = பருகுதலாலும், விரைந்து = சிக்கிரமாக, அப்பனையும் வேசை யெனலாமே = மேலே சொன்ன பனையும் வீலமகள் என்று சொல்லப்படலாம், எ - று.

தென்னமரத்துக்கும், வேசைக்கும்.

12. பாரத் தலைவிரிக்கும் பன்னுடை மேற்சுற்றும்
சோர விளநீர் சுமந்திருக்கும்—நேரேமேல்
ஏறியிறங்கவே யின்பமாந் தென்ன மரம்
கூறுங் கணிகையென்றே கொள்.

உரை :—தென்னமரம் = தேங்காய் மரமானது, பாரத்தலை விரிக்கும் = காற்புறமும் பரவும்படியாக உச்சியில் ஓலையை விரித்து நிற்கும், பன்னுடை மேல் சுற்றும் = அதன்மேல் செருவலானது சூழ்ந்திருக்கும், சோர இளநீர் சுமந்திருக்கும் = இலையால் மறைபட்டுள்ள இளநீரைத் தாங்கி நிற்கும், நேரே மேல் ஏறி இறங்கவே இன்பமாம் = அடியில் இருந்து உச்சி வரையில் ஏறி இறங்குவதில் இடர்ப்பாடு இராது ; கணிகை = வேசையானவள், பாரத்தலை விரிக்கும் = கீழே தொங்கும்படியாகக் கூந்தலை விரித்து நிற்பாள், பன்னுடை மேல் சுற்றும் = சிறப்பாகச் சொல்லப்படும் புடவையை உடலின்மீது தரித் திருப்பாள், சோர இளநீர் சுமந்திருக்கும் = (இடை) தளரும்படியாக இளநீர் போன்ற தனங்களை உடைத்தா யிருப்பாள், நேரே மேல்.....இன்பமாம், = அவளை நேரே அணைந்து சேர்வதால் இன்பம் உண்டாகும், (ஆதலால்) தென்ன மரம் கூறும் கணிகையென்றே கொள் = தென்னை மரமானது சிறப் பாகப் பேசப்படும் வேசைபோலும் என்றே கருதுக, எ - று.

வெற்றிலைக்கும், வேசைக்கும்.

13. கொள்ளுகையா னீரிற் குளிக்கையான் மேலேறிக்
கிள்ளுகையாற் கட்டிக் கிடக்கையால்—தெள்ளுபுகழ்ச்
செற்றலரை வென்ற திருமலரா யன்வரையில்
வெற்றிலையும் வேசை யாமே.

உரை :—தெள்ளுபுகழ் = தெளிவான கீர்த்தியையுடைய, செற்றலரை வென்ற = பகைவர்களைத் தோற்கடித்த, திருமலராயன் வரையில் = திருமல ராயன் மலையின்மீது, வெற்றிலை = வெற்றிலையானது, நீர் கொள்ளுகையால் = நீர் பாய்ச்சப்பட்டு வளர்வதால், நீரில் குளிக்கையால் = தண்ணீரில் கழுவப் படுதலால், மேல் ஏறிக் கிள்ளுகையால் = மேலாக எடுத்துக் கிள்ளி யுண்ணப் படுதலால், கட்டிக் கிடக்கையால் = விற்பனையின் பொருட்டாகக் கட்டாக

இணைத்து வைக்கப்படுதலால்; வேசை = வேசையானவள், கொள்ளுகையால் = வந்தாரை யேற்றுக்கொள்ளும் கைகளே யுடைமையானும், நீரில் குளிக்கையால் = நீரிலே மூழ்கி விளையாடுதலாலும், மேல் எறிக் கிள்ளுகையால் = காதல்மீது சார்ந்து கிள்ளப்படுதலாலும், கட்டிக் கிடக்கையால் = படுக்கையில் தழுவப்படுவதாலும், வெற்றிலே வேசை போல்வதாகும், எ-று.

கண்ணழிக்கும், அரசனுக்கும்.

14. யாவருக்கும் ரஞ்சனைசெய் தியாவருக்கு மவ்வவராய்ப்
பாவனையாய்த் தீதகலப் பார்த்தலால்—மேவும்
எதிரியைத்தன் னுள்ளாக்கி யேற்ற ரசத்தால்
சதிருறலா லாடியர சாம்.

உரை:—ஆடி = கண்ணழியானது, யாவருக்கும் ரஞ்சனைசெய்து = எல்லாருக்கும் களிப்பை உண்டாக்கி, யாவருக்கும் அவ்வவராய்ப் பாவனையாய் = பார்ப்பவர்கள் எல்லாருக்கும் அவரவர் வடிவைக் காட்டுந் தோற்றமுடைதாய், தீதகல = மங்கலப் பொருளாய், பார்த்தலால் = பார்க்கப்படுவதாலும், மேவும் எதிரியை = தன்பால் எதிர்ப்பட்டாரை, தன்னுள்ளாக்கி = தன்னுள்ளே தோற்றுவித்து, ஏற்றரசத்தால் = தனது பின்பக்கம் பூசிய பாதரசத்தால், சதிர் உறலால் = சிறப்புப் பொருந்துவதாலும்; அரசு = அரசன், யாவருக்கும் ரஞ்சனை செய்து = எல்லாருக்கும் மகிழ்ச்சியுண்டாக்கி, யாவருக்கும் அவ்வவராய் பாவனையாய் = தன்பால் வரும் எல்லாருக்கும் அவரவர் மனதிற்கு ஏற்றபடி நடக்கும் தோற்றமுடையவராய், தீது அகல = குறைகள் நீங்கும்படி, பார்த்தலால் = குடிகளைக் கவனித்தலாலும், மேவும் எதிரியை = தன்னை எதிர்க்கும் பகைவனை, தன்னுள்ளாக்கி = தனக்குக் கீழ் அடங்கும்படி செய்து, ஏற்றரசத்தால் = அனுபவிக்கும் நவரசப் பொருள்களால், சதிர் உறலால் = சிறப்பு அடைதலாலும், கண்ணழி அரசனுக்குச் சமமாகும், எ - று.

கூத்தியாருக்கும், குரங்குக்கும்.

15. ஒட்டங் கடியதா லுள்ளவரை மேவுதலால்
சேட்டை யெவரிடத்துஞ் செய்தலால்—நாட்டமுடன்
காத்திரத்திற் குட்டியுறக் கட்டுதலாற் றெட்டுதலால்
கூத்தியர்க்கு நேராங் குரங்கு.

உரை :—கூத்தியர் = கூத்தாடும் பெண்கள், ஒட்டங்கடியதால் = உதட்டிற் கடிபடுவதாலும், உள்ளவரை மேவுதலால் = பொருள் உள்ளவரைப் போய் அடைவதாலும், சேட்டை எவரிடத்துஞ் செய்தலால் = எல்லாரிடத்தும் வேடிக்கையாக விளையாடுதலாலும், நாட்டமுடன் = விருப்பத்துடன், காத்திரத்தில் = காதலர் உடம்பில், குட்டியுறக் கட்டுதலால் = தாக்கி உடல் பொருந்தும்படி தழுவுவதாலும், தெட்டுதலால் = சூழ்ச்சி செய்வதாலும்;

குரங்கு = குரங்கானது, ஓட்டங் கடியதால் = வீரைவான ஓட்டம் உடைமையாலும், உள்ளவரை மேவுதலால் = இருக்கின்ற மலைமீது ஏறுதலாலும், சேட்டை எவரிடத்தும் செய்தலால் = எவரிடத்தும் குறும்பான செய்கை செய்வதாலும், காத்திரத்தில் = தன் உடம்பில், குட்டி = தன் குட்டியானது, நாட்டமுடன் = விருப்பத்துடன், உற = பொருந்தும்படி, கட்டுதலால் = தழுவுதலாலும், தெட்டுதலால் = தந்திரமாகப் பொருள்களைக் கவருவதாலும், கூத்தியர்க்கு நேராம் குரங்கு = ஆடல் மகளிர்க்குக் குரங்கு ஒப்பான தாகும், எ - று.

குதிரைக்கும், காவிரியாற்றுக்கும்.

16. ஓடுஞ் சுழிசுத்த முண்டாகுந் துன்னலரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும்—நாடறியத்
தேடு புகழான் றிருமலரா யன்வரையில்
ஆடுபரி காவிரியா மே.

உரை:—பரி = குதிரையானது, ஓடும் = ஓடிச்செல்லும், சுழிச்சுத்தம் உண்டாம் = குற்றமற்ற சுழிகளை உடையதாகும், துன்னலரைச்சாடும் = எதிரிகளைத் தாக்கும், பரிவாய்த் தலை சாய்க்கும் = அன்பாய்த் தலையைச் சாய்த்து நிற்கும்; காவிரி = காவிரியானது, ஓடும் = ஓடும் நீரை உடையதாகும், சுழிச்சுத்தம் உண்டாகும் = நீர்ச்சுழிகள் சுழல்வதை உடையதாகும், துன் அலரைச் சாடும் = தன்மீது போடப்பட்ட மலர்களைத் தாக்கி இழுத்துச் செல்லும், பரிவாய் = நிலத்தைக் குழித்தெடுத்து, தலை சாய்க்கும் = இடங்களைப் பெயர்க்கும், (ஆதலால்) நாடறிய தேடு புகழாம் = எல்லாரும் தெரியும்படி சம்பாதிக்கின்ற கீர்த்தி உடையவனுகிய, திருமலையான் வரையில் = திருமலையான் மலைமீது, ஆடுபரி = ஆடுகின்ற குதிரையானது, காவிரியாமே = காவிரிக்குச் சமானமாகும், எ - று.

கீரைப்பாத்திக்கும், குதிரைக்கும்.

17. கட்டி யடிக்கையாற் கான்மாறிப் பாய்கையால்
வெட்டி மறிக்கின்ற மேன்மையால்—முட்டப்போய்
மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்
ஏறப் பரியாகு மே.

உரை:—வண்கீரைப் பாத்தி = வளமாகிய கீரைப் பாத்தியில் கீரைத் தண்டுகள் கட்டுகளாகக் கட்டப்பட்டு, அடிக்கையால் = வேரில் உள்ள சேறு போகும்படி அடிக்கப்படுதலாலும், கால் மாறிப் பாய்கையால் = நீர்க்கால் வாயானது அதில் மாறி மாறிச் செல்லுவதாலும், வெட்டி மறிக்கின்ற மேன்மையால் = ஓடையானது வெட்டப்பட்டுத் தண்ணீர் மறிக்கப்படுகின்ற சிறப்புடைமையாலும், முட்டப் போய் மாறித் திரும்புகையால் = கால் வாயில் நீரானது ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் மீளத் திரும்புவதாலும், பரி = குதிரையானது, கட்டியடிக்கையால் = தேரிற் கட்டி அடிக்கப்

படுகையாலும், கால்மாறிப் பாய்கையால்=குதித்துப் பாய்வதாலும், வெட்டி மறிகின்ற மேன்மையால்=எதிரிகளைத் தாக்கிக் கொல்லுகின்ற சிறப் புடைமையாலும், முட்டப் போய் மாறித் திரும்புகையால்=நேரே சென்று முட்டுப்பட்ட இடத்திலே மீளத் திரும்புவதாலும், பாத்தியுடன் ஏறப்பரி யாகுமே=கீரைப் பாத்தியோடு குதிரை மிகவும் ஒத்ததாகும், எ - று.

கதவுக்கும், ஆட்டுக்கும்.

18. செய்யுட் கிடைமறிக்குஞ் சேர்பலகை யிட்டுமுட்டும்
ஐயமற மேற்ரு ளடர்க்குமே—துய்யநிலை
தேடும் புகழ்சேர் திருமலரா யன்வரையில்
ஆடுங் கதவுநிக ராம்.

உரை :—துய்ய நிலை தேடும் புகழ் சேர்=சுத்தமான தன்மையை நாடுகின்ற புகழையுடைய, திருமலராயன் வரையில்=திருமலராயன் மலை யின்மீது, ஆடு=ஆடானது, செய்யுள்=வயலில், கிடைமறிக்கும்=மந்தை யாகக் கிடக்கும், சேர் பலகை இட்டு முட்டும்=பலர்களுடைய கைகளால் தடுக்கப்பட்டபோது தலையினால் முட்டும், ஐயமற=திண்ணமாக, மேற்று ஆள்=மேல் வந்த ஆள்களை, அடர்க்கும்=தாக்கும்; கதவு=கதவானது, செய்=வீட்டின், உட்கிடை=உள்ளிடத்தில், மறிக்கும்=தடுத்து மூடி நிற்கும், சேர் பலகை இட்டு முட்டும்=பலகைகள் சேர்த்துச் செய்யப்பட்டு மூடுந் தன்மையதாகும், ஐயமற=திண்ணமாக மூடுவதற்கு, மேல் தாள்= அதன் பின்புறமுள்ள தாழ்ப்பாள், அடர்க்குமே=பிணிப்பாகத் தடுக்குமே, (ஆதலால்) ஆடுங்கதவும் நிகராம்=ஆடென்னும் பிராணியும் கதவும் சம மாவன, எ - று.

குதிரைக்கும், ஆட்டுக்கும்.

19. கொம்பிலையே தீனிதின்னுங் கொண்டதன்மேல் வெட்டுதலால்
அம்புவியி னன்னடைய தாதலால்—உம்பர்களும்
தேடுநற் சோலைத் திருமலரா யன்வரையில்
ஆடுங் குதிரையுநே ராம்.

உரை :—உம்பர்களும் தேடும் நற்சோலை=தேவர்களும் விருப்பத் தோடு நாடும் நல்ல பூஞ்சோலைகளையுடைய, திருமலராயன் வரையில்=திரு மலராயன் மலையின்மீது, ஆடு=ஆடானது, கொம்பிலையே தீனி தின் னும்=மரக்கிளைகளிலுள்ள இலைகளையே உணவாகக் கொள்ளும், கொண்டு அதன்மேல் வெட்டுதலால்=தீனியை உட்கொண்டு அதனை வாயில் வைத்து அசைபோடும், அம்புவியின்=அழகிய உலகில், அன்னடையது=ஒன்றைப் பின்பற்றி அதுபோல மற்றொன்று நடக்குந் தன்மை யுடையது, குதிரை= குதிரையானது, கொம்பிலையே=கொம்பு இல்லாததாகும், தீனி தின்னும்= தனக்கு வைக்கும் கொள்ளு முதலிய தீனியை உட்கொள்ளும், உண்டதன்

மேல் வெட்டுதலால் = வாயில் கொண்ட கடிவாளத்தைக் கடிக்கும் தன்மை யுடையது, அம்புவியில் நல் நடையது = அழகிய உலகத்தில் விரைவாகச் செல் லும் நல்ல கதியை யுடையது, (ஆதலால்) ஆடும் குதிரையும் சமமாகும், எ - று.

துப்பாக்கிக்கும், ஓலைச்சுருளுக்கும்.

20. ஆணி வரையுறலா லானகுறிப் பேதரலால்
தோணக் கருமருந்தைத் தோய்ந்திடலால்—நீணிலத்தில்
செப்பார்க் குதவாத் திருமலரா யன்வரையில்
துப்பாக்கி யோலைச் சுருள்.

உரை:—துப்பாக்கி = துப்பாக்கியானது, ஆணிவரை யுறலால் = ஆணி யாலே செப்பஞ்செய்து அமைக்கப்படுதலாலும், ஆனகுறிப்பே தரலால் = குறிப்பிட்ட குறியின்மீது குண்டினைச் செலுத்துதலாலும், தோணக் கரு மருந்தைத் தோய்ந்திடலால் = தன் தொழில் தோன்றும் பொருட்டுக் கருமை யான வெடி மருந்து இடப்படுதலாலும்; ஓலைச்சுருள் = ஓலைச் சுருளானது, ஆணிவரை யுறலால் = எழுத்தாணியால் எழுதப்படுதலாலும், ஆன குறிப்பே தரலால் = குறிப்பிட்ட கருத்தே தெரிவித்தலாலும், தோண = தன் எழுத் துக்கள் நன்கு விளங்கும்படியாக, கருமருந்தைத் தோய்ந்திடலால் = கருமை யான மைதீட்டப்படுதலாலும், நீள் நிலத்து = நீண்ட பூவுலகில், செப்பார்க் குதவா = தன் புகழை ஓதாதவர்களுக்குத் துணைபுரியாத, திருமலராயன் வரையில் = திருமலராயன் மலையில், துப்பாக்கி ஓலைச்சுருள் = துப்பாக்கி யானது ஓலைச்சுருளை யொத்ததாகும், எ - று.

வானவில்லுக்கும், விஷ்ணுவுக்கும், வெற்றிலைக்கும்.

21. நீரி லுளவா னிறம்பச்சை யாற்றிருவால்
பாரிற் பகைதீர்க்கும் பான்மையால்—சாருமணப்
பல்வினையை மாற்றுதலாற் பாரீர் பெருவான
வில்விண்டு நேர்வெற் றிலை.

உரை:—பெரு வானவில் நீரில் உளவால் = பெரிய வானவில்லானது மேகத்திலுள்ள நீரில் தோன்றுவது, நிறம் பச்சையால் = பச்சை நிறத் தையும் உடையது, திருவால் = மழை பெய்வதற்கு மங்கலமான அடையாள மானது, பாரில் பகை தீர்க்கும் பான்மையால் = உலகத்தில் மழைபொழியச் செய்து வறுமை நோயைத் தீர்க்கும் தன்மையுடையது, சாருமணப் பல் வினையை மாற்றுதலால் = மனிதர்கள் சம்பந்தமாய் செய்யப்படும் பல முயற்சி களையும் செய்விப்பது, விண்டு = திருமால், நீரிலுளவால் = பாற்கடலில் பள்ளிகொள்வார் நீர்க்கே தெய்வமாவர், நிறம் பச்சையால் = பச்சைநிறம் உடையவர், திருவால் = (லட்சுமி) திருமகள் தேவியாக யுடையவர், பாரீர் பகை தீர்க்கும் = உலகத்திலுள்ள அசுரர்களை யொழித்துப் பகைதீர்க்கும்

நிறமையுடையவர், சாருமனுப் பல்வினையை பற்றுதலால்=மக்களைச் சார்ந்த பலவினையையும் ஒழிக்கின்றவர்; வெற்றிலையானது நீர் உளவால்=நீரில் கனைத்துப் பயன் படுத்தப்படுவது, நிறம் பச்சை=பச்சை நிறம் உடையது, திருவால்=மங்கலப் பொருளாய் உள்ளது, பாரில் பகைதீர்க்கும் பான்மை யால்=உலகத்தில் பகை தீர்த்துச் சமாதான அடையாளமாய் உள்ளது, சாருமனுப் பல்வினையை மாற்றுதலால்=மக்களைச் சார்ந்த பல் நோயை ஒழிப்பது, (ஆதலால்) வில்விண்டு நேர் வெற்றிலை பாரீர்=வான வில்லும் திருமாலும் வெற்றிலையும் சமமென்று அறிக, எ-று. ஆல்—அசை.

பூசுணிக்காய்க்கும், பரமசிவனுக்கும்.

22. அடிநந்தி சேர்தலா லாகம் வெளுத்துக்
கொடியுமொரு பக்கத்திற் கொண்டு—வடிவுடைய
மாசுணத்தைப் பூண்டு வளைத்தழும்பு பெற்றதனல்
பூசுணிக்கா யீசனெனப் போற்று.

உரை :—பூசுணிக்காய்=பூசுணிக்காயானது, அடிநந்தி சேர்தலால்=அடியிற் காம்பு உடையது, ஆகம் வெளுத்து=மேற்பாகம் முற்றிலும் வெண்மை நிறம் உடையதாய், கொடியும் ஒரு பக்கத்திற்கொண்டு=ஒரு பக்கத்தில் கொடி படரப்பெற்று, வடிவுடைய மாசுணத்தைப் பூண்டு=காயைக் கெடாது பேணும் பளபளப்பான சாம்பல் பூசப்பட்டு, வளைத் தழும்பு பெற்றதனல்=தான் கிடக்கும் பொந்தின் அடையாளத்தைப் பெற் றுள்ளது; பரமசிவன்=சிவபெருமான், அடிநந்தி சேர்தலால்=திருவடியைக் காலை வாகனத்தில் வைத்திருப்பவர், ஆகம் வெளுத்து=பூசிய திருநீற்றி னல் திருமேனியை வெளுக்கப்பெற்று, கொடியும் ஒரு பக்கத்திற்கொண்டு=கொடிபோல்பவராகிய உமையம்மையை ஒரு பாகத்தில் உடையவராய், வடிவுடைய மாசுணத்தைப் பூண்டு=பருத்த பாம்பை அணியாக அணிந்து, வளைத்தழும்பு பெற்றதனல்=உமையம்மையின் வளையல் தழும்பு திரு மேனியில் பதியப்பெற்றவர், (ஆதலால்) பூசுணிக்காய் சிவபெருமானைப் போல்வதென்று கருதுக, எ-று.

ஓடத்துக்கும், நிதம்பத்துக்கும்.

23. பலகை யிடுமுள்ளே பருமா ணிதைக்கும்
சலமிறைக்கு மாளேறித் தள்ளும்—உலகறிய
ஓடமு மொன்றே யுலகநாதன் பெண்டிர்
மாடமு மொன் றென்றே மதி.

உரை :—பெண்டிர் மாடம்=பெண்களுடைய நிதம்பம், (அல்குல்) பல கை யிடும்=கைகளால் பல முறையாகத் தீண்டப்படும், உள்ளே பரு மாணி தைக்கும்=உட்பக்கம் எதிர்க்குறியால் பொருந்தப்படும், சலம்

இறைக்கும் = நீர் ஊறும், ஆள் எறித் தள்ளும் = ஆளினால் சார்ந்து அனுபவிக்கப்படும்; ஓடம் = தோணியானது, பலகை இடும் உள்ளே = உட்பக்கம் மரப் பலகை இட்டுச் செய்யப்பட்டுள்ளது, பரும் ஆணி தைக்கும் = பெரிய ஆணிகளால் மூட்டப்பட்டுள்ளது, சலம் இறைக்கும் = நீரில் செல்லுங்கால் நீரை வாரி இறைக்கும், ஆள் எறித் தள்ளும் = ஆட்கள் எறிச் செலுத்தப்படும், உலகறிய ஓடம் ஒன்றே உலகநாதன் பெண்டிர்மாடம் ஒன்றென்றே மதி = எல்லார்க்கும் தெரிந்தபடி மன்னனுடைய ஓடமும் பெண்டிர் அல்குலும் ஒருதன்மையன எனக் கருது, எ - று.

கரண்டகத்தக்கும், பெண்குறிக்கும்.

24. இட்டிட்டு வாங்குதலா லின்பவெள்ளே தோன்றுதலால்
மட்டிட்டு மூடி மறைத்தலால்—முட்டத்
தெருண்டோர்கள் போற்றுந் திருமலரா யன்சீர்க்
கரண்டகமும் பெண்குறியுங் காண்.

உரை :—கரண்டகம் = சுண்ணும்பு வைக்கும் சிமிளில், இட்டிட்டு வாங்குதலால் = அதிலுள்ள சுண்ணும்பு விரலினால் அடிக்கடி எடுக்கப்பட்டு மீண்டும் அதிலேயே வைக்கப்படுதலாலும், இன்பவெள்ளே தோன்றுதலால் = வெற்றிலைக்கு இனிய சுவை தரும் வெண்ணிறச் சுண்ணும்பு உடைமையாலும், மட்டிட்டு மூடி மறைத்தலால் = ஒரு அளவில் சுண்ணும்பு இடப்பட்டு அது மூடி வைக்கப்படுதலாலும்; பெண் குறி = பெண் குறியானது, இட்டிட்டு வாங்குதலால் = புணர்ச்சி செயலுக்கு உள்ளாதலாலும், இன்ப வெள்ளே தோன்றுதலால் = சுகத்திற்கு ஏதுவாகிய வெண்ணீர் தோன்றுதலாலும், மட்டிட்டு மூடி மறைத்தலால் = அளவான அரைமூடி இட்டு மறைக்கப்படுதலாலும், முட்டத்தெருண்டோர்கள் போற்றும் = நிரம்பத் தெளிந்தோர்கள் துதிக்கும், திருமலராயன் = திருமலராயனது, சீர்கரண்டகமும் பெண்குறியும் காண் = சிறந்த கரண்டகமும் பெண்குறியும் ஒப்பென்றறிக, எ - று.

25. அரகர திருச்சிற் றம்பலவா ணுவந்
தருளு பமகே சசிதம்—பரதே
வசிதம் பரதே வசிதம் பரதே
வசிதம் பரதே வனே.

உரை :—அரகர = பாவத்தை அழிக்கின்றவனே பாசத்தை ஒழிக்கின்றவனே, திருச்சிற்றம்பலவாணு = வீடுதரும் ஞான சபையில் வாழ்கின்றவனே, அந்தரரூப = சிதாகாய வடிவுடையவனே, மகேச = பெருமுதல்வனே, சிதம்பரதேவ = சிதம்பரத்தில் வாழ்கின்ற தெய்வமே, சிதம்பரதேவ = ஞான ஆடையை அணிந்த கடவுளே, சிதம்பரதேவ = ஞான ஆகாசத்தில் நடஞ்செய்பவனே, சிதம்பரதேவனே = சிதம்பரன் என்னும் திருப்பெயருடைய பெருமானே, எ - று.

புங்கங்கொம் பங்கிங் கொன்பது.

26. எங்கண் மடத்துக் கெரிகரும்பு வெட்டுதற்குப்
புங்கங்கொம் பங்கிங்கொன் பதுபுளி—யங்கொம்பங்
கிங்கொன்ப துவெட்டி நறுக்கிய வெள்வேலங்
கொம்பங் கிங்கொன் பது.

உரை:—எங்கள் மடத்துக்கு = வெட்டுதற்குத் தறித்துப் பயன் படுத் தற்குரிய, எரி கருப்பு = விறகு, அங்கு இங்கு = அங்கும் இங்குமாய்த் தறிக்கப் பட்ட, புங்கங்கொம்பு ஒன்பது = புங்க மரத்தின் கிளைகள் ஒன்பதும், அங்கு இங்கு புளியங்கொம்பு ஒன்பது = இருமூனையிலும் தறிக்கப்பட்ட புளிய மரத்தின் சட்டை ஒன்பதும், அங்கு இங்கு வெட்டி நறுக்கிய = இரு மூனை யிலும் தரித்துத் தயார் செய்த, வெள்வேலங் கொம்பு ஒன்பது = வெள்ளிய வேல மரத்தின் கொம்பு ஒன்பதும் ஆம், எ - று.

எழுத்தாணி யென்றெடுத்து சூரிக்கத்தி யென்று முடித்தது.

27. எழுத்தா ணிதுபெண் ணிதனைமுனி காதில்
வழுத்தா ரணக்குகனை வாதுக்—கழைத்ததுவும்
மாரன்கை வின்மான்முன் காத்ததுவு நன்ருகுந்
தீரமுள்ள சூரிக் கத்தி.

உரை:—எழுத்து ஆண் இது பெண் இது = எழுத்துக்களுள் ஆண் எழுத்து இன்னது பெண் எழுத்து இன்னது என்று, அனை முனி காதில் = தமிழுக்கு அன்னைபோன்ற குறு முனிவன் திருச்செவியில், வழுத்து = உப தேசம் செய்கின்ற, ஆரணக்குகனை = வேத முதல்வனை முருகப்பெருமானை, வாதுக்கழைத்தது = சண்டைக்கழைத்தது, நன்ருக தீரமுள்ள சூர் = கலமிக்க வீரமுடைய சூரபன்மனே, மாரன் கை = மன்மதன் கையிலுள்ள வில்லானது, இக்கு = கரும்பாகும், மால்முன் காத்ததுவும் = பெருமாள் முற்காலத்தில் காப் பாற்றியதும், அத்தி = யானையே, எ - று.

குறிப்பு:—சூரிக்கத்தி என்பது, சூர் இக்கு அத்தி எனப் பிரிக்கப் பட்டது.

ராமா ராமா கோவிந்தா வேங்கடவா நாராயணை
வென்று பாடியது.

28. இந்தோ திலகநுதல் ராமரா மாவனசக்
கொந்தோ களபமுலை கோவிந்தா—சந்ததமும்
வேலோ விணைவிழிகள் வேங்கடவா நல்லவயி
ருலோகா ஞரா யணை.

உரை:—ராமா ராமா = இராமனே இராமனே ! திலக நுதல் = பொட் டணிந்த நெற்றியானது, இந்தோ = பிறைச்சந்திரனே, கோவிந்தா = கோவிந்தனே ! களபமுலை = சந்தனக் கலவையணிந்த தனங்கள், வனசத்

கொந்தோ = தாமரைப் பூங்கொத்தோ, வேங்கடவா = திருவேங்கட நாதா, சந்ததமும் = எப்போதும், இணை விழிகள் = ஒத்த தன்மையுடைய இரண்டு கண்களும், வேலோ = வேலாயுதங்களோ, நாராயண = நாராயணனே, நல்ல வயிறு = அழகிய வயிறுனது, ஆலோ = ஆல் இலையோ, காண் - அசை, எ - று.

ஒன்றுமுதல் பதினெட்டு வரை வரப் பாடியது.

29. ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு வேழெட்டு
ஒன்பது பத்துப் பதினென் றுபன்னி
ரண்டுபதின் மூன்றுபதி நான்குபதி னைந்துபதி
னாறுபதி னேழ்பதி னெட்டு.

உரை:—பொருள் வெளிப்படை.

5 - டு - வரப்பாடியது.

30. ஒ, கா, மா, வீ, தோ, வுரைப்பன் டு, டு, டு, டு, டு,
நாகார் குடந்தை நகர்க்கதிபர்—வாகாய்
எடுப்பர் நடமிடுவ ரேறுவ ரன்பர்க்குக்
கொடுப்ப ரணிவர் குழைக்கு.

உரை:—நாகார் குடந்தை நகர்க்கு அதிபர் = இளைஞர் நிறைந்த கும்ப கோண நகரத்திற்கு அதிபதியாகிய சிவபெருமான், வாகாய் = அழகாக, ஓடி எடுப்பர் = திரு ஓட்டினை யெடுத்துப் பிச்சை யெடுப்பார், காடு நடம் இடுவர் = சுடுகாட்டில் நடனம் ஆடுபவர், மாடு ஏறுவர் = காளைமீது எழுந் தருளுவர், வீடு அன்பருக்குக் கொடுப்பர் = வீட்டின்பத்தைப் பக்தர்களுக்கு அளிப்பார், தோடு அணிவர் குழைக்கு = ஒரு காதில் அணிந்த குண்டலத்திற்கு நேராக மற்றொரு காதில் தோடு அணிந்து கொள்வார், உரைப்பன் = என்று சொல்லுவேன், எ - று.

குறிப்பு:—முதல் வரியின் இறுதியின் உள்ள ஐந்து டு வையும் ஒ, கா, மா, வீ, தோ, என்பவற்றோடு தனித்தனி சேர்க்க.

குடத்திலே கங்கை யடங்குமெனப் பாடியது.

31. விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த விறைவர் சடாம
குடத்திலே கங்கை யடங்கும்.

உரை:—கங்கை = கங்கைவெள்ளமானது, விண்ணுக் கடங்காமல் = ஆகாயத்தில் நின்று வீடாமல், வெற்புக் கடங்காமல் = இமய மலையில் அடங்கி நில்லாமலும், மண்ணுக்கடங்காமல் = நிலம் தாங்காதபடியும், வந்தாலும் = பெருக்கெடுத்து வேகமாய் ஓடி வந்தாலும், பெண்ணை யிடத்திலே வைத்த இறைவர் = உமா தேவியை இடப்பாகம் வைத்த சிவபெருமானுடைய, சடா

மகுடத்திலே = சடை முடியாகிய கிரீடத்தினுள்ளே, அடங்கும் = சென்று அடங்கி விடுவதாயிற்று, எ - று.

பச்சைவடம் பாகுசேலை சோமன் என்று பாடியது.

32. மாயன் துயின்றதுவு மாமலராள் சொல்லதுவும்
ஏயகுருந்திற் கொண் டேறியதும்—தூயை
இடப்பாகன் சென்னியின்மே லேறியதும் பச்சை
வடப்பாகு சேலை சோமன்.

உரை :—மாயன் துயின்றதுவும் = திருமால் பள்ளி கொண்டதும், பச்சை வடம் = பசிய நிறமுள்ள ஆல் இலையாகும், மாமலராள் சொல்லதுவும் = திருமகளுடைய சொல்லானது, பாகு சக்கரை = பாகுபோன்ற இனிமையுடையது, ஏயகுருந்திற் கொண்டேறியது = குளக்கரையிற் பொருந்திய குருந்த மரத்தின்மீது எடுத்துக்கொண்டு ஏறியது, சேலை = கோபிகாஸ்திரீகளின் புடவையே, தூயை = புனித வடிவான உமை யம்மையை, இடப்பாகன் = இடப்பாகத்தினிற் கொண்ட சிவபெருமானது, சென்னியின்மேல் = திருமுடியின்மீது, ஏறியதும் = சென்று தங்கியதும், சோமன் = சந்திரனே, எ-று.

கின்னரி வாசிக்கும் கிளியெனப் பாடியது.

33. ஆடல் புரிந்தானென்று மந்நாளிலே மூவர்
பாடலுகந் தானென்றும் பான்மையினல்—கூடலிலே
நன்னரி வாசிக்கு நடைபயிற்றி னனென்றும்
கின்னரி வாசிக்குங் கிளி.

உரை :—ஆடல் புரிந்தான் என்றும் = சிவபெருமான் நடனம் செய்தருளினர் என்றும், அந் நாளிலே மூவர் பாடலுகந்தா னென்றும் = மூன்னளிலே சமய குரவர்கள் மூவர் பாடிய தேவாரத் திருப்பாட்டுகளை விரும்பி யருளினர் என்றும், பான்மையினல் = அடியார்க்கு அருளுந் தகுதி பற்றி, கூடலிலே = மதுரையிலே, நல் நரிவாசிக்கு = நல்ல நரியாய்ப்போன குதிரைகளுக்கு, நடை பயிற்றினன் = கதிகள் பழக்குவித்தான் என்றும், கிளி = கிளியானது அல்லது கிளிபோன்ற மொழியாள், கின்னரி வாசிக்கும் = வீணை வாசிப்பாள், எ - று.

பொன்னுவரையிலை காய் பூவென்று பாடியது.

34. உடுத்ததுவு மேய்த்ததுவு மும்பர்கோன் றன்னல்
எடுத்ததுவும் பள்ளிக் கியையப்—படுத்ததுவும்
அந்நா ளெறிந்ததுவு மன்பி னிரந்ததும்
பொன்னு வரையிலை காய்பூ.

உரை :—திருமால் உடுத்ததுவும் = திருமால் அரையிற் கட்டியதும் பொன் = பீதாம்பரமே, மேய்த்ததுவும் = கோலுகச் செலுத்தியதும், ஆ = பசு மந்தையே, உம்பர்கோன் தன்னல் = தேவர்க்கரசனன இந்திரன் மழை பெய்

வித்தகின் காரணமாக, எடுத்ததுவும் = குடையாக எடுத்துப் பிடித்ததுவும், வரை = கோவர்த்தன மலையே, பள்ளிக்கு இயையப் படுத்ததுவும் = பள்ளிக் குப் பொருத்தமாக வைத்துப் படுத்ததுவும், இலை = ஆல் இலையே, அங்காள் = முன்னளில் ஒரு அசுரனைக் கொல்லுதற்காக எடுத்து எறிந்ததும், காய் = விளங்காயே, அன்பின் இருந்ததுவும் = அன்பரின் பொருட்டு மாவலிபாற் சென்று பிச்சை கேட்டதுவும், பூ = ஈரடி மண்ணுகிய பூமியே, எ - று.

இதுவுமது.

35. தோய்ந்தான்மேய்த் தான்குடையாத் தூக்கினன் மேன்மேலாச்
சாய்ந்தா னெறிந்தான்பின் சாப்பிட்டான்—ஆய்ந்துசொலும்
மன்னு வரத்தில்வரு மால்சாமி நாதாகேள்
பொன்னு வரையிலைகாய் பூ.

உரை:—ஆய்ந்து சொலும் மன்னு = எவற்றையும் ஆராய்ந்து பேசும் அரசனே! வரத்தில் வரு சாமிநாத = தவத்தினுற் பிறந்த சாமிநாத வள்ளலே, கேள் = கேட்பாயாக, மால் = திருமாலானவர், பொன் = திருமகளை, தோய்ந் தான் = கலந்து அநுபவித்தார், ஆ = பசுக்களை, மேய்த்தான் = கோகுல மடத்திச் சென்றூர், வரை = கோவர்த்தனகிரியை, குடையாத் தூக்கினன் = குடையாய் எடுத்துப் பிடித்தார், இலை = ஆல் இலையின்மீது, மேல்மேலாய்ச் சாய்ந்தார் = உடம்பு அதன்மேற் படும்படி படுத்திருந்தார், காய் எறிந்தான் = விளங்காயினை எறிந்து கொன்றூன், பூ = உலகத்தை, சாப்பிட்டான் = திரு வயிற்றில் அடக்கினன், எ - று.

செங்கழுநீர்க் கிழங்கென்று பாடியது.

36. வாதமண ரேறியது மாயன் துயின்றதுவும்
ஆதிதடுத் தாட்கொண்ட வவ்வுருவும்—சீதரனர்
தாள்கொண்ட லந்ததுவுந் தண்கச்சிக் காவலா
கேள்செங் கழுநீர்க் கிழங்கு.

உரை :—வாது அமணர் எறியது = திருஞான சம்பந்தரோடு சமய வாதஞ் செய்த சமணர் தண்டனைக்காக எறியது, செங்கழு = நோக நாட்டப்பட்ட கழுக்களாகும், மாயன் துயின்றதுவும் = பெருமான் பள்ளி கொண்டது, நீர் = கடலாகும், ஆதி தடுத்தாட்கொண்ட அவ்வுரு = முதல்வ னுகிய சிவபெருமான் சுந்தரமூர்த்தியைத் தடுத்தாட்கொள்ளுவதற்கு எடுத்து வந்த திருமேனி, கிழம் = வயோதிக வடிவமாகும், சீதரனர் = திருமால், தாள்கொண்டு = வாமனவதாரத்தில் தன்னுடைய திருவடியைக் கொண்டு, அளந்ததுவும் = அளந்து காட்டியதும், கு = பூமியாகும், எ - று.

நாரீநூரோ நென்று பாடியது.

37. அரையின் முடியி லணிமார்பி னெஞ்சில்
தெரிவையிடத் தமர்ந்தான் சேவை—புரையறவே

மானுர் விழியீர் ம, ல, ர, ண வொற் றிற்கும்
ஆனுலா நா, நீ, நூ, நே.

உரை:—மானுர் விழியீர் = மான்போன்ற பார்வையையுடையவர்களே! (சிவபெருமான்) நெஞ்சில் = தன் திரு உள்ளத்தில், நேம் = நேயத்தை, அதாவது அடியவர்களுடைய அன்பை, அமர்ந்தான் = விரும்பினவன், அணி மார்பில் = அழகிய திருமார்பில், நூல் = பூணூலை அணிந்தவன், முடியில் = தனது திருமுடியின்மீது, நீர் = கங்கையை, தரித்தவன் = தரித்தவன், அரையில் = திரு அரையில், நாண் = (பாம்பை) அரை நாணுக அணிந்தவன், தெரிவை = உமாதேவியை, இடத்து = இடப்பாகத்தில் வைத்துக்கொண்டவன், புரையறவே = குற்றம் நீங்கவே, சேவை = காளைமீது, அமர்ந்தான் = வீற்றிருந்தவன், எ - று.

குறிப்பு:—கடைசி அடியிலுள்ள ஒவ்வொரு எழுத்தோடும், மூன்றுவது அடியிலுள்ள மெய்யெழுத்தை எதிர் நிரல் நிறையாகச் சேர்ப்பதால் நேம், நூல், நீர், நாண் என்ற சொற்கள் அமைதல் காண்க.

ஈயேற மலைகுலுங்கப் பாடியது.

38. வாரணங்க ளெட்டு மகமேரு வுங்கடலும்
தாரணியு மெல்லாஞ் சலித்தனவால்—நாரணனைப்
பண்வா யிடைச்சி பருமத்தி னுலடித்த
புண்வாயி லீமொய்த்த போது.

உரை:—நாரணனே = கண்ணபிரானே, பண் வாய் இடைச்சி = பண் பாடும் வாயினையுடைய, ஆய்ச்சி = ஆயர் மகளிர், பருமத்தினுலடித்த = பருத்த மத்தினுல் அடித்ததால் உண்டாகிய, புண் வாயில் = புண்ணினிடத்தே, ஈ மொய்த்த = ஈக்கள் நெருங்கித் தங்கியபோது, வாரணங்கள் எட்டும் = எட்டுத் திக்கு யானைகளும், மகமேருவும் = பெரிய மேருவும், கடலும் = சமுத்திரமும், தாரணியும் = பூமியும், எல்லாம் சலித்தனவால் = ஆகிய எல்லாம் குலுங்கி வருத்தமுற்றன, எ - று.

கடுங்காற்று மழை காட்டும், கடுநட்புப் பகைகாட்டு மெனப் பாடியது.

39. நீரோ பிறவா நெறிகாட்டி யாரெமக்கு
நீரோ சமுசை நிலையிட்டீர்—நீரேயிவ்
விங்களமேன் செய்தீர் விடுங்கடுங்காற் றும்மழைகாட்
டுங்கடுநட் புப்பகைகாட் டும்.

உரை:—எமக்கு = எனக்கு, நீரோபிறவா நெறி காட்டியார் = நீங்களோ பிறவாத வீட்டு நெறியைக் காட்டக்கூடியவர்கள், எமக்கு = எனக்கு, நீரோ சமுசை நிலைநாட்டினீர் = நீங்களோ சோதனைக் கேள்வியை அமைத்து ஒழுங்குபடுத்தியவர்கள், நீரே இவ்விங்களம் செய்தீர் = நீங்களே இந்த வேறு பாட்டைச் செய்தீர்கள், விடுங்கடுங் காற்றும் = வீசுகின்ற கடுமையான

காற்றுனது, மழை காட்டும்=வருகின்ற மழைக்கு அறிகுறியாகும், கடுநட்பு=அளவுக்கு மிஞ்சிய நெருங்கிய நட்பு, பகை காட்டும்=பகைக்குமுன் குறியாகும், எ - று.

விநாயகர்-முருகர்-பரமசிவனுக்குச் சிலேடை.

40. சென்னிமுக மாறுளதாற் சேர்கரமுன் னுகையால்
இன்னிலத்திற் கோடொன் றிருக்கையால்—மன்னுகுளக்
கண்ணுறுத லானுங் கணபதியுஞ் செவ்வேளும்
எண்ணவரனு நேராவ ரே.

உரை :—இந்நிலத்தில்=இவ்வுலகத்தில், கணபதிக்கு சென்னி முகம் மாறுளதால்=விநாயகனுக்குத் தலையுந் திருமுகமும் மாறுக இருப்பதாலும், முன் சேர்கரம்=முன்னே பொருந்திய துதிக்கை, நாலுகையால்=தொங்குதலாலும், கோடு ஒன்று இருக்கையால்=ஒற்றைக் கொம்பு இருப்பதாலும், மன்னு குளக்கண் உறுதலானும்=வெல்லம் நிலைத்த நிவேதனமாக இருத்தலானும்; செவ்வேள்=முருகப் பெருமானுக்கு, சென்னி முகம் ஆறு உளதால்=தலையில் திருமுகம் ஆறு உள்ளன ஆனதாலும், சேர்கரம்முன் நாலுகையால்=அமைந்த திருக்கைகள் பன்னிரண்டாதலாலும், கோடு ஒன்று இருக்கையால்=கொம்புபோன்ற வள்ளி நாயகியாகிய தேவி இருத்தலால், மன்னு குளக்கண் உறுதலால்=நிலைபெற்ற சரவணப் பொய்கையில் இருத்தலாலும்; சிவபெருமானுக்குச் சென்னி முகம் ஆறு உளதால்=தலையிடத்தே கங்கையாறு இருப்பதாலும், முன் சேர் கரம் நாலு கையால்=விரும்பப்படும் திருக்கைகள் நாலு உள்ளன ஆதலானும், கோடு ஒன்று இருக்கையால்=கொம்பையுடைய காளையொன்று வாகனமாய் இருத்தலாலும், மன்னு குளக்கண் உறுதலானும்=நெற்றியிலே நிலை பெற்ற திருக்கண் இருப்பதாலும், கணபதியும் முருகப்பெருமானும் எல்லாராலும் தியானிக்கப்படும் சிவபெருமானும் சமமாவார்கள், எ - று.

மும்மூர்த்திகளின் உணவு முதலியன.

41. சிறுவ னளபயறு செந்நெற் கடுகு
மறிதிகிரி தண்டு மணிநூற்—பொறியரவம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றுழும் பூவே கறி.

உரை :—வேதன் அரன் மாலுக்கு=அயன் அரி அரன் என்பவர்களுக்கு, பயறு அளை சிறுவன் கறி=சிறு பயற்றின் சுண்டலும் வெண்ணெயும் சிறுத்தொண்டர் இட்ட பிள்ளை ஊனும் கறியாகும், செந்நெல் கு கடு=செந்நெல்லும் பூமியும் விடமும் உணவாகும், தண்டு திகிரி மறி=தண்டாயுதமும் சக்காரமும் மானும் திருக்கைகளில் தரிக்கப்படும், நூல் மணி பொறியரவம்=பூணூலும் கவுத்துவ மணியும் புள்ளிகளுடைய பாம்பும் மார்பில் அணியப்

படும், அன்னம் புள் வெற்றேறு—அன்ன வாகனமும் கருட வாகனமும் புனிதமான காளை வாகனமும் உரியன, பூ தாழம் கல்=தாமரைப் பூவும் ஆழமான நீராகிய கடலும் மலையும் இருப்பிடங்களாம், எ - று.

இராசியை அடைசொல்லில்லாமற் பாடியது.

42. பகருங்கான் மேடமிட பம்மிதுனங் கர்க்க
டகஞ்சிங்கங் கன்னி துலாம்விர்ச்—சிகந்த
நுசுமகரங் கும்பமீ னம்பன்னி ரண்டும்
வசையறுமி ராசி வளம்.

உரை :—பகருங்கால்=சொல்லுமிடத்து; மேஷம் ரிஷபம் முதலிய பன்னிரண்டும், வசையறு=குற்றமற்ற, இராசி வளம்=இராசித் தொகுதி யாகும், எ - று.

தைமாசி பங்குனி மாதமென்று பாடியது.

43. பாணர்க்குச் சொல்லுவதும் பைம்புனலை மூடுவதும்
தாணு வுரித்ததுவுஞ் சக்கரத்தோன்—ஊணதுவும்
எம்மானை யேத்துவது மீசனிடத் துஞ்சிரத்தும்
தைமாசி பங்குனிமா தம்.

உரை :—பாணர்க்கு சொல்லுவது=தையற்காரர்களுக்குச் சொல்லப் படுவது, தை=(துணியைத்) தையென்பதே, பைம்புனலை மூடுவதும்= பசுமையான நீரை மூடுவதும், மாசு=பாசியாகிய அழுக்கே, தாணுவுரித்ததுவும்=சிவபெருமான் உரித்துப் போர்த்துக்கொண்டது, இபம்=(வேள்வியில் வந்த) யானையே, சக்கரத்தோன் ஊண் அதுவும்=திருமாலுக்கு உணவாவது, கு=பூமியே, எம்மானை யேற்றுவதும்=எம்பெருமானை வழி படுவது, உனி=மனத்தில் தியானிப்பவனே, ஈசனிடத்தும்=ஈசன் இடப் பாகத்திருப்பது, மாது=உமை யம்மையே, ஈசன் சிரத்தும்=ஈசனுடைய தலைமேல் இருப்பது, அம்=நீராகிய கங்கையே, எ - று.

சிதம்பரத்திலிருக்குஞ் சின்னங்களைப் பாடியது.

44. ஞான சபைக னகசபையிற் றம்பலம்பே
ரானந்தக் கூடந் திருமூலட்—டானம்பே
ரம்பலம்பஞ் சாவரண நாற்கோபு ரம்பொற்செய்
கம்பமண்ட பஞ்சிவகங் கை.

சிறப்பாகச் சிதம்பரத்திலுள்ளன யாவை யெனில்,

உரை :—ஞான சபை=சிற்சபை, (இதில் நடேசப்பெருமான் வீற் றிருப்பது) கனகசபை=பொன்னம்பலம், (இது சிற்சபைக்கு முன்னுள் இருப்பது) சிற்றம்பலம் = நுட்பமாகிய அம்பலம், (இதில் நடராஜப் பெருமான் அருவாய் இருப்பது) பேர் ஆனந்தக்கூடம்=பேரின்ப சபை,

(இதில் கடேசர் ஊர்த்துவதாண்டவஞ் செய்வது) திருமூலட்டானம்= திருமூலத்தானம், (இதில் சிவலிங்கப் பெருமான் வீற்றிருப்பது) பேர் அம்பலம்=தேவ சபை, (இது தேவர்கள் கூட்டம் நடராஜப் பெருமானைத் துதித்து வணங்கும் இடம்) பஞ்சாவாணம்=ஐந்து பிராகாரம், நாற் கோபுரம்=நாற்றிசையிலுள்ள நான்கு பெரிய கோபுரம், பொற் செய்= அழகு செய்கின்ற, கம்ப மண்டபம்=ஆயிரக்கால் மண்டபம், சிவகங்கை= சிவகங்கை யென்னும் திருக்குளத் தீர்த்தம், (என்பன) எ - று.

திருவாரூர்ச் சின்னங்களைப் பாடியது.

45. சங்குதீர்த் தந்திருச் சாளரவா யில்வீர
சிங்காச னந்திருவந் திக்காப்புப்—பங்குனிமா
தத்திருநா டர்த்தந் திருவிழ தன்கோயில்
உத்தரபா கந்திருவா ரூர்.

திருவாரூரில் முக்கியமானது யாவையெனில்,

உரை :—சங்குதீர்த்தம்=சங்கு தீர்த்தமும், திருச்சாளர வாயில்= தியாகராஜர் திரு முன்னுள்ள பலகணி வாயிலும், வீரசிங்காசனம்=தியாக ராஜப்பெருமான் வீற்றிருக்கும் அரசிருக்கையும், திருவந்திக்காப்பு=அந்தி மாலையில் வணங்கப்படும் திருக்காப்பு வடிவமும், பங்குனி மாதத் திருநாள்= பங்குனி மாதத்தில் நடக்கும் உத்தர விழாவும், திருவின் தீர்த்தம்=கமலா லயம் என்றும் திருக்குளத் தீர்த்தமும், உத்தரபாகம் நாதன் கோயில்= அதற்கு வடபாகத்திலுள்ள சிவபெருமான் திருக்கோயிலும், ஆம் என்று அறிக, எ - று.

கேட்ட சமிஞைக்கு அப்பாவென்று முன்னும், யார்க்கு மினிது என்று பின்னுங் கூட்டச்சொன்னது.

46. அப்பா குமரகோட் டக்கீரை செவ்விலிமேட்
டுப்பாகற் காய்பருத் திக்குளநீர்—செப்புவா
சற்காற்றுக் கம்பத் தடியிற் றவங்கருமா
றிப்பாய்ச்சல் யார்க்கு மினிது.

உரை :—அப்பா=அப்பனே! காஞ்சீபுரத்தில், குமரக்கோட்டக்கீரை= குமரக்கோட்டத்தின் பக்கத்தில் பயிர் செய்யப்படுங் கீரையும், செவ்விலி மேட்டுப் பாகற்காய்=(அதற்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள) செவிலி மேடு என்னும் கிராமத்திற் பயிர் செய்கின்ற பாகற்காயும், பருத்திக்குழி நீர்=திருப்பருத்திக் குன்றத்தின் அருகிலுள்ள முழுகுதற்குரிய ஆற்று நீரும், செப்பு வாசற் காற்றும்=காஞ்சீபுரம் கோயில் தென் கோபுர வாசற் காற்றும், கம்பத்தடியில் தவம்=திருவேகம்பர் வீற்றிருக்கின்ற மாமரத் தடியில் தவம் செய்தலும், கருமாரிப் பாய்ச்சல்=கருமாரி என்பதன் கீழ்ப் பாய்ச்சலும், யார்க்கும் இனிது=எல்லாருக்கும் உவகை தருவன, எ - று.

பாதி வெண்பாவில் மாலவதாரம் பத்துஞ் சொன்னது.

47. மெச்சு புகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்
இச்சையிலுன் ஜன்ம மெடுக்கவா—மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோப்ப லாமாவா வாய்.

உரை :—மெச்சு புகழ் வேங்கடவா = சிறப்பாக உயர்த்திப் பேசப்படும் கீர்த்தியுடைய திருவேங்கட மலைநாதனே! வெண்பாவிற் பாதியில் = இவ் வெண்பாவின் கீழ்ப்பாதியில், என் இச்சையில் = என் விருப்பப்படி, உன் சன்மம் எடுக்கவா = உன்னுடைய பிறப்புகளை எடுத்துப் பேசலாமா?, மச்சா = மீன் அவதாரம் எடுத்தவனே, கூர்மா = ஆமை அவதாரம் எடுத்தவனே, கோலா = பன்றி வடிவெடுத்தவனே, சிங்கா = நரசிங்க அவதாரம் எடுத்தவனே, வாமா = வாமனனே, ராமா = பரசுராமனே, ராமா = தசரத ராமனே, ராமா = பலராமனே, கோபால = கண்ணனே, மா ஆவாய் = (இனி கலியுகத்திலே) குதிரையாய் அவதரிப்பாய், எ-று.

கும்பகோணத்தின் சின்னங்களைப் பாடியது.

48. திருக்குடந் தையா திகும்பேசர் செந்தா
மரைக்குளங் கங்கை மகங்கா—ளிரிக்கரையின்
ஓரங்கீழ்க் கோட்டங்கா ரோணமங்கை நாயகியார்
சாரங்க பாணி தலம்.

கும்பகோணத்தில் முக்கியமானவை.

உரை :—திருக்குடந்தை ஆதி கும்பேசர் = கும்பகோணத் திருப்பதி முதல்வனுகிய கும்பேசர் கோயில், செந்தாமரைக் குளம் = சிவந்த தாமரைப் பூக்குந் திருக்குளம், கங்கை மகம் = கங்கை வந்து கூடும் மாமகக்குளம், காவிரிக்கரையின் ஓரம் = காவிரிக் கரையின் சார்பிலுள்ள, கீழ்க்கோட்டம் = குடந்தைக் கீழ்க் கோட்டம் என்னும் திருப்பதி, காரோணம் = குடந்தைக் கீழ்க் காரோணம் என்னும் தலம், மங்கை நாயகியார் = மங்கை நாயகியார் கோயில், சாரங்கபாணி தலம் = சாரங்கபாணி யென்னும் பெருமான் திருக் கோயில் என்பன, எ - று.

மன்னென்றெடுத்து மலுக்கென்று முடித்தது.

49. மன்னுதிரு வண்ணு மலைச்சம்பந் தாண்டாற்குப்
பன்னுந் தலைச்சவரம் பண்ணுவதேன்—மின்னின்
இளைத்தவிடை மாத ரிவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு.

உரை :—மன்னு திருவண்ணுமலை = நிலைபெற்ற திருவண்ணுமலையில் வசிக்கின்ற, சம்பந்தாண்டான் = சம்பந்தாண்டான் என்பவருக்கு, பன்னு தலைச்சவரம் பண்ணுவதேன் = சிறப்பாகப் பேசும்படி தலைமுழுவதும் மயிர்

கழித்தல் எதற்காக எனில், மின்னின் இடை=மின்னலைப்போன்ற இடையையுடைய, இளைத்த=(அவர் பாதுகாவாமையால்) இளைப்புற்ற, மாதர்=பெண்கள், இவன்குடுமி பற்றி=அவருடைய குடுமியைப் பிடித்து; வளைத்து இழுத்து குட்டாமலுக்கு=அவர் உடம்பை வளைத்துத் தலையை இழுத்துக் குட்டுப்போடாது இருத்தற்பொருட்டு, எ - று.

சோகாமா ஏவாதா வென்று பாடியது.

50. சோ, கா, மா, ஏ, வா, தா, சொல்லின்மனைக் கூட்டியுமை
பாகார்ந்த தில்லைப் பரமேசர்—வாகாய்த்
தரித்தா ரெரித்தார் தறித்தா ருதைத்தார்
உரித்தார் கணைபடைத்தா சூர்க்கு.

உரை :—உமைபாகார்ந்த = உமையம்மை பக்கத்தில் அமரப்பெற்ற, தில்லைப்பரமேசர் = தில்லைப்பதியில் நடனம் செய்யும் சிவபெருமான், வாகாய்=அழகாக, சோமன்=சந்திரனை, தரித்தார்=தலையில் அணிந்து கொண்டார், காமன்=மன்மதனை, எரித்தார்=நெற்றிக்கண்ணால் எரித்தழித்தார், மாமன்=மாமனாகிய தக்கனை, தறித்தார்=யாகசாலையில் வெட்டித் தள்ளினார், எமன்=எமனை, உதைத்தார்=திருவடியால் உதைத்துத் தள்ளினார், வாமன்=யானையை, உரித்தார்=தோலுரித்துப் போர்த்துக் கொண்டார், தாமன்=நாராயணனை; கணை படைத்தார்=திரிபுரம் எரிக்க அம்பாய்க் கொண்டார், எ - று.

கொட்டைப்பாக் கென்றெடுத்துக் களிப்பாக்கென்று முடித்தது.

51. கொட்டைப்பாக் கும்மொருகண் கூடையைப்பாக் கும்மடியில்
பிட்டைப்பாக் கும்பாகம் பெண்பாக்கும்—முட்டநெஞ்சே
ஆரணனு நாரணனு மாதிமறை யுந்தேடும்
காரணனைக் கண்டுகளிப் பாக்கு.

உரை :—நெஞ்சே=மனமே, ஆரணனும் நாரணனும்=பிரமனும் திருமாலும், ஆதி மறையும்=பழமையான வேதமும், தேடும்=தேடுகின்ற, காரணன்=எப்பொருட்குங் காரணமான சிவபெருமான், (மதுரையிலே மண் சுமக்கச் சென்ற காலை) ஒரு கண்=அவருடைய ஒரு கண்ணானது, கொட்டைபாக்கும்=வேலை வாங்குகின்றவர்கள் அடிக்குங் கொட்டைப்பாற்கும், (ஒரு கண்)=(ஒரு கண்ணானது,) கூடையைப் பாக்கும்=மண் சுமக்கின்ற கூடையைப்பார்க்கும், (மேலும் அது) மடியில்=அவருடைய மடியிற் கட்டி வைத்துள்ள, பிட்டைப்பார்க்கும்=(பிட்டுவாணிச்சி கூலியாகக் கொடுத்த உதிர்ந்த) பிட்டினைப்பார்க்கும், பாகம் பெண் பார்க்கும்=அது அவருடைய இடப்பாகத்திலுள்ள உமா தேவியைப் பார்க்கும், காரணனை=அப் பெருமானை, முட்டக்கண்டு=நிரம்பத் தரிசித்து, களிப்பாக்கு=மகிழ்ச்சியுண்டாக்குவாயாக, எ-று.

செருப்பென்றெடுத்து விளக்குமாறென்று முடித்தது.

52. செருப்புக்கு வீரரைச் சென்றுழக்கும் வேலன்
பொருப்புக்கு நாயகனைப் புல்ல—மருப்புக்குத்
தண்டேன் பொழிந்ததிருத் தாமரைமேல் வீற்றிருக்கும்
வண்டே விளக்கு மாறே.

உரை :—செருப்புக்கு = யுத்தகளத்திற் புகுந்து, வீரரை = போர்வீரர் கள்பால், சென்றுழக்கும் = போய்த் துன்புறுத்தும், வேலன் = வேலாயுதத்தை யுடையவனுகிய, பொருப்புக்கு நாயகனை = மலைக்குத் தலைவனுகிய முருகப் பெருமானை, புல்ல = தழுவுவதற்கு, ஆறு = வழியை, மருப்புக்கு = வாசனை பொருந்தி, தண் தேன் = குளிர்ந்த தேனினை, பொழிந்த = மிகுதியாகச் சிந்திய, திருத்தாமரை மேல் வீற்றிருக்கும் = அழகிய தாமரைப்பூவின் மேல் தங்கியிருக்கும், வண்டே = வண்டுதானே, விளக்கும் = தெளிவாகக் காட்டும், எ - று.

கரியென்றெடுத்து உமியென்று முடித்தது.

53. கரியதனை யேயுரித்த கையா வளையேந்
தரியயற்கு மெட்டாத வையா—பரிவாக
அண்டரெல் லாங்கூடி யமுதங் கடைந்தபொழு
துண்டநஞ் சையிங்கே யுமி.

உரை :—கரியதனையே யுரித்த கையா = (வேள்வியில் வந்த) யானையை உரித்துப் போர்த்த கையை உடையவனே, வளை யேந்து = சங்கையேந்திய, அரி = திருமாலுக்கும், அயற்கும் = பிரமனுக்கும், எட்டாத அய்யா = அடிமுடி காண முடியாத ஐயனே, அண்ட ரெல்லாங் கூடி = தேவர்களெல்லாம் ஒருங்கு சேர்ந்து, அமுதம் கடைந்த பொழுது = திருப்பாற் கடலிலே அமிர்தத்தைக் கடைந்த பொழுது, பரிவாக = இரக்கத்தோடு, உண்ட நஞ்சை = உட்கொண்ட விடத்தை, இங்கே உமி = இவ்விடத்தில் துப்புவாயாக, எ - று.

இதுவுமது.

54. கரிக்காய் பொரித்தாள்கன் னிக்காயைத் தீய்த்தாள்
பரிக்காயைப் பச்சடியாப் பண்ணுள்—உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய்துவட்ட லாக்கினு ளத்தைமகள்
உப்புக்காண் சீச்சீ யுமி.

உரை :—உருக்க முள்ள அத்தை மகள் = என்பால் விருப்பமுள்ள கொழுந்தி, கரிக்காய் பொரித்தாள் = அத்திக்காயைப் பொரியல் செய்தாள், கன்னிக்காயைத் தீய்த்தாள் = வாழைக்காயைச் சுட்டு வைத்தாள், பரிக்காயைப் பச்சடியாய் பண்ணுள் = மாங்காய்ப் பச்சடி வைத்தாள், அப்பைக் காய் = அழகிய கத்தரிக்காயை, நெய் துவட்டல் ஆக்கினுள் = நெய்யோடு கூடிய துவட்டலாகச் செய்து வைத்தாள், (எல்லா வற்றிலும்), உப்புக்காண் = உப்பு

மிகுதியாகப் போடப்பட்டுள்ளது, சிசி யுமி = ஆதலால் அவை அருவருப்பாய்த் துப்பத்தக்கனவே, எ - று.

55. கூதிக்கெட் டேழுங் குலைந்து நடுநடுங்கிப்
பூதிக்கொப் பாகவன்றே போய்விடுமே—ஆதி
நரக்காட் டகவரியை நற்சரப மாகிச்
சுருக்கா விடினஞ் சுணி.

உரை :—நஞ்சு உணி = ஆலகால விடத்தை உண்டவனுகிய, ஆதி = முதல்வன், காண்தக = தேவர் பலரும் காணும்படியாக, நரவரியை = நரசிங்கத்தை, நற்சரபமாகி = வலிமையுள்ள சிம்புட்பறவையாகி, சுருக்காவிடின் = அடக்காவிட்டால், கூதிக்கு எட்டு = பூமியின் திக்கெட்டும், ஏழும் = ஏழு உலகங்களும், குலைந்து நடுநடுங்கி = தடுமாறி அசைவற்று, பூதிக்கு ஒப்பாக = புழுதிக்குச் சமமாக, அன்றே = அந்தக் காலத்திலேயே, போய் விடுமே = சொறுங்கி அழிந்து போய் விடும், எ - று.

சீத்துப்பூத் தென்று பாடியது.

56. அப்பூருஞ் செஞ்சடைமே லம்புலியைப் பார்த்துப்பார்த்
தெப்போதுஞ் சீத்துப்பூத் தென்னவே—முப்போதும்
வாலங்காட் டாநிற்கும் வாயங்காக் காநிற்கும்
ஆலங்காட் டான்பூ ணரா.

உரை :—ஆலங்காட்டான் = திருவாலங் காட்டில் உறையுஞ் சிவபெருமான், பூண் = திருமேனி மேல் அணிகின்ற, அரா = பாம்பானது, அப்பூரும் = கங்கை செல்லுகின்ற, செஞ்சடைமேல் = சிவந்த சடை முடி மேல் உள்ள, அம்புலியை = சந்திரனை, பார்த்துப் பார்த்து = அடிக்கடி பார்த்து, எப்போதும் = எந்த நேரத்திலும், சீத்துப்பூத்து என்னவே = சீத்துப்பூத்து என்று இரைவதுடன், முப்போதும் = முக்காலத்திலும், அங்கு வால் ஆட்டா நிற்கும் = தன்னுடைய வாலை ஆட்டிக்கொண்டு இருக்கும், வாய் அங்காக்கா நிற்கும் = (விழுங்குவதற்கு) வாயைத் திறந்துகொண்டு இருக்கும், எ - று.

பாற்கடலிற் செந்தூளெழும்பப் பாடியது.

57. சுத்தபாற் கடலி னடுவினிற் றூளி
தோன்றிய வதிசய மதுகேள்,
மத்தகக் கரியை யுரித்தவன் மீது
மதன்பொரு தழிந்திடு மாற்றம்,
வித்தகக் கமலச் செவியுறக் கேட்டாள்
விழுந்துநொந் தயர்ந்தழு தேங்கிக்,
கைத்தல மலரான் மார்புறப் புடைத்தா
ளெழுந்தது கலவையின் செந்தூள்.

உரை :—சுத்த பர்ற் கடலின் நடுவினில்=தூய்மையாகிய பாற்கடலின் மத்தியில், தளரி தோன்றிய அதிசயம் அதுகேள்=புழுதி தோன்றியதற்கு ஆச்சரியமான காரணத்தைக் கேட்பாயாக, மத்தகக் கரியை உரித்தவன் மீது=வலிய தலையையுடைய யானையை உரித்துப் போர்த்தவனுகிய சிவ பெருமான் மேல், மதன் பொருது அழிந்திடும் மாற்றம்=மன்மதன் மலர் அம்பு விடுத்துப் போர் செய்து எரிக்கப்பட்டு இறந்து போன செய்தியை, வித்தகக் கமலே=அறிவு மிக்க திருமகள், செவியுறக் கேட்டாள்=காதாரக் கேட்டு, விழுந்து சொந்து அயர்ந்து அழுது=கீழே விழுந்து வருந்தி இளைப் புற்று அழுது, கைத்தலமலரால்=பூப்போன்ற தனது திருக்கைகளால், ஓங்கி மார்புறப் புடைத்தாள்=மார்பிலே படும்படி ஓங்கி அடித்தாள், எழுந்தது கலவையின் செந்தாள்=(அவளது) மார்பிலே பூசிய காய்ந்த சந்தனக் குழம்பின் செங்கிறமான துகள்கள் புழுதிபோற் கிளம்பின, எ - று.

என்னே யிடுக்கடி, பாயைச்சுருட்டடி யேகடி யம்பலத்தே என்பதைக் கட்டளைக்கலித்துறையாகப் பாடியது.

58. தடக்கட லிற்பள்ளி கொள்வோ மதனேநற் சங்கரனூர்
அடற்புலிக் குட்டிக் களித்தன ராமது கேட்டுநெஞ்சில்
நடுக்கமுவந் துற்றது கைகா லெழாநளி னத்தியென்னே
இடுக்கடி பாயைச் சுருட்டடி யேகடி யம்பலத்தே.

உரை :—தடக்கடலிற் பள்ளி கொள்வோன்=விசாலமான பாற்கடலில் துயில்வோராகிய திருமால், அதனே=அப்பாற்கடலே, நற்சங்கரனூர்=நல்வரந் தரும் சிவபெருமானூர், அடற்புலிக் குட்டிக்கு=வலிமையுடைய வியாக்கிர பாத முனிவன் புதல்வனுகிய உபமன்யு முனிவனுக்கு, அளித்தனராம்=கொடுத்து விட்டாராம், (என்னும்) அதுகேட்டு=அச் செய்தியைக் கேட்டு, நெஞ்சில் நடுக்கம் வந்துற்றது நளினத்தி=தாமரைப் பூவிலுறையுந் தேவியே எனது உள்ளத்திற் கவலை ஏற்பட்டது, கை கால் எழா=என் கையுங் காலும் வலிமையுடன் எழுந்து இயங்க முடியவில்லை, என்னே இடுக் கடி=எனக்குத் தாங்கலாகப் பற்றிக்கொள், பாயைச் சுருட்டடி=பாயைச் சுருட்டிக்கொள், அம்பலத்தே ஏகடி=சிற்சபையின் இடத்தே செல்லுவா யாக, (என்னூர்) எ - று.

போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவா ளாவா ளிவளவளாம் என்று பாடியது.

59. செற்றலரை வென்ற திருமகளா யன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள்—மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவா ளிவளவ ளாம்.

உரை :—செற்றலரை வென்ற = பகைவர்களைத் தோற்கடித்த, திரு மலராயன் கரத்தில் = திருமலராயன் கையிலுள்ள, வெற்றிபுரியும் வாளே = ஜெயத்தை உண்டாக்கும் வாள்தான், வீரவாள் = வீரத்தை உணர்த்தும் வாளாயுதமாகும், மற்றைய வாள் = பிற வாள்கள் எல்லாம், போவாள் வருவாள் புகுவாள் ஆவாள் = போவாள் முதலிய சொற்களின் விகுதிபோலப் பயனுள்ள தொழிலைச் செய்யாத வெறுஞ் சொல்லளவிலுள்ள கருவிகளாகும். இவள் அவளாம் = இப்பெண் அத்தன்மையள் ஆவள், எ – று.

பன்றிக்கு மார்பிலே கொம்பு முளைத்தது என்று பாடியது.

60. தெருமுட்டப் பாளை சிதறிவளர் பூகத்
தருமுட்டச் செவ்வாளை தாவும்—திருமுட்டத்
தூரிலே கண்டே னெருபுதுமை பன்றிக்கு
மாரிலே கொம்பான வாறு.

உரை:—தெருமுட்ட = வீதி நிறைய, பாளை சிதறி = கமுக மடல்களைச் சிந்தி, வளர் பூகத்தரு = வளர்கின்ற கமுக மரத்தினை, முட்ட = போய்த் தாக்குவதற்கு, செவ்வாளை = (அருகிலுள்ள குளத்திலுள்ள) சிறந்த வாளை மீன், தாவும் = பாய்கின்ற செழிப்பையுடைய, திரு முட்டத்தூரிலே = ஸ்ரீ முஷ்ணம் என்னுந் திருப்பதியிலே, கண்டேன் ஒரு புதுமை = ஒரு ஆச்சரியத்தை நான் பார்த்தேன், (அதாவது) பன்றிமார்பிலே கொம்பான வாறு = பன்றி அவதாரம் எடுத்த திருமாலின் திருமார்பிலே கொம்புபோன்ற திருமகள் தங்கி இருந்த விதம் ஆகும், எ - று.

குறிப்பு:—மார்பிலே என்பது மாரிலே எனத் தொக்கு நின்றது.

மூச்சங்கத் தலைவரையும் புலவரையும் பாடியது.

61. நூலாநா லாயிரநா நூற்றுநாற் பத்தொன்பான்
பாலாநா னூற்றுநாற் பத்தொன்பான்—மேலாநாற்
பத்தொன்பான் சங்கமறு பத்துநா லாட்லுக்கும்
கர்த்தன் மதுரையிற் சொக்கன்.

உரை:—நூலால் நாலாயிர நானூற்று நாற்பத் தொன்பான் = நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது நூல்களையும், பாலாம் நானூற்று நாற்பத்தொன்பான் = அவற்றை இயற்றிய நாலாயிரத்து நானூற்று நாற்பத் தொன்பது, (4449) புலவர்களையும், மேலான் நாற்பத் தொன்பான் = கடைச் சங்கத்தின் புலவர் நாற்பத் தொன்பதின்மரையும் உடைய, சங்கம் = மூன்று சங்கங்களுக்கும், அறுபத்துநாலு ஆடலுக்கும் = அறுபத்து நான்கு திருவிளையாடலுக்கும், கர்த்தன் = தலைவர்; மதுரையிற் சொக்கன் = மதுரையில் வீற்றிருக்கும், சொக்கநாதர் ஆவர், எ - று.

அதிமதுர கவிராயன் உன் பெயரென்ன பாடத் தெரியுமா என்றதற்குப் பாடியது.

62. இம்மென்னு முன்னே யெழுநூறு மெண்ணூறும்
அம்மென்ரு லாயிரம்பாட் டாகாதோ—சும்மா
இருந்தா லிருந்தே னெழுந்தேனே யாயின்
பெருங்காள மேகம் பிளாய்.

உரை :—பிளாய்=(பிள்ளாய்) பிள்ளையே, இம்மென்னும் முன்னே=இம் மென்னும் ஓசையை ஒலிப்பதற்குள், எழுநூறு மெண்ணூறும்=எழு நூறு அல்லது எண்ணூறு பாட்டுக்களும், அம் மென்ரூல்=அம்மென்று சொல்லிய அளவில், ஆயிரம் பாட்டு ஆகாதோ=ஆயிரம் பாடல்களும் பாடி முடிந்துவிடும் அல்லவா ?, சும்மா இருந்தால் இருந்தேன்=ஒன்றும் செய்யா மல் இருந்தால் இருப்பேன், எழுந்தேனே ஆயின்=பாடக் கிளம்பிவிட்டே னெனில், பெருங் காளமேகம்=கீர் நிறைந்த பெரிய கருமுகில் போலப் பாட்டு மழை பொழிவேன், (என் பெயரும் காளமேகனே) எ - று.

கும்பகோணத்தில் சமாராதனையில் காளமேகம் சாப்பிடும்போது இவ னுக் கெதிரிலிருந்துண்ணும் சோழியப்பிராமணன் குடுமி அவிழ்ந்து இலை யில் விழுந்தது. அவன் அதை யெடுத்து உதறினன், எச்சிற்சாதம் காள மேகம் இலையில் விழுந்தபோது பாடியது.

63. சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா—திருக்குடந்தைக்
கோட்டானே நாயே குரங்கே யுனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்.

உரை :—சுருக்கவிழ்ந்த முன் குடுமிச் சோழியா=கட்டு அவிழ்ந்த முன் குடுமியை உடைய சோழியப் பிராமணனே ! (சோழநாட்டுப் பிராமணனே), சோற்றுப் பொருக்குலர்ந்த வாயா=சோற்றுப்பற்று கழுவாது காய்ந்து கிடக்கின்ற வாயை யுடையவனே ! புலையா=கீழ் மகனே, திருக்குடந்தை=கும்பகோணத் திருப்பதியிலுள்ள, கோட்டானே=ஆந்தையே, நாயே குரங்கே யொருத்தி உனை வேலையற்று போய் போட்டாளே=ஒரு பெண் வீணாக உன்னைப்போன்ற இழிவானவனைப் பெற்றுப் போட்டாள், எ - று.

காஞ்சீபுரம் வரதராஜர் கருடோற்சவத்தைக்குறித்துப் பாடிய நிந்தாஸ்துதி.

64. பெருமாளு நல்ல பெருமா ளவர்தம்
திருநாளு நல்ல திருநாள்—பெருமாள்
இருந்திடத்திற் சும்மா யிராமையினு லோயோ
பருந்தெடுத்துப் போகிறதே பார்.

உரை :—பெருமாளும் நல்ல பெருமாள் = காஞ்சீபுரத்தில் வீற்றிருக்கின்ற திருமாலும் நலந்தரும் பெருமை வாய்ந்தவரே, அவர்தந் திருநாளும் = அவருடைய திருவிழாவும், நல்ல திருநாள் = காட்சிக்குரிய திருவிழாவே, பெருமாள் இருந்திடத்திற் சும்மா யிராமையினால் = பெருமாள் வீற்றிருக்கின்ற தலத்தில் சும்மா இராமல் (அன்பருகுகு அருள் புரிவதினாலே), ஐயோ = இரக்கத்தக்க முறையாக, பருந்து எடுத்துப் போகிறது = கருடன் அவரைச் சுமந்து செல்லுகிறது பார் = அசை. (கருடவாகன சேவை பார்க்கத்தக்க தென்பது கருத்து) எ - று.

திருமலைராயன் ஆஸ்தான வித்துவான்களே நீங்கள் யாரென்று காளமேகம் கேட்டபோது, அவர்கள் கவிராயர் என்றதற்குப் பாடியது.

65. வாலெங்கே நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு
காலெங்கே யுட்குழிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்கா ணீவிர்
கவிராய ரென்றிருந்தக் கால்.

உரை :—புவிராயர் = உலகத்திலுள்ள அரசர்கள், சாலப்போற்றும் = மிகுதியாகப் பாராட்டுகின்ற, புலவீர்காள் = புலவீர்களே, நீவிர் = நீங்கள், கவிராயர் என்றிருந்தக்கால் = குரங்குத் தலைவர்கள் என்னும்படி இருப்பீராயின், வால் எங்கே — உங்களுடைய வால் எவ்விடத்திருக்கிறது, நீண்ட வயிறெங்கே = குரங்குகளுக்கு உள்ள நீளமான வயிறு எவ்விடத்திருக்கிறது, முன் இரண்டு கால் எங்கே = முன் பகுதியிலுள்ள இரண்டு கால்கள் எங்கே உள்ளன, உட் குழிந்த கண் எங்கே = உள்பக்கம் குழிந்து கிடக்கும் கண்கள் எவ்விடத்துள்ளன, எ - று.

குறிப்பு :—(கவிராயர் என்பது கபிராயர் என்பதன் மரூஉவாகக் கொள்ளப்பட்டது) கவி = குரங்கு.

சபாநாயகர் உற்சவத்தைப் பார்த்து நிந்தாஸ்துதியாகப் பாடியது.

66. நச்சரவம் பூண்டதில்லை நாதரே தேவீர்
பிச்சையெடுத் துண்ணப் புறப்பட்டும்—உச்சிதமாம்
காளமேன் குஞ்சரமேன் கார்க்கடல்போற் றுன்முழங்கும்
மேளமேன் ராஜாங்க மேன்.

உரை :—நச்சரவம் = நஞ்சையுடைய பாம்பை, பூண்ட = ஆபரணமாக அணிந்த, தில்லை நாதரே = தில்லையில் நடனஞ் செய்யும் பெருமானே, தேவீர் = சுவாமிகள், பிச்சை யெடுத்துண்ணப் புறப்பட்டும் = உண்பதற்குப் பிச்சை வாங்கப் போகுமிடத்திலும், உச்சிதமாம் = சிறந்த, காளம் என் = எக்காளம் ஊதுவது எதற்கு, குஞ்சரம் என் = யானை முன் செல்லுவது

எதற்கு, கார்க்கடல்போற் முன்முழங்கும் = கரிய கடல் போலவே ஒலிக்கும், மேளம் ஏன் = மேளம் எதற்கு, ராஜாங்கம் ஏன் = குடை கொடி முதலிய அரசாங்க சின்னங்கள் எடுப்பது எதற்காக, எ - று.

குறிப்பு :—பிச்சாடன வடிவமாய் சுவாமி எழுந்தருளியபோது இது பாடப் பெற்றது.

நாகபட்டணம் காத்தான் வருணகுலாதித்தன் சத்திரத்தில் காள மேகப்புலவர் சாப்பிட்டபோது பாடிய நிந்தையும், காத்தான் வேண்டுகோளுக்கிரங்கி அதையே துதியாகவும் பாடியது.

67. கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதி லரிசிவரும்—குத்தி
உலையிலிட வூரடங்கு மோரகப்பை யன்னம்
இலையிலிட வெள்ளி யெழும்.

உரை :—கத்து கடல் சூழ் நாகை = முழங்குகின்ற கடலாற் சூழப்பட்ட நாகப்பட்டினத்திலுள்ள, காத்தான் தன் சத்திரத்தில் காத்தான் என்பவனது சத்திரத்தில், அத்தமிக்கும்போது அரிசி வரும் = சூரியன் மாமலையில் மறையும் போது வழிப்போக்கர்க்கு உணவு சமைத்தற்குரிய அரிசி வந்து சேரும், குத்தி உலையில் இட ஊர் அடங்கும் = அரிசி கொழித்து கொதிநீரில் இடப் படுங் காலத்தில் நடு இராத்திரி ஆகும், ஓர் அகப்பை அன்னம் இலையில் இட = வழிப்போக்கர்க்கு உண்ணும்படி இட்ட இலையில் ஒரு அகப்பை சோறு வைக்கும்போது, வெள்ளியெழும் = விடி வெள்ளி தோன்றும் (சுக்கிர உதயம் ஆகும்), எ - று.

குறிப்பு :—இதற்குத் துதியாகப் பொருள் கொள்ளும்போது, (அத்தமிக்கும் போதில் = பஞ்சகாலத்தில், ஊர் அடங்கும் = உலகத்தார் மகிழ்ச்சி அடைவார்கள், அதாவது சோற்றுக்காக கூப்பிடமாட்டார்கள், வெள்ளி யெழும் = சோற்றின் வெள்ளை நிறத்திற்கு நாணி சுக்கிரன் ஓடிப்போவான், என்று பொருள் கொள்க.)

மதுரையில் மீனாட்சியம்மன் அன்னவாகனத்திலேறி வருவதை நிந்தாஸ்துதியாகப் பாடியது.

68. மாயனுர் போற்று மதுரா புரிச்சொக்க
நாயனுர் பித்தேறி னுரென்றே—நேயமாம்
கன்னன்மொழி யங்கயற்கட் காரிகையா ளையையோ
அன்னமிறங் காமலலை வாள்.

உரை :—மாயனுர் போற்றும் = திருமால் வழிபடுகின்ற, மதுராபுரி = மதுரைப்பதியில், சொக்கநாயனுர் = சொக்கநாதப் பெருமான், பித்தேறினுர் என்றே = பித்துக்கொண்டார் எனக் கருதி, நேயமாம் = அவரிடத்தில் அன்புடைய, கன்னல் மொழி = கரும்பின் சாறுபோலச் சொல்லையுடைய, அங்கையற்கண் காரிகையாள் = அழகிய கயல்மீனைப்போன்ற கண்களுடைய

(மீனாட்சி அம்மன்), அன்னம் இறங்காமல்=சோறு உட்கொள்ளப் பெறாமல், (அன்ன வாகனத்தை விட்டு இறங்காமல்) அலைவாள்=திரிவாள், (வீதியில் எழுந்தருள்வர்) ஐயோ=இது என்ன பரிதாபம், ஆச்சரியம்!, எ-று.

காஞ்சீபுரம் வரதராஜர் யானைவாகன உற்சவத்தை சிறப்பித்துப் பாடியது.

69. எட்டொருமா வெண்காணி மீதே யிருந்தகலைப்
பட்டொருமா நான்மாவிற் பாய்ந்ததே—சிட்டர்தொழும்
தேவாதி தேவன் திருவத்தியூர் வரதன்
மாவேறி வீதிவரக் கண்டு.

உரை:—சிட்டர்தொழும்=தூய வொழுக்கமுடைய பெரியார்கள் வழிபடுகின்ற, தேவாதிதேவன்=தேவர்கள் முதல்வனுகிய திருமால், திருவத்தியூர் வரதன்=காஞ்சிபுரத்தில் உள்ள அத்திகிரி என்னுந் திருப்பதியில் வீற்றிருக்கின்ற வரதராஜப்பெருமாள், மாவேறி=யானையின்மேல் ஏறி, வீதி வரக்கண்டு=தெருவில் பவனி வருவதைத் தரிசித்த ஒரு நங்கையின், எட்டொருமா வெண்காணி மீதே=அரையின்மேல், கலைபட்டு=கட்டப்பட்டிருந்த பட்டாடையானது, ஒருமா நான்மாவில் காலில் பாய்ந்தது=நழுவி விழுந்ததே, எ-று.

குறிப்பு:—ஒருமா என்பது ஒன்றை இருபது பகுதியாக்கினால் உளதாம் ஒரு பகுதி, காணி என்பது ஒன்றில் எண்பதில் ஒரு பகுதி, எட்டுமாவையும் எட்டுக்காணியும் கூட்டினால் அரையாகும், ஒருமாவும் நான்குமாவும் சேர்ந்து கால் ஆகும், அரை என்பது இங்கே இடுப்பைக் குறிக்கவும், கால்=பாதத்தைக் குறிப்பது.

காஞ்சீபுரம் விநாயக ருற்சவத்தை நிந்தாஸ்துதியாகச் சிறப்பித்துப் பாடியது.

70. மூப்பான் மழுவும் முராரிதிருச் சக்கரமும்
பார்ப்பான் கதையும் பறிபோச்சோ—மாப்பார்
வலிமிகுத்த மும்மதத்து வாரணத்தை யையோ
எலியிழுத்துப் போகின்ற தென்.

உரை:—மா=பெரிய, பார்=பருமையான, வலிமிகுத்த=பலம் அதிகமாய் உள்ள, மும்மதத்து வாரணத்தை=மும்மதம் பொழியும் யானைமுகக் கடவுளை, எலி=பெரிய எலியாகிய பெருச்சாளி, இழுத்துப்போகின்ற தென்=தன்மேல் வைத்துத் தூக்கிக்கொண்டு ஓடுவது எதனால், மூப்பான் மழுவும்=முதற் கடவுளாகிய சிவபெருமானுடைய மழுவாயுதமும், முராரி திருச் சக்கரமும்=முரன் என்னும் அசுரனைக் கொன்ற பெருமாளின் சக்கராயுதமும், பார்ப்பான் கதையும்=பிரமனுடைய தண்டாயுதமும், பறிபோச்சோ=(அவ் வெலியை அடிப்பதற்கு)ப் பயன்படாமல் களவாடப்பட்டனவோ, ஐயையோ=பரிதாபம்!, எ-று.

கிரமாலங்காரமாக முக்கால்முதல் கீழரைவரையுமுள்ள எண் வரும்படி காஞ்சீபுரத்தில் பாடிய சிலேடை.

71. முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் ரேது.

உரை :—முக்காலுக்கேகா முன் = முதுமையினால் இயற்கையாய் உள்ள இரண்டு கால்களோடு ஊன்றுகோலாகிய மூன்றுவது காலும் கொள்ளும் பருவம் வந்து (வயோதிகப் பருவம்) சேர்வதன் முன்னே, முன் னரையில் வீழா முன் = அதற்கு முற்பட்டு வரும் நரை உண்டாகும் பருவத்திற்கு முன்பாகவே, அக் காலரைக் கால்கண்டு அஞ்சாமுன் = அந்தப் பொல்லாத எமதூதரைக் கண்டு கால்கள் நடுநடுங்குவதற்கு முன்னே, விக்கி இருமா முன் = தொண்டையில் விக்கல் கண்டு இருமும் பருவம் வருவதற்கு முன்னே, மாகாணிக்கு ஏகா முன் = பெரிய பொது நிலமாகிய சுடுகாட்டிற்கு போவ தற்கு முன்னே, கச்சி = திருக் காஞ்சிப் பதியிலுள்ள, ஒரு மாவின் = ஒப்பற்ற மாமரத்தின், கீழரை = கீழே வீற்றிருக்கும் திரு ஏகம்பநாதரை, இன்று = இப்போதே, ஒது = துதித்து வழிபடுவாயாக, எ - று.

72. வண்ணங் கரியனென்றும் வாய்வேத நாறியென்றும்
கண்ணனிவ னென்றுங் கருதாமல்—மண்ணை
அடிப்பது மத்தாலே யளந்தானை யாய்ச்சி
அடிப்பது மத்தாலே யழ.

உரை :—ஆய்ச்சி = இடைச்சியானவள், மண்ணை = பூவுலகத்தை, அடிப் பதுமத்தாலே = திருவடித் தாமரையாலே, அளந்தானை = அளந்து காட்டிய திருமாலை, வண்ணங்கரிய னென்றும் = கரிய நிறமுடைய பெருமான் என்றும், வாய் வேதநாறி யென்றும் = வேதம் மணக்குந் திருவாயினையுடையவன் என்றும், கண்ணன் இவன் என்றும் = திருமாலின் அவதாரமாகிய கண்ண பிரான் அவன் என்றும், கருதாமல் = எண்ணிப் பாராமல் அல்லவா, அழ = அழும்படியாக, மத்தாலே = தயிர் மத்தாலே, அடிப்பது = அடித்தல் (நிகழ்ந்தது), எ - று.

திருசெங்காட்டுநாதரைச் சிறப்பித்துப் பாடிய நிந்தாஸ்துதி.

73. காலனையுங் காமனையுங் காட்டுசிறுத் தொண்டர்தரு
பாலனையுங் கொன்ற பழிபோமோ—சீலமுடன்
நாட்டிலே வீற்றிருந்த நாதரே நீர்திருச்செங்
காட்டிலே வீற்றிருந்தக் கால்.

உரை :—சீலமுடன் = சிறந்த ஒழுக்கத்துடன், நாட்டிலே வீற்றிருந்த நாதரே = நாடுகளிலுள்ள திருப்பதியில் தங்கியிருந்த பெருமானே, நீர் திருச்

செங்காட்டிலே வீற்றிருந்தக்கால்=நீர் சிவந்த அழகிய கானகத்தே (திருச் செங் காட்டங்குடிப் பதியிலே) தங்கி இருப்பதினாலே, காலினையும்=எமனையும், காமனையும்=மன்மதனையும், காட்டு சிறுத்தொண்டர் தரு பாலனையும்=சிறுத்தொண்டர் தமக்கு மகனாகக் காட்டிய சிறுவனையும், கொன்ற=உயிர் போக்கிய, பழிபோமோ=அபவாதம் அல்லது பாவம் போய்விடுமோ, எ - று.

74. பூநக்கி யாறுகால் புள்ளினத்துக் கொன்பதுகால்
ஆனைக்குக் கால்பதினே ழானதே—மானேகேள்
முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்ததுண்டு
கண்டதுண்டு கேட்டதில்லை காண்.

உரை :—மானே கேள்=மான் போன்ற பார்வையுடைய பெண்ணே கேட்பாயாக, பூ நக்கி=பூவினுள்ள தேனை நக்கி யுண்ணுகின்ற வண்டுக்கு, ஆறுகால்=ஆறு கால்கள் உள்ளன, புள்ளினத்துக்கு=பறவையென்னும் பிராணி வகுப்புக்கு, ஒன்பது கால்=இரண்டே கால்கள் உள்ளன, ஆனைக்குக் கால் பதினேழானதே=யானைக்கு நாலே கால்கள் உள்ளன, முண்டகத்தின்மீது முழுநீலம் பூத்ததுண்டு=சிவபெருமானது செந்தாமரை மேனியில் முழுவதும் நீல நிறமுடைய அம்மையின் திருவுருவம் உண்டு, கண்டதுண்டு=அதைப் பெரியார் தரிசித்ததுண்டு, கேட்டு அது இல்லை=நிமை ஒன்றும் அதில் இல்லை, எ - று.

குறிப்பு :—பூநக்கி என்பது - பூனைக்கு என்பதுபோல் ஒலித்து அதற்கு ஆறு கால் எப்படி உண்டு என்ற ஐயத்தை விளைப்பது ஒரு நயம், ஒன்பது கால் என்ற விடத்தும் கால் பதினேழு என்ற விடத்தும் முறையே ஒன்பதையும் பதினேழையும் கால் என்பதோடு பெருக்கியபோது இரண்டே கால் நாலே கால் என்ற வாக்கியங்கள் அமைவன. கேடு என்பது கேட்டு என்று விரித்தல் விகாரம் பெற்றது.

முருகனைப் பாடிய நிந்தாஸ்துதி.

75. அப்ப னிரந்துண்ணி யாத்தாண் மலைநீலி
ஒப்பரிய மாம னுறிதிருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிற னுறுமுகத் தானுக்கிங்
கெண்ணும் பெருமை யிவை.

உரை :—ஆறுமுகத்தானுக்கு=ஆறுமுகக்கடவுளுக்கு, அப்பன் இரந்துண்ணி=தந்தையாகிய சிவபெருமான் பிச்சை யெடுத்து உண்பவன், ஆத்தாள்=தாயாகிய பார்வதி, மலைநீலி=மலையரசன் புதல்வியாய் நீல நிறம் உடையவள், ஒப்பரிய=உவமையற்ற, மாமன்=மாமனாகிய திருமால், உறி திருடி=ஆய்ச்சியர்கள் உறியிலுள்ள வெண்ணெயைக் களவு செய்தவன், சப்பைக்கால் அண்ணன்=குறுகிய தடித்த கால்களுடைய தமையனாகிய விநாயகப் பெருமான், பெருவயிறன்=மகோதரம் போன்ற பெரிய வயிற்றை

யுடையவன், இவை எண்ணும் பெருமை = இவைகள் அவரைப்பற்றிக் கருதக் கூடிய பெருஞ் சிறப்புகள், (இங்கு - அசை), எ - று.

மதுரையிலிருக்கும் கூத்தாளென்னும் தாசியையும், அவள் தமக்கையையும், தாயையும், பாட்டியையும் சிறப்பித்துப் பாடியது.

76. கூத்தாள் விழிகணெடுங் கூர்வேலாங் கூத்தாள்தன்
மூத்தாள் விழிகண் முழுநீலம்—மூத்தாள்தன்
ஆத்தாள் விழிக ளரவிந்த மாத்தாள்தன்
ஆத்தாள் விழிகளிரண் டம்பு.

உரை :—கூத்தாள் விழிகள் நெடுங் கூர்வேலாம் = கூத்தாள் என்னுந் தாசியின் கண்கள் நீண்ட கூர்மையான வேல் போன்றவை, கூத்தாள் தன் மூத்தாள் விழிகள் = கூத்தாளுடைய அக்காளுடைய கண்கள், முழு நீலம் = முழுத் தின்மையையுடைய நீலோற்பலம் போன்றவை, மூத்தாள் தன் ஆத்தாள் விழிகள் = மூத்தாளுடைய தாயாருடைய கண்கள், அரவிந்தம் = தாமரைப் பூப்போன்றவை, ஆத்தாள் தன் ஆத்தாள் விழிகள் = தாயாருடைய தாயின் கண்கள், இரண்டம்பு = இரண்டு அம்புகள் போல்வன, எ - று.

ஒருத்தியின் பிள்ளை காளமேகப் புலவரைக் கண்டு பயந்து அழுது கொண்டு தாயாருக்குச் சொல்ல, அவள் அடகொடுப்பா வென்றதற்குப் பாடிய வசையால் அந்தப்பிள்ளை யிறந்து போக அவள் புருஷன் வேண்டுகோளுக் கிரங்கி மறுபடி அந்தப்பிள்ளை பிழைக்கும்படி பாடியது.

77. என்னைக் கொடுத்தா லிரக்கமுனக் குண்டாமோ
வன்னக் கமலமுக வல்லியே—துன்னுமதக்
காட்டானைக் கோட்டுமுலைக் காரிகையே நீபயந்த
கோட்டானைத் தானே கொடு.

உரை :—அன்னக் கமலமுக வல்லியே = அன்னம் போன்ற நடையும் தாமரைப் பூப்போன்ற முகமும் கொடிபோன்ற சாயலுமுடைய பெண்ணே, துன்னுமதக் காட்டானைக் கோட்டு முலைக் காரிகையே = மிகுந்த மதம் பொழிகின்ற காட்டில் வாழும் யானையின் கொம்புபோன்ற தனங்களுடைய பெண்ணே, என்னைக் கொடுத்தால் = என்னை உனக்கு அடைக்கலமாகக் கொடுத்தால், இரக்கம் உனக்கு உண்டாமோ = உனக்குக் கருணை என்னிடத்தில் உண்டாகுமா, நீ பயந்த கோட்டானைதானே கொடு = நீ பெற்றெடுத்த கொம்பு யானையைப்போன்ற (அல்லது ஆந்தை போன்றவனையே), கொடு = கொடுப்பாயாக, எ - று.

குறிப்பு :—கோட்டானை என்பது, ஆந்தையை என்றும், கொம்புடைய யானை யென்றும் பொருள்படும்.

விகடராமன் குதிரையைப் பழித்துப் பாடியது.

78. முன்னே கடிவாள மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போங் காத வழி.

உரை :—எந்நேரம் = எப்பொழுதும், வேதம்போம் வாயான் = வேதம் ஓதுகின்ற வாயினை யுடையவனுகிய, விகடராமன் குதிரை = விகடம் செய்வதில் வல்ல இராமையனுடைய குதிரையானது, முன்னே கடிவாளம் மூன்று பேர் தொட்டிழுக்க = அதற்கு முன் பக்கத்திலே அதன் கடிவாளத்தைப் பிடித்து மூன்று பேர் இழுக்கவும், பின்னே இருந்திரண்டு பேர் தள்ள = பின் பக்கத்தில் இருந்து இருவர் பிடித்துத் தள்ளவுஞ் செய்தால், மாதம் காதம் வழி போம் = ஒரு மாதத்திற்கு எட்டு மைல் தூரம் செல்லும், எ - று.

ஆமூர் வேங்கட முதலியார் குதிரையைப் புகழ்ந்து பாடியது.

79. ஆறும் பதினறு மாமூரில் வேங்கட்டன்
ஏறும் பரிமாவே யேற்றமா—வேறுமா
வெந்தமா சும்மா வெறுமா களிகிளற
வந்தமா சந்தமா மா.

உரை:—சந்த மாமா = அழகிய மாமாவே, ஆறும் பதினறும் ஆமூரில் = பிழைப்பதற்கு வழியும் பதினறு பேறுகளும் எற்படக்கூடிய ஆமூரிலுள்ள, வேங்கட்டன் ஏறும் பரிமாவே = திருவேங்கட முதலியார் ஏறுகின்ற குதிரையே, ஏற்றமா = உயர்ந்த குதிரையாகும், வேறுமா = மற்றக் குதிரைகள், வெந்தமா = வெந்துபோன மாவைப் போல்வது, சும்மா வெறுமா = சோம்பலாய் இருக்கின்ற பயனற்ற பிராணியாகும், களி கிளற வந்தமா = களி கிண்டுவதற்கு உரிய மாபோல்வதாகும், எ - று.

பதினறுபேறு இவையாகெனல்.

80. துதிவாணிவீரம் விசையஞ்சந்தானந் துணிவுதன
மதிதானியஞ் சௌபாக்கியம்போக மறிவழகு
புதிதாம்பெருமை யறங்குலநோவகல் பூண்வயது
பதினறுபேறுந் தருவாய்மதுரைப் பராபரனே.

உரை :—மதுரைப் பராபரனே = மதுரையில் வீற்றிருக்கும், மேலும் கீழும் ஆகிய எல்லாப் பொருளும் ஆனவனே, துதி = புகழ், வாணி = கல்வி, வீரம் = மனவுறுதி, விசையம் = வெற்றி, சந்தானம் = பிள்ளைப்பேறு, துணிவு = தயிரியம், தனம் = செல்வம், மதிதானியம் = மதிக்கப்படும் நெல் முதலிய தானியங்கள், சௌபாக்கியம் = சிறந்த சுகம், போகம் = நல்ல அனுபோகம், அறிவு = ஞானம், அழகு = அழகு, புதிதாம் பெருமை = புதிது புதிதாக எற்படக்கூடிய பெருஞ் சிறப்பு, அறங்குலம் = தருமச் சிந்தையுடைய

குடிப்பிறப்பு, கோவகல்=கோயில்லாமை, பூண் வயது=மீண்ட ஆயுசு, என்ற பதினாறு பேறும்=பதினாறு பெரும் நன்மைகளையும், தருவாய்=கொடுத்தருள்வாயாக, எ - று.

திருவாரூர் தியாகராயரது சிறந்த நடனத்தைக் கண்டு இகழ்வதுபோற் புகழ்ந்து பாடியது.

81 ஆடாரோ பின்னையவ ரன்பரெலாம் பார்த்திருக்க
நீடாரூர் வீதியிலே நின்றுதான்—தோடாரும்
மெய்க்கே பரிமளங்கள் வீசுந் தியாகேசர்
கைக்கே பணமிருந்தக் கால்.

உரை :—தோடாரும்=தோடுகள் காதில் பொருந்தப்பெற்ற, மெய்க்கே பரிமளங்கள் வீசும்=திருமேனியிலே வாசனைப் பொருள்கள் மணக்கும், தியாகேசர்=தியாகராஜப் பெருமான், கைக்கே பணம் இருந்தக்கால்=தமது கையில் பணம் (பாம்பு) இருக்கும்போது, அவர் அன்பர் எல்லாம் பார்த்திருக்க=அடியவர்கள் எல்லாம் பார்த்திருக்க, ஆரூர் வீதியிலே நின்று=திருவாரூர் தெரு வீதியிலே நின்று, ஆடாரோ=ஆடல் செய்ய மாட்டாரோ, எ - று.

குறிப்பு :—திருக்கரத்தில் பாம்பைக் கங்கணமாக அணிந்திருத்தலால் பணம் என்ற சொல் இரு பொருள்பட அமைக்கப்பட்டது. பின்னே என்பது பணம் கையில் வந்த பின்புதான் ஆடுகின்றார் என்ற கருத்தை உணர்த்துகிறது.

மாயூரநாதர்மேற் பாடிய நிந்தாஸ்துதி.

82. வள்ளலெனும் பெரிய மாயூர நாதருக்கு
வெள்ளிமலை பொன்மலையு மேயிருக்கத்—தெள்ளுமையாள்
அஞ்சலஞ்ச லென்றுதின மண்டையிலே தானிருக்க
நஞ்சுதனை யேனருந்தி னர்.

உரை :—வள்ளல் என்னும் பெரிய மாயூரநாதருக்கு=கொடையாளி யென்னும் பெருமையையுடைய மாயூரம் என்னுந் திருப்பதியில் இருக்குஞ் சிவபெருமானுக்கு, வெள்ளிமலை பொன்மலையுமே இருக்க=கயிலையாகிய வெள்ளிமலையும் மேருவாகிய பொன்மலையும் சொந்தமாய் இருக்கும்போது, தெள் உமையாள்=தெளிந்த அறிவுடைய உமையம்மை, தினம்=நாள்தோறும், அஞ்சல் அஞ்சல் என்று=பயப்பட வேண்டாம் பயப்பட வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு, அண்டையிலே இருக்க=பக்கத்திலே இருக்கவும், நஞ்சுதனை யேன் அருந்தினர்=(பிழைப்பதற்கு வழி ஒன்றும் இல்லாதவர்போல) விஷத்தை யேன் உண்டார், எ - று.

குறிப்பு :—மாயூரம் என்பது இப்போது மாயவரம் என்று வழங்குகிறது.

மதுரை மீனாட்சியம்மையார்மீது பாடிய நிந்தாஸ்துதி.

83. நல்லதொரு புதுமை நாட்டிற்கண்டே னதனைச்
சொல்லவா சொல்லவா சொல்லவா—தொல்லை
மதுரைவிக்கி னேச்சுரனை மாதுமையாள் பெற்றருள்
குதிரைவிற்க வந்தவனைக் கூடி.

உரை :—நல்லதொரு புதுமை நாட்டிற் கண்டேன்=மிகவும் அதிசயமான ஒரு செய்தியைத் தேசத்திற் கண்டேன், அதனைச் சொல்லவா சொல்லவா=அதனைச் சொல்லலாமா சொல்லலாமா, தொல்லை மதுரைப் பதியில்=பழமையான மதுரைப்பதியில், மாது உமையாள்=உமாதேவியார், குதிரை விற்க வந்தவனைக் கூடி=மாணிக்கவாசகர் பொருட்டுக் குதிரை விற்க வந்த சிவபெருமானைச் சேர்ந்து, விக்கினேசுவரனைப் பெற்றருள்=கணபதியைப் பிள்ளையாகப் பெற்றார், எ - று.

கீரைக்காரச் சிறுமியின் இடையையும் முலையையும் வியந்தது.

84. வெள்ளை யானேறும் விமல ரடிபணியும்
பிள்ளையான் வாழும் பெருந்தெருவில்—வள்ளை
இலைக்கறிவிற் பாண்மருங்கு லிற்றுவிடு மென்று
முலைக்கறிவிப் பாரிலையே முன்.

உரை :—வெள்ளை ஆன் ஏறும்=வெண்ணிறமாகிய காளைமீது எழுந்தருளும், விமலர்=குற்றமற்ற சிவபெருமானுடைய, அடி பணியும்=திருவடிகளைப் பணிகின்ற, பிள்ளையான்=குழந்தையாகிய நான், வாழும் பெருந்தெருவில்=குடி இருக்கின்ற பெரிய வீதியில், வள்ளை இலைக்கறி விற்பாள்=வள்ளைக்கொடிக்கீரையைக் கறி சமைப்பதற்காக விற்கின்றவளுடைய, மருங்குல்=இடையானது, இற்று விடும் என்று=(மேல் இருந்து அழுத்தினால்) ஒடிந்துவிடும் என்று, முலைக்கு=அவளுடைய தனங்களுக்கு, முன்=முன்னே, அறிவிப்பார் இலையே=தெரிவிப்பார் இல்லையே, எ - று.

குறிப்பு :—தனங்கள் பருத்தும் இடை ஒடுங்கியும் இருப்பன என்பது கருத்து.

அருணாசலப் பெருமானை வணங்கும்போது புகழ்ந்து பாடியது.

85. சட்டியிலே பாதியந்தச் சட்டுவத்தி லேபாதி
இட்டகலத் திற்பாதி யிட்டிருக்கத்—திட்டமுடன்
ஆடிவந்த சோணை சரன்றழைத்த போதுபிள்ளை
ஓடிவந்த தெவ்வா றுரை.

உரை :—(அடியவராக வந்த சிவபெருமானுக்குச் சிறுத்தொண்டர் சமைத்துப் படைத்த பிள்ளைக் கறியானது) சட்டியிலே பாதி=பாத்திரத்திலே ஒரு பகுதியும், அந்தச் சட்டுவத்திலே பாதி=அந்தப் பாத்திரத்திலே போட்ட அகப்பையிலே ஒரு பகுதியும், இட்ட கலத்தில் பாதி யிட்டிருக்க=

உண்ணும்படி போடப்பட்ட இலையில் ஒரு பகுதியுமாய் இருக்கவும், திட்ட முடன் ஆடி வந்த சோணைசர் = உறுதியாய்த் திருவிளையாடல் செய்ய வந்த திருவண்ணுமலை நாதராகிய சிவபெருமான், அன்று அழைத்தபோது = அந்நோத்தில் பிள்ளையை அழைப்பித்தபோது, பிள்ளை ஓடிவந்தது எவ்வாறு உரை = கறியாக்கப்பட்ட குழந்தை உயிரோடு ஓடி வந்தது எவ்வாறு என்று சொல்வாயாக, எ - று.

ஏகாம்பரநாதரைச் சொப்பனத்திற் கண்டு பெண்ணோடு பரிகாசமாடியத் தன்மை யமைத்துப் பாடியது.

86. நேற்றிராவந் தொருவ னித்திரையிற் கைப்பிடித்தான்
வேற்றூரா னென்று விடாயென்றேன்—ஆற்றியே
கஞ்சிகுடி யென்ருன் களித்தின்று போவென்றேன்
வஞ்சியரே சென்ருன் மறைந்து.

உரை :—வஞ்சியரே = தோழியரே, நேற்று இரா ஒருவன் வந்து நித்திரையில் கைப்பிடித்தான் = நேற்று இராத்திரி ஒருத்தன் வந்து சோறு வேண்டுபவன் போல இரு கையையும் ஒன்று சேர்த்துக் காட்டினன்; நித்திரையில் = தூக்கத்தில், கைப்பிடித்தான் = கணவன்போலக் கையைப் பிடித்தான் என்று சினந்து, வேற்று ஊரான் என்று = அதன் அயலூரான் என்று கருதி, விடாய் என்றேன் = விட்டுவிடு என்று சொன்னேன், ஆற்றியே = சற்றுப் பொறுத்தே, கஞ்சி குடி யென்ருன் = காஞ்சிபுரத்தில் குடி இருப்பது என்ருன், (விடாய் என்ற சொல்லை தாகம் என்றும் பொருள் படுத்திக்கொண்டு, ஆற்றியே கஞ்சி குடி என்ருன், சுடுகின்ற கஞ்சியை ஆறவைத்துக் குடி என்று சொன்னான்), களித்து இன்று போவென்றேன் = (கணவன் என்று அறிந்து) இன்று சுகம் நுகர்ந்து செல்லுக என்றேன் (களியைத் தின்று போவெனச் சொல்லுவதாகக் கருதி), மறைந்து சென்ருன் = நான் பார்க்க முடியாமல் ஒடிப்போய்விட்டான், கண்டீரோ பெண்காள் = பெண்களே அவனைப் பார்த்தீர்களோ?, எ - று.

ஆலவாய்ப்பெருமானே இகழ்வதுபோற் புகழ்ந்து பாடியது.

87. கண்டீரோ பெண்காள் கடம்பவனத் தீசனுர்
பெண்டீர் தமைச்சுமந்த பித்தனுர்—எண்டிசைக்கும்
மிக்கான தங்கைக்கு மேலே நெருப்பையிட்டார்
அக்காளை யேறினு ராம்.

உரை :—கடம்ப வனத்து ஈசனுர் = கடம்பவனத் திருப்பதியாகிய மதுரையில் வீற்றிருக்குஞ் சிவபெருமான், பெண்டீர் தமைச்சுமந்த பித்தனுர் = கங்கையாகிய பெண்ணைத் தலையிலும், உமையம்மையை = இடப் பாகத்திலும் வைத்துச் சுமந்த பைத்தியக்காரர், எண்டிசைக்கும் மிக்கான தங்

அங்கைக்கு = எட்டுத் திசையிலும் மிகுதியாகப் புகழ்ந்து பேசப்படுவதாகிய அழகிய திருக்காத்தின்மீது, நெருப்பை யிட்டார் = அக்கினியை வைத் திருப்பவர், அக்காளே யேறினராம் = கீர்த்தி பெற்ற அந்த நந்திவாகனத்தின் மீது வீற்றிருப்பவரே, எ - று.

குறிப்பு :—தங்கைக்கு அக்காளே என்பன சொல்லளவில் இழிவைக் காட்டும்.

சிதம்பரத்தில் சிவகாமியம்மையைக் கண்டு பாடிய சிந்தாஸ்துதி.

88. மாட்டுக்கோன் றங்கை மதுரைவிட்டுத் தில்லைநகர்
ஆட்டுக்கோ னுக்குப்பெண் டாயினள்—கேட்டிலையோ
குட்டி மறிக்கவொரு கோட்டானையும் பெற்றருள்
கட்டிமணிச் சிற்றிடைச்சி காண்.

உரை :—கேட்டிலையோ = பெண்ணே! நீ இந்தச் செய்கையைக் கேட்க வில்லையா, மாட்டுக்கோன் தங்கை = மாடுகளைக் காக்குங் கோபாலனுடைய தங்கையாகிய பார்வதி, மதுரை விட்டு = தான் அங்கையற்கண்ணியாய்த் தோன்றி வளர்ந்த மதுரையில் நீங்கி, தில்லை நகர் ஆட்டுக்கோனுக்குப் பெண்டாயினள் = தில்லைப்பதியாகிய சிதம்பரத்தில் நடனம் செய்யும் கூத்தப் பெருமானுக்கு மனைவி யாயினள், கட்டிமணிச் சிற்றிடைச்சி = மேகலை யாடையை அரையில் கட்டிய ஒடுங்கிய இடையை யுடையவளாகிய அவள், குட்டி மறிக்க = நாம் தலையிலே குட்டிக்கொண்டு வணங்கும்படி ஒரு, கோட்டு ஆனையையும் பெற்றருள் = ஒரு கொம்பை யுடைய ஆனைமுகக் கடவுளையும் பெற்றருள், எ - று.

தில்லை நடராசப்பெருமானைப் பாடிய சிந்தாஸ்துதி.

89. நாட்டுக்கு ளாட்டுக்கு நாலுகா லேயாநின்
ஆட்டுக் கிரண்டுகா லானலும்—நாட்டமுள்ள
சீர்மேவு தில்லைச் சிவனேயிவ் வாட்டைவிட்டுப்
போமோசொல் லாயப் புலி.

உரை :—சீர் மேவும் தில்லைச் சிவனே = புகழ் பொருந்திய தில்லைப்பதி யில் வீற்றிருக்கும் சிவபெருமானே, ஐயா நாட்டுக்குள் ஆட்டுக்கு நாலுக் கால் = உலகத்திலே ஆடு என்னும் பிராணிக்குக் கால்கள் நான்கே, நின் ஆட்டுக்கு = உன்னுடை கூத்திற்குப் பயன்படுத்துவது இரண்டு கால் ஆனா லும் = இரண்டு திருவடியே ஆனாலும், அப்புலி = கீர்த்திபெற்ற புலி முனி யாகிய வியாக்கிரபாதர், நாட்டமுள்ள இவ் ஆட்டைவிட்டு = விரும்பத்தக்க இந்தத் திருக்கூத்தினைப் பாராமல் நீங்கி, போமோ சொல்லாய் = போவாரோ சொல்வாயாக, எ - று.

சிதம்பரத்தில் சிவபிரானது பிக்ஷாடனத் திருக்கோலத்தைக் கண்டு பாடிய சிந்தாஸ்துதி.

90. தாண்டி யொருத்தி தலையின்மே லேருளோ
பூண்டசெருப் பாலொருவன் போடானே—மீண்டொருவன்
வையானே வின்முறிய மாட்டானே தென்புலியூர்
ஐயாநீ யேழையா னில்.

உரை :—தென்புலியூர் ஐயா நீ ஏழையானால்=அழகிய புலியூராகிய சிதம்பரத்தில் வீற்றிருக்கும் அப்பனே! நீ எளியவனானால், ஒருத்தி தாண்டி தலையின்மேல் ஏறுளோ=கங்கையாகிய பெண் உனது திருமுடி மேல் தாவி ஏறமாட்டாளா, ஒருவன் பூண்ட செருப்பால் போடானே=ஒப்பற்ற அன்புடைய கண்ணப்பர் தான் காலில் போட்டிருந்த செருப்பை உன் கண் பக்கம் வைக்கமாட்டாரோ?, மீண்டும் ஒருவன்=இன்னும் ஒருவன் (அர்ச்சுனனாகிய ஒப்பற்ற வீரன்), வையானே வில் முறிய மாட்டானே=உம்மை யேசித் தன் வில் முறிய உம்மை அடிக்கமாட்டாரோ?, எ - று.

சிதம்பரத்திற் சபாநாயகரை வணங்கிப் பாடிய சிந்தாஸ்துதி.

91. கொங்குலவுந் தென்றில்லைக் கோவிந்தக் கோனிருக்கக்
கங்குல்பக லண்டர்பலர் காத்திருக்கச்—செங்கையிலே
ஒடெடுத்த வம்பலவா வோங்குதில்லை யுட்புகுந்தே
ஆடெடுத்த தெந்த வுபாயம்.

உரை :—கொங்குலவுந் தென்றில்லைக் கோவிந்தக் கோன் இருக்க=வாசனை பரிமளிக்கப்பெற்ற அழகிய தில்லைக் கோவிந்தராகிய காத்தற் கடவுள் இருக்கவும், கங்குல் பகல்=இரவும் பகலும், அண்டர் பலர்=தேவர் பலர், காத்திருக்க=உம்மை வழிபடக் காத்திருக்கவும், செங்கையிலே ஒடு எடுத்த அம்பலவா=செம்மையான உமது திருக் காத்திலே திருவோட்டினை எடுத்துப் பிச்சைக்குப் போன சபாபதியே நீர், ஓங்கு தில்லையிற் புகுந்த=சிறப்பு மிகுந்த தில்லை அம்பலத்திலே புகுந்து, ஆடு எடுத்தது=கூத்தாடத் தொடங்கியது, எந்த உபாயம்=எந்த சூழ்ச்சிக்காக (அல்லது) என்ன தந்திரம்?, எ - று.

குறிப்பு:—(ஆடு எடுத்தது - ஆட்டைத் தூக்கினது என்ற தொனிப் பொருள் பயக்கும்.)

திருவொற்றியூர் தியாகேசப்பெருமானது திருநடனத்தைத் தரிசித்து இகழ்வதுபோற் புகழ்தல்.

92. ஆடுந் தியாகரே யாட்டமேன் ருனுமக்கு
வீடுஞ் சமுசார மேலிட்டுக்—கூடிச்
செருக்கி விளையாடச் சிறுவரிரண் டாச்சே
இருக்குமு ரொற்றி யாச்சே.

உரை :—ஆடும் தியாகரே = கூத்தாடுந் தியாகராஜப் பெருமானே!, உமக்கு ஆட்டம் என் தான் = மகிழ்ச்சியைக் காட்டத்தக்க கூத்தாட்டம் எதற்கு?, வீடும் சமுசாரம் மேலிட்டு கூடி = மனை மக்கள் முதலிய குடும்பக் கூட்டம் அதிகப்பட்டு மிகுந்து, செருக்கி விளையாடச் சிறுவர் இரண் டாச்சே = கருவத்தோடு விளையாடுவதற்கு ஆண்மக்கள் இரண்டுபேர் இருக்கி றார்களே, இருக்கும் ஊர் ஒற்றியாச்சே = நீர் தங்கி இருக்கும் இடம் ஒத்திக்கு வைக்கப்பட்டு இருக்கிறதே (அதாவது) திருவொற்றியூர் ஆயிற்றே, எ - று.

மாவடுவைப் பற்றிப் பாடியது.

93. திங்க ணுதலார் திருமனம்போ லேகீறிப்
பொங்குகட லுப்பைப் புகட்டியே—எங்களிட
ஆச்சாளுக் கூறுகா யாகாம லாருக்காக்
காய்ச்சாய் வடுகமாங் காய்.

உரை :—வடுகமாங்காய் = சாதிமாங்காயே, அல்லது (மாவடுவு), திங்கள் நுதலார் திரு மனம் போலே கீறிப் = பிறைபோன்ற பெண்டிரது அழகிய உள்ளம்போலக் கீறப்பட்டு, பொங்கு கடல் உப்பைப் புகட்டியே = கொந் தளிக்கின்ற கடலினின்று எடுக்கப்படுகின்ற உப்பு செலுத்தப்பட்டு, எங்க ளிட ஆச்சாளுக்கும் = என்னுடைய தாயாருக்கு, ஊறுகாய் ஆகாமல் = தின் னக்கூடிய ஊறுகாய் ஆகாமல், ஆருக்காக் காய்ச்சாய் = யார் பொருட்டு நீ காய்த்திருக்கிறாய்?, எ - று.

ஸ்ரீரங்கத்தார் பெருமான் உலகத்தை யுண்டபோது சிவன் எங்கேயிருந்தார் என்றதற்குச் சொல்லியது.

94. அருந்திரு ணண்டமெலா மன்றுமா லீசன்
இருந்தபடி யேதென் றியம்பப்—பொருந்திப்
பருங்கவளம் யானைகொளப் பாகன்தன் மீதே
இருந்தபடி யீசனிருந் தான்.

உரை :—அன்றுமால் அருந்திரு அண்டம் எல்லாம் = முற்காலத்தில் திருமால் உலகங்களே எல்லாம் தன் வயிற்றில் அடக்கினன், ஈசன் இருந்தபடி யேதென்றியம்ப = (அப்போது) சிவபெருமான் இருந்த முறை யாது என்று (வைணவர் வினவ), பொருந்தி பருங்கவளம் யானை கொள = யானையானது பருமையான உணவு உருண்டையை எடுத்து உட்கொள்ளுங்கால், பாகன் அதன் மீதே இருந்தபடி = யானைப்பாகன் அந்த யானையின் மீது இருந்தது போல, ஈசன் இருந்தான் = சிவபெருமான் வீற்றிருந்தார் என்க, எ - று.

95. ஆண்டி குயவா வடாவுன்பெண் டாட்டிதனைத்
தோண்டியென்று கேட்டேன் முரத்தினுள்—வேண்டியிரு

கைக்கரகங் கேட்டேனுன் காலதனைத் தூக்கியே
சக்கரத்தைக் காட்டினு டான்.

உரை :—ஆண்டி குயவா = ஏழைக் குயவனே, அடா = கண்பனே, உன் பெண்டாட்டிதனை = உன் மனைவியைப் பார்த்து, தோண்டி யொன்று கேட்டேன் = குடம் ஒன்று வேண்டுமென்று கேட்டேன், துரத்தினுள் = அவள் என்னை ஓட்டினுள், வேண்டியிரு கைக்கரகம் கேட்டேன் நான் = அவளை மன்றாடி இரண்டு சிறு கலசங்கள் வேண்டுமென்று நான் கேட்டேன், காலதனைத் தூக்கியே சக்கரத்தைக் காட்டினுள்தான் = காலை எடுத்து சும்மா கிடக்கின்ற தண்ட சக்கரத்தைக் காட்டிப் பாண்டங்கள் ஒன்றும் வனைய வில்லை என்று குறிப்பித்தாள், எ - று.

குறிப்பு :—தோண்டி என்பதற்கு தோண்டப்படும் இடம் என்று பொருள் கொண்டு அல்கு லென்பதை அது குறிக்குமென்றும், கைக்கரகம் என்பதற்கு கையினால் பிடிக்கப்படும் கலசம்போன்ற தனங்களென்றும், காலைத் தூக்கிச் சக்கரத்தைக் காட்டினுள் என்பதற்கு காலைத்தூக்கி அல்குலைக் காட்டினுள் என்றும் இழிவு பொருள் கூறுவாரும் உண்டு.

ககரவருக்கப் பாட்டு.

96. காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை
கோக்குக்கூ காக்கைக்குக் கொக்கொக்க—கைக்கைக்குக்
காக்கைக்குக் கைக்கைக்கா கா.

உரை :—காக்கைக்கு ஆகா கூகை = காக்கைக்குப் பகை கோட்டான், கூகைக்கு ஆகா காக்கை = கோட்டானுக்கு அடங்காதது காக்கை, (பகலில் காக்கை கூகையை வெல்லும் இரவில் கூகை காக்கையை வெல்லும்) கோக்கு = அரசன் பொருட்டு, கூ = பூமியை, காக்கைக்கு = காப்பாற்று வதற்கு, கொக்கு ஒக்க = கொக்கைப் போலச் சமயம் பார்த்துக் காரியத்தை முடிக்க வேண்டும், கைக்கைக்கு = பகை யெதிர்த்து, காக்கைக்கு = காப்பாற்றுதற்கு, கைக்கு ஐக்கு = சாமர்த்தியமுடைய தலைவனுக்கும், ஆகா = (காலவாய்ப்பின்றி) முடியாது, எ - று.

தகரவருக்கப் பாட்டு.

97. தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி துதைதத்தா தூதுதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது.

உரை :—வண்டே! தத்தி தாது ஊது = பாய்ந்து மகரந்தத்தை ஊதுகின்றாய், தாது ஊதித் தத்துதி = மகரந்தத்தை ஊதிப் பாய்கின்றாய், துத்தி = து, தி, என்று சத்தமிட்டு, துதைதி = பூவினை நெருங்குகின்றாய், துதைந்து அத்தாது ஊதுதி = நெருங்கி அந்தப் பூவை ஊதுகின்றாய், தித்த

நித்த நித்தித்த = மிகவும் இனிமையான, தாது எது = பூ எது, நித்தித்தது எத்தாதோ = இனிமையானது எப் பூவின் மகரந்தம்?, நித்த தாது = அழகிய இதழ் (யாது), எ - று.

குறிப்பு :—துதைந்து என்பது துதைத்து என வலித்தல் விகாரம் பெற்றது. தாது என்பது பூந்தாது, பூவிதழ், பூ என்ற மூன்றையுங் குறிக்கும்.

வல்லினப் பாட்டு.

98. துடித்துத் தடித்துத் துடுப்பெடுத்த கோடல்
தொடுத்த தொடைகடுக்கை பொற்போற்—பொடித்துத்
தொடைபடைத்த தோடுடித்த தோகைகூத் தாடக்
கடிபடைத்துக் காட்டித்துக் காடு.

உரை :—கோடல் = காந்தள் பூவானது, துடித்துத் தடித்து = தோன்றி மின்னி, துடுப்பெடுத்த = அரும்புகள் எடுத்தன, கடுக்கை = கொன்றையானது, பொன்போல் = பொன் மாலை போல, தொடை தொடுத்த = பூமாலையைத் தொங்கவிட்டன, தொடை படைத்த தோள் = வேளையிலை அணிந்த தோளானது, பொடித்துத் துடித்த = சிலிர்த்துத் துடியா நின்றன, தோகை கூத்தாட = மயில்கள் கூத்தாடின, காடுகடி படைத்துக் காட்டித்து = காடானது வாசனை வீசிக் காட்டியது, எ - று.

குறிப்பு :—கூத்தாடின என்பது கூத்தாட எனத் தொக்கு நின்றது.

மெல்லினப் பாட்டு.

99. மானமே நண்ணு மனமென் மனமென்னும்
மானமான் மன்னு நனிநாணும்—மீனமா
மானு மினன்மின்னி முன்முன்னே நண்ணினும்
மானு மணிமேனி மான்.

உரை :—மானமே நண்ணு மனம் என் = பெருமையை விரும்பாத மனம் எத்தகையது, ஆனு மணி மேனி மான் = நீங்காத இரத்தினங்களை பணிந்த அழகிய உருவுடைய மான்போன்ற பெண், ஆனு மினல் மின்னி = தனது கைகளில் நீங்காத மின்னொளி வீசிக்கொண்டு, முன் முன்னேநண் ணினும் = மிகவும் முற்பட்டு வந்தடைந்தாலும், என் மனமென்னும் மான மான் = என மனமாகிய பெரிய ஆனை, மன்னு = நிலை பெறாது, நனி நாணும் = மிகவும் வெட்கப்பட்டு, ஈனமாம் = இழிந்து நிற்கும், எ-று.

இடையினப் பாட்டு.

100. விரவலராய் வாழ்வாரை வெல்வா யொழிவா
யிரவுலவா வேலை யொலியே—வரவொழிவா
யாயர்வா யேயரிவை யாருயிரை யீராவோ
யாயர்வாய் வேயோ வழல்.

உரை :—வேலையின் ஒலியே = கடலின் ஓசையே, வீரவலாய் வாழ் வாரை = பிறரோடு கலவாமல் தனிமையாய் இருந்து வாழ்வோரை, வெல் வாய் = அடக்கி வெற்றி பெறுவாய், ஒழிவாய் = நீ நீங்குவாய் ஆக, இரவு உலவாய் = இராத்திரி நீ உலவுதல் கூடாது, வரவு ஒழிவாய் = வராமல் தொலைவாய், ஆயர் வாயே = தாயரின் வாய்ப்பேச்சே, அரிவை ஆருயிரை = மங்கையின் அருமையான உயிரை, ஈராவோ = பிளந்து கொல்லப் போது மானதே, ஆயர் வாய் = இடையர் வாயில் வைத்து ஊதுகின்ற, வேய் = புல்லாங்குழல், அழல் = நெருப்புப்போலத் துன்புறுத்துகிறது, எ - று.

தென்றற்காற்று வராமையாற் பாடியது.

101. அம்பேந்து கையா னவன்பதியி லம்மாவைக்
கொம்பேந்தி தந்தைபணி கொண்டதோ—அன்பா
அரிந்த மகவை யமுதுக் கழையென்
றிருந்தவன்றன் செங்காட்டி லே.

உரை :—அன்பாய் = பத்தியினாலே, அரிந்த மகவை = சிறுத்தொண்டர் அரிந்து கறி சமைத்த பிள்ளையை, அமுதுக்கு அழை என்று = உடன் உண்ணுதற்கு அழைப்பாய் என்று, ஏவி = அழைத்து, இருந்தவன் தன் = வீற்றிருந்த சிவபெருமானுடைய, செங்காட்டில் = திருச்செங் காட்டங் குடியிலே, அம்பு ஏந்து கையான் = தண்ணீர்க் கமண்டலத்தை (அல்லது ஏழு கடலையும்) தாங்கிய, கையை யுடையவனாகிய = திருக்காத்தை உடையவ ராகிய அகத்திய முனிவருடைய, பதியில் = இருப்பிடமாகிய பொதிய மலையி லுள்ள, ஐம்மாவை = தென்றற் காற்றை, கொம்பு ஏந்தி = ஒற்றைக் கொம்பைத் தரித்த விநாயகக் கடவுளுடைய, தந்தை பணி = தகப்பனாராகிய சிவபெருமான் தரித்திருக்கும் ஆபரணமாகிய பாம்பு, கொண்டதோ = முற்றிலும் உட்கொண்டு விட்டதோ, எ - று.

ஆலைப்பதிப்பெற்றான் செட்டி, தாசி கமலாட்சிக்காகக் கொடுத்த மருந்துச்செலவுக் கிரயம் காசு நாலுக்குப் பாடியது.

102. முற்றுத காஞ்சியினு முல்லையினும் பாலையினும்
கற்றுன்பின் சென்ற கருணைமால்—பெற்றுன்றன்
ஆலைப் பதித்தா ளகத்தி யாட்கயனூர்
வேலைப் பதித்தார் விழி.

உரை :—முற்றுத காஞ்சியிலும் = என்றும் முடிவு பெறுத காஞ்சிப் பதியிலும், முல்லையிலும் = முல்லை நிலத்திலும், பாலையிலும் = பாலை வனத்தி லும், கற்றுன்பின் = முறையே காஞ்சியில், செங்காப்புலவர் பின்னும் முல்லை நிலமாகிய காட்டில் கன்றோடு கூடிய பசுக்களின் பின்னும் இராமாவதாரத் தில் பாலையில் விசுவாமித்திரன் பின்னும், சென்ற = போன, கருணைமால் =

அருள் மிக்க திருமாலேப்போன்ற, பெற்றான் தன்=பெற்றான் என்னும் செட்டியினுடைய, ஆலேப்பதி=ஆலேப்பதியிலுள்ள, தார் அளகத்தியாட்கு=மாலே யணிந்த கூந்தலே யுடையவளுக்கு, அயனார்=பிரமா, வேலே விழிப்பயத் தார்=வேலாயுதத்தைக் கண்ணுக அமைத்து வைத்தார், எ-று.

குறிப்பு:—கற்றான் என்பது கன்று ஆன் என்று பிரிக்கப்படும் போது, கன்றையுடைய பசுக்கள் என்று பொருள்படும்.

இதுவும் அவன்மேற் பாடிய பாலேப் பழித்தல்.

103. கஞ்ச முகையுங் களிற்றினை யின்கொம்பும்
அஞ்சுமுலே நாலுமுலே யானதுவும்—மிஞ்சுபுகழ்
பெற்றான்றன் மாலே பிறர்க்களித்த துங்குதலே
கற்றான் பிறந்தபின்பு காண்.

உரை:—கஞ்ச முகையும்=தாமரை மொட்டும், களிற்றினையின் கொம் பும்=ஆண் யானையின் தந்தமும், அஞ்சுமுலே=தாய் ஒவ்வாமை பற்றிப் பயப்படக்கூடிய தனங்கள், நாலு முலேயானதுவும்=தட்பம் குறைந்து தொங்கும் தன்மையானதும், மிஞ்சு புகழ் பெற்றான்=நிறைந்த புகழை யுடைய பெற்றான் என்பவர், தன் மாலே=தன் பூமாலேயை அல்லது மயக்க மான அன்பை, பிறர்க்களித்ததும்=மற்றவர்களுக்கு கொடுத்துவிட்டதுவும், குதலே கற்றான்=மதலேச்சொல் பயில்கின்றவனுகிய குழந்தை, பிறந்த பின்பு காண்=தோன்றிய பிற்பாடுதான் என்க, எ-று.

ஸ்ரீரங்கத்து வைணவப் பிராமணர்கள் விநாயகருக்கு நாமமிட்டுப் பரம் விஷ்ணுவே யென்று நாமம் போட்டுக்கொண்டா ரென்றதற்குப் பாடியது.

104. தந்தை பிறந்திறவாத் தன்மையினுற் றன்மாமன்
வந்து பிறந்திறக்கும் வண்மையினுல்—முந்தொருநாள்
வீணிக்கு வேலே யெரித்தான் மகன்மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண்.

உரை:—முந்தொரு நாள்=முன்னெரு காலத்தில், வீண் இக்கு வலே=வீண் பெருமையை யுடைய கரும்பு வில் வைத்திருக்கும் மன்மதனே, எரித்தான் மகன்=நெற்றிக் கண்ணுல் அழித்த சிவபெருமானது குமார னுகிய விநாயகக் கடவுள், தந்தை பிறந்திறவாத் தன்மையினுல்=தகப்பனர் பிறப்பும் இறப்பும் இல்லாத இயல்புடையவ ராதலால், (அவருக்குப் பின் வாரிசாக) வர முடியாதென்று, தன் மாமன் வந்து பிறந்து இறக்கும் வண்மையினுல்=தன் மாமனுகிய திருமால் பத்து முறை பிறந்தும் இறக்கும் வள்ளல் தன்மை யுடைமையினுல், மாமன் காணிக்கு வந்திருந்தான் காண்= மாமனர் சொத்துக்கு, அவர் திருப்பதிக்கு வந்திருந்தார் என்று அறிக, எ-று.

தூ தி.

105. தாதிதூ தோதீது தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்தித்த தூததே—தாதொத்த
துத்திதத் தாதே துதித்துத்தேத் தொத்தீது
தித்தித்த தோதித் திதி.

உரை:—தாதி தூதோ தீது = அடியாருடைய தூது பயன் படாதது, தத்தை தூது ஒதாது = கிளி தூதுபோய்ச் சொல்லாது, தூதி தூது ஒத்தித்த தூததே = தோழியின் தூதானது நாள் கடத்தி வைக்கப்பட்ட தூதாகும், தேதுதித்து தொத்து தீதி = தெய்வத்தை வழிப்பட்டுத் தொடர்தல் பயன் தராது வீணாகும், தாதொத்த துத்தி = பூந்தாதுபோன்ற தேமல், தத்தாதே = என்மேற் பாய்ந்து அதிகப்படாமல், தித்தித்தது ஒதித்திதி = இனிமையான தலைவன் நாமத்தைச் சொல்லி என்னைக் காப்பாற்றுக, எ - று.

குறிப்பு:—தலைவி, தலைவனது பிரிவாற்றுமையால் நோயுற்றுள்போல் இருப்பதைக் கண்ட தாயார், தெய்வத்தைத் தொழுது வெறியாட்டயர் விரும்பிய காலை வெறி விலக்கலுக்காகத் தலைவி கூறிய பாட்டு என்று உணர்க.

வெறி விலக்கல்.

106. முந்நான்கி லொன்றுடையான் முந்நான்கி லொன்றெடுத்து
முந்நான்கி லொன்றின்மேன் மோதினான்—முந்நான்கில்
ஒன்றரிந்தா லாகுமோ ஓஒ மடமயிலே
அன்றணைந்தான் வாராவிட் டால்.

உரை:—முன் நான்கில் ஒன்றுடையான் = பன்னிரண்டு ராசிகளில் ஒன்று மீன் மீனவதாரம் எடுத்த திருமால், முன் நான்கிலொன்று எடுத்து = தனுசு அல்லது வில்லை எடுத்து அம்பெய்து, முன் நான்கின் ஒன்றின்மேல் மோதினான் = கன்னியாகிய தாடகைமேல் அம்பெய்து கொன்றவனாகிய தலைவன், அன்றணைந்தான் = அந்நாளில் தலைவியைச் சேர்ந்தான், அவன் வாராவிட்டால் = அவன் வாராவிட்டால், ஓ ஓ மடமயிலே = ஓ அழகிய மயில் போன்ற அம்மையே, முந்நான்கில் ஒன்று அரிந்தால் = மேடம் ஆகிய ஆட்டினைக் கொன்று பலியிட்டால், ஆகுமோ = தலைவி நோய் தீருமோ தீராது என்றபடி, எ - று.

திருவாரூர்ப் பெருமான் தூது சென்றதைச்
சிறப்பித்துப் பாடியது.

107. ஆலி லையே யயனுந் திருமாலும்
காலு ரடிமுடிமுன் காண்பதற்கு—மேலுள்

இரவுதிரு வாரூரி லெந்தையியிரான் சென்ற
பரவைதிரு வாயிற் படி.

உரை:—அயனும் திருமாலும்=பிரமாவும் விஷ்ணுவும், மேல் நாள்=முன் நாளில், காணுர் அடிமுடி காண்பதற்கு=அவர்கள் சண்டையிடுங் காட்டில் தோன்றிய பெருமானது முடியையும் அடியையும் காண்பதற்கு, ஆனுர் இலையே=முடியாமற் போயிற்றே, (பின்னுளில்) அவர்கள், திருவாரூரில்=திருவாரூரில், ஓர் இரவு=ஒரு இராத்திரியில், எந்தைபிரான் சென்ற=எனது தந்தையாகிய சிவபெருமான் தூது போன, பரவைத் திருவாயிற்படி=பரவை நாச்சியாரின் வீட்டின்படிகளாக, ஆனுர் இலையே=ஆயினுர் இல்லையே (அப்போது அடி முடியை எளிதாகக் கண்டிருப்பார்கள் என்பது கருத்து), எ - று.

கடவுளர்க்கும் சிவனடியார்களுக்கும் ஆறுதலை யுண்டென்னும் சொன்னயம் அமைத்துப் பாடியது.

108. சங்கரர்க்கு மாறுதலை சண்முகர்க்கு மாறுதலை
ஐங்கரர்க்கு மாறுதலை யானதே—சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை பித்தாநின் பாதம்
படித்தோர்க்குமாறுதலை பார்.

உரை:—சங்கரற்கும் ஆறுதலை=சிவபெருமானுக்கும் ஆறுகிய கங்கை தலையில் உள்ளது, சண்முகர்க்கும் ஆறுதலை=முருகப்பெருமானுக்குத் திருமுடிகள் ஆறு உள்ளன, ஐங்கரற்கு மாறுதலை யானதே=ஐந்து திருக்கரத்தை யடைய பிள்ளையாருக்கு, தேவ முகத்திற்கு மாறுக யானைத்தலை அமைந்தது, சங்கைப் பிடித்தோனுக்கும் மாறுதலை=சங்கேந்திய திருமாலுக்குப் பல பிறவிகளின் மீன் ஆமை சிங்கம் முதலிய வெவ்வேறு தலைகள் அமைந்தன, பித்தா நின்பாதம் படித்தோர்க்கும்=பித்தராகிய கடவுளே உம்முடைய திருவடிப் புகழைக் கற்றவர்கள் எல்லாருக்கும், ஆறு தலை பார்=பிறவிக் கடலினின்று இளைப்பாறுதலைக் கவனித்து அளிப்பாயாக, எ - று.

வைத்தீசுரரைத் தரிசித்து நிந்தாஸ்துதியாகப் பாடியது.

109. வாதக்கா லாந்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
பேதப் பெருவயிரும் பிள்ளைதனக்—கோதக்கேள்
வந்தவினை தீர்க்க வகையறியார் வேளூரர்
எந்தவினை தீர்ப்பா ரிவர்.

உரை:—ஓதக் கேள்=சொல்லுவதைக் கேட்பாயாக, வேளூர் தமக்கு=வேளூரில் இருக்கும் சிவபெருமானுக்கு, கால் வாதமாய்=காற்றே திருவடியாம், அல்லது நடித்தால் வளைந்த கால் உளது, மைத்துனர்க்கு=மைத்துன

ராகிய திருமாலுக்கு, நீரிழிவு=நீராகிய கடலிலே படுத்திருப்பது தொழி லாம், பிள்ளை தனக்கு=அவர் பிள்ளையாகிய கணபதிக்கு, பேதப் பெருவயி ரும்=விகாரமான பருத்த வயிரும், வந்த வினை தீர்க்க வகையறியார்= இங்ஙனம் எற்பட்ட நோய்களைத் தீர்ப்பதற்கு வழி தெரியாத இவர், எந்த வினை தீர்ப்பார்=வேறு எந்த வகையாகிய வினையை இவர் தீர்க்கப்போகி ரூர், எ - று.

குறிப்பு:—வாயு பூதத்திற்கு அதிதேவதை மகேசுரன், நடனத்திற் காகக் கால் வளைந்திருப்பதுபற்றி வாதக்கால் என்று கூறினர் என்பது ஒரு பொருள்.

ஸ்ரீரங்கத்து வைணவரும், திருவானைக்காக் குருக்களும் சண்டைபண்ணைக் காரணங் கூறியது.

110. சீரங்கத் தாருந் திருவானைக் காவாரும்
போரங்க மாகப் பொருவதேன்—ஓரங்கள்
வேண்டா மிதென்ன விபரந் தெரியாதோ
ஆண்டானுந் தாதனுமா னால்.

உரை:—சீரங்கத்தாரும் = சீரங்கத்திலுள்ள வைணவர்களும், திரு வானைக்காவாரும் = திருவானைக்காவிலுள்ள சைவரும், போரங்கமாகப் பொருவதேன்=யுத்தஞ் செய்வதுபோல் வாதிட்டுச் சண்டை செய்வது எதற்கு? ஓரங்கள் வேண்டாம்=பட்சபாதமான சொல்லுகள் வேண்டிய தில்லை, இதென்ன விபரம் தெரியாதோ=இது சம்பந்தமான உண்மை விபரம் அவர்களுக்குத் தெரியாதுபோலும், ஆண்டானும் தாதனுமானால்= சிவபெருமான் ஆண்டானும் திருமால் அடியாரும் ஆயிருப்பவர்களே, எ - று.

குறிப்பு:—ஆனர் என்பது ஆனால் என விகாரப்பட்டது போலும்.

கன்னபுரம் பெருமாள் பிறந்த நாளிதுவாமெனப் பாடியது.

111. உத்திரத்துக் கோர்நா ளுரோகணிக்குப் பத்தாநாள்
சித்திரைக்கு நேரே சிறந்தநாள்—எத்திசையும்
காராரும் பூஞ்சோலைக் கன்னபுரம் வாழ்சவுரி
நாரா யணன்பிறந்த நாள்.

உரை:—எத்திசையும் காராரும் பூஞ்சோலை=எப் பக்கத்திலும் மேகங் கள் தங்குகின்ற அழகிய சோலைகளையுடைய, கன்னபுரம் வாழ்=திருக்கன்ன புரத்தில் வீற்றிருக்கின்ற, சவுரி நாராயணன் பிறந்த நாள்=சவுரி நாராயண சுவாமியின் அவதார நட்சத்திரம், உத்திரத்திற்கு ஓர் நாள்=உத்திரத்திற்கு அடுத்த நட்சத்திரமும், ரோகணிக்குப் பத்தாம் நாள்=உரோகணி நட்சத்திரத் திற்குப் பத்தாவது நட்சத்திரமும், சித்திரைக்கு நேரே சிறந்த நாள்=

சித்திரை நட்சத்திரத்திற்கு முன் நட்சத்திரம், முன் நட்சத்திரமாகிய அத்தம் என்க, எ - று.

நஞ்சுணியென்று முடித்துப் பாடும்படி கேட்டபோது பாடியது.

112. சிரித்துப் புரமெரித்தான் சிந்துரத்தைப் பற்றி
உரித்துதிரம் பாய வுடுத்தான்—வருத்தமுடன்
வாடுமடி யாருடனே வானவருந் தானவரும்
ஓடுபயந் தீர்த்தஞ் சிவன்.

உரை :—வருத்தத்துடன் = மனவருத்தத்தோடு, வாடும் அடியார் = கவலைப்படும் அடியாரும், உடனே = அவரோடு கூடிய, வானவரும் தானவரும் = தேவர்களும் அசுரர்களும், ஓடு பயம் தீர்த்த = ஓடி வருவதற்குக் காரணமாகிய நஞ்சை யுண்டு அவர்களுடைய அச்சத்தை நீக்கியருளிய, சிவன் = சிவபெருமான், சிரித்துப் புரம் எரித்தான் = திரிபுரத்தைப் புன்னகைசெய்து அழித்தார், சிந்துரத்தைப்பற்றி = தாருக வனத்து முனிவர்கள் வளர்த்த வேள்வியில் வந்த யானையைப் பிடித்து, உதிரம்பாய உரித்து = இரத்தம் ஒடும்படியாக அதன் தோலை உரித்து, உடுத்தான் = அதனை ஆடையாக அணிந்தார், எ - று.

திருவாலங்குடியானைச் சிறப்பித்துப் பாடியது.

113. ஆலங் குடியானே யாலால முண்டானே
ஆலங் குடியானென் றுர்சொன்னர்—ஆலங்
குடியானே யாயிற் குவலயத்தோ ரெல்லாம்
மடியாரோ மண்மீதி லே.

உரை :—ஆலங் குடியானே = திருவாலங் குடியில் வீற்றிருக்கும் சிவபெருமானே, ஆலாம் உண்டானே = ஆலகால விடத்தை அமுது செய்தானே, ஆலங் குடியான் என்று ஆர் சொன்னர் = விடபானம் செய்யாதவர் என்று யார் கூறினர் ; ஆலங் குடியானே ஆயில் = விஷத்தைக் குடியாவிட்டால், குவலயத் தோர் எல்லாம் = உலகத்தார் எல்லாரும், மண்மீதிலே மடியாரோ = பூமியில் வீழ்ந்து இறந்திருக்க மாட்டாரோ, எ - று.

பரமசிவன் விடமுண்ட அவசியத்தைப்பற்றிப் பாடியது.

114. கடுக்கை முடியானே காலைமுடித் தான்போற்
கடுக்கைகுடி யானுகிற் காணுர்—கடுக்கை
உரலடிமீ துற்ருனு மும்பர்களு மற்றும்
உலரடிமீ துற்ருனு மூர்.

உரை :—கடுக்கை முடியானே = கொன்றையைத் திருமுடியில் அணிந்த சிவபெருமானே, காலை = காலனை, முடித்தான் போல் = அடக்கியதுபோல; கடுக்கை குடியான் ஆகில் = விடத்தைத் தன்னிடம் அடக்கிக் கொள்ளா விட்டால், கடு = வேகமுடைய, கை = துதிக்கையை யுடைய, உரலடி = உரல்

களைப்போன்ற கால்களையுடைய வெள்ளை யானையின்மீது, உற்றனும்= தங்குபவனுகிய இந்திரனும், உம்பர்களும்=தேவர்களும், மற்றும்=இன்னும், உலகமீது உற்றனும்=உலகிலே கட்டப்பட்டு தன் மேல் அடிப்பட்ட கண்ணுகிய திருமாலும், ஊர் காணர்=தங்கள் இருப்பிடத்தில் தாங்கள் வாழ்வதைக் காண மாட்டார்கள், (அழிவார்கள் என்றபடி) எ-று.

கங்கைகொண்ட சோளேச்சுர நாதரைச் சிறப்பித்துப் பாடியது.

115. காவல னெங்கள் கனவைப்பாஞ் சோளேசன்
மாவலி கங்கை மணிவாரி—ஆவனலென்
றப்புளங்கை தோய்க்க வதில்வா ரியமுத்தைக்
கொப்புளமென் றூதுங் குரங்கு.

உரை :—எங்கள் காவலன்=எங்களைக் காப்பாற்றும் அரசனுகிய, கனவைப்பான்=பெரிய நிதிக் களஞ்சியம் போன்றவனுகிய, மாவலி=மிகுந்த வலிமை யுடைய, சோளேசன்=சோழ மன்னன், கங்கை மணிவாரி=கங்கையிலுள்ள இரத்தினங்களை வாரிப் பார்த்து, ஆ அனல் என்று=ஐயோ தீ என்று சொல்லி, அப்புள்=தண்ணீருள், கை தோய்க்க=கையை யமுக்கவும், அதில் வாரிய முத்தை=அதில் நின்று எடுத்த முத்துக்களை, குரங்கு=குரங்கானது, கொப்புளம் என்று ஊதும்=நீர்க்குமிழி யென்று எண்ணி வாயினுலே ஊதுவதாயிற்று, எ-று.

தில்லை நடராஜப்பெருமான் கையிலேந்தியமான் அப்பெருமான் திருமுகத்துக்கு நேராகத் தன்னுடைய முகத்தையும் முன்னங் கால்களையும் உயரத்தூக்கி யிருப்பதற்குக் காரணம் வினவிய தில்லை மூவாயிரவர்க்கு விடையாகக் கூறியது.

116. பொன்னஞ் சடையறுகம் புல்லுக்கும் பூம்புனற்கும்
தன்னெஞ் சுவகையுறத் தாவுமே—அன்னங்கள்
செய்க்கமலத் துற்றுலவுந் தில்லை நடராசன்
கைக்கமலத் துற்றமான் கன்று.

உரை :—அன்னங்கள்=அன்னப் பறவைகள், செய்க் கமலத்துற்றுலவும்=வயல்களில் உள்ள தாமரைகளில் தங்கி உலாவுகின்ற, தில்லை நடராசன்=தில்லைப் பதியில் நடனஞ் செய்கின்ற சிவபெருமானுடைய, கைக்கமலத்துற்ற மான் கன்று=தாமரை போன்ற திருக்கையிற் பொருந்திய மான் குட்டியானது, பொன்னஞ்சடை அறுகம் புல்லிற்கும்=பொன் போலச் சிவந்த அழகிய சடை முடியிலுள்ள அன்பர் சாத்திய அறுகம்புல்லினிடத்தும், பூம் புனற்கும்=கங்கையாகிய அழகிய நீரிடத்தும், தன் னெஞ்சு உவகை உறத்தாவுமே=தனது மனம் மகிழும்படியாகப் பாய்வதாகும், எ-று.

இஞ்சிகுடியிலிருக்குந் தாசி கலைச்சிமேற் பாடிய வசை.

117. ஏய்ந்த தனங்க ளிரண்டுமிரு பாகற்காய்
வாய்ந்தவிடை செக்குலக்கை மாத்திரமே—தேய்ந்தகுழல்
முக்கலச்சிக் குப்பிடிக்கு மூதேவி யாள்கமலைக்
குக்கலிச்சிக் குங்கலைச்சிக் கு.

உரை :—தேய்ந்த குழல் = பாறிப்போன தலை மயிரில், முக்கலச் சிக்குப் பிடிக்கும் மூதேவியாள் = மூன்று கலம் அளவு சிக்குப்பிடித்த மூதேவி போன்றவளாகிய, கமலை = திருவாரூரிலுள்ள, குக்கல் இச்சிக்கும் கலச்சிக்கு = நாய் விரும்பும் கலைச்சி என்னும் தாசிக்கு, ஏய்ந்த தனங்களிரண்டும் இரு பாகற்காய் = அமைந்த இரண்டு மூலைகளும் இரண்டு பாகற்காய் போல நீண்டு தொங்குவன, வாய்ந்த இடை செக்குலக்கை மாத்திரமே = அமைந்த இடுப்பு செக்குலக்கை யளவே பருத்திருக்கும், எ - று.

கலைச்சியின் தாயார் வேண்டுகோளுக்கிரங்கிப் பாடிய புகழ்ச்சி.

118. நஞ்சுகுடி கொண்டகணை நாலுந் தெரிந்துமதன்
இஞ்சிகுடி தன்னினும்வந் தெய்வாளே—விஞ்சு
மூலைச்சிகரத் தாலழுத்தி முத்தமிட்டுச் சற்றே
கலைச்சிகரத் தாலணைத்தக் கால்.

உரை :—விஞ்சும் மூலைச் சிகரத்தாலழுத்தி = பருத்திருக்கின்ற மூலைக் காம்பினாலே அழுத்தி, முத்த மிட்டு = முத்தி, கலைச்சி = கலைச்சியாகிய தாசி, சற்றே காத்தால் அணைத்தக்கால் = கொஞ்சம் கையினால் தழுவினால், மதன் = மன்மதன், நஞ்சு குடிகொண்ட கணை நாலும் தெரிந்து = நால்வகை விடந் தங்கிய அம்பை ஆய்ந்தெடுத்து, இஞ்சி குடி தன்னினும் வந்தெய்வாளே = இஞ்சி குடி என்கின்ற ஊரிலும் வந்து பாணம் தொடுப்பாளே, எ - று.

புள்ளிருக்கும் வேளூர் சிவபெருமானை இகழ்வதுபோற்
புகழ்ந்து பாடியது.

119. தீத்தானுன் கண்ணிலே தீத்தானுன் கையிலே
தீத்தானு முன்றன் சிரிப்பிலே—தீத்தானுன்
மெய்யெலாம் புள்ளிருக்கும் வேளூரா வுன்னையிந்தத்
தையலா ளெப்படிச்சேர்ந் தாள்.

உரை :—புள்ளிருக்கும் வேளூரா = சடாயு என்னும் பறவை பூசித்த திருப்பதியாகிய வைத்தீசுரன் கோயிலில் இருக்கும் பெருமானே, தீத்தான் உன் கண்ணிலே = உன் நெற்றிக் கண்ணில் இருப்பது தீயே, தீத்தான் உன் கையிலே = உன்னுடைய திருக் காத்தில் இருப்பதும் நெருப்பே, தீத்தானும் உன்றன் சிரிப்பிலே = திரிபுரத்தை எரித்த உனது புன்னகையிலே இருப்பதும் நெருப்பே, தீத்தான் உன் மெய்யெல்லாம் = உன்னுடைய திரு

மேனி முழுவதும் அக்கினிமயமே, (அப்படி இருக்கவும்) உன்னை இத்தத் தையலாள் எப்படிச் சேர்ந்தாள்=(குளிர்ந்த திருமேனியையுடைய) உமா தேவியார் உம்மை எப்படி விரும்பி வந்தடைந்தாள், எ - று.

கருவைநல்லூர்க் களாவிருக்ஷத்தின் கீழிருக்கும் பால்வண்ண நாதர்மேற் பாடிய மொழிமாற்று.

120. வெண்ணெய் திருடியுண்ட வேணியரை ரிருக்கக்
கண்ணன்மேல் வைத்த களவேது—பெண்ணைத்
தலையிற் சுமந்தான்மால் சர்ப்பத்தி லேறி
அலையிற் றுயின்ரு னரன்.

உரை :—வெண்ணெய் திருடி உண்ட கண்ணன் இருக்க=வெண்ணெயைக் களவு செய்து தின்ற கோபாலன் இருக்கவும், வேணி அரனுர் மேல் வைத்த களவேது=சடையணிந்த சிவபெருமான் திருமுடிமேல் வைத்த களாமரம் எதற்கு, (களவு என்ற சொல் களாமரத்தையும் திருட்டையும் குறிக்கும்) பெண்ணைத் தலையில் சுமந்தான் அரன்=கங்கையாகிய பெண்ணைத் தலையின்மேல் வைத்தார் சிவபெருமான், மால்=திருமால், அலையில்=பாற்கடலில், சர்ப்பத்திலேறி=அனந்தன் என்னும் பாம்பின் மேல் ஏறி, துயின்ரூன்=நித்திரை கொண்டார்.

குறிப்பு:—இப்பாட்டில் திருமாலுக்குச் சொல்வதை யெல்லாம் சிவபெருமானுக்கும், சிவபெருமானுக்குச் சொல்பவற்றைத் திருமாலுக்கும் அமைத்தது ஒரு நயம். இப்பாட்டிற்குக் கொண்டு கூட்டுப்பொருள் கொள்ள வேண்டும்.

எட்டிகுளத்திலிருக்கும் குட்டிசெட்டி, ஆயிரம் யானை யென்னும் எண்சுவடிப் பரிவாயைச் சொல்லி இதன் முன்னடியைப் பூர்த்திசெய்து கொடுக்கும்படி வித்துவான்களை ஏவனம் பண்ணிக்கொண்டிருந்தான். அதற்காகக் காளமேகப் புலவர் பாடியது.

121. எட்டி குளத்தி லிருந்து சரக்குவிற்கும்
குட்டிசெட்டி தன்மகளைக் கொண்டுபோய்—நொட்டுதற்கே
ஆயிரம் யானை யெழுநூறு கூன்பகடு
பாயும் பகடெண்பத் தைந்து.

உரை :—எட்டிகுளத்திலிருந்து சரக்கு விற்கும் குட்டிசெட்டி தன் மகளைக்கொண்டு போய் நொட்டுதற்கே=எட்டிகுள வியாபாரியாகிய குட்டிசெட்டி மகளை மணந்து புணர்வதற்காகக் கொடுக்கப்பட்டவை, ஆயிரம் யானை=யானை ஆயிரமும், எழுநூறு கூன் பகடு=ஒட்டகை எழுநூறும், பாயும் பகடெண்பத்தைந்து=எண்பத்தைந்து பாய்ந்து செல்லும் எருதுகளுமாம், எ- று.

தண்டாங்கூர் மகா சனங்கள் பண்டங்களை அநீதியாக விற்றதைக் குறித்துப் பாடியது.

122. தண்டாங்கூர் மாசனங்காள் சற்குணர்நீ ரென்றிருந்தேன்
பண்டங் குறையவிற்ற பாவிகாள்—பெண்டுகளைத்
தேடியுண்ண விட்டீர் தெருக்க டெருக்கடொறும்
ஆடிமுத லானிவரைக் கும்.

உரை :—தண்டாங் கூர் மாசனங்காள் = தண்டாங்கூரில் வாழும் பொது மக்களே! சற்குணர் நீரென்றிருந்தேன் = நீங்கள் நல்ல குணவான்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தேன், பண்டங்குறைய விற்ற பாவிகாள் = சரக்குகளை விலைக்குத் தக்க அளவு கொடுக்காமல் குறைவாகக் கொடுத்த அநியாயக் காரர்களே, ஆடி முதல் ஆனிவரைக்கும் = ஆடி மாதம் ஆனி மாதம் வரைக் கும் அதாவது வருடம் தொடங்கி முடியும் வரை, தெருக்கள் தெருக்கள் தோறும் = ஒவ்வொரு தெருவிலும், பெண்களைத் தேடி யுண்ணவிட்டீர் = உணவுக்காக உழைத்து பொருள் தேடி உண்ணும்படி உங்கள் பெண்களை அலைய விட்டீர்கள், எ - று.

கம்பரை யேளனஞ்செய்து பாடியது.

123. நாரா யணனை நராயணனென் றேகம்பன்
ஓராமற் சொன்ன வுறுதியால்—நேராக
வாரென்ரு ல்வரென்பேன் வாளென்ரு ல்வள்ளென்பேன்
நாரென்ரு னர்ரென்பேன் நான்.

உரை :—நாராயணனை = நாராயணன் என்ற சொல்லை, நராயணன் என்றே = நராயணன் என்று முதல் எழுத்தைக் குறுக்கி, கம்பன் ஓராமல் சொன்ன உறுதியால் = கம்பர் ஆராயாமல் உபயோகித்த மேற்கோளை வைத் துத் திட்டமாக, நேராக = முறையே, வாரென்ரு ல் வர் என்பேன் = வார் என்பதற்குப் பதிலாக வர் என்று சொல்லுவேன், வாளென்ரு ல் வள்ளென் பேன் = வாளென்பதை வள் என்று சொல்லுவேன், நாரென்ரு ல் நர் என்பேன் நான் = நார் என்ற சொல்லை நான் நர் என்று சொல்லுவேன், எ - று.

நாகப்பட்டணம் தேவடியாளை நிந்தித்துப் பாடியது.

124. வாழ்த்த திருநாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினுள்—நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணன்கண் டேன்கண்டே னென்று
பழுதையெடுத் தோடிவந்தான் பார்.

உரை :—வாழ்த்த திருநாகை = வாழ்வு நன்கு விளங்கும் அழகிய நாகப் பட்டணத்தில், வாகான தேவடியாள் = அழகான தாசி, பாழ்த்த குரலெடுத் துப் பாடினுள் = பயனற்ற ஒலியோடு பாடினுள், நேற்றுக் கழுதை கெட்ட வண்ணன் = நேற்றையத் தினத்தில் கழுதையை இழந்த வண்ணன்

கண்டேன் கண்டேன் என்று = அவள் குரலைத் தன் கழுதையின் குரலாகக் கருதி அதைக் கண்டுபிடித்ததாகச் சொல்லிக்கொண்டு, பழுதை யெடுத்து ஓடி வந்தான் பார் = ஒரு கோலைக் கையில் எடுத்துக்கொண்டு அதை அடித்து மீட்டுக்கொண்டு போவதற்கு ஓடிவந்தான், பார் = இசைநிறை, எ - று.

திருத்துருத்திப்பெருமானைத் தரிசித்து பாடியது.

125. காலையிலும் வேலை கடையக் கயிறுரும்
மாலையிலும் பூமுடித்து வாழுமே—சோலைசெறி
செய்யிலா ரம்பயிலும் செந்துருத்தி மாநகர்வாழ்
பொய்யிலா மெய்யரிடும் பூண்.

உரை :—சோலை செறி செய்யில் = சோலைகள் புடை சூழ்ந்த வயல் களிலே, ஆரம் பயிலும் = முத்துக்கள் விளைகின்ற, செந்துருத்தி மாநகர் வாழ் = செந்துருத்தி என்னும் பெரிய திருப்பதியில் வீற்றிருக்கின்ற, பொய்யிலா மெய்யரிடும் பூண் = பொய்யிலா மெய்யராகிய கடவுள் அணிந் திருக்கும் ஆபரணமாகிய பாம்பு, கால் அயிலும் = காற்றை உண்ணும், வேலை கடையக் கயிறுரும் = பாற்கடலைக் கடைவதற்கு மத்துக்கயிறுரும், மால் அயிலும் = திருமால் உண்கின்ற, பூ = நில உலகத்தை, முடித்து வாழுமே = முடிமேற் சுமந்து விளங்கும், எ - று.

வைத்தீச்சுரன் கோயிற் புற்றுமண்ணின் பெருமையைப் புகழ்ந்து பாடியது.

126. மண்டலத்தி னுளும் வயித்தியராய்த் தாமிருந்தும்
கண்டவினை தீர்க்கின்றார் கண்டீரோ—தொண்டர்
விருந்தைப்பார்த் துண்டருளும் வேளூரென் னுதர்
மருந்தைப்பார்த் தாற்சுத்த மண்.

உரை :—நாளும் = தினந்தோறும், மண்டலத்தில் = இப்பூவுலகத்தில், வைத்தியராய்த் தாமிருந்தும் = நோய் நீக்குபவராய்த் தாம் வீற்றிருந்தும், கண்டவினை தீர்க்கின்றார் கண்டீரோ = எந்த வினையையும் ஒழிப்பதை நீங்கள் பார்த்தீர்களா, தொண்டர் விருந்தைப் பார்த்து உண்டருளும் = அடியார்கள் விருந்து எங்கே யிடுவார்கள் என்று கவனித்துப்போய் அதனை உட்கொண்டருளும், வேளூர் என் நாதர் = வேளூரில் வீற்றிருக்கும் எம் பெருமானுடைய, மருந்தைப் பார்த்தால் = மருந்து என்னது என்று கவனித் துப் பார்ப்போமானால், சுத்தமண் = வெறும் மண்ணே, (புத்து மண் என்பது கருத்து) எ - று.

பாண்டிநாட்டுச் சிவஸ்தலங்கள்.

127. கூடல் புனவாயில் குற்றுல மாப்பனூர்
ஏடகநெல் வேலி யிராமேசம்—ஆடானை
தென்பரங்குன் றஞ்சுழியல் தென்றிருப் புத்தூர்காசி
வன்கொடுங்குன் றம்பூ வணம்.

உரை :—கூடல் = மதுரை, புனவாயில் = திருப்புனவாயில், குற்றாலம் = திருக்குற்றாலம், ஆப்பனூர் = திருவாப்பனூர், ஏடகம் = திருவேடகம், நெல்வேலி = திருநெல்வேலி, ராமேசம் = இராமேச்சுவரம், ஆடானை = திருவாடானை, தென்பரங்குன்றம் = திருப்பரங்குன்றம், சுழியல் = திருச்சுழியல், திருப்புத்தூர் = திருப்புத்தூர், தென்காசி = தென்காசி, வன்கொடுங் குன்றம் = மலையாகிய திருக்கொடுங்குன்றம், பூவணம் = திருப்பூவணம், எ - று.

குறிப்பு :—இவை யனைத்தும் பாண்டிய நாட்டுத் தலங்கள்.

நல்லோர்க்குதவுவாய் எனப் பாடியது.

128. பண்புளருக் கோர்பறவை பாபத்திற் கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டக்கா னற்காலி—திண்புவியை
ஆள்வார் மதுரை யழகியசொக் கர்க்கரவம்
நீள்வா கனநன் னிலம்.

உரை :—பண்புளருக் கோர்பறவை = நல்ல குணமுடையவர்களுக்கு ஈ அதாவது கொடு என்று பொருள், பாவத்திற்கு ஓர் இலக்கம் = பாவத்திற்கு அஞ்சு, (அதாவது - பயப்படு) நண்பிலரைக் கண்டக்கால் நாற்காலி = நட்பு இல்லாதவரைக் கண்டால் விலங்கு (அதாவது) விலகு), திண்புவியை ஆள்வார் = நிலத்திற்கு அரசராகிய, அழகிய சொக்கர்க்கு = மதுரையில் வீற்றிருக்கும் அழகிய சொக்கநாதப் பெருமானுக்கு, நீள் = நீண்ட அதாவது நிலத்த, அரவம் = பணி, வாகனம் = விடை, நன்னிலம் = செய், (பணிவிடை செய்க, என்பது கருத்து), எ - று.

கண்ணின் சங்கமுழக்கத்தின் பெருமையைப் பாடியது.

129. சதுரரங்கர் சங்கத் தழகர் செங்கைச்சங்கை
அதரமிசை வைத்திலரே யாயின்—முதலே
வருங்குளத்தின் முண்டகக்கை வைப்பரன்றே யன்று
பொருங்களத்தி னூற்றுவர்முன் போய்.

உரை :—சதுர் அரங்கம் = சதுரப் பாடுடைய சரங்கத்தில் வீற்றிருக்கும் பெருமாள், சங்கத்தழகர் = சங்கினை உடைய அழகாகிய பெருமாள், செங்கைச் செங்கை = தனது சிவந்த தாமரைபோல் உள்ள திருக்காத்திலிருக்கும் பாஞ்சசன்னியமாகிய திருச்சங்கினை, அதரமிசை வைத்திலரே ஆயின் = (பாண்டவர்க்கு வெற்றியின் பொருட்டு) தனது உதடுமிசை வைத்து ஊதாராயின், முதல்வரும் = பாண்டவர் ஐவரும், அன்று = அக்காலத்தில், பெருங்களத்தில் = யுத்தகளத்தில், நூற்றுவரும் முன் போய் = துரியோதனன் முதலிய நூறு பகைவர்கள் முன் சென்று, குளத்தின் = தங்கள் தலையில், முண்டகக் கை வைப்பர் = தங்கள் தாமரைக் கையை வைத்துக்கொண்டு நிற்பர், (அதாவது) ஒன்றும் செய்யத் தெரியாது தோல்வி அடைந்திருப்பர் என்பது கருத்து, எ - று.

கொண்டத்தூர்த் தண்டைக்கால்மை சமைத்த பூசுணிக்காய்க் கறியை வியந்து பாடியது.

130. கண்டக்காற் கிட்டுங் கயிலாயங் கைக்கொண்டுட்
கொண்டக்கான் மோட்சங் கொடுக்குமே—கொண்டத்தூர்
தன்டைக்கா லம்மை சமைத்துவைத்த பூசுணிக்காய்
அண்டர்க்கா மீசருக்கு மாம்.

உரை :—கொண்டத்தூர் = கொண்டத்தூரில் வாழ்கின்ற, தண்டக்கா லம்மை சமைத்து வைத்த பூசனிக்காய் = தண்டக்கால் அம்மை என்னும் மாது சமைத்து வைத்த பூசனிக்காய்க்கரி, கண்டக்காற் கிட்டும் கயிலாயம் = பார்த்தபோது கயிலாயம் தெருங்குவதாகத் தோன்றும், கைக்கொண்டு உட் கொண்டக்கால் மோட்சம் கொடுக்குமே = கையில் எடுத்து உண்டால் அது வீட்டின்பத்தைத் தரும், அண்டர்க்காம் ஈசருக்கும் ஆம் = அது தேவர் களுக்கு உவப்பாவதுடன் சிவபெருமானுக்கும் பிரீதியாகும், எ - று.

வெறி விலக்கல்.

131. போலநிற மாவர்க்குப் பூணர மாவரை
ஏலவதை செய்தா லியல்பாமோ—சாலப்
பழிக்கஞ்சுந் தென்மதுரைப் பாவையிரு நான்கு
விழிக்கஞ்சன் சோமனலை வேந்து.

உரை :—சாலப்பழிக்கு அஞ்சும் தென்மதுரைப் பாவை = மிகவும் பழிக் குப் பயப்படுகின்ற அழகிய மதுரைப்பதியில் வாழும் பெண்ணே! இருநான்கு விழிக் கஞ்சன் = எட்டுக் கண்ணுடைய தாமரைமலராளுகிய பிரமன், சோமன் = சந்திரன், அலை வேந்து = கடற்றெய்வமாகிய வருணன் என்னு மிவர்களது சிவப்பு, வெள்ளை, கருமை; போல நிறம் ஆவார்க்கு = என்பவை போன்ற நிறங்களையுடைய சிறு தெய்வங்களுக்கு, பூணரம் = (மை) ஆடு ஆவனவற்றை, ஏலவதைசெய்தால் இயல்பாமோ = மிகுதியும் பலியிட அவற்றை வதைத்தால் அது பொருத்தமாகுமா? (ஆகாது என்றபடி), எ-று.

திருவிடைமருதூர் சிவபெருமான்மேல் மன்மதனை எரித்ததைப் பற்றிக் குறித்துப் பாடியது.

132. கண்ண னிடுங்கறியுங் காட்டுசிறுத் தொண்டரன்பிற்
பண்ணுசிறு வன்கறியும் பற்றுதோ—தண்ணெடு
மட்டியையுஞ் சோலை மருதீச ரேபன்றிக்
குட்டியையேன் தீய்த்தீர் குறித்து.

உரை :—தண்ணெடு மட்டியையுஞ் சோலை மருதீசரே = குளிர்ச்சியுந் தேனுங் கலந்த சோலைசூழ்ந்த திருவிடைமருதூரி லுறையும் பெருமானே! கண்ணன் இடும் கறியும் = கண்ணப்ப நாயனர் நிவேதித்த ஊன் கறியும்,

சிறுத்தொண்டர் காட்டும் அன்பில் பண்ணும் சிறுவன் கறியும்=சிறுத் தொண்டர் தனது அன்பைக் காட்டுவதற்குச் சமைத்துப் படைத்த பிள் ளைக் கறியும், பற்றுதோ=போதுமானது அல்லவோ, பன்றிக்குட்டியை= வராக அவதாரம் எடுத்த திருமாலின் புதல்வனுகிய மன்மதனே, என் தீய்த் தீர்=என் எரித்தொழித்தீர், எ - று.

கடைமொழி மாற்று.

133. மாடுதின்பான் பார்ப்பான் மறையோது வான்குயவன்
கூடிமிக மண்பிசைவான் கொல்லனே—தேடி
இரும்படிப்பான் ருன்செக்கா னெண்ணெய்விற்பான் வண்ணன்
பரும்புடவை தப்பும் பறை.

உரை :—பறை=பறையன், மாடு தின்பான்=மாட்டின் ஊனைப் புசிப் பான், பார்ப்பான் மறை ஓதுவான்=அந்தணன் வேதம் கற்பான், குயவன் கூடி மிக மண் பிசைவான்=குயவன் மிகவும் அதிகமாகப் பாத்திரம் வனையும் பொருட்டு மண்ணைக் குழைப்பான், கொல்லனே தேடி இரும்படிப்பான்= கொல்லன் தனது வேலைக்காக முயன்று இரும்படிக்கின்ற தொழிலையுடைய வன், செக்கான் எண்ணெய் விற்பான்=வாணியன் எண்ணெய் விற்குந் தொழிலை யுடையவன், வண்ணன் வரும் புடவை தப்பும்=வண்ணன் பெரிய ஆடையைத் தோய்ப்பான், எ - று.

குறிப்பு :—பாட்டின் இறுதிச் சொல்லை முதலில் வைத்துப் பொருள் கொள்ள வேண்டும்.

இதுவுமது.

134. ஆயனுக்குக் கண்மூன்று மாதிசிவ னுக்கிருகண்
மாயனுக்குச் செங்கையிலே மான்மழுவாம்—நேயமுடன்
சங்கரற்குச் சங்காழி தான்மாலுக் காலமாம்
மங்கையிடத் தாற்காகு மண்.

உரை :—ஆதி சிவனுக்குக் கண் மூன்று=முதல்வனுகிய சிவபெருமா னுக்கு முக் கண் உள்ளன, ஆயனுக்கு இரு கண்=கோபாலனுகிய திருமா லுக்கு கண்கள் இரண்டு, நேயமுடன்=அன்பு காரணமாக, சங்கரற்குச் செங்கையிலே மான் மழுவாம்=சிவபெருமானுக்கு அவரது செவ்வந்த திருக் கைகளிலே, மான் மழுவுவாம்=மானும் மழுவும் தரிக்கப்பட்டுள்ளன, மாயனுக்குச் செங்கையிலே சங்காழி=திருமாலுக்கு அவருடைய தாமரைக் கையிலே சங்கும் சக்கரமும் உள்ளன, மங்கை யிடத்தாற்கு ஆலமாம்= மங்கையை இடப்பாகத்தில் உடைய பெருமானுக்கு உணவு விடமாம், மாலுக்கு மண்ணுகும்=திருமாலுக்கு உணவு பூமியாம், எ - று.

இதுவுமது.

135. கொன்றை மலர்தரித்தான் கோபாலன் கோலெடுத்து
நின்றுகுழ லூதினு னீள்சடையோன்—பொன்றிகழும்
அக்கணிந்தான் மாய னரவணையிற் கண்வளர்ந்தான்
சிக்கலிலே வாழுஞ் சிவன்.

உரை :—நீள் சடையோன் = நீண்ட சடையையுடைய சிவபெருமான், கொன்றை மலர் தரித்தான் = கொன்றைப் பூவைத் தலையில் சூடிக்கொண்டார், கோபாலன் கோலெடுத்து நின்று குழல் ஊதினான் = கண்ணன் மாடு மேய்ப்பதற்காகக் கோலினை எடுத்ததுடன் புல்லாங் குழலையும் வாசித்தான், சிக்கலிலே வாழும் சிவன் = சிக்கல் என்னும் திருப்பதியிலே வீற்றிருக்குஞ் சிவபெருமான், பொன் திகழும் அக் கணிந்தான் = பொன்போல விளங்கும் எலும்பினை ஆபரணமாக அணிந்தான், மாயன் அரவணையிற் கண் வளர்ந்தான் = திருமால் பாம்புப் படுக்கையிற் படுத்துத் தூங்கினர், எ - று.

இதுவுமது.

136. கடம்பற்கெண் டோளயற்குக் கண்பதினைந் தாமால்
கடம்பற்கே நால்வாய்கை யைந்தே—கடம்பற்கோ
டானைமுகற் காயிரங்கண் ணுகண்ட லற்கிலம்பா
டானைமுகற் காறிரண்டு கை.

உரை :—ஆறு இரண்டு கை = பன்னிரண்டு கைகள், கடப்பதற்கு = கடப்ப மாலையை அணிந்த முருகப் பெருமானுக்கு உள்ளன, எண் தோள் அயற்கு = எட்டுத் தோள்கள் பிரமாவுக்கு (உள்ளன), கண் பதினைந்தாம் ஆல் கடம்பர்க்கு = பதினைந்து கண்கள் கடம்ப வனத்தில் வீற்றிருக்குஞ் சிவபெருமானுக்கு உள்ளன, நால் வாய் கை ஐந்தே கடம்பற் கோடு ஆனை முகற்கு = தொங்குகின்ற வாயும் கைகள் ஐந்தும் மதமும் பல்லாகிய கொம்பும் ஆனைமுகக் கடவுளுக்கு உள்ளன, ஆயிரங் கண் ஆகண்டலர்க்கு = ஆயிரங் கண்கள் இந்திரர்க்கு உள்ளன, இலம்பாடு ஆன் ஐம்முகற்கு = வறுமையும் காளை வாகனமும் ஐந்து முகமுடைய சிவபெருமானுக்கு உள்ளன, எ - று.

திருச்செங்காட்டுப் பெருமானைப் பாடிய நிந்தாஸ்துதி.

137. கண்ணபுரங் கோயிற் கதவடைத்துத் தாழ்போட்டார்
மண்ணையுண்டார் வெண்ணெயுண்ட மாயனார்—எண்ணும்
சிரக்கப் பரையேந்திச் செங்காட்டி லீசர்
இரங்கப் புறப்பட்டா ரென்று.

உரை :—செங்காட்டில் ஈசர் = திருச்செங்காட்டங் குடியில் வீற்றிருக்கும் சிவபெருமான், எண்ணும் சிரக் கப்பரை யேந்தி = மதிக்கத்தக்க பிரமன் தலையைப் பிட்சா பாத்திரமாக ஏந்திக்கொண்டு, இரங்கப் புறப்பட்டார்

என்று, பிச்சை யெடுக்கப் புறப்பட்டார் என்று நினைத்து, திருமாலும் அவ் வாறு போய்விடா வண்ணம், கண்ணபுரம் கோயில் கதவடைத்துத் தாழ் போட்டார்=திருக்கண்ணபுரம் கோயிலார் கதவடைத்துத் தாழிட்டு முடி னர், வெண்ணெயுண்ட மாயனர்=கண்ணனும் வெண்ணெய் களவாடி உண்ட பெருமாள், மண்ணை யுண்டார்=பூமியை உட் கொண்டார், எ - று.

திருவாரூர்த் தியாகராசப் பெருமானது திருக்கூத்தைப்பற்றி பாடிய நிந்தாஸ்துதி.

138. திருந்தா டரவணியுந் தென்கமலை யீசர்
இருந்தாடா தென்செய் திடுவார்—பொருந்த
ஒருகாலே யல்லவே யொண்டொடிக் காவன்
றிருகாலுஞ் சந்துபோ னால்.

உரை :—திருந்தாடு அரவணியும் தென் கமலை ஈசர்=நன்றாக ஆடுகின்ற பாம்பினை அணியும் அழகிய திருவாரூரில் வீற்றிருக்கிற தியாகராஜப் பெரு மான், பொருந்த=பொறுத்தமாக, ஒண் தொடிக்காக=ஒளியுள்ள வளையல் அணிந்த பரவையின் பொருட்டு, ஒரு காலே அல்லவே அன்று இருகாலும் சந்து போனால்=ஒரு தடவை அல்லாமல் அவ்விரவில் இருமுறையும் தூது போனார், அல்லது ஒரு காலில் மாத்திரம் அல்ல இருகாலிலும் இடுப்புச் சந்தின் தொடர்பு விலகினால், இருந்தாடாது என் செய்திடுவார்=உட் கார்ந்து நடனம் செய்யாது வேறு என் செய்தல் கூடும்?, எ - று.

ஆரூர் முதலியார் என்னும் வள்ளலைப் புகழ்ந்து பாடியது.

139. உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற வொருகோடி
வெள்ளங்கா லந்திரிந்து விட்டோமே—உள்ளபடி
ஆரூர் முதலி யமரர்கோ னிங்கிருக்கப்
போரூ ரறியாமற் போய்.

உரை :—ஆரூர் முதலி அமரர்கோன் இங்கிருக்க=ஆரூரில் வாழ்கின்ற முதலியாராகிய இந்திரன் இவ்விடத்தில் இருக்கவும், போம் ஊர் அறியாமற் போய்=அவனிடம் செல்லும் வழியறியாமற் சென்று, உள்ளபடி=உண்மை யாகவே, உள்ளங்கால் வெள் எலும்பு தோன்ற=உள்ளங்கால் தேய்ந்து அதிலுள்ள வெள்ளை எலும்பு தோன்றும்படியாக, ஒரு கோடி வெள்ளம் காலம் திரிந்து விட்டோமே=பன்னெடுங்காலம் வீணாக அலைந்து ஒழிந் தோமே, எ - று.

ஆறுசாதிவரப் பாடியது.

140. கம்மாள னங்கிக் கணக்கனென வேதுதித்தார்
செம்மான் சதுரைத் திருவரசை—அம்மாகேள்
வாணியனும் பொன்னேரி வாழும்வெள் ளாழனுமே
சேணியனு மன்றே தெரிந்து.

உரை :—அம்மா கேள் = தாயே கேட்பாயாக, வாணியனும் = பிரமனும், பொன் எரி = திருமகளாகிய அழகி, வாழும் வெள்ளாழனும் = (மார்பில்) வீற்றிருக்கப்பெற்ற பாற்கடலையுடைய திருமாலும், சேணியனும் = இந்திரனும், அன்றே தெரிந்து = அக்காலத்திலேயே உண்மையை அறிந்து, செம்மான் = சிவந்த மானேயுடைய, சதுரை = சதுரைப்பாடுடைய தலைவனாகிய, திரு அரசை = அழகிய நடராஜப் பெருமானே, கம்மாளன் = கபாலத்தை யுடையவன், (அல்லது கபாலி) என்றும், அங்கிக்கண் நக்கன் = நெருப்புக்கண்ணை யுடைய சோதியன், என்றும் = எனவே, துதித்தார் = வாழ்த்தி வணங்கினர், எ - று.

குறிப்பு :—இதில் கம்மாளன், கணக்கன், செம்மான், வாணியன், வெள்ளாழன் சேணியன் என்னும் ஆறு சாதிப்பேரும் வந்ததுவும் காண்க.

திருமால் விடையானெனப் பாடியது.

141. பாரளக்குந் தூதுசெல்லும் பையரவின் மேனடிக்கும்
சீரகலி சாபத்தைத் தீர்க்குமே—ஊரருகில்
சண்டச் சகடுதைக்குந் தையலாய் கார்நீல
கண்டத்தா ரூரான் கழல்.

உரை :—தையலாய் = பெண்ணே! கார் நீலகண்டத்தார் = கரிய நீல கண்டத்தை உடைய சிவபெருமான், ஊர் ஆன் கழல் = எறி நடத்துகின்ற காளையாகிய திருமாலின் திருவடி, பார் அளக்கும் = (மாவலி கொடுத்த பூமியை அளந்ததுபோல) உலகத்தை அளக்கும் வல்லமை உடையது, தூது செல்லும் = (பாண்டவர்க்காகத் தூது சென்றதுபோல) தூது செல்லும், பையரவின் மேல் நடிக்கும் = (காளிங்க நடனம் செய்ததுபோல) படமுடைய பாம்பின் தலையில் நடனம் செய்யும், சீர் அகலி சாபத்தை தீர்க்குமே = அழகிய அகலிகையின் சாபத்தைத் தீர்க்கவல்லது, ஊர் அருகில் = தான் பிறந்து வளர்ந்த ஊரின் பக்கத்தில் தன்னைக் கொல்லவந்த, சண்டச் சகடு உதைக்கும் = வண்டி வடிவமாய் வந்த அசுரனைக் கொல்லும், எ - று.

திருவீழியப்பர்க்குத் திருமால் இடபமானெனப் பாடியது.

142. காலாற் படியளக்குங் கண்ணிடந்து பூசிக்கும்
சேலாங் கமடமாஞ் சிங்கமாம்—பாலாகும்
ஆழியப்பி லேதுயிலு மைவர்க்குத் தூதாகும்
வீழியப்ப ரேறும் விடை.

உரை :—வீழியப்பர் ஏறும் விடை = திருவீழி மிழலையில் வீற்றிருக்குஞ் சிவபெருமான் ஊர்ந்துவரும் காளை வடிவான திருமால், காலாற் படியளக்கும் = தனது திருவடிகளால் உலகத்தை அளந்து காட்டுவார், கண்

ணிடத்து பூசிக்கும் = கண்ணைத் தோண்டிக் கடவுள் திருவடியிலிட்டு வழி பாடு செய்வார், சேலாம் கமடமாம் சிங்கமாம் = மச்சாவதாரம் கூர்மாவதாரம் நரசிங்காவதாரம் எடுப்பார், பாலாறும் ஆழியப்பிலே துயிலும் = பாற்கட லின் நீரிலே நித்திரை கொள்வார், ஐவருக்குத் தூதாகும் = பஞ்சபாண்ட வர்க்குத் தூதாகச் செல்வார், எ - று.

விஷ்ணுவே பரமென்று வைணவர் சொன்னதற்குப் பாடியது.

143. கடம்பவனச் சொக்கருக்குக் கண்ணன்ருன் வேரே
இடம்பெரிய கண்ணொன்றை யீந்தான்—உடம்பதனிற்
செம்பாதி யாளன் சுமக்க வெருதாளன்
அம்பாளன் றேவியுமா ளன்.

உரை :—கடம்பவனச் சொக்கருக்கு = கடம்ப வனமாகிய மதுரையிற் கோயில்கொண்டிருக்குஞ் சொக்கலிங்கப் பெருமானுக்கு, கண்ணன் தான் வேரே = திருமால் அயலானவரோ? (இல்லை, எனினில்) இடம்பெரிய கண் ஒன்றை ஈந்தான் = விசாலமாகிய இடத்தை யுடைய ஒரு கண்ணைப் பிடுங்கிக் கொடுத்தார், உடம்பதனில் = சிவபெருமானுடைய திருமேனியில், செம்பாதி யாளன் = சேர்பாதி ஆயினர், சுமக்க வெருதாளன் = அவரைத் தாங்குவதற்குக் காளை வாகனமானர், அம்பாளன் = திரிபுரம் எரிப்பதற்கு அம்பாகவும் ஆயினர், தேவியுமாளன் = சாத்தனரைப் பெறுவதற்கு மனைவியு மாயினர், எ - று.

திருக்கண்ணபுரத்தில் மழைக்கு ஒதுங்கும்படி விஷ்ணு கோயிலுக்குப் போனபோது அக்கோயில் நம்பியார் வரக் கூடாதெனத் தடைசெய்தபோது அவர்மேல் வஞ்சித்துப் பாடியது.

144. கன்னபுர மாலே கடவுளிலு நீயதிகம்
உன்னிலுமோ யானதிக மொன்றுகேள்—முன்னமே
உன்பிறப்போ பத்தா முயர்சிவனுக் கொன்றுமில்லை
என்பிறப்பெண் ணத்தொலையா தே.

உரை :—கன்னபுர மாலே = திருக்கண்ணபுரத்தில் வீற்றிருக்கும் பெருமானே, கடவுளிலும் நீயதிகம் = கடவுளாகிய சிவபெருமானைப் பார்க்கி லும் நீ மிகுதிப்பட்டவன், உன்னிலுமோ நான் அதிகம் = உன்னைப் பார்க்கி லும் நான் மிகுதிப்பட்டவன், ஒன்று கேள் = ஒரு காரணம் சொல்லு கின்றேன் கேட்டருளுக, முன்னமே உன் பிறப்போ பத்தாம் = முற் காலத்திலே உன் பிறப்புக்கள் பத்தாயின, உயர் சிவனுக் கொன்றுமில்லை = மேலாகிய சிவபெருமானுக்கு ஒரு பிறப்பும் இல்லை, என் பிறப்பு எண்ணத் தொலையாதே = என் பிறப்புக்கள் எண்ணிக்கையில் அடங்கமாட்டா, எ - று.

அமராபதி குருக்களென்பவன் அளித்த சாப்பாட்டை யருந்தி அவனை வியந்து பாடியது.

145. ஆனை குதிரைதரு மன்னதனைக் கொன்றகறி
சேனைமன்ன ரைக்காய்துன் னீயவரை—பூநெயுடன்
கூட்டியமு திட்டான் குருக்களம ராபதியான்
வீட்டிலுண்டு வந்தேன் விருந்து.

உரை :—குருக்கள் அமராபதியான் = குருக்கள் மரபைச் சேர்ந்த அமராபதிக்காரர், ஆனை = அத்திக்காய், குதிரை = மாங்காய், தரும் அன்னதனைக் கொன்ற கறி = வாழைக்காய், சேனை = சேனைக்கிழங்கு, மன்னரைக்காய் = நெல்லிக்காய், அவரை = அவரைக்காய், (என்பவற்றால்) துன்னீ = தின்னுங் கறிகள் (சமைத்து), பூநெய்யுடன் = தேனுடன், கூட்டி அமுதிட்டான் = கலந்து சோறளித்தார், வீட்டில் உண்டுவந்தேன் விருந்து = அவர் வீட்டில் விருந்துண்டேன், எ - று.

திருவாரூர்த் தியாகராயர் கழுத்திலிருந்த வைரமாலை அறப் பாடியது.

146. அன்னவயல் சூழ்ந்திருக்கு மாரூரா னெஞ்சத்தில்
இன்னம் வயிர மிருப்பதா—முன்னமொரு
தொண்டன்மக னைக்கொன்றுஞ் சோழன்மக னைக்கொன்றும்
சண்டன்மக னைக்கொன்றுந் தான்.

உரை :—அன்ன வயல் சூழ்ந்திருக்கும் = அன்னங்கள் உலாவும் வயல்கள் சூழப்பட்ட, ஆரூரான் நெஞ்சத்தில் = திருவாரூரில் இருக்கும் தியாகராயர் திருமார்பில், முன்னம் ஒரு தொண்டன் மகனைக் கொன்றும் = முற்காலத்தில் ஒப்பற்ற சிறுத்தொண்டர் பிள்ளையைக் கொன்ற பிற்பாடும், சோழன் மகனைக் கொன்றும் = மனுநீதிச் சோழன் மகனைக் கொன்ற பிற்பாடும், சண்டன் மகனைக் கொன்றும் = பிள்ளையாகிய சண்டேசுர நாயனாது தந்தையைக் கொன்ற பிற்பாடும், இன்னம் வயிரம் இருப்பதா = இன்னும் கோபம் இருப்பதா அல்லது வயிரமாலை இருக்க வேண்டுமா, எ - று.

குறிப்பு :—சண்டன் மகனை என்பதில் மகன் ஐ யென்று பிரித்துச் சண்டன் மகன் என்பதற்குச் சண்டனாகிய பிள்ளை யென்றும், ஐ என்பதற்குத் தந்தை என்றும் பொருள் கொள்க.

பெண்ணைப்பற்றிய விவகாரத்தால் மாண்டவர்களைக் குறித்துப் பாடியது.

147. வாலி மடிந்ததுவும் வல்லரக்கர் பட்டதுவும்
கோலமுடி மன்னர் குறைந்ததுவும்—சால
மதியுடைய நூற்றிருவர் மாண்டதுவு மையோ
சதவிகரத் தால்வந்த தாழ்வு.

உரை :—வாலி மடிந்ததுவும்=வாலியாகிய குரங்கு மன்னன் இறந்ததுவும், வல்லரக்கர் பட்டதுவும்=இராமாயணப் போரில் பல இராக்கதர்கள் இறந்ததுவும், கோலமுடி மன்னர் குறைந்ததுவும்=பெரிய அழகிய அரசர்கள் இறந்து போய் அவர்களுடைய எண்ணம் குறைவு பட்டதுவும், சாலமதியுடைய நூற்றொருவர் மாண்டதுவும்=மிகுந்த அறிவுடைய துரியோதனனும் அவன் தம்பிமாருமாகிய நூற்றொருவர் அழிந்ததுவும், சத விகாரத்தால்=சகியால் அதாவது பெண்ணைப்பற்றிய விவகாரத்தால், வந்த தாழ்வு=சேர்ந்த இழிவாகும், எ - று.

குறிப்பு:—சத இகாரத்தால் என்பது சகா இகாரத்தால், தகா இகாரத்தால் என்று பிரிவு படும். சகா இகரம்=சி, தகா இகரம்=தி.

திருமலைராயன் பட்டணத்தில் மண்மாரி பெய்யப் பாடியது.

148. செய்யாத செய்த திருமலைரா யன்வரையில்
அய்யா வரனே யரைநொடியில்—வெய்யதழற்
கண்மாரி யான்மதனைக் கட்டழித்தாற் போற்றீயோர்
மண்மாரி யாலழிய வாட்டு.

உரை :—அய்யா அரனே=அப்பனே சிவபெருமானே, செய்யாத செய்த திருமலைராயன் வரையில்=அடாத காரியங்களைச் செய்த திருமலைராயனுடைய ஆட்சி எல்லையில், அரை நொடியில்=பாதி விநாடியில், வெய்ய தழற்கண் மாரியால்=கொடுமையான நெற்றிக் கண்ணிலிருந்து விடுத்த நெருப்பு மழையால், மதனைக் கட்டழித்தாற்போல்=மன்மதனை உருவழித்தாற்போல, தீயோர்=தீய மக்களை, மண் மாரியால் அழிய வாட்டு=மண் மழையால் இறந்தொழியும்படி அடக்குவாயாக, எ - று.

இதுவுமது.

149. கோளரிருக்குமூர் கோள்கரவு கற்றவூர்
காளைகளாய் நின்று கதறுமூர்—நாளையே
விண்மாரி யற்று வெளுத்து மிகக்கறுத்து
மண்மாரி பெய்கவிந்த வான்.

உரை :—கோளர் இருக்கும் ஊர்=கொலையாளிகள் இருக்கின்ற பட்டணத்தில், கோள் கரவு கற்ற ஊர்=புறங் கூறுதலும் வஞ்சகமும் தெரிந்தவர்கள் இருக்கின்ற ஊரில், காளைகளாய் நின்று கதறும் ஊர்=பொருப்பில்லாத இளைஞர்கள் நின்று தம்முள் சண்டையிட்டுக் கூக்குரல் செய்கின்ற ஊரில், நாளையே=நாளைத்தினமே, விண் மாரியற்று=விண்ணிலிருந்து பெய்கின்ற மழை ஒழிந்து, இந்த வான் வெளுத்து=இந்த வானமானது நீரில்லாமல் வெளுத்துப்போய், மிகக் கறுத்து=மிகவும் கோபித்து, மண் மாரி பெய்க=மண் மழையாகப் பெய்க, எ - று.

தலைவி இற்செறித்ததைக் கண்டு தலைவன் புனத் தொடு இரங்கல்.

150. கம்பத்தா னைக்கடையிற் கட்டினுன் கால்சாய
அம்பைத்தா வித்தான்கா லானதே—வம்புசெறி
பூவைகாள் கிள்ளைகாள் பூங்குயில்கா ளன்றில்காள்
பாவையா ளாண்ட பதி.

உரை :—வம்பு செறி = புதுமை பொருந்திய, பூவைகாள் = நாகண வாய்ப் பறவைகளே, கிள்ளைகாள் = கிளிகளே, பூங்குயில்காள் = அழகிய குயில் களே, அன்றில்காள் = அன்றிற் பறவைகளே, பாவையாள் ஆண்ட பதி = பதுமைபோன்ற பெண் ஆட்சி செய்த ஊரானது, கம்பத்தானை = தலை பத்துடைய இராவணனை, கடையிற் கட்டினுன் = வாலிற் கட்டினவனுகிய வாலியானவன், கால் சாய = மடியும்படி, அம்பைத் தாவித்தான் கால் ஆனதே = அம்பைச் செலுத்தினவனுகிய அரிதாள் ஆயிற்றே, எ - று.

குறிப்பு :—தாவுவித்தான் என்பது தாவித்தான் என உகரம் தொக்கது, அரிதாள் = வயலில் அறுவடையானபின் உள்ள வைக்கோற் குறை. அரிதாள் ஆனதே = அழகழிந்து பயனற்றதாயிற்று.

கலியாணத்தில் சேஷஷயிட்டபோது சிவனும் விஷ்ணுவும் காக்கவென்று ஆசீர்வதித்தது, சிலேடை.

151. சாரங்க பாணிய ரஞ்சக்கரத்தர் கஞ்சனைமுன்
ஓரங்கங் கொய்த வுகிர்வாளர்—பாரெங்கும்
ஏத்திடுமை யாக ரினிதா யிவரும்மைக்
காத்திடுவ ரெப்போதுங் காண்.

இப்பாட்டை திருமால் பரமாகப் பொருள் கொள்ளும் முறை.

உரை :—சாரங்க பாணியர் = சாரங்கம் என்னும் வில்லைக் கையிலேந்திய பெருமாள், அஞ்சம் காத்தர் = தாமரை போன்ற திருக்கரம் உடையவர், கஞ்சனை முன் ஓர் அங்கம் கொய்த உகிர் வாளர் = மாமனுகிய கம்சனது ஒப்பற்ற உடம்பைக் கிழித்த நகத்தை யுடையவர், பார் எங்கும் = உலகம் எங்கணும், ஏத்திடும் = துதித்து வணங்கும், மையாகர் = கரிய திருமேனி யுடையவர், இவர் உம்மை இனிதாக எப்போதும் காத்திடுவர் = இப் பெருமாள் உங்களை நன்றாக எப்பொழுதும் காத்தருள்வார், எ - று.

இப்பாட்டை சிவபரமாகப் பொருள்கொள்ளும் முறை.

உரை :—சாரங்கபாணியர் = மானேந்திய கையை உடையவர், அஞ்ச அக்காரத்தர் = பஞ்சாட்சரத்தை மந்திரமாயுடையவர், கஞ்சனை = பிரமனு டைய, ஓரங்கம் = ஒரு தலையை, முன்கொய்த = முற்காலத்திற் கிள்ளிய, உகிர்வாளர் = நகத்தை உடையவர், பாரெங்கும் = உலகமெல்லாம், ஏத்திடு

உமை ஆகர் = துதிக்கின்ற உமையம்மையைத் திருமேனியிலே உடையவர், இவர் = இத்தகைய பெருமான், உம்மை இனிதாய் எப்போதும் காத்திடுவர் காண் என்று கொள்க, எ - று.

திருப்பனந்தாள் பட்டர்மேல் பாடியது.

152. விண்ணீரும் வற்றிப் புவிநீரும் வற்றி விரும்பிமழைத்
தண்ணீரும் வற்றிப் புலவோர் தவிக்கின்ற காலத்திலே
உண்ணீ ருண்ணீரென் றுபசாரஞ் சொல்லி யுபசரித்துத்
தண்ணீருஞ் சோறுந் தருவான் றிருப்பனந் தாட்பட்டனே.

உரை :—விண்ணீரும் வற்றி = ஆகாயத்தில் உள்ள ஆகாய கங்கை நீரும் ஒழிந்து போய், புவி நீரும் வற்றி = பூமியிலுள்ள ஊற்றுநீர் முதலியனவும் வரண்டு போய், மழைத் தண்ணீரும் வற்றி = மழை பெய்வதும் இல்லாமல் போய், (புனற்குளம் முதலியனவும் வற்றி) விரும்பிப் புலவோர் தவிக்கின்ற காலத்திலே = புலவர்கள் வேட்கையால் துன்புறுகின்ற காலத்திலே, உண்ணீர் உண்ணீரென்று உபசாரம் சொல்லி = உண்ணுங்கள் உண்ணுங்களென்று மரியாதையாய் வரவழைத்து, உபசரித்து = மதிப்பாய் நடத்தி, தண்ணீரும் சோறும் தருவான் = குளிர்ந்த நீரும் சாதமும் கொடுப்பவன், திருப்பனந்தாள் பட்டனே = திருப்பனந்தாளிற் குடியிருக்கும் பட்டர் என்பவரே, எ - று.

மதுரை மீனாட்சியம்மையாரைத் தரிசித்துப் பாடிய சிலேடை.
(சிலேடை - இரட்டுற மொழிதல்)

153. விள்ளப் புதுமையொன் றுண்டால வாயினின் மேவுதென்னன்
பிள்ளைக் கொருகுலை மூன்றே குரும்பை பிடித்ததிலே
கொள்ளிக் கணன்றிட்டி யாலோர் குரும்பை குறைந்தமிர்தம்
உள்ளிற் பொதிந்த விரண்டிள நீர்கச் சுறைந்ததுவே.

உரை :—ஆலவாயினில் விள்ளப் புதுமை ஒன்றுண்டு = மதுரையில் சொல்லக்கூடிய ஒரு அதிசயம் உள்ளது, மேவுதென்னன் பிள்ளைக்கு = சிறப்புப் பொருந்திய மலையத்துவசனுடைய குமாரத்தியாகிய தடாதகைக்கு, ஒரு குலை முன்றே குரும்பை பிடித்து = ஒரு வரிசையில் தென்னங் குரும்பை போன்ற மூன்று தனங்கள் தோன்றி அவற்றிலே, கொள்ளிக்கணன் = நெருப்புக் கண்ணையுடைய சிவபெருமானது, திட்டியால் = திருஷ்டியால் (அதாவது) பார்வையால், ஓர் குரும்பை குறைந்து = ஒரு தனம் மறையப் பெற்று, அமிர்தம் உள்ளிற் பொதிந்த இரண்டிளநீர் = உயிர்களைக் காப்பாற்றும்பால் அமுதம் தம் உள் அடக்கிய இரண்டு இளநீர்க்காய்கள், கச்சு உறைந்ததுவே = ரவிக்கைக்குள் தங்கின, எ - று.

குறிப்பு :—தென்னன் பிள்ளை என்பது, தென்னம்பிள்ளை என்று ஓசை படும்படியாகவும் அதில் குரும்பைகள் ஒரு குலையில் தோன்றியது

போலவும் வைத்துப் பாடப் பெற்றது. கண்ணன் என்பது கணன் என்று தொகுத்தல் விகாரம் பெற்றது. திட்டி என்பது திருஷ்டி தோஷம் அல்லது கண்ணேறு என்பதை நினைப்பூட்டுவது, கச்சு உறைத்தது என்பது கைத்து உறைந்து போயிற்று என்ற தொனிப்பொருளைக் குறிப்பது.

திண்ணிக் கோவிந்தராயர் காண்மாட்டிலிருந்து சபாநாதர் கடனஞ் செய்கிறதைப் பாருமென்று வைணவர் சொன்னபோது பாடியது.

154. ஆட்டுக் கிசைந்தவ ரம்பல வாண ரவர்க்கெதிரே
நீட்டிற்று மால்வட பாலினிற் காலென நீநினையேல்
சூட்டுற்ற முப்புரஞ் செற்றவர் தம்மைச் சுமந்தலுத்த
மாட்டுக்கென் னேவிடங் காணீட்டல் சொல்ல வழக்கில்லையே.

உரை :—ஆட்டுக்கு இசைந்தவர் அம்பலவாணர் = ஆடலுக்குத் தகுதியானவர் சபாநாதராகிய சிவபெருமான், அவர்க்கு எதிரே = அவர் திருமுன்பே, மால் வடபாலினில் கால் நீட்டிற்று என = பெருமாள் வடதிசையில் தமது திருப் பாதத்தை நீட்டினர் என, அதைக் குற்றமாக நீ நினையாதே, (ஏனெனில்) சூட்டுற்ற முப்புரஞ் செற்றவர் தம்மை = தீப்பற்றிய திரிபுரத்தை அழித்தவராகிய சிவபெருமானே, சுமந்தலுத்த மாட்டுக்கு = தூக்கிச் சுமந்து இளைத்துப்போன காளையாகிய திருமாலுக்கு, கால் நீட்டல் இடம் என்னே = கால் நீட்டுதற்கு இடம் யாதென்று தெரியுமா ? (அதைக் குற்றம் சொல்லுதல் பொருத்தம் இல்லையே), எ - று.

திருவொற்றியூர் தியாகராசப் பெருமானைக் கண்டு வணங்கிப் பாடிய நிந்தாஸ்துதி.

155. பாரூ ரறியப் பலிக்குழன் றீர்பற்றிப் பார்க்குமிடத்
தோரூ ரில்லை யிருக்கவென் ருலுமுள் ளூருமொற்றி
பேரூ ரறியத் தியாகரென் றேபெரும் பேரும்பெற்றீர்
ஆரூரி லேயிருப்பீ ரினிப்போய்விடு மம்பலத்தே.

உரை :—சிவபெருமானே, பாரூர் அறியப் பலிக்கு உழன்றீர் = பூமியிலுள்ள ஊரார் எல்லாம் அறியும்படி பிச்சை எடுக்க அலைந்து திரிந்தீர், பற்றிப் பார்க்கும் இடத்து ஒரூரும் இல்லை = தொடர்ந்து கவனித்துப் பார்த்தபோது உமக்கு எந்த ஊரும் சொந்தமாக இருப்பதாகத் தெரியவில்லை, இருக்கை என்ருலும் = நீர் நிலையாய்த் தங்குவதற்கு இடம் உண்டா என்று பார்த்தாலும், உள்ளூரும் ஒற்றி = நீர் இருக்கின்ற நடுவூரும் ஒத்தி வைக்கப்பட்ட ஊராகும், (திருவொற்றியூர்) பேரூர் அறிய = பெரிய உலகினர் அறியும்படியாக, தியாகர் என்றே = கொடையாளி என்றே, பெரும் பேர் பெற்றீர் = பெரிய கீர்த்தியும் அடைந்தீர், ஆரூரிலே இருப்பீர் = யாருடைய ஊரிலே நீர் இருப்பீர் (திருவாரூரில்) வீற்றிருப்பீர், இனிப் போய் விடும்

அம்பலத்தே = ஒரு ஊரும் உமக்குச் சொந்தமாய் இல்லாதினாலே பொது வெளியிற் செல்லுவீராக, எ - று.

சிவபெருமான் திருவீதி வருதலைப்பார்த்துப் பாடிய நிந்தாஸ்துதி.

156. வாணியன் பாடிட வண்ணன்சுமக்க வடுகன்செட்டி
சேணியன் போற்றக் கடற்பள்ளி முன்றெழத் தீங்கரும்பைக்
கோணியன் வாழ்த்தக் கருமான்றுகிறனைக் கொண்டணிந்த
வேணிய னெவன் றட்டான் புறப்பட்ட வேடிக்கையே.

உரை :—வாணியன் பாடிட = பிரமன் மறை யோத, வண்ணன் சுமக்க = நந்தி சுமந்து வர, வடுகன் = வீரவர், செட்டி = முருகப்பெருமான்; சேணியன் = இந்திரன், (முதலியோர்) போற்ற = துதி செய்ய, கடல் பள்ளி முன் றெழ = திருப்பாற் கடலிற் பள்ளிகொண்ட திருமால் வழிபட, தீங் கரும்பைக் கோணியன் = இனிய கரும்பை வளைத்த வில்லாகவுடைய மன்மதன், வாழ்த்த = வாழ்த்துக் கூற, கருமான் தோல்தனைக் கொண் டணிந்த = யானைத்தோலை உரித்து ஆடையாக அணிந்த, வேணியன் = சடை முடியை உடையவனை, தட்டான் = யாவர்க்கும் தட்டுப் படாத கடவுள், புறப்பட = வெளிப்பட்டது, வேடிக்கையே = ஒரு வினோதமே, எ-று.

அதிமதுரகவிராயன் கட்டியக்காரர் கட்டியங்கூறி யதற்குப் பாடியது.

157. அதிமதுர மென்றே யகில மறியத்
துதிமதுர மாயெடுத்துச் சொல்லும்—புதுமையென்ன
காட்டுச் சரக்குலகிற் காரமில் லாச்சரக்குக்
கூட்டுச் சரக்கெனவே கூறு.

உரை :—அதிமதுரம் என்றே = அதிமதுர கவிராயர் என்றே, அகிலம் அறிய = உலகம் எல்லாம் தெரியும்படியாக, மதுரமாய்த் துதி எடுத்துச் சொல்லும் புதுமை என்ன = இனிமையாய்ப் புகழ்ந்து பேசும் அதிசயம் யாது? அதிமதுரம் காட்டுச்சரக்கு = காட்டிலுள்ள சாமான், உலகில் கார மில்லாச் சரக்கு = உலகில் காரம் அற்ற பொருள், கூட்டுச் சரக்கு = தனிப் பெருமை அற்றுப் பிறவற்றோடு கூட்டப்படும் சாமான், எனவே கூறு = எனவே சொல்லுக, எ - று.

கட்டியக்காரர் நீர் யாரென்றதற்குப் பாடியது.

158. கழியும் பிழைபொருட் டள்ளிநன் னூலங் கடலினுண்டு
வழியும் பொதியை வரையினிற் கால்கொண்டு வண்கவிதை
பொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே.

உரை :—கழியும் பிழை பொருள் தள்ளி = கழிக்கத்தக்க குற்றமுள்ள கருத்துக்களை நீக்கி, நன்னூல் அம் கடலில் உண்டு = நல்ல நூல்களாகிய அழகிய கடலிற் படிந்து, வழியும் பொதியவரையினிற் கால்கொண்டு = பொதிய மலையிற் பயில்கின்ற தென்றல் காற்றினை யேற்று, வன்கவிதை மொழியும் புலவர் மனத்தே = வளமான பாடல்களை இயற்றிக் கூறும் புலவர்களுடைய உள்ளமாகிய வானத்திலே, இடித்து முழங்கி மின்னி = கர்ச்சித்து ஒலிசெய்து ஒளிவீசி, பொழியும்படிக்கு = கவிமழை பொழிவதற்காக, கவி காளமேகம் = பாவலராகிய காளமேகப்புலவர், புறப்பட்டதே = வெளிப்பட்டனர் என்க, எ - று.

அதிமதுரக்கவி காளமேகத்தை இகழ்ந்து பாடியது.

159. மூச்சுவிடு முன்னே முந்நூறு நானூறும்
ஆச்சுதென்ரு லாயிரம் பாட்டாகாதா—பேச்சென்ன
வெள்ளைக்க விகாள மேகமே நின்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு.

உரை :—மூச்சுவிடும் முன்னே முந்நூறும் நானூறும் = ஒருதரம் காற்றினை இழுத்து மூச்சுவிடும் முன் முந்நூறு அல்லது நானூறு பாட்டும், ஆச்சுதென்ரூல் ஆயிரம் பாட்டு ஆகாதோ = ஆயிற்று என்றே சொல்லுவதன் முன் ஆயிரம் பாட்டும் பாடி முடிந்துவிடாதா, பேச்சென்ன = அதிகமாப் பேசுவது எதற்கு? வெள்ளைக் கவி காளமேகமே = அறிவற்ற பாட்டைப் பாடும் காளமேகப் புலவனே, நின்னுடைய = உன்னுடைய, கள்ளக் கவிக் கடையைக் கட்டு = பொய்யான பாட்டுச் சரக்குவைத்த கடைவாயை மூடுவாயாக, எ — று.

தில்லை நடராசர்மீது திருத்தாண்டகமாகப் பாடியது.

160. வில்லா லடிக்கச் செருப்பா லுதைக்க வெகுண்டொருவன்
கல்லா லெறியப் பிரம்பா லடிக்கவிக் காசினியில்
அல்லார் பொழிற்றில்லை யம்பல வாணற்கொ ரன்னைபிதா
இல்லாத தாழ்வல்ல வோவிங்க னேயெளி தானதுவே.

உரை :—அல்லார் பொழிற்றில்லை அம்பலவாணருக்கு = (மரச்செறிவால்) இருள் நிறைந்த சோலைகளை யுடைய தில்லை அம்பலத்திலே நடமாடிய சிவபெருமானுக்கு, இக் காசினியில் = இந்த உலகில், ஓர் அன்னைபிதா இல்லாத தாழ்வல்லவோ = தாய் தகப்பன் இல்லாத குறைவினால் அல்லவோ, அர்ச்சுனனுகிய ஒருவன் வில்லால் அடிக்க = வில்லினாலே அடிக்கவும், செருப் பால் உதைக்க = கண்ணப்பர் அவர் திருக்கண்ணிலே தனது செருப்புக்காலை வைக்கவும், வெகுண்டு = கோபித்து, பிரம்பால் அடிக்க = மதுரை மன்னன் பிரம்பால் அடிக்கவும், கல்லால் எறிய = சாக்கிய நாயனுர் கல்லெறிந்து வழி

படவும்; இங்ஙனே = இவ்வாறு, எளிதானதுவே = யார்க்கும் எளியராய்த் தோன்றினதாகும், எ - று.

அரங்கநாதரை அரதனமாகச் சிலேடித்துப் பாடியது.

161. பாங்கு பெருந்திரு வைந்நூற்றிரட்டிப் பணவிடையில்
தூங்கு மதிலொரு மாவேற்றமுண்டு சுரர்முனிவர்
ஆங்கவர் செப்பிற் கடங்காதுலக மனைத்தும்பெறும்
ஓங்குமரங்கத் திருப்பெட்டகத்து ளொருமணியே.

உரை :—ஓங்கும் அரங்கத் திருப்பெட்டகத்துள் ஒருமணியே=சிறப் புற்று விளங்கும் சீரங்கத்திலுள்ள திருக்கோயிலினில் வீற்றிருக்கும் பெருமாளாகிய வொப்பற்ற இரத்தினம், பாங்கு பெறும் திரு=தன்பால் மிகவும் அழகு வாய்ந்தது அல்லது (திருமகள் தன் பக்கத்தில் இருக்கப் பெறுவது), ஐந்நூற்றி இரட்டிப் பணவிடையில் தூங்கும்=ஆயிரம் பண நிறையளவு அவ்விரத்தினம் நிறுக்கப்படும் அல்லது ஆயிரம் படம் உடைய நாகத்தின்மீது நித்திரை செய்யும், அதில் ஒரு மாவேற்றம் உண்டு=(ஆயிரம் பணவிடைக்கு மேல் ஒரு மா அளவு மிகுந்துகாட்டும்), அல்லது அதிலே பெரிய உயர்வு உண்டு, சுரர் முனிவர் ஆங்கு அவர் செப்பிற்கு அடங்காது= தேவர்கள் இருடிகள் முதலிய பெரியவர்களுடைய ஆய்ந்த சொல்லினுள் அதன் பெருமை அடங்காது, (அவர்கள் புகழ்ச்சியைக் கடந்து நிற்பது என்பது), உலகம் அனைத்தும் பெறும்=உலகமெல்லாம் அதற்குக் கொடுத் தாலும் அதன் விலைக்குத் தகும், அல்லது உலகம் முழுவதையும் படைப் பார், எ - று.

திருக்கோவிந்தராயர் கோவில் நம்பியார் விஷ்ணுவே பரமென்றதற்குப் பாடியது.

162. சத்தாதி யைந்தையுந் தாங்காததெய்வந் தனிமறையும்
கர்த்தா வெனுந்தெய்வ மம்பலத்தேகண்டு கண்களிரு [தழுத
பத்தான வன்மைந்தன் பொய்த்தேவி யைக்கொல்லப் பார்த்
பித்தா னவன்றனையோ தெய்வமாகப் பிதற்றுவதே.

உரை :—சத்தாதி ஐந்தையும் தாங்காத தெய்வம்=சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் ஐந்து தன்மாத்திரையாலாகிய உடம்பை எடுக் காத கடவுள் (பிறப்பற்றவன் என்பது கருத்து), தனி மறையும் கர்த்தா வெனுந் தெய்வம்=ஒப்பற்ற வேதமும் உலக முதல்வன் என்று துதிக்குங் கடவுள் ஆகிய பெருமானே, அம்பலத்தே கண்டு=சிற்றம்பலத்தே தரிசித்த பிற்பாடு, கண்கள் இருபத்தானவன் மைந்தனும்=இருபது கண்களுடைய இராவணன் புதல்வனாகிய இந்திரசித்து, பொய்த்தேவியை = மாயா சீதையை, கொல்லப்பார்த்தழுத=கொல்வதைப் பார்த்து அது உண்மைச் சீதையாம் என்று அழுத, பித்தானவன் தனையோ=பெண்மயல் கொண்ட

வரையோ, தெய்வமாகப் பிதற்றுவதே = கடவுளென்று தப்பாகக் கூற முடியும், எ - று.

அரங்கநாதர்முன் குமரக்கடவுள்வர, அக் குமாரக்கடவுளது ஊர்தியாகிய மயிலைக்கண்ட அரங்கநாதரது படுக்கையாகிய பாம்பு பயமுற்றதாகப் பாடியது.

163. திரண்டிமை யோர்தொழுந் தென்னரங்கேசர்முன் செங்கைகளா
றிரண்டுடையோனு மெதிர்சென்ற தாலெதிர்ந் தார்தமைக்கண்
டருண்டெழு மைவர்க்குத் தேரூர்பவன்கொ ளணைவெருண்டு
புரண்டொரு புற்றைக் கடந்தொரு புற்றிற் புகுந்ததுவே.

உரை :—திரண்டு இமையோர் தொழும் = கூட்டம் கூட்டமாகக்கூடி தேவர்கள் வணங்குகின்ற, தென் அரங்கேசர் முன் = அழகிய திருவரங்கப் பெருமாள் முன், ஆறிரண்டு செங்கைகள் உடையோனும் = பன்னிரண்டு சிவந்த திருக்கைகளை யுடைய முருகக் கடவுளும், எறிச் சென்றதால் = தன் எதிரே வந்தமையால், எதிர்த்தாரைக் கண்டு அருண்டெழும் = பகைவரைக் கண்டு அஞ்சி எழுந்த, ஐவர்க்குத் தேர் ஊர்பவன் கொள் அணை = பஞ்ச பாண்டவர்களுக்குத் தேர் செலுத்தினவரான திருமால் பள்ளி கொள்ளும் படுக்கையாகிய பாம்பு, எதிர்த்தாரைக் கண்டு = எதிர்ப்பட்டவர்களைப் பார்த்து, வெருண்டு = பயந்து, புரண்டு = இருந்த இடத்தை விட்டுப் பிறழ்ந்து, ஒரு புற்றைக் கடந்து ஒரு புற்றில் புகுந்தது வே = ஒரு புற்றை விட்டு மற்றொரு புற்றில் மறைந்தது, எ - று.

குறிப்பு :—திருமால் படுக்கையாக இருந்த பாம்பு முருகப் பெருமானுடைய மயிலைக் கண்டு அஞ்சி அவ்விடம் விட்டு நீங்கிச் சிவபெருமான் திருமேனியாகிய புது வீட்டிற் புகுந்ததென்று கொள்ளவும்.

காஞ்சியில் காமாட்சியம்மையாரைப் பணியும்போது பாடியது.

164. மாக்கைக் கிரங்குங் குருகும் வளர்சக்ர வாகப்புள்ளும்
தாக்கச் சரபங் குழைந்த தெவ்வாறு சகதலத்தை
ஆக்கிப் பெருக்கித் திருவறச்சாலையி லன்னமிட்டுக்
காக்கைக் கொருகொக்கின் கீழேயிருக்குங் கருங்குயிலே.

உரை :—மாக்கைக்கு = கினது பெருமை பொருந்திய கைகளில், இரங்கும் = ஒலிக்கும், குருகும் = வளையலும், வளர் சக்ரவாகப் புள்ளும் = வளர்கின்ற சக்ரவாகப் பறவைபோன்ற ஸ்தனங்களும், தாக்க = அழுத்தமாகப் பொருந்திய விடத்து, சரபம் குழைந்தது எவ்வாறு = சிங்கத்தைத் தாக்கும் வலிமையை யுடைய சிம்புள் வடிவம் எடுத்த சிவபெருமான் திருமேனி எப்படி இளகி மெல்லியதாயிற்று, என்று சகதலத்தை = உலகத்தை, ஆக்கி = படைத்து, பெருக்கி = வளர்த்து, திரு அறச் சாலையில் அன்னம் இட்டு = அழகிய அறம் வளர்த்த மண்டபத்திலே எல்லாருக்கும் உண்

வளித்து, காக்கைக்கு = பிறவியில் நின்று உயிர்களைக் காப்பாற்றுவதன் பொருட்டு, ஒரு கொக்கின் கீழே இருக்கும் = ஒரு மாமரத்தின் கீழே தவம் இருக்கும், கருங்குயிலே = கரிய நிறம் உடைய குயில்போன்ற குரல் உடைய அம்மையே கூறுக, எ - று.

திருவாரூர்ப் பெருமானைத் தரிசிக்கும்போது பாடியது.

165. தென்னெக்குஞ் சோலைக் கமலைப்பிரான்செஞ் சடாடவிதான்
என்னெக்கு மென்னி லெரியொக்குமந்த வெரியிலிட்ட [செய்
பொன்னெக்குங் கொன்றை கரியொக்கும் வண்டுநற் பொற்பணி
மின்னெக்குங் கங்கைகிழக் கொல்லலெக்குமவ் வெண்பிறையே.

உரை :—தென் ஒக்கும் சோலை = அழகுகள் ஒத்திருக்கப்பெற்ற சோலைகளை யுடைய, கமலை = திருவாரூரில், பிரான் = வீற்றிருக்கும் பெருமானுடைய, செஞ்சடா அடவிதான் = செவ்விய சடை முடியாகிய காடு, என் ஒக்கும் என்னில் = எதைப்போல் இருக்குமென்றால், எரி யொக்கும் = தீயைப் போன்றிருக்கும், கொம்பை = அதிலுள்ள கொன்றைப் பூவானது, அந்த எரியிலிட்ட பொன் ஒக்கும் = அந்தத் தீயில் இடப்பட்ட பொன்போல் இருக்கும், வண்டு = அப் பூவைச் சூழ்ந்து ஒலிக்கும் வண்டானது, கரி ஒக்கும் = தீயைச் சூழ்ந்துள்ள கரியைப்போ லிருக்கும், கங்கை = சடை முடியிலுள்ள கங்கையானது, கல் பொன் பணி செய் மின் ஒக்கும் = பொன்னினால் நல்ல நகைகள் செய்து கொள்ளுகின்ற பெண் போல் இருப்பது, அப் பெண் பிறையே = சடையிலுள்ள வெள்ளிய பிறைச் சந்திரனது, கிழக்கொல்லனெக்கும் = வயது முதிர்ந்த கொல்லனைப்போன் றிருப்பது, எ - று.

சிவபெருமான் இடபவாகனத்தின்மேல் பவனிவருவதைக் கண்டு தரிசித்துப் பாடியது.

166. கரியொன்று பொன்மிகும்பையேறக் கற்றவர் சூழ்ந்துதொழ
எரியொன்று செல்வன் றுலாத்தினிலேற விருண்டமஞ்சு
சொரிகின்றநாக மின்சோற்றினிலேறித் தொடர்ந்து வர
நரியொன்று சொந்தக் கனலேறி வந்தது நங்களத்தே.

உரை :—கரி ஒன்று = யானை முகக் கடவுளாகிய ஒப்பற்ற பெருமான், மிகும்பை யேற = பெருச்சாளியில் ஏறிவர, கற்றவர் சூழ்ந்து தொழ = படித்தவர்கள் தொழுது சுற்றிவர, எரி ஒன்று செல்வன் = தீ நிறம் பொருந்திய முருகப்பெருமான், துலாத்தினில் ஏற = துலா முழுக்குக் கட்டமாகிய மாயூரம் அல்லது மயிலில் ஏறிவர, இருண்ட மஞ்சு = கரிய மழை மேகங்கள், சொரிகின்ற = மழையைப் பொழிகின்ற, நாகமின் = இமய மலையின் அரசன் மகளாகிய உமையம்மை, சோற்றினில் ஏறித் தொடர்ந்துவர = அன்ன வாகனத்தில் ஏறிப் பின் வர, நரி ஒன்று = சம்புவாகிய ஒரு தனிக்கடவுள், சொந்

தக் கனல் ஏறி = நந்திமேல் எழுந்தருளி, நங்களத்தே வந்தது = நம்மிடத்தே வந்தருளினர், எ - று.

குறிப்பு :—சரிக்குச் சம்புகம் என்று பெயர். அது சம்பு என்கின்ற போது வேறொரு பொருளிற் சிவபெருமானைக் குறிப்பதாகும். சொந்தம் = நம், கனல் = தீ, நம் தீ என்ற இரண்டு சொல்லுகளும் சேர்ந்து நந்தீ என ஆய் அது நந்தி எனக் குறுகிற்று.

சிதம்பரத்தில்பாடிச் சிவபரமாக அரங்கேற்றின பிரபந்தத்தை
ஸ்ரீரங்கத்தில் விஷ்ணு பரமாக அரங்கேற்றியது.

167. இருந்தாரை கேள்வனே யோங்குமராவை யெழுபுனலைத்
திருந்தாரை வண்ணியை முன்முடித்தோன் செய்யவேளைப்பண்டு
தருந்தாதை நாயகன் சுந்தரன்றூதன் சமரிலன்று
பொருந்தார் புரத்திட்ட தீப்போன்மதியம் புறப்பட்டதே.

இப்பாட்டைச் சிவபெருமானுக்குரிய முறையிற்
பொருள் கொள்வது :—

உரை :—இருந்தாரை கேள்வனே = அழகாற் பெருமை பொருந்திய தாரையின் கணவனுகிய சந்திரனேயும், ஓங்கும் அராவை = படமெடுத்து உயரும் பாம்பையும், எழுபுனலை = கங்கையையும், திருந்து ஆரை = செவ்வை யான ஆத்தி மாலையையும், வண்ணியை = வன்னி மலரையும், முன் முடித் தோன் = முன்னுளில் சிரசில் வைத்துக்கொண்டவனும், செய்ய வேளைப் பண்டு தருந்தாதை = சிவந்த நிறத்தை யுடைய முருகப்பெருமானை முற்காலத் தில் தோற்றுவித்த தந்தையும், நாயகன் = உலகுக்குத் தலைவனும், சுந்தரன் தூதன் = சுந்தர மூர்த்திக்குத் தூதுபோனவனுமாகிய சிவபெருமான், சமரில் அன்று = யுத்தம் நடந்த அன்னுளில், பொருந்தார் புரத்திட்ட தீப்போல் = பகைவர்களது திரிபுரத்தில் இட்ட நெருப்புப்போல, (பிரிந்தாரைத் தின்புறுத் தற்கு) மதியம் புறப்பட்டதே = சந்திரன் உதயமாயிற்று, எ - று.

இப் பாட்டைப் பெருமாள் சார்பாக பொருள் கொள்ளும்
முறையாவது :—

உரை :—இருந் தாரை கேள்வனே = பெருமை பொருந்திய தாரையின் கணவனுகிய வாலியையும், ஓங்கும் அராவை = வளர்ந்த மராமரத்தையும் எழு புனலை = கடலையும், திருந்தாரை = பகைவரையும், வண்ணியை = வன்னி என்னும் அரக்கனையும், முன் முடித்தோன் = முன்னுளில் வென்றவனும், செய்ய வேளை = சிறந்த மன்மதனை, பண்டு தருந் தாதை = முன்னுளிற் பெற்ற தகப்பனுகிய, நாயகன் = தலைவனும், சுந்தரன் = இராமனும் ஆனவனுடைய, தூதன் = தூதனுகிய அனுமார், சமரில் அன்று = அன்னுளில் இலங்கையிற் செய்த யுத்தத்தில், பொருந்தார் புரத்து இட்ட

தீப்போல்=பகைவர் ஊராகிய இலங்கையில் இட்ட தீயைப்போல், மதியம் புறப்பட்டதே=சந்திரனும் உதயமாயிற்று, எ - று. எ - அசை.

ஆற்றூரில்வாழ்ந்த சோமியென்னும் பெயருடைய தாசியின் அழகைப்பற்றி வியந்தது.

168. ஆராயு முத்தமிழாற் றூரிற்சோமி யழகுகண்டு
நாராயணனெடு மாலாகினன் மற்றை நான்முகனும்
ஓராயிரமட லூர்ந்தான்வின் மார னுருவழிந்தான்
பேரான வானவர்கோனுங் கண்ணுயிரம் பெற்றனனே.

உரை :—முத்தமிழ் ஆராயும் ஆற்றூரில்=இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழையும் ஆராய்ச்சி செய்கின்ற ஆற்றூரில் உள்ள, சோமி அழகு கண்டு=சோமி என்பவளின் அழகைப் பார்த்து, நாராயணன் நெடுமாலாகினன்=பெருமாள் பெரிய மயக்கம் கொண்டார், அல்லது நீண்ட திரு மேனியை உடைய திருமாலாயினர், மற்றை நான்முகனும்=அது தவிர பிரமாவானவர், ஓராயிரம் மடல் ஊர்ந்தான்=ஆயிரந்தரம் மடல் ஏறினர் அல்லது ஆயிரம் இதழுடைய தாமரையின்மீது சென்றார், வில் மாரன் உரு வழிந்தான்=கரும்பு வில்லையுடைய மன்மதன் உடம்பழியப் பெற்றான், பேரான வானவர் கோனும்=பேர் பெற்ற இந்திரனும், கண்ணுயிரம் பெற்ற வனே=ஆயிரம் கண் உடையவனானான், எ - று.

குறிப்பு :—இப் பாட்டிற்கு இயல்பாக உள்ளனவற்றையே கவி கற்பனை யாக வர்ணித்தார். மடலூர்தல் என்பது தான் விரும்பிய காதலியை மணக் கப் பெறாதவன் பனங்கருக்காற் செய்த குதிரையின்மேல் ஏறித் தெருவில் நின்று சோதனைக் காட்டுதலாகும்.

திருவலஞ் சுழியிலுள்ள விநாயகக் கடவுளைத் தரிசித்துப் பாடியது.

169. பறவாததும்பி கருகாத வெங்கரி பண்புரண்டே
இறுகாத தந்தி யுருகாத மாதங் கமிந்துநுதல்
நிறவாத சிந்துரம் பூசாக்களப நெடுஞ் சுனையில்
பிறவாத வாம்பல்வலஞ் சுழிக்கேவரப் பெற்றனனே.

உரை :—பறவாத தும்பி=பறவாத வண்டு அல்லது யானை, கருகாத வெங்கரி=கருகிப் போகாத அடுப்புக்கரி அல்லது யானை, பண்புரண்டே இறுகாத தந்தி=பண்முறை தவறுவதற்குக் காரணமான கட்டமையாத வீணைக்கம்பி அல்லது யானை, உருகாத மாதங்கம்=அனலில் உருகாத பெரிய தங்கம் அல்லது யானை, இந்து நுதல் நிறவாத சிந்துரம்=பிறைபோன்ற நெற்றியில் நிறங்காட்டாத செந்தூள் அல்லது யானை, பூசாக் களபம்=மேலே பூசப்படாத சந்தனம் அல்லது யானை, நெடுஞ் சுனையில் பிறவாத ஆம்பல்=நீண்ட சுனை நீரில் தோன்றாத ஆம்பற்பூ அல்லது யானை ஆகிய

விநாயகக் கடவுள், வலஞ்சுழிக்கே வரப்பெற்றனனே = திருவலஞ்சுழியில் எழுந்தருளிக் காட்சி கொடுக்கப்பெற்றேன், எ - று.

குறிப்பு :—தும்பி, கரி, தந்தி, மாதங்கம், சிந்துரம், களபம், ஆம்பல் என்ற சொற்கள் வெவ்வேறு பொருள்களைக் குறிப்பதோடு யானையையும் குறிக்கும்.

திலதைக் கற்பக விநாயகரைப்பற்றிப் பாடிய நிந்தாஸ்துதி.

170. கம்பமத கடகளிற்றுன் திலதை வாழும்
கணபதிதன் பெருவயிற்றைக் கண்டு வாடி
உம்பரெலாம் விழித்திருந்தா ரயில்வேற் செங்கை
யுடையவறு முகவனுங்கண் ணீரா ருனன்
பம்புசுடர்க் கண்ணனுமோ நஞ்சுண் டான்மால்
பயமடைந்தா னுமையுமுடல் பாதி யானுள்
அம்புவியைப் படைத்திடுவ தவம தேயென்
றயனுமன்ன மிறங்காம லலைகின் ருனே.

உரை :—கம்பமத கடகளிற்றுன் = அசைவுடைய மதம் பொழிகின்ற யானைமுகத்தை யுடையவனுகிய, திலதை வாழும் கணபதிதன் = திலதையில் வீற்றிருந்தருளும் பிள்ளையாருடைய, பெரு வயிற்றைக் கண்டு வாடி = பெரு வயிற்றைப் பார்த்து வாட்டம் அடைந்து, உம்பரெல்லாம் விழித்திருந்தார் = தேவரெல்லாம் கண் இமையாதிருந்தார்கள், அயில் வேல் செங்கை உடைய அறுமுகவனும் = கூர்மையான வேலாயுதத்தைத் தமது சிவந்த திருக்கைகளில் உடைய ஆறுமுகக் கடவுளும், கண் ஈராறு ஆனுன் = பன்னிரண்டு கண்களை யுடையவராஞர் (கண் நீர் ஆறனுன், கண்ணீர் ஆறுகப் பெருகப் பெற்றார்), பம்பு சுடர்க் கண்ணனுமே நஞ்சுண்டான் = நெருப்பு நிறைந்த நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் விடத்தை உண்டார், மால் பயமடைந்தான் = திருமால் அஞ்சினர் அல்லது பாற்கடலிற் சேர்ந்தார், உமையும் உடல் பாதியானுள் = உமாதேவியார் சிவபெருமான் திருமேனியிற் பாதியானுள், அம்புவியைப் படைத்திடுவது அவமதே யென்று = அழகிய பூமியைப் படைத்தல் வீணென்று கருதி, அயனும் = பிரமாவும், அன்னம் இறங்காமல் அலைகின்றுனே = அன்ன வாகனத்தைவிட்டு இறங்காமல் அல்லது சோறு உட்கொள்ளாமல் திரிகின்றுரே, எ - று.

குமாரக்கடவுள் குறத்தியை மணந்தாரென்று வருந்தியதற்கு வேடிக்கையாகப் பாடியது.

171. மருகிருக்கும் வேளூரின் வயித்திமகன்
குறமகளை மணந்தா னென்றே
உருகியர னஞ்சுண்டா னுமையவளுந்
தவம்புரிந்தா ளுயர்மான் மேனி

கருகிமிக மண்டின்ருன் கமலன்முக
நாலானுன்கடவு ளோர்கள்
இருவிழியு மிமையா லிரவுபக
லுறங்காம லிருக்கின் ருரே.

உரை :—மருகிருக்கும் வேளூரின் = வாசனை செடிகள் வளரும் வேளூரிலே, வயித்தி மகன் = வைத்திய நாதாது புதல்வராகிய முருகக் கடவுள், குற மகளே = குறப்பெண்ணை, மணந்தானென்றே = குல முறை தவறிக் கலியாணம் செய்து கொண்டார் என்று, உருகி = மனம் வருந்தி, நஞ்சுண்டான் = வைத்தியநாதர் விடத்தைத் தின்ருர், உமையவளும் தவம் புரிந்தாள் = உமாதேவியார் இமய மலையில் தவமியற்றினுள், உயர் மான் மேனி கருகி மிக மண் தின்ருன் = உயர்ந்த திருமால் தனது உடம்பு மிகவும் கருநிறமாகப் பெற்றுப் பூமியை விழுங்கினுர், கமலன் = பிரமா, முகம் நாலானுன் = திருமுகம் தொங்கப் பெற்ருன் அல்லது நான்கு முகம் உடையவனுனுன், கடவுளோர்கள் = தேவர்கள், இரு விழியும் = இரண்டு கண்களும், இமையாமல் இரவு பகல் உறங்காமல் இருக்கின்ருரே = இமை கொட்டாமல் இரவும் பகலும் தூங்காமல் இருக்கின்ருர்கள், எ - று.

குரங்கென்று தொடங்கி இடமென்று முடிக்கும்படிக்
கேட்ட ஒருவர்க்குப் பாடியது.

172. குரங்கனலில் வீழ்ந்துவெறி கொண்டுதேள் கொட்டக்
கரஞ்செறியப் பாம்பலவன் கவ்வி—விரைந்துபேய்
பற்றவே கள்ளுண்டு பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார் சேட்டைக் கிடம்.

உரை :—குரங்கு = குரங்கானது, அனலில் வீழ்ந்து = தீயில் வீழ்ந்து, வெறிகொண்டு = வெறி பிடித்து, தேள் கொட்ட = தேள் கொட்டப்பெற்று, பாம்பு கரஞ்செறிய = பாம்பு கையில் தீண்டப்பெற்று, அலவன் கவ்வி = நண்டு காலினைக் கவ்வப்பெற்று, விரைந்து பேய் பற்றவே = விரைவாகப் பேய் பிடித்துக்கொள்ள, கள்ளுண்டு = அது கள்ளைக் குடித்துவிட்டு, பச்சை மிளகைக் கடித்தால் = பச்சை மிளகாயையுங் கடித்துக்கொண்டால், எத்தனைபார் சேட்டைக்கிடம் = எத்தனை சேட்டைகளுக்கு இடமுண் டாகும் என்று கவனி, எ - று.

பரமசிவனைக்குறித்து நீருவாய், நெருப்பாவாய், இரு கூருவாய் எரிந்து கொண்டிருப்பாய், நடனமாடுவாய், நஞ்சுண்பாய் எனப் பாடும்படி வினவிய ஒருவருக்குப் பாடியது.

173. நீருவாய் நெற்றி நெருப்பாவா யங்கமிரு
கூருவாய் மேனி கொளுந்துவாய்—மாருத
நட்டமாவாய் சோறு நஞ்சாவாய் நாயேனை
இட்டமாய்க் காப்பாய் யினி.

உரை :—நீறுவாய்=திருநீற்று மேனியை உடையாய், நெற்றி நெருப் பாவாய்=நெற்றியில் நெருப்புக்கண்ணை யுடையாய், அங்கமிரு கூறுவாய்= உடம்பு இரு பகுதியாக உடையாய், மேனி கொழுந்தாவாய் = திரு மேனி நீக்கொழுந்து மயமாகப் பெற்றாய், மாறுத நட்டமாவாய்=நிலைபெற்ற திரு நடனஞ் செய்வாய், சோறு நஞ்சாவாய்=சோறு விடமாகப் பெற்றாய், இட்டமாய்=விருப்பமாய், நாயேனை=நாய் போன்ற அடியேனை, காப்பாய் இனி=இப்போது காப்பாற்றுவாய், எ - று.

குறிப்பு :—நீறு, நெருப்பு முதலியவற்றோடு இறைவன் அத்துவித மாய்க் கலந்து இருப்பதுபற்றி 'ஆவாய்' என்ற சொல்லை அவற்றிற்குக் கவி கூட்டினர்.

ஸ்ரீரங்கத்தில் ஒருத்திவீட்டிற் சாப்பிட்டதை நிந்தித்துப் பாடியது.

174. நீச்சாற் பெருத்திடு காவேரியாற்றை நிலைநிறுத்திச்
சாய்ச்சாலிலைக்கறிச் சாற்றையெல்லாமது தானு மன்றிக்
காய்ச்சாப்புளியும் நற்கல்லுடன் சோறுங் கலந்துவைத்த
ஆச்சாளை யான்மறவேன் மறந்தான்மன மாற்றிடுமோ.

உரை :—நீச்சால்=நீந்தும்படியாக, பெருத்திடு காவேரி ஆற்றை= வெள்ளமாக போகின்ற காவேரி ஆற்றினை, நிலை நிறுத்து=தடுத்து, சாய்ச் சால் இலைக்கறிச் சாற்றை=கீரைச் சாற்றினில் அதன் கீரைச் செலுத்திஞள், அது தானுமன்றி=அதுவல்லாமலும், காய்ச்சாப் புளியும்=காய்ந்துபோன புளியையும் அக் கீரைச்சாற்றினிற் சேர்த்தாள், நற்கல்லுடன் சோறுங் கலந்து வைத்த=நல்ல கற்களோடு சோற்றையும் சேர்த்துச் சமைத்து வைத்தவளாகிய, ஆச்சாளை யான் மறவேன் = அந்த அம்மாளை நான் மறவேன், மறந்தால் மனம் ஆற்றிடுமோ=நான் மறந்தாலும் என் மனம் கேட்குமா?, எ - று.

வேசை கதை சொல்லச் சொன்னபோது சொல்லியது.

175. சோமன் புறப்படத் தென்றலும் வீசத் துயிலொழிய
யாமங்க டோறுங் குயில்வந்துகூவி டந்நேரத்திலே
நாமும்பிழைத்து மனிதர்முன் பேசிட நாமு முண்டாய்க்
காமக்கலகந் தெளிந்தபின் னுனுங் கதைசொல்வனே.

உரை :—சோமன் புறப்பட = திங்கள் உதயமாகவும், தென்றலும் வீச=தென்றற்காற்று வீசவும், துயில் ஒழிய=தூக்கம் இல்லாமற் போய், யாமங்கள் தோறும்=ஒவ்வொரு சாமத்திலும், குயில் வந்து கூவிட=குயில் எழுந்து கூவவும், அந்நேரத்திலே=அந்த வேளையிலே, நாமும் பிழைத்து= நாம் உயிர் தப்பி, மனிதர்முன் பேசிட நாமும் உண்டாய் = மனிதர்களுக்கு முன்னே பேசுவதற்கு உரிய உணர்ச்சி நமக்கு ஏற்பட்டு, காமக் கலகம் தெளிந்தபின்=காதற்போர் முடிந்து தெளிவடைந்த பிற்பாடு, நானும்

கதை சொல்வனே = மோத்திர மல்லாமல் நானுங்கூடக் கதை சொல்லு வேன், எ - று.

கயிற்முற்றில் பெருமாளைத் தூக்கும்படி காளமேகப் புலவரை வருத்திச் சுமத்தியபோது பாடியது.

176. பாளைமணங் கமழுகின்ற கயிற்முற்றுப் பெருமாளே பழிகாராகேள்
வேளையென்ரு லிவ்வேளை பதினறு நாழிகைக்கு மேலாயிற்றென்
தோளைமுறித் ததுமன்றி நம்பியானையுங்கூடச் சுமக்கச்செய்தாய்
நாளையினி யார்சுமப்பா ரெந்நாளு முன்கோயி லுசந்தானே.

உரை :—பாளை மணம் கமழுகின்ற கயிற்முற்றுப் பெருமாளே = கமுக மடலின் வாசனை வீசுகின்ற கயிற்முறு என்னுந் திருப்பதியில் உள்ள திருமாலே, பழிகாரா கேள் = பழி வீளக்கின்றவனே கேட்பாயாக, வேளை யென்ரால் இவ்வேளை பதினறு நாழிகைக்கு மேலாயிற்று = நேரத்தைக் கவனித்தால் இப்போது இரவு பதினறு நாழிகை கடந்துவிட்டது, (உன் னுடைய வாகனத்தைச் சுமந்ததால்) என் தோளை முறித்ததுமன்றி = என்னுடைய புயத்தை ஒடித்தது மல்லாமல், நம்பியானையும் சுமக்கச் செய்தாய் = குருக்ஷளையும் உன்னோடு சுமக்கச் செய்தாய், நாளை இனி யார் சுமப்பார் = இனிமேல் நாளைக்கு யார் உன்னைச் சுமக்கப் போகிறார்கள், எந்நாளும் உன் கோயில் நாசந்தானே = எப்போதும் உன் கோயில் அழிந்து போகக் கடவது, எ - று.

எரியுடைந்த ஓட்டை எரியாகப் பாடியது.

177. கலங்கற் றுறையதனிற் காராளர் போதத்
தெலுங்கப்ப நாரணன் தெண்டிக்கச்—சலம்பெருகி
நட்டாறு கொண்டுகரை நன்ரு யுடைந்துநீர்
கட்டா தொழிதல் கடன்.

உரை :—கலங்கல் துறையதனில் = எரியானது கலங்கின தண்ணீருள்ள படித்துறைக்குச் சமீபத்தில், காராளர் = வேளாளர், போத = செல்லும் போது, தெலுங்கப்ப நாரணன் தெண்டிக்க = தெலுங் கதிகாரியாகிய நாரணன் என்பான் அவர்களைத் தண்டனை செய்யும்படியாக, சலம் பெருகி நட்டாறு கொண்டு = எரியின் நடுவில் உள்ள ஆற்றில் வெள்ளம் பெருக் கெடுப்ப, கரை நன்ரும் உடைந்து = எரியின் கரை முற்றிலும் உடைபட்டு, நீர் கட்டா தொழிதல் கடன் = தண்ணீர் எரிக்குள் அடங்காமற் புறத்தே பாய்ந்தோடுதல் முறையாகும், எ - று.

திருமலைராயன் புகழைப் புகழ்ந்து பாடியது.

178. வீமனென வலிமிருத்த திருமலைராயன் சீர்த்தி
வெள்ளம் பொங்கத்
தாமரையி னயலேடிச் சத்தியலோகம் புகுந்தான்
சங்கபாணி

பூமிதொட்டு வானமட்டும் வளர்ந்துநின்ருன் சிவன்கயிலைப்
பொருப்பிலேறிச்
சோமனையுந் தலைக்கணிந்து வடவரைத் தண்டாலாழஞ்
சோதித்தானே.

உரை :—வீமனென வலி மிகுந்த திருமலோராயன் = வீமனைப் போலப் பல மதிகமாயுள்ள திருமலோராயனுடைய, கீர்த்தி வெள்ளம் பொங்க = கீர்த்தி யாகிய வெள்ளம் பெருக் கெடுத்ததலுலே, தாமரையின் அயன் ஓடிச் சத்திய லோகம் புகுந்தான் = தாமரையில் இருந்த பிரமா ஓடிப் போய்ச் சத்திய லோகம் அடைந்தார், சங்கபாணி பூமி தொட்டு வானமட்டு வளர்ந்து நின்ருன் = சங்கைக் கையிலேந்திய திருமால் நிலமுதல் ஆகாயம்வரை திரு மேனி வளரப்பெற்று நின்ருர், அவன் கயிலைப் பொருப்பிலேறி = கயிலை மலையில் ஏறிக்கொண்டு, சோமனையும் தலைக்கணிந்து = சந்திரனையும் திருமுடி மேற் சூடிக்கொண்டு, வடவரைத் தண்டால் = இமயமலையாகிய தண்டினுலே, ஆழம் சோதித்தானே = கீர்த்தி வெள்ளத்தின் ஆழத்தை எவ்வளவு என்று பார்த்தார், எ - று.

தில்லை நடேசப்பெருமான் உடைமை இன்னின்னவை என்று பாடியது.

179. ஏறுகட்டிய கொட்டிலரங்கமே யிரிரண்டுமுகன்
வாயி லாயமே
மாறுகண்ணப்பன் வாய்மடைப்பள்ளியே வாய்த்தவோடை
திருமால் வதனமே
வீறுசேர்சிறுத் தொண்டனில்லாளுந்தி வேட்டநற்கறி
காய் கின்ற தோட்டமே
நாறுபூம்பொழில் சூழ்தில்லையம்பல நாரிபாகற்கு
நாடக சாலையே.

உரை :—நாரி பாகற்கு = பெண்ணை ஒரு பாகத்தில் வைத்த சிவபெரு மானுக்கு, ஏறு கட்டிய கொட்டில் அரங்கமே = காளை கட்டிய தொழு சீரங்க மாகும், ஈரிரண்டு முகன் வாயில் ஆயமே = நான் முகத்தை உடைய பிரமாவி னது வாயில் குதிரை கட்டும் இடம் உள்ளது, மாறுகண்ணப்பன் வாய்மடைப் பள்ளியே = வேடனுக இருந்து அன்பருவமாக மாறிய கண்ணப்பருடைய வாய் சமையலிடமாகும், வாய்த்த ஓடை திருமால் வதனமே = தாமரைப் பூப் பொருந்திய ஓடையானது அரியின் திருமுகமே, வீறுசேர் சிறுத்தொண் டன் இல்லாள் உந்தி சிறப்புப் பெற்ற சிறுத்தொண்டரின் மனைவி வயிறு, வேட்ட நற்கறி காய்க்கின்ற தோட்டமே = விரும்பிய நல்ல காய் விளைகின்ற தோட்டமாகும், நாறு பூம்பொழில் சூழ் தில்லையம்பலம் = வாசனை வீசுகின்ற

அழகிய சோலை சூழ்ந்த தில்லையம்பலமானது, நாடக சாலையே=நடன சபையாகும், எ - று.

குறிப்பு :—திரிபுரம் எரித்த காலை திருமால் காளை வாகனமாகச் சிவ பெருமானைத் தாங்கினர் ; பிரமா ஓதுகின்ற நான்கு வேதங்களும் சிவனுரது தேரின் குதிரைகளாகும் ; கண்ணப்பர் தமது வாயினிற் கொண்டு வந்த ஊனைக் கடவுளுக்கு நிவேதித்தார் ; திருமால் தமது தாமரைக் கண்ணி லொன்றைச் சிவபெருமானது திருவடியிற் சாத்தினர் ; சிறுத்தொண்டர் பெற்ற பிள்ளையைக் கறி சமைத்தது யாரும் அறிந்ததே.

நடுவெழுத் தலங்காரம்.

180. திருமால்வா கனநாவா யிராசி யொன்று
சினைதெவிட்டார் மாதுலன்கோ கிலமிவ் வேழின்
உருவாமே ழெழுத்தினடு வெனக்குச் செய்தான்
உகந்துபதி னொன்கினையுந் தானே கொண்டான்
ஒருபாகத் திருத்தினுன் கையி லேற்றான்
ஒருமதலை தனக்களித்தா னுண்டான் பூண்டான்
பரிவாயொண் கரத்தமைத்தா னுகந்தா னிந்தப்
பைம்பொழிற்றில் லையுளாடும் பரமன் ருனே.

உரை :—இந்த பைம்பொழில் தில்லையுள் ஆடு பரமன் தானே=இந்த பசுமையான சோலை சூழ்ந்த தில்லைப்பதியில் நடனம் செய்யும் பெருமான், திருமால் வாகனம்=நாகாரி, (கெருடன்) காவாய்=கலம் (மாக்கலம்), இராசி ஒன்று=கன்னி, சினை=கவடு, (கிளை) தெவிட்டார்=ஆரார், மாதுலன்=மாமன், கோகிலம்=பல்லி, இவ்வேழின் உருவாம் ஏழெழுத் தின் நடு எனக்குச் செய்தான்=(இந்த ஏழு சொற்களில் ஒவ்வொன் றும் மூன்றெழுத்துக்களால் ஆகியது) ; அவற்றின் நடு ஏழுத்துக்கள் காலன் வாராமல் என்பது, எனக்குக் காலன் வராமற் செய்தான் என்பது கருத்து, உகந்து பதினொன்கினையும் தானே கொண்டான்=எஞ்சிய பதினொன்கு எழுத்தினுல் ஆன சொற்கள் காட்டும் பொருள்களைத் தானே அமைத்துக் கொண்டான், அம் முறை வருமாறு: ஒரு பாகத் திருத்தினுன், நாரியை அதாவது பெண்ணை ஒரு பாகத்தில் வைத்துக் கொண்டார், கையில் ஏற்றான்=கம் அதாவது கபாலத்தைத் திருக் கையில் வைத்துப் பிச்சை கொண்டார், ஒரு மதலை தனக்களித்தான்=கனியை ஒரு குமாரராகிய கண பதிக்குக் கொடுத்தார், உண்டார்=கடு அல்லது விடத்தை உண்டார், பூண் டான்=ஆர் அதாவது ஆத்தி மாலையைத் தலையில் அணிந்தார், பரிவாய் ஒண்கரத் தமைத்தான்=விருப்பமாய் மானை ஒள்ளிய திருக்கையில் வைத் தார், உகந்தான்=பலி அதாவது பிச்சையை விரும்பினர், எ - று.

நிரனிறைப்பொருள்கோள்.

181. கூற்றுவனே வின்மதனே யரக்கர் கோவைக்
கூனிலவைக் குஞ்சரத்தை யிஞ்சி மூன்றை
ஏற்றுலகின் புறவுருவ மாளத் தோள்க
ளிறவெறிப்ப விமையப்பெண் வெருவ வேவக்
காற்றெழிலா னயனத்தால் விரலாற் கற்றைக்
கதிர்முடியாற் கரதலத்தாற் கணையாற் பின்னும்
ஊற்றழிய வுதைத்தெரிந்து நெரித்துச் சூடி
உரித்தெரித்தா னவனென்னை யுடைய கோவே.

உரை :—கூற்றுவனே ஏற்று உலகு இன்புற கால் தொழிலால் ஊற்றழிய உதைத்து=யமனை எதிர்த்து உலகம் இன்புறும்படி தனது திருவடியின் செயலால் (மார்க்கண்டருக்கு வந்த) இடையூறு நீங்கும் பொருட்டு உதைத்துத்தள்ளி, வின்மதனே உருவமாள நயனத்தால் எரித்து = கரும்பு வில்லினை உடைய மன்மதனை அவன் உடம்பு அழியும்படி நெற்றிக் கண்ணினால் எரித்தழித்து, அரக்கர் கோவை தோள்கள் இறவிரலால் நெறித்து= இராவணனை (கயிலை மலையை எடுத்த காலை) அவனது புயங்கள் ஒடியும்படி தமது கால் விரலால் அழுத்தி நசுக்கி, கூன் நிலவைக் கற்றைக் கதிர் முடியில் யெரிப்பச் சூடி=பிறைச் சந்திரனை அவன் குறை நீங்கும்படி தனது தொகுதியான ஒளி வீசுகின்ற சடை முடியில் அணிந்து, குஞ்சரத்தை இமையப் பெண் வேலை காத்தால் உரித்து=யானையைப் பார்வதி அஞ்சும்படியாகத் தமது திருக்கையால் தோல் உரித்து, இஞ்சி மூன்றையே எரித்தான்=திரிபுரத்தை நீங்கும்படி எரித்தவர், என்னையுடைய கோவே=என்னை அடிமையாக உடைய பெருமானவர், எ - று.

இதுவுமது.

182. பொன்னனைவா ளரக்கனைநூற் றுவரைக் காவைப்
பொருசிலையைக் கனைகடலைப் பொன்ன னீன்ற
நன்மகற்காய்ச் சுரர்க்காயைவ் வுருக்காய்க் காதல்
நட்பினுக்காய்ச் சானகிக்காய் நடவைக் காக
மன்னுகிரால் வடிக்கணையால் வளையாற் புள்ளால்
வயங்குதோள் வலியால்வா னரங்க ளாலும்
முன்னுடற்கீ றிச்சிரங்கொண் டமரில் வீழ்த்தி
முதலொடுங்கொண் டிறுத்தடைத்த மோகூ ரானே.

உரை :—பொன்னனைப் பொன்னனீன்ற நன்மகற் காய் மன் உகிரால் முன்னுடல் கீறி=இரணியனை அவனுடைய சற்புத்திரனை பிரகலாதனுக்

காக வலிமையுள்ள தன்னுடைய நகத்தால் முற் காலத்தில் உடம்பைப் பிளந்து கொன்று, வாளரக்கனே சுரர்க்காய் வடிக்கணையால் சிரங்கொண்டு = இராவணனைத் தேவர்களுக்காகக் கூரிய அம்பினாலே தலை கொய்து, நூற்று வரை ஐவருக்கா வஞ்சனையால் அமரில் வீழ்த்தி = துரியோதனன் முதலிய நூறுபேரைப் பஞ்ச பாண்டவர்களுக்காக யுத்தத்தில் தமது சங்க நாதத்தால் கொன்று வீழ்த்தி, காவைக்காதல் நட்பினுக்காய் புள்ளால் முதலொடும் கொண்டு = தனது மனைவியாகிய நப்பின்னையின் திருப்தியின் பொருட்டுப் பாரிசாத மலர்ச் சோலையைக் கருடன் மூலமாக வேரோடு எடுப்பித்து, பொருசிலையை சானகிக்காய் வயங்கு தோள் வலியால் இறுத்து = ஜனகன் வைத்திருந்த ருத்திர வில்லைச் சீதையின் பொருட்டு பிரகாசிக்கின்ற தமது புய வலிமையால் ஒடித்து, கானே கடலே நடவைக்காக வானரங்களால் அடைத்த = முழங்குகின்ற சமுத்திரத்தைச் சேனைகள் நடந்து செல்வதற் காகக் குரங்குகளின் தினை கொண்டு அணை கட்டி அடைத்தவர், மோகூ ரானே = மோகூரில் வீற்றிருக்கும் பெருமாளே, எ - று.

வீரசென்னனென்னும் வடுகப்பிராமணன் வீட்டில் கூழ் உண்டதைப்பற்றி பாடியது.

183. ஏழாளை யடித்தபுலி தனையடித்தான் வீரசென னென்றேகாட்டில்
வாழாமற் சிறுபுலிக ளீப்புலியோ டெலிப்புலியாய் வடிவங்கொண்டு
பாழாகிக் காடெல்லாம் பரதவிக்க வடுகரடுப் படியில்வந்து [னே.
கூழாகி வயிற்றினிற் போம்பொழுது குணம்போகாமற் குமுறுந்தா

உரை :—ஏழாளை அடித்த புலிதனை யடித்தான் = ஏழு மனிதர்களை ஒரு காலத்திற் கொன்ற புலியை அடித்து வென்றவனுகிய, வீரசேனன் என்றே = வீரசேனன் (ஆகிய வடுகப் பிராமணன்) என்று அறிந்து, காட்டில் வாழாமல் = காட்டிலே தங்காமல், சிறு புலிகள் = சிறிய புலிகள், ஈப்புலி யோடு எலிப் புலியாய் வடிவங்கொண்டு = ஈப்புலியாயும் எலிப் புலியாயும் வடிவம் எடுத்துவந்து, காடெல்லாம் பாழாகிப் பரதவிக்க = காடு முழுவதும் பாழாய்க் கெடவும், வடுகர் அடுப்படியில் வந்து கூழாகி = அவ் வடுகப் பிராமணனது சமையலறையில் வந்து கூழ் வடிவமாகி, வயிற்றினிற் போம் பொழுது = என்னுடைய வயிற்றுக்குள்ளே செல்லும்போது, குணம் போகாமல் குமுறும் தானே = தங்களுடைய இயற்கைத் தன்மை ஒழியப் பெரிது இரைச்சலிடுகின்றன, எ - று.

இடைச்சி தண்ணீர்கலந்த மோரைக் கொடுத்ததற்குப் பாடியது.

184. காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்
வாரொன்று மென்முலையா ராச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே.

உரை:—காரென்று பேர் படைத்தாய் ககனத் துறும்பொழுது = இடைச்சியின் மோரே! வானத்தில் இருக்கும்பொழுது மேகம் என்று பேர் பெற்றாய், நீர் என்று பேர் படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின் = நீண்ட நில உலகத்தில் நீ வந்தபிற்பாடு நீர் என்ற பேரினை உடையாய், வார் ஒன்று மென்முலையார் ஆய்ச்சியர் கை வந்ததற்பின் = கச்சணிந்த மெல்லிய தனங்களை யுடைய இடைச்சியர் கையிற் சேர்ந்த பிற்பாடு, மோர் என்று பெயர் படைத்தாய் = மோர் என்று பெயர் பெற்றாய், மூப்பேரும் பெற்றாயே = இவ்வாறு கார், நீர், மோர் என்ற மூன்று பெயரும் உடையை ஆனாய், எ - று.

செட்டிகள் காளமேகப் புலவரைக் கண்டு சொல்லியது.

185. கருந்தலை செந்தலை தங்கான் றிருக்கால் கடையிற்சுற்றி
வருந்திக் குடவற்குந் தாட்டிக்குங் கொத்திட்டு மாய்வதல்லால்
கரந்தைக ளாண்டிலொருக் கால்வருவது கண்டிருந்தும்
அரும்புக்குங் கொத்துக்கும் வந்தார் பிழைப்ப தரிதென்பரே.

உரை :—வருந்தி = (செட்டிகள்) வருத்தப்பட்டு முயன்று, கருந்தலை = கால், செந்தலை = அரைக்கால், தங்கான் = அரை, திருக்கால் = முக்கால், என்னும் அளவாகக் கடையிற் சுற்றி = காசுகளைக் கடைகளிற் சம்பாதித்து, அவற்றைக்கொண்டு குடவற்குந் = பாத்தைக்கும், தாட்டிக்கும் = கூத்திக்கும், கொத்திட்டு மாய்வதல்லால் = உணவு அளித்து ஒழிவதன்றி, கரந்தைகள் = ஆசாரியர்கள், ஆண்டில் ஒருக்கால் வருவது கண்டிருந்தும் = வருடத்திற் கொருமுறைதான் (காணிக்கைக்காக) வருவதைத் தெரிந்திருந்தாலும், அரும்புக்குங் கொத்துக்கும் வந்தார் = அவர்கள் அரிசிக்கும் சோற்றுக்கும் வந்துவிட்டார்கள், (இப்படி வந்தால்) பிழைப்பது அரிது என்பரே = நாங்கள் உயிர் வாழ்தல் இயலாது என்று கூறுவார்கள். எ-அசை, எ - று.

திம்மியென்னுந் தெலுங்கத் தேவடியாள் சொல்லியதைப் பாடியது.

186. ஏமிரா வோரியென்பா ளெந்துண்டி வஸ்தி யென்பாள்
தாமிராச் சொன்ன வெல்லாந் தலைகடை தெரிந்ததில்லை
போமிராச் சூழுஞ் சோலை பொருகொண்டைத் திம்மிகையில்
நாமிராப் பட்டபாடு நமன்கையிற் பாடுதானே.

உரை :—திம்மி = திம்மி என்னும் தெலுங்குத் தேவடியான், ஏமிரா ஓரி என்பாள் = என்னடா அடே என்பாள், எந்துண்டி வஸ்தி என்பாள் = எவ்விடத்திலிருந்து வருகிறாய் என்பாள், தாமிரா சொன்னதெல்லாம் = நேற்று இராத்திரி அவள் பேசிய மொழிகள் எல்லாவற்றினும், தலை கடை தெரிந்ததில்லை = முதல் முடிவு என்ன வென்று தெரியவில்லை, இராப்போய்ச் சூழும் சோலை = இருள் அடர்ந்து நிறைந்த சோலையை, பொரு

கொண்டை = போன்ற குடுமியை உடைய, திம்மிகையில் = அவளிடத்தில், நாமிராப் பட்டபாடு = நாம் இராத்திரி அனுபவித்த சங்கடம், நமன் கையில் பாடுதானே = எமன் கையில் அகப்பட்டால் படும் துன்பமே, எ - று.

தன்னை எளனஞ்செய்த பாடத்தெரியாத கிழத்தாசியை நிந்தித்துப் பாடியது.

187. இந்துமுடிக்குஞ் சடையாள ரிருக்குந் தொண்டைவள நாட்டிற்
சிந்துபடிக்கக் கவிபடிக்கத் தெரியாமடவா யுன்றனக்குக்
கெந்தப்பொடியேன் பூமுடியேன் கிழமாய்நரைத்து முகந்திரைந்து
இந்தமுறுக்கேன் விருப்பே னெடுப்பே னுன்னைக் கெடுப்பேனே.[ம்

உரை :—இந்து முடிக்குஞ் சடையாளர் = திங்களைச் சூடிய சடை முடியை உடைய சிவபெருமான், இருக்கும் தொண்டைவள நாட்டில் = கோயில் கொண்டு வீற்றிருக்கின்ற வளம் பொருந்திய தொண்டை மண்டலத்தில், சிந்து படிக்க கவிபடிக்கத் தெரியா மடவாய் = கொண்டிச் சிந்துகளும் சிறந்த பாடல்களும் படிக்கத் தெரியாத அறிவிலியே, உன்றனக்கு = உனக்கு, கெந்தப்பொடி யேன் = வாசனைப்பொடி எதற்கு, பூமுடி யேன் = மலர் முடிப்பது எதற்கு, கிழமாய் நரைத்து முகந் திரைந்தும் = வயது முதிர்ந்து நரை திரை உன் முகத்தில் உண்டான பிற்பாடும், இந்த முறுக்கேன் = இவ்வகையான செம்பீரம் எதற்கு, வீறுப் பேன் = இறுமாப்பு எதற்கு, எடுப்பு வன் = கிளர்ச்சி எதற்கு, உன்னைக் கெடுப்பேனே = உன்னை இழக்கத் தயாராய் இருக்கிறேன், எ - று.

பொய்யாமொழிப் புலவர்

பாடியது

பொய்யாமொழிப் புலவர் தமது ஆசாரியர் கொல்லையைக் காத்திருக் கும்போது காளிங்கனென்னும் மன்னனது குதிரை வந்து அக் கொல்லையை யழித்தபோது குதிரை யிறக்கவேண்டுமென்று பாடியது.

1. வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
ஆய்த்த மணலி லணிவரையிற்—காய்த்த
கதிரைமா ளத்தின்னுங் காளிங்க னேறுங்
குதிரைமா ளக்கொண்டு போ.

உரை :—வாய்த்த வயிரபுர மாகாளி அம்மையே = எல்லா வளங்களும் பொருந்திய வயிர புரத்தில் வீற்றிருக்கும் பெரிய காளியாகிய தாயே! ஆய்த்த மணலில் = நுண்ணிய மணல் நிலத்திலும், அணிவரையில் = அழகிய

மலைச்சாரலிலும், காய்த்த கதிரை = விளைந்த பயிரின் கதிர்களை, மானத் தின்னும் = தொலையும்படி தின்கின்ற, காளிங்கன் எறும் குதிரை = காளிங்க ராயன் சவாரி செய்யும் குதிரையை, மாளக் கொண்டு போ = சாகும்படி தூத் திக்கொண்டு போவாயாக, எ - று.

குதிரை யிறந்தது கண்ட உபாத்தியாயர் பாடியது.

2. பொதியி லகத்தியனுப் பொய்யா மொழியாய்ச்
சிதைவில் புலவர்சிகா மணியாய்த்—துதிசேரும்
செங்காட்டங் கோட்டத் துறையூ ரெனுந்தலத்தில்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்.

உரை :—பொதியில் அகத்தியனுப் = பொதிய மலையென்னு மிடத்தில் ஆதித் தமிழ் முனிவனுகிய அகத்தியராயும், பொய்யா மொழியாய் = பொய்யா மொழிப் புலவராகியும், சிதை வில் புலவர் சிகாமணியாய் = குற்றமில்லாத கல்விமான்களுக்குத் தலைவராகியும், துதி சேரும் = கீர்த்தி சார்ந்த, செங் காட்டம் கோட்டத் துறையூர் எனும் தலத்தில் = செங்காட்டம் கோட்டத் துறையூரென்னு மிடத்தில், தங்கு ஆட்டம் கொண்டு இருப்பார் = வசிக் கின்ற திருவிளையாடலை இயற்றுவாயாக! அல்லது தங்குகின்ற முயற்சியை யுடையவரா யிருப்பீராக, எ - று.

குறிப்பு:—இது பொய்யாமொழிப் புலவரை விளித்து மற்றொரு புலவர் பாடியது.

சினக்கன் இறந்தபோது பாடியது.

3. வாழி சோழ வென்வாய் மொழிகேண்மோ
ஊழி நிலவெறி மாளிகை யின்வயிற்
கட்டிளங் கணவன் கவின்பெறு சேக்கை
என்றறி மனைவி நெடிது துயில்கொளச்
செல்லக் கிடமினெனக் கிடந்த ருகெனைச்
சொல்லிய நண்பன் றனிச்செல் பவனே
நானு மேகுவ னற்றுணை யவற்கே.

உரை:—வாழி சோழ என் வாய்மொழி கேண்மோ = நீடூழி வாழு கின்ற சோழ மன்னனே என்னுடைய உண்மையான சொல்லைக் கேட்பா யாக! ஊழி நில வெறி மாளிகையின் வயில் = முறையாக நிலவொளி வீசு கின்ற மாடத்தினிடத்தே, கட்டிளம் கணவன் கவின்பெறு சேக்கை = மணந்த இளமையுள்ள கணவனுடைய அழகிய படுக்கையில், என்று அறி மனைவி நெடிது துயில் கொள = கணவன் படுத்திருப்பதாக வெண்ணி மனைவி நெடுநேரம் தூங்கவும், அருகு கிடந்து = பக்கத்திலே தானும் படுத் திருந்து, எனைச் செல்லக் கடமின் எனச் சொல்லிய = அங்கே படுத்திருந்த

என்னை இடங்கொடுத்துப் படுத்திருக்க வென்று கூறிய, நண்பன் = சினேகிதனுகிய (சினக்கன்), தனிச் செல்பவனே = தனியே இறக்கலாமா, அவற்கே நற்றுணை = அவனுக்குச் சிறந்த துணையாக, நானும் எகுவேன் = நானும் இறந்து போவேன், எ - று.

இதுவுமது.

4. அன்றுநீ செல்லக் கிடவென்ரு யாயிழையோ
டின்றுநீ வானுலக மேறினுய்—மன்றல்கமழ்
மாலைக்கும் வேல்விழியார் மாரனே கண்டியூர்ச்
சீனக்கா செல்லக் கிட.

உரை :—கண்டியூர் சீனக்கா = கண்டியூரில் வாழ்ந்த சீனக்கனே, ஆயிழையோடு அன்று நீ செல்லக் கிட என்றுய் — சிறந்த அணிகளணிந்த உன் மனைவியின் பக்கத்தில் இடம் விட்டுப் படுத்துக்கொள்ளும்படியாக, இன்று நீ வானுலகம் ஏறினுய் = நீ இன்றைக்கு உயிர் நீத்து சுவர்க்கத்திற்குப் போனுய், மன்றல் கமழ் = வாசனை வீசுகின்ற, மாலைக்கும் வேல் விழியார் மாரனே = மான்போன்ற மருட்சியும் வேல்போன்ற கூர்மையும் பொருந்திய கண்களையுடைய மகளிர்க்கு மன்மதன் போன்றவனே ! செல்லக் கட = (சிதைமீது) இடங் கொடுத்துக் கிடப்பாயாக, எ - று.

குறிப்பு :—சீனக்கன் முதலியார் படுக்கையிற் பொய்யா மொழிப் புலவர் படுத்திருக்க முதலியார் மனைவி கணவன் படுத்திருப்பதாக எண்ணி அவர் பக்கத்திற் படுத்துறங்கினுர். கணவன் பின்னர் வந்து தனக்கு இடம் கொடுக்கும்படி தான் படுத்துக்கொண்டதுமன்றிப் புலவரை வேறு செல்ல வேண்டா மென்று தடுத்தனர். முதலியார் இறந்தபோது புலவரும் சிதையில் இடம் பெற்றிறந்தார் என்பது கதை.

பொற்முமரைக் குளத்தில் மூழ்கிக்கிடந்த சங்கப்பலகை மேல் எழுப்படி பாண்டியன் கேட்க புலவர் பாடியது.

5. பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையெனினும்
பாவேந்த ருண்டென்னும் பான்மையாற்—கோவேந்தன்
மாற னறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித.

உரை :—பூ வேந்தர் முன்போல் புரப்பார் இலை எனினும் = உலகத்திலுள்ள அரசருள் முற்காலத்திற் போலத் தமிழைப் பேணுபவர்களில்லை யாஞலும், பா வேந்தர் உண்டு என்னும் பான்மையால் = பாட்டு மன்னர்களாகிய புலவர்கள் இருக்கிறர்களெனும் இயல்புபற்றி, கோவேந்தன் மாறன் அறிய = போரசனுகிய பாண்டியன் காணும்படி, மதுராபுரித் தமிழோர் = திருவால வாயிலிருந்த தமிழ்ச் சங்கத்தாருடைய, வீறணையே = தனிச் சிறப்புள்ள

இருக்கையாகிய பலகையே! சற்றே மித=சிறிது நேரம் நீரின்மேல் மிதப் பாயாக! எ - று.

சங்கப் புலவராகிய சிலைகள் தலையசைக்கப் பாடியது.

6. உங்களிலே யாளெருவ ளெவ்வுவளே வெவ்வேளே
திங்கட் குலனறியச் செப்புங்கள்—சங்கத்தீர்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழு மொக்குமோ
ஏடெழுதா ரேழெழுவீ ரின்று.

உரை :—ஏடு எழுதார் ஏழெழுவீர்=இதழ்கள் மலர்ந்த மாலையணிந்த நாற்பத்தொன்பதின்மராகிய, சங்கத்தீர் = கடைச்சங்கப் புலவர்களே! பாடுகின்ற முத்தமிழுக்கு என் பைந்தமிழும் ஒக்குமோ=நீங்கள் இயற்று கின்ற இயல் இசை நாடக மென்னும் முத்தமிழ்க் கவிகளுக்கு என் புதுத் தமிழ்ப்பாட்டு ஈடாகுமா? உங்களில் யான் ஒருவன் ஒவ்வுவளே ஒவ்வேளே= உங்களில் யாளெருவ ளிருப்பதற்குத் தகுதி யுடையேளே அல்லளே என்று, திங்கள் குலன் அறியச் செப்புங்கள்=சந்திர வமிசத்து மன்னனாகிய பாண்டியன் தெரியும்படி கூறுங்கள், எ - று.

பொய்யாமொழிப் புலவர் ஒரூர்க்குப் போய்க்கொண்டிருக்கும்போது முருகவேள் வேட்டுவரூபங்கொண்டு புலவர்முன் தோன்றி நீ யாரென்று வினவ, யான் பொய்யாமொழிப் புலவனென்ன, நீர் புலவீராயின் என்மீது ஒரு பாட்டுப் பாடென்று முருகவேள் சொல்ல புலவர் உன் பெயர் யாதென்ன, முருகவேள் தன் பெயர் முட்டை யென்று கூறக் கேட்ட போது பாடியது.

7. பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறுய தெவ்வர்போம்
கானவேன் முட்டைக்குங் காடு.

உரை :—மின்போலும்=மின்னலைப்போன்ற ஒளி வீசுகின்ற, மான வேன்=சிறப்புப் பொருந்திய வேலாயுதத்தை யுடைய, முட்டைக்கு மாறுய தெவ்வர் போம்=முட்டை யென்பவருக்கு விரோதமான எதிரிகள் செல்லு கின்ற, கான வேன் முள்=மிகுதியான வேலமரத்து முள்ளுகள், தைக்கும் காடு=காலிலழுந்துகின்ற வனத்தில், கள்ளிப்பொறி பொன்போல பறக்கும் கானலிலே=கள்ளிச் செடிகளிலிருந்து பொன்னைப்போன்ற நிறமுடைய தீப்பொறிகள் பறந்து செல்லுகின்ற பாலை வழியிலே, செல்லற்கு என் பேதை இயைந்தனளே=என்னுடைய மகள் தலைவனோடு செல்வதற்கு இணங்கினளே, எ - று.

பொய்யாமொழிப் புலவர் பாடியதைக்கேட்ட முருகக்கடவுள் வியந்து பாடியது.

8. விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடு மென்றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்திற் பெய்வளையுஞ் சென்றனளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்.

உரை :—செழும் கொண்டல்=வளமான முகில்கள், விழுந்த துளி அந்தரத்தே வேமென்றும்=தம்மிடத்தி லிருந்து கீழே விழும் மழைத் துளியானது வானிலேயே வெப்பமடையு மென்றும், வீழின்=துளிகள் கீழே விழுந்தால், சுடர் எழுந்து சுடுமென்றும்=கீழேயுள்ள அனலானது மேலே சென்று அனலுண்டாக்கு மென்றும், ஏங்கி=அஞ்சி, பெய்யாத கானகத்தில்=மழை பொழியாத காட்டிலே, பொய்யா மொழிப் பகைஞர் போல்=பொய்யா மொழிப் புலவரது எதிரிகள் போல, பெய்வளையும் சென்றனளே=வளையல் தரித்த என் மகளும் தலைவனோடு போயினள், எ - று.

ஒப்பிலாமணிப் புலவர்

பாடியது

குமணன் தன் சகோதரனிடம் சினந்து நாட்டைத் துறந்து காட்டில் இருந்த காலத்தில் அவன்பா லுற்றுப் பாடியது.

1. ஆடெரி படர்ந்த கோடிய ரடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்பசி யுழல
இல்லி தூர்ந்தன பொல்லா வறுமுலை
சுவைதொறுஞ் சுவைதொறும் பால்கா ணுமல்
குழவி தாய்முக நோக்க
மனைவி யென்முக நோக்க யாழும்
நின்முக நோக்கி வந்தனங் குமண.

உரை :—குமண=குமண வள்ளலே! ஆடு எரி படர்ந்த=ஆடி யசைகின்ற தீ நாக்குகள் பரவிய, கோடு உயர் அடுப்பில்=பக்கங்கள் நிமிர்ந்திருக்கின்ற அடுப்பிலே, ஆம்பி பூப்ப=காளான் முளைக்கவும், தீம் பசி உழல=கடுமையான பசியானது எங்கள் பால் நிலவ, இல்லி தூர்ந்த பொல்ல அறுமுலை=காம்புகளிலுள்ள துவாரம் பால் ஒழுகாமையால் மூடிப்போன அழகில்லாத வெறும் தனங்களை, குழவி சுவைதொறும் பால் காணுமல்=குழந்தை வாயில்வைத்துப் பால் குடிக்க முயலுந்தோறும் பால் சுரக்காமை

யால், தாய்முகம் நோக்க=தாயினது முகத்தை வருத்தத்தோடு பார்க்க, மனைவி என் முகம் நோக்க=(குழந்தைக்குத் தாயாகிய என் இல்லாள்) பொருளில்லை யென்ற கவலையால் என் முகத்தைப் பார்க்க, யாமும் நின் முகம் நோக்கி வந்தனம்=நானும் உன் கருணையை எதிர்பார்த்து உன்னைக் கண்டுபோக வந்தேன், எ- று.

குறிப்பு:—குமணன் தன் தம்பியோடு பகைத்துக் காட்டிற் போய்த் தங்கியபோது புலவர் அவரிடஞ் சென்று பாடிய பாட்டு இது.

புலவர்க்குக் குமண மன்னன் பதிலுரைத்தது.

2. அந்தநாள் வந்திலை யருங்கவிப் புலவோய்
இந்தநாள் வந்துநீ நொந்தனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனை மீட்டுன் வறுமைநோய் களையே.

உரை:—அரும் கவிப் புலவோய்=சிறந்த பாட்டியற்றுவதில் வல்ல கல்விமானே! அந்த நாள் வந்திலை=நான் வளத்தோடு நாட்டிலிருந்த போது நீ வந்தாய் இல்லை, இந்த நாள் வந்து நீ நொந்து எனை அடைந்தாய்=யான் கொடுக்க ஒன்று மில்லாதிருக்கும் இக் காலத்தில் துன்புற்று நீ என்பால் வந்தடைந்தனை, (ஆனாலும் ஒன்று சொல்கிறேன் கேள்) தலைதனைக் கொடுபோய்=என் தலையை வெட்டி எடுத்துக்கொண்டு சென்று, தம்பி கைக்கொடுத்து=அதனை விரும்புகின்ற என் தம்பியினிடங் கொடுத்து, அதன் விலைதனைப் பெற்று=அதற்கு விலையாக அவன் கொடுக்கும் பணத்தை வாங்கி, உன் வறுமை நோய் களையே=உன் தரித்திரமாகிய வியாதியைப் போக்குவாயாக! எ - று.

மாந்தைக் கம்மாளன் பொய்த்தலை செய்து கொடுத்ததைப் புலவர் வியந்து பாடியது

3. மாந்தையிலே வாழு மகுடத்தி யாகியுனக்
கேந்து தமும்போ விரண்டுளவே—வேந்தர்
முடித்தமும் புன்காலிலே முத்தமிழோர்க் கீயும்
படித்தமும் புன்கையிலே பார்.

உரை:—மாந்தையிலே வாழும் மகுடத்தியாகி=மாந்தைப் பதியிலே குடியிருக்கின்ற கிரீடஞ் செய்து கொடுக்கும் கொடையாளனே! உனக்கு ஏந்து தமும்போ இரண்டுளவே=நீபெற்ற தமும்புகள் இரண்டுள்ளன, உன் காலிலே வேந்தர் முடித் தமும்பு=உன்னுடைய அடியிலே மன்னர்களுக்குக் கிரீடஞ் செய்யுங்கால் பட்ட முடித் தமும்பிருக்கிறது, உன் கையிலே முத்தமிழோர்க்கு ஈயும் படித்தமும்பு பார்=முத்தமிழ்வல்ல கல்விமான்களுக்கு அளிக்கும் பொருள்களை அளக்கும் கருவியின் வடு உன் கையிலே இருக்கிறது, கவனிப்பாயாக! எ - று.

குமணனைத் தமையன் வியந்து பாடியது.

4. வெம்புங் காலை வெதும்பி விழுஞ்சிரம்
செம்பொன் கோடிவிலை யெனச்சிந் தித்தான்
உம்பர் நாடு முலகினுந் தேடினும்
எம்பி போலெமக் கியாவ ருரியரே.

உரை :—வெம்புங்காலை வெதும்பி விழும் சிரம்=எதிரிகள் கொலை செய்யும்போது சூட்டோடு விழுகின்ற என் சென்னியானது, கோடி செம் பொன் விலை எனச் சிந்தித்தான்=ஒரு கோடி செம்பொன் விலை பெறக் கூடிய தென்று என் தம்பி கினைத்தான், உம்பர் நாடும்=விண்ணுலகிலும், உலகிலும்=பூமியிலும், தேடினும்=தேடிப் பார்த்தாலும், எம்பி போல்=என் தம்பியைப்போல, எமக்கு யாவர் உரியரே=என்னைப் பாராட்டும் உரிமை யுடையவர்கள் யாரிருக்கின்றார்கள், எ - று.

புலவர் தன் வறுமையை நீக்க அரிதே வெனக்
குமணனைப் புகழ்ந்து பாடியது.

5. ஆறுபெருக் கற்றருந் திடர்தான் பட்டாலும்
ஊறலமை யாதோ வுலகாற்றத்—தேற
வறியையே யானலு மென்கலியை மாற்றச்
சிறியையோ சீர்க்குமண செப்பு.

உரை :—சீர் குமண=(ஒப்பற்ற) புகழ் நிரம்பிய குமணவள்ளலே! ஆறு பெருக்கற்று அருந்திடர்தான் பட்டாலும்=நதியானது நீர்ப் பெருக்கில் லாது கடத்தற்கரிய மணல் திட்டுக்களாக மாறி விட்டாலும், உலகு ஆற்ற=உலகினர் வெப்பத்தைத் தணிப்பதற்கு, ஊறல் அமையாதோ=ஆற்றி னுடைய ஊற்று நீரானது போதாதோ (அதுபோல்), தேற வறியையே ஆனலும்=தெளிவாகவே நீ தரித்திரனு யிருந்தாலும், என் கலியை மாற்ற=என்னுடைய வறுமையைத் தொலைப்பதற்கு, சிறியோய் செப்பு=நீ அற்பமான நிலையி லுள்ளவனு ? என்று கூறுக, எ - று.

முருகக் கடவுள்மீது பாடியது.
தலைவி கூற்று.

6. வில்லை வளையாதே மீசைமுறுக்கிச் சினத்து
முல்லைமல ரம்பையென்மேல் மோதாதே—நில்லடா
வந்தா ரடாமுருகர் வந்துகடப் பந்தாரைத்
தந்தா ரடாமன் மதா.

உரை :—மன்மதா=காமனே! வில்லை வளையாதே=உன் கருப்பு வில்லை வளைத்து அம்பு செலுத்தாதே, மீசை முறுக்கிச் சினத்து=உன் முக ரோமத்தைத் திருகிக்கொண்டு கோபித்து, என்மேன் முல்லை மலர் அம்பை

மோதாதே=என்மீது முல்லைப் பூவாகிய கணை தாக்கும்படி செய்யாதே, நில்லடா=பொறுத்து நிற்பாயாக! முருகர் வந்தாரடா=முருகப் பெருமான் எழுந்தருளி வந்தனர், வந்து கடப்பந்தாரைத் தந்தாரடா=அவர் எழுந் தருளி வந்து தானணிந்திருக்கும் கடப்பம் பூமாலையை எனக்கு அளித்தார், எ - று.

திருச்செந்தூர் குமரனிடம் அன்னப்பறவையைத் தூது அனுப்பும் துறையமைத்துப் பாடியது.

7. செந்திற் குமரன் றிருவழகைக் கண்டவுடன்
வந்திருக்கு மாரன் வதைக்கிருன்—அந்திக்கு
முன்னமே சென்றென்றன் மோகமெலாஞ் சொல்லிவந்தால்
அன்னமே கும்பிடுவேன் யான்.

உரை:—செந்தில் குமரன் திரு அழகைக் கண்டவுடன்=திருச் செந் தூரில் வீற்றிருக்கும் முருகப் பெருமானின் புனிதமான வனப்பை நான் நோக்கியபோது, இக் குமாரன் வந்து வருத்துகின்றான்=கரும்பினை வில்லாகவுடைய மன்மதன் வந்து என்னைத் துன்புறுத்துகின்றான், அன்னமே=தூதுபோகின்ற அன்னப் புள்ளே! அந்திக்கு முன்னமே= மாலைக் காலத்திற்கு முன்னதாகவே, நீ சென்று என் மோகமெல்லாம் சொல்லி வந்தால்=நீ போய் என்னுடைய காதல் முழுவதையும் அப் பெருமா னுக்குத் தெரிவித்து வருவாயானால், கும்பிடுவேன் யான்=யானுன்னை வணங்குவேன், எ - று.

தலைவி ஊடித் தூதனிடங் கூறியது.

8. தங்க டனமிருக்கத் தார்வேந்த ரெல்லோரும்
எங்க ட்னத்துக்கே யிச்சிப்பார்—எங்கடனம்
கச்சிருக்கும் பாலிருக்குங் காமபாணங் கள்பட்டுப்
பிச்சிருக்கும் வேண்டாம் பிளாய்.

உரை:—பிளாய் தூதுவந்த பிள்ளையே! தார்வேந்தர் எல்லோரும்= மாலை தரித்த மன்னரெல்லாம், தங்கள் தனமிருக்க=தங்களுடைய செல்வம் தங்களிட மிருக்கவும், எங்கள் தனத்துக்கே இச்சிப்பார்=எங்களுடைய செல்வம் அல்லது முலைக்கு ஆசை வைப்பார், எங்கள் தனம்=எங்கள் தனம் அல்லது முலை, கச்சிருக்கும்=கைத்துப் போயிருக்கும் அல்லது ரவிக்கையி னுள்ளே இருக்கும், பாலிருக்கும்=இரு பாகத்திற்குரியதாக இருக்கும் அல்லது பால் நிறைந்திருக்கும், காம பாணங்கள் பட்டு பிச்சிருக்கும்=மதன் கணைகள் பொருந்திப் பிய்க்கப்பட்டிருக்கும், வேண்டாம்=அது அவர்களுக்கு வேண்டியதில்லை, எ-று.

கூவத்து நாரணனென்னும் வள்ள லிறந்ததறிந்த புலவர் வருந்திக் கூற்றுவனை இகழ்ந்து பாடியது.

9. இடுவோர் சிறிதிங் கிரப்போர் பெரிது
கெடுவாய் நமனே கெடுவாய்—படுபாவி
கூவத்து நாரணனைக் கொன்றுயே கற்பகப்பூங்
காவெட்ட லாமோ கறிக்கு.

உரை:—கெடுவாய் நமனே = கெடுகின்ற தன்மையுடைய எமனே! இங்கு இடுவோர் சிறிது இரப்போர் பெரிது = இவ்வுலகத்தில் கொடுப்பவர்கள் தொகை மிகச் சிறியது, ஏற்பவர்கள் தொகை மிகப் பெரியது, கூவத்து நாரணனைக் கொன்றுயே = கூவத்து நாரணனென்னும் வள்ளலை நீ உயிர் போக்கினையே, படுபாவி கெடுவாய் = பெரிய பாவியே நீ அழிந்து போவாய், கறிக்கு = கறி சமைத்தற்கு, கற்பகப் பூங்கா வெட்டலாமோ = கற்பகச் சோலையைத் தறிக்கலாகுமா, எ-று.

செய்யூரில் வாழும் நயினார் என்னும் பிரபுமீது தலைவி கூற்றுத் துறை யமைத்துப் பாடியது.

10. மையூருங் கண்ணார் மயங்கப் பொருகரும்ப
கையூருங் காமாவுன் கண்ணணை—செய்யூர்
வளவனையி னின்பிரிந்த வாறுனக்குச் சொன்ன
உளவனை யினனென் றுரை.

உரை:—மையூரும் கண்ணார் மயங்க = மை தீட்டப்பட்ட கண்களையுடைய பெண்கள் மயல் கொள்ளும்படியாக, பொரு கரும்பு கையூரும் காமா = சண்டை செய்தற்குரிய கரும்பு வில் கையில் நிலவப்பெற்ற மன்மதனே! உன் கண்ணணை = உன் கண் மேல் ஆணையிட்டிருக்கிறேன், செய்யூர் வளவன் நயினன் பிரிந்தவாறு = செய்யூரிலிருக்கும் சோழனைப் போன்ற நயினனென்னும் வள்ளல் என்னை விட்டுப் பிரிந்த வகையை, உனக்கு சொன்ன = உனக்குத் தெரிவித்த ஒற்றனை, இனன் என்று உரை = இன்னனென்று உண்மையாகக் கூறுக, எ-று.

இரவு நீடுவதைக் குறித்து தலைவி இரங்குவது.

11. ஆழிவாய்ச் சத்த மடங்காதோ யான்வளர்த்த
கோழிவாய் மண்கூறு கொண்டதோ—ஊழி
திரண்டதோ கங்குறி னகரனுந் தேரும்
உருண்டதோ பாதாளத் துள்.

உரை:—ஆழிவாய்ச் சத்தம் அடங்காதோ = கடலிலுள்ள ஓசையானது ஒடுங்க மாட்டாதோ, யான் வளர்த்த கோழி வாய் மண் கூறுகொண்டதோ =

யான் பேணிய கோழியானது கூவாதிருப்பதற்குக் காரணமாக அதன் வாயை மண்ணின் பகுதி மூடிக் கொண்டதோ, ஊழி திரண்டதோ கங்குல் = ஊழி யானது இந்த இராத்திரியாக உருவெடுத்ததோ, தினகரனும் தேரும் = பகலவனும் அவனுடைய இரதமும், உருண்டதோ பாதாளத்துள் = பாதா ளத்துக்குள் உருண்டு விழுந்தனவோ, (ஆதலால் இரவு நீடித்துச் சூரிய னுதிக்கவில்லையோ), எ-று.

இதுவுமது.

12. அரவங் கரந்ததோ வச்சுமர மிற்றுப்
புரவி கயிறுருவிப் போச்சோ—இரவிதான்
செத்தாலே வில்லையோ தீவினையோ பாங்கியெனக்
கெத்தால் விடியு மிரா.

உரை :—பாங்கி = தோழியே ! அரவம் கரந்ததோ = பாம்பு சூரியனை ஒளித்துக் கொண்டதோ, அச்சு மரம் இற்று = சூரியன் தேரின் அச்சுக்குடம் ஒடிந்து போய், புரவி கயிறு உருவிப் போச்சோ = தேர்க்குதிரைகள் கட்டிய கயிறு கழன்று போக வழியை விட்டு அவை ஓடிப்போய் விட்டனவோ, இரவிதான் செத்தாலே இல்லையோ = சூரியன்தான் மாண்டாலே அல்லது எழாமல் ஒழிந்தாலே, தீவினையோ = இரவு நீடிப்பதற்குக் காரணம் யான் செய்த பாவமோ ? எனக்கு எத்தால் இரா விடியும் = எப்படி இந்த இராத் திரியானது கழிந்து போகும், எ - று.

நற்ற யிரங்கல்.

13. முலையுங் குழலு முளைப்பதற்கு முன்னே
கலையும் வளையுங் கழன்றுள்—மலையில்
சிராப்பளி யானேறிவருஞ் சேவின்மணி யோசைக்
கிராப்பளியுங் கொள்ளா ளிவள்.

உரை:—மலையில் சிராப்பளியான் = மலையில் வீற்றிருக்கின்ற திருச் சிராப்பள்ளிப் பெருமான், ஏறிவரும் சேவின் மணி ஓசைக்கு = ஏறி யெழுந் தருளுகின்ற காளையின் கழுத்திலுள்ள மணியோசை கேட்டு, முலையும் குழலும் முளைப்பதற்கு முன்னே = தனமும் தலைமயிரும் நன்றாக உண்டாவ தற்கு முன்னே, இவள் கலையும் வளையும் கழன்றாள் = இவள் ஆடையும் வளையலும் நழுவப் பெற்றாள், இராப்பளியும் கொள்ளாள் = இரவிலும் படுக்கையிற் படுக்காதிருக்கிறாள், எ – று.

தலைவி தலைவனோடு புலத்தற்றுறை யமைத்துப் பாடியது.

14. பாண்டியன் ராானேன் பசலைபுலப் பாலானேன்
ஆண்டிகையி லேந்தியதோன் ராானேனே—வேண்டியபோ
துள்ளங்கைத் தேனனே லோர்மதலை பூத்தபின்
புள்ளங்கைத் தேனு னுனக்கு.

உரை :—நான் உனக்கு=....., பாண்டியன் தார் ஆனேன்=பாண்டிய னது மாலைபோல அருமையாகத் தோன்றினேன், பசலை முலைபால் ஆனேன்=உன்னோடு கலந்து தேமல் பொருந்திய தனங்கள் பால் ஊறப் பெற்றேன், ஆண்டி கையில் ஏந்தியது ஒன்று ஆனேனே=பிச்சைக்காரன் கையிற் கிடைத்த அரும் பொருள்போலப் பேணப் பெற்றேன், வேண்டிய போது உள்ளங்கை தேன் ஆனேன்=நீ ஆசைப்பட்ட போதெல்லாம் உன் உள்ளங்கையிலிருக்கிற தேன்போல உனக்குப் பயப்பட்டேன், ஓர் மதலை பூத்த பின்பு=ஒரு குழந்தை பிறந்த பிற்பாடு, உள்ளம் கைத்தேன்=உன் னுள்ளத்தில் வெறுக்கத்தக்கவ ளானேன், எ - று.

ஸ்ரீ முட்டத்துப் பெருமான்மீது பாடியது.

15. முட்டத்துப் பன்றி முளரித்திருப் பதத்தைக்
கிட்டத்துப் பன்றிக் கிடந்தேனே—தொட்டு
மருங்கிலே சங்கெடுத்த மாலே யெனக்கு
வருங்கிலே சங்கெடுக்க வா.

உரை :—முட்டத்து பன்றி=ஸ்ரீ முஷ்ண மென்னும் தலத்தில் வீற் றிருக்கும் ஆதி வராகப் பெருமானே, முளரி திருப்பதத்தை=உன் திருவடி கமலத்தை, கிட்ட=தெருங்குவதற்கு, துப்பு அன்றி=வலிமை யில்லாமல், தொட்டு கிடந்தேன்=தொடர்ந்து பயனற்றிருந்தேன், மருங்கிலே சங்கு எடுத்த மாலே=இடக்கையிலே சங்கத்தை யேந்திய பெருமானே! எனக்கு வரும் கிலேசம் கெடுக்கவா=எனக்கு நேர்ந்திருக்கும் கிலேசத்தை ஒழித் தற்கு நீ வந்தருள்வாயாக, எ - று.

விவேகிகள் செய்கின்ற தன்மை இவைகளாமெனப் பாடியது.

16. மாதர்க்கிதங்கவிவாணர்க்குச் சாலவணக்கங்குரு
நாதர்க்குநீதியோடாசார நண்பினயந்தவர்க்குக்
கோதற்றவாசகம்பொய் கோளுக்குக்கோளறிவி
லாதர்க்கிரட்டியறிவுடையோர் செய்யுமாண்மைகளே.

உரை :—அறிவுடையோர் செய்யும் ஆண்மைகளே=அறிஞர் ஆற்றும் ஆண்டகைமைக்குத்தக்க செயல்களான, மாதர்க்கு இதம்=பெண்கட்கு இனி யன கூறுதலும், கவிவாணர்க்கு சால வணக்கம்=பாவலருக்கு மிகுந்த வழிபாடு செய்தலும், குருநாதர்க்கு நீதியோடு ஆசாரம்=ஆசாரியரிடம் நியாயமாயும் ஒழுக்கத்தோடிருத்தலும், நண்பின் நயந்தவர்க்கு=சிநேகங் காரணமாக நம்மிடத்தில் ஆசைப்பட்டவர்களுக்கு, கோதற்ற வாசகம்=பிழை இல்லாத நல்மொழி பகர்தலும், பொய்க்குப் பொய்=பொய்யரைப் பொய்யில் வெல்லுதலும், கோளுக்கு கோள்=புறங் கூறுபவர்க்குப் புறங் கூறி அதன் இழிவைக் காட்டுதலும், அறிவிலார்க்கு இரட்டி=மூடர்களுக்கு அவரிலும் இரு மடங்கு மூடத்தனமா யிருப்பதும் ஆமென்றறிக, எ - று.

பாண்டிய மன்னனை நோக்கிச் சிவபெருமானைப் பணியாயோ வெனப் பாடியது.

17. குழற்காலரவிந்தங்கூம்பக் குமுதமுகையவிழ்ப்ப
நிழற்கான்மதியமன்றே நின்றிருக்குலநீயவன்றன்
அழற்காலவிர்சடைமீதே யிருந்துமவ்வந்திவண்ணன்
கழற்கால்வணங்குதியோ வணங்காமுடிக்கைதவனே.

உரை :—வணங்காமுடி கைதவனே=யாவருக்கும் தலை குனியாத திரு முடியையுடைய பாண்டியனே! குழல் கால் அரவிந்தம்=புடையுடைய தண்டோடு கூடிய தாமரையானது, கூம்ப=இதழ் மூடிக் கொள்ளவும், குமுதமுகை அவிழ=ஆம்பல் அரும்புகள் மலரவும், நிழல் கால் மதியம் அன்றே=நிலவு வீசுகின்ற சந்திரன் அல்லவா, நின் திருக்குலம்=உன் சிறந்த வமிசத்தலைவன், நீ=சந்திரனுடைய நீ, அவன் தன் அழல்கால் அவிர் சடை மீதே இருந்தும்=செவ்வொளி வீசுகின்ற பெருமானது விளங்கு கின்ற சடை முடிமேல் தங்கியிருந்தும், அவ் அந்திவண்ணன் = செவ்வானத் தின் நிறமுடைய அவனது, கழல் கால் வணங்குதியோ=வீரச் சிலம்பைத் தரித்த அவனுடைய திருப்பாதத்தை வழிபடுகின்றாயல்லவா, எ - று.

சண்பகவல்லி யம்மையாரைப் பணிந்து நல்வரம் பெற்றேனதலின் இனி என்பால் இயமன் வரமாட்டான் வந்தாலும் அவன் என்னைப் பணிவானென்று பாடியது.

18. பாட்டானதைவண்டுபாடுங் குழற்சண்பகவல்லிதன்
தாட்டாமரையைத்தொழு தேனினியென்றலையில்விதி
தீட்டான்கருமுகில்போலே வருமந்தச்சேட்டெருமை
மாட்டானினிவரமாட்டான் வந்தாலும்வணங்குவனே.

உரை :—வண்டு பாட்டானது பாடும் குழல்=வண்டுகள் இனிய கீதம் பாடிச் சூழுகின்ற கூந்தலையுடைய, சண்பகவல்லி தன் தாள் தாமரையைத் தொழுதேன் = சண்பகவல்லி யம்மையின் திருவடிக் கமலங்களைக் கும்பிட் டேன், இனி என் தலையில் விதி தீட்டான்=(எனக்குப் பிறவியற்றமை யால்) என் தலை யோட்டில் பிரமதேவர் வினைப்பயனை வரையமாட்டார், கருமுகில்போலே வரும்=கரிய மேகத்தைப்போல உயிர் கொண்டுபோக வரும், அந்த சேட்டு எருமை மாட்டான்=அந்த பெரிய எருமை மாட்டு வாகனத்தை யுடையவனாகிய எமன், இனி வர மாட்டான்=இனி என் னருகே வருகின்றிலன், வந்தாலும் வணங்குவனே=வருவானாயினும் அவன் என்னை வழிபடுவான், எ - று.

இரத்தின சபாபதிமீது பாமாலைச் சாற்றியதைப் புகழ்ந்து பாடியது.

19. சீமானுநாமகள்கோமானு மேத்தித்தினம்பணிந்து
பூமாலைசாத்தியரத்னசபாபதி பொன்னடிக்குப்
பாமாலைசாத்திநின்றே னவனுன்மிகப்பாடுபட்ட
ஏமாவுன்னுலினியாமா வென்பாலினியெய்துதற்கே.

உரை :—சீமானும்=திருமகள் கணவனும், நாமகள் கோமானும்=கலை மகள் கணவனும், ஏத்தி=வாழ்த்தி, தினம் பணிந்து=தினந்தோறுந் தொழுது, பூமாலை சாத்திய=மலர்மாலை யணிவித்த, ரத்ன சபாபதி பொன் னடிக்கு=இரத்தின சபா நாயகருடைய அழகிய திருவடிகளுக்கு, பா மாலை சாத்தி நின்றேன்=பாட்டிஞலாகிய கோவையை ஒப்புவித்தேன், அவனுல் மிகப் பாடுபட்ட ஏமா=அப் பெருமானுல் உதைபட்டு மிகுதியான துயர முற்ற ஏமனே! இனி என்பால் சினந்து எய்தற்கு உன்னுல் ஆமா=இனிமேல் சீற்றத்துடன் என்னிடம் வருவதற்கு உன்னுல் முடியுமா, எ - று.

திருவொற்றியூர்த் தியாகராசப்பெருமானைத் துதித்துப் பாடியது

20. தடங்கொண்டகல்வில்லின் மெல்லெனப்பூட்டித்தமதுரத்தில்
வடங்கொண்டுசாத்திவிடங் கொண்டுபார்த்துமணிகிளரும்
படங்கொண்டபாம்பிற் பழகியபின்மலைப்பாவைதன்னை
இடங்கொண்டவொற்றித் தியாகேசர்புற்றினிடங்கொண்டதே.

உரை :—மலைப்பாவை தன்னை இடங்கொண்ட ஒற்றித் தியாகேசர்=இமயமலையரசன் புதல்வியாகிய உமையம்மையை தமது இடப்பாகத்திற் கொண்ட திருவொற்றியூர்த் தியாகராசப் பெருமான், புற்றினிடங் கொண் டது=பாம்புப்புற்றைத் தமக்குத் தங்குமிடமாக ஏற்படுத்தியது, தடம் கொண்ட கல்வில்லின்=விசாலமான மேருமலையாகிய வில்லினிடமாக, மெல் லெனப் பூட்டி=(நாணுகப் பாம்பினை) மெதுவாகப் பூட்டிப் பார்த்தும், தமது உரத்தில் வடம் கொண்டு சாத்தி=தமது மார்பினிடமாக மாலை போலத் தரித்துப் பார்த்தும், விடம் கொண்டு பார்த்தும்=விஷத்தை யுண்டு கவனித்தும், மணி கிளரும் படம்கொண்ட பாம்பில் பழகியபின்= இரத்தினம் பிரகாசிக்கின்ற படமுடைய பாம்போடு பழக்கஞ் செய்து கொண்ட பிற்பாடே ஆமென்க, எ - று.

திருவாரூர் பெருமான்மீது பாடிய துதி.

21. விடங்காட்டிக்கண்டத்திற்ரேலுரி காட்டித்தன்மெய்யினைப்புற்
றிடங்காட்டிவாலையொருபுறங் காட்டிவண்டேறுமலர்த்
தடங்காட்டியபொழிலாரூர்த் தியாகர்தமதுபொற்ருட்
படங்காட்டியாடிநின்ரு ருலகேழும்பணியென்னவே.

உரை :—வண்டு ஏறும் மலர்த்தடம் காட்டிய பொழில் ஆரூர் நியாகர் = வண்டுகள் சென்று தங்கப்பெற்ற பூக்களையுடைய தடாகங்கட்கருகே அமைந்த சோலைகள் சூழ்ந்த திருவாரூரில் வீற்றிருக்கும் நியாகராசப் பெருமான், கண்டத்தில் விடம் காட்டி = தனது கழுத்தில் நஞ்சமைத்தமை யைக் காட்டியும், தோல் உரி காட்டி = உரித்த யானைத்தோல் போர்வை யைக் காட்டியும், தன் மெய்யினைப் புற்றினிடம் காட்டி = தன் திருமேனி யைப் பாம்புப் புற்றினிடம் உள்ளதாகக் காட்டியும், வாலை ஒருபுறம் காட்டி = இளஞ் செல்வியாகிய உமையம்மையை ஒரு பாகத்திற் காட்டியும், தமது பொற்சுள் படம் காட்டி = தமது அழகிய திருவடியின் நிழலைக் காட்டியும், உலகேழும் பணி ஏன்னவே = உலக மேழும் வணங்கும்படி யாகவே, ஆடி நின்றார் = நடனஞ் செய்தனர், எ - று.

குறிப்பு :—' பணி யென்னவே ' என்பதற்கு பாம்பு என்று சொல்லும் படியாகப் பொருள் கொள்வது முண்டு. விடம், தோலுரி, புற்று, வால், படம் என்பன பாம்புக்குரியன வாதலின் பாம்புபோல இறைவன் ஆடி நின்றார் என்று குறிப்பிட்டார். 'பாலை' வாலையென மருவிற்று.

திருவொற்றியூர்ப் புற்றிடங்கொண்ட பெருமான்மீது பாடிய துதி.

22. புரந்தனைமாலைச்சதுரான னத்தனைப்போகியைமுப்
புரந்தனைச்சாதித்திமையாத நாட்டப்புலோமசைவாழ்
புரந்தனைமானுந்திருவொற்றியூர நின்பொன்மணிக்கே
புரந்தனைக்கண்டனன்காணே னுதிக்கும்புரந்தனையே.

உரை :—இமையாத நாட்டப் புலோமசை வாழ்=மூடாத கண்ணை யுடைய இந்திராணி தங்குகின்ற, புரந்தனை மானும் = அமராவதிப் பட்டினத்தை யொத்த, திருவொற்றியூர = திருவொற்றியூரில் வாழும் பெருமானே ! முப்புரந்தனைச் சாதித்து = திரிபுரத்தை யழித்து, மாலை= விஷ்ணுவையும், சதுரான நத்தனை = நான்முகனையும், போகியை = இந்திர னையும், புரந்தனை = காப்பாற்றினும், நின் பொன் மணிக் கோபுரந்தனைக் கண்டனன் = நினது அழகிய இரத்தினங்க ளமைந்த கோபுரத்தைக் கண்டு தொழுதேன், உதிக்கும் புரந்தனைக் காணேன் = இனிப் போய்ப் பிறக்கும் உடம்பினைக் கண்டிலேன், (பிறப்பற்றே னென்பது கருத்து), எ - று.

நாணிக்கண் புதைத்தல்.

23. நல்லம் புலியணிந்தோ ளுதனுக் கெட்டாநாள்
வில்லம் புடன்கூடி விட்டாலும்—வல்லி
இடையாளே முன்னுலக மேழளந்தோன் மைந்தன்
குடையான தன்றே கொடிது.

உரை :—வல்லி இடையாளே = கொடிபோன்ற இடையையுடையவளே! நல் அம்புலி அணிந்தோன் = அழகிய பிறையினைத் தரித்தோனுடைய சிவ

பிரானது, நாள்=ஆதிரை நட்சத்திரத்திற்கு, அதனுக்கு எட்டாம் நாள்=எட்டாவது நட்சத்திரமாகிய அஸ்தம் அதாவது கையானது, வில்=வில் போன்ற புருவத்தினையும், அம்பு=அம்பு போன்ற கண்ணையும், கூடிவிட்டாலும்=போய்ச்சேர்ந்து மூடிக்கொண்டாலும், முன் உலகம் ஏழளந்தோன் மைந்தன்=முற்காலத்தில் மாவலிபாற் சென்று மண் இரந்து தனது திருவடியில் உலகம் ஏழினையும் அளந்த திருமாலின் மகனாகிய மன்மதனுடைய, குடையானது அன்றே கொடிது=குடையான சந்திரனல்லவா கொடுமையாயிருக்கின்றது, எ - று.

தென் புன்னை வனத்தானிடம் சென்றுவாபென
நெஞ்சுக் கறிவுறுத்தல்.

24. வாழ்நிலைசேர் பொன்னுலகம் வண்களந்தைக் கோபுரத்தின்
ஏழ்நிலைமே லேறிடினு மேறலாம்—பாழ்மனமே
அன்புன்னைக் காட்ட வரனறிவு தேயருமை
தென்புன்னைக் காட்டனடி சேர்.

உரை:—வாழ்நிலை சேர் பொன்னுலகம்=விண்ணவர் நாடுபோல வாழ்வதற்குரிய வசதிகளமையப்பெற்ற, வண்களந்தை=வளமான திருக்களந்தையின், கோபுரத்தின் ஏழ் நிலைமேல் ஏறிடினும் ஏறலாம்=கோபுரத்தினுடைய ஏழு வாசலுக்குமேல் ஏறவேண்டுமானாலும் ஏறிவிடலாம், பாழ் மனமே=வீணான உள்ளமே! உன்னை அன்பு காட்ட அருமை=உனக்கு அன்புண்டாக்குவது அருமையாக இருக்கின்றது, (அதனால்) அரன் அறிவதே அருமை=சிவபெருமானை நீ அறிதல் அறிதாயிற்று, தென்புன்னைக் காட்டன் அடி சேர்=தென் புன்னை வனத்தானுடைய திருப்பாதங்களைப் பற்றுவாயாக, எ - று.

காஞ்சிபுரம் காமாட்சியம்மையார் தன்மையைப் பாடியது.

25. கஞ்சி குடியாளே கம்பன்சோ றுண்ணாளே
வெஞ்சினங்க ளென்றும் விரும்பாளே—நெஞ்சதனில்
அஞ்சுதலை யாவாருக் காறுதலை யாவாளே
கஞ்சமுக காமாட்சி காண்.

உரை:—கஞ்சமுக காமாட்சி=தாமரை போன்ற திருமுக முடைய காமாட்சி யம்மன், கஞ்சி குடியாளே=காஞ்சிபுரத்தில் குடியிருப்பவள் (அல்லது கஞ்சி குடிக்க மாட்டாள்), கம்பன் சோறு உண்ணாளே=ஏகம்பவாணனுக்கு அன்னம் நிவேதிக்காமல் தானுண்ண மாட்டாள் (அல்லது கம்பம் புல் சாதம் முண்ணமாட்டாள்), வெம் சினங்கள் என்றும் விரும்பாளே=கொடிய கோபதாபங்களை எப்போதும் விரும்பமாட்டாள் (அல்லது கறி காய் பதார்த்தங்களை விரும்பமாட்டாள்), நெஞ்சதனில் அஞ்சுதலை யாவாருக்கு=உள்ளத்தில் பயமுடையவர்களுக்கு, ஆறுதலை ஆவாளே=

ஆறுதலே யளிப்பவள் (ஐந்து திருமுகங்களையுடைய சிவபெருமானுக்குத் திருவள்ளத்தில் திருப்தி யுண்டாக்குபவள்), எ - று.

வெறி விலக்கம்.

26. சீதார விந்தபுயன் றென்னவன்றன் றிண்சிலம்பிற்
போதாலுங் கண்ணாலும் போர்செய்வோர்க்—கோது
கொடியிடையார் தம்மாற் குணமோ விந்தத்
துடியிடையார் கொண்ட துயர்.

உரை :—சீதாவிந்தை = குளிர்ச்சியான தாமரையிலிருக்கும் வெற்றித் திருமகள், புயன் = தோளிலுடையவனுகிய, தென்னவன் தன் திண் சிலம்பிற் = பாண்டியனுடைய திண்ணமான மலையகத்தில், இந்த துடி இடையார் கொண்ட துயர் = உடுக்கை போன்ற இடையினையுடைய இந்தப் பெண்ணின் வருத்தமானது, போதாலும் கண்ணாலும் போர் செய்வோர்க்கு = பூவினுற் போர் செய்யும் மன்மதனுக்கும் நெற்றிக்கண்ணினுற் போர் செய்யும் சிவபெருமானுக்கும், ஓதும் = கூறப்படுகின்ற, கொடி = கொடிகளாகிய மீனத்துக்கும் இடபத்துக்கும், இடையர் தம்மால் = நடுவிலுள்ள ஆட்டினைப் பலியிடுவதால், குணம் ஆமோ = நீங்கி விடுமோ ? (நீங்கி விடாது என்பது கருத்து), எ - று.

ஆடை ஆற்று நீரடித்துக்கொண்டு போனபோது மதுரைச் சொக்கநாதரிருக்கப் பஞ்சமில்லை யெனப் பாடியது.

27. அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து நாமதனைத்
தப்பினு னம்மையது தப்பாதோ—இப்புவியில்
இக்கலிங்கம் போனுலென் னேகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கந் தானிருக்கச் சொல்.

உரை :—அப்பிலே தோய்த்திட்டு = (துணியை ஒடுகிற) தண்ணீரில் அமுக்கி, அடுத்து அடுத்து நாம் அதனைத் தப்பினுல் = திரும்பித் திரும்பி அடித்து வெளுத்திட்டால், நம்மை அது தப்பாதோ = நம்மை விட்டு அது தப்பிப் போய் விடாதா ?, இப்புவியில் = இந்தப் பூமியில், ஏகலிங்க மாமதுரை சொக்கலிங்கம் தானிருக்க = இணையற்ற சிவலிங்கமாகிய திருவாலவாய்ச் சொக்கலிங்கப் பெருமான் நமக்குத் துணையாக இருக்கும்போது, இக்கலிங்கம் போனுல் என் சொல் = இந்தத் துணி தொலைந்துபோனுல் என்ன புகல், எ - று.

இரட்டையர்

பாடியது

வீரசம்புவென்பவர் கொடுத்த பரிசை இரட்டையர் இடதுகையால் வாங்கினதற்கு வீரசம்பு பாடியது வினை.

1. பதிவீர சம்புவென்று பாராமற் கல்விக்
கிடமுடைய ரெட்டையரே யீகை—உதவில்வலக்
கைத்தலத்திற் கொண்டு களிக்காம லும்மிடது
கைத்தலத்திற் கொள்ளுவதேன் காண்.

உரை:—கல்விக்கு இதமுடைய இரட்டையரே = கல்வியிற் சிறந்த இனிமை பயக்கும் இரட்டைப் புலவர்களே! வீரசம்பு பதியென்று பாராமல் = வீரசம்புவாகிய நான் ஒரு தலைவ னென்று மதிக்காமல், ஈகை உதவில் = ஈயும் பொருளைக் கொடுத்தால், வலக் கைத்தலத்தில் கொண்டு களிக்காமல் = வலக்கையினிடமாக வாங்கி யுவகையுறாமல், உம்மிடது கைத் தலத்தில் கொள்ளுவதேன் = உமது இடக்கரத்தில் வாங்கிக் கொண்டதற்குக் காரண மென்ன? காண்-அசை, ஏ - று.

இரட்டையர் விடை.

2. கூவரா யன்றியாகங் கொள்வோம் வலக்கைமுடி
யாவர் தரினுமிடக்கை கொள்வோம்—பூவுலகில்
மின்பணிமின் னிர்மதனே வீரசம்பு வேயினிநாம்
அன்பெவர்பால் காண்போ மடுத்து.

உரை:—பூவுலகில் மின்பணி மின்னிர் மதனே = பூமியில் மின்னலும் அடங்கும்படியாக ஒளியுடைய பெண்களுக்கு மன்மதன் போன்றவனே! வீரசம்புவே = வீர சம்புவாகிய பிரபுவே!, கூவாயன் தியாகம் கொள் வோம் வலக்கை = கூவராயன் என்னும் வள்ளலுடைய ஈகைப்பொருளை எங்கள் வலது கையில் ஏற்றுக் கொள்வோம், முடியாவர் தரினும் இடக்கை கொள்வோம் = முடிமன்னர் யாரொன்றைக் கொடுத்தாலும் அதனை இடக் கையினால் நாமேற்றுக் கொள்வோம், இனி நாம் அன்பு எவர்பால் காண்போம் அடுத்து = இனிமேல் நாம் பிற யாரிடத்தில் அவருடைய அன்பை நெருங்கி அனுபவிக்கப் போகிறோம், ஏ - று.

வீரசம்பு வினை.

3. என்னுடைய பேரும் புகழு மிருஞ்சீரும்
என்னுடைய வீகையுங் கண்டெப்படிநம்—முன்னவனே
ஆவலுடனே யதிகமாச் சொன்னீ ரெட்டையரே
கூவராயன் னியல்பென் கூறு.

உரை :—இரட்டையரே = இரட்டைப் புலவர்களே ! என்னுடைய பேரும் புகழும் இரும் சீரும் = என்னுடைய நாமத்தையும் பிரதாபத்தையும் பெரு மாண்பையும், என்னுடைய ஈகையும் கண்டு = என்னுடைய கொடை யையுந் தெரிந்தும், எப்படி நம் முன்னவனே ஆவலுடனே அதிகமாச் சொன்னீர் = எவ்விதத்தில் என் அண்ணனே என்னிலும் மிகுந்த சிறப் புடையவனுக ஆசையோடு கூறினீர். கூவராயன் இயல்பு என் கூறு = கூவராயனுடைய இயற்கை யாதென்று சொல்வீர்களாக, எ - று.

இரட்டையர் விடை.

4. மாதா பிதாவுமவன் மன்னுகுரு தெய்வமவன்
தாதாவவனே தருங்கீர்த்திக்—காதாரன்
தியாக சமுத்திரன் றென்கூவ ராயன்றன்
ஈகைதனைச் சொல்லவெளி தோ.

உரை :—மாதா பிதாவும் அவன் = எமக்குப் பெற்றோரும் அவனே' மன்னு குரு தெய்வம் அவன் = நிலவரமான ஆசாரியனும் கடவுளும் அவனே, தாதா அவனே = வள்ளலும் அவனே, வரும் கீர்த்திக்கு ஆதாரன் = வண்மையா லுண்டாகும் பொருளுக்கு ஆதரவா யிருப்பவன் அவனே, தியாக சமுத்திரன் = (அளவற்ற) கொடைக் கடலவன், கூவராயன் தன் ஈகை தனைச் சொல்ல எளிதோ = கூவராயனுடைய கொடையின் பெருமையைக் கூறுதல் இயலாது, எ - று.

திருவாங்கூர்ச் சிவபெருமானைத் தரிசித்து அன்றி ராத்திரியில் உணவுகிடைக்காமற் பசியுற்றபோது திருவாங்கூர்ப் பெருமானை இகழ்வதுபோல் புகழ்தல்.

5. தேங்குபுக ழாங்கூர்ச் சிவனேயல் லாளியப்பா
நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ—போங்காணும்
கூறுசங்கு டோன்முரசு கொட்டோசை யல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்.

உரை :—தேங்கு புகழ் ஆங்கூர் சிவனே = நிரம்பிய கீர்த்தியை யுடைய திருவாங்கூரில் வீற்றிருக்குஞ் சிவபெருமானே ! அல்லாளி அப்பா = இரவி லும் எங்களைக் காக்கின்ற அப்பனே ! நாங்கள் பசித்திருக்க ஞாயமோ = நாங்கள் உணவில்லாதிருப்பது நியாயமாகுமா ? கூறு சங்கு டோல் முரசு கொட்டோசை யல்லாமல் = ஆடம்பரமாகப் பேசப்படுகின்ற சங்கு பறை பேரிகை கொட்டு என்பவற்றின் ஒலி முழக்கமே காணப்படுவதன்றி, சோறு கண்ட மூளியார் சொல் = பிரசாதத்தைப் பார்த்த வறியவர் ஒரு வருமில்லை, (ஆதலால்) போங்காணும்—போய்வாரும், எ - று.

சிதம்பரத்தில் ஓர் அறிவிலாரைப் புகழ்ந்துபாட அவன் புலவர்க்கு பரிசளியாதபோது பாடியது.

6. மூடர்முன் னேபாடன் மொழிந்தா லறிவரோ
ஆடெடுத்த தென்புலியூ ரம்பலவா—ஆடகப்பொற்
செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனு னுல்.

உரை :—ஆடு எடுத்த தென்புலியூர் அம்பலவா = கூத்தாடுதலே கைக் கொண்ட அழகிய சிதம்பரத்திலுள்ள சபாபதியே! அந்தகனே நாயகன் ஆனல் = ஒருத்திக்குப் பருடன் குருடனுனல், அணங்கை = அப்பெண்ணை, ஆடகப்பொன் = உயர்ந்த பொன்னணிகளால், செந்திருவைப்போலச் சிங்காரித்து என்ன பயன் = இலக்குமியைப்போல அழகு செய்வதினுல் பயன் யாது? (புருடன் அழகை அறியாதவன் போல) மூடர் முனே பாடல் மொழிந்தால் அறிவரோ = அறிவில்லாதவர் முன்பாக கவி சொன்னுல் அதன் நயத்தை அவர்களறிவார்களா?, எ - று.

திருநெல்வேலிப் பெருமானைத் தரிசித்துப் பாடியது.

7. வேயின்ற முத்தர்தமை வெட்டினனே யிடையன்
தாயின்ற மேனி தயங்கவே—பேயாகேள்
எத்தனைநா ளென்றே யிடறுவான் பாற்குடத்தை
அத்தனையும் வேண்டுமவர்க் கு.

உரை :—வேய் ஈன்ற முத்தர் தமை = திருநெல்வேலியில் மூங்கிலடியில் தோன்றிய முத்துப்போன்ற பெருமானை, இடையன் = பால் கொண்டுபோன இடையன், தாய் ஈன்ற மேனி தயங்கவே = தாய் கொடுத்த தேகம் தளரும் படியாக, வெட்டினனே = வெட்டிப் போட்டானே, (அப்படிச் செய்யலாமா) பேயா கேள் = பேய் போன்றவனே கேட்பாயாக! பால் குடத்தை எத்தனை நாள் என்றே இடறுவான் = இடையன் தான் கொண்டுபோன பாற்குடத்தை எத்தனை நான்தான் தடைப்பட்டுக் கவிழ்ப்பான், அவர்க்கு அத்தனையும் வேண்டும் = அவனை இடறச் செய்த அவருக்கு அவன் செய்த அவ்வளவு செயலும் பொருந்தும், எ - று.

குறிப்பு :—திருநெல்வேலியில் ஒரு இடையன் ஒரு மன்னனுக்குப் பால் கொண்டு போகும்போது பல நாள் மூங்கில் கணு வொன்றினுல் இடறிப் பாலைக் கவிழ்த்துகொண்டிருந்தான். ஒருநாள் அந்த மூங்கிற் கணுவை வெட்டியபொழுது அதன் உள்ளிருந்து இரத்தத்தோடு சிவலிங்கத் திருமேனி தோன்றிற்று. பின்பு அரசறிந்து பூசனைக்கு வேண்டுவன செய்தான். ஆதலால் அப் பெருமான் 'வேயின்ற முத்தர்' என்னும் பெயருடையாரானர். திருநெல்வேலித் தலப்புராணத்துள் இது விரிவாகக் கூறப்பட்டுளது.

மாங்காடென்னும் ஊரிலுள்ள ஓர் வேளாளன் மருமகனூருக்குத் தன் மகளை அழைத்துச் சென்றபோது வழியில் தன் மகளை அன்பின் பெருக்காற் கூடியதைக் குறித்துப் பாடியது.

8. மாங்காட்டு வேளானன் மகளை மருமகன்பால்
போங்காட்டி லின்பம் புணர்ந்தானே—ஆங்காணும்
மக்கண் மெய்தீண்ட லுட்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

உரை:—மாங்காட்டு வேளாளன்=மாங்காடு என்னும் ஊரில் குடியிருந்த வேளாளன், மகளை=சிறுமியாகிய தன் புதல்வியை, மருமகன்பால் போம்=மருமகனிடத்திற் கொண்டு விடுவதற்குப் போகும்பொழுது, காட்டில்=வழியிலுள்ள காட்டில், இன்பம் புணர்ந்தானே=(குழந்தைபோல) எடுத்தணைத் தின்புன்ரூன், ஆங்காணும்=அது பொருத்தமே, (ஏனெனில்) மக்கள் மெய்தீண்டல் உடற்கு இன்பம்=(திருவள்ளுவர் கூறியபடி) புதல்வர்கள் தமது உடம்பைத் தொடப்பெறுதல் பெற்றோர்க் கின்பமளிப்பது, மற்றவர்தம் சொல் கேட்டல் செவிக்கு இன்பம்=மேலும் மவர்களுடைய இனிய மொழியைக் கேட்பதும் பெற்றோர்களுடைய காதுக்கு இன்பந் தருவதாகும், எ-று.

மலையடர்ந்த பாதையிலும் மரமடர்ந்த காட்டிலும் செல்லும்போது தன்புற்றுப் பாடியது.

9. குன்றுங் குழியுங் குறுகி வழிநடப்ப
தென்று விடியுமெமக் கென்கோனே—ஒன்றும்
கொடாதானைக் கோவென்றுங் காவென்றுங் கூறில்
இடாதோ நமக்கிவ் விடி.

உரை:—குன்றும் குழியும் குறுகி வழி நடப்பது=உயர்ந்த மலைகளையும் தாழ்ந்த பள்ளத்தாக்குகளையும் கடந்து வழிச் செல்வது, என் கோவே=என் தலைவனே! எமக்கு என்று விடியும்=எனக்கு எப்போது ஒழியும், (என்றொருவர் சொல்ல மற்றொருவர் கூறுவதாவது) ஒன்றும் கொடாதானைக் கோவென்றும் காவென்றும் கூறில்=யாதும் புலவர்களுக்கு ஈயாதவனைக் காமதேனு வென்றும் கற்பகச்சோலை யென்றும் புகழ்ந்தால், இவ் இடி நமக்கு இடாதோ=இங்ஙனம் படும்பாடு நமக்கு நேரிடாதோ?, எ-று.

காளமேகப் புலவரும் இரட்டையரும் பாடியது.

10. நாணென்ரு னஞ்சிருக்கு நற்சாபங் கற்சாபம்
பாணந்தான் மண்டின்ற பாணமே—தாணுவே
சீராரூர் மேவுஞ் சிவனேநீ யெப்படியோ
நேரார் புரமெரித்த நேர்.

உரை :—தாணுவே = நிலைபெற்ற கடவுளே! சீர் ஆரூர் மேவும் சிவனே = புகழ்ச்சி பெற்ற திருவாரூரில் வீற்றிருக்கும் பரமசிவனே! நல் சாபம் கல் சாபம் = உமக்கு நல்ல வில் எதுவென்றால் மேருமலை யென்னும் கல்லாகிய வில்லே, பாணந்தான் = உம்முடைய அம்பு யாதென்றால், மண் தின்ற பாணமே = மண்ணுலகத்தை விழுங்கிய நாராயணஸ்திரமே, நாண் என்றால் நஞ்சு இருக்கும் = வில்லின் கயிறு யாதென்றால் அது நஞ்சிருக்கும் (அல்லது பாம்பாயிருக்கும்), நீ சோரார் புரமெரித்த சேர் எப்படியோ = நீ எதிரிகளுடைய திரிபுரத்தை அழித்தவிதம் எவ்வாறோ? எ - று.

குறிப்பு :—இரட்டையரில் ஒருவர் திருவாரூரில் இப்பாட்டைத் தொடங்கி பாணந்தானென்ற சீர்வரை ஒரு சுவரி லெழுதிவைக்க, எஞ்சிய பகுதியைக் காளமேகப் புலவர் பூர்த்தி பண்ணினர்.

காளமேகப்புலவரைச் சூடுகாட்டில் வைத்தெரிக்கும்போது பாடியது.

11. ஆசு கவியா லகிலவுல கெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே—பூசுரா
விண்கொண்ட செந்தணலாய் வேகுதே யையையோ
மண்டின்ற பாணமென்ற வாய்.

உரை :—ஆசு கவியால் அகில உலகெங்கும் = ஆசு கவி கூறும் வன்மையினாலே உலகு முழுவதிலும் எந்த விடத்திலும், வீசு புகழ் காள மேகமே = பரவிய புகழுடைய காளமேகப் புலவரே!, பூசுரா = அந்தணரே! மண் தின்ற பாணமென்ற வாய் - மண் தின்ற பாணமென்ற தொடையை அருமையாகப் பாட்டிலமைத்துக் கூறிய உமது வாயானது, விண்கொண்ட செந்தணலில் வேகுதே = வானை நோக்கி யெரிகின்ற சிவந்த நெருப்புச் சுவாலையில் வெந்தழிகின்றதே, ஐயையோ - இரக்கக் இறி, எ - று.

பாண்டிய னிடஞ்சென்றுப் பரிசுபெறும்போது அதனைத் தடுத்த மந்திரியின்மீது பாடியது.

12. புராதன மானதமிழ்ப் புலவீ ரிந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்கு வந்ததென்னே வகை கேட்டிலீயோ
தராதலம் வென்றதமிழ் மாறனையுந் தன் றம்பியையும்
இராகவ னென்று மிலக்குவ னென்று மிருந்ததுவே.

உரை:—புராதனமான தமிழ்ப் புலவீர் = பழந் தமிழறிந்த கல்விமான்களே! இந்த புன் குரங்கு = (புலவர்க்குக் கொடுப்பதை விலக்குகின்ற துர் மந்திரியாகிய) இந்தச் சிறு குரங்கு, மராமரம் விட்டு இங்கு வந்தது என்னே = மராமரத்தி லிருக்காமல் இங்கே வந்த காரணமென்ன? (எனில்) வகை கேட்டிலையோ = காரணம் விசாரிக்கவில்லையோ? தராதலம்

வென்ற தமிழ் மாறனையும் தன் தம்பியையும் = பூமி முற்றிலும் வெற்றி நாட்டிய தமிழ் மன்னனாகிய பாண்டியனையும் அவன் இளைய சகோதரனையும், இராகவனென்றும் இலக்குவனென்றும் இருந்ததுவே = இராமர் இலட்சுமணர் என்றெண்ணி இங்கு வந்திருக்கலாயிற்று, எ-று.

சத்திமுத்தப் புலவர்

பாடியது

பாண்டியன் ஒருநாள் இரவு நகர் சோதனை செய்யும்பொருட்டு மதுரை நகரைச் சுற்றிவரும்போது ஓர் பாழடைந்த சத்திரத்திற் படுத்திருந்த புலவர் தமது கஷ்டத்தைக் குறித்துப் பாடியது.

1. நாராய் நாராய் செங்கா ராய்
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா ராய்
நீயுநின் மனைவியுந் தென்றிசைக் குமரியாடி
வட திசைக் கேகுவீ ராயின்
எம்மூர்ச் சத்தி முத்தி வாவியுட்டங்கி
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்கு மெம்மனை வியைக்கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையு ளிருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டன மெனுமே.

உரை :—நாராய் நாராய் செங்கால் நாராய் = சிவந்த காலையுடைய நாரைகளே ! பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன = கனி பொருந்திய முதிர்ந்த பனையின் கிழங்கை நடுவிற் கீறினாற்போன்ற தோற்றத்தையுடைய, பவளக் கூர்வாய் செங்கால் நாராய் = பவளத்தைப்போலச் சிவப்பாயும் கூர்மையாயுமுள்ள வாயையுடைய செம்மையான நிறத்தோடு கூடிய கால்களையுடைய நாரைகளே ! நீயும் உன் மனைவியும் = தம்பதிகளாகிய நீங்களிருவரும், தென்றிசைக் குமரியாடி = தெற்குத் திக்கிலுள்ள கன்னியா குமரியிற் குளித்துவிட்டு, வடதிசைக்கு எகுவீராயின் = வடக்குத் திக்குக்குச் செல்வீ

ராஞல், எம்மூர் சத்தி முத்த வாவியுள் தங்கி = என் பதியாகிய சத்தி முத்த மென்னும் ஊரிலுள்ள பொய்கையில் இடைவெளியில் தங்கி, நனை சுவர்க் கூரை = மழை நீரினால் ஈரமான சுவரையுடைய இறப்பிலே, கனை குரல் பல்லி = ஒரு வகையான ஓசைக் குரலுடைய பல்லியின், பாடு பார்த்திருக் கும் = சொல்லை இன்னதென்று எதிர்பார்த்திருக்கும், என் மனைவியைக் கண்டு = எனது இல்லாளைப் பார்த்து, எம்கோன் மாறன் வழுதி கூடலில் = எமது தலைவனுகிய பாண்டியனுடைய மதுரையில், ஆடையின்றி வாடையின் மெலிந்து = உடையில்லாமல் வாடைக்காற்றில் தளர்ந்துபோய், கையது கொண்டு மெய்யது பொத்தி = இரு கையினுலும் உடம்பை மூடிக்கொண்டு, காலது கொண்டு மேலது தீயீ — னாலிலேலே தையின் மேற் பாகத்தைப் பொருத்திக்கொண்டு, பேழையுள்ளிருக்கும் பாம்பென உயிர்க்கும் = பெட்டிக் குள் அடைத்த பாம்புபோல மூச்சு விடும், எழையாளனை = வறியவனை! கண்ட னம் எனுமே = பார்த்தோமென்று தெரிவியுங்கள், எ - று.

பாண்டியன் நகர்சோதனை வரும்போது புலவர் தன் வறுமையைக் குறித்துப் பாடியதைக்கேட்ட மன்னன் மனமகிழ்ந்து அவர்க்கு வேண்டிய பரிசளித்ததைக்கண்டு களித்துப் பாடியது.

2. வெறும்புற்கையுமரிதாங்கிள்ளை சோருமென்வீட்டில்வரும்
எறும்புக்குமாஸ்பதமில்லை முன்னுளென்னிருங்கலியாம்
குறும்பைத்தவிர்த்தகுடி தாங்கியைச்சென்றுகூடியபின்
தெறும்புற்கொள்ளாளனைகவளங் கொள்ளாமற்றெவுட்டியதே.

உரை :—முன்னுள் என் வீட்டில் = (அரசன் ஆதரவு செய்வதற்கு) முற்பட்ட காலத்தில் என்னுடைய இல்லத்தில், வெறும் புற்கையும் அரி தாம் = வெறுஞ் சாதங்கூடப் பெறுவது கடினம், கிள்ளை சோரும் = வளர்க் கின்ற கிளிப்பிள்ளை பசித்துத் தளர்வும், வரும் எறும்புக்கும் ஆஸ்பதம் இல்லை = வருகிற எறும்புகளுக்கும் ஆதாவில்லை, என் இருங் கலியாம் = எனது மிகுந்த தரித்திரமாகிய, குறும்பைத் தவிர்த்த = தொந்தரவை நீக்கிய, குடிதாங்கியைச் சென்று கூடியபின் = குடிகளை யோம்பும் மன்னனைப் போய் அடைந்ததன் பிற்பாடு, தெறும் புற்கொள் ளாளனை = அரிந்து கட்டிய புல்லை யுணவாகக் கொள்கின்ற யானையானது, கவளங் கொள்ளாமல் தெவிட்டி யதே = (மிகுந்த தினி தின்று பசி நீங்கினமையால்) திரண்ட வுணவை யேற்றுக் கொள்ளாமல் கக்கிவிட்டது, எ - று.

வரதுங்கராம பாண்டியன்

பாடியது

இவர் மரண காலத்தில் மனைவி பயப்படுகிறீரோவென்று கேட்டபோது வரதுங்கபாண்டின் பாடியது.

1. அஞ்சலென்ற கரதலமுங் கணபண கங்கணமும்
அரைக்கிசைந்த புலியுடையு மம்புலிச் செஞ்சடையும்
கஞ்சமலர்ச் சேவடியுங் கனைகழலுஞ் சிலம்பும்
கருணைபொழி திருமுகமுங் கண்களொரு மூன்றும்
நஞ்சையுண்ட மணிமிடறு முந்நூலு மார்பும்
நலந்திகழ்வெண் ணீற்றொளியு மறிமானு மழுவும்
பஞ்சடிசிற் றிடையுமையா ளொப்பனை பாகமுமாய்ப்
பால்வண்ண நுளத்திருக்கப் பயமுண்டோ வெனக்கே.

உரை :—அஞ்சல் என்ற கரதலமும = பயப்படாதே என்று காட்டும் அபயக் கையும், கண பண கங்கணமும் = தொகுதியான படங்களையுடைய பாம்புக் காப்பும், அரைக்கிசைந்த புலி உடையும் = இழுத்துக் கட்டிய புலித் தோலாடையும், அம்புலி செஞ்சடையும் = சந்திரனைத் தரித்த செந்நிறமான சடைமுடியும், கஞ்சமலர் சேவடியும் = தாமரைப் பூபோன்ற திருப்பாதமும், கனை கழலும் சிலம்பும் = முழங்குகின்ற வீரக் காலணியும் சதங்கையும், கருணைபொழி திருமுகமும் = திருவருள் பாலிக்கின்ற அழகிய முகமும், கண்கள் மூன்றும் = மூன்று கண்களும், நஞ்சையுண்ட மணிமிடறும் = விடம் வைக்கப்பெற்ற நீல நிறமான கழுத்தும், முந்நூலும் = மும்புரிகளாகத் திரிக்கப்பட்ட பூணூலும், மார்பும் = (வலிமையுடைய) திரு மார்பும், நலந் திகழ் வெண்ணீற் றொளியும் = நன்மை தரக்கூடிய வெள்ளிய விபூதியின் பிரகாசமும், மறி மானும் = மான் கன்றும், மழுவும் = மழுப்படையும், பஞ் சடிச் சிற்றிடை உமையாள் = செம்பஞ் சூட்டிய திருவடியும் நுண்ணிய இடையுமுடைய பார்வதியாகிய, ஒப்பனை பாகமுமாய் = ஒப்பனையம்மையைப் பாகத்திலுடையவரான, பால் வண்ணர் உளத்திருக்க = பால்வண்ணநாதப் பெருமான் எனது நெஞ்சகத்தில் வீற்றிருக்கும்போது, எனக்குப் பயம் உண்டோ = எனக்கு அச்சம் தோன்றுமா (தோன்றாது), எ - று.

அதற்கு அவர் மனைவி இன்னம் பற்று விடவில்லையா வென்று பாடியது.

2. யாக்கையெனும் புழுக்குரம்பை யணைந்தணையாப் பொருளா
அருளொளியைப் பராபரத்துக் கப்புறமா மறிவை
நீக்கமற மயிர்முனைக்கு மிடமறவெங் கெங்கும்
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவிலெழுஞ் சுடரைப்

பாக்கியங்கள் செய்தனந்தந் தவக்குறைகண் முடிக்கும்
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்க் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தா லளவுபடா வொன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியி லடைப்பாம்.

குறிப்பு :—யாக்கை யெனும் புழுக் குரம்பை = உடலாகிய புழு நிரம்பிய சிறு குடிலை, அணைந்து அணையாப் பொருளை = ஆதரவாகச் சார்ந்தும் அதில் சிக்கி மீடுபடாத மெய்ப்பொருளை, அருள் ஒளியை = கருணை விளக்கை, பராபரத்துக்கு அப்புறமாம் அறிவை = மேலுங் கீழுமான எல்லாப் பொருளையுங் கடந்துள்ள பேரறிவை, நீக்கமற மயிர் முனைக்கும் இடமற எங்கெங்கும் நிறைந்து நின்ற முழுமுதலை = ஒழிவில்லாதபடியும் மயிர்முனை கூட நாட்டுவதற்கு இடமில்லாதபடியும் எவ்வெவ்விடங்களிலும் பூரண வியாபகமுடைய முழுமுதற் கடவுளை, நினைவில் எழும் சுடரை = தியானத்தில் தோன்றும் ஒளிவடிவானவரை, பாக்கியங்கள் செய்து = புண்ணியங்களியற்றி, அனந்தம் தவக் குறைகள் முடிக்கும் = எல்லையில்லாத கல்வினைப் பாக்கிகளைப் பூர்த்தி செய்யும், பழவடியார் தமக்குதவும் = பழைய தொண்டர்களுக்கு வேண்டிய பொருளை அளிக்கின்ற, பசுந்துணர் கற்பகத்தை = பசிய மலர்த்தொகுதிகளையுடைய கற்பக மரம்போன்ற தெய்வத்தை, வாக்கு மன விகற்பத்தால் அளவுபடா ஒன்றை = சொல்லாமலும் உள்ளத்தின் நினைவு வகைகளாலும் அளவிட்டறிய முடியாத ஒரு பெரும் பொருளை, மாசற்ற வெறு வெளியை = குற்றமற்ற தனிஞான மயமான வியாபகப் பொருளை, மன வெளியில் அடைப்பாம் = மனமாகிய தனியிடத்திலே அகப்படுத்துவாம், எ - று.

இவர் தம்பியாகிய அதிவீரராமபாண்டியன் பத்மினிச்சாதியாகிய சுக்கிலியப்பெண்ணை மணஞ்செய்ய இவர் தடை செய்தனர் அதற்கு அதிவீரராம பாண்டியன் இவரைக் கொல்ல வந்தபோது பாடியது.

3. செஞ்சுடரின் மைந்தனையுந் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்.

உரை :—செஞ்சுடரின் மைந்தனையும் = சூரியன் மகனாகிய சுக்கிரீவனையும், தென்னிலங்கை வேந்தனையும் = அழகிய இலங்கை மன்னனாகிய விபீஷணனையும், பஞ்சவரில் பார்த்தனையும் = பாண்டவரைவரில் அருச்சுனனையும், பாராதே = பார்த்து நடக்காமல், விஞ்சு விரதமே பூண்டு = (இராமன் வாவிடில் அரசாள்வதில்லை யென்று) மேலான சபதஞ்செய்து நோன்பிருந்து, இந்த மேதினியை ஆண்ட = இந்த வுலகத்தை யாட்சி செய்த பரதனையும் இராமனையும் பார் = பரதன் இராமனென்னு மிருவரையும் பார்த்து நடப்பாயாக, எ - று.

பட்டினத்துச் சுவாமிகள்

பாடியது

உலகப்பற்றி லகப்பட்டுழலுவோர் நிலைமையைக்குறித்துப் பாடியது.

1. நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வெழுகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவட்டுத்தொன் மரத்திடுக்கிற் கானுழைத்துக்கொண்டே
ஆப்பதனைப் பிடித்தசைத்த பேய்க்குரங்கு போல
அகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீர் நீரே.

உரை :—நாப்பிளக்கப் பொய்யுரைத்து = (பொய்யின் மிகுதியினாலே) நாவானது பிளவுபடும்படியாகப் பொய்யினைச் சொல்லி, நவநிதியம் தேடி = புதி புதிதாகப் பணம் சம்பாதித்து, நலம் ஒன்றும் அறியாத நாரியரைக் கூடி = நன்மையை யொரு சிறிதும் அறியாத பெண்களைச் சேர்ந்து, பூப் பிளக்க எழுகின்ற புற்றீசல் போல = பூமியைப் பிளப்பதுபோலே மிகுதியாகத் தோன்றுகின்ற புற்றிலிருந்து புறப்படும் ஈசல் பூச்சிபோல, புலபுலென கலகலென = பலவகையாக கூக்குரலிடும்படியாகக், புதல்வர்களைப் பெறுவீர் = பிள்ளைகளைத் தோற்றுவிப்பீர், காப்பதற்கும் வகையறியீர் = தக்க முறையி லவர்களைப் பேணுவதற்கும் வழிதெரிய மாட்டீர்கள், கைவிடவும் மாட்டீர் = அவர்களை விட்டு நீங்கவும் செய்யமாட்டீர், கவட்டுத் தொன்மரத்து இடுக் கில் = இருபிளவுகளாகப் பகுக்கப்பட்ட பழைய மரத்தின் சந்தில், கால் நுழைத்துக் கொண்ட = காலினை வைத்துக்கொண்டு, ஆப்பு அதனைப் பிடித்தசைத்த பேய்க்குரங்குபோல = அப்பிளவுகளை வேறுபடுத்திய குச்சியை அசைத்து எடுத்துவிட்ட பேய்த்தன்மையுடைய குரங்கைப்போலே, அகப் பட்டீர் கிடந்தழல அகப்பட்டீர் நீரே = (சமுசாரத் தொல்லையில்) நீங்கள் அலைந்து கிடந்து வருந்தும்படியாகச் சிக்கிக் கொண்டீர்கள், எ - று.

சிவப்பிரகாச சுவாமிகள்

பாடியது

கலியாணத்தில் சேஷையிடும்போது பாடியது.

1. ஐயநின் சென்னிமிசை யுறைகின்ற மடமங்கை
யாரென்ன வுமை வினவவும்
அன்னதொரு மடமங்கை யன்றுவெண் டிரைகொழித்
தழகொழுகு தண் புனலெனத்

துய்யவொளி யானனங் கரியவிழி காதுவாய்
தோயத்தி லுண்டோ வெனச்
சொல்லருங் கமலமலர் காவிமலர் கொடிவள்ளை
தூயசெங் குமுத மென்னப்
பொய்யென நினைத்நுநற் கொங்கையுங் கூந்தலும்
புனலினிடை யுண்டோ வெனப்
புற்புதஞ் சைவலம தெனவே மறுத்துப்
புகன்றிடுதி நங்கா யெனத்
தையலவ ளேனென்ன நாணெடு வணங்கியென்
றன்பிழை பொறுத்தி டென்றே
சங்கர னுரைத்திடத் திருவுள மகிழ்ந்தசிவ
சங்கரி யுமைக் காக்கவே.

உரை :—ஐயனின் சென்னிமிசை உறைகின்ற மடமங்கை யார் என்ன = (சிவபெருமானைப் பார்த்து) ஐயா! உமது தலையின்மேல் வாழ்கின்ற இள மாதானவள் யாரென்று, உமை வினவவும் = பார்வதி கேட்கவும், அன்னது ஒரு மடமங்கை அன்று = அது ஒரு இளம் பெண்ணல்ல, வெண் திரை கொழித்து அழகு ஒழுகு தண் புனல் என = வெள்ளிய அலைகளை எறித்து அழகு செய்கின்ற தண்ணீர் நிலையென்று சிவபிரான் சொல்லவும், துய்ய ஒளி ஆனனம் = புனிதமான பிரகாசமுடைய முகமும், கரிய விழி = கருமையான கண்ணும், காது வாய் = காதும் வாயும், தோயத்தில் உண்டோ என = தண்ணீரி லுள்ளனவோ என்று கேட்க, சொல் அரும் கமல மலர் காவி மலர் கொடிவள்ளை தூய செங்குமுதம் என்ன = வர்ணித்தற் கருமையான (முகம்போன்ற) தாமரையும் (கண்போன்ற) குவளைப் பூவும் (காது போன்ற) வள்ளைக்கொடியும் (வாய் போன்ற) சுத்தமான செவ்வாம்பல் பூவும் உள்ளன என்று சொல்ல, பொய் என நினைத்து = அங்ஙனம் சொன்ன பதில் உண்மையல்லவென்று பார்வதி யெண்ணி, நல் கொங்கையும் கூந்தலும் புனலினிடை உண்டோ என = சிறந்த தனங்களும் கூந்தலும் தண்ணீரி லிருக்குமோ வென்று வினவ, புற்புதம் சைவலம் அது எனவே மறுத்துப் புகன்றிடுதி நங்காய் என = அவை நீர்க்கொப்பளமும் நீர்ப்பா சடையுமென்று சொன்னலும் நீ அதனையும் மறுத்துப் பேசுவாய் பெண்ணே என்று இறைவன் கூற, (பெண்ணே என்று தன்னை யழைத்ததாகக் கருதி) தையல் அவள் எனென்ன = கங்கையானவள் எனென்று சொல்ல, நாணெடு வணங்கி = (உண்மை தெரிந்த தென்று சிவபிரான்) வெட்கத்தோடு தலை குனிந்து, என்றன் பிழை பொறுத்திடு என்றே சங்கரன் உரைத்திட = என் குற் றத்தை மன்னிக்க வேண்டுமென்று சிவபிரான் கேட்டுக்கொள்ள, திருவுளம் மகிழ்ந்த = அதனால் மனங்களிப்படைந்த, சிவசங்கரி உமைக் காக்கவே = பார்வதியாகிய அம்பிகை உங்களைக் காப்பாற்றுவளாக! எ - று.

2. அரனவ னிடத்திலே யைங்கரன் வந்துதா
னையவென் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளி னென்றே சிணுங்கிடவு
மத்தன்வே லவனே நோக்கி
விரைவுடன் வினவவே யண்ணனென் சென்னியில்
விளங்குகண் ணெண்ணின னென
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ யப்படி
விகடமேன் செய்தா யென
மருவுமென் கைந்நீள முழமளந் தானென்ன
மயிலவ னகைத்து நிற்க
மலையரைய னுதவவரு முமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாரா யெனக்
கருதரிய கடலாடை யுலகுபல வண்டங்
கருப்பமில் பெற்ற கன்னி
கணபதியை யருகழைத் தகமகிழ்வு கொண்டனள்
களிப்புட னுமைக் காக்கவே.

உரை :—அரனவனிடத்திலே ஐங்கரன் வந்துதான் = சிவபெருமானிடத்தில் ஐந்து கரங்களை யுடைய விநாயகர் வந்து, ஐய என் செவியை அறுமுகன் கிள்ளினன் என்று சிணுங்கிடவும் = அப்பா என்னுடைய காதுகளை ஆறு முகமுடைய தம்பியானவன் அதிகமாகக் கிள்ளினனென்று கூறி வருத்தப்படவும், அத்தன் வேலவனை நோக்கி = சிவபெருமான் வேலாயுதத்தை யுடைய முருகரைப் பார்த்து, விரைவுடன் வினவவே = ஏனப்படிச் செய்தா யென்று அவசரமாய்க் கேட்க, அண்ணன் என் சென்னியில் விளங்கு கண் எண்ணினன் எனவே = அதற்குப் பதிலாக முருகர் தமையனார் தனது தலையிலுள்ள கண்களை எண்ணிப் பார்த்தாரென்று உரைக்க, வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து = துயரப்படுகின்ற பிள்ளையாரைச் (சிவபெருமான்) பார்த்து, நீ அப்படி விகடம் என் செய்தாய் என = நீ அவ்வாறு வேடிக்கை என் செய்தாயென்று கேட்க, மருவும் என் கை முழமளந்தான் என = என்பாலுள்ள துதிக்கையின் நீளத்தை எத்தனை முழமிருக்கிறதென்று தம்பி அளந்து பார்த்தானென்று சொல்ல, மயிலவன் நகைத்து நிற்க = குமரப் பெருமான் அதைக் கேட்டுச் சிரித்து நிற்கவும், மலையரையன் உதவ வரும் உமையவளை நோக்கி = இமைபமலை யரசன் பெற்றுக் கொடுத்த பார்வதியைப் பார்த்து, உன் மைந்தரைப் பாராய் என = உன் மக்களைக் கவனிப்பாயாக என்று கூற, கருதரிய கடலாடை உலகு = மனத்தா லளவிட முடியாத சமுத்திரத்தை உடையாக உடுத்த பூமியையும், பல அண்டம் = வேறு பல உலகங்களையும், கருப்பம் இல் பெற்ற கன்னி = கருத் தரியாது தோற்று

வித்த என்றும் இளமையோ டிருக்கின்ற உமையம்மை, கணபதியை அருகு அழைத்து = பிள்ளையாரைப் பக்கத்தில் கூப்பிட்டு (ஆறுதல் சொல்லி) அக மகிழ்வு கொண்டனன் = மனக்களிப் படைந்தவளாகிய அம்பிகை, களிப் புடன் = மகிழ்ச்சியுடன், உமைக் காக்க = உம்மைக் காத்தருளுவாராக! எ - று.

3. அம்பிகை யரன்றன்னை நோக்கியுன் னிபரண
மரவமென வுமையை நோக்கி
அரியரவ சயனத்தை யரவுருவ மானதை
யறியாய்கொல் சிறிது மென்ன
நம்பிமனை தொறுமிரந் துணுமாண்டி நீயென்ன
நான்முக னறிவே னென
நவையுறும் பொய்புகன் றீரெனப் பாரத
நடந்ததே கரியா மென
வெம்பியொரு வன்பிரம் பாலடித் தானென்
விளங்கிழமை யொருத்தி தாம்பால்
வீசினது சொல்லென்ன வெண்ணூயிரம் பெண்கள்
மிருகற்பை நீக்கினே யெனப்
பம்புகற் பினிலோ ரிரட்டிப்பு நீங்கினது
பதரும னீகே ளெனப்
பரமருட னிவ்வாறு விளையாடு பச்சைப்
பசுங்கொடி யுமைக் காக்கவே.

உரை :—அம்பிகை அரன் தன்னை நோக்கி = பார்வதி சிவபெருமானைப் பார்த்து, உன் ஆபரணம் அரவம் என = உன்னுடைய அணி பாம்பே என்று சொல்ல, நம்பி = சிவபெருமான், உமையை நோக்கி = பார்வதியைப் பார்த்து, அரி அரவ சயனத்தை = விஷ்ணு பாம்பைப் படுக்கையாகக் கொண்டதும், அரவு உருவமானதை = பாம்பு வடிவமெடுத்ததையும், அறியாய் கொல் சிறிது மென்ன = நீ கொஞ்சங்கூடத் தெரியமாட்டாயோ என்று சொல்ல, மனை தொறும் இரந்துண்ணும் ஆண்டி நீ என்ன = வீடுதோறும் பிச்சையெடுத்து உண்கின்ற பரதேசியாவீர் என்று உமையவள் சொல்ல, நான் தாதன் அறிவேன் என = கொடுக்கின்றவனை நான் தெரிவேனென்று சொல்ல (அதற்கு உமையவள்), நவையுறும் பொய் புகன்றீர் என = பிழை பொருந்திய பொய்ச் சொல்லை நீருரைத்தீர் என்று சொல்ல, (அதற்குச் சிவபெருமான்) பாரதம் நடந்ததே கரியாமென = விஷ்ணு பொய் சொன்னதற்குப் பாரத நிகழ்ச்சியே சான்றாகு மென்ன, (அதற்கு உமையவள்) வெம்பி ஒருவன் பிரம்பால் அடித்தான் என = ஒரு பாண்டியன் சினந்து உம்மைப் பிரம்பால் அடித்தானென்று சொல்ல, (அப்போது சிவபெருமான்) விளங்கிழை

ஒருத்தி தாம்பால் வீசினது சொல் என்ன = பிரகாசமுள்ள அணி யணிந்த ஒரு இடைச்சி கயிற்றிழல் கண்ணனை அடித்த செய்தி கூறுக என்றியம்ப, (அதற்கு அவன்) எண்ணுயிரம் பெண்கள் மிகு கற்பை நீக்கினை என = தாருகாவனத்து ரிஷிகள் பத்தினிகளாகிய எண்ணுயிர மாதர்களின் மேம் பட்ட கற்பை யழித்தாயென்ன என்று சொல்ல, (அதற்குச் சிவபெருமான்) பம்பு கற்பினில் ஒரிரட்டிப்பு நீக்கினது பதறுமல் நீ கேள் என = நிறைந்த கற்புடைய எண்ணுயிரத்தில் இரட்டிப்பான (பதினுயிரம்) மாதர்களின் நிறைந்த கற்பைத் தொலைத்தது யாரென நீ சாவதானமாய்க் கேட்பா யென்று கூற, பரமருடன் இவ்வாறு வினையாடும் பச்சைப் பசும் கொடி = பரமசிவனோடு இப்படி வேடிக்கை பேசுகின்ற பச்சை நிறமுடைய புதுக் கொடிப்போல்வாள், உமை காக்கவே = உங்களைக் காத்தருள்வாளாக, எ - று.

4. அச்சுத னளிப்பனில முமதுநே யன்வித்தை
யருளுவன் பல பத்திரன்
அலமுதவு வன்சமன் பகடிவ னந்தமக்
கானதோ ரெருது முண்டே
முச்சிர வயிற்படை யினைக்கொளுவ தாக்குவோ
மொய்ம்புட னிழுத் திறுக்க
முந்திய வடக்கயிற் றுடன்மற்று நமதன்பர்
முன்போ யிரந்து கொள்வோம்
இச்சையுடை நமதிளய தனையனு கியகந்த
னினிமையொடு மாடு மேய்ப்பன்
இனியுழுது பயிரிடுத னன்றுநன் றிதைவிட்
டிரந்துண்ப தீன மெனவே
கச்சுமுலை மாதுமை யுரைத்திடும் புத்தியைக்
கைக்கொண் டுளத்தி லிதுநற்
காரிய மெனக்கருதி மெத்தக் களித்திடுங்
கண்ணுத லுமைக் காக்கவே.

உரை :—அச்சுதன் நிலம் அளிப்பன் = விஷ்ணு நமக்கு வேண்டிய நிலத்தைத் தருவான், உமது சேயன் வித்தை அருளுவன் = உமது நண்ப னுகிய குபேரன் பயிரிடுதற்கு விதை கொடுப்பான், பலபத்திரன் அலம் உதவுவன் = பலராமன் கலப்பை தருவான், சமன் பகடு ஈவன் = எமன் எரு மையைத் தருவான், நந்தமக்கு ஆனதோர் எருதும் உண்டே = நமக்குச் சொந்தமான ஒரு காளை யிருக்கிறது, முச்சிர அயில் படையினை கொழுவ தாக்குவோம் = மூத்தலையுடைய சூலாயுதத்தைக் கொழுவாக அடித்துக் கொள்வோம், மொய்ம்புடன் இழுத்து இறுக்க = வலிமையாய்க் கொழு கலப்பை முதலியவற்றை நன்றாக இழுத்துக் கட்டுவதற்கு, முந்திய வடக்கயிற்

முடன் மற்றும் = முதலில் வேண்டிய வடக்கயிறும் பிற சாமான்களும், நமது அன்பர் முன்போய் இரந்து கொள்வோம் = நமது தொண்டரிடத்திற் சென்று வாங்கிக் கொள்வோம், இச்சையுடை நமது இளைய தனையனுகிய கந்தன் = நம்மிடத்தில் விருப்பமுள்ள நமது இளைய பிள்ளையாகிய முருகன், இனிமையொடு மேய்ப்பன் = நன்முக மாட்டினைச் செலுத்துவன்; இனி உழுது பயிரிடுதல் நன்று நன்று = இனிமேல் உழவு வேலை செய்து பயிர் வளர்த்தலே மிக நல்லது, இதை விட்டு இரந்துண்பது ஈனம் எனவே = இவ்வாறு செய்வதைவிட்டுப் பிச்சை யெடுத்துண்பது குறைவாகுமென்று, கச்சுமுலை மாதுமை உரைத்திடும் புத்தியை கைக்கொண்டு = வாரணிந்த தனங்களையுடைய பார்வதி கூறிய அறிவுரையை ஒப்புக்கொண்டு, உளத்தில் இது நற்காரியம் என்று கருதி = உள்ளத்தில் இது நல்ல செயலாகுமென் றெண்ணி, மெத்தக் களிததிடும் கண்ணுதல் = மிகுந்த களிப்படையும் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான், உமைக் காக்கவே = உங்களைக் காத்தருள்வாராக, எ – று.

5. கவுரிகம லாயர னிரந்தசோ றிதுவெனக்
கமலைமண் கண்டே னெனக்
காளையொன் றேயரற் கெனமாடு மேய்த்ததைக்
கட்டிடைய ளரோ வெனச்
சிவனெருவர் தூதென்ன வத்தூது சென்றகதை
செப்பிலொரு பாரத மெனச்
சேரோடு திருடினு னரனெனக் கட்டுண்ட
செய்திநா மறிவோ மென
அவையினட மாடினு னரனென்ன
வவ்வாடலர வமறியா தோவென
ஆலமதை யுண்டனன் அரனென்ன மண்ணுண்ட
வதனையறி யோமோ வென
விவரமொடு மலைமகளு மலர்மகளு மிவ்வாறு
விளையாடு மிவர்க டுணையா
மேவிவரு புத்ர மித்ர களத்திரருடன்
மேன்மே லுமிக வாழியே.

உரை:—கவுரி கமலா அரன் இரந்த சோறு இது என = பார்வதி யானவள் (இலக்குமியைப் பார்த்து) தாமரைத் தேவியே! சிவனுர் பிச்சை யெடுத்துக்கொண்டு வந்த சாதம் இவ்வளவுதானென்று சொல்ல, கமலை மண் கண்டேன் என = திருமகள் மண்ணைத்தான் நான் உணவாகப் பார்த்தேன் என்று கூற, காளை ஒன்றே அரற்கு என = (உமை) சிவபெருமானுக்கு ஒரு எருதுதானிருக்கிறதென்று சொல்ல, மாடு மேய்த்ததைக் கட்டு

இடையன் ஆரோ என = (இலக்குமி) மாட்டை மேய்த்து அதைக் கட்டு கின்ற கோனர் யாரென்று வினவ, சிவன் ஒருவர் தூது என்ன = (உமை) சிவனர் ஒருவருக்குத் தூது போனரென்று சொல்ல, அத்தூது சென்ற கதை செப்பில் ஒரு பாரதம் என = (இலக்குமி) கண்ணன் தூதுபோன வரலாற்றைப் பேசினால் அது பாரதம் போன்ற பெரிய கதையாகுமென, சேரோடு திருடினன் அரன் என = (உமை) சிவன் திருநீலகண்டரிடம் சேர்ப்பித்த ஓட்டைக் களவு செய்தானென்று சொல்ல, கட்டுண்ட செய்தி நாம் அறிவோம் என = (இலக்குமி) திருட்டுக்காக கண்ணன் உரலில் கட்டப் பட்ட சங்கதி நமக்குத் தெரியும் என்று சொல்ல, அவையில் நடம் ஆடினன் அரன் என = (உமை) சிவபெருமான் சபையில் கூத்தாடினனென்று கூற, அவ்வாடல் அரவம் அறியாதோ என = (இலக்குமி) அவ்விதமாகக் கண்ணன் கூத்தாடியது காளிங்கனுகிய பாம்புக்குத் தெரியுமென்று சொல்ல, ஆல மதை உண்டனன் அரன் என்ன = (உமை) சிவனர் விடத்தை யுண்டா ரென்று கூற, மண் உண்ட அதனை அறியாயோ என = (இலக்குமி) அரி மண்ணுண்ட செய்யை நீ அறியாயோ என்று கூற, விவரமொடு மலைமக ளும் மலர் மகளும் இவ்வாறு விளையாடும் இவர்கள் தூணையா = இந்த மாதிரி விவரமான செய்திகளைப் பேசி, பார்வதியும் இலக்குமியும் (விளையாடுதல்) அவர்களின் அருளுதவியினலே, மேலிவரு புத்ர மித்திர களத்திரருடன் மேன்மேலும் மிக வாழியே = அடையக்கூடிய புதல்வர்கள் நண்பர்கள் மனைவியர் முதலியவர்களோடு மிகவும் மேலான நிலையில் நன்கு வாழ்வீர்க ளாக, எ - று.

தாயார் சொற்படி உப்புக்காரியை அழைத்தது.

6. நிறைய வுளதோ வெளிதோ கொளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மான்—உறையும்
திருக்காட் டுப்பள்ளி திரிபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு.

உரை :—பிறையை முடிக்கணிந்த பெம்மான் உறையும் = இளஞ் சந்தி ரனைத் தமது சடைமுடியில் தரித்த பரமசிவன் வீற்றிருக்கும், திருக்காட்டுப் பள்ளி திரி பாவாய் = திருக்காட்டுப் பள்ளியில் அலைகின்ற மாதே! நீ இவகு இரு = நீ இந்த இடத்தில் தங்குவாயாக! எமகு உப்பு அள்ளிக் காட்டு = உப்பைக் கையிலெடுத்து எங்களுக்குக் காண்பிப்பாயாக! நிறைய உளதோ = அளவு குறையாம லிருக்கிறதா, வெளிதோ = வெண்ணிறமா யிருக்கிறதோ, கொளுவோம் = அப்படியானல் நாங்கள் வாங்கிக்கொள்வோம், எ - று.

தோட்டக்காரன் மாங்காய்க்காக இவர் மடியைப்பிடித் திழுத்தபோது பாடியது.

7. அடுத்துவருந் தொண்டனுக்கா வந்தகனைத் தாளால்
அடர்ந்ததுவுஞ் சந்தியமே யானல்—எடுத்ததொரு

மாங்கனிக்கா வென்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா தித்தன்வரத் தான்.

உரை :—அடுத்துவரும் தொண்டனுக்காக = உம்மை நெருங்கி வழிபட்ட அடியாராகிய மார்க்கண்டருக்காக அத்தனைத் தாளால் அடர்த்ததுவும் சத்தியமே யாஞல் = சிவபெருமானே ! எமனை உமதுடைய காலிஞல் தாக்கியது உண்மையே ஆஞல், எடுத்தொரு மாங்கனிக்கா = கீழே கிடந்து எடுத்த ஒரு மாம்பழத்திற்காக, என்னை மடி பிடித்த மா பாவி = என்னைத் துணியைப் பற்றியிழுத்த பெரிய பாவியானவன், கனிக்கு ஆசித்தன் வரதான் சாம் = கன்னிராசிக்குச் சூரியன் வருகின்றபோது (புரட்டாசிமாதத்தில்) மரணமடைவானுக, எ-று.

மதுரைச் சம்பந்தசாமியடத்தார் எந்தவூ ரென்றபோது பாடியது.

8. குடக்கோடு வானெயிறு கொண்டார்க்குக் கேழன்
முடக்கோடு முன்ன மணிவார்க்கு—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ளல்
ஊருடையா னென்னு முலகு.

உரை :—குடக்கு ஓடுவான் எயிறு கொண்டார்க்கு = மேற்குத் திக்கு நோக்கிச் செல்லுகின்ற பகலவனது பற்களைத் தகர்ந்தாகத்தில் பிடிங்கியவராகியவரும், எழில் முடக்கோடு முன்னம் அணிவார்க்கு = (திருமால் வராகவதார மெடுத்தபோது) அப் பன்றியின் வளைந்த தந்தியை முற்காலத்திலெடுத்துத் தரித்துக்கொண்டவரும், வடக்கு ஓடு தேருடையான் = வடதிசையை நோக்கிச் செல்லுகின்ற தென்றல் காற்றுகிய தேரையுடைய மன்மதனுக்குப் பகைவருமாகிய சிவபெருமானுக்கு, தில்லை ஊர் = தில்லைப்பதியானது அவருடைய தலமாகும், தோல் உடை = புலித்தோலாடையாகும் மேற்கொள்ளல் ஆன் = மேற்கொண்டு செல்லும் வாகனம் காளை, என்னும் உலகு = என்று உயர்ந்தோர் கூறுவர், எ-று.

பட்டீசுரத்துப் பெருமானைத் துதித்து நோய் கொண்டாலும் பெண்கொள்ளப் போகாதெனப் பாடியது.

9. சேய்கொண்டாருங் கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டானும் பணியும் பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டாலுங் கொளலா நூறுவய தாமளவும்
பேய்கொண்டாலுங் கொளலாம் பெண்கொள்ள லாகாதே.

உரை :—சேய்கொண்டாரும் கமலச் செம்மலுடனே = சிவப்பு நிறம் பொருந்திய தாமரைப் பூவில் தங்கும் பிரமதேவரோடு, அரவப் பாய் கொண்டானும் = பாம்பினைப் பள்ளியாகக்கொண்ட பெருமாலும், பணியும் = வழிபடுகின்ற, பட்டீச்சுரத்தானே = பட்டீச்சுரத்தில் வாழ்கின்ற கடவுளே ! நூறு வயதாம் அளவும் = நூறு வயது முற்றும் வரை, நோய் கொண்டாலும்

கொள்ளலாம் = வியாதியினால் வருந்தினாலும் வருந்தலாம், பேய் கொண்டாலும் கொள்ளலாம் பேயினாற் பிடிபட்டு வருந்தினாலும் வருந்தலாம், பெண் கொள்ளல் ஆகாதே = பெண்ணை மணத்தல் கூடாதாகும், எ - று.

சிவபெருமானைத் துதித்துத் துறவடைந்த மகான்களுக்குப் பெரிய சுகமென்றும் காமமயக்கத்தில் மயங்கி மணவினை தொடங்கிய நாள்முதல் துன்பம் என்றும் பாடியது.

10. நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்க ணிமலன்ருளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும்
பெரியசுகங் கிடைக்குங்காம
வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித்தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டுங் கவலைதானே.

உரை :—நிட்டையிலே இருந்து மனத்துறவு அடைந்த பெரியோர்கள் = யோக சமாதியிலே இருந்து உள்ளப் பற்று அறப்பெற்ற பெரியவர்கள், நிமலன் தாளைக் கிட்டையிலே தொடுத்து = குற்றமற்ற கடவுளின் திருவடியை நெருங்கிய காலந் தொடங்கி, முத்திபெறும் அளவும் = வீடு பெறும் வரையில், பெரிய சுகம் கிடைக்கும் = அவர்களுக்குப் பேரின்பம் கைவரும், காம வெட்டையிலே மதிமயங்கு = காம வெப்பத்தினாலே அறிவு மயங்கப்பெற்ற இளைஞருக்கு, மணம் பேசி விரும்பித் தாலி கட்டையிலே தொடுத்து = கலியாணஞ் செய்வதாகச் சொல்லி அவர்கள் ஆசையோடு மணமகளுக்கு மங்கலநாண் அணியுங் காலந் தொடங்கி, நடு கட்டையிலே கிடத்துமட்டும் கவலைதானே = இறந்து சிதையிலே வைக்கும் வரை கவலையே இருக்கும், எ - று.

காளியின்தேர் சாய்த்து முருங்கைமரம் ஒடிந்தபோது பாடியது.

11. திருந்துதமி ழிலக்கணைவைந் திணைக்கோவை
விருத்தகிரிச் செல்வற்கோதும்
பெருந்தகைமை யுடையம்யாம் விடுமோலை
வெங்கனற்பிடாரிகாண்க
இரும்புவியி லொருமுருங்கைக் கொம்பொடியா
மற்காத்திங் கிருக்குநீநம்
முருங்கைதனை வேரோடுங் களைந்தனையென்
ருனக்கு முறைநன்ருமோ.

உரை:—திருத்த தமிழ் இலக்கண ஐந்திணைக் கோவை=பிழையற்ற தமிழிலக்கண அமைதியுடைய ஐந்திணைக் கோவை யென்னும் பிரபந்தத்தை, விருத்தகிரி செல்வர்க்கு ஓதம்=விருத்தாசலப் பெருமான் விஷயமாக இயற்றுகின்ற, பெரும் தகைமை உடையோம் யாம்=பெருஞ் சிறப்பினைப் பெற்ற நாம், விடும் ஓலை=எழுதியனுப்பும் ஓலைச் சுருள், வெங்ஙனூர்ப் பிடாரி காண்க=வெங்ஙனூரில் கோயில்கொண்டிருக்கும் பிடாரியம்மன் பார்ப்பாளாக, இரும்பவியில் ஒரு முருங்கைக் கொம்பு ஒடியாமல் காத்து இங்கு இருக்கும் கீ=பெரிய பூமியில் ஒரு முருங்கையின் கிளைகள் பிடுங்கப் படாதபடி அதனடியில் தங்கியிருந்தும் கீ, நம் முருங்கைதனை வேரோடும் களைந்தனை என்றல்=நமது முருங்கை மரத்தை உனது தேர் மூலமாக முற்றிலும் சாயச்செய்தா யென்றல், உனக்கு முறை நன்றுகுமோ=உனக்கு அது நல்ல நீதியாகுமா, எ - று.

இவர் பிதா பாடியது.

12. கயல்வாய்த்த கண்ணியுல கீன்றவல்லி பங்காவுனது
செயல்வாய்த்த வன்பர்க்கு மல்லாதவர்க்குஞ் சிரிப்பல்லவோ
இயல்வாய்த்த வேந்தைக்கியான் வாய்த்ததுவு மிங்கென்றெனக்கு
வயல்வாய்த்தது மனைவாய்த்தது மைந்தர்கள் வாய்த்ததுமே.

உரை:—கயல் வாய்த்த கண்ணி உலகு ஈன்ற வல்லி பங்கா = கயல்மீன் போன்ற கண்ணுடையவளும் உலகத்தைப் படைத்த கொடிபோல்பவளு மாகிய உமையம்மனையைப் பாகத்திலுடைய பெருமானே! இயல் வாய்த்த எந்தைக்கு யான் வாய்த்ததுவும்=நற்றன்மை வாய்ந்த எனது தகப்பனுருக்கு யான் பிள்ளையாகப் பொருந்தியதும், இங்கு என்றனுக்கு=இவ்வுலகில் எனக்கு, வயல் வாய்த்ததும்=நஞ்சை நிலம் அமைந்ததும், மனை வாய்த்ததும்=மனைவி யமைந்ததும், மைந்தர்கள் வாய்த்ததும்=பிள்ளைகள் அமைந்ததும், உனது செயல் வாய்த்த அன்பர்க்கும்=உனது அருட்செயல் வாய்க்கப் பெற்ற அடியார்களுக்கும், அல்லாதவர்க்கும் = அன்பரல்லாத மற்றவர்களுக்கும், சிரிப்பல்லவோ=நகைப்பைத் தருமல்லவா, எ - று.

சிவப்பிரகாசர் தன் தம்பியாகிய கருணைப்பிரகாசர்
இறந்தபோது பாடியது.

13. முன்னமொரு தமிழ்ப்புலவன் றனையுண்டு
கண்டசுவை முதிர்ச்சியாலே
தன்னியலே முழுதுமுரைத் தமையாமுன்
னினைக்கவர்ந்து தடங்காளத்தி

மன்னவனுண் டானெனது மாதவத்தின்
வலிதீர மண்ணின்மீதே
என்னுடன்வந் தவரித்த விளங்கருணைப்
பிரகாச னென்னுங்கோவே.

உரை :—மண்ணின் மீதே = பூமியிலே, என்னுடன் வந்து அவதரித்த இளம் கருணைப் பிரகாசன் என்னும் கோவே = என்னோடு உடன் பிறந்த தம்பியாகிய கருணைப் பிரகாசனென்னும் மன்னனே ! முன்னம் ஒரு தமிழ்ப் புலவன் நனை உண்டு கண்ட சுவை முதிர்ச்சியாலே = முற்காலத்தில் ஒப்பற்ற தமிழ் அருட் பாவலராகிய அப்பரை விழுங்கி யனுபவித்த ருசியின் மிகுதி யினாலே, தன் இயலே முழுதும் உரைத்து அமையா முன் = தன் சிறப்பை முற்றிலும் பாடி முடிவதற்கு முன்னர், நினைக் கவர்ந்துதடம் காளத்தி மன்னவன் = உன்னை எடுத்து பெரிய காளத்திப் பெருமான், எனது மாதவத் தின் வலி தீர உண்டான் = என்னுடைய பெரிய புண்ணியத்தின் பலம் ஒழியும்படி உட்கொண்டான், எ - று.

குறிப்பு :—காளத்திப் புராணத்தைத் தொடங்கி முடிப்பதற்கு முன் கருணைப் பிரகாசர் உயிர் நீத்தமையால் இங்ஙனம் இயம்பினர்.

14. நாணியென்பதை நாரியென் றுரைத்திடு நசையால்
வேணுவானது வளைந்துபோய்ப் புகுந்தது வென்றுற்
காணலாவ தோருருவ மெய்ந்நாரியைக் கண்டால்
பூணுவார்மயல் காளையரென்பதும் புதிதோ.

உரை :—நாணி என்பதை நாரி என்று உரைத்திடு நசையால் = நாணி யென்ற சொல்லே உலகத்தார் நாரி யென்று மருவி வழங்கவே நாரி யென் பதைப் பெண்ணென்று அறிந்து விருப்பத்தோடு, வேணுவானது வளைந்து போய்ப் புகுந்தது என்றால் = மூங்கிலானது வளைந்து நாணிக்குள் அகப்பட்ட தென்றால், காணலாவதோர் உருவம் மெய் நாரியைக் கண்டால் = பார்க்கக் கூடிய அழகான ஒப்பற்ற வடிவுடைய உண்மையான நாரியாகிய பெண்க ளைப் பார்த்தால், காளையர் மயல் பூணுவார் என்பதும் புதிதோ = இளம் பரு வத்தினர் ஆசை கொள்வார்களென்று சொல்லுதல் அதிசயமா, எ - று.

வேலைய சுவாமிகள் பாடியது.

15. ஆண்டதனு லெனையொவ்வாய் வித்தையினிற்
றமையனினு மதிகமென்றே
பூண்டவுல கதனினுள்ளோர் புகல்வதுகேட்
டிருந்துமென்ன புதுமைதானே
காண்டகுகண் மணியேநல் விளங்கருணைப்
பிரகாசக் காளாய்நீதான்
மாண்டனையென் றறிந்திருந்து முயிர்தரித்தேன்
யானுமிகு வன்னெஞ்சேனே.

உரை :—காண்டகு கண்மணியே = அழகிற் சிறந்த கண்மணிபோன்றவனே ! நல் இளங் கருணைப் பிரகாசர்க்கு ஆளாய் = நல்ல தம்பியாகிய கருணைப்பிரகாச னென்னும் இளைஞனே ! ஆண்டதனுல் எனை ஒவ்வாய் = வயதில் எனக்கு ஒப்பாகமாட்டா யென்றாலும், வித்தையினில் தமபனினும் அதிகம் என்றே = கல்வியில் உன் அண்ணனாகிய என்னைப் பார்க்கிலும் நீ உயர்ந்தவனென்றே, பூண்ட உலகதனிலுள்ளோர் புகல்வது கேட்டிருந்தும் = அறிந்த உலகினர் சொல்வதை நான் கேட்டிருந்தும், என்ன புதுமை தானே = என்ன அதிசயமோ, நீதான் மாண்டனை என்று அறிந்திருந்தும் உயிர் தரித்தேன் = நீ இறந்தாயென்று தெரிந்தும் யான் இறவாதிருந்தேன், யானும் மிகு வன் நெஞ்சனே = யான் மிகவும் கடினமான இருதய முடையவனே, எ-று.

16. அல்லிமலர்ப் பண்ணவனு மாராய்ந் தறிகவிதை
சொல்லு மிருவரிடைத் தோன்றியயான்—முல்லை
அரும்பிற் பொலியு மணிமுறுவ னல்லாய்
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்.

உரை :—முல்லை அரும்பில் பொலியும் அணிமுறுவல் நல்லாய் = முல்லை மொட்டுபோலத் திகழுகின்ற அழகான பற்களையுடைய மாதே ! அல்லி மலர் பண்ணவனும் = உள் இதழ்களையுடைய கமலத்தில் தங்கும் அயனும், ஆராய்ந்து அறி கவிதை = ஆய்ந்து தெரிதற்குத் தக்க பாடலை, சொல்லும் இருவரிடைத் தோன்றிய யான் = இயற்றவல்ல (சிவப்பிரகாசர், கருணைப் பிரகாசர் என்னும்) இருவருக்கு நடுவே பிறந்த நான், கரும்பில் கணு நிகர்த்தேன் = கரும்பில் இனிப்பான பாகங்களுக்கு நடுவிலுள்ள கணுவை யொத்தவன் காணே, எ - று. காண் - அசை.

பொன்விளைந்த களத்தூர்

அந்தகக்கவி வீரராகவ முதலியார்

பாடியது

கண்ணுங்கினியானை விழித்துப் பாடியது.

1. தேன்பொழிந்த வாயான் திருவேங் கடத்துடனே
ஏன்பிறந்தான் கண்ணுக் கினியானே—வான்சிறந்த
சீதேவி யாருடனே செய்யதிருப் பாற்கடலில்
மூதேவி யேன்பிறந்தாண் முன்.

உரை :—தேன் பொழிந்த வாயான்=தேன்போலும் இனிய சொல்லைப் பேசுன்ற வாயினை யுடையவனுகிய, திருவேங்கடத்துடனே = திருவேங்கட மென்னும் வள்ளலுடன், கண்ணுக்கு இனியான் என் பிறந்தான்= கண்ணுக்கினியா னென்பவன் தமையனுய்ப் பிறந்த காரண மென்ன, செய்ய திருப்பாற் கடலில்=செம்மையான திருப்பாற்கடலில், வான் சிறந்த சீதேவியாருடனே=மிக்கச் சிறப்புடைய இலக்குமியுடன், மூன் மூதேவி என் பிறந்தாள்=அவளுக்குத் தமக்கையாக மூதேவி பிறந்த காரணம் யாதோ அதுபோல என்க, எ - று.

குறிப்பு:—திருவேங்கட வள்ளல் புலவர்க்குக் கொடுப்பதைக் கண்ணுக்கினியான் தடுத்தபடியால் புலவர் இவ்வாறு பாடினு ரென்க.

இராமனென்னும் பிரபு தனக்குப் பரிசளித்த
யானையைச் சிறப்பித்து பாடியது.

2. இம்பர்வா னெல்லை யிராமனே யேபாடி
.என்கொணர்ந்தாய் பாணநீ யென்ருள் பாணி
வம்பதாங் களப மென்றேன் பூசு மென்ருள்
மாதங்க மென்றேன் யாம்வாழ்ந்தே மென்ருள்
பம்புசீர் வேழமென்றேன் றின்னு மென்ருள்
பகடென்றே னுழுமென்ருள் பழனந் தன்னைக்
கம்பமா வென்றேனற் களியா மென்ருள்
கைம்மாவென் றேன்சும்மா கலங்கி னுளே.

உரை :—பாணி=பாணன் மனைவியானவள், பாணு நீ=பாணரே நீர் இம்பர் வான் எல்லை இராமனையே பாடி=இவ்வுலகத்தையும் வானுலகத்தையும் தனது புகழ்க்கு எல்லையாக வுடைய இராம வள்ளலைப்பற்றி கவி சொல்லி, என் கொணர்ந்தாய் என்ருள்=என்ன பரிசில் கொண்டு வந்தீர் என்ருள், வம்பதாம் களபம் என்றேன்=(யானை யென்பதைக் குறிப்பதற்கு) புதிதாகிய களபமென்று கூறினேன், பூசும் என்ருள் = (அவள் சந்தன மென்று எண்ணிக்கொண்டு) உடம்பிலே தடவுமென்ருள், மாதங்கம் என்றேன் = (யானையைக் குறிக்கும் மற்றொரு சொல்லாகிய) மாதங்க மென்று சொன்னேன், யாம் வாழ்ந்தேம் என்ருள்=(அவளதை மிகுந்த பொன்னென்று எண்ணிக்கொண்டு) யாம் வறுமையில் தப்பிப் பிழைத்தோ மென்ருள், பம்புசீர் வேழம் என்றேன்=நிரம்பிய புகழையுடைய வேழ மென்று சொன்னேன், இன்னும் என்ருள் = (அதைக் கரும்பென்று எண்ணிக்கொண்டு) தின்னுவீ என்ருள், பகடு என்றேன்=பகடென்று கூறினேன், பழனம் தன்னை உழும் என்ருள் = அது கொண்டு வயலை உழவு செய்க வென்ருள், கம்பமா என்றேன்=கம்பமாவென்று கூறினேன், நல் களியாம் என்ருள்=(கம்பம்புல் மாவென்றெண்ணிக்கொண்டு) நல்ல களி

கிண்டலாமென்றுள், கைம்மா என்றேன்=கைம்மா என்று கூறினேன், சும்மா கலங்கினளே=ஒன்றும் பேசாது திகைத்தாள், எ - று.

குறிப்பு :—களபம், மாதங்கம், வேழம், பகடு, கும்பமா, கைம்மா என்னும் சொற்கள் யானையைக் குறிக்கும் பிற சொற்களாம்.

தானனென்பவன் தமக்கு யானையைப்
பரிசாக வழங்கினதைக் கண்டு அவனைப்புகழ்ந்து பாடியது.

3. இல்லெனுஞ் சொல்லறியாத சீகையில்வாழ் தானனைப்போ
யாழ்ப்பா ணன்யான்
பல்லிவிரித் திரந்தக்கால் வெண்சோறும் பழந்தூசும்
பாலி யாமல்
கொல்லநினைந் தேதனது நால்வாயைப் பரிசென்று
கொடுத்தான் பார்க்குள்
தொல்லையென தொருவாய்க்கு நால்வாய்க்கு மிரையெங்கே
துரப்பு வேனே.

உரை :—இல்லெனும் சொல் அறியாத=இரப்பவர்க்கு இல்லை என்று சொல்லத் தெரியாத, சீகையில் வாழ் தானனைப்போய்=சீகை யென்னும் பதியில் குடியிருக்கும் தானனென்னும் வள்ளலிடஞ் சென்று, யாழ்ப்பாணன் யான்=யாழ் வாசிக்கும் பாணனாகிய நான், பல்லி விரித்து இரந்தக்கால்=வாயைத் திறந்து எனக்கு வேண்டியதை நயந்து கேட்டால், வெண் சோறும் பழந் தூசும் பாலியாமல்=சுத்தமான வெள்ளைச் சோறும் பழைய துணியும் தராமல், கொல்ல நினைந்தே தனது நால்வாயைப் பரிசென்று கொடுத்தான்=என்னை உயிர்போக்க எண்ணி நால்வாயாகிய தன் யானையை எனக்கு வெகுமதியாக அளித்தான், பார்க்குள் தொல்லை எனது ஒரு வாய்க்கும் நால்வாய்க்கும்=உலகத்தில் பசியினால் துன்புறுகின்ற எனது ஒரு வாயோடு இன்னும் நான்கு வாய்களுக்கு, இரை எங்கு துரப்புவேனே=உணவு எங்கே கண்டு நிரப்புவேன், எ-று.

குறிப்பு :—நால்வாயென்பது தொங்குகின்ற வாயையுடைய யானையையும், நான்கு வாய்களையும் குறிக்கும்.

4. முன்னு ளிருவர்க்கும் யாக்கை யொன்றாக முயங்கினமால்
பின்னுட் பிரியன் பிரியையென் றுயினம் பேசலுறும்
இன்னுட் கொழுநன் மனைவியென் றுயின மின்னமுமோர்
சின்னுளி லெப்படி போலைய நீயின்று செப்புகவே.

உரை :—ஐய—மகனே! முன்னுளில்=ஆதியில் சந்தித்த காலத்தில், இருவர்க்கும் யாக்கை ஒன்றாக முயங்கினம்=உன் தகப்பனாரும் யானும் இருவருக்கும் ஒருடம்பென்று சொல்லும்படியாகப் புணர்ந்து வாழ்ந்தோம்,

பின்னுள் பிரியன் பிரியை யென்றுயினம் = (சிலநாள் கழித்த) பிற்பாடு பிரிய முடையவன் பிரிய முடையவ ளென்று பேசும்படியாக இருந்தோம், பேசலுறும் இந்நாள் = நாம் பேசுகின்ற இந்த நாளில், கொழுநன் மனைவி யென்றுயினம் = கணவன் இல்லாளென்று கூறக் கூடிய நிலையை அடைந் தோம், இன்னமும் ஓர் சின்னளில் எப்படியோ = இன்னங் கொஞ்சகாலங் கழித்தால் நாங்களென்ன நிலை யடைவோமென்று, நீ இன்று செப்புகவே = நீ இப்போது செல்வாயாக, எ - று.

குறிப்பு :—இருவருக்கும் மணம்புரிந்த காலந்தொட்டு அன்பு குறைந்து குறைந்து மகன் பிறந்த பின் அது நீங்கிற்றென்பது கருத்து.

கவி அந்தகனுயிருப்பதனுல் அரசனுருவன் வில்லும் அம்பும் எடுத்து வைத்துக்கொண்டு தான் செய்வதின்னதென்று கூறும்படி கவிஞரைக் கேட்க அவர் திருவருளால் உண்மையுணர்ந்து கூறியது.

5. வாழு மிலங்கைக் கோமானில்லை மானில்லை
ஏழு மராமரமோ வீங்கில்லை—ஆழி
அலையடைத்த செங்கை யபிராமா வின்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு.

உரை :—இலங்கை வாழும் கோமான் இல்லை = இலங்கையை யாண்ட இராவணன் இங்கில்லை, மான் இல்லை = மாயமானுக வந்த மாரீசனிங்கில்லை, ஏழ் மராமரமோ இங்கு இல்லை = ஒரு அம்பினுலெய்யப்பட்ட ஏழு மராமரங்க ளும் இங்கே இல்லை, ஆழி அலை அடைத்த செங்கை அபிராமா = கடலலைகளை அணைகட்டி யடைத்த சிவந்த கைகளையுடைய அழகனே !, இன்று = இந் நாளில், சிலை எடுத்தவாறு எனக்குச் செப்பு = வில்லும் அம்பு மெடுத்த காரணம் எனக்குக் கூறுவாயாக, எ - று.

அகளங்கனென்னும் பிரபுவைப் புகழ்ந்து பாடியது.

6. வடவைக்கனலைப் பிழிந்துகொண்டு
மற்றுமொருகால் வடித்தெடுத்து
வாடைத்துருத்தி வைத்தூதிமறுகக்
காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக்கயவர் தமைப்பாடிப்
பரிசுபெருமற் றிரும்பிவரும்
புலவர்மனம்போற் சுடுநெருப்பைப்
புழுகென்றுரைத்தாற் பொறுப்பாளோ
அடவிக்கதலிப் பசுங்குருத்தை
நச்சுக்குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற்கிளிகள் பஞ்சரம்விட்
டகலாதிருக்கு மகளங்கா

திடமுக்கடவா ரணமுகைத்த
தேவேதேவ சிங்கமே
திக்குவிசயஞ் செலுத்திவரு
செங்கோனடாத்து மெங்கோனே.

உரை :—அகளங்கா = அகளங்கனே! திடமுக்கட வாரண முகைத்த தேவே = பலமுடைய மும்மதம் பொழியும் யானையை எறிச் செலுத்திய தெய்வம் போன்றவனே! தேவசிங்கமே = விண்ணவர்க்குள் சிங்கமென்று சொல்லத்தக்கவனே, திக்கு விசயம் செலுத்தி வரு = திசையிலுள்ளவர்களை வென்று வருகின்ற, செங்கோல் நடாத்தும் எங்கோனே = நீதி செலுத்தும் எமது தலைவனே! அடவிக் கதலி பசும் குருத்தை = காட்டு வாழையின் இளந்தண்டை, நச்சுக் குழல் என்று அஞ்சி அஞ்சி = நஞ்சுடைய குழலாக நினைத்து மிகுந்த அச்சங்கொண்டு, அஞ்சொல் கிளிகள் பஞ்சரம் விட்டு அகலாது இருக்கும் = அழகிய மொழி பேசும் கிளிகள் கூட்டைவிட்டு நீங்காதிருக்கின்றன, வடவைக் கனலைப் பிழிந்து கொண்டு = சமுத்திரத்திலுள்ள வடவைத் தீயைச் சாறெடுத்து, மற்றுமொருகால் வடித்து எடுத்து = அதனை மீட்டுமொருதரம் வடிகட்டி, வாடைத் தூருத்தி வைத்து ஊதி = வடக்கே இருந்து வரும் குளிர் காற்றுகிய காற்றுப் பைக்குகில் வைத்து ஊதி, மறுகக் காய்ச்சி குழம்பு செய்து = சுண்டும்படி காய்ச்சி குழம்பு வடிவாகச் செய்து, புடவிக் கயவர் தமைப் பாடி = பூமியிலுள்ள புல்லரைப் புகழ்ந்து கவி கூறி, பரிசு பெறாமல் திரும்பி வரும் புலவர் மனம்போல் = அவரிடம் வெகுமதி யாதுங் கிடைக்கப்பெறாது மீளுகின்ற பாவலருடைய உள்ளம் போல, சுடு நெருப்பை = சுடக்கூடிய தீயை, புழுகு என்று உரைத்தால் = வாசனைப் பொருளாகிய புனுகு என்று கூறி அதனைத் தலைவிமேல் தெளித்தால், பொறுப்பாளோ = (அதனை அவள்) தாங்க முடியுமோ, எ - று.

சிதம்பர பூபதியின்மீது நற்றாயிரங்குந்துறை
யமைத்துப் பாடியது.

7. மாதரணி மென்முலைதோய் மாராசி தம்பரபூ
மாதரணி ராசர்மகிழ் மாவசன—மாதர்
மறுகிடத்தே யம்பொன் மடவார் பழிக்கநெஞ்ச
மறுகிடதேங் குந்துரைப்பெண் வா.

உரை :—மாதரணி மென்முலை தோல் மாரா = பெண்களுடைய அழகான மெதுவான தனங்களில் சோகின்ற மன்மதனே! சிதம்பர பூமா = சிதம்பர மென்னும் பேருடைய நிலத்தலைவனே! தரணி ராசர் மகிழ் மாவசன = பூமியிலுள்ள மன்னர்கள் கேட்டு களிக்கத் தக்க பெருஞ் சொற் கூறுபவனே! மாதர் மறுகிடதே = அழகான விதியினிடத்தே, அம் பொன் மடவார் பழிக்க = அழகிய பொன்னணிந்த பெண்கள் குறை கூற, நெஞ்சம் மறுகிட

மனம் உழலுவதனால், துரைப்பெண் தேங்கும்=எங்களரசியாகிய மாது அஞ்சி வருந்துகின்றாள், வா=அவளைக்கொள்ள நீ வருக, எ - று.

8. சொல்லு மல்லும்பகலுஞ் சோருங்கிடை கிடக்கும்
கல்லு முருகக் கனிந்தரற்றும்—புல்லியணை
விண்கலக்குங் கீர்த்திவேள் சிதம்பரக் குமண
பெண்கலக்கங் கொன்றுநின்றன் பேர்.

உரை:—விண் கலக்கும் கீர்த்தி வேள்=வானம்வரை பரவிய புகழையுடைய வள்ளலாகிய, சிதம்பர குமண=குமணனென்று சொல்லத்தக்க சிதம்பர பூபதியே! பெண்=எனது மகள், கலக்கம் கொண்டு=மனமயக்கத்தால், நின்றன் பேர்=உன்னுமத்தினை, அல்லும் பகலும் சொல்லும்=இரவும் பகலும் கூறிக்கொண்டிருக்கிறாள், சோரும்=தளர்ச்சியடைகின்றாள், இடை கிடக்கும்=படுக்கையிலேயே படுத்திருக்கின்றாள், கல்லும் உருக=கல்லும் கரையும்படியாக, கனிந்து அரற்றும்=மனமுருகி அழுகின்றாள், புல்லி அணை=அவளை நீ தழுவிச் சேரவேண்டும், எ - று.

9. வந்தனந்த மென்பூ மணந்தோய்ந்து பாயப்பா
வந்தனம் விம்மிச்சோர்ந் தாள்வரகோடி—வந்தனங்கல்
அன்னமனங் கொள்ளாம லாள்சிதம் பரக்குமண
அன்னமனங் கொண்டுயவே யாங்கு.

உரை:—சிதம்பர குமண=குமணன் போன்ற சிதம்பரப் பிரபுவே! அன்னம்=அன்னம்போன்ற என் மகள், வந்து=தென்றற் காற்றினது, அனந்த மென் பூ மணந்தோய்ந்து பாய=அளவற்ற மெல்லிய பூக்களின் வாசனையிற் பொருந்தி அதனோடு அவள்மேல் வீசுவதால், பாவம்=ஐயோ! தனம் விம்மிச் சோர்ந்தாள்=முலை நிமிரப்பெற்று தளர்ந்தாள், ஆங்கு அனம் கொண்டு உயவே=அவள் சோறு உட்கொண்டு பிழைக்கும்படியாக, கல் அன்ன மனம் கொள்ளாமல் ஆள்=கல்லுப்போன்ற இரக்கமில்லாத மனத்தோடு இராமல் அவளை ஆட்கொள்வாயாக! வா=அவள்பால் வருவாயாக! கோடி வந்தனம்=உனக்குக் கோடி வணக்கம், எ - று.

10. மாவாரி முத்தவெண் பன்மாதுமய லுத்தணிசோ
மாவாரி முத்தளித்த வைபோகா—மாவுச்
சிதம்பர வையாநீ திக்குளுயர் பூமா
சிதம்பர வையாநீ திக்கு.

உரை:—சோமா=குளிர்ச்சியால் சந்திரனைப் போன்றவனே! ஆரி முத்து அளித்த வைபோகா=ஆரிமுத்து வள்ளல் பெற்ற சிறப்புடையவனே! மா உச்சிதம் பரவு ஐயா=மிக உயர்வாக யாவரும் புகழ்கின்ற அப்பனே! நீதிக்குள் உயர் பூமா=நீதி நெறியால் மேம்பட்ட பூபதியே!

சிதம்பர ஐயா = சிதம்பர வள்ளலே! நீதிக்கு = நீயே என் பெண்ணுக்குக் கதியாவாய், மாவாரி முத்த வெண்பல் = பெரிய கடலினின் றெடுக்கப்படும் முத்துப் போன்ற வெள்ளிய பற்களையுடைய, மாது மயிலத் தணி = பெண் ணின் மபக்கத்தைத் தீர்ப்பாயாக, எ - று.

11. பங்கஜமேன் மேவியசெள பாக்யசுப மானளித்த
அங்கஜவேள் வெங்கணையா லாவிநொந்தாள்—எங்களிட
மாரஞ் சிதம்பரபூ மாதினையாள் கோடிநமஸ்க்
காரஞ் சிதம்பரயோ கா.

உரை :—சிதம்பர யோகா = நல் வாழ்வுடைய சிதம்பர பூபதியே! பங்கஜமேல் மேவிய செளபாக்கிய சுப மான் = தாமரைப் பூவின்மேல் தங்கு கிற செல்வத்தையும் சுகத்தையும் தருகின்ற இலக்குமி, அளித்த = பெற்ற, வேள் = மன்மதனுடைய, வெம் கணையால் = வெப்பமான அம்பினால், ஆவி நொந்த = உயிர்த்துயரமடைந்த, எங்களிடம் = எங்களிடமுள்ள, மாரஞ்சி தம் = மிகவும் இன்பகரமான, பாவும் = புகழ் பெற்ற, மாதினை = நங்கையை, ஆள் = ஆட்கொள்ளவும், கோடி நமஸ்காரம் = உனக்குக் கோடி நமஸ்காரம், எ - று.

தூரோபதை, மாமனுராகிய தென்றற் காற்றைத் தழுவினளெனப் பாடியது.

12. கோளரவேந் துலகிலிந்தப் புதுமையுண்டோ
வெனமொழிந்த குமணு கேளாய்
ஆளரைவர் தமைத்தோய்ந்த கற்புடைய
பாஞ்சாலி யணைந்த வீமன்
வாளரிபோ லருகிருக்க மலயவெற்பி
லிருந்துவந்த மாமனுரைச்
சாளரவா சலைத்திறந்து வரவழைத்து
முலையாரத் தழுவினளே.

உரை :—கோள் அர வேந்து உலகில் = திறமை மிகுந்த பாம்பாகிய ஆதிசேஷன் சுமக்கின்ற பூமியை, இந்தப் புதுமை உண்டோ என மொழிந்த குமணு கேளாய் = இந்த அதிசய முள்ளதாவென்று வினவிய குமணனே கேட்பாயாக! ஆளர் ஐவர் தமைத்தோய்ந்த = ஐந்து புருடரைச் சேர்ந்த, கற்புடைய பாஞ்சாலி = பதிவிரதா தருமத்தையுடைய தூரோபதியானவள், அணைந்த வீமன் - தன்னைச் சேர்ந்த (வாயு மகனாகிய) வீமன், வாளரி போல் அருகிருக்க = பிரகாசமுடைய சிங்கம்போலத் தன் பக்கத்திலே இருக்கவும், மலய வெற்பில் இருந்து வந்த மாமனுரை = பொதிய மலையில் தோன்றி யுலாவிவந்த தென்றலாகிய மாமனுரை, சாளர வாசலைத் திறந்து =

பலகணியின் கதவைத் திறந்து, வரவழைத்து = உபசாரத்தோடேற்று, மூலையாரத் தழுவினுள் = மார்பிற் படும்படி அணைத்துக் கொண்டான், எ - று.

குறிப்பு :—தென்றல் காற்று வாயுவாதலினாலும், வீமனுக்கு வாயுவே தகப்பனாதலினாலும் துரோபதிக்குத் தென்றற் காற்று மாமனாக வர்ணிக்கப்பட்டது.

13. பணியாரந் தோசை யிலக்கொங்கை தோய்ந்திடப் பார்ப்பர்பல்லி
பணியாரந் தோசையிலாச் செந்துவாய்ப் பிறப்பார்க ளென்னே
பணியாரந் தோசைமுன் னேனுக்கிட் டேத்திப்பழ னிச்செவ்வேள்
பணியாரந் தோசைவரா காரன்னோர்க் கென்ன பாவமிதே.

உரை :—பணியாரம் தோசை முன்னேனுக் கிட்டே ஏத்தி = பண்டங்கள் தோசைகள் என்பனவற்றை விநாயகருக்குப் படைத்து வழிபட்டு, பழனிச் செவ்வேள் பணியார் = பழனியில் வீற்றிருக்கும் முருகப்பெருமானே வணங்கமாட்டாதவர்கள், சைவர் ஆகார் = சைவசமயிகளாக ஒழுகமாட்டார்கள், பணி ஆர் = நகைகள் பொருந்திய, அம் தோ = அழகிய இரண்டு, சையிலக் கொங்கை = மலைபோலுள்ள தனங்களை, தோய்ந்திடப் பார்ப்பார் = அணைந்து அனுபவிக்கக் கருதுவார்கள், (அவர்கள்) பல்லி = பல்லி, பணி, பாம்பு, ஆர் அந்து = மிகுதியான அந்துப் பூச்சி முதலிய, ஓசை இலா செந்து வாய்ப் பிறப்பார்கள் = அரவங் காட்டாத சிறு பிராணிகளாகப் பிறப்பார்கள், அந்தோ அன்னோர்க்கு என்ன பாபமிதே = ஐயோ அவர்களுக்கு இது என்ன பாவப் பயன், எ - று.

விநாயகக் கடவுள்மீது பாடிய நிந்தாஸ்துதி.

14. வீரஞ் சொரிகின்ற பிள்ளா யுனக்குப் பெண்வேண்டு மென்றுல்
ஆருங் கொடா ருங்களப்பன் கபாலி யம்மான் றிருடன்
ஊருஞ் செங்காடு நின்றன் முகம்யானை யுனக்கி னோயோன்
பேருங் கடம்ப னுன்றாய் நீலி நிற்கும் பெருவயிறே.

உரை:—வீரம் சொரிகின்ற பிள்ளாய் = வீரத்தைக் காட்டும் மதம் பொழிகின்ற பிள்ளையாரே ! உனக்குப் பெண் வேண்டும் என்றால் = உமக்குப் பெண் கொள்ளவேண்டுமாயின், ஆரும் கொடார் = யாரும் தாமாட்டார்கள், (ஏதனுலெனின்) உங்கள் அப்பன் கபாலி = உங்கள் தகப்பனார் கபால மெடுத்துப் பிச்சை ஏற்பவர், அம்மான் திருடன் = உனது மாமனாகிய கண்ணன் வெண்ணெய் களவு செய்தவன், ஊரும் செங்காடு = உங்களுக்குத் தங்குமிடம் சிவந்த காடாயிருக்கிறது, நின்றன் முகம் யானை = உமக்கோ யானை முகம், உனக்கு இனையோன் பேரும் கடம்பன் = உமக்கு இனைய சகோதரருடைய நாமம் கடம்ப னென்னுங் கீழ்ச்சாதிப் பெயர், தாய் நீலி = உனது அன்னையோ (நீல நிறமுடைமையால்) நீலியெனப் படுவாள், நிற்கும்

பெரு வயிறு=உமக்கும் பெரு வயிறாகிய வியாதி யுண்டு, எ - று. (பெரு வயிறு=மகோதரம்).

கட்டுச்சோற்றைப் பரிகொடுத்தபோது பாடியது.

15. சீராடை யற்ற வைரவன் வாகனஞ் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனத் தன்னேமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயர் வாகன மாயிற்று நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே.

உரை :—சீராடை அற்ற வைரவன் வாகனம்=ஒழுங்கான ஆடையில்லாமல் (கௌபீனம் தரிக்கும்) வைரவரின் ஊர்தியாகிய நாய், சேரவந்த=கிட்டவந்து, பாராரும் நான்முகன் வாகனம் தன்னே = நிலத்திலிருந்த பிரமன் ஊர்தியாகிய அன்னத்தை, முன் பற்றிக் கௌவி = நாமெடுக்குமுன் எடுத்து வாயில் வைத்துக்கொண்டு, நாராயணன் உயர் வாகனம் ஆயிற்று=விஷ்ணுவின் பறக்கும் ஊர்தியாகிய கருடன்போல ஒடிவிட்டது, நம்மை முகம் பாரான்=நம்மிடத்திலே இரக்கம் வையாதவனுகிய, மைவாகனன்=ஆட்டை ஊர்தியாகவுடைய தீக்கடவுள், வயிற்றினில் பற்றினனே=நமது வயிற்றிற் பிடிப்பாய்த் தங்கலாயினன், எ - று.

கோதண்டராமனைப் பாடியது.

16. பாண்டியன் மாலேகண்டாய் மகளே நினைப் பார்த்தவர்க்கு
வேண்டிய வின்பமிக வருமோ வெண்ணெயே திருடித்
தாண்டிக் குதித்தநற் கோதண்ட ராமன் றடவரைமேல்
ஆண்டி யிருப்பிடந் தாத னிருப்பிட மானபின்னே.

உரை :—வெண்ணெயே திருடி=வெண்ணெயைக் களவுசெய்து, தாண்டிக் குதித்த=துள்ளிக் குதித்து விளையாடிய, நல் கோதண்டராமன் தடவரைமேல்=சிறந்த கோதண்டராமனென்னும் வள்ளலது விசாலமான எல்லைக்குள் தங்கும், மகளே=பெண்ணே! ஆண்டி இருப்பிடம்=சிவனுர் தங்குமிடமாகிய மலைபோன்ற முலை, தாதன் இருப்பிடம்=விஷ்ணுவின் இருப்பிடமான ஆலிலை போன்ற வயிற்றினிடமாக, ஆன பின்னே=ஆன பிற்பாடு, நினைப் பார்த்தவர்க்கு—உன்னைக் கண்டவர்களுக்கு, வேண்டிய இன்பம் மிக வருமோ=விரும்பிய இன்பம் அதிகமாக உண்டாகுமா? பாண்டியன் மாலே கண்டாய்=பாண்டியன் மாலைபோன்ற வேம்பாய் நீ இருப்பாயென்று அறிக, எ - று.

பெருமாள் துதி.

17. சோனையுங் காத்துநல் லானையுங் காத்துத் துரோபதைதன்
தானையுங் காத்தடைந் தானையுங் காத்துத் தடத்தகலி
மானையுங் காத்தனு மானையுங் காத்துமடு வில்விழும்
ஆனையுங் காத்தவ னேயெனைக் காப்ப தரிதல்லவே.

உரை :—சோனையும் காத்து = (கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து) மழையையுந் தடுத்து, கல்லானையும் காத்து = அதனுற் சிறந்த பசுக்களையுங் காப்பாற்றி, துரோபதை தன் தானையும் காத்து = (துரியோத னுதியர் துகிலுரிந்து மானபங்கம் செய்தபோது) துரோபதையினுடைய ஆடையைக் காப்பாற்றி, அடைந்தானையும் காத்து = சரணுகதி யடைந்த விபீஷணனையும் காப்பாற்றி, தடத்து அகலி மானையும் காத்து, காட்டு வழியே செல்லும்போது அகலிகையாகிய பெண்ணையுங் காப்பாற்றி, அனுமானையும் காத்து = அனுமானையும் காப்பாற்றி, மடுவில் விழும் ஆனையும் காத்து = முதலிவாயி லகப்பட்டுக் குளத்தில் விழுந்த ஆனையையுங் காப்பாற் றியவனே, எனைக் காப்பது அறிது அல்லவே = என்னைக் காப்பாற்றுவது (உமக்குக்) கடினமல்லவே, எ - று.

குறிப்பு :—அனுமானைக் காத்ததென்பது அனுமானுக்குச் சிரஞ்சீவிப் பட்டங் கிடைக்கும்படி செய்தது.

இவ்விவ்விவர்களுக்குப் பொய்யுரைத்தால் இவ்விவ்வித பிரயோசனமாகும் எனப் பாடியது.

18. பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியா
மவருக்குப் பொய்யா காத
மெய்யருக்குப் பொய்யுரைத்தால் தேய்பிறைபோற்
றவங்குறையு மிடியுண் டாகும்
துய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால்
வறுமைபிணி தொலையா வென்றும்
உய்யவரு டேசிகற்குப் பொய்யுரைத்தா
னரகமது வுண்மை தானே.

உரை:—பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியாம் அவருக்கு = பொய் சொல்பவரிடம் பொய் சொன்னுல் அங்ஙனம் பொய் சொன்னவர்க்குக் காரிய சித்தியுண்டாகலாம், பொய்யாகாத மெய்யருக்குப் பொய்யுரைத்தால் = பொய்யை வெறுக்காத மெய்யுரைப்பவரிடம் பொய் கூறினுல், தேய்பிறை போல் தவம் குறையும் = மதியின்பிறை தேய்வதுபோலப் புண்ணியப்பயனு னது தேய்ந்துபோகும், மிடி உண்டாகும் = வறுமை ஏற்படும், துய்ய தாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால் = புனிதமான பெற்றோரிடம் பொய் சொன் னுல், வறுமை பிணி தொலையா என்றும் = எளிமையும் வியாதியும் எப்பொழு தும் ஒழியமாட்டா, உய்ய அருள் தேசிகற்குப் பொய்யுரைத்தால் = கதிபெறு தற்கு வழிகாட்டி யருளும் ஆச்சாரியனிடம் பொய் கூறினுல், நரகமது உண்மை தானே = நரகங் கிடைப்பது மெய்யே, எ - று.

இவர் இறந்தபோது இவர்மாணாக்கர் பாடியது.

19. இன்னங் கலைமகள் கைமீதிற் புத்தகமேந்தி யந்தப்
பொன்னம் பலந்தனிற் புக்கிருந்தா ளென்ன புண்ணியமோ
கன்னன் களந்தைக் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்ரு னெருமுத் தமிழையுமே.

உரை:—இன்னம் கலைமகள்=நாமகள் இன்னும், கைமீது புத்தக மேந்தி=தனது கையில் ஏடு வைத்துக்கொண்டு, அந்த பொன்னம்பலம் தன்னில் புக்கு இருந்தாள்=பேர்பெற்ற கனகசபையில் சென்று தங்கினாள், என்ன புண்ணியமோ=ஏதோ ஒரு நல்வினைப் பயனால், கன்னன்=கர்ண னைப்போல வள்ளற்றன்மை யுடையோனாகிய, களந்தை கவி வீராகவன்=திருக்களந்தைப் பாவலராகிய அந்தகக் கவி வீராகவ முதலியார், கச்சியிலே=காஞ்சிபுரத்திலே, முத்தமிழையும்=ஒப்பற்ற மூவகைத் தமிழையும், தன் நெஞ்சம் ஏடு எனக்கற்ரூன்=தனதுள்ளமே புத்தகமாக வைத்துப் படித் துத் தேர்ந்தார், எ-று.

கவிராயர் இறந்தபோது அவரது மாணவரொருவர் பாடிய சரமகவி.

20. முன்னுட்டுத் தவமுனியுஞ் சேடனும் வான்
மீகனுமுன் முன்னில்லாமல்
தென்னுட்டு மலையிடத்தும் பாரிடத்தும் புற்றிடத்துஞ்
சென்று சேர்ந்தார்
இந்நாட்டுப் புலவருனக் கெதிரிலையே
கவிவீர ராகவாநீ
பொன்னுட்டுப் புலவருடன் வாதுசெய்யப்
போயினையோ புகலுவாயே.

உரை:—கவி வீராகவா=வீராகவனென்னும் பாவலரே! முன்=நீர் தோன்றுவதற்கு முன்னேயே, நாட்டுத் தவமுனியும்=தமிழ்நாட்டுத் தவ முனிவராகிய அகத்தியரும், சேடனும்=ஆதிசேடனும், வான்மீகனும்=....., தென்னுட்டு மலையிடத்தும்=தென்னாட்டிலுள்ள மலையின்கண்ணும், பாரி டத்தும்=பூமிக்குக் கீழும், புற்றிடத்தும்=கரையின் புற்றினகத்தும், சென்று சேர்ந்தார்=போய்த் தங்கினர், இந்நாட்டுப் புலவர் உனக்கு எதி ரிலையே=இந்த நாட்டிலே உனக்கு எதிரே நிற்கக்கூடிய புலவர் யாரு மில்லையே, (ஆதலால்) பொன்னுட்டுப் புலவருடன்=பொன்னுலகமாகிய விண்ணுலகத்திற் புலவரினப்படும் தேவரோடு, நீ வாது செய்யப்போயினையோ =தர்க்கஞ்செய்ய அயர்வோ வெல்வதற்காக நீ போயினாயோ, புகலு வாயே=நீ போன காரணத்தைக் கூறுவாயே! எ-று.

பொற்களஞ்சியப் படிக்காசுத்தம்பிரான்

பாடியது

ஈயாரை வெறுத்துக் கூறியது.

1. அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக்கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில்லாமல்
திடமுளமோ கனமாடக் கழைக்கூத்தாடச்
செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோமில்லைத்
தடமுலவே சையராகப் பிறந்தோமில்லைச்
சனியான தமிழைவிட்டுத் தையலார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை
என்னசென்ம மெடுத்துலகி லிரக்கின்றேமே.

உரை:—அட கெடுவாய் = (நெஞ்சமே !) நீ கெட்டுவிடுவாய், பல தொழிலு மிருக்க அறிவில்லாமல் ல்வி யதிகமென்றே கற்றுவிட்டோம் = பிழைப்பதற்குப் பலவகைப்பட்ட தொழிலு மிருக்கும்போது அவற்றின் தன்மை யறியாமல் படிப்பு உயர்ந்ததென்றெண்ணி அதனைத் தெரிந்தோம், திடமுள மோகனம் ஆட = திண்ணமாய் மயங்கச்செய்யும் தொழிலைச்செய்ய, கழைக் கூத்தாட = கம்பத்தின்மேனின்று ஆடுந்தொழில் செய்ய, செப்பிடு வித்தைகளாடத் தெரிந்தோமில்லை = கண்கட்டி வேடிக்கைத் தொழில்கள் செய்யக் கற்றேமில்லை, தடமுலை வேசையராகப் பிறந்தோம் இல்லை = பருத்த தனங்களை யுடைய விலைமகளிராகத் தோன்றினேமில்லை, சனியான தமிழை விட்டு = சனிபோல இடர்செய்கின்ற தமிழ்க் கல்வியைக் கைவிட்டு, தையலார் தம் இடமிருந்து தூது சென்று பிழைத்தோம் இல்லை = பெண்களுக்குத் தூதாய்ச் செல்லும் தொழில்செய்து உயிர் வாழ்ந்தோமில்லை, என்ன சென்மம் எடுத்து உலகில் இரக்கின்றேமே = எவ்வகையான பிறவியை யெடுத்து இவ் வுலகில் பிச்சை யெடுத்து வருந்தலாயினேம், எ - று.

கறவைப் பசுவைக் கேட்டது.

2. பெற்ரு ளொருபிள்ளை யென்மனையாட்டி யப்பிள்ளைக்குப்பால்
பற்றாது கஞ்சி குடிக்குந் தரமல்ல பாலிரக்கச்
சிற்றூரு மில்லை யிவ்வெல்லா வருத்தமுந் தீரவொரு
கற்றாத வல்லையோ வல்ல மாநகர்க் காளத்தியே.

உரை:—வல்ல மாநகர் காளத்தியே = வல்லமென்னும் பெரிய வூரி லிருக்கும் காளத்தி யென்னும் பெயருடைய கொடையாளியே! என் மனை யாட்டி ஒரு பிள்ளை பெற்றாள் = என்னில்லாள் ஒரு குழந்தையைத் தோற்று வித்தாள், அப் பிள்ளைக்குப் பால் பற்றாது = அந்தக் குழந்தைக்குத் தாய்ப்

பால் காணுது, கஞ்சி குடிக்கும் தாமல்ல = கஞ்சி குடிக்கக்கூடிய நிலைமையி லில்லை, பால் இரக்கச் சிற்றூளும் இல்லை = பால் பிச்சை யெடுத்துக் கொண்டு வருவதற்குக் கூட ஒரு சிறிய வேலைக்காரனில்லை, இவ்வெல்லா வருத்தமும் தீர = இவ்வகையான தொந்தரவு தொலையும்படியாக, ஒரு கற்றூ தர வல்லையோ = கன்றோடு கூடிய ஒரு பசுவை நீ எனக்கு அளிக்கக் கூடுமா ? எ-று.

குறிப்பு :—'கன்று ஆ' என்பது 'கற்றூ' என வலித்தது.

பரிசு பெற்றபோது பாடியது.

3. வழிமேல் விழிவைத்து வாடாம லென்மனையாளு மற்றோர்
பழியாமற் பிள்ளையும் பாலென் றழாமற் பகீரெனுஞ்சொல்
மொழியாம லென்னை வரவிட்ட பாவிமுசித் துச்சதை
கழியாம லாவளித்தாய் வல்லமா நகர்க் காளத்தியே.

உரை :—வல்லமா நகர் காளத்தியே = வல்லைப்பதி காளத்தி வள்ளலே ! வழிமேல் விழி வைத்து = நான் திரும்பி வருகிற வழியிலேயே பார்த்துக் கொண்டு, என் மனையாளும் வாடாமல் = என்னில்லாள் மனந் தளராமலும், மற்றோர் பழியாமல் = பிறர் பழிச்சொல் சொல்லாமலும், பிள்ளையும் பால் என்று அழாமல் = மகவும் பால்கேட்டு அழாமலும், என்னை வரவிட்ட பாவி = என்னை இங்கே அனுப்பிய ஏழையாகிய இல்லாள், பகீரெனும் சொல் மொழியாமல் = மனந் திகிலடையக்கூடிய வார்த்தையைக் கூறாமலும், முசித் துச் சதை கழியாமல் = அவள் வருந்தி உடம்பு மெலியாமலும், ஆ அளித் தாய் = பசுக் கொடுத்தாய், எ - று.

சிதக்காதி யென்னும் வள்ளல்மீது பாடியது.

4. ஒர்தட்டி லேபொன்னு மோர்தட்டி லேநெல்லு மொக்கவிற்கும்
கார்தட்டி யபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னுந்தட்டு வாராம லேயன்ன தானத்துக்கு
மார்தட்டி யதுரை மால்சீதக் காதிவ ரோதயனே.

உரை :—ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்க விற்கும் = பொன்னையும் நெல்லையும் தராசிலே நிறுத்துச் சமமாக விற்கின்ற, கார் தட்டிய பஞ்சகாலத்திலே = மழை தவறிய கறுப்புக் காலத்தில், தங்கள் காரியப்பேர் ஆர் தட்டினும் = தங்கள் சொந்தக் காரியத்தையே பார்க்கும் எவர் தடைசெய்தாலும், அன்னதானத்துக்குத் தட்டு வாராமலே = சோறிடும் தருமத்திற்குத் தடை யேற்படாமல், மார் தட்டிய துரைமால் = தைரியம் சொல்லி யதனை நடத்துகின்ற ஏழமானனாகிய காத்தற் கடவுள் போன்ற வன், சீதக்காதி வரோதயனே = வரத்தினாற் பிறந்தவனாகிய சீதக்காதி வள்ளலே, எ - று.

5. நேசித்து வந்தகவி ராசர்தங்கட்கு நித்த நித்தம்
பூசிக்கு நின்கைப் பொருளொன்றுமே மற்றப் புலவர்பொருள்
வேசிக்குஞ் சந்துநடப் பார்க்கும் வேசிக்கு வேலைசெய்யும்
தாசிக்கு மாகுங் கண்டாய் சீதக்காதி தயாநிதியே.

உரை :—சீதக்காதி தயாநிதியே = சீதக்காதி யென்னும் கருணைக் களஞ்சியமே! நித்த நித்தம் = ஒவ்வொரு நாளும், நேசித்து வந்த கவி ராசர் தங்கட்கு = பிரியப்பட்டுத் தன்பால் வந்த பாவலர்களுக்கு, பூசிக்கும் நின் கைப் பொருளொன்றுமே = அவர்கள் வழிபடும் உன்னுடைய கரத்தி லுள்ள பொருள் அவர்களுக்கே சென்று சேரும், புல்லர் பொருள் = பிற கீழ் மக்களுடைய செல்வம், வேசிக்கும் = வேலைமாதர்க்கும், சந்து நடப்பார்க்கும் = அவர்கள்பால் தூது செல்கின்றவர்களுக்கும், வேசிக்கு வேலை செய்யும் தாசிக்கும் = வேலைமகளிரின் வேலைக்காரிக்கும், ஆகும் கண்டாய் = உபயோகப் படுமென்று அறிக, எ - று.

6. ஈயாத புல்ல ரிருந்தென்ன போயென்ன வெட்டிமரம்
காயா திருந்தென்ன காய்த்துப் பலனென்ன கைவிரித்துப்
போயா சகமென் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியா
ஓயாம லீபவன் வேள்சீதக் காதி யொருவனுமே.

உரை :—ஈயாத புல்லர் இருந்து என்ன போய் என்ன = கொடுக்காத கீழ்மகன் இருந்தாலும் இறந்தாலும் பயன் யாது மில்லை, எட்டி மரம் காயாது இருந்து என்ன காய்த்துப் பலன் என்ன = எட்டி மரமானது காய் கொடுக்கா விட்டாலும் குறைவில்லை காய் கொடுத்தாலும் அது யாருக்கும் பயன்படாது, கைவிரித்துப் போய் யாசகமென்று உரைப்போர்க்கு = கை கீட்டிப் பிச்சை யென்று கேட்பவர்களுக்கு, செம்பொன் பிடிபிடியாய் ஓயாமல் ஈபவன் = செம்மையாகிய பொற்காசுகளைத் தன் கையிலிருந்து ஓர் பிடியாக இடை விடாது தருபவன், வேள் சீதக்காதி ஒருவனுமே உளன், எ - று.

7. காய்ந்து சிவந்தது சூரியகாந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னுர்நெடுங் கண்கள்தொல் பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்ச மனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக் காதி யிருகரமே.

உரை :—சூரியகாந்தி காய்ந்து சிவந்தது = சூரியகாந்தி பூ வெயிலிற் காய்ந்து சிவப்புநிற மடைந்தது, மின்னுர் நெடும் கண் = பெண்களுடைய நீண்ட கண், கலவியிலே தோய்ந்து சிவந்தது = சேர்க்கை மிகுதியினல் சிவப்பு நிறமடைவதாகும், பாவாணர் நெஞ்சம் தொல் பல நூல் ஆய்ந்து சிவந்தது = கவிஞருடைய உள்ளம் பழமையான பல விலக்கியங்களை ஆராய்ச்சி செய்து கற்றுச் செம்மை யடைந்தது, மால் சீதக்காதி இரு காமும்

அணுகினமும் ஈந்து சிவந்தது = காப்போலுகிய சீதக்காதி வள்ளலின் இரண்டு கைகளும் ஒவ்வொரு நாளும் இரப்பார்க்களித்துச் செந்நிற மடைந்தது, எ - று.

8. தேட்டாளன் காயற்றுரை சீதக்காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்ப நாட்டிவைத்தான் றமிழ்நாவலரை
ஓட்டாண்டி யாக்கியவர் கடம்வாயி லொருபிடிமண்
போட்டா னவனுமொளித் தான்சமாதிக் குழிபுகுந்தே.

உரை :—தேட்டாளன் = பொருளீட்டுவதில் வல்லவனுகிய, காயல் துரை சீதக்காதி = காயற்பட்டினத்திற்குத் தலைவனுகிய சீதக்காதி, சிறந்த வச்ர நாட்டான் = உயர்ந்த வயிர நாட்டையுடையவன், புகழ்க் கம்பம் நாட்டி வைத்தான் = கீர்த்தியாகிய பெரிய தூண் நிலைநாட்டி வைத்தவன், தமிழ் நாவலரை = தமிழ்ப் புலவர்களை, ஓட்டாண்டி ஆக்கி = ஓடெடுத்த இரந்து உண்ணும் யாசகர்களாக்கி, அவர்கள் தம் வாயில் ஒரு பிடி மண் போட்டான் = அவர்களுடைய வாயில் ஒரு கையளவு மண்ணையிட்டான், (எனினில்) அவனும் சமாதி குழி புகுந்தே ஒளித்தான் = அவனும் கல்லறையிற் புகுந்து ஒளித்துக்கொண்டான் (இறந்தார் என்பது கருத்து) எ - று.

சீதக்காதி வள்ளலிடம் தாசி பாடியது.

9. தினங்கொடுக்குங் கொடையானே
தென்காயற்பதியானே சீதக்காதி
இனங்கொடுத்த வுடைமையல்ல
தாய்கொடுத்தவுடையல்ல வெளியாளாசை
மனங்கொடுத்துமிதழ்கொடுத்து மபிதானந்
தனைக்கொடுத்து மருவிரண்டு
தனங்கொடுத்தவுடைமையெல்லாங் கள்ளர்கையிற்
பறிகொடுத்துத் தவிக்கின்றேனே.

உரை:—தினம் கொடுக்கும் கொடையானே = நாள்தோறும் இரப்பார்க்கு ஈவானே, தென்காயற் பதியானே = அழகிய காயற்பட்டினத்திற்குத் தலைவனே, சீதக்காதி = சீதக்காதியாகிய வள்ளலே, (என்னிடமிருந்த சொத்து) இனம் கொடுத்த உடைமை அல்ல = எனது சுற்றத்தார் எனக்குக் கொடுத்த செல்வமல்ல, தாய் கொடுத்த உடைமை அல்ல = எனது அன்னை யீந்த சொத்துமல்ல, எளியாள் = வறியவளாகிய நான், ஆசை மனம் கொடுத்தும் = வேட்கையுடைய நெஞ்சத்தை யளித்தும், இதழ் கொடுத்தும் = உதட்டை யளித்தும், அபிதானம் தனைக் கொடுத்து = இகழிய விடத்தைத் தந்தும், மருவி இரண்டு தனம் கொடுத்தும் = தழுவக் கூடிய இரு முலைகளைக் கொடுத்தும், ஈட்டு உடைமை = தேடிய செல்வமாகும்

அது, கள்ளர் கையில் பறிகொடுத்துத் தவிக்கிறேனே = திருடர் கொண்டு போனதால் இழந்து வருந்துகின்றேன், எ - று.

தலைவன் பிரிவுக்காற்றாது தலைவி வருந்திப் பாடியது.

10. தரைகண்டமட்டும் படர்ந்தண்ட கோளமுந் தாவியெங்கும்
உரைகண்டகீர்த்தி பெறுஞ்சீதக்காதி யுலகினில் வெண்
திரைகண்டெழுங்கடன் மீதேதன்வங்கத் தைச்செல்ல விட்டுக்
கரைகண்டவனினங் காணனென் னாசைக்கடற் கரையே.

உரை :—தரை கண்ட மட்டும் படர்ந்து = நிலவுலகமெங்கும் சென்று, அண்ட கோளமும் தாவி = அண்டத்தின் முகட்டிற்கும் அப்பாற் சென்று, எங்கும் உரை கண்ட கீர்த்தி பெறும் = எங்கும் பேசக் கூடிய புகழை யடைந்த, சீதக்காதி = சீதக்காதியானவன், உலகினில் = உலகத்தில், வெண் திரை கண்டு எழும் கடல் மீதே = வெள்ளிய அலைகள் தோன்றி விளம்புகின்ற சமுத்திரத்தின் மேல், தன் வங்கத்தைச் செல்லவிட்டு = தன் கப்பலைச் செலுத்தி, கரை கண்டான் = அதனைக் கரைகண்டவனுயிருந்தும், இனம் = இன்னும், என் ஆசைக்கடல் கரை காணன் = எனது காதற் கடலின் கரையைத் தெரியாதவனுய் இருப்பான், எ - று.

அம்பிகைமீது எனக்கு யாதும் கொடுக்கவில்லையே என இரக்கமுறப் பாடியது.

11. வேல்கொடுத்தாய் திருச்செந்தூரர்க் கம்மியின் மீதுவைக்கக்
கால்கொடுத்தாய் நின்மண வாளனுக்குக் கவுணியர்க்குப்
பால்கொடுத்தாய் மதவேளுக்கு மூவர் பயப்படச்செங்
கோல்கொடுத்தா யன்னையே யெனக்கேதுங் கொடுத்திலையே.

உரை :—அன்னையே = தாயாகிய உமையம்மையே! திருச்செந்தூரருக்கு வேல் கொடுத்தாய் = நீ திருச்செந்தூரிலிருக்கும் முருகப்பெருமானுக்கு வேற்படையை அளித்தாய், அம்மியின்மீது வைக்கக் கால் கொடுத்தாய் நின் மணவாளனுக்கு = உனது கணவருக்குத் திருமணக்காலத்தில் அம்மியின் மீது தூக்கி வைத்தற்கு உன் காலினை யீந்தாய், கவுணியர்க்கு பால் கொடுத்தாய் = திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பாலளித்தாய், மதவேளுக்கு = மன்மதனுக்கு, மூவர் பயப்பட = மும்மூர்த்திகளும் பயப் படும்படியாக, செங்கோல் கொடுத்தாய் = நீதி செலுத்த அதிகாரம் அளித் தாய், எனக்கு ஒன்றும் கொடுத்திலையே = எனக்கு யாதும் தரவில்லையே, எ - று.

இவைகள் முடியாதெனப் பாடியது.

12. பொல்லாத மூர்க்கருக் கெத்தனைதான் புத்தி போதிக்கினும்
நல்லார்க் குண்டான குணம்வருமோ நடு ராத்திரியிற்

சல்லாப் புட்வை குளிர்தாங்குமோ நடுச் சந்தையினிற்
செல்லாப் பணஞ் செல்லுமோ தில்லைவாழுஞ் சிதம்பரனே.

உரை :—தில்லை வாழும் சிதம்பரனே = தில்லையில் கூத்தியற்றும் ஞான காச மானவனே! நடுராத்திரியில் சல்லாப் புடவை குளிர் தாங்குமோ = நள்ளிரவில் மெல்லிய உடையானது வாடைக் காற்றினைத் தடுக்கவல்லதோ, நடுச் சந்தையினில் செல்லாப் பணம் செல்லுமோ = சந்தையின் நடுவே செல்லாத காசினைச் செல்லவைக்க முடியுமோ, பொல்லாத மூர்க்கருக்கு எத்தனைதான் புத்தி போதிக்கினும் = தீய மூடருக்கு எவ்வளவுதான் அறிவுரை சொன்னலும், நல்லார்க்கு உண்டான குணம் வருமா = நற்குணத்தார்க்கு இயற்கையாகவுள்ள நல்லியல்பு ஏற்படுமா, எ - று.

வெற்றியிற் சிறந்த ரகுநாத வள்ளலைப் புகழ்ந்து பாடியது.

13. மூவேந்து மற்றுச் சங்கமும்போய்ப் பதின்மூன் றெடிரு
கோவேந்தரு மற்று மற்றெரு வேந்தன் கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றி லிலவம் பஞ்சாகப் பறக்கையிலே
தேவேந்திர தாரு வொத்தாய் ரகுநாத செயதுங்கனே.

உரை :—ரகுநாத செயதுங்கனே = ரகுநாத சேதிபதி யென்னும் வெற்றி வீரனே! மூவேந்தும் அற்று = தமிழ் நாட்டின் மூவரசரும் ஒழிந்து போய், சங்கமும் போய் = அவர் காலத்திலிருந்த தமிழ்ச் சங்கங்களும் ஒழிந்து பதின்மூன்றோடு எட்டு கோவேந்தரும் அற்று = இருபத்தொரு வள்ளல்களும் ஒழிந்து, மற்றெரு வேந்தன் கொடியும் அற்று = வேறு எந்த அரசரும் தருமம் செய்யாதிருக்கும் காலத்தில், பாவேந்தர் காற்றில் இலவம் பஞ்சாகப் பறக்கையிலே = கவி பாட வல்லவர்கள் புயலி லகப்பட்ட இலவம் பஞ்சுபோல ஆதரவற்று அலையுங் காலத்தில், தேவேந்திர தாரு வொத்தாய் = நீ கற்பக மரம்போல வேண்டுவோர்க்கு வேண்டுவது கொடுப்பாயாயினுய், எ - று.

குறிப்பு:—இருபத்தொரு வள்ளல்களாவார் : முதல் வள்ளல்கள் எழுவர் ; இடைவள்ளல்கள் எழுவர் ; கடைவள்ளல்கள் எழுவர் ஆகிய மூவகையாருங் கண்டு கொள்க.

திருச்செந்தூர் கந்தநாதன்மீது பாடியது.

14. முன்ன நின்னன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்திக்
கன்ன முங்கிள்ளிய நாளல்லவே யென்னைக் காப்பதற்கே
அன்னமு மஞ்ஞையும் போலிரு பெண்கொண்டு வாண்பின்னை நீ
இன்னமுஞ் சின்னவன் ருனே செந்தூரி லிருப்பவனே.

உரை:—செந்தூரில் இருப்பவனே = திருச்செந்தூரில் வீற்றிருக்கும் முருகப்பெருமானே! முன்னம் நின் அன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்

சி

ந்தி கன்னமும் கிள்ளிய நாள் அல்லவே=குழந்தைப் பருவமா யவதரித்த முன்னூரில் உன்னம்மை யுனக்குப்பா லூட்டிக் கண்ணுக்குமையிட்டு மூக்கைத் துடைத்துக் காதிற் கிள்ளிய பாலப்பருவம் இப்பொழுது உனக்கு இல்லையே, அன்னமும் மஞ்ஞையும் போல் இரு பெண் கொண்ட ஆண் பிள்ளை நீ= அன்னமும் மயிலும் போன்ற தெய்வயானை வள்ளியம்மை ஆகிய இரு மாதரை மணந்த ஆண்மகனுகிய நீ, என்னைக் காப்பதற்கு இன்னமும் சின்ன வன் தானே=அடியேனைப் பேணக் கூடாதபடி இன்னமும் சிறு குழந்தை யாகத்தா னிருக்கின்றாயோ, எ - று.

15. முற்கரையப் பரையேற விட்டாட்கொண் முதல்வ ருள்ளக்
கற்கரைக் கும்படி போதித்திடுங் கருணைக் கடலைச்
சிற்பரைக் குட்டியை யெங்குந் தித்திக்குஞ் செழுகரும்பின்
சர்க்கரைக் கட்டியைக் கண்டேன் செந்தூரெனுந் தானத்திலே.

உரை :—அப்பரை முன் கரையேற விட்டு ஆட்கொள் முதல்வர்=முன் னூளில் சமணர் கல்லொடு கட்டிக் கடலில் விட்ட திருநாவுக்கரசு நாயனரை கல்லிலே மிதந்து கரையேறும்படி செய்து ஆட்கொண்ட பெருமானது, உள்ள கல் கரைக்கும்படி=நெஞ்சமாகிய கல்லினை உருகச் செய்வதற்கு, போதித்திடும் கருணைக் கடலே=பிரணவ மந்திரப்பொருளை யுபதேசிக்கும் தயவுக் கடல் வடிவமான முருகனே, சிற்பரைக் குட்டியை=ஞான பராசக்தி யின் குமாரனே, எங்கெங்கும் தித்திக்கும் செழு கரும்பின் சர்க்கரைக் கட்டியை=எவ்விடத்திலும் மிகவும் இனிமை தரும் வளமான கரும்பினின் றெடுத்த சர்க்கரைக் கட்டிபோல்வானே, செந்தூர் எனும் தானத்திலே கண்டேன்=திருச்செந்தூர்த் திருப்பதியில் தரிசித்தேன், எ - று.

16. சின்னஞ் சிறுபிள்ளை செங்கோட்டுப் பிள்ளை சிவந்தபிள்ளை
பொன்னன் மணிப்பிள்ளை பூலோக மெங்கும் புகழும்பிள்ளை
சொன்னெஞ் சுழல்கின்ற சூரனை வென்றசொக் கேசர்பிள்ளை
வன்னக் கிளிப்பிள்ளை செந்திக் குறத்திக்கு மாப்பிள்ளையே.

உரை :—சின்னஞ் சிறு பிள்ளை=மிகுந்த இளம் பருவத்திலிருக்கும் பாலன், செங்கோட்டுப்பிள்ளை = திருச்செங்கோட்டில் வீற்றிருக்கும் குமரன், சிவந்த பிள்ளை=செங்நிறமான முருகன், பொன் நன்மணிப் பிள்ளை=பொன்னிலும் சிறந்த இரத்தினங்களிலும் அணி செய்யப் பெற்ற குழந்தை, பூலோகம் எங்கும் புகழும் பிள்ளை=நில வுலகில் யாவரும் துதிக்கின்ற குமரக் கடவுள், சொல் நெஞ்சு உழல்கின்ற=வார்த்தையும் மன மும் தடுமாறுகின்ற, சூரனை=சூரபன்மனை, வென்ற=ஜெயித்த, சொக்கேசர் பிள்ளை=சொக்கலிங்கப் பெருமானின் மகன், வன்னக்கிளிப் பிள்ளை = நல்ல நிறமுடைய கிளிப்பிள்ளை போன்ற, செந்திக் குறத்திக்கு = செந்திலி லிருக்கும் வள்ளி நாயகிக்கு, மாப்பிள்ளை=கணவராவார், எ - று.

திருமலைநாயக்கன் என்பவன் தன்னைச் சிறைக்கூடத்தில் விட்டபோது பாடியது.

17. நாட்டிற் சிறந்த திருமலையா துங்க நாகரிகா
காட்டில் வனத்திற் றிரிந்துழலாமற் கலைத் தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காச னென்னுமோர் பைங்கிளியைக்
கூட்டி லடைத்து வைத்தா யிரைதாவென்று கூப்பிடுதே.

உரை:—நாட்டில் சிறந்த திருமலையா = தேசத்திலுயர்ந்த பெயர்பெற்ற திருமலை நாயக்கரே! துங்க நாகரிகா = சிறந்த மரியாதையுடையவனே! கலைத் தமிழ் தேர் = தமிழ் நூல்களில் தேர்ச்சி பெற்ற, பாட்டில் சிறந்த = கவி பாடுவதில் வல்ல, படிக்காசன் என்னும் ஓர் பைங்கிளியை = படிக்காசுப் புலவராகிய பசுங்கிளிபோல்வாரை, காட்டில் வனத்தில் திரிந்து உழலாமல் = பூமியில் பரந்த பல விடங்களிலும் செல்ல ஒட்டாமல், கூட்டில் அடைத்து வைத்தாய் = சிறையில் வைத்தனை, இரைதா என்று கூப்பிடுதே = உணவு வேண்டுமென்று கேட்கின்றாரே, எ - று.

சீதக்காதி மரணமுற்றதைப்பற்றி மனந்தளர்ந்து பாடியது.

18. விண்ணுக்கு மண்ணுக்கும் பேராய் விளங்குதே வேந்த்ரனென்
கண்ணுக் கினியதுரை சீதக் காதி கமலநிகர் [னுங்
தண்ணுக் கிசைந்த வதனசந்த் ரோதய சாமியிந்த
மண்ணுக்குள் ளேயொளித் தான்புலவோர் முகம் வாடியதே.

உரை:—சீதக்காதி- சீதக்காதி வள்ளலானவர், விண்ணுக்கும் மண்ணுக்கும் பேராய் விளங்கு = வானுலகத்திலும் பூவுலகத்திலும் கீர்த்தியோடு திகழுகின்ற, தேவேந்திரன் என்னும் கண்ணுக்கு இனிய துரை = தேவேந்திரனென்று சொல்லத்தக்க அழகிய தோற்றமுடைய தலைவர், கமலம் நிகர் = தாமரை யொத்த, தண்ணுக்கு இசைந்த = குளிர்ச்சியுடைய, வதன சந்திரோதய சாமி = முகத்திலுல் நிலவொளி வீசும் எஜமான், இந்த மண்ணுக்குள்ளே ஒளித்தான் = பூமிக்குள்ளே மறைந்தான் (இறந்தான்), புலவோர் முகம் வாடியதே = (குளிர்ச்சியற்ற பயிர்போல்) கல்விமான்களுடைய முகம் கவலையினுல் வாட்டமடைந்தது, எ-று.

இதுவுமது.

19 மறந்தாகிலு மரைக்காசுங் கொடா மடமாந்தர் மண்மேல்
இறந்தாவ தென்ன விருந்தாவ தென்ன விறந்துவிண்போய்ச்
சிறந்தாருங் காயற் றுரைசீதக்காதி திரும்பி வந்து
பிறந்தாலொழியப் புலவோர் தமக்குப் பிழைப் பில்லையே.

உரை:—மறந்தாகிலும் அரைக்காசும் கொடா மடமாந்தர் = மறந்துங் கூட இரப்பார்க்கு அரைக்காசு கூட ஈயாத மூட மனிதர்கள், மண்மேல்

இறந்து ஆவது என்ன இருந்து ஆவது என்ன = பூமியில் செத்தாலும் வாழ்ந்தாலும் என்ன பயன், இறந்து விண் போய்ச் சிறந்து ஆளும் = இவ்வுலகை நீத்து விண்ணுலகஞ் சென்று அங்கே உயர்வு பெற்று ஆட்சி செய்கின்ற காயல் துரை சீதக்காதி = காயற்பட்டினத்துத் தலைவனுகிய சீதக்காதி வள்ளல், திரும்பி வந்து பிறந்தால் ஒழிய = மீள இவ்வுலகில் வந்தவதரித்தாலன்றி, புலவோர் தமக்கு பிழைப்பு இல்லையே = கல்விமான்கள் ஜீவிப்பதற்கு வேறு வழியில்லை, எ-று.

20. கல்லடிக்குமுளியிரண்டுகாதடிக்குளடிப்ப தெனக்கவிதைகேட்டுப் பல்லடிக்கக்கிடுகிடெனப்பறையடிக்கு நெஞ்சர்தமைப்பாடுவேனே வில்லடிக்கும்பிரம்படிக்குங்கல்லடிக்கும் விரும்பிநின்றமெய்யனீன்ற செல்லடிக்குந்தடவரையிற்சேறடிக்க வலையடிக்குஞ்செந்திலானே.

உரை :—வில்லடிக்கும் = (அர்ச்சுனன்) வில்லினுலடித்ததையும், பிரம்படிக்கும் = (பாண்டிய மன்னன் மண் சுமந்தபோது) பிரம்பாலடித்ததையும், கல்லடிக்கும் = (சாக்கிய நாயனுர்) கல்லாலெறிந்ததையும், விரும்பி நின்ற மெய்யன் = பிரியத்தோடு ஏற்ற மெய்ப்பொருளாகிய சிவபெருமான், ஈன்ற = தோற்றுவித்த, செல்லடிக்கும் தடவரையில் = மேகம் முழங்கும் விசாலமான குன்றுகளின்மேல், சேறு அடிக்க அலை அடிக்கும் = சகதி படும் படியாக அலை மோதுகின்ற, செந்திலானே = செந்திற் பதியுறைகின்ற முருகப் பெருமானே ! கவிதை கேட்டு = புலவர் பாடல்களைக் கேட்டு, கல் அடிக்கும் உளி இரண்டு காதடிக்குள் அடிப்பது என = கல்லைத் தகர்க்கின்ற உளியானது இரு செவிகளி னடியிலடிப்பதுபோல உணர்ந்து, பல் அடிக்கக் கிடுகிடு என = பல் கிடுகிடென நடுங்க, பறை அடிக்கும் நெஞ்சர் தமை = பாடினவர்கட்கு ஏதாவது ஈயவேண்டுமே என்றஞ்சிக் கலங்கும் மனமுடை மனிதரை, பாடுவேனே = நான் பாடமாட்டேன், எ-று.

போலிப் புலவர்களைப்பற்றிப் பாடியது.

21. குட்டுதற்கோபிள்ளைப்பாண்டிய னிங்கில்லைக்
குறும்பியளவாக்காதைக் குடைந்துதோண்டி
எட்டினமட்டறுப்பதற்கோ வில்லியில்லை
இரண்டொன்றுமுடிந்துதலை யிறங்கப்போட்டு
வெட்டுதற்கோகவியொட்டக் கூத்தனில்லை
விளையாட்டாக்கவிதைதனை விரைந்துபாடித்
தெட்டுதற்கோவறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும்புலவரெனத் திரியலாமே.

உரை:—குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கு இல்லை—விளையுக் கேற்ற விடை பகாதவரைத் தலையிற் குட்டிக் கண்டிப்பதற்குப் பிள்ளைப் பாண்டிய னென்பவன் இப்போது பூமியிலில்லை, குறும்பி அளவாக் காதைக்

குடைந்து தோண்டி எட்டினமட்டு மறுப்பதற்கோ வில்லி இல்லே=குற்ற முள்ள புலவர்களின் காதை அதிலுள்ள குறும்பிவரை குடைந்து கிண்டி கைக்கெட்டின அளவும் வெட்டுதற்கு வில்லிப்புத்தூரார்இல்லே, இரண்டு ஒன்ரு முடிந்து தலே இறங்கப் போட்டு வெட்டுதற்கோ கவி ஒட்டக் கூத்தன் இல்லே=குற்றமுடைய இருவர் தலேகளே ஒன்ரும் முடிந்து அவர்களேப் பலி யிடுதற்கு ஒட்டக்கூத்தர் இவ்வுலகிலில்லே, விளேயாட்டாக் கவிதைதனே விரைந்து பாடி=வேடிக்கையாகப் பாடல்களேத் தூரிதமாகப் பிழையோடு பாடி, தெட்டுதற்கோ=வய்ப்பதற்கோ, அறிவில்லாத் தரைகள் உண்டு= கல்வியறிவில்லாத எஜமான்க ளிருக்கிரூர்கள், (ஆதலால்) தேசம் எங்கும் புலவர் எனத் திரியலாகும்=நாடெங்கும் தக்க கல்வி யில்லாதவர்கள் தங்களேக் கல்விமான்களென்று கூறிக்கொண்டு சுற்றலாம், எ-று.

சொக்கநாதப் புலவர்

பாடியது

கறுப்பனென்னும் வள்ளலின் பெயரைச் சிறப்பித்துப் பாடியது.

1. சீர்கறுத்த முகிற்கரத்தான் கஸ்தூரி
பூபனருள் சேயாவென்று
மோர்கறுப்பு மில்லாத தொண்டவள
நாட்டிருக்கு முசிதவேளே
ஆர்கருப்ப னென்றுசொல்லி யழைத்தாலு
நாமுன்னே யன்பினுலே
பேர்கறுப்ப னிறஞ்சிவப்பன் கீர்த்தியினுல்
வெளுப்பனெனப் பேசுவோமே.

உரை:—கறுத்த முகில் சீர் கரத்தான்=கார்மேகம் போன்ற வண் மைப் புகழ்ச்சியுடைய கையாளுகிய, கஸ்தூரி பூபன் அருள் சேயா=கஸ்தூரி பூபதிபெற்ற மகனே! என்றும் ஓர் கறுப்பும் இல்லாத தொண்டைவள நாட்டிருக்கும்=எந்நாளிலும் ஒருவித குற்றமில்லாத செழிப்புடைய தொண்டைமண்டலத்திற் குடியிருக்கும், உசித வேளே=உயர்ந்த வேளா ளர்த் தலேவனே! ஆர் கறுப்பன் என்று சொல்லி அழைத்தாலும்=கறுப்ப னென்ற பெயரால் உன்னே யார் கூப்பிட்டாலும், நாம் உன்னே அன்பி னுலே=நான் உன்பால் வைத்துள்ள நேசத்தாலே, பேர் கறுப்பன்=போள வில் நீ கறுப்பன், நிறம் சிவப்பன்=நிறத்தினுல் சிவப்பானவன், கீர்த்தியி னுல் வெளுப்பன்=புகழினுல் வெள்ளேநிற முடையவன், எனப் பேசு வோமே=என்று கூறுவோம், எ-று.

இதுவுமது.

2. பிள்ளைவய தினிற்கல்வி கற்றேம் பின்பு
பெரியநர வாகனமும் பெற்றேம் பூமி
உள்ளளவுங் கீர்த்திநிலை நிறுத்திக் கொண்டோம்
ஒருகுறையு மில்லையினி யுரைப்பக் கேண்மோ
தெள்ளிலகு சிதம்பரத்தை தெரிசித் தோம்பின்
சேற்கருங்கட் டளவநகைத் தெய்வ யானை
வள்ளிபுணர் சிவப்பனையுந் துதித்தோ மெங்கள்
மாவைவளர் கறுப்பவுன்னை வாழ்த்தி னேமே.

உரை :—பிள்ளை வயதினில் கல்வி கற்றேம் = இளமையிற் கல்வி பயின்றேம், பின்பு பெரிய நாவாகனமும் பெற்றேம் = கல்வியின் பயனாக மனிதர் தாங்கிச் செல்லும் பெரிய பல்லக்கும் ஏறப்பெற்றேம், பூமி உள்ளளவும் கீர்த்தி நிலை நிறுத்திக் கொண்டோம் = உலக மிருக்கும்வரை நிலைக்கக் கூடிய புகழை நிலையுண்டாக்கிக் கொண்டோம், ஒரு குறையும் இல்லை....., இனி உரைப்பக் கேண்மோ = இனிமேல் கூறுவதைக் கேட்பீராக! தெள் இலகு சிதம்பரத்தைத் தெரிசித்தோம் = தெளிவோடு விளங்குகின்ற சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள நடேசரைக் கண்டு வணங்கினேம், பின் சேல் தவள நகை = சேல் மீன் போன்ற பெரிய கண்ணையும் வெள்ளிய பற்களையு முடைய, தெய்வயானை வள்ளி புணர் சிவப்பனையும் துதித்தோம் = தெய்வ யானை யம்மையையும் வள்ளி நாயகியையும் மணந்த செங்கிறப் பெருமானையும் ஏத்தினேம், எங்கள் மாவை வளர் கறுப்ப உன்னை வாழ்த்தினேமே = மாவைப்பதியில் வாழ்ந்து எங்களை ஆதரிக்கும் கறுப்ப வள்ளலே! உன்னைப் புகழ்ந்தோம், எ-று.

திருவேங்கடராயனையும், ஸ்ரீராமனையும், கறுப்பண்ண
னென்பவனையும் புகழ்ந்து பாடியது.

3. எல்லப்ப னம்மையப்பன் றருதிருவேங்
கடராம னெழிற் சீராமன்
வல்லக்கொண் டமனுடனே மாதைவெங்க
டேசனைப்போல் வரிசைதந்தான்
செல்லத்தம் பியருடனே மாவையில்வாழ்
கறுப்பண்ணன் றெருவீதிக்கே
பல்லக்குத் தான்சுமந்தா னதுநமக்கோ
ராயிரம்பொன் பரிசுதானே.

உரை:—எல்லப்பன் அம்மையப்பன் தரு திருவேங்கட ராமன் = எல்லப்பனுக்கிய அம்மையப்பனென்பவர் பெற்ற திருவேங்கட ராமன், எழில்

சோமன் = வனப்புடைய சோமன், வல்லக்கொண்ட மன் உடன்.....(என்னு மிவர்களோடு கூடிய) மாவை வேங்கடேசனைப்போல் வரிசை தந்தான் = மாவைப்பதியில் வாழ்ந்த வேங்கடேசனென்னும் வள்ளல் என்பவர்களைப் போலப் பரிசு வகைகளை அளித்தான், செல்வத் தம்பியருடன் மாவையில் வாழ் கறுப்பண்ணன் = பொருள் வளமுடைய சகோதரரோடு மாவையில் குடியிருக்கும் கருப்பண்ண வள்ளலென்பவன், (பரிசளித்ததோடு அமையாது) தெரு வீதிக்கே = விசாலமான தெருவுக்கு வருமளவும், பல்லக்குத் தான் சுமந்தான் = சிவிகையையும் தாங்கி வந்தான், அது நமக்கு ஓர் ஆயிரம் பொன் பரிசுதானே = அவ்வாறு அவன் செய்தது நமக்கு ஓராயிரம் பொன் னைப் பரிசளித்தது போலாகும், எ - று.

திருச்செங்காட்டுப் பெருமானைப் பாடியது.

4. மெய்யிலே யொருபாதி யுமைக்களித்த
செங்காட்டு விமலனுரே
மையிலே தோய்ந்தவிழிச் சந்தனமான்
றலைக்கரியை வளமாயாவி
நெய்யிலே தான்சமைத்துக் கொடுத்திருந்தும்
படைத்திருந்து நீர்தானின்று
கையிலே மழுவெடுத்தாற் பொய்யாமோ
பிள்ளைகொன்ற களவுதானே.

உரை :—மெய்யிலே ஒருபாதி உமைக்கு அளித்த செங்காட்டு விமலனுரே = திருமேனியிலே பேர்பாதியாகிய இடப்பாகத்தைப் பார்வதிக்குத் தந்தருளின திருச்செங்காட்டங் குடியில் வாழும் குற்ற மற்ற பெருமானே! மெய்யிலே தோய்ந்த விழிச் சந்தனமான் = மைதீட்டிய கண்களையுடைய சந்தன நங்கை யென்பவள், தலைக் கறியை = (சிறுத்தொண்டர் அறுத்துச் சமைத்த) பிள்ளையின் தலைக்கறியை, வளமா = செழிப்பாக, ஆவின் நெய்யிலே தான் சமைத்துக் கொடுத்திருந்தும் = பசுவின் நெய்யிலே கலந்து தயார் செய்துகொடுத்தும், படைத்திருந்தும் = இலையிலிட்டும், (அதனோடு திருப்தியடையாமல்) நீர்தான் இன்று கையிலே மழு எடுத்தால் = இன்றைக்கும் நீர் உமது திருக்கரத்திலே மழுவை வைத்திருந்தால், பிள்ளை கொன்ற களவுதானே பொய்யாமோ = சிறுத்தொண்டர் பிள்ளையைக் கொல்லும்படி செய்த வஞ்சகம் மறைந்து போமா ? எ - று.

இதுவுமது.

5. துப்பரையு மரகதத்தின் கொழுந்தரையு
மொன்றுகத் துலங்குமெய்யா
செப்பரிய புலியதனைத் தரிக்குமுத்த
ராபதியிற் சிவனேநீதான்

அப்பரையும் விழுங்கியொரு பிள்ளையுந்
தின்றுற்று மலையோவின்னுங்
கப்பரையுங் கையுமாய்ப் புறப்பட்டாய்
நல்லதிருக் காட்சிதானே.

உரை:—தப்பரையும் = பவழமும், மாகதத்தின் கொழுந்தரையும் = பச்சையின் கொழுந்தும், ஒன்றுகத் துலங்கும்மெய்யா = ஒன்று சேர்ந்து திகழுகின்ற திருவடிவத்தை யுடையவனே! செப்பு அரிய புலி அதனைத் தரித்தும் = கூறமுடியாத வலிமையுடைய புலியின் தோலை யுடையாகத் தரித்த, உத்தரா பதியில் சிவனே = உத்தராபதியில் வீற்றிருக்கும் பரம சிவனே! அப்பரையும் விழுங்கி திருநாவுக்கரசு நாயனாரையும் உட்கொண்டு, ஒரு பிள்ளையும் தின்று = சிறுத்தொண்டர் பிள்ளைக்கறியையும் அருந்தி, ஆற்றமல் = பசிதீராமல், ஐயோ இன்னும் கப்பரையும் கையுமாய்ப் புறப்பட்டாய் = யாரும் இரங்கும்படி கையில் பிச்சைப் பாத்திரத்துடன் வெளியே எழுந்தருளினீர், நல்ல திருநாட்சிதானே = இது அழகான திருக்கோலந் தான், எ — று.

திருக்கழுக்குன்றப் பெருமான்மீது பாடிய நிந்தாஸ்துதி.

6. அடிபட்டீர் கல்லாலு மெறிபட்டீ
ரத்தனைக்கு மாளாயந்தப்
படிபட்டும் போதாம லுதைபட்டீ
ரிப்படியும் படுவாருண்டோ
முடிபட்ட சடையுடையீர் கழுக்குன்றீர்
முதற்கோணன் முட்டக்கோண
லிடிபட்டும் பொறுத்திருந்தீர் சிவசிவா
வுமைத்தெய்வ மென்னலாமே.

உரை:—அடிபட்டீர் = (பிரம்பினுற் பாண்டியன் கையில்) அடி வாங்கினீர், கல்லாலும் எறியப்பட்டீர் = (சாக்கிய நாயனாருடைய) கல்லினால் தாக்கப்பட்டீர், அத்தனைக்கும் ஆளா அந்தப் படிபட்டும் போதாமல் = அவ்வளவு துன்பத்திற்கும் உட்பட்டு அவ்வளவு பாடுபட்டும் காணுமல், உதை பட்டீர் = கண்ணப்பர் காலால் உதையும் வாங்கினீர், இப்படியும் படுவார் உண்டோ = இவ்வாறு துன்பப்படுகிறவர்களும் உலகத்தில் உண்டா, முடி பட்ட சடை யுடையீர் = கிரீடம் வடிவாக அமைந்த சடையினை யுடையவரே! கழுக்குன்றீர் = திருக்கழுக்குன்றப் பெருமானே! முதல் கோணல் முட்டக் கோணல் = முதலிலிருந்த சீர்கேடு முற்றிலுஞ் சீர் கேடாவதற்குக் காரணமாயிற்று, இடிபட்டும் பொறுத்திருந்தீர் = (திருக்கழுக்குன்றில் இந்திரன் செய்யும்) இடி யபிஷேகத்தையும் தாங்கி இருந்தீர், சிவ சிவா = ஐயோ! உமைத் தெய்வம் என்னலாமே = உன்னைக் கடவுளென்று கூறலாமோ, எ-று.

சிதம்பரம் நடராஜப் பெருமானைப் பாடியது.

7. செல்லாரும் பொழில்புடைதூழ் புலியூரம்
பலவாண தேவாவும்மைக்
கல்லாலும் வில்லாலுஞ் செருப்பாலும்
பிரம்பாலுங் கடிந்துசாடும்
எல்லாரு நல்லவரென் றெண்ணியரு
ளீந்ததென்ன விகழ்ச்சியொன்றும்
சொல்லாமன் மலரால்விட் டெறிந்தவனைக்
காய்ந்ததென்ன சொல்லுவீரே.

உரை:—செல் ஆரும் பொழில் புடை சூழ்=மேகமண்டலத்தைப் பொருந்துகின்ற சோலைகள் அருகிற் சூழ்ந்திருக்கும், புலியூர் அம்பலவாண தேவா=புலியூ ரெனப்படும் சிதம்பரத்தில் நடனஞ் செய்யும் சபாநாயகராகிய கடவுளே! உம்மைக் கல்லாலும் வில்லாலும் செருப்பாலும் பிரம்பாலும் கடிந்து சாடும்=உம்மைச் சினந்து கல் வில் செருப்பு பிரம்பு முதலியவற்றால் தாக்கிய, எல்லாரும் நல்லவர் என்று எண்ணி=யாவரும் தக்கவர்களென்று மதித்து, அருள் ஈந்தது என்ன=திருவருள் பாலித்தது என்ன காரணத்தினால் என்று கூறுக! இழ்ச்சி ஒன்றும் சொல்லாமல்=நிந்தனை உரையாதுங் கூறாமல், மலரால் விட்டு எறிந்தவனை=உன்மேல் பூவைச் செலுத்தி விடுவித்தவனை, காய்ந்தது என்ன=கோபித்து அழித்தது என்ன காரணம் கூறுக, எ-று.

சிவபெருமான்மீது நிந்தாஸ்துதியாகப் பாடியது.

8. நல்லாளே யிடமருவுந் தியாகையா
வுமதிடத்தினி யாயங்காணும்
கல்லாலே யெறிந்தோர்க்குஞ் செருப்படியா
லுதைத்தோர்க்குங் கடிந்துபோரில்
வில்லாலே யடித்தோர்க்குங் கொடுத்தீரே
யல்லாமல் விழிநீர்சோர
எல்லாமுன் செயலென்றே யிருப்போருக்
கியாதேனு மீகிலீரே.

உரை:—நல்லாளே இடம் மருவும் தியாகையா=நன்மைமிக்க பார்வதி இடப்பாகத்தில் தங்கப்பெற்ற தியாகராசப் பெருமானே! உமது இடத்தில் நியாயம் காணும்=உம்பால் நடுவு நிலைமை பார்க்க முடியவில்லை, (எனெனில்) கல்லாலே எறிந்தோர்க்கும்=கல்லினால் தாக்கிய சாக்கிய நாயனார்க்கும், செருப்பு அடியில் உதைத்தோர்க்கும்=செருப்போடு கூடிய பாதத்தை யுன் மீது வைத்த கண்ணப்பருக்கும், கடிந்து போரில் வில்லாலே அடித்தோற்

கும்=சினந்து சண்டையில் வில்லினால் தாக்கிய விசயனுக்கும், கொடுத்தீரே அல்லாமல்=அருளளித்தீரே அன்றி, விழிநீர் சோர=கண்ணீர் சிந்தி, எல்லாம் உன் செயல் என்றே இருப்போர்க்கு=எல்லாச் செயல்களும் உம் மாலே ஆவதென்று நினைத்திருப்பவர்களுக்கு, யாதேனும் ஈகிலீரே=எதுவும் தாராதிருக்கின்றீரே, எ-று.

திருவெண்காட் டிறைவரைப்பற்றிப் பாடிய சிலேடை.

9. பண்காணுந் தமிழ்ப்புலவீ ரினத்தோடே
யினஞ்சேரும் பரிசேபோலத்
தண்காவி மலர்த்தடஞ்சூழ்க் காவிரிநாட்
டொருபுதுமை சாற்றக்கேளீர்
கண்காண நரையான்மேல் வெண்காடை
வீற்றிருக்கக் கண்டோமந்த
வெண்காடை யிடப்புறத்தே பச்சையன்னங்
கலந்திருக்கும் விதங்கண்டோமே.

உரை:—பண் காணும் தமிழ்ப் புலவீர்=பண்ணினியல்பை யறிந்த தமிழ்ப் பாவலர்களே! இனத்தோடே இனம் சேரும் பரிசேபோல= "இனம் இனத்தோடே" என்னும் பழமொழிக்கிணங்க, தண் காவி மலர்த் தடம் சூழ்=குளிர்ந்த நீலோற்பலப் பூக்களுள்ள பொய்கைகள் சுற்றி யிருக்கப் பெற்ற, காவிரி நாட்டு ஒரு புதுமை சாற்றக்கேளீர்=காவிரி பாயும் தேசத்தி லுள்ள ஒரு அதிசயத்தைக் கூறக் கேளுங்கள்! கண்காண நரையின்மேல்= கோலே காணும்படி மீன் குத்திப் புள்ளின்மீது அல்லது வெள்ளைக் காளை யின்மீது, வெண்காடை வீற்றிருக்கக் கண்டோம்=வெள்ளை நிறமுடைய காடை தங்கியிருப்பதைப் பார்த்தோம் அல்லது திருவெண்காட்டுத் தலைவ ராகிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கத் தரிசித்தோம், அந்த வெண் காடை இடப்புறத்தே=அந்த வெள்ளை நிறமான காடைக்கு இடப்பாகத்தில் அல்லது அந்த வெண்காட்டுப் பெருமானது இடப்பாகதத்தில், பச்சை அன்னம் கலந்திருக்கும் விதம் கண்டோமே=பச்சை நிறமான அன்னம் உடனிருக்கும் முறையைப் பார்த்தோம் அல்லது பச்சை நிறமுடைய அன்னம்போன்ற அம்மை இசைந்திருக்கும் முறையைப் பார்த்தோம், எ-று.

வறுமையைப் பற்றியது.

10. இந்திரன் கலையா யென்மருங் கிருந்தா
னக்கினி யுதரம்விட் டகலான்
இயம னெனைக்கருதா னரனெனைக் கருதி
நிருதிவந் தென்னையென் செய்வான்
அந்தமாம் வருணனிரு கண்விட் டகலா
னகத்தினின் மக்களும் யானும்

அநிலம தாகும முதினைக் கொள்வோம்
யாரெதி ரெமக்கு ளாருலகில்
சந்ததமிந்த வரிசையைப் பெற்றுத் தரித்திர
ராஜனை வணங்கித்
தலைசெயு மெம்மை நிலைசெய்சற்கீர்த்திச்
சாளுவ கோப்பைய னுதவும்
மந்தர புயத்தான் றிப்பைய ராயன்
மகிழ்வொடு விலையிலா வன்னேன்
வாக்கினற் குபேர னுக்கினு னவனே
மாசிலீ சான பூபதியே.

உரை :—இந்திரன் கலையாய் என் மருங்கு இருந்தான் = ஆயிரங்கண்ணுடைய தேவேந்திரன் கிழிசலையுடைய ஆடையாகி என்பாலிருந்தான், அக்கினி உதரம் விட்டு அகலான் = நெருப்புத்தேவன் என்னுடைய வயிற்றை விட்டுப் போகமாட்டான் (பசி எப்போதும் இருந்தது) இயமன் எனை அரன் எனக் கருதி கருதான் = என்னைச் சிவனென்றெண்ணி எமன் என்னிடம் வர நினையான், (என்னை ஏழை என்றெண்ணினான்) நிருதி வந்து என்னை என் செய்வான் = நிருதி திக்குப் பாலகனாகிய அரக்கன் என்னிடம் வந்து என்ன செய்ய முடியும், அந்தமாம் வருணன் இரு கண் விட்டு அகலான் = அழகான கீர்க்கடவுள் இரண்டு கண்களையும் விட்டுப்போக மாட்டான், (கண்ணீர் எப்போதும் ஒழுகிக்கொண்டிருந்தது) அகத்தினில் மக்களும் யானும் = வீட்டில் பிள்ளைகளும் நானும், அநிலமதாகும் அமுதினைக் கொள்வோம் = காற்றாகிய உணவைப் புசிப்போம், எமக்கு யார் எதிர் உளார் உலகில் = பூமியில் எங்களுக்கு ஒப்பாக எவர் உண்டு, சந்ததம் இந்த வரிசையைப்பெற்று = எந்நாளும் இவ்வகையான சிறப்பையடைந்து, தரித்திர ராசனை வணங்கி = வறுமை யென்னும் தலைவனை வழிபட்டு, தலை செயும் எம்மை = அவனுக்குப் பணியும் எங்களை, நிலைசெய் நற்கீர்த்தி = நிலைபெற்ற நற்புகழுடைய, சாளுவ கோப்பையன் உதவும் = சாளுவகோப்பையன் பெற்ற, மந்தர புயத்தான் திப்பைய ராயன் = மந்தர மலைபோன்ற கைகளையுடைய திப்பையராயனென்னும் வள்ளல், மகிழ்வொடு = களிப்புடனே, விலை இலா அன்னேன் வாக்கினுல் = மதித்தற்கரிய தன்னுடைய உத்தரவுச் சொல்லால், குபேரன் ஆக்கினான் = செல்வக் கடவுளாகச் செய்தான், அவனே மாசு இல் ஆன பூபதியே = அவனே குறைவில்லாத வடகிழக்குத் திசைக்கு அதிபதியாக கடவுள் போல்பவன், எ-று.

11. வண்டுகிண்டி தொங்கலோதி குணக்கெழுந்திடு மனிலமோ
மன்னுநூபுர மோபயோதர மூருவாலவர் கணிகையோ
அண்டர்பூபதி வனிதையோமுக மமுதவாயிதழ் தும்பியோ
அரிகையாயுத மோபிறந்திட மன்னவென்ன வுலாவுவீர்

கொண்டநண்பு முதாரமுந்தவ ருதகோகன கானனன்
குத்திபல்லவ ராயமேருகு ஞளதிப்பையன் வரையின்மேல்
துண்டவெண்பிறை வேணிகைச்சிலை நாணெனப்புக லாவிடின்
தூரமோவதி பாரமோவொரு சேரனுக்கொரு தொங்கலே.

உரை :—கொண்ட நண்பும் உதாரமும் குறையாத=யாரிடத்திலும் செய்யும் சிநேகிதத்திலும் தயாளத் தன்மையிலும் குறைவுபடாத கோகனக ஆனனன்=தாமரை போன்ற திருமுக முடையவனும், குத்தி பல்லவராய= குத்தி பல்லவராய னெனப்படுபவனும், மேரு குணை=மேரு மலைபோன்ற நல்லியல்புடையவனுமாகிய, திப்பையன் வரையின்மேல்=திப்பைய ராய னென்னும் வள்ளலின் குன்றினிடத்தே, அன்னம் என்ன உலாவுவீர்= அன்னப் பறவைபோல் நடக்கின்ற பெண்ணே! வண்டு கிண்டிய தொங்க லோதி=வண்டுகள் சிறகால் தடவி நெகிழ்கின்ற மலர்மாலை யணிந்த உன் குழலானது, குணக்கு எழுந்திடும் அகிலமோ=கிழக்கே தோன்றுகின்ற காற்றுகிய கொண்டலோ (அல்லது மேகமோ), பயோதரம் மன்னு நூபு ரமோ=உன்னுடைய முலைகள் நிலையான சிலம்போ (அதாவது மலையோ) ஊரு வானவர் கணிகையோ=உன் துடையோ அரம்பையோ (அதாவது வாழைத்தண்டோ), முகம் அண்டர் பூபதி வனிதையோ=உன் முக மானது இந்திரனது மனைவியாகிய சசியோ (அதாவது சந்திரனே), அமுத வாய் இதழ் தும்பியோ=அமுதம் ஊறும் உனது உதடானது வண்டோ (அதாவது தேனே), பிறந்திடம் அரி கை ஆயுதமோ=நீ பிறந்த இடம் விண்டுவின் கையிலுள்ள ஆழியோ (அதாவது திருப்பாற் கடலோ) துண்ட வெண்பிறை வேணி கைச்சிலை நாண் எனப் புகலாவிடின்=வெள்ளிய பிறைத் துண்டை யணிந்த சிவன் கை வில்லின் நாணுகிய வாசுகி என்று நீ கூறுவிடில் (அதாவது வா, சுகத்தை யனுபவி யென்று கூறுவிடில்), சேரனுக்கு ஒரு தொங்கல்=சேர மன்னன் மாலையாகிய பனம்பூ (அதாவது பனைமடலால் ஆக்கப்பட்ட குதிரை) தூரமோ அதி பாரமோ=எனக்குத் தூரமும் ஆவதில்லை அதிகச் சுமையாகவும் ஆவதில்லை (மடலேறுவேன் என்பது கருத்து), எ - று.

குறிப்பு :—மடலேறுத லென்பது பனங் கருக்காற் செய்த குதிரை யேறித் தான் விரும்பிய பெண்ணின் படத்தை அதன்மீது வைத்துப் பார்த் துக் கொண்டிருத்தல். அப்போது கண்டவர்கள் பனங்கருக்கால் மடலூர்ந் தவன் உடம்பைகீறின் வெண்ணீர் தோன்றின் அவனுக்கு அவன் விரும் பிய பெண்ணை மணஞ் செய்வித்தல் மரபு.

ஊழ்வினை விடாதென ஆலவாய்ப் பெருமானை நோக்கிப் பாடியது.

12. சந்திரனுக் குடலூனந் தனதனுக்கோர்
கண்ணூனந் தருவினீழல்

இந்திரற்கோ பகக்குறியா மியமனுக்கோ
புழுக்காலா மிரவியீன்ற
மைந்தனுக்கோ கான்முடமாம் வனசனுக்கோர்
தலைகுறையாய் வாழ்வரானுற்
பந்தமுள மானிடரை விதிவிடுமோ
வாலவாய்ப் பதியுளானே.

உரை :—ஆலவாய் பதியுளானே = மதுரைத் திருப்பதியில் வீற்றிருக்கும் கடவுளே ! சந்திரனுக்கு உடல் ஊனம் = சந்திரனுக்கு உடம்பில் மறுவும் கூனலும் ஆகிய குற்றங்களுள்ளன, தனதனுக்கு ஓர் கண் ஊனம் = குபேரனுக்கு ஒரு கண் குருடு, தருவின் கீழல் இந்திரற்கோ = கற்பக மரத்தின் நிழலிலிருக்கும் இந்திரனுக்கு, பகக் குறியாம் = உடம்பெங்கும் பெண் குறி வடிவாம், இயமனுக்கோ புழுக்காலாம் = எமனுக்குக் காலில் புழுப்பற்றியுள்ளது, இரவி ஈன்ற மைந்தனுக்கோ கால் முடமாம் = பகலவன் பெற்ற பிள்ளையாகிய சனிக்கு ஒரு கால் ஊனம், வனசனுக்கோர் தலை குறையாம் = அயனுக்கு ஒருதலை கிள்ளப்பட்டுக் குறைந்தது, வரலாறு ஈதே = இது சரித்திரமானால், பந்தம் உள மானிடரை விதி விடுமோ = பாசபந்தத்தில் அகப்பட்ட மக்களை ஊழ் விட்டுவிடுமா ? (விடாது), எ - று.

சொக்கநாதப் புலவர் தட்டாஞ்சிய அரிஹர புத்திரனைக் கடிந்து பாடியது.

13. அட்டாவ தானமுந் தொல்காப் பியமு மகப்பொருளும்
தொட்டாதி தொட்டப்ர பந்தமெல்லாம் நம்மைச் சொல்லச்சொல்
ஒட்டாரங் கட்டிநம் பல்லக்குக் கொம்பை யொடித்தெறிந்த [லி
தட்டாரப் பைய லரிகர புத்ரனைச் சண்ணினனே.

உரை :—அட்டாவதானமும் = எட்டுக் காரியத்தை ஒரே சமயத்திற் பார்க்கும் திறமையும், தொல்காப்பியமும் அகப்பொருளும் = தொல்காப்பிய நூல் இறையனாரகப் பொருள் நூல் என்பன, தொட்டு = தொடங்கி, ஆதி தொட்ட பிரபந்தமெல்லாம் = ஆதியில் தொடங்கிய இலக்கியங்களெல்லாவற்றையும், நம்மைச் சொல்லச் சொல்லி = கூறும்படி நம்மை வற்புறுத்தி, ஒட்டாரம் கட்டி = முரட்டுத்தனம் பண்ணி, நம் பல்லக்குக் கொம்பை ஒடித்து எறிந்த = நம் சிவிகையின் முனையைப் பிடுங்கி வீசிய, தட்டாரப் பையல் அரிஹர புத்திரனே = தட்டான்சாதிச் சிறியவனாகிய அரிஹர புத்திரனென்பவனே, சண்ணினனே = வெண்ணு தாக்கினேன், எ - று.

14. பண்டனைப் பண்டனை யோதுபெம் மானைப் பனிவரைக்கோர்
தண்டனைத் தண்டனை செய்யுமுத் தண்டனைத் தண்டனைமு

தண்டனே யண்டர் தொழுந்திரு மாற்பே றமர்ந்தமணி
கண்டனைக் கண்டனே யாயினெஞ் சேமுத்தி கண்டனேயே.

உரை:—நெஞ்சே = உள்ளமே! பண்டனே = பழமையான தெய்வத்தை, பண் தளை ஒது பெம்மானே = பண்ணெடு கூடிய பாடலைப் பாடும் கடவுளை, பனிவரைக் கோதண்டனே = மேருமலையை வில்லாக வளைத்தவனை, தண்டனே செய்யும் உத்தண்டனே = தீயவர்களை ஒறுக்கும் உக்கிர மூடைய வனே! தண்டனே = தண்டாகிய மழுவாயுத முடையவனை, மூது அண்டனே = உலகங்களுக்கு அதிபதியை, அண்டர் தொழும் திருமாற்பேறு அமர்ந்த = விண்ணவர் வழிபடும் திருமாற்பேறு என்னும் தலத்திற் கோயில் கொண்ட, மணி கண்டனே = நீலகண்ட பெருமானே, கண்டனேயாகில் = தரி சித்தாயாலல், முத்தி கண்டனேயே = வீடடைந்தவனாவை, எ - று.

15. துளைபடு மாமர மோரேழு மெய்தவன் றூதுகவி
உளைபடு வாரிதி யொன்றே கடந்த தொளிர்தரள
வளைபடு வாவி மணவைமன் கூத்தன் வகுத்தகவி
தளைபடு காலுட னேகட லேழையுந் தாண்டினதே.

உரை :—துளைபடு மாமரம் ஓர் ஏழும் எய்தவன் = அம்பினால் துளைக்கப் படுதற்குரிய ஒப்பற்ற பெரிய ஏழு பெரிய மாமாமத்தையும் ஒரு அம்பினால் எய்து வீழ்த்திய இராமபிரானுடைய, தூது கவி = தூதனாகிய அனுமா னென்னும் குரங்கு, உளைபடு வாரிதி ஒன்றே கடந்தது = சேற்று மண் ணுடைய ஒரு சமுத்திரத்தையே தாவிச் சென்றது, ஒளிர் தரள = விளங்கு கின்ற முத்துக்களையுடைய, வளைபடு வாவி = சங்குகள் இருக்கும் பொய்கை யுள்ள, மணவை மன் கூத்தன் = மணவைப்பதிக்குத் தலைவனாகிய ஒட்டக் கூத்தன், வகுத்த கவி = இயற்றிய பாட்டானது, தளைபடு காலுடனே = தளையென்னும் செய்யுளுறுப்பு அமைந்த அடியோடு கடல் ஏழையும் தாண்டினதே = ஏழு கடலையுந் தாவிச் சென்றது (பகழ் உலகெங்கும் பரவிற் றென்பது கருத்து) எ - று.

குறிப்பு :—தளைபடு காலென்பது விலங்கு பூட்டிய பாதமென்று தொனிப் பொருளுடையது.

16. துங்கா தராதல மெங்கு மொருமிக்கத் துய்த்தநர
சிங்கா தராதரந் தானறிந் தேனல்கச் சேலம்வந்த
கெங்கா தராநின் புகழ்கேட் டசைப்பன் கிரீடமென்றே
வெங்கா தராவுக்குச் செய்தா னிலைமலர் வேதத்தனே.

உரை :—துங்கா = சிறந்தவனே! தராதலம் எல்லாம் ஒருமிக்க துய்த்த = உலக முழுவதையும் ஒருங்கு உட்கொண்ட, நரசிங்கா = நரசிங்கம் போன்ற கீர்த்தி யுடையவனே! தராதரம் தானறிதே கல்ல = புலவர்க ளுடைய தாரதம்மியம் தெரிந்து அதற்கேற்ற பரிசு அளிக்க, சேலம் வந்த கெங்காதரா = சேலத்தில் தோன்றிய கங்காதரனென்னும் வள்ளலே! நின்

புகழ் கேட்டு=உன் பெருமையை அறிந்து, கிரீடம் அசைப்பன் என்றே= ஆதிசேஷன் தன்னுடைய முடியை அசைப்பானென்று கருதி, மலர் வேதத்தன்=தாமரைப் பூவில் தங்கும் அயன், அராவுக்கு=ஆதிசேஷனுக்கு, வெம் காதல் = விருப்பமான செவியை, செய்தான் இலை=உண்டாக்க வில்லை, எ - று.

17. புரசை வடமலை யப்பாவி நட்கயம் பூண்டுகொண்டு
முரசை வடமலை யப்பாலுஞ் செல்ல முழக்கஞ்செய்தோய்
சிரசை வடமலை யப்பாம்பின் வைத்துத் திருக்கண்வளர்
இரசை வடமலை யப்பாவிப் பாருக்கோ ரிந்திரனே.

உரை:—புரசை வடம் அலைய = கழுத்திலிட்ட கயிறு அசையும்படியாக, பாவு இருள் சுயம் பூண்டுகொண்டு=பரவிய இருள்போன்ற யானைமேலேறிச் சென்ற, வடமலை அப்பாலும் செல்ல, இமய மலைக்கு அப்பாலும் ஒலி கேட்கும்படியாக, முரசை முழக்கம் செய்தோய்=கொடை முரசை அடிக்கச் செய்தவனே! சிரசை=தலையை, வடம்=ஆலிலையிலும், அலை= திருப்பாற்கடலிலுள்ள, அப் பாம்பில் வைத்து=அந்தப் பாம்பாகிய ஆதி சேஷன்மீதும் வைத்து, திருக்கண் வளர்=துயில்கின்ற திருமாலையொத்த, இரசை வடமலை யப்பா=இரசைப்பதியில் வாழும் வடமலையப்ப வள்ளலே! இப்பாருக்கோர் இந்திரனே=இந்த உலகத்தில் ஒப்பற்ற இந்திரனாக இருக்கின்றாய், எ - று.

18. சோதிச் சவரி விழிக்கோ கரவில்லை தூயகுழல்
கோதிச் சவரி முடிக்கரி யாள்கொண்ட கோலமென்னே
நீதிச் சவரிப் பெருமாளென் ரேதி நினைந்துருகப்
போதிச் சவரி வட்கா யாரறிகின் பூங்கொடியே.

உரை:—பூங்கொடியே = அழகிய பூங்கொடிபோன்ற தோழியே! (எமது மகளின்) சோதிச் சவரி விழிக்கோ கரவு இல்லை=ஆராய்ந்து படைக்கப் பெற்ற செவ்வரியுடைய கண்களிற் கபடமில்லை, தூய குழல் கோதி= புனிதமான தலையை வாரி, சவரி முடிக்க அறியான்=சவரி வைத்து முடிப்பதற்குத் தெரியமாட்டாள், கொண்ட கோலம் என்னே = அவள் பூண்ட வேடம் யாதாயிற்று, நீதி சவரிப் பெருமாள் என்று ஓதி=நீதியான சவரி நாராயணனே என்று கூறி, நினைந்து உருகப் போதிச்சவர்=எண்ணி மனம் உருகும்படியாக அவளுக்குக் கற்பித்தவர்கள், இவட்கு ஆர் அறிகிலன்= இவளுக்கு எப்படிப்பட்ட தொடர்புடையவரென்று தெரிந்திலேன், எ-று.

19. சொல்லுக் கினிய கழுக்குன்றரே யுமைச் சொல்லவென்ரூல்
அல்லற் பிழைப்புப் பிழைத்துவிட்டீர் முப்பு ராதியர்மேல்
வில்லைக் குனித்தெய்ய மாட்டாம னீரந்த வேளைதனிற்
பல்லைத் திறந்து விட்டி ரிதுவோ நும் படைத்தொழிலே.

உரை :—சொல்லுக்கு இனிய கழுக்குன்றரே = பேசுவதற்கு இன்பந் தருகின்ற திருக்கழுக்குன்றப் பெருமானே! உமைச் சொல்ல என்றால்= உம்மைப்பற்றிப் பேசுவதானால், அல்லல் பிழைப்பு பிழைத்து விட்டீர்= துயரமான வாழ்க்கை வாழ்ந்தீர், முப்புராதியர் மேல்=திரிபுரத் தலைவர்கள் மீது, வில்லைக் குனித்து எய்ய மாட்டாமல்=வில்லை வளைத்து அம்பு எய்ய முடியாமல், நீர் அந்த வேலையிலே=நீர் அந்தத் தருணத்திலே, பல்லைத் திறத்து விட்டீர்=பல்லைக் காட்டி நகைத்தீர், இதுவோ நும் படைத் தொழிலே=சண்டைத் தொழிலில் உமது திறமை இதுதானோ? எ - று.

20. துயிலையி லேயிடர் துன்னையி லேதெய்வர் சூழையிலே
பயிலையி லேயிருட் பாதியி லேபசும் பாலனத்தை
அயிலையி லேவய தாகையி லேநமக் கார்துணைதான்
மயிலையி லேவளர் சிங்கார வேலர் மயிலையிலே.

உரை :—மயில் அயிலே வளர் சிங்கார வேல=மயிலையும் மிகுந்த கூர்மை யுடைய அழகிய வேலையுமுடைய முருகரது, மயிலையிலே=திருமயிலை யென் னும் ஊரிலே, துயிலையிலே=தூங்கும் பொழுதும், இடர் துன்னையிலே= இடுக்கண் நெருக்கமாக வரும்பொழுதும், தெய்வர் சூழையிலே = எதிரிகள் நம்மைச் சூழ்ந்து கொள்ளும்பொழுதும், இருள் பாதியிலே=நடு ராத்திரி யிலே, பயிலையிலே=வழி நடக்கும்பொழுதும், பசும் பாலனத்தை = பசும் பாலோடு கூடிய சோற்றினை, அயிலையிலே==(நோய்க் காலத்து) அருந்தும் பொழுதும், வயது ஆகையிலே=முதுமைப் பருவம் வரும்பொழுதும், நமக்கு ஆர் துணை காண்=(அவரைத் தவிர) நமக்கு எவர்தான் துணையா யிருக்க முடியும், எ - று.

21. காப்பிட்ட பிள்ளைக் கறிக்கிச்சைப் பட்டுவை யைக்கரைமேன்
மாப்பிட்டு வந்த மயிலேச னேமலை யானநின்னைக்
கூப்பிட்டு நின்று குனிந்தொரு கோலக்கொம் பாற்றடவிப்
பூப்பட்ட கண்ணிச் சயமாக்கினன் மைப்புயல் வண்ணனே.

உரை :—காப்பிட்ட பிள்ளைக் கறிக்கு=கையில் காப்பு அணிந்த சிறு குழந்தையின் ஊன் கறிக்கு, இச்சைப்பட்டு=விருப்பம் வைத்தும், வையைக் கரைமேல்=வையை நதியின் ஓரத்தில் (கரை யடைப்பதற்காக வந்து), மா பிட்டு உவந்த=மாவினுற் சமைத்த பிட்டினை விரும்பிய, மயிலேசனே= திருமயிலைப் பெருமானே! மலையான நின்னை=அக்கினி மலையாய் நின்ற உன்னை, மைப் புயல் வண்ணன்=கார்மேக நிறமுடைய விஷ்ணு, கூப்பிட்டு நின்று=அழைத்துக்கொண்டு நின்று, குனிந்து ஒரு கோலக் கொம்பால் தடவி=கீழே தாழ்ந்து ஒரு பன்றியின் கோட்டினால் தடவிப் பார்த்து, பூப் பட்ட கண் நிச்சயமாக்கினன்=தனக்குப் பூ விழுந்த கண் இருப்பதை உறுதி

செய்தான், (கண் தெரியாமையால் தடவினனென்பது தொனிப் பொருள்), எ - று.

22. உம்பரை வாழ்வித்த தஞ்சங்கண் டோமொண் புரமெரித்த
அம்பரை யேற்றிய சூலங்கண் டோமரு ளுங்குறைவில்
நம்பரை பாகமுங் கண்டோ மவர்திரு நாமஞ்சொல்லா
வம்பரை யுங்கண்ணிற் கண்டோம் வெண்காடனை வாழ்த்துங்களே.

உரை :—உம்பரை வாழ்வித்த நஞ்சம் கண்டோம்=விண்ணவர்களைப் பிழைக்கும்படி செய்வதற்கு உண்ட விடத்தை (அவர் கண்டத்தில்) பார்த்தோம், ஒண்புரம் எரித்த அம்பரை ஏற்றிய சூலம் கண்டோம்=ஒள்ளிய திரிபுரத்தை யழிப்பதற்கு உதவிய அம்பாகிய நாராயணரை உய்வித்தற்கு அவரை எதிர்த்த அந்தகாசுரனைக் குத்திய சூலாயுதத்தை (இறைவன் கையிற்) கண்டோம், அருளும் குறைவில் நம் பரை பாகமும் கண்டோம்=நிரம்பிய அருளையுடைய பராசத்தியை அவருடைய இடப்பாகத்திற் கண்டோம், அவர் திருநாமம் சொல்லா வம்பரையும் கண்ணில் கண்டோம்=அவருடைய திருப்பெயரைக் கூறாது வறிதே காலங் கழிக்கின்றவர்கள் (கெடுவதையும்) நேரே பார்த்தோம், வெண்காடனை வாழ்த்துங்களே=திருவெண்காட்டுப் பெருமானைத் துதியுங்கள், எ - று.

23. போதா சிவகுரு நாதா கலவை புழுகொடுசவ்
வாதாந்த கொங்கைக் குறமாது வள்ளிக்கு வாய்த்திடுமின்
பாதா ருகற்செற்ற வேல்விடுத் தாலென் பகையையறுக்
காதா மனமிரங் காதா சிவகிரிக் காங்கேயனே.

உரை :—சிவகிரிக் காங்கேயனே=சிவகிரியில் வீற்றிருக்கும் கங்கை மைத்துனகிய முருகக் கடவுளே! போதா=அறிவனே! சிவகுரு நாதா=சிவபெருமானுக்குக் குருவாய் விளங்கக்கூடிய தலைவனே! கலவை புழுகொடு சவ்வாது ஆர்ந்த கொங்கை=வாசனை கலந்த சந்தனக் குழம்பு புனுகு சவ்வாது என்பன பொருந்திய தனங்களையுடைய, குறமாது வள்ளிக்கு=குறக்குல மகளாகிய வள்ளியம்மைக்கு, வாய்த்திடும் இன்பா=ஏற்ற இன்பந் தருபவனே! தாரகன் சென்ற வேல் விடுத்தால்=தாரகா சுரனை அழித்த வேற்படையைச் செலுத்தினால், என் பகைபை அறுக்காதா=என் பிறவிப் பகையை அழிக்காதா, மனம் இரங்காதா=உன்னுடைய திருவுள்ளம் என் பால் கருணை வையாதா, எ - று.

24. மாடேறு தாரு மதியேறு சென்னியு மாமலரோன்
ஓடேறு கையு முடையார் தமக்கிட மோங்கியநெற்
சூடேறு சங்குஞ் சொரிமுத்தை முட்டையென் றேகமலக்
காடேறு மன்னஞ் சிறகா லணைக்குங் கழுக்குன்றமே.

உரை :—மாடு ஏறு தாளு = காவே வாகனத்தி லேறுகின்ற திருவடியும், மதி ஏறு சென்னியும் = சந்திரன் சூடப்பெற்ற தலையும், மா மலரோன் ஓடு ஏறு கையும் = பாமன்தி தலையோடு வைத்த திருக்கையும், உடையார் தமக்கு இடம் = உடைய சிவபெருமானுக்குத் தலமாவது, நெல் சூடு ஏறு சங்கும் = நெல்லின் குவியலின் மீதேறிய சங்குகள், சொரி முத்தை = சிதறுகின்ற முத்துக்களை, முட்டை என்றே = தமது முட்டைகளென்றெண்ணி, கமலக் காடு ஏறும் அன்னம் = தாமரைப்பூத் தொகுதியிற் சென்று தங்கும் அன்னப் பறவைகள், சிறகால் அணைக்கும் = அவற்றைத் தமது சிறகுகளால் தழுவு மிடமாகிய, கழுக்குன்றமே = திருக்கழுக்குன்றமேயாகும் எ-று.

25. நெருப்புக் கறுக்கச் சிவப்புள்ள மேனியர் நீள்கனகப்
பொருப்புக் குனித்துப் புரமெரித் தார்க்கிடம் போர்க்களிற்றின்
மறுப்புக்கண் முத்தும் வளர்கழை முத்தும் வளைக்கண்முத்தும்
கருப்புக்கண் முத்து மதிக்குலங் காட்டுங் கழுக்குன்றமே.

உரை :—நெருப்புக் கறுக்கச் சிவப்புள்ள மேனியர் = செந்நீயும் கறுப் பென்று சொல்லும்படியாக மிகுதியாக சிவந்த திருவடிவமுடையவர், நீள் கனகப் பொருப்பைக் குனித்து = உயர்ந்த பொன்மலையாகிய மேருமலையை வளைத்து, புரம் எரித்தார்க்கு இடம் = திரிபுரத்தை யழித்தவராகிய சிவ பெருமானுக்குத் தலமாவது, போர்க்களிற்றின் மருப்புக்கண் முத்தும் = சண்டையில் வல்ல யானையின் தந்தங்களில் விளையும் முத்துக்களும், வளர் கழை முத்தும் = பெரிய மூங்கில்களிலுள்ள முத்துக்களும், வளைக் கண் முத்தும் = சங்கில் உள்ள முத்துக்களும், கருப்புக்கண் முத்தும் = கரும்பில் விளையும் முத்துக்களும், மதிக்குலம் காட்டும் = பல சந்திரர்களின் தொகுதி போலத் தோன்றும், கழுக்குன்றமே = திருக்கழுக்குன்றமேயாகும், எ - று.

26. ஆலங் கிடக்கு மனத்தார்க் கொருநன்றி யம்பிலிட்ட
கோலங் கிடக்குங் கண்டாய் குறையாத குணமுடைய
சீலங் கிடக்கு மனத்தார்க் கொருநன்றி செய்யில்வெகு
காலங் கிடக்குங் கண்டாய் வணிகா செந்தில் காத்தவனே.

உரை :—செந்தில் காத்தவனே = திருச்செந்தூரில் நெடுநாளாகத் தங்கி யருளும் பெருமானே! ஆலம் கிடக்கும் மனத்தார்க்கு ஒரு நன்றி = விடத் தின் தன்மை கலந்த நெஞ்சுடையவர்களுக்குச் செய்த ஒரு நன்மையானது, அம்பிலிட்ட கோலம் கிடக்கும் கண்டாய் = நீரிலெழுதிய எழுத்துப்போல விரைவி லழியு மென்றறிக! குறையாத குணமுடைய சீலம் கிடக்கும் மனத் தார்க்கு = நிரம்பிய நற்றன்மையுடைய ஒழுக்கம்பொருந்திய நெஞ்சுடையவர் களுக்கு, ஒரு நன்றி செய்யில் = ஒரு நன்மை செய்தால், வெகுகாலம் கிடக் கும் கண்டாய் = நெடுநாள் நிலையாகத் தங்குமென்றறிக, எ - று.

27. சிந்தா மணிசங்கு தேனுமலர்த் தாமரைசீர்
ஐந்தருவு நின்னவே யாயிருக்க—வந்தேதான்
கச்சவிட மேயுண்ட கண்டா கடைதோறும்
பிச்சையிரந் துண்டதென்ன பேசு.

உரை :—சிந்தாமணி = தெய்வரத்தினமாகிய சிந்தாமணியும், சங்கு = சங்குபோன்ற நிதிக் களஞ்சியமும், தேனு = காமதேனும், மலர்த்தாமரை = பதுமநிதியும், சீர் ஐந்தருவும் = புகழுடைய ஐந்து தேவமரங்களும், நின்னவே யாயிருக்க = உனக்குச் சொந்தமாகவே இருக்கவும், வந்தேதான் = அவைகளை விட்டு நீங்கி வந்து, கச்சவிடமே உண்ட கண்டா = கைத்த அல்லது கசப்பான நஞ்சையுண்ட கழுத்தை யுடையவனே! கடைதோறும் பிச்சை இரந்து உண்டது என்ன பேசு = வீடுகள் தோறும் ஐயமேற்று உண்பதற்குக் காரணம் யாதென்று கூறும், எ - று.

28. அந்திக்கார் வந்துமய லாற்றுவா ரன்னையிடு
வந்திக்கார் வந்து வழக்குரைப்பார்—நந்திக்கார்
கச்சிக்கா ளத்திக்கார் காதலுரைப் பார்களைக்
கச்சிக்கா ளத்திக்கார் கண்.

உரை :—நந்து இக்கு ஆர் = சங்குகளும் கரும்புகளும் நிறைந்த, கச்சி காளத்திக்கு = காஞ்சிபுரத்தில் வசிக்கும் காளத்தி வள்ளலுக்கு, ஆர் காதல் உரைப்பார் = (இந்த மாதின்) வேட்கையை யார் போய்ச் சொல்லுவார்கள், அந்திக்கு யார் வந்து மயல் ஆற்றுவார் = மாலைக் காலத்தில் வந்து யார் இவளுடைய மயக்கத்தை நீக்குவார்கள், அன்னை இடு வந்திக்கு = அவள் மாதா பேசுகின்ற இகழ்ச்சிச் சொல்லுக்கு எதிரிடையாக, யார் வந்து வழக்கு உரைப்பார் = யார் வந்து விவகாரம் செய்வார்கள், கனகக் கச்சிக்கு = பொன் னிறமான கச்சணிந்த அப்பெண்ணுக்கு, ஆள = மேற் பார்த்து நடத்த, திக்கு ஆர் = கதியாவார் யார்? காண் - அசை, எ-று.

29. இருப்போ மென்ரூலு மிராதுள மானேயிக்
கருப்போ மென்ரூலுங் கசக்கும்—விருப்பாரும்
காசண் முகனைக் கடல்புடைதூழ் கோவளம்வாழ்
மாசண் முகனை மறந்து.

உரை :—மானே = தோழியே! விருப்பு ஆரும் காசு அண்மு = யாவரும் ஆசைப்படக்கூடிய பணிகளமைந்த, கனகடல் புடைசூழ் = முழங்குகின்ற கடலை அருகே யுளையப்பெற்ற, கோவளம் வாழ் = கோவளத்தில் வசிக்கின்ற, மா சண்முகனை = மயில் சண்முகப் பெருமானை, மறந்து இருப்போம் என் ரூலும் உ ம இராது = நினைபாதிருப்போமெனினும கெஞ்சமானது அவ்வாறு இராது, இக்கருப்போ = இந்தக் கரும்போ, மென்ரூலும் கசக்கும் = சுவைத் துத் தின்றாலும் கசப்பாகத் தோன்றுகிறது, எ-று.

30. பாரவிள நீர்சுமக்கப் பண்டே பொருதவிடை
ஆர வடஞ்சுமக்க வாற்றுமோ—நேரே
புடைக்கனத்த கொங்கையின்மேற் பூங்களபஞ் சாத்தி
இடைக்கனத்தம் வைத்தவரா ரின்று.

உரை :—பார இளநீர் சுமக்கப் பண்டே பொருத இடை=கனமான இளநீர்க் காய்போன்ற தனங்களைச் சுமப்பதற்கு முன்னமே வலியற்ற இடையானது, ஆரவடம் சுமக்க ஆற்றுமோ=முத்துமாலையைத் தாங்க முடியுமா, நேரே புடை கனத்த கொங்கையின்மேல்=தனங்களில் ஒன்றுக் கொன்று நேராகப் பக்கம் பருத்து நெருங்கிய அவற்றின்மீது, பூம் களபம் சாத்தி=அழகிய சந்தனக் குழம்பைப் பூசி, இடைக்கு அனத்தம் வைத்தவர் ஆர் இன்று=இப்போது இடைக்குக் கேடு செய்தவர் யாவர், எ-று.

31. வெங்காயஞ் சுக்கானல் வெந்தயத்தா லாவதென்ன
இங்கார் சுமந்திருப்பா ரிச்சரக்கை—மங்காத
சீரகத்தைத் தந்தீரேற் றேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே.

உரை :—ஏரகத்துச் செட்டியாரே=திருவேகாத்தி லிருக்கும் செட்டி யெனப்படும் திருப்பெயருடைய முருகப்பெருமானே! வெம் காயம் சுக்கு ஆனல்=வெப்பமான இவ்வுடம்பு தவத்தினால் சுக்குபோலப் பக்குவப்பட் டால், வெந்த அத்தால் ஆவது என்ன=வெம்மையான வினையினால் வரக் கூடிய தீங்கு என்ன, இச்சரக்கை இங்கு யார் சுமந்திருப்பார்=இந்தச் சாமானை யார் சுமந்து கொண்டிருக்க முடியும், மங்காத சீர் அகத்தைத் தந்தீ ரேல்=அழியாத சிறந்த வீட்டினைக் கொடுப்பீரானால், பெரும் காயம் தேடேன்=(இனி) பெரிய உடம்பினை நான் நாடமாட்டேன், எ-று.

32. முன்னே யிரண்டுமுலை முற்றியபின் னுமுலை
எந்நேர மென்மதலைக் கெட்டுமுலை—எந்நாளும்
பைந்நாகஞ் சூழ்மதுரைப் பாணநின் பாகனுக்கிங்
கொன்னுக மென்னு மினி.

உரை :—எந்நாளும் பை நாகம் சூழ் மதுரைப் பாண=எக்காலத்திலும் படமுடைய நாகமானது எல்லையாகச் சுற்றியுள்ள திருவாலவாயிலிலிருக்கும் பாணனே! முன்னே இரண்டு முலை=இளமைப் பருவமாகிய முன்னாளில் இரண்டு தனங்களிருந்தன, முற்றிய பின்=முதிர்ச்சியடைந்த பிற்பாடு, நாலு முலை=அவை தொங்குகின்ற தனங்களாயின, எந்நேரம்=எப்போதும், என் மதலைக்கு=என் பிள்ளைக்கு, எட்டு முலை=எட்டுகின்ற தனங்களாகும், நின் பாகனுக்கு=உன் நண்பனுகிய தலைவனுக்கு, இனி என்னுகம் என் ஆம்=இனி என்னுடைய தேகம் எவ்வாறு பயன்படக் கூடியதாம், எ-று.

33. நங்கை யொருத்தியையு நாமிருவர் மூவரையும்
பொங்கு மமளி பொறுக்குமோ—சங்கம்
குழைய வரால்பாயு குருநாடர் கோவே
பழையவரா லென்ன பயன்.

உரை :—சங்கம் குழைய வரால் பாயும்=சங்குகள் சிதையும்படி வரால் மீன்கள் பாய்கின்ற நீர் வளத்தையுடைய, குரு நாடர் கோவே=குரு நாட்டினர்க்குத் தலைவனே! நங்கை ஒருத்தியையும் நாமிருவர் மூவரையும்=என் தங்கை யொருத்தியோடு இருவராயிருக்கிற நம்மையும் சேர்த்து மூவராவோம், (நம் மூவரையும்) பொங்கும் அமளி பொறுக்குமோ = பொலிவான படுக்கையானது சுமக்க வியலுமா, பழையவரால் என்ன பயன் = பழகிப் போன எம்போலியரால் உனக்கு என்ன நன்மை விளையும், (புதியவளாகிய நங்கையோடு சேர்ந்திரு பழையவளாகிய நான் உனக்குப் பயனில்லை), எ-று.

34. ஒருவர்க் கிடமா யுகந்திருந்த பாயல்
இருவர்க் கிடமாய தென்னே—மருவலரைக்
கன்னுட்ட வின்னுட்டுங் கண்டன் கரிகாலன்
தன்னுட் டிதுபுதுமை தான்.

உரை :—உகந்த ஒருவருக்கு இடமாய் இருந்த பாயல்=நேசித்த ஒரு பெண்ணுக்கு மாத்திரம் இடங் கொடுத்திருந்த படுக்கையானது, இருவர்க்கு இடம் ஆயது என்னே=இரு மாதர்க்கு இடம் கொடுத்தது எப்படி, மருவலரைக் கல்நாட்ட வில் நாட்டும்=பகைவரைக் கொன்று கல் நடுவதின் பொருட்டு வில்லை நிறுத்திப் பயன்படுத்தும், கண்டன் கரிகாலன் = கரிகாற் சோழனுடைய, தன் நாட்டு இது புதுமைதான்=தேசத்தில் இதுவும் ஒரு புதுமைதான், எ - று.

35. நங்கை பயண நமக்கென் றுரைத்தளவில்
அங்கம் பசலைநிற மானதே—செங்கை
வளைநெகிழப் பாதி மறுத்தேனென் றேத
உளநெகிழப் பாதி யுடைந்து.

உரை :—நங்கை=மாதே! நமக்குப் பயணம் என்று உரைத்த அளவில்=நமக்கு வழிச் செலவு ஏற்படக்கூடிய தென்று கூறிய அளவில், அங்கம் பசலை நிறமானதே=மேனியானது தோல் படர்ந்து அதன் நிறம் பெற்றது, செங்கை பாதி வளை நெகிழ=அவள் கையிலுள்ள பாதி வளையல்கள் அவளது உடல் மெலிவாற் கழலவும், (அதைப் பார்த்த நான்) மறுத்தேன் என்று ஏத=பயணத்தை வேண்டாமென்று கூறவே, பாதி உடைந்து நெகிழ உள=பாதி வளையல்கள் அவளது உடல் பூரிப்பால் ஒடிந்து விழும் தருணத்திலிருந்தன, எ - று.

36. அம்பலவா வின்னெருகா லாடினு லாகாதோ
உம்பரெலாங் கண்டதெனக் கொப்பாமோ—சம்புவே
வெற்றிப் பதஞ்சலிக்கும் வெம்புலிக்குந் தித்தியென
ஒற்றிப் பதஞ்சலிக்கு மூர்.

உரை :—சம்புவே = சங்காரனே ! வெற்றிப் பதஞ்சலிக்கும் = நடன தரிசனம் பெறுவதில் ஜயமடைந்த பதஞ்சலி முனிவருக்காகவும், வெம்புலிக்கும் = கொடுமையான புலியின் காலுடைய வியாக்கிரபாத முனிவருக்காகவும், தித்தி என ஒற்றி = தித்தி எனத் தாளம் போட்டு, பதஞ்சலிக்கும் ஊர் = உம்முடைய திருவடிகள் நடனஞ் செய்த பதியிலுள்ள, அம்பலவா = பொன்னம்பலத்திலிருப்பவனே ! இன்னெருகால் ஆடினால் ஆகாதே = இன்னும் ஒரு முறை அல்லது மற்றக் காலினாலும் கூத்தியற்றுவது கூடாதா, உம்பர் எலாம் கண்டது எனக்கு ஒப்பாமோ = தேவர்க ளெல்லாம் முன்னே உன் திரு நடனத்தைப் பார்த்தார் எனில், அது நான் பார்த்ததாகுமா ? எ-று.

37. இந்தவிடை நிற்பதரி தென்னுணை யும்மாணை
சந்தேக மாகச் சமைத்தானே—அந்தவயன்
பாரதிரா மன்வரையிற் பைங்கொடியீர் கொங்கையிள
நீரதிரா மன்னடமின் னீர்.

உரை :—பாரதி ராமன் வரையில் பைங்கொடியீர் = பாரதிராம னென்பவனது எல்லையிற் பயிலும் பசுமையான கொடிபோன்ற மாதரே ! என் ஆணை உம் ஆணை இந்த இடை நிற்பது அரிது = உங்களுடைய இந்த இடையானது என்மேல் வைத்த ஆணையினாலும் உங்கள்மேல் வைத்த ஆணையினாலும் நிலைபெறுவது கடினம், அந்த அயன் சந்தேகமாகச் சமைத்தானே = அவற்றைப் படைத்த பிரமதேவன் அதை யுளதோ இல்லையோ என்று சொல்லும்படியாக அமைத்தானே, நீர் கொங்கை இளநீர் அதிராமன் நடமின் = உங்களுடைய தனங்களாகிய இளநீர்க்காய்கள் அலைந்து வருந்தாமல் செல்வீர்களாக, எ-று.

38. உன்னுயிரு மென்னுயிரு மொன்றென்ப தின்றறிந்தேன்
மன்னுபுகழ் மச்சத்தார் மன்னவா—உன்னுடைய
பொன்னகத் தெங்கையர்தம் போகநகச் சின்னங்கண்
டென்னகத் தேயெரிகை யால்.

உரை :—மன்னுபுகழ் மச்சத்தார் மன்னவா = நிலைத்த புகழையுடைய மச்சநாட்டினர்க்கு வேந்தனே ! உன்னுடைய பொன் ஆகத்தி = உன்னுடைய அழகிய மார்பில், எங்கையர் தம் போக நகச்சின்னங்கள் = எனது தங்கையாகிய பெண்டிருடைய புணர்ச்சிக் காலத்திற்பட்ட நகக்குறிகளைப் பார்த்து, (உன் உடல் வெப்பங் கொள்வதுபோல) என் ஆகத்தே எரிதலால் =

அவற்றைப் பார்த்து என் நெஞ்சிலே எரிச்சலுண்டா யிருத்தலால், உன் உயிரும் என் உயிரும் ஒன்று என்பது இன்று அறிந்தேன்=உன்னுடைய உயிரும் என்னுடைய உயிரும் ஒரே உயிரென்பதை இக்காளில் நான் தெரிய லானேன், எ-று.

39. காளத்தீ கண்டத்தே காளத்தீ நெற்றியிலே
காளத்தீ யுன்றன் கரத்திலே—காளத்தீ
அங்கமெங்கும் வெவ்வழலே யாற்றினுண் ஞானப்பூங்
கங்கையென்னும் பெண்ணெருத்தி கண்டு.

உரை :—காளத்தீ=திருக்காளத்தி நாதரே! கண்டத்தே காளத்தீ=உம்முடைய கழுத்திலே விடத்தின் வெப்பமிருக்கிறது, நெற்றியிலே காளத்தீ=உமது நெற்றியிலே மன்மதனைக் கொன்ற விடத்தீ இருக்கிறது, உன்றன் கரத்திலே காளத்தீ=உம்முடைய திருக்கையிலே விடம்போல வெப்பமான நெருப்பிருக்கிறது, அங்கம் எங்கும் வெவ் அழலே=உம்முடைய திருமேனி முழுவதும் கொடிய நெருப்பு மயமானது, ஞானப்பூம் கங்கை என்னும் பெண் ஒருத்தி=அறிவு வடிவமான அழகிய கங்கை யென்னும் ஒரு தேவி, கண்டு ஆற்றினள்=இதனைப் பார்த்துத் தன்னுடைய குளிர்ச்சியால் வெப்பத்தைத் தணித்தாள், எ-று.

40. மேவி லுடனே விடியும் விடியாது
கோவைமணி மார்பன் கூடாநாள்—தேவர்
திரண்டா தரிக்கின்ற தென்னரங்க மாலே
இரண்டாலும் பொல்லா திரா.

உரை :—தேவர் திரண்டு ஆதரிக்கின்ற தென் அரங்க மாலே=தேவர் கள் திரளாகச் சேர்ந்து அன்பினால் வழிபடுகின்ற அழகிய திருவரங்கப் பெருமானே! மணிகோவை மார்பா=இரத்தினமாலை தரித்த திருமார் பனே! மேவில் உடனே விடியும்=நீ என்னோடு கலந்தால் விரைவாக இராப் பொழுது விடிந்துவிடும், கூடாநாள் விடியாது=(நீ) சோத நாளில் இராப்பொழுது நீங்குவதில்லை, இரா இரண்டாலும் பொல்லாது=இராத்திரி யானது இரண்டு வகையிலும் புதிதாக இருக்கின்றது, எ-று.

குறிப்பு :—தலைவன் மேவுங்காலத்தில் இரா நீளவேண்டு மென்றும், பிரிந்த காலத்தில் இரவு விரைவில் கழியவேண்டுமென்றும் எண்ணுவது தலைவியின் இயல்பு. இரண்டிற்கும் மாறாக இரவானது இருப்பதால் அது பொல்லாதெனப்பட்டது.

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

பாடியது

திருக்குடந்தை சிவபெருமான்மீது பாடியது.

1. நின்று படியளக்கு நீலக் கொடிகளிரண்
டென்றுமுள வாங்குடந்தை யீச்சுரருக்—கொன்றுக்
குரைக்கு மரையீந்தா ரொன்றதனுக் கென்னே
அரைக்கு மரையியா ரவர்.

உரை:—குடந்தை ஈச்சுரருக்கு = திருக்குடந்தை யென்னும் கும்ப கோணத்தில் வீற்றிருக்குஞ் சிவனுர்க்கு, நின்று படியளக்கும் நீலக் கொடிகள் = நிலையாக எவ்வுயிருக்கும் உணவு முதலியவற்றை வினைக்குத் தக்கபடி அளந்து கொடுக்கின்ற, நீல நிறமுடைய கொடிபோன்ற உமையம்மையும் = பெருவடிவமெடுத்து நின்று உலகத்தை அளந்த நீல நிறத்தையுடைய திருமாலாகிய சத்தியும் ஆக இருவர், என்றும் உள ஆம் = எப்போதும் உள்ளன, ஒன்றுக்கு = ஒரு சத்தியாகிய உமையன்னைக்கு, உரைக்கும் அரை ஈந்தார் = புகழப்படுகின்ற தமது திருமேனியிற் பாதியை அளித்தார், ஒன்றதனக்கு = மற்றொருவராகிய திருமாலுக்கு எக்காரணம் பற்றியோ, அவர் அரைக்கும் அரை ஈயார் = காலுக்குக் காலாகிய பாதியும் கொடுக்கமாட்டார், (அதாவது காலாகிய திருவடியைக் காட்டவில்லை என்பது கருத்து), எ - று.

சிதம்பர தேவர்மீது பாடியது

2. எடுத்தசன னங்கடொறு மீன்றெடுத்த தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டில்—அடுத்தமணிப்
பைந்நா கணைதுயின்மால் பாலாழி யுஞ்சிறிதாம்
மன்னு சிதம்பர தேவா.

உரை:—மன்னு = (பெரு) வேந்தனே! சிதம்பர தேவா = சிதம்பரத்திலுறையும் பெருமானே! எடுத்த சனனங்கள் தொறும் ஈன்று எடுத்த தாய்மார் = நான் மேற்கொண்ட பிறப்புக்க ளெல்லாவற்றிலும் என்னைப் பெற்று வளர்த்த அன்னைமார்கள், கொடுத்த முலைப்பால் அனைத்தும் கூட்டில் = எனக்களித்த முலைப்பால் முழுவதையும் சேர்த்துப்பார்த்தால், (அதன் பெருக்கத்தை நோக்க) அடுத்த மணிப்பை நாகணை துயில்மால் = இரத்தினங்கள் பொருந்திய படமுடைய பாம்புப்படுக்கையிற் பள்ளிகொள்ளும் திருமாலின், பால் ஆழியும் சிறிது ஆம் = திருப்பாற் கடலும் குறைவு பட்டதாகும், எ - று.

சிவபெருமானுக்கு அரைக்கண்ணென்று பாடியது.

3. முக்கண்ண னென்றரனே முன்னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற் குள்ளதரைக் கண்ணே—மிக்க
உமையாள்கண் ணொன்றரைமற் றூன்வேடன் கண்ணொன்
றமையு மிதனுலென் றறி.

உரை:—முக்கண்ணன் என்று அரனே முன்னோர் மொழிந்திடுவர் = பரமசிவனைக் கண்கள் மூன்றுடையவனென்று முற்காலத்தினர் கூறுவர், அக்கு அண்ணற்கு உள்ளது அரைக் கண்ணே = எலும்பு தரித்த அப் பெருமானுக்குச் சொந்தமாக இருப்பது பாதிக்கண்ணே ஆகும், (எங்ஙன மெனில்) மிக்க உமையாள் கண் ஒன்றரை = பாதித் திருமேனியையுடைய பார்வதியின் கண் மூன்றிற் பாதியாகிய ஒன்றரையாகும், மற்று = மேலும், ஊன் வேடன் கண் ஒன்று = மாமிசம் நிவேதித்த கண்ணப்பருடைய கண் ஒன்றாகும், இதனுல் அமையும் என்று அறி = இந்தக் கணக்கின்படி சிவனுர்க்கு அரைக் கண்தான் உரியதென்று தெரிவாயாக, எ - று.

குறிப்பு :—இதைச் சிலர் காளமேகப் புலவர் கவி என்பர்.

திருமறைக் காட்டீசுவரர்மீது பாடியது.

4. பாணியிலே புள்ளிமான் பாகத்தே பச்சைமான்
வேணிதனி லேயோர் வெள்ளைமான்—காணுமலர்ச்
செம்மா னுலவுந் திருமறைக் காட்டீசரே
எம்மா னுக்கெங்கே யிடம்.

உரை :—காணும் மலர்ச் செம்மான் உலவும் = அழகாகத் தோன்றும் தாமரைப் பூவில் வீற்றிருக்கும் திருமகள் தங்குகிற, திருமறைக் காட்டு ஈசரே = வேதாரண்யத்தி லுறையும் இறைவனே ! பாணியிலே புள்ளிமான் = உம்முடைய கையிலே புள்ளிகளையுடைய மான் காணப்படும், பாகத்தே பச்சை மான் = உம்முடைய இடப்பாகத்தில் பச்சை நிறமுடைய பார்வதி யிருக்கின்றுள், வேணிதனிலே ஓர் வெள்ள மான் = உம்முடைய சடையிலே வெண்மை நிறமான கங்கை யிருக்கிறுள், எம்மானுக்கு எங்கே இடம் = என்னுடைய மகள் தங்குவதற்கு (உம்முடைய திருமேனியில்) எப்பாகத்தில் இடமிருக்கிறது, எ - று.

சொக்கநாதப் பெருமான்மீது பாடியது.

5. வான்பணிந்தாலவனென்பே யுரைக்குமலரிலயன்
தான்பணிந்தாலவன்றன்னிலையே சொலுந்தாரணியுண்
பான்பணிந்தாலவன்கண்ணே பரிந்துபரிந்துரைக்கும்
நான்பணிந்தாலெனக்கார்சொல்லுவார் சொக்கநாயகர்க்கே.

உரை :—சொக்க நாயகர்க்கே=சொக்கலிங்கப் பெருமானே, வான் பணிந்தால்=வானவர்கள் வழிபட்டால், அவன் என்பே உரைக்கும்=அவன் எலும்பே சான்று பகரும், மலரில் அயன்தான் பணிந்தால்=தாமரையிலிருக்கும் பிரமதேவர் வழிபட்டால், அவன் தன் தலையே சொல்லும் = அவனது கின்னப்பட்ட தலையே சான்று பகரும், தாரணி உண்டான் பணிந்தால்=மண்ணுண்ட மாயன் வழிபட்டால், அவன் கண்ணே பரிந்து பரிந்து உரைக்கும்=அர்ச்சித்துச் சாத்திய அவன் கண்ணே மிக ஆதாவாய்ச் சான்று பகரும், நான் பணிந்தால் எனக்கு யார் சொல்லுவார்=நான் வழிபட்டால் எனக்குச் சாட்சி பகருவார் யாரிருக்கின்றார்கள், எ-று.

சிவபெருமான் தரித்திருக்கும் பாம்பு முதலிய ஆபரணங்களைப் பற்றிப் பாடியது.

6. மெய்க்கேயணியும்பணியே யென்பேமுடிமேற்கிடந்த
கொக்கேவெண்கூன்பிறையே யரைசேர்ந்தகொடும்புலியே
அக்கேயுமக்குக்கிடைத்த வுபாயங்களாவெமக்கும்
சொக்கேசர்பாதத்தைக் கிட்டுமுபாயத்தைச்சொல்லுங்களே.

உரை ;—மெய்க்கே யணியும் பணியே=(சொக்கலிங்கப் பெருமான்) உடம்பிலே தரிக்கும் பாம்பு, என்பே=எலும்பு மாலையே, முடிமேல் கிடந்த கொக்கே = தலையின்மேல் அணியப்பட்ட கொக்கிறகு, வெண்கோன் பிறையே=வெண்மையான வளைந்த பிறைச் சந்திரன், அரை சேர்ந்த கொடும் புலியே=இடுப்பில் உடுத்திய கொடுமையான புலியின் தோல், அக்கே=உருத்திராட்சமணி, உமக்குக் கிடைத்த உபாயங்கள் ஆ=என் பவைகளே நீங்கள் அவரை யடைதற்கு அமைந்த தந்திரங்கள் யாவை? எமக்கும்=எங்களுக்கும், சொக்கேசர் பாதத்தைக் கிட்டும்=சொக்கலிங்கப் பெருமானது திருவடியைப் போயடையும், உபாயத்தைச் சொல்லுங்களே=தந்திரத்தைக் கூறுவீர்களாக, எ-று.

மதுரைச் சொக்கநாதர்மீது பாடிய நிந்தாஸ்துதி.

7. தாண்டித்திரியும்விடையேறி யோடொன்றுதாங்கிப்பிச்சை
வேண்டிக்கலியுகாலந்தள்ளாமல் விரும்பிச்சொக்கர்
ஆண்டித்தொழிலைவிட்டையோ மதுரைக்கரசிருந்து
பாண்டித்துரைத்தனஞ்செய்தே பிரம்படிபட்டனரே.

உரை :—தாண்டித் திரியும் விடையேறி = தாவிச் செல்லுகின்ற காளையின் மேல் ஏறி, ஓடொன்று தாங்கி=ஒரு திருவோட்டை எடுத்துக்கொண்டு, பிச்சை வேண்டி=யாசகம் கேட்டு வாங்கி, கலியுகக் காலந்தள்ளாமல்=இந்த கலியுகத்தில் நேரத்தைப் போக்காமல், சொக்கர்=சொக்கலிங்கப் பெருமான், ஆண்டித் தொழிலைவிட்டு=பாதேசி செய்யும் செயலை கைவிட்டு,

ஐயோ = அந்தோ! மதுரைக்கு அரசிருந்து = மதுரைப்பதியில் மன்னனுக முடி சூட்டி யிருந்து, ஆண்டித் துரைத்தனஞ்செய்து = பாண்டி நாட்டில் அதிகாரஞ் செலுத்தி, பிரம்படி பட்டனரே = (பிட்டு வாணிச்சிக்காக மண் சுமக்க வந்து ஒரு பாண்டியனால் பிரம்பால் தாக்கவும் பட்டார், எ - று. ஏ - இரக்கக் குறிப்பு.

திருக்களந்தைப் பெருமான்மீது பாடியது.

8. ஆகத்திலேயொருபாதி யென்னம்மைக்களித்தவடன்
பாகத்திலேயொன்றுகொண்டா யவண்மற்றைப்பாதியுமுன்
தேகத்திற்பாதியுஞ்சேர்ந்தா லிருவருண்டேசிவனே
ஏகத்திராமலிருப்பாய் களந்தையுமென்னெஞ்சுமே.

உரை :—சிவனே = பரமசிவனே! ஆகத்திலே யொருபாதி = உம் முடைய உடம்பிலே பாதிப்பங்கை, என்னம்மைக் களித்து = எனது தாயாகிய பார்வதிக்கு ஈந்து, அவள் தன் பாகத்திலே = அவளுடைய திரு மேனியின் இரண்டு பிரிவிலே, ஒன்றுகொண்டாய் = ஒரு பிரிவைப் பெற்றுக் கொண்டாய், அவள் மற்றைப் பாதியும் = அவளுடைய இன்னொரு பாதியும், உன் தேகத்தில் பாதியும் = உன்னுடைய உடம்பிலுள்ள மற்றப் பாதியும், சேர்ந்தால் = இணங்கினால், இருவருண்டே = இரண்டுபேர் இருக்க வேண் டுமே? (ஆதலால்) ஏகத்து இராமல் = ஒரு வடிவமாய் இராமல், களந்தையு மென்னெஞ்சுமே யிருப்பாய் = திருக்களந்தைப் பதியில் ஒரு வடிவமும் என் னுள்ளத்தில் ஒரு வடிவமுமாய்த் தங்கி யருளுவீராக, எ - று.

இதுவுமது.

9. துணையானநாரிபுவியையெல்லாம் பெறுந்தொல்லைவடிக்
கணையானதுபுவியெல்லா மெடுத்துண்ணுங்கைச்சிலைகல்
அணையாகநின்றுபுவியினைத் தாங்குமென்றுளினியான்
பணையார்களந்தைப்பதியார் செயலையென்பன்னுவதே.

உரை :—துணையான நாரி = திருக்களந்தைப் பெருமானுக்கு வாழ்க் கைத் துணையான பார்வதி, புவியையெல்லாம் பெறும் = எல்லா உலகங் களையும் தோற்றுவிப்பாள், தொல்லைவடிக் கணையானது = முதிர்ந்த உருவம் பொருந்திய பாணமாகிய (திருமால்), புவியெல்லாம் எடுத்துண்ணும் = உலகங்களை யெல்லாம் எடுத்து உட்கொள்ளுவார், கைச்சிலை அணையாக நின்று புவியினைத் தாங்கும் -- கையிலே நாகமும் வில்லாகிய மேருவானது ஆதாரமான கல்லாணியாக உலகத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்றது, என்றால் இனியான் -- இவ்வாறானால் இனிமேல் யான், பணையார் களந்தைப் பதியார் = வயல்கள் சூழ்ந்த திருக்களந்தை யூரிலிருக்கும் இறைவனின், செயலை யென் பன்னுவதே = தொழிலை யாதென்று கூறுவேன், எ - று.

மதுரைச்சொக்கநாதர் யானைமீது பவனிவருவதைத் தரிசித்துப் பாடியது.

10. முன்னானை கூப்பிடவோடி வந்தானைமுளரிமலர்ப்
பொன்னானையேறியிருப்பானைப் பூழியன்கைக்கரும்பைத்
தின்னானையென்றுகல்லானைக் கிட்டானைத்திருமதுரை
மன்னானவீதியிலேறிவந்தானை வணங்குதுமே.

உரை :—முன் ஆனைக் கூப்பிட ஓடி வந்தானை = முன்னுளில் (முதலைவா யகப்பட்ட) யானையானது ஓலிட அதனைக் காப்பதற்கு விரைந்து வந்தவனும், முளரி மலர்ப்பொன்னானை = தாமரைப்பூவில் வீற் றிருக்கும் திருமகளை மனைவியாக உடையவனும் ஆகிய பெருமான் காளை வாகனமாக, ஏறி இருப்பானை = அதன்மேல் வீற்றிருப்பவனை, பூழியன் கைக் கரும்பை = பாண்டியன் கையிலுள்ள கரும்பை, ஆனை தின் என்று = ஆனையே நீ யருந்துவாயாக என்று கட்டளையிட்டு, கல்லானைக் கிட்டானை = கல்லினுலாகிய ஆனைக்குக் கொடுத்துத் தின்னச் செய்தானை, திருமதுரை வீதியில் மன்னானை ஏறிவந்தானை = அழகிய மதுரைப்பதியின் பெரிய தெருவில் நிலையான யானை வாகனத்தின்மேல் எழுந்தருளிவந்த பெரு மானை, வணங்குதும் = நாம் தொழுவோமாக, எ-று.

சீர்காழிச் சிவபிரானைக் குறித்துப் பாடிய நற்றாயிரங்கல்.

11. நமக்கின்றெருவரநீர்தரவேண்டு நலந்திகழ்குங்
குமக்கொங்கைபாகத்துக்கொச்சையுள்ளீர் கொடுங்கோளரவிற்
கிமைக்கும்பிறையையளித்தா லதற்குமிரும்பசிபோம்
உமக்குந்தலைச்சுமைபோ மெங்கண்மானுமுயிர்பெறுமே.

உரை:—நலந்திகழ் குங்குமக் கொங்கை = அழகு ஒளிர்கின்ற குங்குமக் குழம்பு சாத்தப்பெற்ற தனங்களையுடைய உமை யம்மையை, பாகத்து = தமது இடப்பாகத்தில் வைத்துக்கொண்டு, கொச்சை யுள்ளீர் = சீர்காழியில் வீற்றிருக்கும் பெருமானே! இன்று = இன்னுளில், நமக்கு இன்று நீர் ஒரு வரம் தரல்வேண்டும் = எங்களுக்கு ஓர் வேண்டுகோளைப் பூர்த்தி செய்தல் வேண்டும், கொடுங்கோள் அரவிற்கு = கொடிய வலிய பாம்பிற்கு, இமைக் கும் பிறையை யளித்தால் = ஒளி வீசுகின்ற பிறைச்சந்திரனைக் கொடுத்தால், அதற்கும் இரும் பசி போம் = அதற்குள்ள அதிகமான பசி ஒழியும், உமக்கும் தலைச்சுமை போம் = உமக்கும் தலையிலுள்ள பளுவும் தொலையும், எங்கள் மானும் உயிர் பெறுமே = எங்கள் மகளும் பிழைத்திருப்பாள், எ-று.

குறிப்பு :—பிறைத் தோற்றத்தால் காதல் பெருகுதலின் இப்பாட்டு சந்திரனைப் பழித்தலாகும்.

மதுரைச் சொக்கநாதருக்குள்ள மாண்பெல்லாம் சொக்கநாயகியா லுண்டான தென்று பாடியது.

12. ஆனையுரித்துமதடனைப்போர்த் திட்டடியும்பட்டு
மானமழிந்தங்கிரந்தேதிரிந்த மதுரைச்சொக்கர்
ஞானமிகப்பெற்றுவாழ்வதெல்லாஞ் சொக்கநாயகியாள்
பானைபிடித்தமுகூர்த்தத்தினுல் வந்தபாக்கியமே.

உரை:—ஆனையுரித்தும்=(தாருகா வனத்து முனிவர் செய்த வேள்வியில் வந்த) ஆனையைத் தோலுரித்தும், அதள் தனைப் போர்த்திட்டு=அதன் தோலைப் போர்வையாகக் கொண்டும், அடியும்பட்டு=பிரம்பால் தாக்கவும் பட்டு, மானமழிந்து=பெருமையிழந்து, அங்கு இரந்தே திரிந்த மதுரைச் சொக்கர்=அங்கே பிச்சையெடுத்து அலைந்த மதுரையிலுள்ள சொக்கலிங்கப்பெருமான், ஞானம் மிகப்பெற்று வாழ்வதெல்லாம்=போறிவை அதிகமாக அடைந்து வாழ்ந்திருப்பதற்குக் காரணம் யாதெனில், சொக்கநாயகியாள்=அழகிய தலைவியாகிய மீனாட்சியம்மை, பானை பிடித்த முகூர்த்தத்தினுல் வந்த பாக்கியமே=அவரை மணந்து வாழ்க்கை தொடங்கிய நல்வேளையினுல் ஏற்பட்ட நல்வினைப் பயனேயாகும், எ - று.

திருநெல்வேலி வடிவன்னையைப்பற்றிப் பாடியது.

13. ஆய்முத்துப்பந்தரின் மெல்லணைமீதுன்னருகிருந்து
நீமுத்தந்தாவென்றவர்கொஞ்சும் வேளையினித்தநித்தம்
வேய்முத்தரோடென்குறைகளெல்லா மெல்லமெல்லச்சொன்னுல்
வாய்முத்தஞ்சிந்திவிடுமோ நெல்வேலிவடிவன்னையே.

உரை:—நெல்வேலி வடிவன்னையே=திருநெல்வேலியில் தங்கியருளும் வடிவம்பிகையென்ற அம்மையே! ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீது=தேர்ந்தெடுக்கப்பட்ட முத்துக்களினுல் அமைந்த பந்தலுக்குக் கீழ் உள்ள மென்மையான படுக்கையின்மேல், உன்னருகிருந்து=உன் பக்கத்தில் உட்கார்ந்து, நீ முத்தம் தா வென்று=நீ முத்தம் கொடுக்கவேண்டுமென்று, அவர் கொஞ்சும் வேளையில்=அவர் தம்மைப் பிரியமாய்க் கேட்குந் தருணத்தில், நித்தம் நித்தம்=தினந்தோறும், வேய்முத்தரோடு=மூங்கிலடியில் முத்துப்போல் அருளொளி வீசும் பெருமானிடம், என் குறைகளெல்லாம் மெல்ல மெல்லச் சொன்னுல்=என்னுடைய தேவைகளையெல்லாம் மிக மெதுவாகத் தெரிவித்தால், வாய் முத்தம் சிந்திவிடுமோ=உன் வாயிலுள்ள முத்துக்கள் சிதறி ஒழியுமோ, எ - று.

குறிப்பு:—உத்தமப் பெண்கள் கழுத்தில் முத்து விளையும் என்பது நூற் கருத்து. ஆதல்பற்றி வாய் முத்தம் சிந்திவிடுமோ என்றுர் கவி.

சொக்கநாதருக்குக் கிருபையில்லை என்று பாடியது.

14. குதியான மனையுதைத் துள்ளங்காலினிற்கூனிமிர
மதியாகந்தேய்த்தவ் விலங்கேசன்மாமுடிபத்துநக
நுதியான் மிதித்துமுயலகன்மேனி நுறுங்கவின்னும்
மிதியாநின்ருலருளெங்கே சொக்கேசர்தம்மெல்லடிக்கே.

உரை :—குதியால் மனை உதைத்து = குதிங்காலினால் மனை மிதித்துத் தள்ளி, உள்ளங் காலினால் = உள்ளங் காலினால், கூன் நிமிர மதியாகம் தேய்த்து = சந்திரனுடைய வளைவு நேராகும்படி அவனுடைய தேகத்தை நிலத்தில் அழுத்தி அசைத்து, அவ் இலங்கேசன் மா முடி பத்தும் = அந்த இலங்கை மன்னனாகிய இராவணனுடைய பத்து பெரிய தலைகளையும், நகநுதியால் மிதித்து = நகத்தின் ஓரத்தால் அழுத்தி, முயலகன் மேனி = முயலகனென்னும் அசுரனுடைய உடம்பு, நுறுங்க இன்னும் மிதியா நின்ருல் = சிதைந்து அழியும்படி இப்பொழுது மிதித்துக் கொண்டிருந்தால் சொக்கேசர் தம் மெல்லடிக்கே அருள் எங்கே = சொக்கலிங்கப் பெருமானது மென்மையான பாதத்தில் தயவு எங்கே காணப்படுகிறது, எ - று.

பாண்டியன் சிவபிரானைப் பிரம்பாலடித்ததைக்குறித்து இரக்கமுற்றுப் பாடியது.

15. மண்ணென்றமண்டலமெல்லாம் புரக்கும்வழுதிசற்றும்
தண்ணென்றநெஞ்சந்தரித்திலனே தனுவேடனெச்சில்
உண்ணென்றபோதுண்டவர்சொக்கர் பாதியுடலம்பச்சைப்
பெண்ணென்றறிந்துமடித்தா னெவ்வாறுபிரம்புகொண்டே.

உரை :—மண்ணென்ற மண்டலமெல்லாம் புரக்கும் = நில உலகம் முழுவதையும் பாதுகாக்கும், வழுதி = பாண்டியன், சற்றும் தண்ணென்ற நெஞ்சம் தரித்திலனே = கொஞ்சமும் பொறுமையுள்ள குளிர்ந்த மனம் உடையவனு யில்லையே, (எனெனில்) தனுவேடன் எச்சில் உண்ணென்றபோது = வில்லேந்தரித்த வேடராகிய கண்ணப்பர் தன்னுடைய எச்சில் கலந்த ஊனை அருந்துக என்று வேண்டியபோது, உண்டவர் சொக்கர் = அவனுக்கு இரங்கி அதனை உட்கொண்டவர் சொக்கலிங்கப்பெருமான், பாதி உடலம் பச்சைப் பெண்ணென்று அறிந்தும் = அவருடைய திருமேனியின் பாதியில் பச்சை நிறமான பார்வதியம்மை இருப்பதைத் தெரிந்தும், எவ்வாறு பிரம்பு கொண்டே அடித்தான் = (இரக்கமில்லாமல்) எப்படிப் பிரம்பினால் அவரை மோதினனோ, எ - று.

களந்தைப் பதிவாழிறைவனை யடைதற்கு நல்வினை எப்பொழுதுண்டாகுமோ எனப் பாடியது.

16. இன்றெக்கவேண்டிலெவ்வாறெக்குமோ வெழில்சேர்களந்தைக்
குன்றெக்குங்கோபுரங்கோபுர மொக்குமக்குன்றதுபோல்

அன்றெக்கவேண்டுமென்னல் வினைதீவினையாமிரண்டும்
என்றெக்குமோவினித்தென்களக் காடனையான்பெறவே.

உரை :—எழில் சேர் களந்தை = அழகு அமைந்த திருக்களந்தைப் பதியில், குன்றெக்கும் கோபுரம் = குன்றுனது கோபுரத்தை ஒத்திருக்கிறது, கோபுரம் ஒக்கும் அக்குன்றம் = கோபுரமானது அந்தக் குன்றை ஒத்திருக் கிறது, அதுபோல் = அம்மாதிரியே, அன்று என் நல்வினை தீவினையாம் இரண்டும் ஒக்க வேண்டும் = அக் காலத்திலே (பிறக்கும்பொழுதே) எனது புண்ணியமும் பாவமும் ஆகிய இரு செயல்களும் ஒத்தனவே யடை தல் வேண்டும், இன்று ஒக்க வேண்டில் எவ்வாறு ஒக்குமோ = இப்பொழுது அவைகள் ஒத்திருக்கவேண்டுமென்று விரும்பினால் எப்படி அவை ஒத்தனவே யடையும், இனி தென்களக் காடனை யான் பெறவே = இனிமேல் தென்களந் தைப் பதியிலிருக்கும் சிவபெருமானை நாம் போய் அடைவதற்கு, என்று ஒக்குமோ = எக்காலத்தில் இருவினை ஒப்பு எற்படுமோ ? எ- று.

குறிப்பு :—உயிர்கள் கடவுளை யடைவதற்கு இருவினை யொப்பு என் னும் பக்குவம் எற்பட வேண்டும், அதாவது புண்ணிய பாவப் பயன்களில் ஒத்த வெறுப்பு மனத்தில் அமைதலே யாகும்.

சிவந்தான் மல்லைப் பல்லவனைச் சிறப்பித்துப் பாடியது

17. மாதாம்படியுண்டுமெய்சிவந்தான் குழல்வைத்திசைத்துச்
சேதாம்பலக்கனிவாய்சிவந்தான் செம்மலர்த்திருவின்
தூதாந்தனந்தைத்துரஞ்சிவந்தா னேவர்தூதுசென்று
பாதாம்புயஞ்சிவந்தான்சிவந்தான் மல்லைப்பல்லவனே.

உரை :—சிவந்தான் மல்லைப் பல்லவனே = சிவந்தான் என்ற பெயரை யுடைய கடல் மல்லை என்ற மாபலிபுரத்தில் அரசு செய்த பல்லவ மன்னன், (மன்னவர்கள் விஷ்ணுவின் அம்ச மாதலால்) மா தாம்பு அடி உண்டு மெய் சிவந்தான் = (வெண்ணெய் திருடி உரலில் கட்டுண்டு) பெரிய கயிற்றினால் அடிக்கப்பட்டு மேனி செந்நிறம் அடையப் பெற்றான், குழல் வைத்து இசைத்து = வாயிலே குழலை வைத்து இசை பாடி, சேதாம்பலக் கனிவாய் சிவந்தான் = செவ்வாம்பல் நிறமுடைய மெல்லியவாய் சிவக்கப் பெற்றான், செம்மலர்த் திருவின் = செந்தாமரைப் பூவில் தங்கும் இலக்குமியின் தூது ஆம் தனம் தைத்து உரம் சிவந்தான் = தூது கருவிபோன்ற முலைகள் பொருந்தப் பெற்று மார்பு சிவக்கப் பெற்றான், ஐவர் தூது சென்று = பாண்டவர்கள் ஐவர்களுக்காகத் தூதுபோய், பாதாம்புயம் சிவந்தான் = திருவடிக் கமலங்கள் செந்நிறம் அடையப் பெற்றான், (ஆதலால் சிவந்தா னென்னும் பெயர் அவனுக்கு அமைதலாயிற்று, எ- று.

மல்லைப் பல்லவர்கோன் சோடிக் கடுக்கன்செய்து போட்டதைக் குறித்துப் பாடியது.

18. பாடுந்தமிழ்க்குச்சிவந்தெழுந்தான் மலைப்பல்லவர்கோன்
கோடுஞ்செடியுந்திரியாதிரட்டைக் கடுக்கன்செய்து
போடும்பொழுதென்னபூட்டகமோ வற்பப்புல்லரக்கொண்
டாடும்பொழுதிருகன்னத்திலே நின்றடிக்கின்றதே.

உரை :—சிவந்தெழுந்தான் மல்லைப் பல்லவர்கோன் = சிவந்தெழுந்தாலுயிய மல்லையில் வாழும் பல்லவ மன்னன், காடும் செடியும் திரியாது = வனங்களிலும் சோலைகளிலும் நான் போய் அலையாமல், பாடும் தமிழுக்கு = நான் பாடிய தமிழ் பாட்டிற்கு வெகுமதியாக, இரட்டைக்கடுக்கன் செய்து போடும் பொழுது = இணையான கடுக்கன் தயார் செய்து என் காதில் அணிவிக்கும் பொழுது, என்ன பூட்டகமோ = எவ்வகையான தூப்ப வேலை யமைத்தாலே தெரியவில்லை, அற்பப் புல்லரைக் கொண்டாடும் பொழுது = இழிவான கீழ் மக்களை நான் புகழ்ந்து பாடும்பொழுது, இரு கன்னத்திலே நின்று அடிக்கின்றதே = அது இரு செவிப் புறத்திலும் இருந்து கொண்டு கீழ்மக்களைப் பாடாதே யென்று தாக்குகின்றது, எ - று.

மீனாட்சியம்மையாரை வணங்கியபடியால் இயமனுக்கு பயப்படேனெனச் செருக்குற்றுப் பாடியது.

19. கான்றெண்டனிட்டகனங்குழலாளை யென்கண்மணியைத்
தேன்றெண்டைவாய்ச்சியைத்தென்கூடல் வாழ்சிறுபெண்பிள்ளை
யான்றெண்டனிட்டபொழுதே யியமனெனக்குமடி [யை
ஏன்றெண்டனிட்டவிண்ணப்பமென் றேலையெழுதுவனே.

உரை :—கான்றெண்டனிட்ட கனங்குழலாளை = (அடர்ந்த) காடு வணங்குதற்குரிய நீண்ட கூந்தலையுடைய அம்மையை, என் கண்மணியை = என்து கண்ணின் கருமணிபோல அருமையானவளை, தேன்றெண்டை வாய்ச்சியை = தேன் போன்ற சொல்லையுடைய கோவைப் பழம் போன்ற சிவந்த வாயினை யுடையவளை, தென் கூடல் வாழ் சிறு பெண் பிள்ளையை = அழகிய மதுரைப் பதியில் வீற்றிருக்கும் பாலை வடிவமான அம்மையை, யான் தெண்டனிட்ட பொழுது = நான் வழிபட்டபோதே, இயமன் எனக்கும் அடியேன் தெண்டனிட்ட விண்ணப்பமென்று = இயமன் எனக்குக்கூட அடியேன் வணக்கமாய்ச் செய்யும் வேண்டுகோள் என்று தலைப்பிற் குறித்து, ஓலை எழுதுவனே = ஓலைச்சுருள் வரைந்து அனுப்புவான், எ-று.

மீனாட்சியம்மையார் திருக்கல்யாணத்தைச் சிறப்பித்துப் பாடியது.

20. அண்டத்தமரருமாயனும் வேதனுமந்தணரும்
பண்டெத்தனதவஞ்செய்தனரோ மணப்பந்தலிலே

துண்டப்பிறையணிசொக்கர் கைத்தாலிக்குநீதுணிந்து
கண்டத்தைநீட்டினையே கூடல்வாழுங்கயற்கண்ணியே.

உரை:—கூடல் வாழும் கயற் கண்ணியே=மதுரைப்பதியில் எழுந்தருளி யிருக்கின்ற கயல்போன்ற கண்ணை உடைய உமை யம்மையே, மணப் பந்தலிலே=கலியாணத்திற்கு அமைத்த பந்தலின் கீழ், உண்டப் பிறை யணி சொக்கர் கைத்தாலிக்கு=சந்திரனின் ஒரு கூறுகிய பிறையைத்தரித்த சொக்கலிங்கப் பெருமான் திருக்கையிலுல் கட்டும் திருமங்கல நாணையேற்றுக் கொள்வதற்கு, நீ துணிந்து கண்டத்தை நீட்டினையே=நீ உறுதியுடன் உன் கழுத்தை முன்னுக்கு நீட்டி யருளினை, அண்டத்து அமாரும்=வானுலகத்தி லுள்ள தேவர்களும், மாயனும் வேதனும்=அரியும் அயனும், அந்தணரும்=முனிவர்களும், பண்டு எத்தனை தவம் செய்தனரோ=திருமணத்தைப் பார்ப்பதற்குப் பண்டை நாளில் எவ்வளவு தவம் செய்தார்களோ? எ-று.

மதுரைச் சொக்கநாயகிக்கு மனமிளகாததற்குக் காரண மென்னவென்று விஞ்சியது.

21. அன்பின்றதாயென்றுனைப்பணிந்தா லென்னவதியெல்லாம்
பொற்பின்றபூஷணம்போற்குறித்தாய் புகழ்க்கூடலில்வாழ்
கற்பின்றகட்டிக்கரும்பே யுனக்குக்கன்னெஞ்சதுதான்
வெற்பின்றவாசனையே வுள்ளவாறுவிளம்பெனக்கே.

உரை:—அற்பு ஈன்ற தாய் என்று=அன்பினை விளைத்த அம்மை யென்று, நினைத்து உனைப் பணிந்தால்=உனை வழி பட்டால், என் அவதி யெல்லாம்=என் இடைஞ்சல்கள் யாவையும், பொற்பு ஈன்ற பூஷணம்போற் குறித்தாய்=காதுக்குள் போக விடாமல் வெளியே அழகு செய்யக்கூடிய நகை போல அவற்றைக் கருதினாய், புகழ்க் கூடலில் வாழ் கற்பின்ற கட்டிக் கரும்பே=கீர்த்தி யமைந்த மதுரையில் வீற்றிருக்கின்ற கற்பு வடிவமான கருப்பஞ் சாற்றில் திரட்டிய கற்கண்டு போன்றவளே! உனக்குக் கல் நெஞ் சதுதான்=(என்னிடம் இரக்க மில்லாமல்) உன் திருவுள்ளம் கல்லா யிருக் கிறது அதற்குக்காரணம், வெற் பின்ற வாசனையோ=மலை யரசன் உன்னைப் பெற்றனென்ற தொடர்போ, எனக்கு உள்ளவாறு விளம்பு=உண்மை யான காரணத்தை எனக்குக் கூறுவாயாக, எ-று.

உமாதேவியாரை நோக்கி உன்னுடைய திருவுள்ளம் கல்லைப்போ லிருக்கின்றதே என்று பாடியது.

22. பேயல்லவோவொருவேளை வரந்தந்துபேசிடுங்கல்
லாயல்லவோநின்மனங்கெட்டி யானதுமற்புதந்தான்
நீயல்லவோமதுரேசர்பங் குற்றவணீயெனக்குத்
தாயல்லவோபிள்ளைநானல்ல வோசிவசாம்பவியே.

உரை :—சிவசாம்பவியே = சிவ சம்பந்த முடைய தேவியே! பேயல்லவோ ஒருவேளை வரந்தந்து பேசிடும் = பேய்த்தெய்வம் கூட ஒரு சமயத்தில் கேட்ட வரத்தை யளித்துப் பேசுவதுண்டு, கல்லா யல்லவோ நின் மனங் கெட்டியான தா = கல்லைப்போல உன்னுடைய திருவுள்ளம் இறுகிப்போயிற்று அல்லவா? அற்புதந்தான் = இது ஒரு அதிசயமாக இருக்கிறது, மதுரேசர் பங்குற்றாள் நீ யல்லவோ = மதுரைப் பெருமானுடைய இடப்பாகத்தில் தங்கியிருப்பவள் நீ யல்லவா? நீ எனக்குத் தாயல்லவோ = நீ எனக்கு அன்னையன்றோ? நான் பிள்ளை யல்லவோ = நான் உனக்கு மகனல்லனோ? எ-று.

மீனாட்சியம்மையாரைத் தரிசித்து என் மனக்கவலையைக் கூறினேனதலால் இனியான் எதற்கும் அஞ்சேனெனச் செருக்குற்றுப் பாடியது.

23. பண்டோதரியமறைபாடுங் கூடற்பசுங்கிளியைக்
கண்டோதினேனென்கவலையெல்லா மினிக்காலன்றிண்டு
முண்டோதிவந்திடும்போதம்மை கோயின்முன்னேநிரியும்
குண்டோதரன்கண்டுகொண்டாற் றொடைதட்டிக்கொள்ளுவனே.

உரை:—பண்டு ஓதரிய மறைபாடும் = முற்காலத்தில் ஓதப்பெற்ற அருமையான வேதங்கள் துதித்துக் கூறுகின்ற, கூடல் பசுங்கிளியே = மதுரையிலுள்ள இளங் கிளிபோன்ற அம்மையே, கண்டு = பார்த்து வணங்கி, என் கவலை எல்லாம் ஓதினேனு = எனது கவலைகளையெல்லாம் தெரிவித்தேன், இனி காலன் திண்டு முண்டு ஓதி வந்திடும்போது = இனிமேல் இயமன் தாறுமாறு பேசி என்னிடம் வரும்போது, அம்மை கோயில் முன்னே நிரியும் குண்டோதரன் = அம்பாள் திருக்கோயில் வாசலில் காவலாளாக நடந்துகொண்டிருக்கும் பூதமாகிய குண்டோதரன், கண்டு கொண்டால் தொடை தட்டிக் கொள்ளுவனே = அவனைப் பார்த்தால் சண்டையிட்டு ஓட்டுவதற்குத் தன்னை தயார் செய்துகொள்ளுவான், எ-று.

மதுரைச்சொக்கநாயகியின் முத்து மூக்குத்தியைப்பற்றிப் பாடியது.

24. செகத்தாயெனவந்ததெள்ளமுதே தென்கயிலையெனு
நகத்தார்பணியுங்கயற்கணம்மே நின்னயனத்தினுல்
மிகத்தான்கருநிறங்கொண்ட மையாலும்விளங்குதிரு
முகத்தாமரைக்கொருவண்டானது முத்துமூக்குத்தியே.

உரை:—செகத்தாய் என வந்த தெள்ளமுதே = உலகத்திற்கு அன்னையாக எழுந்தருளிய தெளிந்த அமுதம் போன்றவளே! தென் கயிலை என்னும் நகத்தார் பணியும் = தெற்குக் கயிலாய மென்று சொல்லப்படும் திருக்காளத்தி மலையிலிருப்பவர்கள் தொழுகின்ற, கயற்கண்ணம்மே = கயல் போன்ற கண்ணையுடைய தாயே! நின் முத்து மூக்குத்தி = முத்துக்களா

லாகிய மூக்குத்தியானது, மின்னயனத்தினால் மிகத் தான் கருகிறங் கொண் டுழையால்=உன்னுடைய கண் ஒளி பெற்று தான் மிகுந்த கருப்பு நிறத்தை பொருந்தினமையால், அவ்விளங்கு திருமுகத் தாமரைக் கொருவண்டா னது=அழகிய ஒளி மிக்க திருமுகமாகிய தாமரைப்பூ நடுவிலுள்ள ஒரு வண்டுபோலத் தோன்றலாயிற்று, எ - று.

இதுவுமது.

25. செகமதின்மிக்கமதுரையின் மாணிக்கஞ்செட்டியதாய்
மிகமதிரத்தினம்விற்றசொக் கேசரைமேவியன்பாச்
சுகமதிதந்தெனையாள்கயற் கண்ணிநின்சுந்தரமா
முகமதியின்றகதிர்மணியோ முத்துமூக்குத்தியே.

உரை:—சுகமதி தந்தெனை யாள் கயற்கண்ணி=எனக்கு நல்லறிவு கொடுத்து ஆட்கொள்ளுகின்ற மீனாட்சியே! நின் முத்து மூக்குத்தியே=நின் முத்து மூக்குத்தியானது, செகமதில் மிக்க மதுரையில்=பூமியிற் சிறந்த பெயர் பெற்ற மதுரை நகரத்தில், மாணிக்கம் செட்டியதாய்=மாணிக்க வியாபாரியாய், மிக மதிரத்தினம் விற்ற சொக்கேசரை=மிகுந்த விலை பெறு மான மணிகளை விற்பனை செய்த சொக்கலிங்கப் பெருமானை, அன்பாய் மேவி =நேசத்தோடு கலந்து, சுந்தர மாமுகமதி=அழகிய திருமுகமாகிய முழுச் சந்திரன், ஈன்ற கதிர் மணியோ=பெற்ற ஒளி வீசும் இரத்தினமோ? எ-று.

இதுவுமது.

26. பொன்னேமலயத்வசனுகிய புயலீன்றெடுத்த
மின்னேயுனதுவதனத்தையே வெண்மதியமெனத்
தன்னேயத்தாலொருதாரகையா னதுதான்விரும்பி
முன்னேகிடந்தினம்பார்க்கின்றதோ முத்துமூக்குத்தியே.

உரை:—பொன்னே=பொன் மயமான அம்மையே, மலயத்துவசனுகிய புயலீன்றெடுத்த மின்னே=மலயத்துவச பாண்டியன் என்னும் மேக மானது பெற்றுக் கொடுத்த மின்னற் கொடிபோன்றவளே! முத்து மூக் குத்தியே=முத்து மூக்குத்தியானது உனது வதனத்தையே வெண்மதிய மென=உனது திருமுகத்தையே வெள்ளை நிறமுடைய சந்திரனுக் கருதி, தன் நேயத்தால்=தனது ஆசை காரணமாக, தான் விரும்பி=விருப்பப்பட்டு, முன்னே கிடந்து இன்னம் பார்க்கின்றதோ=உன் முகத்திற்கு முன் பாகத் தில் தங்கி அதனை நோக்கிக்கொண்டிருப்பதாகிய, ஒரு தாரகை=ஒரு நட் சத்திரம் போலும், எ-று.

மதுரைச் சொக்கநாதர் அழகிய திருவடியைத் தொண்டர்கள் தரிசித்ததைக் குறித்துப் பாடியது.

27. வடிகொண்டசெந்தமிழ்க்கூடலில் வாழ்சொக்கர்வந்திதரும்
பிடிகொண்டபிட்டுக்குமண்ணே சுமந்துபெருமகநக்

கொடிகொண்டவெற்றித்துரைப் பாண்டியன்கைக்கொண்டுபிரம்
படிகொண்டபோதிலடியாரவர் பொன்னடிகண்டதே. [பா

உரை :—வடி கொண்ட செந்தமிழ்க் கூடலில் வாழ் சொக்கர்=வடித் தெடுத்த தூய நற்றமிழ் வழங்கும் மதுரை நகரில் வீற்றிருக்கும் சொக்கலிங் கப் பெருமான், வந்தி தரும் பிடிகொண்ட பிட்டுக்கு மண்ணே சுமந்து= வந்தி என்ற பிட்டு வாணிச்சி தருகின்ற ஒரு கைப்பிடியளவுள்ள பிட்டுக்காக மண் அள்ளி, பெரு மகரக் கொடிகொண்ட=பெருமையுடைய மீனக் கொடியை உயர்த்திய, வெற்றித்துரைப் பாண்டியன்கை=செயத்தலைவனுகிய பாண்டியன் கையிலுள்ள, கொடும் பிரம்பால் அடி கொண்டபோது=வளைந்த பிரம்பினுல் அடி வாங்கியபோ தி தான், அடியார் அவர் பொன்னடி கண் டதே=தொண்டர்கள் அவருடைய அழகிய திருவடியைப் பார்த்தார்கள் போலும், எ - று.

கடம்பவனநாதரைத் தரிசித்தாலல்லாமல் என் மனக்கவலைகள் நீங்கமாட்டாவெனப் பாடியது.

28. அக்குவடம்புனையானந்த வெள்ளத்தையங்கயற்கண்
பக்கத்திருந்தபவளாசலத்தைப் பழம்பொருளை
முக்கட்கனியைக்கடம்பாடவிக்கண் முளைத்தெழுந்த
சொக்கைக்கண்டாலன்றித்தீராது நெஞ்சிற்றுயரங்களே.

உரை:—அக்கு வடம்புனை ஆனந்த வெள்ளத்தே=எலும்பு மாலை யணிந்த பேரின்பப் பெருக்கான பிரானை, அங்கயற்கண் பக்கத்திருந்த பவளாசலத்தை=மீனாட்சியைப் பாகத்திலுடைய பவளமாலை போல்வாரை, பழம் பொருளை=எல்லாவற்றிற்கும் முற்பட்ட பழம் பொருளை, முக்கட் கனியை=மூன்று கண்களையுடைய இனிய கனிபோல்வாரை, கடம்பாட விக்கண் முளைத்தெழுந்த சொக்கை=கடம்பமாகக் காட்டில் தோன்றி வளங் கிய அழகனை, கண்டாலன்றி = தரிசித்தாலல்லாமல், என் நெஞ்சில் துய ரங்கள் தீரா=என் உள்ளத்திலுள்ள கவலைகள் நீங்கமாட்டா, எ - று.

கூடற்பிராட்டி தம்மீதுவைத்த அன்பின் பெருக்கைக் குறித்துப் பாடியது.

29. பொன்போலுங்கூடற்பிராட்டியைச் சேவிக்கப்போம்பொழுதில்
என்பால்வருமெதிர்நின்று பேசுமென்றலைமேல்
தன்பாதஞ்சூட்டுவுங்கேட்ட தெல்லாந்தந்தருளுமே
அன்பாகவந்திடுவாள் கலிகாலமென்றஞ்சுவனே.

உரை :—பொன்போலும் கூடல் பிராட்டியை=பொன்னைப்போலத் தூய்மையான மதுரைப்பதியிலுள்ள அம்மையை, சேவிக்கப் போம் பொழு தில்=வணங்க நான் செல்லுங் காலத்தில், என்பால் வரவும்=என்னிடம்

வந்து காட்சி கொடுப்பதற்கும், எதிர் நின்று பேசவும் = முன்னுக எழுந் தருளி வார்த்தை சொல்லவும், என் தலைமேல் தன் பாதம் சூட்டவும் = என்னுடைய தலையின்மீது தன்னுடைய திருவடிகளை வைத்தருளவும், கேட்டதெல்லாம் தந்து அருளுமே = நான் வேண்டிய எல்லா வரமும் ஈவதற்கும், அன்பாக வந்திடுவாள் = தயவோடு தோன்றக் கூடியவள், கலி காலம் என்று அஞ்சுவளே = இப்போது கலியுகம் ஆதலால் கூடாதென்று பயப்படுகின்றாள், எ - று.

சொக்கநாதரை விளித்து நான் என் வினைப்பயனை யெவ்வாறு கடந்து செல்வேனெனப் பாடியது.

30. உரையேனுன்பேரையுணரே னின்சீரையுனக்கருதிக்
கரையேனெவ்வாறுகடப்பேன் வினையைக்கடந்தகுண
வரையேயருட்பெருவாரிதியே மதுராபுரிக்குத்
துரையேயழகியசொக்கே தமிழ்தந்தசுந்தரமே.

உரை :—கடந்த குணவரையே = எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட நற் குணக் குன்றமே! அருட் பெரு வாரிதியே = பெருங் கருணைக்கடலே! மதுராபுரிக்குத் துரையே = மதுரைமா நகர்க்குத் தலைவனே! அழகிய சொக்கே = அழகான சொக்கலிங்கப் பெருமானே! தமிழ் தந்த சுந்தரமே = தமிழ் நூல்கள் அளித்த சோமசுந்தரப் பெருமானே! உன் பேரை உரை யேன் = உன் திருநாமத்தை நான் சொல்லுவதில்லை, நின் சீரை யுணரேன் = உன் புகழை அறிவதில்லை, உனைக் கருதிக் கரையேன் = உன்னை எண்ணி மனமுருக மாட்டேன், எவ்வாறு வினையைக் கடப்பேன் = எவ்விதத்தில் நான் வினைப்பாசத்தை வென்று அப்பாற் செல்வேன், எ - று.

சொக்கநாயகியைத் தரிசித்தோர் சொர்க்க லோகத்தை யடைவாரெனப் பாடியது.

31. முக்கட்பராபரைசொக்கப் பிரானெனுமுன்னவனே
டொக்கச்சிறந்தகயற்கண்ணி சந்நிதியுற்றுமிகச்
செக்கச்சிவந்தபொற்றுமரைப் பாததெரிசனைக்கே
பக்கத்தடுத்தவர்சொர்க்கத்தினை யேட்டிப்பார்ப்பவரே.

உரை:—முக்கட் பராபரை = மூன்று கண்களையுடைய முழுமுதற் செல்வி, சொக்கப் பிரானென்னும் முன்னவனோடு = சொக்கலிங்கப் பெருமா னென்னும் தலைவனோடு, ஒக்கச் சிறந்த கயல் கண்ணி = ஒரு தன்மையாக மதிக்கப்படுகின்ற மீனாட்சியின், சந்நிதி யுற்று = சந்நிதானத்திற் சென்று, மிகச் செக்கச் சிவந்த பொற்றுமரை = அளவற்ற சிவப்புடைய பொன் தாமரைபோன்ற, பாத தெரிசனைக்கே = திருவடிக் காட்சியின் பொருட்டு, பக்கத் தடுத்தவர் = அருகில் நெருங்கியவர்கள், சொர்க்கத்தினை ஏட்டிப் பார்ப்பவரே = விண்ணுலகத்தை எட்டிப் பார்ப்பவராவர், எ-று.

மீனாட்சி யம்மையாரை ஆதரவு செய்யாமல் நட்டாற்றில் கைவிடாதே எனப் பாடியது.

32. மட்டார்குழலங்கயற்கணம்மே யிம்மட்டென்றுதொகைக்
கெட்டாதெனதுதுயரநின்பாற் சொல்லியேசலிக்க
ஒட்டாரநீசெய்யலாகாதுபா ருன்னடிமைதன்னை
நட்டாற்றிற்கைவிட்டிடாதே பழிவெகுநாணிற்குமே.

உரை:—மட்டார் குழல் அங்கயற்கண் ணம்மே=தேன் நிறைந்த பூங் கூந்தலையுடைய மீனாட்சி யம்மையே! எனது துயரம்=எனது கவலைகள், இம்மட்டு என்று தொகைக்கு எட்டாது=இத்தனைதானென்று எண்ணி அள விடற்கரிபன, நின்பால் சொல்லியே சலிக்க=உன்னிடத்தில் விண்ணப்பஞ் செய்து தளரும்படி, ஒட்டாரம் நீ செய்யலாகாது=நீ பிடிவாதம் பண்ணுதல் கூடாது, உன் அடிமை தனைப்பார்=உன் அடியவனாகிய என்னைக் கண் பார்ப்பாயாக, நட்டாற்றில் கை விட்டிடாதே=ஆற்று வெள்ளத்தின் நடுவில் கைவிடுதல்போல ஆதரவு அளிபாகிருத்தல் கூடாது, பழி வெகு நாள் நிற்குமே=(அப்படிக் கைவிட்டால்) அதனாலாகிய இழிச்சிச் சொல் நெடுங் காலம் நிலைத்திருக்கும், எ-று.

சோமசுந்தரக் கடவுளைக் குறித்துப் பாடியது.

33. விரித்தான்சடையைமகமேரு வாசுகிவில்லைவிட்டுச்
சிரித்தான்புரத்தையெரித்தான் பரகுருதேசிகன்முன்
உரித்தான்கரியையுடுத்தான் பகிரண்டத்துள்ளுலகும்
பரித்தான்மதுரைதரித்தான் சவுந்தரபாண்டியனே.

உரை:—சவுந்தர பாண்டியனே=சோமசுந்தர பாண்டியன், விரித் தான் சடையை=மிகுந்த சடைபோடு விளங்கினன், மகமேரு வாசுகி வில்லை விட்டு=மகாமேருவாகிய வில்லையும் வாசுகிபாகிய அதன் நாணையும் கை விட்டு, சிரித்தான்=நகைத்து, புரத்தை யெரித்தான்=முப்புரங்களை எரித்து அழித்தான், பரகுரு தேசிகன்=மேலாகிய ஞான ஆசிரியன், முன் கரியை உரித்தான்=முன்னாளில் யானையைத் தோலுரித்து, உடுத்தான்= அதனை ஆடையாக அணிந்தான், பகிர் அண்டத்துள் உலகம் பரித்தான்= வெளியே உள்ள அண்டங்களைச் சார்ந்த உலகங்களைக் காப்பாற்றினன், மதுரை தரித்தான்=மதுரையில் வசித்தான், எ-று.

மீனாட்சியம்மையாரை ஓர் நாள் வணங்கினால் விண்ணுலகத்தை யடையலாமெனப் பாடியது.

34. மைக்கார்குழற்பெண்வடிவாளைத் தென்னவன்மாமகளை
அக்காளையோன்பங்கிலாத்தாளை மாறங்கையானவளைத்

திக்கார்தொழுங்கயற்கண்ணுமே யோர்தினஞ்சேவைசெய்தால்
எக்காலமுமவர்சொர்க்காதி போகத்திருப்பவரே.

உரை :—மைக்காற் குழற் பெண் வடிவாளே = மேகம் போன்ற கரிய கூந்தலையுடைய மாது வடிவங்கொண்டவளே, தென்னவன் மாமகளே = பாண்டியனது பெருமை பொருந்திய புதல்வியை, அக் காளையோன் பங்கில் ஆத்தாளே = அந்தக் காளை வாகனத்தையுடைய பெருமான் பாகத்தில் அமர்ந்த தாயை, மால் தங்கையானவளே = பெருமாளுக்குச் சகோதரியான வளே, திக்கார் தொழும் கயற் கண்ணுளே = எத்திசையினரும் வழிபடுகின்ற மீனாட்சியை, ஓர் தினம் சேவை செய்தால் = ஒரு நாள் வணங்கினால், அவர் = அப்படி வணங்கியவர், எக்காலமும் = எப்போதும், சொர்க்காதி போகத்திருப்பவரே = விண்ணுலகம் முதலிய சிறந்த அனுபவங்களையுடைய இடங்களில் தங்குபவராவர், எ-று.

மீனாட்சியம்மையின் திருவடிகளைத் தொழுதேனுதலின் மறலிக்குப் பயப்படேன் எனப் பாடியது.

35. வண்டிட்டகூந்தலும்வாரிட்ட கொங்கைவரைகளுங்கற்
கண்டிட்டசொல்லங்கயற்கண்ணி பாதமுங்கைதொழுதேள்
தண்டிட்டடிக்குமறலிவந்தாற் சன்னையிட்டுநகைத்
துண்டிட்டுவாசிறுபிள்ளாயென் றுருக்கனுப்புவனே.

உரை :—வண்டிட்ட கூந்தலும் = வண்டுகள் நெருங்கிய தலையும், வாரிட்ட கொங்கை வரைகளும் = கச்சு உடுத்த முலைபாகிய மலைகளும், கற்கண்டிட்ட சொல் = கற்கண்டு கலந்தாற்போன்ற மொழியுமுடைய, அங்கயற்கண்ணி பாதத்தை கைதொழுதேன் = அழகிய மீனாட்சியின் திருவடிகளைக் கும்பிட்டேன், தண்டு இட்டு அடிக்கும் மறலி வந்தால் = தண்டினால் தாக்குகின்ற காலன் என்னிடம் வந்தால், சன்னையிட்டு நகைத்து = சைகை காட்டி சிரித்து, சிறு பிள்ளாய் = சிறிய குழந்தையே! உண்டிட்டு வாவென்று = போய்ச் சாப்பிட்டு வருக என்று, ஊருக்கனுப்புவன் = அவனுடைய தலத்திற்குத் திருப்பி விடுவேன், எ-று.

மீனாம்பிகையே காத்தருள்வாயாக எனப் பாடியது.

36. பொன்னேபொருந்தற்புதமே பொலிந்தமென்பூந்திருவே
தென்னேசிறந்தசெந்தேனே திருந்தருட்சின்மயமே
அன்னேயமுதேயருளே யமரர்க்கரும்பொருளே
மின்னேவியன்சுடரே மதுராபுரிமீனம்மையே.

உரை :—பொன்னே = பொன்போலப் புனிதமானவளே! பொருந்த அற்புதமே = அதிசயம் பொருந்திய அம்மையே, பொலிந்த மென் பூந்திருவே =

வினக்கமுடைய மெல்லிய தன்மையுடைய அழகிய திருமகளே, தென்னே = அழகு வடிவே, சிறந்த செந்தேனே = உயர்ந்த செம்மையான தேன் போல இனிமை பயப்பவளே, திருந்து அருள் சின்மயமே = திருத்தம் அடைவதற்கு ஏதுவாகிய கருணையோடு கூடிய ஞான நிறைவே, அன்னே = தாயே! அமுதே = அமுதம்போல்பவளே, அருளே = கருணை வடிவானவளே, அமரர்க்கு அரும் பொருளே = விண்ணவர்கள் காண்பதற்கரிய பரம்பொருளே, மின்னே = மின்போன்ற இடையையுடையவளே, வியன்சுடரே = பரஞ்சோதியே, மதுராபுரி மீனம்மையே = மதுரையில் வீற்றிருக்கின்ற மீனாட்சித் தாயே, (காத்தருள்க.) எ - று.

மதுரை மீனாம்பிகையைக் குறித்துப் பாடியது.

37. தேட்டேதுமில்லைகொடுப்பாரு மில்லைதரித்துழவில்
பூட்டேருமில்லையிதெல்லா மெம்பாலிலைபூர்ணவரங்
கேட்டேனதற்குப்பிரிதில்லையே யினிக்கேட்கவுநான்
மாட்டேனுன்மேற்பழிபோட்டேன் மதுரைமனோன்மணியே.

உரை :—தேட்டேதுமில்லை = சம்பாதித்த பொருள் யாதும் இல்லை, கொடுப்பாருமில்லை = பொருள் ஈகின்றவருமில்லை, தரித்து உழவில் = திறமையான உழவு வேலைக்கு, பூட்ட ஏரும் இல்லை = கட்டிச் செலுத்துவதற்கு ஏரும் இல்லை, இதெல்லாம் எம்பால் இல்லை = இதுபோன்ற கருவிகள் ஒன்றும் என்னிடமில்லை, பூரண வரம் கேட்டேன் = முழுவதும் வேண்டுமென்ற வரத்தை வேண்டினேன், மதுரை மனோன்மணியே = மதுரையில் வாழ்கின்ற சதாசிவன் தேவியே, அதற்குப் பிறிதில்லையே = நான் கேட்டதற்குப் பதில் நீ அருளவில்லையே, இனி கேட்கவு நான் மாட்டேன் = இனிமேல் நான் பிரார்த்தனை செய்யமாட்டேன், உன் மேல் பழி போட்டேன் = உன்மேல் குற்றம் சுமத்தினேன், எ-று.

38. உள்ளக்கவலையெலாம் விள்ளும்போதுமுனதுமனம்
எள்ளத்தனையிரங்காதிருந்தா யெளியேனினிமேல்
தள்ளப்புறத்தினிலென்றுலும் போவதுதானிலப்பொன்
வள்ளத்தமுதுண்ணுங்கிள்ளாய் கடம்பவனவல்லியே.

உரை :—பொன் வள்ளத்து அமுதுண்ணுங் கிள்ளாய் = பொன் வட்டிலில் அமுதம் பருகுகின்ற கிளிபோன்றவளே, கடம்பவன வல்லியே = கடப்பங் காட்டிலுள்ள கொடி போன்றவளே, உள்ளக் கவலை எல்லாம் விள்ளும்போதும் = என் நெஞ்சிலுள்ள துயரங்களை எல்லாம் தெளிவாகக் கூறுங் காலத்திலும், உனது மனம் எள்ளத்தனை இரங்காதிருந்தாய் = உன் நெஞ்சத்தில் எள்ளளவு கூடத் தயவு வையாதிருந்தாய், எளியேன் இனிமேல் = வறியவனாகிய என்னை எதிர்காலத்தில், தள் அப்புறத்தினில் என்று

லும்=வெளியே தள்ளும்படி கட்டளையிட்டாலும், போவதுகானில்லை=நான் உன்னை விட்டுப் பிரிந்து செல்வதில்லை, எ - று.

39. எப்படியெப்படிச்சொன்னலு நானிரங்கேனெனவே
அப்படியப்படிநீயிருக்கின்ற வதிசயத்தை
இப்படியிப்படியென்றுகிலு மெனக்கேதெரியச்
செப்படிசெப்படியம்மா மதுரைச்சிவாநந்தியே.

உரை :—மதுரைச் சிவாநந்தியே=மதுரையில் வீற்றிருக்கும் சிவாநந்த வடிவானவளே, எப்படி எப்படிச் சொன்னாலும் நான் இரங்கேன் எனவே= எந்தெந்த முறையில் என் குறைகளைக் கூறினாலும் நான் தயவு வைக்க மாட்டேன் என்றே, அப்படி அப்படி நீ யிருக்கின்ற அதிசயத்தை=சொல் வதற்கெல்லாம் சும்மாயிருக்கின்ற அற்புத காரணத்தை, இப்படி இப்படி என்றுகிலும்=இன்னின்ன முறையில் என்று விவரமாகவாவது, எனக்கே தெரியச் செப்படி செப்படி அம்மா=எனக்காவது தெரியும்படி தாயே நீ விரைவாகக் கூறியருள்வாய், எ - று.

40. செப்பத்திலுன்னைத்தொழுவாயிரங் கண்ணுஞ்செல்லும்பொல்லேன்
தப்பத்தவறத்தொழுதாலுஞ் சொக்கர்தடம்புயத்துக்
கொப்பத்திரண்டகொங்காயுன் னவயவமொன்றுக்கொன்று
மூப்பத்திரண்டுகண்வேண்டுங் கண்டாயென்முகத்தினுக்கே.

உரை:—சொக்கர் தடம்புயத்துக் கொப்பதிரண்ட கொங்காய்= சொக்கலிங்கப் பெருமானது விசாலமான தோள்களுக்கு இணங்கிய முறை யில் திரட்சியுடைய தனமுடையவளே, செப்பத்தில் உன்னைத் தொழ= செவ்வையான முறையில் உன்னைக் கண்டு வழிபட, ஆயிரங் கண்ணும் செல் லும்=ஆயிரங் கண்கள் கூடவேண்டியதா யிருக்கும், புல்லேன் தப்பத் தவ றத் தொழுதாலும்=நீயஞ்ச நான் மிகப் பிழையாக வழிபடுவதானாலும், உன் அவயவம் ஒன்றுக்கு ஒன்று=உன்னுடைய உறுப்புக்கள் ஒவ்வொன் றையும் பார்ப்பதற்கு ஒவ்வொரு கண்ணாக, என் முகத்தினுக்கே மூப்பத் திரண்டு கண் வேண்டுங் கண்டாய்=என் முகத்திற்கு மூப்பத்திரண்டு கண்கள் இருக்க வேண்டும், எ - று.

பிட்டுவாணிச்சியின் வல்வினைகளையெல்லாம் வையைநதியில் நகிக்கச்செய்தீர் எனப் பாடியது

41. துடியார்கரத்துமதுரேசரே யும்மைத்துள்ளியசேற்
கொடியானடித்ததுங்குற்றமன்றே கிழக்கோதையிவள்
அடியாரென்றேசுட்டபிட்டை யெல்லாமள்ளியள்ளித்தின்று
வடியாநதியிற்கரைத்துவிட்டீ ரவள்வல்வினையே.

உரை :—துடியார் கரத்து மதுரேசரே = உடுக்கு அமைந்த திருக் கையையுடைய மதுரைப் பெருமானே, உம்மைத் துள்ளிய சேல் கொடி யான் அடித்ததும் = துடிக்கின்ற மீன் கொடியை உடைய பாண்டியன் உம்மை அடித்தது, குற்றம் அன்றே = பிழையல்ல, கிழக்கோதை யிவள் = வயது சென்ற மாதாகிய பிட்டு வாணிச்சி, அடியாளென்றே = உம்முடைய தொண்டாராக எண்ணி, சுட்ட பிட்டை யெல்லாம் அள்ளி அள்ளித் தின்று = அவள் வெக்து கொடுத்த பிட்டு முழுவதையும் மிக விருப்பத்தோடு அருந்தி, அவள் வல்வினேய = அவளுடைய திண்ணமான வினைகளை யெல்லாம், வடிவா நதியிற் கரைத்துவிட்டீர் = ஆற்று வெள்ளத்தில் நசிக்கச் செய்தீர், எ - று.

குறிப்பு :—வல்வினையே என்பதற்கு அவளுடைய தொழிற் பங்கை என்று பொருள் கொண்டு அதைச் செய்யாமல் விட்டீரென்ற தொனிப் பொருள் கூறுவதுண்டு.

சிவகாமசுந்தரியைத் துதித்துப் பாடியது.

42. கரஞ்சொன்னங்கண்டதெந்நாளோ தொடுத்தகலிக்கெவர்கள்
உரஞ்சொன்னதோவந்திறுத்த திவ்வேளையுதவுனக்கே
பரஞ்சொன்னேனின்னம் பராமுகமேதிதுபத்துலக்ஷம்
தரஞ்சொன்னதாயெண்ணுவாய் சிவகாமசவுந்தரியே.

உரை:—சிவகாம சவுந்தரியே = சிவகாம சுந்தரித் தாயே, கரம் சொன் னங் கண்டது எந்நாளோ = என்னுடைய கை எக்காலத்திலே பொன்னைப் பார்த்தது, தொடுத்த கலிக்கு = தொடர்ச்சியாய் உள்ள தரித்திரத்திற்கு, எவர்கள் உரம் சொன்னதோ = யார் என்னைத் திண்ணமாகப் பற்றும்படி கற்பித்தார்களோ, வந்திருந்ததிவ்வேளை = இந்தச் சமயத்தில் அது வந்து தங்கியது, உதவு = நீ துணை செய்வாயாக, உனக்கே பரம் சொன்னேன் = உனக்கே அப் பொறுப்பு என்று நான் தெரிவித்துவிட்டேன், இன்னம் பரா முக மேது = இனியும் கவனிக்காதிருப்பது எதனால், இது பத்து லக்ஷம் தரம் சொன்னதாய் எண்ணுவாய் = இதனைப் பத்து நூறாயிரம் முறை செபித் துக் கூறியதுபோலத் திருவுளம் பற்றுவாயாக, எ - று.

போஜராஜன் ஈகைத்தன்மையைப்பற்றிப் பாடியது.

43. ஒருபாதிமால்கொளமற் றொருபாதியுமையவள்கொண்
டிருபாதியாலுமிறந்தான புராரியிருநடியோ
பெருவாரிதியிற்பிறைவானிற் சர்ப்பமபிலத்திற்கற்ப
தருவானபோஜகொடையுன் கையோடென்கைதந்தனனே.

உரை:—கற்ப தருவான போஜ = கற்பக மரத்தைப்போன்ற போஜ மன்னனே, ஒரு பாதி மால் கொள = சிவபெருமானுடைய திருமேனியில்

ஒரு பாதியைப் பெருமாள் எடுத்துக்கொள்ள, மற்றொரு பாதி உமையவள் கொண்டு = இன்னொரு பாதியைப் பார்வதி எடுத்துக்கொள்ளவும், புராரி யிரு பாதியாலும் இறந்தான் = திரிபுரமெரித்த கடவுள் இரண்டு பாதி யளவிலும் இல்லாதவனானான், இரு நதியோ = பெரிய கங்கையாற்றையோ, பெரு வாரிதியில் = விசாலமான சமுத்திரத்திலும், பிறைவானில் = பிறையை வானத்திலும், சர்ப்பம் பிலத்தில் = பாம்பைப் பொந்துக்களிலும் செல்ல விடுத்து, கொண்ட உன்கையொடு என்கை தந்தனனே = வள்ளல் தன்மையை உன் கையிலும் பிச்சை ஓட்டினை என் கையிலும் அளித்தான், எ - று.

பாலனைப் பழித்தல்.

44. அரும்பாலகாமுனம்பூமணஞ் சொற்பொருளாகமுயிர்
கரும்பாஞ்சுவையெள்ளுமெண்ணெயும்போலொத்தகாதலரைப்
பெரும்பாலினல்லன்னங் கங்காசலத்தைப்பிரிப்பதுபோல்
கரும்பாம்புலவர்யமனுலை செக்கெனத்தோன்றினையே.

உரை :—அரும் பாலகா = அருமைக் குழந்தையே, முனம் = உன்னைப் பெறுவதற்கு முன்னே, பூமணம் = மலரும் வாசனையும் போலவும், சொல் பொருள் = சொல்லும் பொருளும் போலவும், கரும்பாம் சுவை = கரும்பும் அதன் இத்திப்புப் போலவும், எள்ளும் எண்ணெயும் = எள்ளும் எண்ணெயும் போலவும், ஆகம் உயிர் ஒத்த காதலரை = என்னோடு உடலும் உயிரும் இணைந்து வாழ்ந்த தலைவனை, பெரும்பாலின் நல்லன்னம் கங்கா சலத்தைப் பிரிப்பதுபோல = அறிவுடைய அன்னமானது மிகுந்த பாலிலிருந்து அதி லுள்ள கங்கைநீரைப் பிரிப்பது போலவும், சுரும்பு = வண்டு (மலரிலிருந்து தேனைப் பிரிப்பது போலவும்), ஆம் புலவர் = தக்க கல்விமான்கள் (நல் லதைத் தீயதினின்று பிரிப்பது போலவும்), யமன் = யமன் (உடலிலிருந்து உயிரைப் பிரிப்பது போலவும்), ஆலை = ஆலை (கரும்பினின்று சாற்றைப் பிரிப்பது போலவும்), செக்கு = செக்கு (எள்ளினின்று எண்ணெயைப் பிரிப்பது போலவும் தோன்றினையே = என்னிடமிருந்து பிரித்தற்குப் பிறந்தாயே, எ-று.

இதுவுமது.

45. அரும்பாக்கியகொங்கைபாலாக்கியு முங்களப்பனெஞ்சை
இரும்பாக்கியென்னெஞ்சைப் பித்தளையாக்கிவ்வேந்திழையைக்
கரும்பாக்கியென்னையுமவேம்பாக்கி யிவ்வண்ணங்கண்டனையே
பெருமபாக்கியமல்லவோமகனே யுனைப்பெறறதுவே.

உரை:—மகனே = புதல்வனே! அரும்பாக்கிய கொங்கை பாலாக்கி யும் = மலர் மொட்டுப்போன்று இருந்த தனங்களைப் பால்மயமாகச் செய்தும், உங்கள் அப்பன் நெஞ்சை இரும்பாக்கி = உன் தந்தையின் உள்ளத்தை

இரும்புபோலக் கடினமாக்கியும், என்னெஞ்சைப் பித்தனேயாக்கி = என் மனதைப் பித்தனேபோல அடிபடும்படி செய்தும், அவ் வர்த்திழையைக் கரும் பாக்கி=உன் தந்தை விரும்புகின்ற அந்தப் பெண்ணே அவருக்குக் கரும்பு போல இனியவளாக்கியும், என்னையும் வேம்பாக்கி=என்னே அவருக்குக் கசக்கும்படி செய்து, அவ்வண்ணங் கண்டனையே=இம்மாதிரி நிலைமையை உண்டாக்கினையே, உன்னைப் பெற்றது பெரும் பாக்கிய மல்லவோ=நீ பிறந்தது பெரிய கல்வினைப் பயன் ஆகுமா ? எ-று.

கல்விமேற் பிரிதலைத் தடுத்தல்.

46. விண்ணுக்குமாமதிகாய வெங்காமவெரிகொளுந்தப்
பண்ணுக்குமாமொழிமாதங்கமாம் பஞ்சபூதியம்போம்
கண்ணுக்குமூக்குச்செவி யாக்கையற்றகடத்திலங்கம்
பெண்ணுக்குவார்தமைப்போ லோதிவாரும்பிரிபவரே.

உரை :—விண் ஆக்கு மாமதி காய = வானத்தில் ஒளியுண்டாக்கும் பெருமையுடைய சந்திரன் (எனது பெண்ணை) வெதுப்பவும், வெங்காம வெரி கொளுந்த=கொடிய காதல் நெருப்பானது அவளைச் சுடவும் இருப்ப தால், பண்ணுக்கு மா மொழி மாது=இன்னிசை பயிலும் பெருஞ் சொல் லுடைய எனது மகளானவள், அங்கமாம்=மெலிந்து எலும்பளவா யிருப் பாள், பஞ்ச பூதியம் போம்=ஐம்பூதக் கூட்டுறவாலாகிய தேகம் ஒழிந்து போம், பிரிபவரே=இவளைப் பிரிகின்ற தலைவரே! கண்ணுக்கு மூக்குச் செவி யாக்கையற்ற=கண்ணும் நாவும் மூக்கும் காதும் மெய்யும் இல்லாத, கடத்தில் அங்கம்=குடத்தில் இருந்த எலும்புக்கூட்டை, பெண்ணுக்குவார் தமைப்போல் ஓதிவாரும்=பெண்ணுக உயிர்ப்பித்த திருஞானசம்பந்தரைப் போலக் கல்வி கற்று வருவீராக, எ - று.

ஒருவன் ஒருபெண்ணேநோக்கி உன்குறியாகிய பொய்கையிற் குதித்து இறப்பேனெனப் பாடியது.

47. உனக்கின்றியான்செய்தகுற்ற மொன்றில்லையுனைப்பிரிந்தால்
வனக்குன்றிலேறிவிழவறியேன் வண்மைசேர்மயிலே
எனக்கென்றுவட்டமிட்டண்ணந்து விம்மியிருக்குமுன்றன்
தனக்குன்றிலேறிவிழுவேனின் னல்குற்றடாகத்திலே.

உரை :—வண்மைசேர் மயிலே=வனம்நிறைந்த மயில்போன்ற சாயலே யுடையவளே! உனக்கின்று யான்செய்த குற்றம் ஒன்றில்லை=உனக்கு இப் போது நான் செய்த பிழை யாதும் இல்லை, உனைப் பிரிந்தால்=உன்னைப் பிரிய நேரிட்டால், வனக்குன்றில ஏறிவிழ அறியேன் = காட்டில் இருக்கும் மலைமீதேறிக் கீழே குதிப்பது எனக்குத் தெரியாது, எனக்கென்று வட்ட

மிட்டு அண்ணுந்து விம்மி இருக்கும்=எனக்கு உரியதாக வட்ட வடிவாய் மேல்நோக்கி எழுந்து பருத்திருக்கின்ற, உன்றன் தனக்குன்றிலேறி = உனது முலையாகிய மலையிலேறி, நின் அல்குல் தடாகத்திலே விழுவேன்=உன் குறியாகிய பொய்கையிற் குதிப்பேன், எ - று.

திருச்செந்தூர் முருகக்கடவுளைக் குறித்துப் பாடியது.

48. சுண்ணும்புதீட்டநல்லாள்காட்ட மோதிரஞ்சூட்டமலர்க்
கண்ணுரைக்கூட்டவிரனின் கிருக்கக்கதிர்க்கம்பிபோல்
எண்ணுநடுவிரற்கேதா முலோபருக்கேதுகண்டாய்
கண்ணுர்நுதலண்ணல்சேய்வணிகா செந்தில்காத்தவனே.

உரை :—கண்ணுர் நுதல் அண்ணல் சேய்=கண்பொருந்திய நெற்றியையுடைய முதல்வனது புதல்வனே! வணிகா=செட்டியென்ற பெயருடையவனே! செந்தில் காத்தவனே=திருச்செந்தூரில் நெடுநாள் தங்கினவனே! சுண்ணும்பு தீட்ட=சுண்ணும்பு தொட்டுத் தடவப்பெருவிரலும், நல்ல ஆள் காட்ட=தக்கபடி மனிதரைச் சுட்டிக்காட்டச் சுட்டுவிரலும், மோதிரம் சூட்ட=மோதிரம் அணிவதற்கு ஆழிவிரலும், மலர்க் கண்ணுரைக் கூட்ட=பூப்போன்ற கண்களையுடைய பெண்களை இணைக்கச் சுண்டுவிரலும், விரல் நான்கு இருக்க=(ஆக) பயனுடைய விரல்கள் நான்கிருக்கவும், கதிர்க் கம்பிபோல் எண்ணு நடுவிரற்கு=கூரிய கம்பிபோன்ற பயன் கணிக்கப் படாத நடுவிரலுக்கு, ஏது ஆம=என்ன பயனுளது, லோபருக்கு ஏது கண்டாய்=ஈயாதவர்களாலே என்ன உண்டு, எ - று.

தென்மாவைக் கறுப்பனிடம் கீழ்மக்களுடைய நட்பு வேண்டுவதில்லை எனப் பாடியது.

49. நிணம்போதத்தள்ளிப்பெரும்பூதம்போலப் பின்னேற்றுச்செத்த
பிணம்போற்கிடந்துபுரளுவர்காண் பிறர்க்கீட்டிவைத்த
பணம்போனபின்றபுவிவேக முண்டாகுமப்பஞ்சைகள்வங்
கணம்போதும்போதுங்கறுப்பா தென்மாவையிற்காவலனே.

உரை :—கறுப்பா=கறுப்பனென்னும் வள்ளலே! தென் மாவையில் காவலனே—அழகிய மாவைப்பதியிலுள்ள மன்னனே! நிணம் போதத் தள்ளி=கொழுப்பு அதிகமாக உடலில் திருத்தப்பெற்று, பெரும் பூதம் போல=பெரிய வடிவுடைய பூதம்போல, நேற்று செத்த பிணம்போல் கிடந்து புரளுவர்=முந்தின நாள் இறந்த சவத்தைப்போல் படுத்துப் புரளுவர், பிறர்க்கு ஈட்டிவைத்த பணம்போன பின்பு=தமக்குப் பயன்படாது பிறர்க்குப் பயன்படும்படி சம்பாதித்துத் தேட்டிய பொருளை இழந்த பின்னர், விவேகம் உண்டாகும்=அவர்களுக்கு அறிவுண்டாகும், அப்பஞ்சைகள் வங்க.

ணம் போதும் போதும் = அக் கிழ் மக்களுடைய நட்பு முற்றிலும் வேண்டுவ தில்லை, எ - று.

50. ஏவைக்குங்கூன்சிலைதொட்டான னனங்கனிருவிசும்பின்
தீவைக்குந்திங்கட்குடையெடுத்தான் றென்றற்றேருகைத்தான்
காவைக்குங்கண்மணிகஸ்தூரி யின்றகறுப்பன்வரை
மாவைக்கும்பாவைக்கும்பூவைக்கும் போதுவடுவைக்குமே.

உரை :—அனங்கன் = காமன், ஏ வைக்கும் கூன்சிலை தொட்டான் = அம்புவைத்து விடுதற்குரிய வளைந்த வில்லைக் கையிலெடுத்தான், இரு விசும்பின் = பெரிய வானத்தில், தீ வைக்கும் திங்கள் குடை எடுத்தான் = வெப்ப மமைந்த சந்திரனுகிய குடையை எடுத்துப் பிடித்தான், தென்றல் தேர் உகைத்தான் = தென்றலாகிய இரதத்தை நடத்தினான், கா வைக்கும் கண் மணி கஸ்தூரி என்ற = கற்பக மரத்தின் தன்மை யமைந்த கண்மணிபோன்ற கஸ்தூரி யென்பவன் பெற்ற, கறுப்பன் வரை = கறுப்பனுடைய எல்லைக்குள், மாவைக்கும் பாவைக்கும் = பெருமையமைந்த பாவைபோன்ற மாதுக்கும், பூ வைக்கும்போது வடுவைக்குமே = மலர்க்கணையைச் செலுத்தும்போது அவற்றின் வடுவையுந் தோற்றுவிக்கின்றன், எ - று.

திருக்கரந்தை மலையிற் பிறந்த ஒரு பெண்ணினுடைய முகம், கண், தனம் முதலியவற்றைக் குறித்துப் பாடியது.

51. பொன்னுகத்தார்பணிமாயோன் கரந்தைப்பொருப்பில்வரும்
மின்னுண்முகங்கண்டனஞ்சாயல் போற்பெறவேண்டியன்றே
வந்நாட்கமலமலர்கடன் மேருவணிமயிலும்
தன்னுலயனரிசங்கரன் வேலனைத்தாங்கியதே.

உரை :—பொன்னுகத்தார் பணியும் மாயோன் = பொன்னுலகத்தி லிருக் கின்ற விண்ணவர்கள் வழிபடுகின்ற பெருமாளினுடைய, கரந்தைப் பொருப் பில் வரும் மின்னுள் = திருக்கரந்தை மலையிற் பிறந்த மின்போன்ற பெண்ணி னது, முகம் கண் தனம் சாயல்போல் பெறவேண்டி அன்றே = முகம் கண் கொங்கை சாயல் என்பவைபோன்ற உருவங்கொள்ள ஆசைப்பட்டல்லவா, அந்நாள் = அக்காலத்தில், கமல மலர் = தாமரைப்பூவும், கடல் = திருப்பாற் கடலும், மேரு = மேரு மலையும், அணி மயிலும் = அழகான மயிற் பறவையும், தன்னுல் = ஆகியவற்றுள் ஒவ்வொன்றும் தானே, அயன் = நான்முகனையும், அரி = விண்டுவையும், சங்கர = அரனையும், வேலனை = குமரக் கடவுளையும், தாங்கியதே = எடுத்துச் சுமந்ததே, எ - று.

சிவபெருமானை புகழ்வதுபோற் றுதித்துப் பாடிய நிந்தாஸ்துதி.

52. குண்டைக்கொருத்தனைக்கூத்தாடும் பித்தனைக்குண்டுணியைக்
கண்டக்கறுப்பனைப்பிள்ளையைத் தின்னியைக்காணவயன்

மண்டைக்கரத்தனைக்கண்ணப்ப னெச்சிலைவாரியுண்ட
பண்டைப்பரையனையோ தேவனென்றுபகருவதே.

உரை :—குண்டைக்கு ஒருத்தனை = காளை வாகனமுடைய ஒரு கடவுளை, கூத்தாடும் பித்தனை = நடனஞ் செய்கின்ற அன்பர்க் கன்பனை, குண்டுணியை = புறங் கூறுபவனை, கண்டக் கறுப்பனை, கழுத்தில் கருநிற முடையவனை, பிள்ளையைத் தின்னியை = பிள்ளைக்கறி தின்பவனை, காண = யாரும் பார்க்கும்படி, அயன் மண்டைக் கரத்தனை = நான்முகனுடைய தலை யோட்டைத் திருக்கையி லுடையவனை, கண்ணப்பன் எச்சிலை வாரி உண்ட = கண்ணப்பர் கொடுத்த எச்சில் கலந்த உணவை எடுத்தருளிய, பண்டைப் பரையனையோ = முன்னை பராசத்தியைப் பாகத்திலுடையவ னையோ, தேவன் என்று பகருவதே = தெய்வமென்று இயம்புவது பொருந்துமா ? எ-று.

அம்பிகைமீது பாடிய நிஸ்தாஸ்துதி.

53. அந்தங்கரும்பள்ளிபாசாங்குசத்தி கண்ணம்படைச்சி
நைந்தவிடைச்சிகுறத்திக்கு மாமிநவில்வலைச்சி
சந்தம்புழுக்கச்சிபாம் பணையோனுக்குத்தங்கச்சியாம்
இந்தப்பரச்சியையோ சிவகாமியென்றேத்துவதே.

உரை :—அந்தம் கரும்பு அள்ளி = அழகிய கரும்புவில்லைக் கையில் கொண்டவளும், (அல்லது முடிவாக இருண்ட நிறத்தை யுடையவளும்) பாச அங்கு சத்தி = பாசமும் அங்கமும் திருக்கையிலுடையவளும். (அல்லது பசிய நிறமுடைய குசத்திபும்) கண் அம்படைச்சி = கண் அம்புபோல பொருந்தியவளும், (அல்லது மதிப்புள்ள அம்படச்சியும்) நைந்த இடைச்சி = நுண்ணிய இடையையுடையவளும், (அல்லது தளர்ந்த இடைச்சியும்) குற த்திக்கு மாமி = வள்ளிநாயகியாகிய குறத்திக்கு மாமியும், நவில் வலைச்சி = வலைவீசிய கடவுளுக்கு மனைவியென்று கூறப்பட்ட = வலைச்சியும், சந்தம் புழுக்கச்சி = சந்தனம் பனுகு சேர்ந்த கச்சணிந்தவளும், பாம்பு அணையோ னுக்குத் தங்கச்சி ஆம் = பாம்பின்மேல் பள்ளிகொள்ளும் பெருமாளுக்குத் தங்கையுமாகிய, இந்தப் பரைச்சியையோ = இந்தப் பராசத்தியையோ, சிவ காமி என்று ஏத்துவது = சிவகாமியென்று எல்லாரும் வழிபடுவது, எ-று.

நில்லே நடராசப்பெருமானைக்குறித்து என் மனச் சஞ்சலம்
என்று தீருமெனப் பாடியது.

54. நிலமேழளந்தநெடுமால் பணியுநிமலர்பொன்னம்
பலமேவுதில்லைப்பதி நடராயர்பனிவரையிற்
கலமேதிமிங்கலமேசங்கமே நற்கயிலனமே
சலமேசலஞ்சலமேயென்று தீருமென்சஞ்சலமே.

உரை:—நிலம் ஏழு அளந்த நெடுமால் பணியும் நிமலர்=ஏழு லோகத்தையும் தன்னடியால் அளந்து காட்டிய பெருவடிவுடைய பெருமான் வழிபடும் குற்றமற்றவராகிய, பொன் அம்பலம் மேவு தில்லைப்பதி நடாயர்=தில்லைத்தலத்திலுள்ள பொன்னம்பலத்தில் விரும்பி நடனஞ் செய்கின்ற பெருமானது, பனிவரையில்=குளிர்ந்த கடலெல்லைக்குள்ளிருக்கும், கலமே=கப்பலே! திமிங்கலமே=திமிங்கலமென்னும் பிராணியே! சங்கமே=சங்குகளே! நல் கயில் அனமே=நல்ல பிடரியையுடைய அன்னப் பறவையே! சலமே=நீரே! சலஞ் சலமே=ஆயிரம் வலம்புரி சூழ்ந்த சங்கே! என்று தீரும் என் சஞ்சலமே=என்னுடைய கவலை என்றைக்கு ஒழியும், எ-று.

வல்லைநகர்க் காளத்தியென்னும் பிரபுமீது பாடியது.

55. பொரடக்கயம்பிடியென்ருன் மதனுமிப்பூவையுமா
தரடக்கமுஞ்சற்றறிந்திலளே மலர்த்தார்வணங்கா
முரடக்கவுடக்கொடிமன்னர் வெற்றிமுடிபிடுங்குங்
கரடக்களிற்றண்ணலே வல்லைமாநகர்க்காளத்தியே.

உரை:—மலர்த்தார் வணங்கா=தனது திருவடிக்கமலங்களைப் பணியாத, முரடக் கவுடக் கொடிமன்னர்=வன்மை மிகுந்த கவுடநாட்டுக் கொடியுடைய வேந்தர்களின், முடி பிடுங்கும் வெற்றி=கிரீடங்களைத் தன்னுகின்ற ஜெயத்தையுடைய, கரடக்களிற்று அண்ணலே=மதம் பொருந்திய ஆனையின்மேல் வரும் வீரனே! வல்லைமா நகர் காளத்தியே=பெருமை பொருந்திய வல்லைப் பதியிலிருக்கும் காளத்தி யென்னும் வள்ளலே! மதனும்=மன்மதனும், பொர=சண்டை செய்வதற்கு, டக்கயம் பிடி என்ருன்=கொடி யெடுங்களென்று எவினன், இப்பூவையும்=இம்மாதும், மாதரடக்கமும் சற்றும் அறிந்திலளே=பெண்களுக்கிருக்க வேண்டிய அடக்கத்தின் ஒரு சிறிதும் தெரிந்து கொள்ளவில்லை, எ-று.

கலைமகளுக்குப் புலவர் மூதலியோரில்லையாஞல் உலகில் ஒரு பயனுமில்லையெனப் பாடியது.

56. கவியாகுமாதினைப்பெற்ருன் புலவன்கற்ருனையாம்
செவியாரக்கேட்டங்குணர்வான் சகோதரன்செந்தமிழ்க்கு
தவியாவருமையறிவான் பதியவன்ருனிலையேல்
புவியாகுமண்ணுக்குளென்பலமா மந்தப்பூங்கொடிக்கே.

உரை:—கவியாகும் மாதினைப் பெற்ருன்=பாட்டென்கிற பெண்ணுக்குத் தகப்பன் பாவலனுவன், கற்ருன் அனையாம்=அத்தப் பாட்டினைப் படித்தவன் தாயாவன், செவியாரக் கேட்டு அங்கு உணர்வான் சகோதரன்=காது கொடுத்து நன்ருக அப்பாட்டினைக் கேட்டு அதன்

பொருளைத் தெரிந்தவன் உடன் பிறந்தவனுவான், செந்தமிழ்க்கு உதவியாய் அருமை அறிவான் பதி=செம்மையான தமிழ்ப் பாடல்களைப் பேணுபவனுய் அவற்றி னருமையைத் தெரிகின்றவன் தலைவனுவான், அவன்தான் இலையேல் = அவனுமில்லாவிடத்து, அந்தப் பூங்கொடிக்கு = பாட்டாகிய மாதுக்கு, புவியாகு மண்ணுக்குள் என் பலம் ஆம் = பூமியாகிய இந்த மண்ணிலே யாது பயன் விளையும், எ - று.

சிவபெருமான்மீது பாடிய நிந்தாஸ்துதி.

57. சேராதவேடன்செருப்பா லடிக்கவுந்தீண்டவுந்தன்
நீர்வாயுமிழவுமுச்சிட்டம் போடவுநீண்டசிலைத்
தாராலடிக்கவுங்கண்ணீர் ததும்பவும்தாய்தமர்கள்
ஆராகிலுமில்லையோ திருக்காளத்தியப்பனுக்கே.

உரை :—சேராத வேடன் செருப்பால் அடிக்கவும்=திருமேனியை நெருங்கக் கூடாத வேடச் சாதியினராகிய கண்ணப்பர் செருப்பினுலே திருமேனியிலுள்ளவற்றைத் தள்ளவும், தீண்டவும்=தொட்டுத் தழுவவும், தண்ணீர் வாய் உமிழவும்=தண்ணீரை வாயிலிருந்து மேலே கொட்டவும், உச்சிட்டம் போடவும்=எச்சிலோடு கலந்த ஊனை நிவேதிக்கவும், நீண்ட சிலைத்தாரால் அடிக்கவும்=அர்ச்சுனன் செடிய வில்தண்டினுல் தாக்கவும், கண்ணீர் ததும்பவும்=கண்ணிலிருந்து நீர் சொரியவும், (ஏற்பட்டதற்குக் காரணம்) திருக்காளத்தி அப்பனுக்கே தாய் தமர்கள் ஆராகிலும் இல்லையோ=திருக்காளத்திப் பெருமானுக்குப் பெற்றோர் உறவினர் முதலியாருமில்லாமையோ, எ - று.

கம்மாளனுக்குப் பயந்து சிவபெருமான்
பாம்பையணிந்தாரெனப் பாடியது.

58. ஒட்டாகவொட்டியுங்காற்பொன்னின் மாப்பொன்னுபாயமதாத்
தெட்டாதிரான்பணிசெய்யாதிரான் செம்பொன்மேருவினைக்
கட்டாகக்கட்டிக்கடுகளவா நிறைகாட்டவல்ல
தட்டானுக்கஞ்சியல்லோவணிந்தான் சிவன்சர்ப்பத்தையே.

உரை :—கால் பொன்னில் மா பொன்=கால் வீராகன் பொன்னில் ஒரு மா அளவு பொன்னுவது, ஒட்டாக ஒட்டியும்=உரைக் கல்லில் ஒட்டும்படியாகத் தேய்த்தும், உபாயமதாத் தெட்டாது இரான்=தந்திரமாய்த் திருடாதிருக்கமாட்டான், பணி செய்யாது இரான்=வகைகளைச் செய்யாமலிருக்கமாட்டான், செம்பொன் மேருவினைக் கட்டாகக் கட்டி=செம்மையாகிய பொன்மலையாகிய மேரு அளவுடைய பொன்னையும் இறுகி ஒடுக்கி, கடுகு அளவாய் நிறைகாட்ட வல்ல=கடுகின் கனமுடையதாய் நிறுத்துக் காட்ட வல்லமையுள்ள, தட்டானுக்கு அஞ்சி அல்லவோ=தட்டானுக்குப் பயந்

தல்லவா, அணிந்தான் சிவன் சர்ப்பத்தையே=சிவபெருமான் பாம்பினையே தரித்தார், எ - று.

தலைவி கூற்று.

59. ஏராட்டும்பூந்தொங்கன் மோகனக்காரற்கினியசுகம்
பாராட்டநானினியாளல்லவே பசும்பொன்குழவித்
தாராட்டவுஞ்சங்கிற்பால்பிள்ளைக் கூட்டித்தட்விமஞ்சள்
நீராட்டமையிடப்போமே யெனக்குள்ளநேரமுமே.

உரை :—ஏராட்டும் பூந் தொங்கன்=அழகாக அசைகின்ற பூமாலையை அணிந்த, மோகன காரற்கு இனிய சுகம் பாராட்ட=மயல் விளைக்கும் காதலர்க்கு இன்ப நலம் கொடுப்பதற்கு, நான் இனி ஆள் அல்லவே=நான் இனிமேல் தக்கவளாய் இருக்க முடியாது, (ஏனெனில்) பசும்பொன் குழவி தாராட்டவும்=இளமையான அழகிய குழந்தையைத் தொட்டிலிட்டுத் தாலாட்டவும், சங்கில் பால் பிள்ளைக்கு ஊட்ட=பிள்ளைக்குப் பாலைச் சங்கினில் வைத்துக் குடிக்கும்படி செய்யவும், மஞ்சள் தடவி நீராட்ட=மஞ்சள் அரைத்துத் தேய்த்துப் பிள்ளையை முழுக் காட்டவும், மை இட=சுதன் கண்களில் மை தீட்டவும், எனக்கு உள்ள நேரம் போமே=எனக்கிருக்கிற பொழுது கழிந்து விடும், எ - று.

தென்களந்தைப் படிக்காசுப்புலவர்பாடலைச் சிறப்பித்துப் பாடியது.

60. மட்டாருந் தென்களந்தைப் படிக்காச னுரைத்ததமிழ்
வரைந்த வேட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலு மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலுங் கைம்மணக்குஞ் சொன்னலும் வாய்மணக்கும்
துய்ய சேற்றில்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினிறு
நளினந் தானே.

உரை :—மட்டாரும் தென்களந்தை=தேன் நிறைந்த சோலையுடைய தென்களந்தைப் பதியிலவதரித்த, படிக்காசன் உரைத்த தமிழ் வரைந்த ஏட்டை=படிக்காசுப் புலவர் கூறிய தமிழ்ப் பாட்டுக்கள் எழுதப்பட்ட சுவடியை, பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்=பட்டினாலே மூடினாலும் அதன் வாசனை உலகம் மூன்றிலும் பரவி மணம் வீசும், பரிந்து அவ் ஏட்டைத் தொட்டாலும் கை மணக்கும்=அன்பாய் அந்தச் சுவடியைத் தொட்டால் தொட்ட கை வாசனை யளிக்கும், சொன்னலும் வாய் மணக்கும்=அப் பாட்டைப் பாடினாலும் பாடின வாய் வாசனையுடைய தாகும், துய்ய சேற்றில் நட்டாலும்=அதனைச் சுத்தமான உளையில் விதைத்

தானும், பாட்டினது நளினம் தமிழ்ப் பயிராய் விளைந்திருமே=பாட்டில் பொருந்திய நயம் தமிழ்ப் பயிராய் வளர்ந்து பலன் தரும், எ - று.

செங்குன்றையூர்த் தலைவனிருக்கு மிடத்தில் யாசகரெல்லா மிருப்பாரெனப் பாடியது.

61. ஆலெங்கே யங்கே யரும்பறவை யாற்றுயிலும்
மாலெங்கே யங்கே மலர்மடந்தை—கோலஞ்சேர்
செங்கே தகைமணக்குஞ் செங்குன்றை யூரனெங்கே
அங்கே யிரவலரெல் லாம்.

உரை :—ஆல் எங்கே அங்கே அரும் பறவை=ஆலமரம் எங்கே இருக்கிறதோ அந்த இடத்தில் (அதன் பழத்தைத் தின்னும்) சிறந்த பட்சிகளிருக்கும், ஆல் துயிலும் மால் எங்கே அங்கே மலர் மடந்தை=ஆலிலையில் பள்ளிகொள்ளும் பெருமாள் எங்கே இருக்கின்றாரோ அங்கே பூமகளாகிய இலக்குமி இருப்பாள், கோலஞ் சேர் செங்கேதகை மணக்கும்=நல்ல வடிவுடைய செந்தாழம்பூ வாசனை வீசும், செங்குன்றையூரன் எங்கே=செங்குன்றையூரின் தலைவன் எவ்விடத்திலிருக்கிறானே, அங்கே இரவலர் எல்லாம்=அவ்விடத்தில் ஐயம் ஏற்பவர் யாவருமிருப்பார்கள், எ-று.

தலைவி பிரங்கல்.

62. ஊரைச் சுடுமோ வுலகந் தனைச்சுடுமோ
ஆரைச் சுடுமோ வறியேனே—நேரே
பொருப்பு வட்டமான முலைப்பூவை யரையிந்த
நெருப்பு வட்டமான நிலா.

உரை :—நேரே பொருப்பு வட்டமான முலைப் பூவையரே=உண்மையாக மலைபோல் வட்டமான தனங்களையுடைய பாங்கிமாரே! இந்த நெருப்பு வட்டமான நிலா=அக்கினிக் கோட்டைப் போன்ற இந்தச் சந்திரனது ஒளியானது, ஊரைச் சுடுமோ=பட்டினத்தைக் கொளுத்துமோ, உலகத்தினைச் சுடுமோ=பூவுலகத்தையே எரித்து அழிக்குமோ, ஆரைச் சுடுமோ=இன்னும் யாரையெல்லாம் தகிக்குமோ, அறியேனே=எனக்குத் தெரியவில்லை, எ - று.

வல்லிகைக் காளத்திராயன் கற்றோர்க்குதவும் கையைப் புகழ்ந்து பாடியது.

63. நற்றோரண வீதிநண்ணும் வல்லிக் காளத்தி
கற்றோர் தமக்களிக்கும் கையேகை—மற்றோர்கை
வேங்கை யலகைமுகை வேட்கை பலகைதகை
தாங்கை யமுகைவிரு கை.

உரை:—நல் தோரண வீதி கண்ணும்=அழகிய இலேயணிகள் தொங்க விட்டிருக்கும் தெருக்கள் பொருந்திய, வல்லேக் காளத்தி=வல்லே நகரிலிருக்கும் காளத்தி வள்ளலின், கற்றோர் தமக்கு அளிக்கும் கையே கை=படித்த வர்களுக்குப் பரிசு கொடுக்கின்ற கைதான் சிறந்த கரமாகும், மற்றோர் கை=ஏனேயோரது கையானது, வேங்கை.....வழுக்கை=என்னும் சொற்களில் வருதியான கைபோற் பொருளற்றது, எ-று.

குறிப்பு:—வேங்கை=புலி அல்லது வேங்கை. அலகை=பேய். மூகை=ஊமை. வேட்கை=ஆசை. பலகை=மரத்துண்டு. நகை=சிரிப்பு. காங்கை=சூடு. அழுகை=அழுதல். விழுகை=விழுதல்.

போசராசனேப் புகழ்ந்து என் வறுமையானது நீங்கவில்லே எனப் பாடியது.

64. போசநீ யோர்புயலாப் பூமுழுதும் பொன்மாரி
வீசுவா யங்கதிலோர் விந்தேனும்—பேசுமென்மேற்
பட்டதிலே யென்வறுமை பாரக் குடையாகி
மூட்டக் கவித்திடுத லால்.

உரை:—போச=போச ராஜனே! நீர் ஓர் புயலா=நீ ஒப்பற்ற கொடை மேகமாயிருந்து, பூ முழுதும்=உலகெங்கும், பொன்மாரி வீசுவாய்=பொன் மழையைப் பொழிகின்றாய், என் வறுமை பாரக் குடையாகி=என் எளிமையானது விசாலமான குடையாக விரிந்து, மூட்டக் கவித்திடுதலால்=மூற்றிலும் என்னே மூடிவிடுவதனால், பேசும் என்மேல்=உன் புகழ் கூறுகின்ற எனது உடம்பின்மேல், அங்கு அதிலோர் விந்தேனும் பட்டதில்லே=அம் மழையிலோர் துளிகூட வீழவில்லே, எ-று.

நாணிக் கண் புதைத்தல்.

65. காலே யரவிந்தங் கழுநீருடன் கலந்தால்
மாலே யரவிந்த மயக்காதோ—பாலேப்
பழிக்கின்ற மென்மொழியீர் பாண்டியனு ரூரை
அழிக்கின்ற தென்னே வது.

உரை:—பாலேப் பழிக்கின்ற மென் மொழியீர்=சுவையிற் பாலேயும் தோற்கச் செய்கின்ற மென்மையான சொல் பேசும் பெண்ணே! காலே அரவிந்தம்=வீடியற்காலத்துத் தாமரை போன்ற உனது கையானது, கழுநீருடன் கலந்தால்=செங்ழுநீர்ப் பூப்போன்ற உனது கண்ணெடு சேர்ந்து அதனே மூடினுல், மாலே அரவிந்தம் மயக்காதோ=மாலேக்காலத்துக் கமலம் போன்ற உனது தனம் எனக்கு மயல் உண்டாக்காதா, பாண்டியனூர் ஊரை=கூடலே, அழிக்கின்ற தென்னே=அது தடுத்துக் கேடுசெய்வதற்கு என்ன காரணம், எ-று.

காவிமுத்துப் புலவர்

பாடியது

இதுமுதல் ஆறு பாட்டுவரை மயிலைக் குழந்தைவேலு முதலியார்மீது பாடிய பாங்கி கூற்று.

1. நெல்லைச்சொன்னுபரணத்தைக் கைம்மாவைநிதநிதமும்
வெல்லச்சொன்னுவலர்க்கீயுங் குழந்தைவிசயநின்பால்
செல்லச்சொன்னுளென்னையிப்போ தென்மையலைத்தீர்த்திடென்று
சொல்லச்சொன்னுளந்தமின்னுள் பன்னுண்மலர்ச்சோலையிலே.

உரை :—நெல்லைச் சொன்னுபரணத்தைக் கைம்மாவை=நெல் தங்க நகை யானை முதலிய பரிசுகளை, நிதம் நிதமும்=தினந்தோறும், வெல்லச் சொல் நாவலர்க்கு ஈயும்=சர்க்கரை போன்ற இனிய மொழியையுடைய புலவர்களுக்குக் கொடுக்கின்ற, குழந்தை விசய=குழந்தை வேலவனே, பன் நாண் மலர்ச் சோலையிலே=பல புதிய பூக்கள் விளங்குகின்ற பொழிலில் நின்ற, அந்த மின்னுள்=அந்த மாதானவள், நின்பால் செல்லச் சொன்னுள்=உன்னிடம் என்னைப் போகும்படி வேண்டினுள், இப்போது என் மையலைத் தீர்த்திடு என்று சொல்லச் சொன்னுள்=இங்ஙனமே என் காம விரகத்தைத் தீர்த்தவிடும்படி உன்னிடம் கூறும்படி கேட்டுக் கொண் டாள், எ-று.

தலைவி கூற்று.

2. பழுத்தான்மரத்திற்பறவையைப் போலநற்பாவலர்க்குக்
கொழுத்தான்வழங்குங்குழந்தை யென்கொங்கையைக்கூருகிரால்
அழுத்தாதவேளையில்வெந்நீர் பன்னீர்மதியும்மழல்சேர்
கொழுத்தான்மதனுங்கொழுத்தான் பருவக்குறிப்பறிந்தே.

உரை :—பழுத்த ஆல் மரத்தில் பறவையைப்போலும்=பழம் நிறைந்த ஆலமரத்தில் ஒருங்கு கூடுகின்ற பட்சிகளைப்போன்ற, நல் பாவலர்க்கு = தக்க புலவர்களுக்கு, கொழுத்த ஆன் வழங்கும் குழந்தை=செழிப்பான பசுக் களைக் கொடுக்கின்ற குழந்தை வேலன், என் கொங்கையைக் கூர் உகிரால் அழுத்தாத வேளையில்=என்னுடைய தனங்களிற் கூரிய நகங்கள் பதியும் படி செய்யாதபோது, பன்னீர் வெம் நீர்=குளிர்ந்த பனிநீரும் வெந்நீர் போலக் கொதிக்கின்றது, மதியும் அழல்சேர் கொழுத்தான்=சந்திரனும் கனலில் வெதுப்பிய கொழுப்போல (கலப்பை தூனிபோல) தோன்றுகின் றன், மதனும் பருவக் குறிப்பு அறிந்தே கொழுத்தான்=மன்மதனும் என்னை வருத்துகின்ற நோத்தின் தன்மையறிந்து வெற்றியுணர்ச்சி யுடை யவனுன்ன், எ-று.

தாயிரங்கல்.

3. பொன்னுர்மருமத்தன்பூம்பாவை வேலப்பபூபனருள்
மன்னுகுழந்தைக்குருநாதநீ தவரோதயனே
பன்னுண்மலர்க்குழற்பின்னு ளெந்நாளும்பரிந்தணைய
நன்னுளிந்நாள்வரச்சொன்னுண் மின்னுண்மணநாளென்னவே.

உரை :—பொன்னுர் மருமத்தன்=இலக்குமி தங்குகின்ற மார்பை யுடையவனுகிய, பூம்பாவை வேலப்ப பூபன் அருள்=பூம்பாவை வேலப்பனென்னும் நிலத்தலைவன் பெற்ற, மன்னு=வேந்தனே! குழந்தை குருநாதா=குழந்தை வேலனுகிய ஆசாரியனே! நீத=நியாயவானே! வரோதயனே=வரத்தால் பிறந்தவனே! பன் நாள் மலர்க்குழல் பின்னுள்=பல புதுப்பூக் களைச் சூடிய கூந்தல் சடையாகப் பின்னப்பெற்றவளாகிய, மின்னுள் = என் மாது, மண நாள் என்னவே=கலியாணஞ் செய்த தினத்திற்போலவே, எந் நாளும் பரிந்து அணைய=எப்போதும் அன்பாய்த் தழுவுதற்கு, நன்னுள் இந்நாள் வரச் சொன்னுள் = நல்ல நாளாகிய இந்தத் தினத்தில் உன்னை வரும்படி வேண்டினுள், எ-று.

நாணிப் புறங்காட்டல்.

4. மாகமழைக்கரன்பூம்பாவை வேலப்பன்மைந்தன்மின்னுர்
மோகன்குழந்தைக்குருநாதன் வெற்பினின்மோடிவைத்துப்
பாகமொழிக்குழன்மாதே விரித்துப்படமெடுக்கும்
நாகமறைத்துக்குழனமக் கீதனலமல்லவே.

உரை :—பாகு மொழிக் குழல் மாதே=சர்க்கரைப் பாகுபோல இனிய சொல்லும் கூந்தலையுமுடைய பெண்ணே! மாக மழைக்காசன்=வானி லுள்ள மேகம் போன்ற கையையுடையவன், பூம்பாவை வேலப்பன் மைந் தன்=பூம்பாவை வேலப்பனென்னும் பூபதியின் மகன், மின்னுர் மோகன்= பெண்களுக்கு மயல் விளைக்கின்றவன், குழந்தை குருநாதன் வெற்பினில்= ஆசாரியனுகிய குழந்தை வேலனது குன்றினில், மோடிவைத்து=சீற்றங் கொண்டு, விரித்துப் படம் எடுக்கும்=படத்தை விரித்துக் காட்டும், நாகம் மறைத்து=பாம்பினை ஒளித்துக்கொண்டு, குழல்=குழலென்னும் இசைக் கருவியை, நமக்கு ஈதல் நலம் அல்ல=நமக்களித்தல் தக்கதன்று, எ-று.

குறிப்பு :—பாம்புப் படம் போன்ற அல்குலை மறைத்துக் கூந்தலைக் காட்டுதல் தகாதென்று கூறியதாகும். நாகம் என்பதற்கு மலையென்று பொருள் கொண்டு முலை மறைப்பதையும் அது குறிக்குமென்க.

கிளிவிடு தூது.

5. போதத்தைமேவுமயிலைக் குழந்தைக்குப்போர்மதன்செய்
ஏதத்தையுங்குயினுதத்தையுந் தனக்கிண்ணத்தினுள்

மோகத்தையுந்துயிலாதத்தையும் மயன்மூட்டுதென்றல்
வாதத்தையுந்தரியாதத்தையுஞ் சொல்லிவாதத்தையே.

உரை :—தத்தையே=கிளியே! போதத்தை மேவும் மயிலைக் குழந்தைக்கு=அறிவினையே விரும்பும் திருமயிலைக் குழந்தை வேலவரிடம், போர் மதன் செய் ஏதத்தையும்=சண்டையிடும் மன்மதன் செய்கின்ற குற்றத்தையும், குயில் நாதத்தையும்=குயிலொலியினால் உண்டாகின்ற துயரத்தையும், தனக் கிண்ணத்தின் ஆமோதத்தையும்=மூலபாகிய வள்ளத்தின் நிறைவையும், துயிலாதத்தையும்=நான் உறங்காம லிருப்பதையும், மயல் மூட்டு தென்றல் வாதத்தையும்=விரகத்தை மிகுதிப்படுத்துகின்ற தென்றல் காற்றின் இடைஞ்சலையும், தரியாதத்தையும்=இவற்றைத் தாங்க முடியாதிருப்பதையும்; சொல்லி வா=தெரிவித்து மீள்வாயாக, எ - று.

குறிப்பு:—துயிலாததை யென்பது துயிலாதத்தை யெனவும், தரியாததை யென்பது தரியாதத்தை எனவும் விரிக்க.

வெறி விலக்கல்.

6. வண்டாங்கிசைபயின்மாலையன் வேலப்பன்மைந்தனிதி
கொண்டான்கிளியைவளர்த்தான் குழந்தைக்குவட்டின்மின்னே
பண்டாங்கிசையினன்மால்கொண்டு பாம்பன்குளத்தினடுக்
கண்டாங்கியைக்கிழித்தா லென்னபாவங்கருதுவதே.

உரை:—வண்டு ஆங்கு இசைபயில் மாலையன்=வண்டுகள் ரீங்காரம் செய்வதற் கேதுவான மலர் மாலையணிந்தவனும், வேலப்பன் மைந்தன்=வேலப்ப பூபதியின் மகனும், நிதிகொண்டான்=செல்வமெல்லாந் தன்னிடத்திலுடையவனும், கிளியை வளர்த்தான்=சுற்றத்தாரைப் பேணியவனும் ஆகிய, குழந்தைகுவட்டில்=குழந்தை வேலாது மயிலின்மீது, மின்னே=பெண்ணே! பண் தாங்கு இசையினன்=இராகம் கலந்த மொழியினளாகிய தலைவி, மால் கொண்டு=மையல் கொண்டதற்காக, பாம்பன்=பாம்பைத் தரித்த பரமசிவனுடைய, குளத்தின்=நெற்றியிலுள்ள, நடுக் கண்=நடுக் கண்ணாகிய நெருப்புக் கடவுளின், தாங்கியை=ஊர்தியாகிய ஆட்டை, கிழித்தால்=பலியிட்டு வதைத்தால், என்ன=என்ன பிரயோசனம், பாவம்=அது பாவமாகும், கருதுவதே=அது எண்ணத்தக்கதோ? எ - று.

குறிப்பு:—கண்டாங்கியைக் கிழித்தாலென்பது சேலையைக் கிழித்தாலென்ற தொனிப் பொருளுடையது.

பூஞ்சோலையில் வசிக்கும் தஞ்சியென்னும் பெண்ணினுடைய
கொங்கைகளை வர்ணித்துப் பாடியது.

7. வனக்கொந்தளவஞ்சிபூஞ்சோலைத் தஞ்சிவளருமிரு
தனக்குன்றுசெய்யுந்தொழில் சொல்லவோதமியேனுக்கண்டால்

கனக்கும்புளகிக்கும்பாரிக்கும் பூரிக்குங்கண்கறுக்கும்
சினக்குந்தளக்குமெனக்கு முண்டாக்குந்தினஞ்சண்டையே.

உரை :—வனக் கொந்தள வஞ்சி = அழகிய குழலையுடைய கொடி போன்றவளாகிய, பூஞ்சோலைத் தஞ்சி = பூஞ்சோலையிலிருக்கும் தஞ்சி யென்பவளுடைய, வளரும் இரு தனக்குன்று = எழுச்சியுடைய இரு மலைகளாகிய மலைகள், தமியேனைக் கண்டால் செய்யும் தொழில் சொல்லவோ = தனியாக என்னைப் பார்த்தால் அவை செய்யும் வேலையைக் கூறலாமா? கனக்கும் = பளுவுள்ளதாகும், புளகிக்கும் = மயிர் சிலிர்க்கும், பாரிக்கும் = விரிவடையும், பூரிக்கும் = விம்மியுயரும், கண் கறுக்கும் = அவற்றின் காம்புகள் கறுநிறமடையும், சினக்கும் = சீற்றங்கொள்ளும், தமக்கும் எனக்கும் தினம் சண்டையே உண்டாகும் = அவைகளுக்கும் எனக்கும் ஒவ்வொருநாளும் போர் விளைந்து கொண்டே இருக்கும், எ- று.

பாண்டியனைப் புகழ்ந்து பாடியது.

8. சரராஜசம்புவைரியென் மாதுசரீரமெல்லாம்
பொரராசரத்துக்கிவள் பொருட்டோபசும்பொற்கிரண
சுரராசதிவ்யகிரீடவி பாடத்துடித்தடக்கைப்
பரராஜராவணராமா பராக்கிரமபாண்டியனே.

உரை :—பசும் பொன் கிரண = எப்போதும் புதிய பொன்னொளி வீசும், சராராஜ திவ்ய கிரீடவி பாட = தேவர் மன்னனுகிய இந்திரனது சிறந்த கிரீடம் விழும்படியாக வலிவீசிய, துடித் தடக்கை = தோள்மாலை யணிந்த விசாலமான கையையுடைய, பரராஜ ராவண ராமா = பகை மன்னராகிய இராவணருக்கு இராமன்போன்றவனே! பராக்கிரம பாண்டியனே..... சராராஜ சம்பு வைரி = அம்பு மன்னனுகிய சிவப்பகைவராகிய மன்மதன், என் மாது சரீரம் எல்லாம் = என் மகளுடைய தேக முழுவதும், பொர ராச = அம்பசெலுத்தி சண்டை யிடுவதற்கு மிக்க வல்லவரா யிருக்கிறார், அத்துக்கு இவள் பொருளோ = அந்தச் சண்டையை எதிர்க்க இவள் தக்கவளா? எ- று.

இதுவுமது.

9. காளமுகிற்குலமெல்லாம் விலங்குகடிந்திட்டநீ
வேளையுமப்படிச்செய்திலையே விளைநெல்வயலில்
வாளைகுதித்துவளர் பூங்கமுகின்மடலோடியப்
பாளைமுறிக்குந்துறைவா பராக்கிரமபாண்டியனே.

உரை:—விளை நெல் வயலில் வாளை குதித்து = நெல் விளைகின்ற வயல்களிலே வாளை மீன்கள் பாய்ந்து, வளர் பூங்கமுகின் மடல் ஓடியப் பாளை முறிக்கும் = அங்கிருந்து உயர்ந்த தோற்றத்தையுடைய பாக்கு மரத்தின் இலைகள் ஒடியும்படியாக அதன் மடலைத் தரிக்கின்ற, துறைவா = தீர்த்

திறைகளே யுடையவனே! பாராக்கிரம பாண்டியனே=....., காளை முகில் குலம் எல்லாம் விலங்கு கடிந்திட்ட கீ=காளைபோன்ற மேகக்கூட்டங்களே எல்லாம் சினந்து தளைபூட்டிய கீ, வேளையும் அப்படிச் செய்திலையே=மன்மதனுக்கும் அவ்வாறு விலங்கு பூட்டினாய் இல்லையே, எ - று.

தாயிரங்கல்.

10. ஆர்க்குங்குவிருநிலவுயர்கோ னின்னலங்கல்பெரு
வார்க்குங்குமமுலையாட் கனலாகும்வடக்குந்தெற்கும்
மேற்குங்கிழக்குமொருவெளுப்பாய் நின்றுவிண்ணையெட்டிப்
பார்க்கும்புகழுக்கிறைவா பராக்கிரமபாண்டியனே.

உரை:—வடக்கும் தெற்கும் மேற்கும் கிழக்கும் ஒரு வெளுப்பாய் நின்று விண்ணை எட்டிப் பார்க்கும் புகழுக்கு இறைவா=நான்கு திக்குகளிலும் பரவி வானுலகம்வரை செல்லுகின்ற கீர்த்திக்குத் தலைவனே! பராக்கிரம பாண்டியனே=....., உயர்தோள் நின்=மேலான கீதி செலுத்தும் உன்னுடைய, அலங்கல் பெரு = மாலை கிடைக்கப் பெறுத, வார் குங்கும முலையாட்கு = கச்சணிந்த குங்குமக்குழம்பு சாத்திய தனங்களையுடைய என் மகளுக்கு, ஆர்க்கும் குளிரும் நிலவு கனவாகும் = பிற யாவருக்கும் குளிர்ச்சி யுண்டாக்குகிற சந்திரனின் ஒளியானது அக்கினிமயமாய் இருக்கிறது, எ - று.

இதுவுமது.

11. கூரம்பொறுத்தவிழியாள் கதலிக்குருத்திலிட்ட
ஈரம்பொறுக்கவறிந்திலளே யிந்த்ரனிட்டசெம்பொன்
ஆரம்பொறுத்தபுயமீதி லாயிரநாவுரக
பாரம்பொறுத்தபுயலே பராக்கிரமபாண்டியனே.

உரை:—இந்திரன் இட்ட செம்பொன் ஆரம் பொறுத்த=இந்திரன் தனது கழுத்திற்போட்ட கனமான செம்பொன்மாலையைத் தாங்கிய வன்மையையுடைய, புயமீதில் ஆயிரம் நா உரக பாரம் பொறுத்த = தன்னுடைய தோளில் ஆயிரம் நாவுடைய ஆதிசேடனது உலகச் சுமையைத் தாங்கிய, புயலே=மேகம்போன்ற வள்ளலே! பராக்கிரம பாண்டியனே=....., கூர் அம்பு ஒறுத்த விழியாள்=கூரிய கணையைத் தனது வடிவழகால் வென்ற கண்களையுடைய மாது, கதலி குருத்தில் இட்ட = வாழைபின் இளங் குருத்திலையிலுள்ள, ஈரம் பொறுக்க அறிந்திலளே=(விரகதாபத்தால்) குளிர்ச்சியைத் தாங்கத் தெரியாம லிருக்கின்றனளே, எ - று.

இதுவுமது.

12. வெறிக்குங்குமக்கொங்கை மீதேயிளம்பிறைவெள்ளோலை
எறிக்கும்பொழுதுவந்தாயிலையே யிலங்காபுரியைக்

குறிக்கின்றராவணன்பொன்முடி பத்துங்குரங்கைவிட்டுப்
பறிக்கின்றசண்பகமாரு பராக்கிரமபாண்டியனே.

உரை:—இலங்காபுரியைக் குறிக்கின்ற ராவணன் = இலங்கைப் பதியைத் தனக்கே உரித்தெனக் கருதிய இராவணனுடைய, பொன் முடி பத்தும் = அழகிய தலைகள் பத்தையும், குரங்கை விட்டுப் பறிக்கின்ற = அனுமானே அனுப்பிப் பின்னர் போர் புரிந்து வெட்டின, சண்பகமாரு = விஷ்ணுவின் அம்சமான சண்பகமாறனே! பராக்கிரம பாண்டியனே = ..., வெறி குங்கும கொங்கை மீதே = வாசனையுடைய குங்குமக் குழம்பைச் சாத்திய முலைகளின் மேலே, இளம்பிறை = பாலச் சந்திரன், வெள்ளி நிலா எறிக்கும் பொழுதும் = தன்னுடைய வெள்ளிய கதிர்களை வீசும்பொழுது, வந்தாய் இலையே = அதனைக் காணுவதற்கு வராமற் போயினையே, எ - று.

இதுவுமது.

13. சுரும்பேய்க்கும்வாட்கண்ணி பங்காளர்கண்கொண்டுசுட்டுவிட்ட
பெரும்பேய்க்குவேப்பிலைக்காப்புதவாய் பிணர்சேர்பசுங்கோங்
கரும்பேய்க்குமென்முலையா ரமுதூட்டியடர்ந்துகொல்ல
வரும்பேய்க்குவானுதவுங் குலசேகரமன்னவனே.

உரை:—பிணர் சேர் பசும் கோங்கு அரும்பு ஏய்க்கும் = இறுக்கமுடைய பச்சை நிறமுள்ள இளங்கோங்கம்பூவின் மொட்டினை யொத்த, மென் முலையார் அமுது ஊட்டி = மென்மையான தனங்களில் நிறைந்த பாலினைக் குடிப்பித்து, அடர்ந்து கொல்லவரும் = தாக்கி யுயிர் போக்கவந்த, பேய்க்கு = பூதனை யென்னும் ஓராட்சசிக்கு, வான் உதவும் = கொன்று வானுலகம் தந்த, (விஷ்ணுவினமிசமான) குலசேகர மன்னவனே = குலசேகர பாண்டியனே! சுரும்பு ஏய்க்கும் = வண்டுகள் போன்ற, வாள் கண்ணி = ஒளி பொருந்திய கண்களையுடைய உமையம்மையை, பங்காளர் = பாகத்தில் வைத்த பரமசிவன், கண்கொண்டு சுட்டுவிட்ட = நெற்றிக் கண்ணினால் எரித்தழித்த, பெரும் பேய்க்கு = மன்மதனுகிய வலிய பேயை வராமற் றடுத்தற்கு, வேப்பிலைக் காப்பு உதவாய் = வேப்ப மாலையாகிய காக்கும் பொருளை அளிப்பாயாக, எ - று.

பாண்டியன் கல்வித்திறத்தைப் புலவரெலாங்கண்டு
ஞானடைவரெனப் பாடியது.

14. பூணித்திலத்துப்புயல்வீர மாறன்புகல்கவிக்கு
நாணிப்புலவர்செல்லாதென் செய்வாரிந்தநானிலத்தில்
ஆணிக்கனகமணந்தரிற் பூமணம்யார்கொள்ளுவார்
மாணிக்கந்தித்திக்கி லென்னுமற்றமதுரங்களே.

உரை :—இந்த நானிலத்தில்=இந்தப் பூவுலகில், பூண் நித்திலத்துப் புயல்=முத்தணிகளைத் தரித்த முகில் போன்ற, வீர மாறன்=பாக்கிரம பாண்டியன், புகல் கவிக்கு=இயற்றிக் கூறுகின்ற பாட்டுக்கு, புலவர் நாணி செல்லாது என் செய்வார்=கல்விமான்கள் வெட்கப்பட்டுப போகாமல் என் செய்யக்கூடும், ஆணிக் கனகம் மணம் தரில்=முதற்றரமான பொன் வாசனையை யுடையதாஞல், பூ மணம் யார் கொள்ளுவார்=அதற்கு முன் மலரின் வாசனையை யார் பொருளாகக் கொள்வார்கள், மாணிக்கம் தித்திக்கில் என் ஆகும் மற்ற மதுரங்களே=மாணிக்கமானது இனிய சுவையை யுடையதாஞல் அதற்கு முன் பிற இனிப்புப் பொருள்கள் என்ன நிலையிலிருக்கும், எ - று.

குறிப்பு :—அரசனிடம் செல்வத்தோடு கல்வி சேருவதால் ஏனையோர் கல்வியிலும் அவன் கல்வி சிறப்புடையதாகும் என்றார்.

இதுவுமது.

15. எண்ணீர்மை நூலுக்ககத்தியனு மிவனென்பதெல்லாம்
வெண்ணீர்மையன்றி விரகல்லவேயிவ்வியனுலகில்
பண்ணீர்மைதேரும்பராக்கிரம மாறன்பதங்கழுவும்
தண்ணீர்குடித்தல்லவோ கும்பயோனிதமிழ்கற்றதே.

உரை :—எண் நீர்மை நூலுக்கு=மதிக்கும் தகுதியுடைய இலக்கியக் கல்வியில், அகத்தியனும் இவன் என்பது எல்லாம்=இவன் அகத்தியன் போல்வானென்று கூறுவதெல்லாம், வெண் நீர்மை அன்றி விரகல்ல=அறிவின்மை யாவதல்லாமல் சாமர்த்தியம் ஆகாது, இவ் வியன் உலகில்=இந்தப் பெரிய உலகத்தில், பண் நீர்மை தேரும் பாக்கிரம மாறன்=இராகங்களின் தன்மைகளே ஆராயவல்ல பாக்கிரம பாண்டியனுடைய, பதம் கழுவும் தண்ணீர் குடித்தல்லவோ=திருவடிகளைச் சுத்தி செய்த குளிர்ந்த நீரைப் பருகியல்லவா, கும்பயோனி தமிழ் கற்றதே=கலசத்திற் பிறந்த குறுமுனிவர் தமிழ் மொழியைக் கற்றுணர்ந்ததென்க, எ - று.

குறிப்பு:—இச்செய்யுள் கால சணிதத்திற்குப் பொருத்தமில்லாத அளவு கடந்த உயர்வு நவிற்சியாமென்க.

தாயிரங்கல்.

16. காம்புவனம்புக்கதோளாட்கு நின்றன்கழுத்திலிட்ட
வேபுதனக்கும்விதியில்லையோ வெகுண்டாச்சியர்கள்
தாம்பினடிக்கவுரலோடு கட்டத்தடைப்பட்டுச்சிப்
பாம்பினடிக்கின்றமாலே பராக்கிரமபாண்டியனே.

உரை :—வெகுண்டு ஆச்சியர்கள்=இடைச்சிமார் சினந்து, தாம்பின் அடிக்க=கயற்றினுல் மோதவும், உரலோடு கட்ட=உரலிற் கட்டி வைக்க

வும், தடைபட்டு = அசைவின்றி நின்றும், பாம்பின் உச்சியில் நடிக்கின்ற மாலே = காளிங்கனென்னும் பாம்பின் தலை ஈடுவில் நடனம் செய்த விண்டுவின் அம்சமானவனே! பராக்கிரம பாண்டியனே = ..., காம்பு வனம் புக்க தோளாட்கும் = மூங்கிலின் அழகு பொருந்திய தோளினையுடைய மாதுக்கும், நின்றன் கழுத்திலிட்ட வேம்பு தனக்கும் = நின்கண்டத்தி லணிந்த வேப்ப மாலைக்கும், விதி இல்லையோ = சம்பந்தப்பட ஊழினமைப் பில்லையோ, எ-று.

இதுவுமது.

17. கடந்தூங்குவேழப்பிடர்க்கே வரக்கண்டுகண்கண்முத்து
வடந்தூங்குவாடுங்கிளிக் கென்செய்வேன்மணிவாய்திறக்க
விடந்தூங்குபாம்பின்படத்தின் மிசைதிமிதித்தியெனப்
படந்தூங்கவாடும்புயலே பராக்கிரமபாண்டியனே.

உரை:—மணி வாய் திறக்க = நாகரத்தினமுள்ள வாயைப் பாம்பானது திறக்கவும், படம் தூங்க = அதன் படமானது நிமிராமல் தாழ்ந்து நிற்க, விடம் தூங்கு பாம்பின் படத்தின்மிசை = நஞ்சுடைய காளிங்கனென்னும் பாம்பினது படத்தின்மேல், திமிதித்தி என ஆடும் = திமி தித்தி யென்ற ஓசை கேட்கும்படியாக நடனம் செய்த, புயலே = மேக நிறமான திருமால் அம்சமானவனே! பராக்கிரம பாண்டியனே = ..., கடம் தூங்கு வேழப் பிடர்க்கே வரக் கண்டு = மதம் பொழிகின்ற யானையின் பிடரியின்மேல் கீ ஏறிப் பவனிவருகின்றதைப் பார்த்து, கண்கள் முத்துவடம் தூங்க = கண்களிலிருந்து நீர்த்துளிகள் முத்து மாலைபோல கீழே விழும்படியாக, வாடும் கிளிக்கு என் செய்வேன் = வாட்டமடைகின்ற கிளிபோன்ற என் மகளுக்கு (வாட்டம் தீரும்படி) யாது செய்யக்கூடும், எ - று.

நாரைவிடு தூது.

18. சடம்பழுக்குங்கிழட்டுக்குருகீர் தலைசாய்த்துநின்று
முடம்பழுக்குங்கைதைநற்றுறையிற் றெங்குமூப்புடைக்காய்
குடம்பழுக்குங்கொற்கையாங் குலசேகரன்கூடலிலென்
உடம்பழுக்குஞ்சிறையும் பழிகாரருணர்ந்திலரே.

உரை:—சடம் பழுக்கும் கிழட்டு குருகீர் = உடம்பு முதிர்ந்த வயதி மிருந்த அன்னங்களே! கைதை தலை சாய்த்து நின்று = தாழைகள் ஒரு பக்கமாகச் சாய்ந்து நின்று, முடம் பழுத்தும் = அவற்றின் வளைவான இலைகள் பழுத்த நிறத்துடன் விளங்குகின்ற, நல் துறையில் = நல் நீர்த்துறைகளில், தெங்கு மூப்புடைக் காய் குடம் பழுக்கும் = தென்னை மரத்தின் நெற்றுக்கள் குடம்போலப் பழுத்துத் தொங்குகிற, கொற்கையான் = கொற்கைப் பதியின் தலைவனுகிய, குலசேகரன் கூடலில் = குலசேகர பாண்டியனது மதுரையிலிருக்கும், என் உடம்பு அழுக்கும் சிறையும் = என் தேகத்தின்

முழுகாமையாலுனதாம் அசுத்தத்தையும் யான் எங்கு முலவாது சிறையி லிருப்பதுபோல அடைபட்டிருப்பதையும், பழிகாரர் உணர்ந்து இலரே= இகழ்ச்சிக்குரியராகிய தலைவர் தெரிந்தாரில்லையே, எ-று.

தலைவி பிரங்கல்.

19. மற்றெப்பிலாக்கொடைச் சண்பகமாறவரோதயநின்
வெற்றிக்கிரண்டுண்டடங்காத காரியமேருகிரிச்
சுற்றிலுங்கீர்த்தியடங்காது நின்னுடைத்தோடழுவாக்
கற்றைக்குழலிக்குமாலடங்கா திதுகைகண்டதே.

உரை :—மற்று ஒப்பு இலா கொடை சண்பகமாற=பிற வுவமைகள் கூறத்தகாத ஈகையையுடைய சண்பக பாண்டியனே! வரோதய=வரத்தி னுற் பிறந்தவனே! நின் வெற்றிக்கு அடங்காத காரியம் இரண்டு உண்டு= நின் ஜெயத்திற் கட்டுப்படாத செய்திகள் இரண்டு உள்ளன, (ஒன்று யாதெனில்) மேருகிரிச் சுற்றிலும் கீர்த்தி அடங்காது=உன் புகழானது மேருமலை முற்றிலும் கடந்து அதற்கப்பாற்பட்டுஞ் செல்வது, (மற்றொன் றுவது) நின்னுடைய தோள் தழுவாக் கற்றைக் குழலிக்கு=உன்னுடைய புயங்களை அணையாத செறிந்த கூந்தலையுடைய மாதுக்கு, மால் அடங்காது= ஆசை தீராது, இது கைகண்டதே=இது அனுபவத்திற் கண்ட செய்தி யாகும், எ-று.

தாயிரங்கல்.

20. ஒருவாணுதல்பண்டுளங்களிக்க வுயர்வான்முகடுகிழித்தெழுந்து
மருவார்தருவின்மரங்கொணர்ந்த மதுரைவடிவேலதிவீரா
அரவார்வேம்பின்பசுங்கண்ணி யந்தியிறைவிக்கருளென்னு
இரவாதிருக்கநீயளித்தற் கிரங்காதிருந்தாயிதுநாளே.

உரை :—ஒரு வாள் நுதல் பண்டு உளம் களிக்க=ஒளி பொருந்திய நெற்றியுடைய ஒரு மனைவியான நப்பின்னை முன்னாளில் உவகை கொள்ளும் படி, உயர் வான முகடு கிழித்து எழுந்து=உயர்ந்த வானத்தின் உச்சியைப் பிளந்து அப்பாற் சென்று, மரு ஆர் தருவின் மரம் கொணர்ந்த=வாசனை பொருந்திய தேவ மரங்களில் ஒன்றாகிய பாரிசாத மரத்தை எடுத்து வந்த திருமாலின் அம்சமான, மதுரை வடிவேல் அதி தீரா=மதுரையிலாளும் கூரிய வேலாயுதத்தையுடைய சிறந்த வீரனே! அரவார் வேம்பின் பசும் கண்ணி=அசைந்து இசை செய்கின்ற வேப்பம் பூவின் புது மாலையை, அந்தி=மாலைப்பொழுதில், இறைவிக்கு அருள் என்னு=தலைவிக்குத் தயவு செய்து கொடுக்கவேண்டுமென்று, இரவாது இருக்க=உன்னை வேண்டிக் கொள்ளாமல் இருக்கும்படி, நீ அளித்ததற்கு இரங்காது இருந்தாய்=நீ நிலை யாமாகக் கொடுபபதற்குத் தயவுசெய்யாது இதுவரை இருந்தாய், இது நல்ல தினமாகும், எ-று.

நமச்சிவாயப் புலவர்

பாடியது

தஞ்சைச் செவிசெட்டியென்னும் பிரபுவிடம் சென்றால் நமது குறைகளெல்லாம் நீங்கிவிடுமெனப் பாடியது.

1. அவிசெட்டிவாங்குசுரர்க்கிறை நிகராய்வளமருவுமமரரென்றே [ன்
தவிசெட்டிமரம்போலவளர்ந்திருப்போர் தமைப்பாடோந்தனிநக்கீர
கவிசெட்டிதிருவடியைப்புகழ்வணிக னிசையுடனற்கவினர்தஞ்சைச்
செவிசெட்டிபாலடைந்தானமதுகுறை விட்டோடுஞ்சேற்கண்மானே.

உரை :—சேல் கண்மானே = சேல் மீன்போன்ற கண்ணையுடைய பெண்ணே ! அவிசு எட்டி வாங்கு சுரர்க்கு இறை நிகராய் = யாகத்தி லளிக்கும் ஆகுதியை எட்டி வாங்குகின்ற தேவர்களுக்குத் தலைவனுகிய இந்திரனுக்குச் சமமாய், வளம் மருவும் அமரர் என்றே = செல்வமிக்க வானவரென்று தம்மை நினைத்து, எட்டிமரம் போல வளர்ந்து = பயனற்ற எட்டி விருட்சம்போல் வளர்ந்து, தவிசு இருப்போர் தமைப்பாடோம் = இருக்கை வீட்டெழாதிருக்கும் லோபிகளை நாம் பாடமாட்டோம், தனி நக்கீரன் கவி செட்டித் திருவடியைப் புகழ் வணிகன் = ஒப்பற்ற நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை முதலிய பாடல்களால் முருகப்பிரான் திருப்பாதத்தைத் துதிக்கின்ற வர்த்தகராகிய, இசையுடன் நல் கவின் ஆர் நஞ்சை செவி செட்டி = இசையும் நல்லழகு முடைய தஞ்சைப்பதியி லிருக்கும் செவி செட்டி யென்பவர், பால் அடைந்தால் = இடஞ் சேர்ந்தால், நமது குறை விட்டு ஓடும் = நமது குறைபாடுகள் நம்மை விட்டு ஒழியும், ஏ - து.

திருக்கோவலூர்க்கு அதிபதியிய தாண்டவராயனென்னும் வள்ளல்மீது பாடியது.

2. பாங்குயர் பலிக்குமேடை கொல்லையா
மாருதந் துருத்தியா நீடும்
பகர்நிலாக் கற்றை பதடியாமூடும்
படரிருட் குழாங்குடை கரியா
ஒங்கிய செக்கருள் விடுங்கனலா
வுயிர்பெரும் பனிகொடும் புகையா
உருவிலி யென்னுங் கொல்லனென்பொன்னை
யுருக்குமா றென்கொலோ வுரையாய்

தூங்கிய விழியுந் தாம்புடைக்கயிறுந்
தூம்புறு காம்பியற் குழலும்
துவருடைத் துகிலுங் கவருடைக்கழியுந்
தொறுவிய ருறிபடு குடமும்
தாங்கியகையு மெய்யுமாய் நின்று
தண்ணளி பெய்யுமா முகிலே
தாண்டவ ராயா பாண்டவர்தூதா
தாழ்வில்சீர்க் கோவலா திபனே.

உரை:—தூங்கிய விழியும் = உறங்கினுள் போன்ற தோற்றத்தை யுடைய கண்ணும், தாம்புடைக் கயிறும் = தாமணிக் கயிறும், தூம்புறு காம் பியல் குழலும் = துவாரமுள்ள மூங்கிலால் அமைந்த புல்லாங்குழலும், துவருடைத் துகிலும் = சிவப்புநிறமுடைய உடையும், கவருடைக் கழியும் = பிளவுடைய தோலும், தொறுவியர் உறிபடு குடமும் = ஆயர் மகளிர் உறியில் வைத்த குடமும், தாங்கிய கையும் மெய்யுமாய் நின்று = இவற்றைக் கையி லும் உடம்பிலும் சுமந்துகொண்டு நின்று, தண் அளி பெய்யும் மாமுகிலே = குளிர்ந்த இரக்கத்தை மழையாகச் சொரிகின்ற பெரிய மேகமே! தாண்டவ ராயா = தாண்டவராய வள்ளலே! பாண்டவர் தூதா = ஐவர்க்குத் தூதாகச் சென்ற கண்ணன் அமிசமானவனே! தாழ்வுஇல் சீர்க்கோவல் அதிபனே = குறைவுபடாத புகழையுடைய திருக்கோவலூருக்குத் தலைவனே! பாங்குயர் பளிக்குமேடை கொல் உலையா = பக்கங்கள் உயரப்பெற்ற பளிக்கு மாட மானது கொல்லனது உலையாகவும், மாருதம் துருத்தியா = தென்றலானது காற்றுப் பையாகவும், நீடும் பகர் நிலாக் கற்றை பதடியா = நெடுநேரம் பிரகா சிக்கின்ற சந்திரன் ஒளிக்கதிர்களின் கூட்டமானது உமியாகவும், மூடும்படர் இருள் குழாம் = பக்கத்திற் பரவிய இருளின் செறிவானது, குறை கரியா = குடைந்துவைத்த கரியாகவும், ஓங்கிய செக்கர் = மிகுந்த செவ்வானமானது, உள்ளிடும் கனலா = உலையிட்ட தீயாகவும், உயர் பெரும்பனி = மிகுதியாகப் பரவிய பனியானது, கொடும் புகையா = கடுமையான புகையாகவும் வைத்துக் கொண்டு, உருவிலி என்னும் கொல்லன் = உருவற்ற மன்மதனுகிய கொல் லன், என் பொன்னை = பொன்போன்ற என் பெண்ணை, உருக்குமாறு என் கொலோ உரையாய் = உருக்குகின்றதற்குக் காரணம் யாதென்று கூறுவா யாக, எ - று.

கருவைப்பதியில் வீற்றிருக்கும் களவிசர்மேற் பாடிய நிந்தாஸ்துதி.

3. மெய்யாரப் புலிகாணப் பொதுவிலாட்டை
மிகவெடுத்தீ ருமையாளுக் கொருபங்கீந்தீர்
பய்யாரப் பணமெடுத்தீ ரையாநீர்தாம்
பாரறியச் சக்கரத்தை மாலுக்கீந்தீர்

செய்யாரத் தடம்புடைசூழ் கருவைவாழும்
திருக்களா வீச்சுரமே தேவரீர்தாம்
கய்யார மழுவெடுத்துக் காட்டினலும்
களவும்மைக் கொண்டேநான் காண்பிப்பேனே.

உரை :—செய்யாரத் தடம்புடை சூழ் கருவை வாழும் = வயல்கள் நிறை யும்படியாகப் பக்கத்தில் பொய்கைகள் சூழப்பெற்ற கருவைப்பதியில் வீற்றி ருக்கின்ற, திருக்களா ஈச்சுரனே = திருக்களா மரத்தினடியில் தங்கிய முதல்வரே! மெய்யாரம் புலி காண = உடம்பில் மாலையாகத் தரித்த பாம் பும் புலி முனிவரும் தரிசிக்கும்படியாக, பொதுவில் = சபையில், ஆட்டை மிக எடுத்தீர் = ஆட்டுக்குட்டியை எடுத்தீர் அல்லது நடனத்தை மிகுதியாகச் செய்தீர், உமையாளுக்கு ஒரு பங்கு ஈந்தீர் = உமா தேவிக்கு ஒருபாக மளித் தீர், பய்யாரா பணம் எடுத்தீர் = பைபோன்ற படம் பெருந்திய நாகத்தை யெடுத்தணிந்தீர் அல்லது பையிலுள்ள அந்தப் பணத்தை யெடுத்துக்கொண் டீர், ஐயா நீர் தாம் பார் அறிய சக்கரத்தை மாலுக்கு ஈந்தீர் = ஐயனே நீர் உலகத்தார் காணும்படி சக்காயுதத்தை அல்லது சக்கர மென்னும் காசினை வீண்டுவுக்கு அளித்தீர், தேவரீர் தாம் கய்யார மழு எடுத்துக் காட்டினலும் = சுவாமியே நீர் உமது கையில் மழுவாயுதத்தை எடுத்துக் காட்டினலும் (அல்லது நீர் ஒன்று மெடுக்கவில்லையென்று சத்தியம் பண்ணினலும்) களவு உம்மைக்கொண்டே நான் காண்பிப்பேன் = நீர் களவு செய்ததை உம்முடைய செய்கையினலே நான் ருசுப்படுத்துவேன அல்லது களா மரத்தை நீர் அத னடியி லிருப்பதனல் காட்டுவேன், எ -று.

காளத்திநாதர்மீது பாடிய நிந்தாஸ்துதி.

4. மான்பிடித்தீர் முயன்மிதித்தீ ரெவருங்காண
மன்றுதனி லாலெடுத்தீர் மகத்துவந்த
ஊன்பெருத்த யானையைக்கொன் றுரித்தீரிப்பால்
உரப்பானதலைக்கறிக்கு முவந்தீரையா
மீன்பொதிந்த விழிமடவாட் கொருபங்கீந்தீர்
மேலானவேடனெச்சின் மிகவேகொண்டீர்
கான்பொதிந்த காளத்தி நாதாவும்மைக்
கழுக்கள்வந்து சுற்றுவதுங் காணத்தானே.

உரை :—கான் பொதிந்த காளத்தி நாதா = காடடர்ந்த திருக் காளத்தியி லிருக்கும் பெருமானே! மான் பிடித்தீர் = மானை இடக்கையில் எடுத்து வைத்துக்கொண்டீர், முயல் மிதித்தீர் = முயலகன்மேல் கால்வைத்து அழுத்தினீர், எவரும் காண மன்றுதனில் ஆடு எடுத்தீர் = எல்லாரும் பார்க்கும்படி சபையில் நடனம் செய்தீர் அல்லது ஆட்டைக் கைக்கொண்டீர், மதத்து வந்த ஊன் பெருத்த யானையைக் கொன்று உரித்தீர் = தாருகா

வனத்து முனிவர்கள் செய்த வேள்வியினின்றும் புறப்பட்டு வந்த பருத்த உடம்பையுடைய யானையைத் தோலுரித்துக் கொன்றீர், இப்பால் உரப்பான தலைக் கறிக்கும் உவந்தீர்=பிள்ளையின் வலிய தலைக்கறியையும் இச்சித்தீர், ஐயா மீன் பொதிந்த விழி மடவாட்கு ஒரு பங்கு ஈந்தீர்=அழகுள்ள மீனினியல்பு பொருந்திய கண்ணையுடைய பார்வதிக்கு ஒரு பாகம் அளித்தீர், மேலான வேடன் எச்சில் மிகவே கொண்டீர்=அன்பிற் சிறந்த வேடராகிய கண்ணப்பர் எச்சில் கலந்த உணவை மிகுதியாக ஏற்றுக்கொண்டீர், உம்மைக் கழுக்கள் வந்து சுற்றுவதும் காணத்தானே=கழுகுகள் உம்மைச் சுற்றி வட்டமிடுவது உம்மைத் தரிசிப்பதற்காகவே அல்லது உம்மிடத்திலுள்ள ஊன் உணவை இச்சித்தேபோலும் என்க, எ - று.

முத்திருளப்பப் பிரபுசெய்த ஆலயத்திருப்பணியைப் புகழ்ந்து பாடியது.

5. பருப்பதங்க ளொவ்வொருதூண் பாவுக்கல்
வலையாத பார மேரு
சுரிப்படங்காப் போதிகைநீ செய்தபணி
விடையையென்ன சொல்வே னையா
தருப்பொலியுங் கரதலமுத் திருளப்ப
சாமி நின்ருய் பாலுன்னைக்
கருப்பணிமுன் றிருப்பணிக்கென் றுருப்பணினுன்
மருப்பொலியுங் கமலத் தோனே.

உரை :—தருப்பொலியும் கரதல முத்திருளப்பசாமி=கற்பக மரத்தின் இயல்பு வாய்ந்த கைகளையுடைய முத்திருளப்ப னென்னும் தலைவனே! பருப்பதங்கள் ஒவ்வொரு தூண்=மலைகளே ஒவ்வொரு தூண்களைப் போலவும், பாவுக்கல் வலையாத பாரமேரு=மேலே பாரப்பும் கல்லானது வலைதலில்லாத கனத்த மேருமலை போலவும், சுரிப்படங்காப் பொதிகை=சுருங்கியொடுங்காத சிறு தூண்களும் அமைத்து, நீ செய்த பணிவிடையை என்ன சொல்வேன் ஐயா=நீ இயற்றிய ஆலத்திருப்பணியை எத்தகைய தென்று கூறுவேன் ஐயனே! நின் தாய்ப்பால்—உன்னுடைய அன்னையினிடத்தில், முன் திருப்பணிக்கு என்று=முன்னமே திருப்பணிக்கு நீ உரியவன் ஆவாயென்று, உன்னைக் கருப்பண்ணி=உன்னைக் கருவாகச் செய்து, உருப்பணினுன் = வடிவாக்கினுன், மருப்பொலியும் கமலத் தோனே=வாசனை வீசும் தாமரையி லிருக்கும் பிரமதேவன், எ-று.

குறிப்பு :—கருப்பண்ணி, உருப்பண்ணி என்பனவற்றில் பணியெனத் தொக்கு நின்றது.

சேதுபதி முத்துராமலிங்க துரைமீது பாடிய நிந்தாஸ்துதி.

6. சேதுபதிகாத்தமுத்துராமலிங்க துரைராசசிங்கமந்திரி
மாதுபதிமுத்திருளப்பன்கொடிய வரிவேங்கைவளராதிக்கம்
கோதுறுபாமரக்காக்கருணீகர் மும்மதக்கொல்யானைமற்றோர்
மோதுபெரும்புலிக்காடுகல்விமான்களுந் திரிந்தான்மோசந்தானே.

உரை:—சேதுபதி காத்த முத்துராமலிங்க துரை ராச சிங்கம்= சேதுபதியானவர் பெற்று வளர்த்த முத்துராமலிங்க துரை யென்பவர் அரச சிங்கமாவார், மந்திரி=அவர்க்கு அமைச்சராகிய, மாதுபதி=அழகு பொருந்திய, முத்திருளப்பன்=முத்திருளப்ப னென்னும் பிரபு, கொடிய வரி வேங்கை=வெம்மையான வரிப் புலியாவர், வளர் ஆதிக்கம்=அவர்களுடைய தழைத்த ஆட்சி நிலம், கோதுறு பாமரக் காடு=குற்றமுள்ள சாதாரண மக்களின் தொகுதியிருக்கும் காடாகும், கருணீகர்=கணக்கு வேலை பார்க்கின்றவர்கள், மும்மதக் கொல் யானை=மும்மதம் பொழியும் எதிரிகளைக் கொல்லவல்ல யானைகள், மற்றோர்=வேனைய உத்தியோகஸ்தர், மோது பெரும் புலிக்காடு=தாக்குகின்ற பெரிய புலிகளின் கூட்டம் போல்வர், கல்விமான்களும் திரிந்தால் மோசந்தானே=(சிங்கம், புலி, யானை முதலியன விருக்கும் காட்டில்) கற்றவர்களாகிய மான்கள் நடமாடினால் ஆபத்து ஏற்படக்கூடியதே, எ-று.

திருக்குடந்தைச் சிவபெருமான் துதி.

7. ஞாலத்தெவரும்புகழ்குடந்தா புரிநாதனெங்கோன்
காலப்புயல்வண்ணன்கண்மலர் சாத்தக்கருத்திலுன்னிச்
சீலத்தவனம்மடியானென் றியார்க்குந்தெரியவிட்ட
சூலக்குறியல்லவோநாமம் யாதெனச்சொல்லியதே.

உரை:—ஞாலத்து எவரும் புகழ்=பூமியிலுள்ள எல்லாரும் மெச்சுகின்ற, குடந்தாபுரி நாதன் எங்கோன்=திருக்குடந்தைப்பதிக்கு அதிபனாகிய எமது தலைவன், காலப் புயல் வண்ணன் கண்மலர் சாத்த—கார்கால முகில்போலக் கருநிறமுடைய பெருமாள் தன்னுடைய கண்ணைப் பூவாகச் சமர்ப்பிக்க, சீலத்தவன் நம் அடியான் என்று கருத்தில் எண்ணி=அவர் சிறந்த தவ வொழுக்கமுடைய தமது தொண்டனென்று நினைத்து, யார்க்கும் தெரிய விட்ட=அவ் வுண்மையை எல்லாரும் அறியும்படி பொறித்த, சூலக் குறியல்லவோ நாமம்=சூலாயுதத்தின் அடையாளமல்லவா பெருமான் நெற்றியிலுள்ள திருநாமம், யாதெனச் சொல்லுவதே=வேறு அது எது என்று கூறுவது, எ-று.

திருக்கழுக்குன்றத் தலச்சிறப்பைப்பற்றிப் பாடியது.

8. வியந்தநிசாசரனுமென்று சந்த்ரனும்வெஞ்சனிக்குப்
பயந்தவனுமென்றுபானுவும் வந்துபணியச்செம்பொன்

நயந்தருசெல்வக்கழுகாசல மதுநண்புவைத்துச்
செயந்தந்ததான்மதியாதவ ரென்னத்திரிந்தனரே.

உரை:—நிசா சரனும் என்று சந்திரனும்= இரவில் திரிவோனென்று புகழப்பட்ட சந்திரனும் அல்லது இராததிரியில் திரிவதைப்பற்றிக் காப்பு வேண்டு மென்ற சந்திரனும், வெம் சனிக்குப் பயந்தவனும் என்று பானு வும்=கொடிய சனிக்கோளைப் புதல்வனுகப் பெற்றவன் அல்லது கொடிய சனிக்கோளின் வலிக்கு அச்சப்பட்டவன் என்பதுபற்றிச் சூரியனும், வந்து பணிய=சென்று வழிபட, செம்பொன் நயம் தரு செல்வக் கழுகாசலம்= சிறந்த பொன்னின் நலமமைந்த செல்வமுடைய திருக்கழுக்குன்றமானது, நண்பு வைத்துச் செயம் தந்ததால்=தயவுசெய்து அவர்களுக்கு வெற்றி யளித்தமையால், மதியாதவர் என்னத் திரிந்தனரே=ஒருவரையும் மதியாத வர் என்று பேசும்படியாக அலைந்தார்கள் அல்லது (மதி+ஆதவர்) சந்திர சூரியர்களென்று பேசும்படி திரிந்தார்கள், எ- று.

தில்லைக் கற்பக விநாயகர்மீது பாடிய துதி.

9. பொருகோட்டுவாரிநிலத்திற் குணங்கெட்டபூரியரைத்
தருகோட்டுக்கொம்பென்றுரைத் தென்பயனவருந்தண்டமிழீர்
வருகோட்டுத்திங்கண்முடிகூத்தர் தில்லைவனத்தில்வளர்
ஒருகோட்டுக்கற்பகமெல்லாந் தருந்தன்னையுற்றவர்க்கே.

உரை:—தண் தமிழீர்=குளிர்ந்த தமிழைக் கற்ற புலவரே! பொரு கோட்டு வாரி நிலத்தில்=(அலைகள்) தாக்குகின்ற கரையையுடைய சமுத் திரம் சூழ்ந்த உலகில், குணம் கெட்ட பூரியரை=நற்பண்பு அமையாத அற் பரை, தருகோட்டுக் கொம்பு என்று உரைத்தது என் பயன் வரும்=கற்பக மரத்தின் வளைவான கிளையென்று சொல்லிப் புகழுவதால் யாது பிரயோசன முளதாகும், வருகோட்டுத் திங்கள்முடி கூத்தர்=வளைவு பொருந்திய பிறை யணிந்த திருமுடியை அணிந்த நடேசரது, தில்லை வனத்தில் வளர்=தில்லை வனமாகிய சிதம்பரத்தில் திகழுகின்ற, ஒரு கோட்டுக கற்பகம்=ஒற்றைக் கொம்பையுடைய கற்பக விநாயகர், தன்னை உற்றவர்களே எல்லாம் தரும்= தன்னை யண்டினவர்களுக்கு எல்லா நன்மைகளையும் அளிப்பார், எ- று.

சோலைமலை அழகர்மீது பாடியது.
துறை-வெறி விலக்கல்.

10. வண்டுறை சோலைமலைப் பரிகாரி வந்தா லிவளுக்
கண்டு படாத விக்காமச் சுரம்விடு மாதலினுல்
பணடு பழகினர் போலிந்த வேளையிற் பாயசத்தைக்
கொண்டு வந்தீரிதிற் ரேஷம் பிறந்திடுங் கோதையரே.

உரை: —கோதையரே = தாய்மாரே ! இவளுக்கு அண்டுபடாத இக் காம சுரம் = இவளுக்கு வரக் கூடாத இந்தக் காமநோய், வண்டுறை சோலை மலைப் பரிகாரி = வண்டுகள் தங்கும் சோலைமலையிலுள்ள மருத்துவராகிய அழகர், வந்தால் வீடும் ஆதலினால் = வருவாரானால் குணமாகு மாதலினால், பண்டு பழகினர்போல் = முன் மருந்து கொடுத்துத் தெரிந்து பழகினவர்கள் போல, இந்த வேளையில் = இந்நேரத்தில், பாய் அசத்தைக் கொண்டு வந்திர் = பாய்கின்ற ஆட்டைப் பலியிடுதற்காகக் கொணர்ந்தீர்கள், இதில் தோஷம் பிறந்திடும் = இதனால் பாபம் நேரிடும், எ - று.

குறிப்பு :—' பாயசம் ' என்ற சொல் பாலுணவு, ஆடு என்ற இரு பொருளுடையது.

சொக்கநாதர்மீது பாடியது.
தாயிரங்கல்.

11. படைத்தாமவேற்கண்ணிகண்ணீர் ப்ரவாகப்பரவைபொங்கி
உடைத்தாலடைத்தற்குபாய முண்டோநறையூற்றிதழித்
தொடைத்தார்மவுலியிற்சும்மாடு கட்டிச்சுமந்நுசுமந்
தடைத்தாலடைபடச்சொக்கேயிது வையையாறல்லவே.

உரை:—சொக்கே = சொக்க நாதரே ! படைத்தாம வேல் கண்ணி = ஒளி யுடைய ஆயுதமாகிய வேல் போன்ற கண்ணை யுடையவளது, கண்ணீர்ப் பிரவாகப் பரவை பொங்கி = கண்ணீர் வெள்ளமாகிய கடல் உயர்ந்து கிளம்பி, உடைத்தால் அடைத்தற்கு உபாயம் உண்டோ = நாண் என்னும் கரையை உடைத்தால் அவ் வெள்ளத்தைத் தடுப்பதற்கு வழி யிருக்கின்றதா ? நறை யூற்று இதழித் தொடைத்தார் மவுலியில் = தேன் சிந்துகின்ற கொன்றை மாலை யணிந்த சடைமுடியில், சும்மாடு கட்டி சுமந்து சுமந்து அடைத்தால் = சுமை தாங்கும் வளையமைத்து மண் கூடையை அதன்மேல் வைத்துப் பல முறை எடுத்துக்கொண்டு போய் மண்ணினை யடைத்தால், அடைபட இது வையை ஆறல்லவே = அடைபட்டுப் போவதற்கு இது வையை ஆறுபோல நதியன்று (சமுத்திரமாகும்), எ-று.

மக்களே விளித்து ஆலவாய்ப்பெருமான் தன்மையைத்
தெரியீரெனப் பாடியது.

12. ஏழேழுசங்கத்துடனிருந்தா னென்றியம்புகின்றீர்
பாழேழ்மையுற்றிடுமானிடரே சொக்கர்பண்பறியீர்
ஆழேழுலகத்துக்கப்பா லிருந்தவடிகளும்பர்
வாழேழுலகத்துக்கப்பா லிருந்தமணிமுடியே.

உரை :—பாழ் ஏழ்மை உற்றிடும் மானிடரே = வீணை அறியாமை பொருந்திய மக்களே ! ஏழேழு சங்கத்துடன் இருந்தான் என்று இயம்பு

இன்றீர்=நாற்பத்தொன்பது சங்கப் புலவரோடு ஒருவராக வீற்றிருந்தா ரென்று கூறுகின்றீர்கள், சொக்கர் பண்பு அறியீர்=சொக்கலிங்கப் பெருமா னது உயர்ந்த இயல்பினை நீங்கள் தெரியமாட்டீர்கள், (மாலும் அயனும் அடி முடி தேடியபோது) அடிகள் ஆழ் ஏழுலகத்திற்கு அப்பால் இருந்த=கீழே ஆழ்ந்து செல்லுகின்ற ஏழுலகங்களையுங் கடந்து அவற்றிற்கு அப்பாலிருந் தன, மணி முடியே=அழகிய சடை முடியானது, உம்பர் வாழ் ஏழுலகத் துக்கு அப்பால இருந்த=விண்ணவர் தங்குகின்ற உலகமேழையுங் கடந்து அவற்றிற்கு அப்பாலிருந்தது, எ-று.

செல்லூ ரென்னுப் பிரபு தமக்குக் கணையாழி பிட்டதைப்பற்றிப் புகழ்ந்து பாடியது.

13. காவொன்றுங்கைத்தலத்தண்ணல் செல்லூரன்கனிந்துநம்மை
வாவென்றழைத்திட்டமோதிரமே வண்மையான தமிழ்ப்
பாவொன்றுஞ்சற்றுமறியாத புல்லர்தம்பக்கலிற்போய்த்
தாவென்றுகையெடுத்தேற்காம லிட்டதடையிதுவே.

உரை:—கா ஒன்று கைத்தலத்து அண்ணல்=கற்பக மரத்தின் இயல்பமைந்த கையையுடைய வீரனுகிய, செல்லூரன்=செல்லூர னென் னும் வள்ளல், கனிந்து=மனமுருகி, நம்மை வா என்று அழைத்து=நம்மை வரும்படி கூப்பிட்டு, இட்ட மோதிரமே=என் கைவிரலிலிட்ட மோதிர மானது, வண்மையான தமிழ்ப்பா ஒன்றும் சற்றும் அறியாத=வளம்பொருந் திய தமிழ்ப் பாட்டின் இயல்பினை ஒரு சிறிதும் தெரியாத, புல்லர்தம் பக்க லிற் போய்=கீழ்மக்களிடத்திற் சென்று, தா என்று கை எடுத்து ஏற்கா மல்=கொடுவென்று கைநீட்டி யாசிக்காமல், இட்ட தடை இதுவே=ஏற் படுத்திய தடையே ஆகும், எ-று.

சீதக்காதிப் பிரபுமீது பாடியது.

14. தடக்கும்பகிம்புரிக்கொம் பாசலப்பெருந்தந்திபட
நடக்குந்துரங்கத்துரை சீதக்காதிநன்னாட்டினல
வடக்குங்குமக்கொங்கை மின்னேயவன்றெருவாயிலிலே
கிடக்குங்கவியும்பரராஜ ரத்நகிரீடமுமே.

உரை:—தடக்கும்ப கிம்புரி கொம்பு அசலம்=விசாலமான கும்பம் போன்ற தலையும் தந்தப் பூணுமுடைய மலைபோன்ற, பெரும் தந்திபட நடக்கும்=பெரிய யானை சாகும்படி செல்லுகின்ற, துரங்கத் துரை=குதி ரையின் தலைவனுகிய, சீதக்காதி நல் நாட்டில்=சீதக்காதியின் சிறந்த தேசத்தில், நலவடக் குங்குமக் கொங்கை மின்னே=அழகான முத்துமாலை அணிந்த, குங்குமக் குழம்பு சாத்தப்பெற்ற தனங்களுடைய பெண்ணே! அவன் தெரு வாயிலிலே=அவனுடைய வாசற்படியிலே, கவியும் பர்ராச

ரத்னக் கிரீடமுமே கிடக்கும்=அவனது புகழ்ப் பாட்டுக்களும் பிற மன்னாது இரத்தினத்திலாகிய முடிகளும் (பரந்து) கிடப்பன, எ - று.

சீதக்காதிப்பிபு இறந்ததைக்குறித்துப் பாடிய சரமகவி.

15. பூமாதிருந்தென்புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமாதிருந்தென்ன நாமிருந் தென்ன நன்னுவலர்க்குக்
கோமானழகமர்மால் சீதக்காதிகொடைமிகுந்த
சீமானிறந்திட்டபோதே புலமையுஞ்செத்ததுவே.

உரை :—பூதலத்தில்=இப்பூவுலகில், பூமாது இருந்தென்=தாமரைப் பூவில் தங்கும் இலக்குமி இருந்தும் யாது பயன், புவி மாது இருந்தென்=பூமி தேவி இருந்தும் யாது பயன், நா மாது இருந்தென்ன=கலைமகளிருந்தும் யாது பயன், நாம் இருந்து என்ன=நாமிருந்தும் யாது பயன், நல் நாவலர்க்குக் கோமான்=தக்க புலவர்கட்கு அரசன் போல்வானும், அழகமர் மால்=வனப்பு அமைந்த காத்தற் கடவுள்போல்வானும், கொடை மிகுந்த சீமான்=வள்ளல் தன்மையிற் தலைசிறந்த பொருளாளனுமாகிய, சீதக் காதி=சீதக்காதி யென்பவன், இறந்திட்டபோதே=மரணமடைந்தபோதே, புலமையும் செத்ததுவே=கல்விச் சிறப்பும் ஒழிந்து போயிற்று, எ - று.

சோதிடரைத் தாய்பழித்துக் கூறியது.

16. மாகத்தத்தும்புகழான்பகை வேந்தர்மகுடம்பொடி
ஆகத்தத்தும்பரியான் சீதக்காதியணிமலரின்
ஏகத்தத்தும்பியிசைபாடு மார்பனிலென்மகட்கோர்
மோகத்தத்துண்டென்றுசொன்ன ரிலைமுன்மொழிந்தவரே.

உரை:—மாகம் தத்தும் புகழான்=ஆகாயத்தை யளாவுகின்ற கீர்த்தியை யுடையவனும், பகைவேந்தர் மகுடம் பொடி ஆக=எதிர் மன்னருடைய கிரீடம் தூளாகும்படி, தத்தும் பரியான்=பாய்ந்து செல்லுகின்ற குதிரைகளையுடையவனும், அணிமலரினே கத்து அத் தும்பி இசை பாடும் மார்பன்=சூடிய பூமாலையினிடத்தே ரீங்காரம் செய்யும் அந்த வண்டானது இசைப்பாடல் பாடும் மார்பினை யுடையவனுமாகிய, சீதக்காதியில்=சீதக் காதி யென்பவனுலே, என் மகட்கு ஓர் மோகத்தத்து உண்டு என்று=என் மகளுக்கு ஆசைப்பட்டிறக்கக்கூடிய கண்டம் அல்லது அபாயமிருக்கு மென்று, முன் மொழிந்தவர் சொன்னர் இலை=அவளெதிர் காலத்தைப் பற்றிப் பேசிய சோதிடர்கள் முன்னே கூறினரில்லை, எ - று.

ஐயாதேனிடம் சென்றபோது சீதக்காதிப்பிரபுவின் கொடையை வியந்து பாடியது.

17. மைப்போதகமும்வளநாடுஞ் செந்தமிழ்வாணர்க்கருள்
கைப்போதகமனையான் சீதக்காதியைக்காத்திருந்த

அப்போதறிந்திலமிப்பாழ்ப் பணத்தினருமையெல்லாம்
இப்போதறிந்தனமீயாத லோபரிடத்திற்சென்றே.

உரை :—மைப்போதகமும் நளநாடும்=மேகம் போன்ற யானையும் செழிப்பான ஊரும், செந்தமிழ் வாணர்க்கு அருள்=சிறந்த தமிழ்ப் புலவர் களுக்கு வழங்கின, மைப்போதகம் அனையான்=இளையயானையைப் போன்றவ னுகிய, சீதக்காதியைக் காத்திருந்த அப்போது=சீதக்காதியை எதிர்பார்த்துக் காத்திருந்த அந்த நாளில், இப் பாழ்ப்பணத்தின் அருமை எல்லாம் அறிந் திலம் = இந் நிலையாத செல்வத்தின் கிடைத்தற்கரிய தன்மையைத் தெரிந்தோமில்லை, ஈயாத லோபரிடத்தில் சென்றே இப்போது அறிந் தனம்=இரப்பவர்க்கு ஒன்றுங் கொடாத சிக்கனக்காரரிடம் போய் அதனை இந்நாளில் தெரிந்தோம், எ-று.

திருப்பரங்குன்றம் முருகக்கடவுள்மீது பாடியது.
தாய்க் கூற்று.

18. கிட்டாதுபெண்குடிமார்க்கங் கணவன்கிழவனல்ல
பட்டாணிச்சேவகனல்லும் பகலுமப்பாற்பிசக
ஒட்டான்பொய்யல்லமனமே லிருக்குமக்குமிவள்
எட்டாதகொம்பிற்கனிகாண் பரங்குன்றிருப்பவரே.

உரை:—பரம் குன்று இருப்பவரே=திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக் கும் முருகப்பெருமானே! கிட்டாது பெண்=இம்மாது உம்மை வந்து அடையமாட்டாள், குடி மார்க்கம்=இவ ளில்லறத்திலுள்ளவள், (தாயில்ல) கணவன் கிழவன் அல்ல=அவள் புருடன் வயோதிகனல்லன், பட்டாணிச் சேவகன்=அவன் முகமதியவீரன், அல்லும் பகலும் அப்பால் பிசக ஒட்டான்= இரவும் பகலும் வீட்டைவிட்டு அப்புறம் தவறிப்போக இடங்கொடான், பொய்யல்ல=இது உண்மையே, மலைமேல் இருக்கும் உமக்கும்=குன்றின் மேல் வீற்றிருக்கும் உமக்கும், இவள் எட்டாத கொம்பில் கனி=தொட முடியாத மரக்கொம்பிற் பழுத்த பழம் போல்வாள், காண்-அசை, எ-று.

ஒரு மாதின் நயனத்தினழகை வியந்து பாடியது.

19. மஞ்சுமஞ்சுங்கைப்பரராஜ சேகரமன்னன்வெற்பில்
பஞ்சுமஞ்சும்பதப்பாவை நல்லீர்படைவேள் பகழி
அஞ்சுமஞ்சுங்கயலஞ்சுமஞ்சுங் கடலஞ்சுமஞ்சும்
நஞ்சுமஞ்சும்வெற்றிவேலோ வனதுநயனங்களே.

உரை :—மஞ்சும் அஞ்சும் கை=மேகமும் பயப்படும்படியான ஈகை யுடைய கையினனுகிய, பர ராஜசேகர மன்னன் வெற்பில்=பராஜ சேகர வேந்தன் னன்பானது மலையிலிருக்கும், பஞ்சும் அஞ்சும் பதப்பாவை

நல்லாய்=மென்மைத் தன்மையில் பஞ்சும் பயப்படத் தக்க அடிகளை யுடைய பதுமைபோன்ற அழகியே! பட்டவேள் பகழி அஞ்சும்=மன்மதனுடைய அம்புகள் ஐந்தும் அஞ்சும் மிகுதியும் பயப்படும், கயல் அஞ்சும் அஞ்சும்=கயல் மீன்கள் மிகுதியும் பயப்படும், கடல் அஞ்சும் அஞ்சும்=கடலும் மிகுதியாகப் பயப்படும், நஞ்சும் அஞ்சும்=விடமும் மிகுதியாகப் பயப்படும், வெற்றி வேலோய் உனது நயனங்களே=உன்னுடைய கண்கள் ஜெயம் தருகின்ற வேல்போன்றனவோ, எ - று.

பிரம்பைப்பதிவாழ் ஆனந்தரங்கப் பிரபுமீது பாடியது.

20. பாரார்சொல் லாரார் பறவைக் குலங்கட்மின்
சீராருங் கிள்ளைமுதற் செப்பலால்—ஓரா
யிரம்பையா னந்தரங்க னின்பரங் கனன்பன்
பிரம்பையா னந்தரங்கன் பேர்.

உரை:—ஓராயிரம் பையான்=ஓராயிரம் படங்களையுடைய ஆதிசேஷனுக்கு, அந்தரங்கன்—(கல்வியிலும்) நெருங்கிய நண்பன், இன்ப அரங்கன் அன்பன்=இன்பத்தை யளிக்கின்ற திருவரங்கப் பெருமானுடைய பக்தன், பிரம்பை ஆனந்தரங்கன்=பிரம்பூரிலுள்ள ஆனந்தரங்கன், பேர்=ஆகிய அவன் நாமத்தை, பறவைக் குலங்கள் தம்மில்=பறவைத் தொகுதியுள், சீர் ஆரும் கிள்ளை முதல் செப்பலால்=பேசும் சிறப்பு வாய்ந்த கிளி முதலிய பறவைகள் சொல்லுதலால், பாரார் சொல்லார் ஆர்=உலகத்திலுள்ள மக்களில் அவன் பெயரைச் சொல்லாதவர்கள் யாவர், எ - று.

திருத்தணிகைச் சிறப்பைப்பற்றிப் பாடியது.

21. பங்கயமு மேரிகளும் பாவையர்கை யும்மணியும்
தங்கவளை சூழுந் தணிகையே—திங்கணுதற்
செந்திலக்கத் தாள்புனிதன் செல்வன் கடற்கரைசேர்
செந்திலக்கத் தாள்தனிதன் சேர்பு

உரை:—திங்கள் நுதல் செந்திலகத்தான்=பிறைபோன்ற நெற்றியில் சிவந்த குங்குமப் பொட்டணிந்த உமையம்மை, புல் நிதன்=அணைகின்ற நித்தனாகிய பரமசிவத்தின், செல்வன்=திருமகனும், கடல் கரை சேர் செந்தில் அகத்து ஆள் புனிதன்=கடற்கரை சூழ்ந்த திருச்செந்தூரில் தங்கி எல்லாரையும் ஆட்கொள்கின்ற தூயவனாகிய முருகக்கடவுளது, சேர்பு=சென்று தங்குமிடம், பங்கயமும்=கமலங்களும், ஏரிகளும்=பெரிய குளங்களும், பாவையர் கையும்=மாதர் கைகளும், மணியும்=இரத்தினங்களும், தங்க வளை=பொன் வளையல்களும், சூழும் தணிகையே=நிரம்பிய திருத்தணிகைத் தலமாகும், எ - று.

பாண்டிய மன்னன்மீது பாடியது.

22. கோலெடுத்துக் கோத்துரத்துங் கோப்பாண்டி மன்னன்வடி
வேலெடுத்துக் கோத்துரத்தல் விட்டிலனே—சால்படுத்த
பூபால னெனும் போமோபு ராதனத்திற்
கோபால னன குணம்.

உரை :—கோல் எடுத்து = செங்கோலினால் நீதி செலுத்தி, கோ தூத்தும் = எதிரியான பகை மன்னரைத் தூத்துகின்ற, கோ பாண்டிய மன்னன் = பெருவேந்தனாகிய பாண்டியன், வடிவேல் எடுத்தும் = (முருகனுக்குரிய) வேல் படையைக் கையிலெடுத்த பின்னும், கோ தூத்தல் விட்டிலனே = (பகையரசர் அல்லது) பசுக்களை யோட்டுந் தொழிலைக் கைவிடவில்லை, சால்பு அடுத்த = உயர்வு அமைந்த, பூ பாலன் ஆனனும் = பூமியைக் காக்கின்ற அரசனானும், புராதனத்தில் = பழைய காலத்தில், கோபாலன் ஆன குணம் போமோ = கோபாலனைப் பசுக்காத்த பழக்கம் ஒழியுமா, எ - று.

புதுச்சேரி வெங்கடராயனென்னும் பிரபுவின் கொடையைச் சிறப்பித்துப் பாடியது.

23. விதுவையம் பதியோசையைப் பேரிகவிகையெனும்
மதன்வில்லில் வண்டேற்றினன்
மதுவையம் பதிவேகமோ டெய்துகுவலய மீதுகை
வைக்கவென் னுள்ளநோ
குதுவையம் பதினனும்புகழ் பெறுங்குமணன் கன்னன்
கொடைகளே மாற்றிய
புதுவையம் பதிவேங்க டராயன்பாற் புகலிவ்வேளையி
னென்றன்கைப் பூவையே.

உரை :—என்றன் கைப் பூவையே = எனது கையிலுள்ள சிறிய நாகண வாய்ப் பறவையே, விதுவை = சந்திரனை, கவிகை எனும் = கொடை யெனும், அம்பு அதி ஓசையைப் பேரி எனும் = கடலின் மிகுந்த முழக்கத்தை மூர்ச்சனவும், மதன் = (உடைய) மன்மதன், வில்லில் வண்டு ஏற்றினன் = தனது கரும்பு வில்லில் வண்டின் ஒழுங்காகிய நாணைக் கட்டினன், மதுவை அம்பு = தேனுள்ள கூரிய அம்புகளாகிய பூக்களை, அதி வேகமோடு எய்து = மிக விரைவாகச் செலுத்தி, குவலயமீது = கண் போன்ற குவளைப் பூவின் மேல், கை வைக்க = அவன் கைவைப்பதால், என் உள்ளம் நோகுது = என் மனம் துயரப்படுகிறது, உவையம் பதினனும் புகழ் பெறும் = பதினாலாக இருக்கின்ற உலகங்கள் யாவற்றிலும் கீர்த்தி பெற்ற, குமணன் கன்னன் கொடைகளே மாற்றிய = குமணன் கன்னன் முதலிய வள்ளல்களின் தருமச்

செயல்களுக்கு மேலாக ஈகை செய்த, புதுவையம்பதி வேங்காயன் பால்=புதுச்சேரியில் வாழும் திருவேங்கடாயனிடத்தில், இவ்வேளை புகல்=இந்த நேரத்திற் தெரிவிப்பாயாக! எ - று.

மதுரகவிராயர்

பாடியது

துரைரங்க பூபதிமேற் பாடியது.

1. துங்கவரை மார்பா துரைரங்க பூபதியே
இங்கோர் புதுமை யியம்பக்கேள்—பங்கயக்கை
ஆயிழைக்கு நான்குநுத லைந்துகுழை யாறுமுலை
மாயவிழி யேழா மதி.

உரை:—துங்க வரை மார்பா துரைரங்க பூபதியே=தூய மலைபோன்ற மார்பினையுடைய துரைரங்கனென்னும் நிலத்தலைவனே! இங்கு ஓர் புதுமை இயம்பக் கேள்=இங்கே ஓர் அதிசயமான சங்கதி கூறுகிறேன் கேட்பாயாக, பங்கயக் கை=தாமரைபோன்ற கையையுடைய, ஆயிழைக்கு=தெரிந்தெடுத்த அணியணிந்த கன்னிக்கு, நுதல் நான்கு ॥)கன்னிக்கு நான்காவது இராசியான) வில் போன்ற நெற்றியும், குழை ஐந்தும்=கன்னிக்கு ஐந்தாவது ராசியாகிய மகரம்போன்ற காதணிகளும், முலை ஆறு=(கன்னிக்கு ஆறாவது இராசியாகிய) கும்பம் போன்ற தனங்களும், மாய விழி ஏழ்=(கன்னிக்கு ஏழாவது இராசியாகிய) மீன் போன்ற மயக்கம் செய்யும் கண்ணும், மதி=உள்ளனவென்று அறிவாயாக! எ-று.

'கொண்டுவந்து போட்டுக்கொளுத்து' என்று கடைசியமையப்பாடென்று ஒருவர் கேட்டபோது பாடியது.

2. அந்திவெடி முல்லை யரும்பெடுத்து நான்வந்தேன்
விந்தையதா நாயகற்கு மெல்லியலே—சுந்தரஞ்சேர்
செண்டுகட்ட வேண்டுந் திருவிளக்கி லேதிரியைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

உரை:—மெல்லியலே=மென்மைத்தன்மையுடைய பாங்கியே! அந்திவெடி முல்லை=சாயங்காலத்திற் பூக்கின்ற முல்லையின், அரும்பு எடுத்து நான் வந்தேன்=மொட்டுக்களை நான் கொய்துகொண்டு வந்தேன், நாயகற்கு=காதலர்க்கு, விந்தையதா சுந்தரஞ்சேர் செண்டுகட்ட வேண்டும்=அதிசயப்படும்படியாக அழகான முல்லைச் செண்டு அமைக்க வேண்டும், திருவிளக்கிலே திரியைக் கொண்டுவந்து போட்டுக் கொளுத்து=மங்கலமான விளக்குத் தண்டில் திரியினையிட்டுத் தீபம் ஏற்றுவாயாக! எ-று.

தலைவி கூற்று.

3. சித்திரமா மண்டபங்க டென்றல்வரு சாளரங்கள்
பத்தியுலா வும்பளிக் கறைகள்—இத்தனைவிட்டு
இக்குச் சிலையா னிருப்பிடமென் ருர்சொன்னர்
இக்குச் சிலையானுக் கின்று.

உரை :—சித்திரமாம் மண்டபங்கள் = ஓவியங்க ளெழுதப்பெற்று உயர்ந்த மண்டபங்களும், தென்றல் வரு சாளரங்கள் = தென்றற் காற்று உலாவுதற்குரிய பலகணிகளும், பத்தி உலாவும் பளிக்கு அறைகள் = சுற்றிச் சுற்றிச் செல்லுதற்குரிய பளிங்கினுற் கட்டப்பட்ட அறைகளும், இத்தனை விட்டு = ஆகிய இவற்றையெல்லாம் விடுத்து, இக் குச்சிலை = இக்குடிசையை, யான் இருப்பிடம் என்று = நானிருக்கின்ற இடமென்று, இன்று = இப் போது, இக்குச் சிலையானுக்கு யார் சொன்னர் = கரும்பு வில்லையுடைய மன் மதனுக்கு யார் சொன்னர்கள், எ - று.

4. நீளத் திரிந்துழன்ருய் நீங்கா நிழல்போல
நாளைக் கிருப்பாயோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கா னீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றே யிரு.

உரை :—கல்குரவே = தரித்திரமே! நீங்கா நிழல்போல நீளத் திரிந்து உழன்ருய் = உடம்பை விட்டுப் பிரியாத நிழலைப்போல நீ என்னோடு நீண்ட காளாக அலைந்து வருந்தினுய், நாளைக்கு இருப்பாயோ = நாளைக்கு நீ என் னோடு இருப்பாயோ? காளத்தி நின்றைக்கே சென்றக்கால் = காளத்தி வள்ள லுடைய திருநின்றையூருக்கு நான் சென்றபோது, நீ எங்கே நான் எங்கே = நீ எங்கே போவாயோ நான் எங்கே இருப்பேனே, இன்றைக்கே சற்றே இரு = இன்று மாத்திரம் நீ சிறிது நேரம் என்னோடு இருப்பாயாக! எ - று.

குறிப்பு :—காளத்தியப்ப முதலியார் என்னும் வள்ளல் இரவலர்க்கு வரையாது கொடுப்பதைக் கண்ட அரசன் பொருமையினுல் அவருடைய சொத்து முழுவதையும் எடுத்துக் கொள்ளவே, அவர் அயலூருக்குப் புறப் பட்டுப் போகும்பொழுது வழியில் ஒரு சத்திரத்தில் தங்கினர். அதே சத்தி ரத்தில் தங்கி அவ் வள்ளலைப் பார்க்க மறுநாள் செல்லக் கருதிய ஒரு புலவர் இப் பாட்டைப் பாடினர். அதுகேட்ட வள்ளல் ஊருக்குத் திரும்பிப்போய் மனைவியின் கைகளை விற்றுப் புலவரை வரவேற்கத் தயாராயினர். புலவர்க் குப் பரிசாகப் பொருள் கொடுத்தற் கியலாமல் வீட்டின் கொல்லையிலுள்ள ஒரு புற்றிற் கையைவிட்டு, அங்கிருந்த பாம்பு நாகரத்தினத்தை அவர் கையில் உமிழ்ந்து சென்றதாகவும், அந்த ரத்தினத்தைப் புலவர்க்கே அவர் கொடுத்த தாகவும் கதை.

பிரம்பூர் ஆனந்தரங்க னென்னும் பிரபுமீது பாடியது.

5. உலங்கொண்ட மணிப்புயனே பிரம்பூரானந்த
ரங்காவுன்பாற்செல்ல
வலங்கொண்ட கருடனையா மிடங்கண்டோ மெழினரையான்
வலத்தேகண்டோம்
பொலங்கொண்ட மணிமாட மீமிசையிற் புயறவழும்
புதுவையென்னும்
தலங்கண்டோ நினதுநகை முகங்கண்டோ மினிவேண்டுந்
தனங்கண்டோமே.

உரை :—உலம் கொண்ட மணிப்புயனே = திரண்ட கல்லின் தன்மையை யுடைய அழகிய தோள்களை யுடையவனே! பிரம்பூர் ஆனந்த ரங்கா = (புதுச்சேரியைச் சார்ந்த) பிரம்பூரில் வாழும் ஆனந்தரங்கப் பிள்ளையே! உன்பால் செல்ல = உன்னிடம் வருவதற்கு நான் புறப்பட்டபோது, வலம் கொண்ட கருடனை யாம் இடம் கண்டோம் = வட்டமிட்ட கருடன் இடது பக்கம் செல்வதைப் பார்த்தோம், எழில் நரையான் வலத்தே கண்டோம் = ஊக்கமுள்ள காகம் வலப்பக்கம் செல்வதைப் பார்த்தோம், பொலம் கொண்ட மணிமாட மீமிசையில் = பொற் சிகரங்களையுடைய அழகிய மாடங்களின் மேல், புயல் தவழும் = மேகங்கள் ஊர்ந்து செல்லக்கூடிய, புதுவை என்னும் தலம் கண்டோம் = புதுச்சேரி யென்னும் நகரத்தைப் பார்த்தோம், நினது நகை முகம் கண்டோம் = புன்சிரிப்புடைய உன்னுடைய திருமுகத்தையும் பார்த்தோம், இனி வேண்டும் தனம் கண்டோமே = இதற்குமேல் நாம் பெற விரும்பிய பொருளையும் பார்த்தோம், எ - று.

இதுவுமது.

6. கார்படைத்த கரதலத்தான் றுரைதிருவேங் கடமளித்த
கன்னுவெங்கும்
பேர்படைத்த வானந்த ரங்கமகி பாலநின்
பிரம்பூர்நாட்டில்
நேரிழைக்கு விழியேழு மூலையாறு காதைந்து
நெற்றிநான்கு
பாரிடத்தி லிப்புதுமை கண்டுவந்தே னிதன்பயனைப்
பகர்ந்திடாயே.

உரை:—கார்படைத்த கரதலத்தான் = மேகங்களைப்போல ஈகை யுடைய கையினையுடைய, துரை திருவேங்கடம் அளித்த கன்னு = திருவேங்கட முதலியார் பெற்ற கன்னலைப்போன்ற வள்ளலே! எங்கும் பேர் படைத்த

ஆனந்தரங்க மகிபரலா = எவ்விடமும் புகழ் பரவப்பெற்ற ஆனந்தரங்க னென்னும் மன்னனே! நின் பிரம்பூர் நாட்டில் = பிரம்பூர் இருக்கும் உன்னுடைய தேசத்தில், நேரிழைக்கு = ஒரு கன்னிக்கு, விழி ஏழு மூலை ஆறு காது ஐந்து நெற்றி நான்கு = ஏழு கண்ணும் ஆறு மூலையும் ஐந்து காதும் நான்கு நெற்றியும் உள்ளன, பார் இடத்தில் இப் புதுமை கண்டு வந்தேன் = உலகத்திலே இஃது ஓர் அதிசயமாக நான் பார்த்துவந்தேன், இதன் பயனைப் பகர்ந்திடாயே = இதன் கருத்தை இன்னவென்று கூறுவாயாக, எ - று.

குறிப்பு:—விழி ஏழு, மூலை ஆறு, காது ஐந்து, நெற்றி நான்கு என்ப வைகட்கு, இக் கவியின் முதற்பாட்டாகிய "துங்கவரை மார்பா..." என்றதில் கூறியவாறு பொருளறிக.

இதுவுமது.

7. கொக்குப்பறக்கும்புருப்பறக்குங் குருவிபறக்குங்குயில்பறக்கும்
நக்குப்பொறுக்கிகளும்பறப்பர் நானேன்பறப்பேனராதிபனே
திக்குவிஜயஞ்செலுத்தியுயர்செங்கோ னடாத்துமரங்காநின்
பக்கமிருக்கவொருநாளும்பறவேன் பறவேன்பறவேனே.

உரை:—நராதிபனே = பூபாலனே! கொக்கும் பறக்கும் புறுப் பறக்கும் குருவி பறக்கும் குயில் பறக்கும் = கொக்கு, புறு, குருவி, குயில் முதலிய பறவைகளே பறக்குந் தன்மை யுடையன, நக்குப் பொறுக்கிகளும் பறப்பர் = (மனிதர்களுள்) இழிந்த பயனைக் கவர்ந்து செல்லக் கருதும் மக்களும் விரும்பியது கிடைத்தவுடன் ஓடிப்போவார்கள், நான் ஏன் பறப்பேன் = நான் எதனால் ஓடிப் போகவேண்டும், திக்கு விஜயம் செலுத்தி உயர் செங்கோல் நடாத்தும் அரங்கா = ஒவ்வொரு திசையிலும் வெற்றியோடு அதிகாரம் செலுத்தி உயர்ந்த நீதியைக் கையாளும் ஆனந்தரங்க வள்ளலே! நின் பக்கம் இருக்க = உன்னுடைய அன்பு என்பாலிருக்குங் கால், ஒரு நாளும் பறவேன் பறவேன் பறவேனே = நான் ஓடிப்போகமாட்டேன் என்பது மூக்காலும் சத்தியம், எ - று.

ஒரு காரிகையைக்கண்டு காதலித்துப் பாடியது.

8. மூவொன்ப தென்பதிலோர் நாளில்லை மொய்வனத்தில்
தாவுந் தனிமிருகந் தானில்லை—நேரே
வளையா நடையில்லை வாரிறுக விம்மும்
முலையாளை யான்முயங்கு தற்கு.

உரை:—வார் இறுக விம்மும் முலையாளை = கச்சுனடங்காதபடி மேலெழுகின்ற தனங்களையுடையவளை, யான் முயங்குதற்கு = நான் சேர்தற்கு, மூவொன்பது என்பதில் ஓர் நாள் இல்லை = இருபத்தேழு நட்சத்திரத்தி லொன்றுகிய உத்தரம் (அதாவது அவள் மறுமொழி) இல்லை,

மொய் வனத்தில் தாவும் தனிமிருகம் தான் இல்லே=அடர்ந்த காட்டில் தாவிச் செல்லும் இணையற்ற விலங்காகிய வேங்கை (அதாவது பொன்) இல்லே, நேரே வளையா நடை இல்லே=நேராக வளையாது செல்லும் அன்னம் (அதாவது சோறு) இல்லே, எ - று.

வேதாசலப் பிரபுமீது பாடியது.

9. தனம்பொன் பணம்படைத்த சம்பரிபாப் பின்னேர்
முனம்பிச்சை கள்வனிலே மூட்டை—கனம்பற்ற
மீதலத்தும் போற்றுகின்ற வேதாச லாநினைப்போல்
ஈதலத்த மார்கிலரே யென்.

உரை :—தனம் படைத்த சம்பு=(மான் கன்று அல்லது) செல்வத்தை யுடைய அரனும், பொன் படைத்த அரி=(இலக்குமி அல்லது) பொன்னை யுடைய பெருமாளும், பணம் படைத்த பாம்பு=(படம் அல்லது) பொருட் செல்வமுடைய ஆதிசேஷனும், இன்னேர்=ஆகிய இவர்கள், முனம்=முன்னாளில், பிச்சை கள்வன் நிலமூட்டை=முறையே தம் கைகளால் பிச்சை யெடுப்பவராயும் வெண்ணெய் திருடினவராயும் பூமி மூட்டையைத் தாங்குபவராயும் இருந்தனரே அல்லாமல், கனம் பெற்ற மீதலத்தும் போற்று வேதாசலா=பெருமை பொருந்திய வானுலகத்திலும் துதிக்கப்படுகின்ற வேதாசல வள்ளலே! நினைப்போல்=உன்னைப்போல, ஈதல் அத்தம் ஆர் கிலரே=கொடுக்கும் கையைப் பொருந்தினரில்லே, என்=அதற்கு என்ன காரணம், எ - று.

தஞ்சை பிரகதீசுவரர் துறையமைத்துச் சிவவாசையன்மீது பாடியது.

10. சேராநா ளெல்லாம்வெண் டிங்களன மேசேர்ந்தால்
ஆரா வமுதாமென் னச்சரியம்—ஓராமல்
நானிவாசை மேவ நரசையன் றந்தருளும்
சீனிவா சையன்மணஞ் செய்து.

உரை :—அனமே=அன்னமே! ஓராமல் = ஆராய்ந்தறியாமல், நான் இவ்வாசையால்=நான் இவ்வாறு காதல் கொண்டதால், நரசையன் தந்தரு ளும் சீனிவாசையன் மணம் செய்து=நரசையன்பெற்ற சிவவாசையன் கலி யாணஞ்செய்து, சேரா நாள்=புணராத நாளில், வெண் திங்கள் எல் லும்=வெண்ணிறமான சந்திரன் சூரியனோ டிருக்கின்றான், சேர்ந்தால்=புணர்ந் தால், ஆரா அமுதாம்=தெவிட்டாத அமுதமா யிருக்கிறான், என்ன ஆச்சரி யம்=இது என்ன அதிசயம், எ - று.

கலசைப்பதி வேதாசலப் பிரபுவின்மேற் பாடியது.

11. அஞ்சம்பி னுலெய்து மன்னநடைக் கன்னிகையை
அஞ்சம்பி னுலெய்யு மப்பாவி—நெஞ்சமுறும்

காவிக்க ணந்தார் கலசைவே தாசலனே
காவிக்க ணந்தார் கடந்து.

உரை :—காவிக்கண் நந்து ஆர் கலசை வேதாசலனே=குவளைப் பூவின் மேல் சங்குகள் தங்குகின்ற கலசைப்பதியில் வசிக்கும் வேதாசல வள்ளலே! அஞ்சம்பிணல் எய்தும் அன்னநடைக் கன்னிகையை=அன்னமும் நடைக்குத் தோற்றுப் பின் செல்லக்கூடிய அத்தகைய நடையையுடைய என் மகளை, அஞ்சு அம்பிணல் எய்யும் அப்பாவி=ஐந்து பாணங்களைச் செலுத்தும் அந்தப் பாவியாகிய மன்மதன், நெஞ்சம் உறும்=மனதைத் துன்புறுத்துகிறான், இக்கணம் தார்கள் தந்து கா=இந்தத் தருணமே மாலைகளை யளித்துக் காப்பாற்றுவாயாக, எ-று.

இதுவுமது.

12. மதுமேவு குவளையணி புயனென் றேனே
மருவனஞ்சூழ் கலசைநகர் மன்னென் றேனே
முதுநீதி தெய்வசிகா மணிமா லுக்கு
மூத்தவொரு மகனெனநான் மொழிந்திட் டேனே
பதுமா சனத்திமக னென்மேற் சண்டை
பண்ணுகின்ரு னெனவனுற் படுந்துன் பத்தால்
இதுவே தாசலமென் றேனிதற் கென்னன்னை
ஏதேதோ வைதுபழி யிடுகின் ருளே.

உரை :—மதுமேவு குவளையணி புயன் என்றேனே=தேன் நிறைந்த குவளைப் பூமாலையைத் தரித்த தோளினன் என்று கூறிய அளவிலே, மருவனம் சூழ் கலசை நகர் மன் என்றேனே=வாசனையுள்ள காடு சூழ்ந்த கலசைப்பதி யரசன் என்றளவிலே, முது நீதி தெய்வ சிகாமணி மாலுக்கு மூத்த ஒரு மகன் என நான் மொழிந்திட்டேனே=பழமையான நியாய முறையிற் செல்லும் தெய்வ சிகாமணி பூபதியின் ஒப்பற்ற முதன் மகன் என்று நான் கூறிய அளவிலே, பதுமாசனத்தி மகன் என்மேல் சண்டை பண்ணுகின்ரு ன்=தாமரைக் கிழத்தி பதல்வனுகிய மன்மதன் என்னோடு போர் தொடுக்கின்ரு ன், நான் அவனுல் படும் துன்பத்தால்....., இது ஏது ஆசலம் என்றேன்=இது என்ன சங்கடமென்று கூறினேன், இதற்கு என் அன்னை=இவ்விதம் கூறியதைக் கேட்டு வேதாசலம் என்ற பெயரைக் கூறியதாக எண்ணிய என் தாய், ஏதோ வைது பழி இடுகின்ரு ளே=பல வகையாக என்னை ஏசி என்மேற் பழி போடுகின்ரு ள், எ - று.

இதுவுமது.

13. பூங்கமலன் கலசைவே தாசலன்போ லுருவமைக்கும்
பொற்பி னானென்
ரூங்கயலார் சொலக்கேட்டு வாணியரி பாலுரைக்க
வடைந்தா னன்னுன்

தாங்குவனம் போயிருந்தா ளரனிடத்திற் சொலப்பித்தாய்ச்
சுழல லுற்றுன்
ஏங்கியந்தத் திறங்கற்பா னிவளுவில் வீற்றிருந்தா
ளெழிற் கண்மானே.

உரை:—வாணி = கலைமகள், பூங்கமலன் கலசை வேதாசலன்போல் உரு அமைக்கும் பொற்புகிலான் என்று = அழகிய தாமரையிலிருக்கும் அயன் கலசைப் பதியிலிருக்கும் வேதாசலனைப்போல வடிவம் அமைக்கின்ற ஆற்ற லில்லாதவ னென்று, ஆங்கு அயலார் சொல்லக் கேட்டு = பக்கத்தி லுள்ள வர்கள் கூறக் கேள்விப்பட்டு, அரி பால் உரைக்க அடைந்தாள் = விண்டுவி னிடம் அதனைத் தெரிவிப்பதற்குப் போனுள், அன்னேன் தூங்கு வனம் போயிருந்தான் = தான் நித்திரை செய்யும் ஆலிலையுள்ள காட்டிற்குப் போயிருந்தான், அரன் இடத்தில் சொல = சிவபெருமானிடத்தில் இச் செய்தியைத் தெரிவிக்க, பித்தாய்ச் சுழலலுற்றுன் = அவன் பயித்திய முடையவனுய்த் திரிபவனுனுன், எங்கி = அச்சமுற்று, எழில் கண் மானே = அழகிய கண்ணையுடைய கலைமகள், அந்தத் திறம் கற்பான் = அந்த ஆற்றலைக் கற்றுக்கொள்வதற்காக, இவன் நாவில் வீற்றிருந்தாள் = வேதாசல வள்ள லது நாவில் தங்குவாளாயினள், எ-று.

சவ்வாதுப் புலவர்

பாடியது

இரகுநாத சேதுபதிமீது பாடியது.

1. கிளையாளன் சேது பதிரகு நாயகன் கிஞ்சுகவாய்
இளையார் கலவி யிடத்துநம் மீச ரிடத்துமென்றும்
வளையாத பொன்முடி சற்றே வளையு மகுட்மன்னர்
தளையா டியகையிற் காளாஞ்சி யேந்துஞ் சமயத்துமே.

உரை:—கிளையாளன் சேதுபதி ரகுநாயகன் = சுற்றம் தழுவுவதிற் சிறந்த ரகுநாத சேதுபதியின், என்றும் வளையாத பொன்முடி = எக்காலத்தி லும் பணியாத பொற்கிரீடமானது, கிஞ்சுகவாய் இளையார் கலவி இடத் தும் = முருக்கம் பூப்போலச் சிவந்த வாயையுடைய இளையமாதரின் சேர்க்கை யின்போதும், நம் ஈசர் இடத்தும் = சிவபெருமான் திருமுன்பும், மகுட மன் னர் = (அவருக்குத் தோற்றுப் போய்ப் பிடிபட்ட) முடிமன்னர், தளையாடிய கையில் = விலங்கு பூட்டப்பட்ட தங்கள் கைகளால், காளாஞ்சி ஏந்தும் சமயத்தும் = தம்பலப் படிகத்தை யெடுத்து மீட்டும் பொழுதும், சற்றே வளையும் = கொஞ்சம் பணியும், எ - று.

புதுச்சேரி ஆனந்தரங்கப் பிள்ளையின் கொடையைப் புகழ்ந்து பாடியது.

2. பானுகிர ணம்பார்க்கும் பங்கே ருகநிலவு
தானும்வரப் பார்க்குஞ் சகோரங்கள்—வானமரும்
மையைப்பார்க் கும்மயில்கண் மாவிசயா னந்தரங்கன்
கையைப்பார்க் கும்புலவோர் கண்.

உரை :—பங்கேருகம் பானு கிரணம் பார்க்கும்=தாமரையானது பகலவ னுடைய கதிர்களே எதிர்பார்த்திருக்கும், சகோரங்கள் நிலவு தானும் வரப் பார்க்கும்=சக்கிரவாகப் பறவைகள் சந்திரனெளியை எதிர்பார்த்திருக்கும், மயில்கள் வான் அமரும் மையைப் பார்க்கும்=மயில்கள் வானிலுள்ள மேகத்தை விருப்பத்தோடு நோக்கியிருக்கும், புலவோர் கண்=கல்வி மான்களுடைய கண், மா இசை ஆனந்தரங்கன் கையைப் பார்க்கும்= பெரும் புகழையுடைய ஆனந்தரங்க வள்ளலின் கையைப் பரிசுக்காக எதிர் நோக்கி யிருக்கும், எ-று.

பிரம்பூர் ஆனந்தரங்கத் துரைமீது பாடியது.

3. பாலையிலாள் பின்னங்காற் பஞ்சுளியென் றேசுளிப்பாள்
பாலையிலாள் பின்னென் படுவளோ—சோலையிலே
ஆடு மயிற்பிரம்பூ ரானந்த ரங்கதுரை
நாடுதனி லென்னிளமின் னுள்.

உரை :—சோலையிலே மயில் ஆடும்=சூழும் பொழில்களிலே மயில்க ளாடுகின்ற, பிரம்பூர் ஆனந்தரங்க துரை நாடுதனில்=பிரம்பூரில் வீற்றிருக் கும் ஆனந்தரங்க னென்னும் தலைவரின் தேசத்திலே, என் இளம் மின்னுள்=இளமையுடைய என் மகள், பால் அயிலான்=பால் குடிக்க மாட் டாள், பின்னங்கால் பஞ்சு உளி என்றே சுளிப்பாள்=பின்காலிற்படுகின்ற செம்பஞ்சு உளிபோலத் தன்னே வருத்துகிறதென்று முகம் சுளிப்பாள், பாலையில் ஆள்பின் என் படுவளோ=அவள் பாலை வழியில் தலைவன் பின்னே (செல்லுங்கால்) என்ன துன்பப்படுவாளோ, எ - று.

இராம கவிராயர்

பாடியது

சாலை முத்துக்கிருஷ்ணன்பெற்ற சற்குண சிந்தாமணிமீது பாடியது.

1. அலையான் கவடுபடா னிரிடத்துங் காயான்
இலையென்ப தோர்நாளு மில்லை—கலைதேர்ந்த
சாலைமுத்துக் கிருஷ்ணனருள் சற்குணசிந் தாமணியைச்
சோலையென்று சொன்னவரார் சொல்.

உரை:—கலே தேர்ந்த சாலே முத்துக்கிருஷ்ணன் அருள்=கல்வித் தேர்ச்சியுடைய சாலேப்பதியிலுள்ள முத்துக்கிருஷ்ணன் ஈன்ற, சற்குண சிந்தாமணி=நற்பண்புடைய சிந்தாமணி போன்ற வள்ளல், அலேயான்= சோலேபோல அசைந்து திரியமாட்டான், கவடுபடான்=கிளே போலப் பிரிவு படமாட்டான், (அல்லது கபடமற்றவன்) ஆரிடத்தும் காயான்=ஒருவ ரிடத்திலும் கோபிக்காதவன், இலே என்பது ஓர் நாளும் இல்லே=இல்லே யென்று ஒரு நாளும் இரப்பவர்களுக்குச் சொல்வதில்லே, சோலே என்று= (கபடமாகப் பிரிந்து பொருந்து மிடங்களில் காய்கொண்டு இலே நிறைந்த) சோலேயென்னும் பெயரை யுடையானென்று, சொன்னவர் ஆர் சொல்= கூறினவர் யாரென்று தெரிவிப்பாயாக, எ-று.

கச்சிச் செல்லப்பனென்னும் பிரபுவின் குணத்தைப் புகழ்ந்து பாடியது.

2. செல்லப்பன் கச்சியிலே சேர்ந்ததற்பி னிமணிகள்
தல்லதரு மேக நவநிதியம்—சொல்லவே
முட்டின்றி யொன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறேழ்
எட்டொன்பான் பத்தான வே.

உரை:—செல்லப்பன் கச்சியிலே சேர்ந்ததற்பின்=செல்லப்ப னென்னும் வள்ளல் காஞ்சிப்பதியிலே பிறந்த பிற்பாடு, சொல்லவே=ஏற்பட்ட நிலேமையைச் சொல்ல வேண்டுமானுல், முட்டு இன்றி=உறுதியாகவே, ஆ ஒன்று இரண்டு=காமதேனு ஒன்று யிருந்தது அவனேடு சேர்ந்து இரண் டாகவும், மணிகள் மூன்று நான்கு=மூன்று ஒளியையுடைய பொருள்க ளாகிய இரவி, மதி, நெருப்பு என்பவைகள் அவனேச் சேர்த்து நான்காகவும், கல்ல தரு ஐந்து ஆறு=கற்பக மரம் முதலிய ஐந்து தெய்வ மரங்கள் அவனேச் சேர்த்து ஆறுகவும், மேகம் ஏழ் எட்டு=சப்த மேகங்களென்பன அவனேடு சேர்த்து எட்டாகவும், நவநிதியம் ஒன்பான் பத்து=சங்கநிதி பதுமநிதி முதலிய ஒன்பதும் அவனேடு சேர்த்துப் பத்தாகவும், ஆனவே= ஆயினவே, எ-று.

சென்னையையடைந்து சிவபெருமானது தன்மையை யடைந்தேனெனப் பாடியது.

3. சென்னபுரி மேவிச் சிவனுனே னல்ல
அன்னமறியா தவனுகி—மன்னுசிரங்
கய்க்கொண் டரைச்சோமன் கட்டிச் சடைமுடிக்கி
மெய்க்கொண்ட நீறணிந்து மே.

உரை:—மன்னு சிரம் கைகொண்டு=கீங்காத சிரங்கு என்னும் புண் கலேக்கையில்கொண்டும், அரைச் சோமன் கட்டி=போதிய ஆடை இன்மை மால் நிழிந்த துணியை இடுப்பில் கட்டிக்கொண்டு, சடை முடிக்கி=பொருள்

இன்மையால் தலைமயிர் சடையாக ஆகியும், மெய்க்கொண்ட கீறணிந்து=தேக முழுவதும் பழுதி படிந்தும், சென்ன புரி மேவி=சென்னை நகரத்திற் சென்று, நல்ல அன்னம் அறியாதவனுகி=நல்ல சோறு கிடைக்கப் பெறுது, சிவன் ஆனேன்=(தலையோடு கையிலேந்தி, பாதிச் சந்திரனைச் சடையில் வைத்து, திருநீறணிந்து பிரமன் அன்ன வடிவ மெடுத்துத் தேடியும் அறியப்படாத) சிவபிரானது தன்மையை அடைந்தேன், எ - று.

நையாண்டிப் புலவர்

பாடியது

ஆரூர்ப்பெருமானைப் பணிவோர்க் காம்பயனைக் குறித்துப் பாடியது.

1. விற்கம்பத்தடியாலுமடியுண்டான் விண்ணவரைவேலைகொள்ளும்
நற்கம்பத்தடியானுந்தூக்கவசையா ஞரூர்நாதன்கோயில்
பொற்கம்பத்தடியினின்றுவன்மீகத்தானை யுன்னிப்போற்றினோர்க்குச்
சொர்க்கம்பத்தடியப்பான்மோக்ஷம் பத்தடியாகத்தோற்றுந்தானே.

உரை:—கம்பத்து வில் தடியாலும் அடியுண்டான்=தூண்போன்ற (விசயனது) வில்லுத் தடியாலடிபட்டவனும், விண்ணவரை வேலை கொள்ளும் நல் கம் பத்து அடியானும்=தேவர்களே யேவ வல்ல நல்ல பத்துத் தலையுடைய தொண்டனுகிய இராவணன் கூட, தூக்க அசையான்=தூக்கிய போது அசைவில்லாதவனுமாகிய, ஆரூர் நாதன்=திருவாரூர்ப் பெருமானது, கோயில் பொன் கம்பத்து அடியில் நின்று=ஆலயத்திலுள்ள அழகிய கொடி மரத்தின் கீழ்ப் பாகத்தினருகே நின்று, வன்மீகத்தானை உன்னிப் போற்றினோர்க்கு=புற்றிடங் கொண்டானைத் தியானித்து வழிபட்டவர்களுக்கு, சொர்க்கம் பத்தடி=வானுலகம் பத்தடி தூரத்திலிருப்பதாகும், அப்பால் மோட்சம் பத்தடி=அதற்கப்பாலுள்ள வீட்டுலகமானது அதிலிருந்து பத்தடி தூரமாக, தோற்றுந்தானே=தெரிவனவாகும், எ - று.

பள்ளிகொண்டானென்னும் பிரபுவைப் புகழ்ந்து பாடியது.

2. செங்கைவரிச்சிலைதங்கமதைச் சம்புத்தீவுதன்னில்
எங்குவைத்தாலுமப்பள்ளிகொண்டான் றமிழ்க்கீவனென்றே
திங்களிரவிதினஞ்சுற்றிக் காக்கத்திரைசுருட்டும்
கங்கைக்குமுத்தரத்தேயொளித்தா லுமைகாதலனே.

உரை:—உமை காதலன்=உமையம்மை கணவனுகிய பரமசிவன், செங்கை வரிச்சிலை தங்கமதை=தமது சிவந்த கையிலுள்ள பொன்னுல் அமைக்கப்பட்ட வில்லாகிய மேருவின் பொன்னினை, சம்புத்தீவு தன்னில் எங்கு

வைத்தாலும் = நாவலந்தீவில் எவ்விடத்தில் வைத்திருந்தாலும், பள்ளி கொண்டான் தமிழ்க்கு ஈவான் என்றே = பள்ளி கொண்டானென்ற வள்ளல் தமிழ்ப் பாட்டுக்களுக்குப் பரிசாக அதை யெடுத்து அளித்து விடுவானென்று கருதியே, திங்கள் இரவி தினம் சுற்றிக் காக்க = சூரியனும் சந்திரனும் தினந் தோறும் அதைச் சுற்றி வந்து காவல் செய்யவும், திரை சுருட்டும் கங்கைக் கும் உத்தரத்தே ஒளித்தான் = அலைகள் சுருண்டு வருகின்ற கங்கையாற்றிற் கும் வடக்கே அதனை மறைத்து வைத்தான், எ - று.

மேலாடையில்லார்க்கு உலகில் மேன்மையில்லையெனப் பாடியது.

3. மேலாடையின்றிச்சவைபுகுந்தா லிந்தமேதினியோர்
நூலாயிரம்படித்தாலுமெண்ணூர் நுவல்பாற்கடலோ
மாலானவரணிபொன்னுடை கண்டுமகளீத்தந்தே
ஆலாலமீந்ததுதோலாடை சுற்றுமரன்றனக்கே.

உரை:—மேலாடை இன்றி சபை புகுந்தால் = தேகத்தின்மேல் செவ்வையான உடைதரியாமல் ஓர் அவையிலே நுழைந்தால், இந்த மேதினியோர் = இவ்வுலகத்தினர், நூலாயிரம் படித்தாலும் எண்ணூர் = பல இலக்கியங்களைக் கற்றிருந்தாலும் அங்ஙனம் புகுந்தவரை மதிப்பதில்லை, நுவல் பாற்கடலோ = சிறப்பாகப் பேசப்படும் திருப்பாற் கடலானது, மாலானவர் அணி பொன் ஆடை கண்டு = விண்டு அணிந்திருக்கும் பீதாம்பரத்தைப் பார்த்து, மகளைத் தந்தே = தன்னிடத்திற் பிறந்த திருமகளை அவருக்குக் கொடுத்து விட்டு, தோல் ஆடை சுற்றும் அரன் தனக்கே = புலித்தோலை யுடையாகத் தரித்த சிவபெருமானுக்கு, ஆலாலம் ஈந்தது = ஆலகால விடத்தைக் கொடுத்தது, எ - று.

பள்ளிகொண்டானென்னும் பிரபுவைப் பாடியது.

4. வள்ளிகொண்டான் மயிலேறிக் கொண்டான்மதிபோலுமலை [தம்
வெள்ளிகொண்டான்விடையேறிக் கொண்டான்விண்ணவர்க்கமு
துள்ளிகொண்டான்புள்ளிலேறிக் கொண்டான்சுபசோபனஞ்சேர்
பள்ளிகொண்டான்புகழேறிக் கொண்டானென்றுபார்க்கவென்றே.

உரை:—சுபசோபனஞ் சேர் பள்ளிகொண்டான் = மங்கல மணவாழ்வு பெற்ற பள்ளிகொண்டானென்னும் வள்ளல், புகழ் ஏறிக்கொண்டான் என்று பார்க்க என்றே = தன் புகழின் மேலேறிப் பவனி வருவதைக் காணக் கருதியே, வள்ளி கொண்டான் மயில் ஏறிக்கொண்டான் = வள்ளியம்மையின் கணவராகிய முருகர் மயிலின்மீது ஊர்ந்து சென்றனர், மதிபோதிலும் மலை வெள்ளி கொண்டான் = சந்திரனைப் போன்ற வெள்ளி மலையில் வீற்றிருக்கும் பரமசிவன், விடை ஏறிக் கொண்டான் = காளைவாகனத்தின்மேல் சென்றனர், விண்ணவர்க்கு அமுதம் துள்ளிகொண்டான் = தேவர்களுக்கு அமுதத்தினிலை களைப் பகுத்துக் கொடுத்தவராகிய பெருமான், புள்ளில் ஏறிக்கொண்டான் = கருட வாகனத்தின்மேல் ஏறிக்கொண்டார், எ - று.

சுப்பிரமணியப் புலவர்

பாடியது

கற்பூரிரங்கல்.

1. வாரிட்டுவிம்மிப்புடைத்திறுகியிளகிமணி
மார்பிடமெலாங்கவர்ந்து
வட்டமிட்டடியிட்டுநாளுக்குநாண்மேல்
வளர்ந்துபூரித்துமுத்து
மாலையிட்டிறுமாந்துபட்டவர்த்தனயானை
மத்தகத்தோடெதிர்த்து
வாதிட்டுமல்லிகைப்பூச்செண்டினத்தினம்
வாட்டப்படுத்திவரையைப்
போரிட்டுமைந்தர்கண்மனஞ்சூறையிட்டு
மேற்புளகித்துவச்சிரரத்நப்
புதுச்செப்பினத்தோழமைகொண்டுபொன்னினைப்
பொடியாவராவிமீதிற்
பொட்டிட்டதென்னவேதேமற்படர்ந்துசெம்
பொற்சரிகைவேலையிட்டுப்
புனைதருரவிக்கையையிறுக்கிக்கிழித்துப்
புறப்பட்டுவாசனைப்பூந்
தாரிட்டுவரவரப்பளபளப்பாகியுயர்
தங்கக்கிணத்தையொத்துச்
சந்தனம்புனுகுகஸ்தூரிகர்ப்பூர
சவ்வாதுகுங்குமமணிந்து
சந்த்ரகாவிச்சேலைவல்லவாட்டுக்குட்டதும்பி
யண்ணந்திடையினிற்
றுங்காதெனக்கனத்தோங்கிமன்மதனுஞ்
சலாமிட்டுநிற்கவுந்தான்
சீரிட்டுநின்றுதந்தலைவணங்காமற்
றிரண்டபூண்முலைகளுன்றன்
திருமார்பிலணையவோரிசிமேலேதவஞ்
செய்கின்றதொக்குமென்னுஞ்
சிறுரோமரேகையாள்வந்தாள்பராக்கென்று
சேவித்துநிற்கிருள்பார்
திகழ்வடுகநாததுரைமெச்சும்ப்ரதானிசிவ
சுப்ரமண்யராசனே.

உரை :—திகழ்வடுக நாததுரை மெச்சும் பிரதானி சிவசுப்பிரமணிய ராசனே = புகழொடு விளங்குகின்ற வடுகநாத அரசர் பாராட்டுகின்ற முதல் உத்தியோகஸ்தராகிய சிவசுப்பிரமணியனென்னும் பெயருடைய அரச அதி காரியே! வாரிட்டு = இரவிக்கை கட்டப்பெற்று, விம்மிப் புடைத்து = மேலெழுந்து பக்கம் பருத்து, இறுகி இளகி = (குளிர்ச்சியால்) இறுக்க மடைந்தும் (உணர்ச்சியால்) நெகிழ்ந்தும், மணிமார்பு எலாம் கவர்ந்து = வனப்புள்ள மார்பெங்கும் பரந்து, வட்டமிட்டு அடி இட்டு = வட்ட வடிவான அடிப்பாக முடையதாய், நாளுக்கு நாள் மேல் வளர்ந்து = நாள்தோறும் வளர்ச்சியுடையதாய், பூரித்து = நிறைவடைந்து, முத்துமாலை இட்டு = முத் தாரம் அணியப்பெற்று, இறுமாந்து = செருக்குக்கொண்டு, பட்டவர்த்தன யானை மத்தகத்தோடு எதிர்த்து வாகித்து = பட்டத்து யானைபோன்ற வலி யுள்ள யானைத் தனக்கு மேலான வன்மையுடையதாய் அதை எதிர்த்துப் போர்செய்ய வல்லதாய், மல்லிகைப் பூச்செண்டினைத் தினம் வாட்டப் படுத்தி = மல்லிகைப்பூவினால் கட்டப்பெற்ற செண்டை நாள்தோறும் அணிந்து அதை வாடச்செய்து, வரையைப் போரிட்டு = மலையை யுத்தத்தில் வென்று, மைந்தர்கள் மனம் சூறை இட்டு = வீரருடைய நெஞ்சுகளைக் கொள்ளை கொண்டு, மேல் புளகித்து = மயிர்ச் சிலிர்ப்புடையதாய், வச்சிர ரத்னப் புதச் செப்பினைத் தோழமை கொண்டு = வயிரமணிகளா லமைத்த புதிய மூடிபோன்ற அணிகள் எப்போதும் சாத்தப்பெற்று, பொன்னினைப் பொடியா ஆவி மீதில் பொட்டிட்ட தென்னவே = பொன்னைப் பொடி யாகத் தேய்த்து அப்பொடியை மேலே தூவினாற்போல, தேமல் படர்ந்து = பசலை பாய்ந்து, செம்பொன் சரிகை வேலை இட்டு புனைதரு ரவிக்கையை = செம்மையாகிய பொன் சரிகைத் தொழிற்பாட்டினால் அலங்கரிக்கப்பட்ட கச்சினை, இறுக்கிக் கிழித்துப் புறப்பட்டு = நெருக்கிக் கிழித்து வெளியே தோன்றி, வாசனைப் பூந்தாரிட்டு = நறுமணமுள்ள மாலை தரித்து, வாவரப் பனபனப்பாகி = நாளுக்கு நாள் மினுக்கமுடையதாகி, உயர் தங்கக் கிண் ணத்தை யொத்து = மாற்றுயர்ந்த பொன் வட்டில்போன்று, சந்தனம் புனுகு கஸ்தூரி கர்ப்பூர சவாது குங்குமம் அணிந்து = சந்தனம் பச்சைக் கர்ப்பூரம் முதலிய வாசனைப் பொருள்கள் தடவப்பெற்று, சந்திரகாவிச் சேலை வல்ல வாட்டுக்குள் ததும்பி அண்ணந்து = மேலாடையாகத் தரித்த சந்திரகாவிச் சேலைக்குள் நிறைந்து நிமிர்ந்து, இடையினில் தாங்காது ஏனக் கனத்து ஓங்கி = இனிமேல் இடை சுமக்க முடியாதென்று சொல்லும்படியாகப் பரு வுற்று வளர்ந்து, மன்மதனும் சலாமிட்டு நிற்கவும் = மன்மதன் வணங்கி நிற்கும்படியாகப் புகழ்பெற்று, தன் தலை வணங்காமல் = தமது உச்சி சாயா மல், திரண்ட பூண் முலைகள் = திரட்சியுடைய நகையணிந்த கொங்கைகள், உந்தன் திருமார்பில் அணைய = உனது திருமார்பினைத் தழுவுதற்கு, ஓர் ஊசி மேலே தவஞ்செய்கின்றது ஒக்கும் = ஒரு ஊசி நுனியில்நின்று தவம் ஆற்று வதைப்போலும், என்னும் சிறுரோம ரேகையான் = என்று கூறக்கூடிய

துட்பமான மயிர்வரையை யுடைய மாது, வந்தாள் பாராக்கு என்று சேவித்து நிற்கிறாள்=வந்திருக்கின்றாள் அசட்டை செய்யாதீர்களென்று குறிப்பித்துக் கும்பிட்டு நிற்கின்றாள், பார்=இவளைக் கவனிப்பாயாக, எ-று.

கடிகைமுத்துப் புலவர்

பாடியது

இளைசைப்பதிக்குத் தலைவனாகிய வெங்கடேசு ரெட்டனென்னும் பிரபுமீது பாடியது.

தாயிரங்கல்.

1. கராமடியச்சக்கரந்தொட்டெய்தவெங்க டேசுரெட்டன்கமலப்பூநி
கராமடிதொட்டானும்வரவழைப்பார் காணேனங்கனைமார்சேவ
கராமடிபட்டிடுபேரிவாரிதியாமிவளை யெவர்காப்பாரோசங்
கராமடிவிட்டிறங்காதபேதையின்மேற் கணைதொடுத்தான்காமவேளே.

உரை:—கராமடியச் சக்கரம் தொட்டு எய்த=யானையைப் பிடித்த முதலை சாகும்படி சக்கரப்படையை வீசிய, வெங்கடேசு ரெட்டன்=வெங்கடேசுரெட்டனென்னும் வள்ளலது, கமலப்பூ நிகராம் அடிதொட்டானும்=தாமரை மலர்க்குச் சமானமான திருவடியைத் தொட்டுக் கும்பிட்டாயினும், வரவழைப்பார் காணேன்=உபசரித்துக் கூப்பிடுவாரைப் பார்க்கக்கூடவில்லை, அங்கனைமார் சேவகராம்=பெண்கள் தொண்டர்களாகவும், அடிபட்டிடு பேரி வாரிதியாம்=அடிக்கத்தக்க முரசம் சமுத்திரமாகவும், காமவேளே=உடைய மன்மதன், மடிவிட்டு இறங்காத பேதையின் மேல்=என் மடியை விட்டு எழுந்துபோகத் தெரியாத பேதைப் பருவத்திலுள்ள சிறு பிள்ளையின்மீது, கணை தொடுத்தான்=பாணம் விடுத்தான், சங்கரா இவளை எவர் காப்பாரோ=பரமசிவனே இச் சிறிய பெண்ணை யார் தின்பத்தினின்று காப்பாற்றுவார்கள், எ-று.

தலைவி கூற்று.

2. கன்றுதொட்டுக் கனியுருத்த கீர்த்திவெங்க டேசுரெட்டா
கமலக் கண்ணா
கன்றுதொட்ட தத்தனையுங் கைநெகிழ்ந்த தறியாயோ
கலையுஞ் சோர்ந்த
கன்றுதொட்ட ரவிக்கையெல்லாங் காமனம்பு கிழித்ததுபார்
கருத்துந் தானே
கன்றுதொட்டுப்பட்டசிட்டுப் போன்மெலிந்து வாடுவதுங்
கண்டி லாயே.

உரை :—கன்று தொட்டுக் கனியுகுத்த கீர்த்தி வெங்கடேசு ரெட்டா = கன்றுக்குட்டியைக் கல்லுப்போல எடுத்தெறிந்து விளாமரத்தின் கனியைச் சிதறி (விளாவாய் நின்ற அசுரனைக் கொன்ற) புகழையுடைய கண்ணன் அமிசமாகிய வெங்கடேசுரெட்ட னென்னும் வள்ளலே! கமலக் கண்ணு = தாமரைபோன்ற கண்களை யுடையவனே! கன்று தொட்டது அத்தனையும் கைநெகிழ்ந்தது அறியாயோ = போட்ட வளையல்கள் அவ்வளவும் (உடம்பு மெலிந்தபடியால்) கையைவிட்டு நழுவினதை நீ தெரியவில்லையா? கலை யும் சோர்ந்து அகன்று = உடையும் நெகிழ்ந்து விலக, தொட்ட ரவிக்கை யெல்லாம் காமன் அம்பு கிழித்தது பார் = அணிந்த கச்சுமுழுவதையும் மன்மதனுடைய பாணம் கிழித்துவிட்டதைப் பார்ப்பாயாக, கன்றுது = உள்ளம் வெம்பிப் போகின்றது, ஒட்டுப்பட்ட சிட்டுப்போன் மெலிந்து வாடுவதும் கண்டிலாயே = ஒட்டிக்கொள்ளக் கூடிய பிரின் முதலியவற்றில் அகப்பட்டுக் கொண்ட சிட்டுக்குருவியைப்போல நான் உடல் தளர்ந்து தேய் வதை நீ பார்க்கவில்லையே, எ - று.

வண்டுவிடு தூது.

3. வளவனேநே ராகவிசை வளர்த்தவெங்க
டேசுரெட்டன் மருவா நாளில்
வளவனைமா ரையும்வெறுத்தாண் மாரனும்பூங்
கணையேவ வருந்தி யேய
வளவனையே நினைத்திருந்தான் மடலெழுத
வறியாளாய் மருங்கி லேது
வளவனையா டையுமிழந்தாள் வண்டினங்காள்
கண்டசெய்தி வழுத்து வீரே.

உரை :—வண்டினங்காள் = வண்டுக் கூட்டங்களே! வளவனே நேராக இசைவளர்த்த வெங்கடேசுரெட்டன் = சோழமன்னனே யொப்பாக புக ழோங்கப் பெற்ற வெங்கடேசுர ரெட்டபூபதி, மருவா நாளில் = கூடாத போது தலைவி, வளவு அனைமாரையும் வெறுத்தாள் = இல்லறத்திலுள்ள தாய்மார்களைப் பகைத்துக் கொண்டாள், மாரனும் பூங்கணை ஏவ வருந் தியே = மன்மதனும் மலரம்புகளை அவள்மீது செலுத்துவதால் துன்ப மடைந்து, அவள் அவனையே நினைத்திருந்தாள் = ..., மடல் எழுத அறி யாளாய் = (தன் துன்பத்தைத் தெரிவிப்பதற்கு) தலைவனுக்கு ஓலை எழுதிக் கொடுக்கவும் தெரியாமல், மருங்கிலே துவள அனை ஆடையும் இழந்தாள் = இடுப்பிலே அசையும்படி சுற்றிய உடையும் நெகிழப் போவதைக் கவனியாமல் இருந்தாள், கண்ட செய்தி வழுத்துவீரே = நீங்கள் பார்த்த சங்கதியை அவ ருக்கு எடுத்துக் கூறுவீராக, எ - று.

தாயிரங்கல்.

4. பாகப்பாவருமையறியிளசைவெங்க டேசுரெட்டாபகரக்கேண்மோ
பாகப்பாமொழிவிழியாணீயேறிவருங் களிற்றைப்பார்த்தாளாங்கொம்
பாகப்பாமதிக்கவராவென்றுளம் மதியுதிக்கப்பசந்தேயீசன்
பாகப்பாவையினுகமானுள்யா னீன்றெடுத்தபாவைதானே.

உரை :—பாகப்பா அருமை அறி இளசை வெங்கடேசு ரெட்டா = நல்ல பக்குவமான பாடல்களின் நயத்தைத் தெரிந்த இளசைப்பதியில் தங்கிய வெங்கடேசர எட்டப்பதியே! பகரக் கேண்மோ = கூறுவது கேட்பீராக, யான் ஈன்று எடுத்த பாவைதானே = நான் பெற்று வளர்த்த பெண்ணானவள், பாகு அப்பு ஆம் மொழி விழியாள் = சர்க்கரைப்பாகை யொத்த சொல்லும் கடலைப்போன்ற கண்ணுமுடையாள், நீ ஏறிவரும் களிற்றைப் பார்த்தாளாம் = நீ ஊர்ந்து வருகின்ற யானையைக் கண்டனளாம், கொம்பா கப்பா மதிக்கவரா என்றுளாம் = அதன் தந்தம் இயற்கைக் கொம்புதானு அல்லது மரக்கவடா அல்லது பிளவுபட்ட சந்திரனு என்று சந்தேகித்தாளாம், மதி உதிக்கப் பசந்தே = சந்திர னுதயமானவுடன் தேமல் படரப்பெற்று, ஈசன் பாகப் பாவையின் ஆகம் ஆளள் = இறைவரது இடப்பாகத்திலுள்ள உமையம்மையின் தேகம்போலக் கறுத்துப் பாதியுரு வாயினள், எ - று.

தலைவி தோழியிடஞ் சொல்லல்.

5. கருக்கோட்டை யாளும்வெங்க டேசுரெட்ட
மேந்த்ரனென்னைக் கலந்த போகக்
கருக்கோட்டை காணுமடி சகியேமுன்
போலின்னுங் காம னுந்த
கருக்கோட்டை நிகர்வீச முறுக்கிவரக்
காணிலவன் கங்குன் மாவைக்
கருக்கோட்டை யம்பினையும் பறிவெருட்டு
தலைவாசல் கடக்கத் தானே.

உரை:—அடி சகியே = அடி தோழியே! கருக்கோட்டை யாளும் வெங்கடேசர எட்டமன் ஏந்திரன் = பெரிய கருக்கோட்டையில் அரசாட்சி செய்கின்ற வெங்கடேசர எட்ட மன்னனுடைய பெருஞ் செல்வனை, என்னைக் கலந்த போகக் கருக்கு ஒட்டை காணும் = என்னோடு சேர்ந்து நுகர்ந்த அனுபவத்தின் கூர்மையானது குறைவுபட்டுக் கெடும், முன்போல் இன்னும் காமனும் = முன் நன்மைத் தாக்கியதுபோலவே இன்னுந் தாக்குவதற்கு மன்மதனும், தகருக் கோட்டை நிகர் மீசை முறுகிவரக் காணில் = ஆட்டின் கொம்பை யொத்த முகரோமத்தைத் திருக்கிக்கொண்டு வருவதை நீ பார்த்தால், அவன் கங்குல் மாவை கருக்கு = அவனது இரவாகிய யானையைப்

பொசுக்கு, ஒட்டு=அவனைத் தூரத்து, ஐ அம்பினை பறி=ஐந்து பூக் கணைகளையும் பிடுங்கிவிடு, தலைவாசல் கடக்கத்தானே வெருட்டு=தெருவாசலைக் கடந்து ஓடும்படி அச்சுறுத்து, எ-று.

இதுவுமது.

6. சந்தானமேகநிகர்குமாரமுத்து சாமிசகோதரவான்பொன்னே
சந்தானமேருவெனநிறைந்தகுமா ரெட்டனெனைத்தழுவாவாயா
சந்தானமேதரிக்கக்கூடுதில்லை யவன்மருங்கிற்சகியேநீபோம்
சந்தாளமேலேறியுபரிசெய்தாற் றீருமடிதனக்குத்தானே.

உரை:—சகியே=தோழியே! சந்தான மேகம் நிகர்=சந்தன மரத்தையும் முகிலையும் ஒத்த, குமார முத்துசாமி சகோதர=முத்துக்குமாரசாமியினது உடன் பிறந்தவராகியும், வான் பொன்=உயர்ந்த பொன்போன்றவராகியுமுள்ள, நேசந்தான் அம்மேரு என நிறைந்த குமார எட்டான்=அந்த மேருமலைபோல விருப்பம் நிறைந்த குமாரெட்ட பூபதி, எனைத் தழுவா=என்னைச் சேராமையாலுண்டாகிய, ஆபாசந்தான் அமே தரிக்கக் கூடுதில்லை=வருத்தந்தான் அம்மையே பொறுக்க முடியவில்லை, அவன் மருங்கில் நீ போம் சந்தால்=நீ அவனிடம் சென்று சொல்லுகின்ற தூதினாலே, நம்மேல் ஏறி உபரிசெய்தால் தீருமடி தனக்குத்தானே = அவன் நம்மோடு கூடி நாம் செய்த விளையாடல்களை அவனுஞ் செய்தால் அந்தக் கவலை தானே ஒழிந்துபோம், எ-று.

இதுவுமது.

7. திருமாலையம்புதொட்டசிலைமார னம்புவிக்குட்டிடவான்முல்லைத்
திருமாலையம்புயஞ்சூழ்குமாரவெட்ட மனைச்சேரச்செய்தாலுள்ள
திருமாலையந்தெளிந்துசுபசோப னம்பொருந்திச்சிவனேநேசித்
திருமாலையந்தொறும்போயுனைநினைத்துத் தெரிசிப்பேன்றிருமின்னுளே.

உரை:—திரு மின்னுளே = அழகிய மின்போன்ற பெண்ணே! திருமால்=பெருமாளின் அம்சமானவனும், ஐ அம்பதொட்ட சிலை மாரன்=ஐந்து பூங்கணைகளைச் செலுத்தும் வில்லையுடைய மன்மதன் போன்றவனும், அம்புவிக்குள் திடவான்=பூமியில் சிறந்த பலவானுமாகிய, முல்லைத் திருமாலை=முல்லை மலராகிய அழகிய ஆரத்தை, அம்புயம் சூழ்=அழகிய தோள்களின்மீது அணிந்துள்ள. குமார எட்டமனை=குமார எட்டமன்னனை, சேரச் செய்தால்=தழுவுவித்தால், உள் அதிரும் மால் ஐயம் தெளிந்து=உள்ளத்தில் லதிர்ச்சியை யுண்டாக்குகின்ற பெரிய சந்தேகம் நீங்கி, சுப சோபனம் பொருந்தி=சுபமான மங்கல வாழ்வுற்று, சிவனை நேசித்து=சிவ பெருமானிடத்தில் அன்பு செலுத்தி, இரும் ஆலயந்தொறும் போய் உனை நினைத்துத் தெரிசிப்பேன்=பெரிய கோயில்களெங்கும் போய் உனது நன்மையை நாடியே வணங்குகிறேன், எ-று.

தாயிரங்கள்.

8. மாதங்கங்கோடிநிலவறைக்குளொளித் தாலுமந்தவழியேகம்ப
மாதங்கங்கோடிவிடச் சென்றடிக்குமுயிர்தரிக்குமாசிவாரா
மாதங்கங்கோடிகலுங்கடலொலிக்கென் செய்வளினிவந்துசேர்வாய்
மாதங்கங்கோடிதமிழ்க்குதவும்வசு வப்பமதிமந்திரிநீயே.

உரை :—மாதங்கம் கோடி தமிழ்க்கு உதவும் வசுவப்ப மதி மந்திரியே= கோடி யானைகளைத் தமிழ்ப் பாட்டிற்காக அளிக்கக்கூடிய வசுவப்பனென்னும் அறிவமைச்சனுகியவனே! மாது அங்கு அங்கு ஓடி=என் பெண் பல விடங் களுக்கும் ஓடிச்சென்று, நிலவறைக்குள் ஒளித்தாலும் = நிலத்திற்குக் கீழுள்ள வீட்டிற்போய் மறைந்து கொண்டாலும், அந்த வழி ஏகு அம்பு= அந்த விடத்திற்கும் போய்ச் செல்லுகின்ற மன்மதன் கணையானது, அம்மாது அங்கும் ஓடிவிடச் சென்று அடிக்கும்=அப் பெண்ணினுடம் பானது குறுகி வருந்தும்படியாகப் போய்த் தாக்கும், உயிர் தரிக்குமா சிவா ராமா=சிவனே! இராமனே! அந்தப் பெண்ணின் உயிர் தங்குமா? தங்கு அம் கோடு இகலும் கடல் ஒலிக்கு என் செய்வள்=நிலைத்த நல்ல கரையோடு சண்டை யிடுகின்ற சமுத்திரத்தி னுலைசைக்கு இவளென் செய்யக்கூடும், இனி வந்து சேர்வாய்= இனியாகிலும் (விரைவாக) வந்து அணைவாயாக, எ - று.

இதுவுமது.

9. தமிட்டராணுவம்பெருக்கிவந்தெதிர்த்த வேண்முரசுசத்தங்காது
தமிட்டராவெனப்புலம்புஞ்சிறுபேதை விரதமதுதணியவேமுத்
தமிட்டராமதிமுகத்தின்முகமழுந்த வேபுணரச்சமயம்வாணர்
தமிட்டராதரந்தெரியுமெங்களெட் டேந்திரமகிபாதமிழரேறே.

உரை :—வாணர் தமிழ்த் தராதரம் தெரியும்=பாவலரது தமிழ்ப் பாடலின் உயர்வு தாழ்வுகளைத் தெரிந்து கொள்ளவல்ல, எங்கள் எட்டேந்திர மகிபா=எங்கள் எட்டேந்திர மன்னனே! தமிழர் ஏறே=தமிழருள் சிங்கம் போன்றவனே! தமிட்டராணுவம் பெருக்கி வந்து எதிர்த்த = தம்பட்டம் முதலியவற்றோடு கூடிய படைகளை விரிவாகச் சேர்த்துக்கொண்டு வந்து தாக்கிய, வேள் முரசு சத்தம்=மன்மதனுடைய பேரிகை யொலியை, காது தம் இட்டு=காதுகளிற் கேட்கப்பெற்று, ஆ எனப் புலம்பு சிறு பேதை=(இடி கேட்ட) பாம்புபோல அஞ்சித் துன்புறுகின்ற இளம் பெண்ணின், விரகமது தணியவே=ஆசை நோய் அடங்கும்படியாக, முத்த மிட்டு ஆமதி முகத்தின முகம் அழுந்தவே=இரவில் தோன்றும் திங்கள் போன்ற அவளுடைய முகத்தில் உன் முகம் பதியும்படியாக, புணரச் சமயம்=கூடுவதற்கு இது தருணமாகும், எ - று.

தனிமை கூற்று.

10. பரத்துவசத்துருத்தாயர்பாயன்மிசைப் பூவைமுலைப்பணைப்பிலேம
கரத்துவசப்பாவிமலர்தூற்றுவர்நா இற்றுவனேகாட்டிலேழு[நாளிற்
மரத்துவசத்தொருகணையாலெய்த வெங்கடேசுரெட்டான்மருவா
சரத்துவசக்குரங்கெனவேதனித்திருக்க முடியாதுசாற்றினேனே.

உரை:—பரத்துவ சத்துருத் தாயர்=வேற்றுமையான பகை வடிவுடைய அன்னைமார்கள், பாயல் மிசைப்பூவை=படுக்கை மீது மலரையும், முலைப் பிணைப்பிலே=தனப் பாப்பின்மீது, மகரத்துவசப் பாவி மலர்=மீன் கொடியுடைய மன்மத பாதகனுடைய பூங்கணைகளையும், தூற்றுவர்=சிதறுகின்றார்கள், நான் ஆற்றுவனே=நான் அதைப் பொறுக்க முடியுமா, காட்டில் ஏழு மாத்து வசத்து ஒரு கணையால் எய்த வெங்கடேசு ரெட்டன்=கிஷ்கிந்தா வனத்தில் ஏழு மாமரங்களையும் ஓர்பிஞல் எய்து வீழ்த்திய இராம னமிசமாகிய வெங்கடேசுவர எட்ட பூபதி, மருவா நாளில்=என்னைக் கூடாத நாளில், சரத்து வசக் குரங்கு எனவே தனித் திருக்க முடியாது சாற்றினேனே=அம்புக் கூட்டிலகப்பட்ட வானரம்போலத் தனியே இருக்கமுடியா தென்பதைத் தெளிவாகக் கூறினேன், எ - று.

தாயிரங்கல்.

11. நிலமாது திலகனெங்க ளிளசைவெங்க
டேசுரெட்ட நின்னைப் பார்த்து
பலமாது வதனமும்பொற் பசலைகொண்டாய்
மகளே பெண்படையாமேகங்
குலமாது ரங்கமென்ற கிள்ளையின்மேன்
மாரன்வருங் குறியைப் பார்த்துச்
சொலமாது கிலுகையிலே தொடுவளையுந்
தோற்றுநின்ற துணிவு தானே.

உரை:—மகளே = புதல்வியே! பெண் படையாமே = மாதர்களைச் சேனையாகவும், கங்குல் மா=இரவான்து அழகிய ஆனையாகவும், துரங்கம் என்ற கிள்ளையின் மேல்=பரிசுத்தமான குதிரையென்று சொல்லக்கூடிய கிளியின்மேல், மாரன் வரும் குறியைப் பார்த்துச் சொல=மன்மதன் வருகின்ற சாடையைக்கண்டு கூறியவுடன், மா துகிலும் கையாலே தொடு வளையும் தோற்று நின்ற துணிவுதானே=பெரிய சேலையும் கையிற்றரித்த வளையலும் நழுவியது உறுதியாயிற்று, நிலமாது திலகன் எங்கள் இளசை வெங்கடேசுர எட்ட=பூவுலகத்திற்குத் திலகம்போன்ற எங்களுடைய இளசைப்பதியில் வதிகின்ற வெங்கடேசுர எட்டபூபதி, நின்னைப் பார்த்து பலமா=உன்னைப் பார்க்கின்றதின் பயனாக, துவிதனமும் பொன் பசலை

கொண்டாய்=இரண்டு மூலைகளின்மீதும் அழகிய தேமல் படரப்பெற்ற பெண்ணே, எ - று.

தலைவி காமனைப் பயமுறுத்தல்.

12. கலக்கடமா னத்தொனியை முழக்கமன
மலைந்தடையார் கால்சாய்ந் தோடப்
பெலக்கடமா நகக்களிற்றை நடத்தும்வெங்க
டேசுரெட்டன் பிணைய லீந்தான்
சிலக்கடமா மரக்குயிலை யொடுக்குகடற்
றெனியடக்கு தென்றற் றேரை
விலக்கடமா மதப்பயலே தலைக்கடைவா
சலைக்கடக்க வெருட்டு வேனே.

உரை:—கலக்க=எதிரிக்குக் கலக்க முண்டாக்குவதற்காக, டமானத் தொனியை முழக்க=பேரிகை யோசையை யெழுப்பி, மனம் மலைந்தடை யார் கால் சாய்ந்தோட=பகைவர்கள் நெஞ்சம் நடுங்கித் தலை கீழாக ஓடும் படி, பெலக்கடமா நகக்களிற்றை நடத்தும்=பெலமான மதம் பொழிகின்ற மலைபோன்ற யானைமீதேறி அதனைச் செலுத்தும், வெங்கடேசு ரெட்டன்=வெங்கடேசுரெட்ட பூபதி, பிணையல் ஈந்தான்=தன் தார் மாலையை எனக் களித்தான், அட மாமதப்பயலே=அடா பெரிய செருக்குடைய சிறுவனே! சில கடம் மாமரக் குயிலை ஒடுக்கு=சில தோப்புக்களிலுள்ள மாமரத்தி லிருந்து கூவுகின்ற குயிலைக் கூவா தடங்கும்படி செய்வாய், கடல் தொனி அடக்கு=சமுத்திரத்தி னோசையை அமரச்செய், தென்றல் தேரை விலக்கு=தென்றலாகிய அவனது தேரை இங்கே வாராதபடி விலக்குவாயாக, தலைக்கீட வாசலைக் கடக்க வெருட்டுவேனே=என் வீட்டுத் தெருவாசலைக் கடந்து அப்பால் செல்லும்படி உன்னைத் துரத்துவேன், எ - று.

வண்டுவிடு தூது.

13. பொரக்கலக்க முற்றவருக் கிரங்கும்வெங்க
டேசுரெட்டன் புயங்கண் டாண்மேல்
உரக்கலக்க மற்றகனை மதன்விடுத்தா
லென்னசெய்வா ளோகோ கிண்ணச்
சரக்கலக்கம் மியன்கடைந்த செப்பலத்தா
னேதிரண்ட தனத்தி னூடே
வரக்கலக்கண் ணீருகுத்தாள் வண்டினங்காள்
கண்டசெய்தி வழுத்து வீரே.

உரை:—பொரக்கலக்கம் உற்றவர்க்கு இரங்கும் வெங்கடேசுரெட்டன்=சண்டையிட அஞ்சினவர்களுக்குக் கருணை காட்டும் தன்மையை யுடைய

வெங்கடேசு ரெட்ட பூபதியின், புயம் கண்டாள்மேல்=தோள்களைக் கண்ணுற்றவள் உடம்பின்மீது, உரக்க=பெலமாக, லக்கம் அற்ற கணை=எண்ணற்ற பாணங்களை, மதன் விடுத்தால் என்ன செய்வாள்=மன்மதன் செலுத்திஞல் அவள் என்ன பாடுபடுவாள், ஒகோ=ஐயையோ! கிண்ணச் சாக்கல=கிண்ணம்போன்ற பொருளாப் இல்லாமலும், கம்மியன் கடைந்த செப்பல=தச்சன் கடைந்து தயார் செய்த செப்புப்போ லல்லாமலும், தானே திரண்ட தனத்தினூடே=தானே திரட்சியடைந்த முலைகளின் வழியாக, வர=பரவும்படியாக, கலக்கண்ணீர் உகுத்தாள்=ஒரு கலம் அளவு கண்ணீர் வடித்தாள் வண்டினங்காள்=வண்டுக் கூட்டங்களே! கண்ட செய்தி வழுத்துவீரே=கீங்கள் பார்த்த சங்கதியைத் தலைவருக்கு எடுத்துக் கூறுவீராக, எ-று.

தலைவி சந்திரனே நிந்தித்தல்.

14. இத்தரமேசத் துணிவாரென்சகிமார் வஞ்சகிமாரென்றுல்வேளம்
புத்தரமேவத்தனமேபுண்படுமேயென்புகல்வேன்புலவோர்க்கேபோ:
தத்தரமேகத்திணையாய்த்தழைத்தவெங்க டேசுரெட்டன்றமுவினுலே
துத்தரமேதித்தனையுமுன்னுலே விளைந்ததன்ருவொருநிலாவே.

உரை:—ஒரு நிலாவே=இணையற்ற சந்திரனே! இத்தரம் ஏசத் துணிவார் என் சகிமார்=என்னுடைய பாங்கியர்கள் இம் முறையாக என்னைக் குறைகூறத் துணிகின்றூர்கள், வஞ்சகிமா ரென்றல்=கபட முடையவர்களென்று அவர்களைக் கடிவோ மென்று நினைத்தால் (கூடவில்லை எனினில்) வேள் அம்பு தரம் ஏவ=மன்மதன் கணைகளை விதம் விதமாகச் செலுத்த, தனமே புண்படுமே என் புகல்வேன்=முலை நொந்து வருந்துமே அதற்கு நான் என்ன கூறுவேன், புலவோர்களே போதத்தர=கல்விமான்களுக்குக் காணும்படியாகக் கொடுப்பதற்கு, மேகத்திணையாய்த் தழைத்த வெங்கடேசு ரெட்டன்=மேகத்துக்கிணையாய் வளம்படைத்த வெங்கடேசுரெட்ட பூபதி, தமுவினுல் ஏது உத்தரம்=என்னை அணைத்துக்கொண்டால் பதில் ஏது, இத்தனையும் உன்னுலே விளைந்தது=இவ்வளவு தயாரும் நிலவாகிய உன்னுலே உண்டாயிற்று, எ-று.

இதுவுமது.

15. கோட்டமிடு மருவலர்க ளிட்டகற்கோட்
டைகளனைத்துங் கொழிதூ ளாக
வட்டமிடும் பரிநகுல னெட்டமரா
சேந்த்ரனென்னை மருவா நாளில்
துட்டமதன் கணைதூவுத்த துவாவழியே
தென்றல்வந்து சுவைத்துத் தள்ளி
விட்டவெறுங் கூட்டையினிச் சுட்டதனி
லென்னபயன் வெண்ணி லாவே.

உரை:—வெண் நிலாவே=வெள்ளிய நிங்களே! கொட்டமுடன் மருவலர்கள்=குறும்பு செய்கின்ற எதிரிகள், இட்ட கற் கோட்டைகள் அனைத்தும் கொழி தாளாக=கட்டிய கல்லிஞலாகிய அரண்மனைகளெல்லாம் புடைக்கப்படும் புழுதிபோ லாகும்படி, வட்டமிடும் பரி நகுலன்=வட்டமிட் டோடுகின்ற குதிரைத் தலைவனுகிய நகுலன்போன்ற, எட்டமா ராசேந்திரன் என்னை மருவா ளாளில்=எட்டமா மன்னனென்னும் பெருஞ்செல்வன் என்னைத் தழுவாத காளில், திட்டமதன் கணை தூளித்த தூள வழியே= பொல்லாத மன்மதனுடைய அம்பானது சென்று துவாரமிட்ட தூளியி னூடு, தென்றல்வந்து சுவைத்துத் தள்ளிவிட்ட வெறும் கூட்டை= தென்றற் காற்றுனது பருந்து சுவைபார்த்தறிந்து ஒதுக்கித்தள்ளிய சத் தில்லாத உடம்பை, இனிச் சுட்டதினுல் என்ன பயன்=இனித் தகிப்பதால் யாது பயன் காணப்போகிறுய், எ - று.

தோழி கூற்று.

16. புவிக்காதி பதியிளசை புரந்தவெங்க
டேசுரெட்டன் புலவோர் சொல்லும்
கவிக்காதி வள்ளலுக்கண் டாசைகொண்டா
ளுக்கமுதைக் கரைத்துப் பால்வார்த்
துவிக்காதிவ் வளவேனும் புகட்டுசகியே
முகத்தைத் துடைதண் ணீரு
தவிக்காதி லேசுக்காளும் வைத்தூதிவள்
காமத்த கைக்குத் தானே.

உரை:—புவிக்காதிபதி=உலகத்திற்குத் தலைவனுகிய, இளசை புரந்த வெங்கடேசு ரெட்டன்=இளசைப் பதியைப் பாதுகாத்த வெங்கடேசுர எட்டனும், புலவோர் சொல்லும் கவிக்கு ஆதி வள்ளலு=பாவல ரியம்பு கின்ற பாட்டுக்குப் பரிசளிக்கும் முதல் வள்ளல் போன்றவனுமான பிரபுவை, கண்டு ஆசை கொண்டாளுக்கு=நோக்கி இச்சித்த இவளுக்கு, இவள் காமத் தகைக்குத்தானே=விரகதாபம் நீங்கும்பொருட்டு, அமுதைக் கரைத்துப் பால் வார்த்து=பால் ஊற்றிச் சாதத்தைக் கரைத்து, விக்காது இவ்வள வேனும் புகட்டு சகியே=விக்காமலிருக்கும்படி ஒரு சிறிய அளவாவது பரு கும்படி செய்வாயாக, முகத்தைத் துடை=அவள் மயக்கமா யிருந்தால் அவளுடைய முகத்தைத் துடைப்பாயாக, தண்ணீர் உதவி=தண்ணீர் குடிப்பித்து, காதிலே சுக்காளும் வைத்து ஊது....., எ - று.

நற்குயிரங்கல்.

17. பொருவாசிக்கொருநகுலனிளசைவெங்க
டேசுரெட்டன்புயங்கண்டாயோ
இருவாசிக்கெனக்கலையையுடுத்துபணி
திருத்துவளுயெங்கேதேடு

மருவாசிக்குங்குழலேமுடியுனக்குத்
தரிப்பிடந்தான்மகளேசீச்சீ
தெருவாசிக்கினதுமவன்கைமருந்தான்
மெய்ம்மறந்துதிரிகின்றுயே.

உரை :—மகளே=புதல்வியே! பொரு வாசிக்கு ஒரு நகுலன்=சண்டைக் குதிரைகள் நடத்துவதில் இணையற்ற நகுலன்போல்பவனுகிய, இளசை வெங்கடேசுர எட்டன் புயம் கண்டாயோ=இளசைப்பதியின் அதிபதியாகிய வெங்கடேசுர எட்டனுடைய தோள்களைப் பார்த்தாயோ, அவன் கைமருந்தால் மெய் மறந்து திரிகின்றுயே=அவனுடைய அமுதம்போன்ற கைகளால் தடவியதின் காரணமாகத் தன்னைமறந்து அலைகின்றுயே, இரு வாசிக்கு எனக் கலியுடித்து=வந்து உட்காரு: தெரிழாமல் உடையைத் தரித்துக் கொள், பணி திருத்து=கழலுகின்ற நகைகளை யொழுங்குபடுத்து, வளை எங்கே தேடு=நடுவிலே வளையல் எங்கே விழுந்ததென்று தேடுவாயாக, மரு வாசிக்கும் குழலே முடி=மணம் பொருந்திய தலைமயிரை முடித்துக் கொள், சீச்சீ உனக்குத் தரிப்பிடந்தான் தெருவா சிக்கினது=இருப்பதற்கு இடம் உனக்குத் தெருவா அகப்பட்டது, அது மிகவும் இழிவு, எ-று.

தலைவி குயிலிட மிரங்கல்.

18. பொரவிசையஞ் செலுத்தவெங்க டேசுரெட்ட
மேந்திரன்மேற் புதுமால் கொண்டேன்
கரவிசையங் கசமாரன் கருப்புவில்லே
வளைத்துவலக் கையா லெய்யும்
சரவிசையங் கத்தில்வந்து தைத்துருவி
யப்புறம்போஞ் சகிக்க மாட்டேன்
இரவிசையம் புகுந்தொளித்தா னிளங்குயில்கா
ணீருமெனக் கிரங்கு வீரே.

உரை:—பொர விசையம் செலுத்த வெங்கடேசுரெட்ட மேந்திரன் மேல் புதுமால் கொண்டேன்=எதிரி சண்டையாட அவன் வெற்றி யடைகின்ற வெங்கடேசுர எட்டச் செல்வன்மீது புதிய வேட்கை யுடையவளானேன், கரவிசை அங்கசமாரன் கருப்புவில்லே வளைத்து வலக்கையால் எய்யும்=கைவிரைவுடைய மன்மதன் கரும்பவில்லே வளைத்து வலது கரத்தால் செலுத்தும், சரவிசை அங்கத்தில்வந்து தைத்துருவி அப்புறம்போம் சகிக்க மாட்டேன்=வேகமான அம்பானது உடம்பிற் சேர்ந்து அழுந்தித் துளைத்துப் பின்பக்கம் போகின்றது; அது தாங்கமுடியவில்லே, இரவிசையம் புகுந்து ஒளித்தான்=சூரியன் அத்தமனகிரியில் மறைந்தான், இளம் குயில்காள் நீரும் எனக்கு இரங்குவீரே=சிறு குயில்களே நீங்கள் என்மீது கருணை வைப்பீர்களாக, எ-று.

தலைவி காமனை விளித்துக் கூறல்.

19. புட்விகட்கடெனவுடைப்பட்வடவை சிதறவருபொருதார்ச்சீறும்
தடவிகடகளிற்றுதயனிளசைவெங்கடேசுரெட்டன்றருவான்முல்லை
அடவிகடவுனதுகுடையகலமத கயமேகனிலத்தேரை
நடவிகடநிமிர்முகடுதொடுபரிதி யுதயமிதோநான்கண்டேனே.

உரை :—அடவிகட = அடே மன்மதனே! புடவி கட கட என உடை பட = பூமியானது கடகடவென்ற ஓசையுடன் பிளவுபடவும், வடவை சிதற = வடவாமுகாக்கினியானது பொறிவீசவும், பொருதார்ச்சீறும் = போர் செய்தார்மேற் சீற்றங் கொள்ளுகின்ற, தடவிகட களிற்று உதயன் = பெரிய முரண்பாடுடைய யானையின்மேல் பகலோன்போல் வருகின்ற, இளசை வெங்கடேசுர எட்டன் தருவான் முல்லை = இளசைப்பதியையுடைய வெங்கடேசுர எட்ட பூபதி தனது முல்லைமாலையை எனக்கு அளிப்பான் இ கடல் நிமிர் முகடு தொடு = இந்தக் கடலில் நிமிர்ந்த (கதிர்களினால்) உச்சியைத் தொடுகின்ற, பரிதி உதயம் இதோ நான் கண்டேனே = பகலவன் உதிப்பதை இப்போதே நான் கண்டுகொண்டேன், உனது குடை அகல = உனது குடையாகிய சந்திரன் ஒடிப்போவதாக, மதகயம் ஏக = மதம் பொழி கின்ற யானையாகிய இருள் ஒழிக, அனிலத் தேரை நடவு = காற்றுத் தேரை ஏறிச் செலுத்திக் கொண்டு போ, எ - று.

தலைவி மனத்தொடுகூறி மகிழ்தல்.

20. கற்றனமின் னுவதென்சொன் முனியென்ரூன்
றனயனம்பாற் கலங்கித் தாபம்
உற்றனமின் னரமுதங் கசந்தணையா
ராதநெஞ்சே யுணர்ந்தோர்க் கங்கை
யிற்றனமின் னளுதவு மிளசைவெங்க
டேசுரெட்ட னினிய நோக்கம்
பெற்றனமின் னுமையின்ரே டொழிந்ததயன்
மாதரலர் பேசார் தாமே.

உரை :—கல்தனம் மின்னுவது என் சொல் முனி என்ரூன் = கல்லா னது மூலைகளையுடைய பெண்ணைதற்குக் காரணம் என்னவென்று கூறுக முனிவனே என்ற பெருமாளின், தனயன் அம்பால் கலங்கித் தாபம் உற்றனம் = மகனுடைய மன்மதனுடைய பாணத்தால் துன்புற்று வேட்கை யுடையேமாகினும், இன் ஆர் அமுதம் கசந்து = அரிய அமுதமும் கசக்கப் பெற்று, அணைய ஆராத நெஞ்சே = படுக்கையிற் றரிக்காத உள்ளமே, உணர்ந்தோர்க்கு அங்கையில் தனம் இன்னாள் உதவும் = கற்றவர்களுக்கு உள்ளங்கையிற் பொருள்களை இக்காலத்தில் அளிக்கின்ற, இளசை வெங்க

டேசுர எட்டன் = இளசைப்பதியில் வாழ்கின்ற வெங்கடேசுர எட்ட பூபதியின், இனிய நோக்கம் பெற்றனன் = தயவான பார்வையை யடைந் தோம், இன்னுமையின் இன்னேரடு ஒழிந்தது = நமது துயரம் இந்நாளோடு தொலைந்தது, அயல் மாதர் அலர் பேசார் தாமே = மற்ற மாதர்கள் இனி யிகழ்ச்சிச் சொல் கூறார்கள், எ - று.

நற்றுயிரங்கல்.

21. ஆளுக்கே யழகனெங்க ளிளசைவெங்க
டேசுரெட்ட னன்பை யீசன்
தாளுக்கே விருந்திட்டா லென்னலர்கள்
செங்குருதித் தசையைச் செங்கை
வாளுக்கே விருந்திட்டான் மாதரா
ராவியெல்லா மலர்க்கை வாளி
வேளுக்கே விருந்திட்டான் வெண்மதிக்கென்
பெண்மதியை விருந்திட் டானே.

உரை:—ஆளுக்கே அழகன் எங்கள் இளசை வெங்கடேசுர எட்டன் = மனிதர்களுள் அழகிற் சிறந்தவனுன எங்களுடைய இளசைப்பதியில் வாழ்கின்ற வெங்கடேசுர எட்டபூபதி, அன்பை ஈசன் தாளுக்கே விருந் திட்டான் = தன்னுடைய பக்தியை இறைவனுடைய திருப்பாதத்திற்கே அர்ப்பணஞ் செய்தான், ஒன்னலர்கள் செங்குருதித் தசையை செங்கை வாளுக்கே விருந்திட்டான் = மாற்றூர்களுடைய சிவந்த இரத்தம் ஒழுகும் ஊனை வாளுக்கே உரியதாகினுன், மாதரார் ஆவியெல்லாம் மலர்க்கை வாளி வேளுக்கே விருந்திட்டான் = பெண்களுயிரை யெல்லாம் பூங்கணைக் கையனுகிய மன்மதனுக்கே புத்துரிமையாக்கினுன், வெண்மதிக்கு என் பெண்மதியை விருந்திட்டானே = வெள்ளிய சந்திரனுக்கு என் மகளின் புத்தியை உரியதாக்கினுன், எ - று.

தோழி பிரங்கல்.

22. அனங்கலக்கணந்தெரியாள்சிறுபேதை
விரகமிவட்கதிகமையோ
மனங்கலக்கப்பக்கமில்லையுன்னையன்றி
யாதலினுல்வாராதாலே
தினங்கலக்கணீருருத்துத்தேடுகிருள்
வாடுகிருடிரண்டகும்பத்
தனங்கலக்கவருள்புரிவாயிளசைவெங்கடேசு
ரெட்டதமிழ்க்கோமானே.

உரை :—இளசை வெங்கடேசுர எட்ட தமிழ்க் கோமானே = இளசைப் பதி வாழ்கின்ற வெங்கடேசுவர எட்ட மன்னனுகிய தமிழ் மன்னனே! அனங்க லக்கணம் தெரியாள் சிறுபேதை = மன்மதனுடைய இயல்பு தெரியாத பேதைப் பருவத்துச் சிறுமியாகிய, விரகம் இவட்கு அதிகம் ஐயோ = இவ ளுக்கு இச்சை மிகுதியாக இருக்கிறது பரிதாபம், மனம் கலக்க உன்னை யன்றிப் பக்கமில்லை = உள்ள மொத்துப் பேசுவதற்கு உன்னையல்லாது வேறு துணையில்லை, ஆதலினுல் = ஆதலால், வாராதாலே = நீ வரவில்லை யென்பத னுல், தினம் கலக்கண்ணீர் உகுத்து = ஒவ்வொரு நாளும் ஒரு கலம் கண்ணீர் சொரிந்து, தேடுகிறுள் வாடுகிறுள் = தேடித் தளர்வடைகிறுள், திரண்ட கும்பத் தனம்கலக்க அருள்புரிவாய் = திரட்சியாகிய குடம்போன்ற கொங்கை களைத் தழுவுதற்கு நீ தயைபுரிவாயாக, எ - று.

தலைவி பாங்கியிடம் வருந்தல்.

23. எனக்குடந்தை யானவெங்க டேசுரெட்ட
னருகிலழைத் திருத்தி வைத்துத்
தனக்குடங்கை யாரவெனைத் தழுவாத
மனக்குறையைச் சகியே சொன்னேன்
உனக்குடம்பெ லாம்பசக்கும் பாலனமுங்
கசக்குமழ குற்ற கொங்கை
கனக்குடங்காத் தொனிகேட்கு மதன்படையும்
வந்தினிக்கை கலக்குந் தானே.

உரை :—எனக்கு உடந்தையான வெங்கடேசுர எட்டன் = எனக்கு மனமொத்த செயலுடைய வெங்கடேசுர எட்டபூபதி, அருகில் அழைத்து இருத்திவைத்து = தனது பக்கத்திற் கூப்பிட்டு உட்காரும்படி செய்து, தனக்குடங்கை ஆர எனைத் தழுவாத மனக்குறையை = தன்னுடைய உள்ளங்கை பொருந்தும்படியாக என்னை அணையாததாலேற்பட்ட திருப்திக் குறைவை, சகியே உனக்குச் சொன்னேன் = தோழியே உனக்கு விளம்பி னேன், உடம்பெலாம் பசக்கும் = தேகமுழுதும் தேமல் படருகின்றது, பால் அனமும் கசக்கும் = பாற் சாதமும் கசக்கின்றது, அழகுற்ற கொங்கை கனக்குடம் = அழகான தனங்களாகிய பளுவுள்ள குடத்துள், கா தொனி கேட்கும் = பொழிலின் முழக்கம் கேட்கும், மதன் படையும் இனி வந்து கை கலக்குந்தானே = மன்மதன் சேனையும் இனி நெருங்கி வந்து சண்டை யிடும், எ - று.

தோழி பிரங்கல்.

24. மாலைமணிமுடி தரித்தமருமலர்கள்
சேனை தனைமடியத்தாக்கும்
கோலமதகளிற்றுதயனிளசைவெங்க
டேசுரெட்டன்கூடாநாளில்

பாலனந்திவலையருந்தாள் சிறியாட்கு
மதிக்குமென்ன பகையோமேனி
வேலைநடுக்கலத்தைவிட்டேயெழுந்தலைந்த
காகமெனமெலிகின்றுளே.

உரை:—மாலை மணி முடிதரித்த மருவலர்கள் சேனைதனை மடியத் தாக்கும்=மலர்மாலைகளையும் இரத்தினக் கிரீடங்களையு மணிந்த எதிரிகளி னுடைய படையைச் சாகும்படி அடிக்கும், கோல மதக் களிற்று=அழகிய மதயானையின்மேல் வரும், உதயன் இளசை வெங்கடேசுர எட்டன்=சூரியன் போன்ற இளசைப் பதிவாழ்கின்ற வெங்கடேசுர எட்டபூபதி, கூடாகாளில்=அணையாத காலத்தில், பால் அனம் திவலை அருந்தாள்=பாற் சாதத்தில் ஒரு துளியளவு கூட உட்கொள்ள மாட்டாள், சிறியாட்கும் மதிக்கும் என்ன பகையோ=இச் சிறுமிக்கும் சந்திரனுக்கும் என்ன மாறு பாடோ, வேலை நடுக்கலத்தை விட்டு எழுந்து அலைந்த காகம் என= சமுத்திர நடுவிலிருந்த மரக்கலத்தை நீங்கி வெளியே போய்த் திரிந்த காக்கைபோல, மேனி மெலிகின்றுளே=உடம்பு வாடப்பெறுகின்றுள், எ - று.

நற்ரு யிரங்கல்.

25. ஓங்கியராமாமகியாதவன்போல வரவுமிடையுடையுந்தன்னுல்
நீங்கியராமாரசரத்தால்வருந்து வதற்கிரங்கநேமியாத [வாள்
பாங்கியராமாவெனக்கண்பார்த்துமரு வாய்கவந்தன்படக்கையால்
வாங்கியராமாபூமாவிளசைவெங்க டேசுரெட்டன்மன்னரேறே.

உரை:—ஓங்கிய ரா=நீண்ட இராத்திரியில், மா மதி ஆதவன்போல வரவும்=பெரிய சந்திரன் சூரியன்போல வெப்பம் தரும்படியாக உதிக்கவும், இடை உடையும் தன்னுல் நீங்கி=இடுப்பிலிருக்கின்ற ஆடை தானே வில கப்பெற்று, நேமியாத பாங்கியர் ஆமா என=உன்னுல் நேமிக்கப்படாத தோழிகள் இது ஆகுமா என்று கடிய, அரா=அரனே அறியும்படி, மாரசரத் தால் வருந்துவதற்கு இரங்க=மன்மதன் அம்பால் துன்புறுவதற்கு இரக்க முற்று, கவந்தன் படக்கையால் வாள்வாங்கிய ராமா=கவந்தன் சாகும்படி கையில் வாளெடுத்த ராமனே! பூமா=பூமிக்கு மன்னனே! இளசை வெங்க டேசுர எட்ட மன்னர் ஏறே=இளசைப்பதி வாழ்கின்ற வெங்கடேசுர எட்ட சக்கரவர்த்தியே! கண் பார்த்து மருவாய்=நோக்கமுற்று அணைவாயாக, எ - று.

இதுவுமது.

26. கனத்துவரை போற்புடைத்த கொங்கைமங்கை
கொண்டமயல் கண்டு நந்தா
வனத்துவரைச் சென்றுமலர் கொய்திவளை
யெய்யவந்தான் வந்தா னெப்போ

துனத்துவரைப் புரந்திதவு சொல்லாரைத்
தாக்கியவர்த் துருவ னேட்டிற்
சனத்துவரை யாக்கும்வெங்க டேசுரெட்ட
மேந்திரனே தளசிங் கேறே.

உரை :—எப்போது = எக்காலத்திலும், உன் நத்துவரைப் புரந்து= உன்னை நேசிக்கின்றவர்களைப் பாதுகாத்து, இதவு சொல்லாரைத் தாக்கி= இனிய மொழி கூறாதவர்களை எதிர்த்து, அவர் துருவன் எட்டில் சனத் துவரை யாக்கும்= அவர்களைப் பிரமாவினுடைய பதிவு புத்தகத்தில் ஒரு கணப்பொழுதில் எழுதும்படி செய்கின்ற, வெங்கடேசர எட்ட மேந்தி ரனே தள சிங்க ஏறே=வெங்கடேசுர எட்டனென்னும் பெருஞ் செல் வனே! சேனைத்தலைவர் தலைவனே! கனத்து வரைபோல் புடைத்த கொங்கை மங்கை=பளுவுற்று மலைபோற் பருத்த தனங்களையுடைய மாது, கொண்ட மயல் கண்டு=எய்திய மயக்கத்தைத் யடைந்து, வந்தான்=தென் றல் தோரான், நந்தா வனத்துவரை சென்று=பூங்காவனம்வரையிற் போய், மலர்க்கொய்து இவளை எய்ய வந்தான்=பூப்பறித்து இவள்மேல் அன்பு செலுத்த வந்து சேர்ந்தான், எ - று.

தலைவியைத் தாய் தேற்றல்.

27. தம்பலிக்குமருவலரைத்தாக்கும்வெங்க டேசுரெட்டசாமிமாலை
வரும்பலிக்குநினைத்தபடிக்கிப்போது தப்பாதுவலத்திருந்த [லெய்
திரும்பலிக்குரலைப்பார்க்கிற்செயமடி பெண்ணேமதனன்செங்கையா
அரும்பலிக்குமென்னபயஞ்சுகமாக வாழ்வாயுன்னதிட்டந்தானே.

உரை :—பலிக்குத் தரும் மருவலரைத் தாக்கும்=பல தீம்பங்களைச் செய்கின்ற பகைவர்களை யடிகின்ற, வெங்கடேசுர எட்டசாமி=வெங்க டேசுரெட்ட முதல்வனுடைய, மாலை வரும்=தார் நமக்கு வந்து சேரும், நினைத்தபடிக்கு இப்போது தப்பாது பலிக்கும்=இப்போது நாம் விரும்பு கின்றபடி நம்முடைய நோக்கம் தவறாது நிறைவேறும், வலத்து இருந்து அதிரும் பலிக் குரல் பார்க்கில்=வலப்பக்கத்தில் நின்று ஓசை செய்கின்ற பல்லியினுடைய சொல்லின் பயனைக் கவனித்துப் பார்த்தால், செயம் அடி பெண்ணே=மகளே நமக்கு வெற்றியே, மதன் செங்கையால் எய் அரும்பு அலிக்கும் என்ன பயம்=காமன் தன்னு சிவந்த கையாற் செலுத்தும் அல்லி மலரின் மொக்குக்கு நாம் ஏன் அஞ்சவேண்டும், சுகமாக வாழ்வாய்=இன்ப மாக வாழ்க்கை நடத்துவாய், உன் அதிட்டந்தானே=அது உன் நல்வினைப் பயனே, எ - று.

கற்ரு யிரங்கல்.

28. மின்னமருங்கொடியனையசின்னமருங்
கொடியமுலைவிம்மமாஞள்
முன்னமரும்பெடுத்துமதன்றன்னமருந்
தொடுக்கவெகுமோகமாகி
அன்னமருந்தென்னினுமீதென்னமருந்
தென்னவுண்ணுதயர்கின்ருளே
சொன்னமருந்தமிழ்ப்புலவர்க்குதவும்வெங்க
டேசுரெட்டசுகுணமாலே.

உரை :—சொன்னம் அரும் தமிழ்ப் புலவர்க்கு உதவும் வெங்கடேசுர எட்ட சுகுணமாலே = பொன்னே அருமையான தமிழ்ச் கல்விமான்களுக்கு அளிக்கின்ற வெங்கடேசுரெட்ட பூபகிபே ! கல்ல பண்புடைய திருமாலமிச மானவனே ! மின்னமரும் கொடியனைய = மின்னொளி பொருந்திய கொடி போலுள்ள, சின்ன மருங்கு ஒடிய = நுட்பமான இடையானது இற்றுப் போகும்படி, முலை விம்ம = கொங்கைகள் உயரவும், முன்னம் அரும்பு எடுத்து = முன்னமே மலர் மொட்டுகளைக் கொய்து, மன்மதன் அமரும் தொடுக்க = மன்மதன் தன்னுடைய போரினைத் தொடங்கி நடத்த, மாஞள் வெகு மோகமாகி = என் மகள் மிகுந்த வீரகங்கொண்டு, அன்னம் அருந்து என்னினும் = சோற்றை யுண்ணென்று சொன்னலும், ஈது என்ன மருந்து என்ன உண்ணுது அயர்கின்ருளே = இது என்ன மருந்தோ வென்று வெறுத்து அருந்தாமல் தளர் வடைகின்ருள், எ - று.

கற்ரு யிரங்கல்.

29. சடங்கலாமகட்கிளமாந்தளிரேமுத் தம்பொரியச்சகிக்குமாவன்
மடங்கலானையைப்பாயுமாறுபோற் சீறுதென்றல்வருமாசொர்ணக்
குடங்கலாமதிதளமானனமாஞ்சேர் வாய்மருளார்கூடியுத்தம் [லே.
தொடங்கலாற்பவுரிகொண்டதரும வெங்கடேசுரெட்டசுகுணமா

உரை :—மருவார் கூடி யுத்தம் தொடங்கலால் = எதிரிகள் ஒருங்கு சேர்ந்து சண்டை முதலில் தொடுப்பதால் பவுரி கொண்ட = வலசாரி இட சாரியாகச் சுற்றித் தாக்குகின்ற போரினை மேற்கொண்ட, தரும வெங்கடே சுர எட்ட சுகுணமாலே = அறச் சிந்தையுடைய வெங்கடேசு ரெட்டஞகிய நற்பண்புப் பெரியோனே ! மகட்கு = என் புதல்விக்கு, சொர்ணக் குடம் தனம் = தங்கக் கும்பம்போலக் கொங்கைகள் விருக்கின்றன, கலாமதி ஆனன மும் = கலையோடு கூடிய முழுச் சந்திரன்போல முகம் உள்ளது, சடம் சலா = உடம்பு கல்லாகுமா, இள மாந்தளிரே = அது மாமரத்தின் இளந்தளிர் போன்றது, (அப்படி யிருப்பதால்) முத்தம் பொரியச் சகிக்குமா = வீரக

தாபத்தால் மேல் விழுந்த முத்து உதிருமாஞல் அதை அவன் தாங்குவாளா, வல் மடங்கல் யானையைப் பாயுமாறுபோல்=பெலமான சிங்கம் யானையின் மேல் தாவுவதுபோலக் கோபிக்கின்ற தென்றற்காற்று வந்து அவளைத் தாக்கும், வரும் ஆ=வரும் ஐயோ அது ஆபத்து, சேர்வாய்=இவளை அணைவாயாக, எ-று.

தலைவி பிரங்கல்.

30. திருவிருக்குமணிமார்பனிளசைவெங்க
டேசுரெட்டதீரனென்னை
மருவிருக்குமணிகணவனெனச்சேரா
நாண்மோகமயக்கத்தான்மேல்
விருவிருக்குமணிவளையுமேகலையுஞ்
சேர்ந்திடுமேன்மேலுந்தேன்பால்
அருவிருக்குமணியலுங்காந்துந்தரள
மெனவருங்கண்ணருவிதானே.

உரை :—திரு இருக்கும் மணி மார்பன்=இலக்குமி தங்குகின்ற அழகிய மார்பை யுடையவனுகிய, இளசை வெங்கடேசர எட்ட தீரன்=இளசைப் பதி வாழ் வெங்கடேசு ரெட்டனென்னும் ஆண்மையுடையவன், என்னை மருவி=என்னைத் தழுவி, ருக்குமணி கணவனெனச் சேரா நாள்=உருக்கு மணியின் காதலனுகிய கண்ணன்போல என்னைப் புணராத காலத்தில், மோக மயக்கத்தால்=வேட்கை மிகுதியால், மேல்=சரீரமானது, விருவிருக்கும்=ஊறலெடுக்கின்றது, அணிவளையும் மேகலையும் சோர்ந்திடும்=கையிற் றரித்த வளையலும் இடையிலுடுத்திய உடையும் நழுவுகின்றன, மேல் மேலும்=அதற்கு மேலாகவும், தேன் பால் அருவிருக்கும்=தேனும் பாலும் அருவருப்பை விளக்கின்றன, அணியலும் காந்தும்=மாலையும் வெதும்புகின்றது, கண்ணருவி தாளம் என வருந்தானே=கண்ணீர்த் துளிகள் முத்துப் போலச் சொரிகின்றன, எ - று.

தலைவிக்குத் தாயுரைத்தல்.

31. குருவடியைவணங்கும்வேங்கடேசுரெட்ட மேந்திரன்முன்கூசாமற்
இருவடிவெல்லாம்பாருவீணையைமீட் டனுராகமிசைத்தனேகந்[போய்
தருவடிதெள்ளமுதநவரசமொழுகும்படி படிசவ்வாதுபூசி
மருவடிபெண்ணேயினிமேல்மகராசியாய்ச் சுகித்துவாழ்குவாயே.

உரை :—பெண்ணே=மாதே! குருவடியை வணங்கும் வெங்கடேசர எட்டமேந்திரன்=ஆசாரியனது திருவடியை வழிபடுகின்ற வெங்கடேசர எட்டப்பெருஞ் செல்வன் சந்நிதியில், கூசாமல் போய்=வெட்கப்படாமற் சென்று, இரு=கீழே இரு, வடிவு எல்லாம் பாரு=அவனுடைய திருமேனி

முழுவதையும் நோக்கு, வீணையை மீட்டு=வீணையை வாசிக்கத் தொடங்கு, அனுராகம் இசைத்து=ஆசை விளைத்து, அசோகம் தருவடி=பல தேவமரங் களின் சாரத்தை வடித்தெடுத்த, தெள் அமுத=தெளிவான அமுதம் போல, நவரசம் ஒழுகும்படி படி=ஒன்பது சுவைகளும் நேட்பாரது உள்ளத்தி லெழுந்து அனுபவமாகும்படி பாடு, சவ்வாது பூசி மருவடி= சவ்வாது முதலிய வாசனைப் பொருள்களைத் தரித்து அவனுடன் தழுவுவா யாக, இனிமேல் மகாராசியாய்ச் சுகித்து வாழ்குவாயே=எதிர் காலத்தில் பெரிய அரசிபோல இன்ப மனுபவித்து வாழ்க்கை நடத்துவாய், எ - று.

நற்றூ யிரங்கல்.

32. கன்னியுன்றன்மேற்பிரியமையா
மற்றேரையிவள்கண்டான்மூன்று
மன்னர்தனிலேயொருவன்பெயரை
யடிக்கடிவழுத்துவாளனத்தைத்
தென்னவன்றன்மாலையென்றுண்மதியையதிற்
கடையெழுத்தாய்த்தீர்த்தாளைய
நன்னயகுணகரகுமாரவெட்ட
ராஜேந்த்ரநளினமாலே.

உரை:—ஐயாம்=ஆச்சரியப்படத்தக்க, நன்னய குணகர குமார எட்ட ராசேந்திர நளின மாலே=சிறந்த நல்ல குணங்களுக்கு இருப்பிடமாகிய குமார எட்ட அரசச் செல்வனே! திருமா லமிசமானவனே! கன்னி உன்றன்மேல் பிரியம் ஐயா=என் மகளுக்கு உன்மீது காதலுள்ளது ஐயனே! மற்றேரை இவள் கண்டால்=பிறரை இவள் நோக்கினால், மூன்று மன்னர் தனிலே ஒருவன் பெயரை அடிக்கடி வழுத்துவாள்=தமிழ்நாட்டு மூன்றரசர்களுள் ஒருவன் பெயராகிய சேரனென்பவனைக் கூறுவாள் (அதாவது சேரேன் என்பாள்) அனத்தைத் தென்னவன்றன் மாலை என்றுள்=சோற்றைக் கண்டால் பாண்டியன் வேப்பமாலைப்போல கசக் கின்ற தென்பாள், மதியை அதன் கடை எழுத்தாய்த் தீர்த்தாள்=சந்திர னைத் தீயென்று முடிவாய்ச் சொல்லுவாள், மதி என்பதிலுள்ள 'தி' 'தீ' என்ற சொல்லின் குறுக்கம், எ - று.

தாய் கூற்று.

33. பொன்னிலங்கை ராவணனை வென்றவிடை
யாட்கள கம்புளகக் கொங்கை
தென்னனை நேராயிருக்குஞ்சொல் வார்த்தை
கண்டு பயந்தேன் மகாவிற்

பன்னிவடி வூர்கணிதம் பம்மரம்பை
யாமிவட் பரிந்து சேர்வாய்
சொன்னமொழி தவறுத குமாரவெட்ட
ராசேந்த்ர சுகுண மாலே.

உரை :—சொன்ன மொழி தவறுத குமார எட்ட ராசேந்திர சுகுண மாலே = கூறிய வாக்கைத் தப்பாமல் நிறைவேற்றுபவனுகிய குமார எட்ட பெருஞ் செல்வ சுற்குணப் பெரியோனே ! கை என்ற இடையாட்கு = கையைக் கூடியதென்று கூறத்தகும் நுண்ணிய இடையை யுடைய பெண் ணுக்கு, கைப்பொன் இலம் = கையான து இலக்குமியின் வீடாகிய கமலம் போன்றது, அளகம் ராவணன் = குழலான து இருள் நிறமுடையது, புளகக் கொங்கை தென்னை சோகாயிருக்கும் = மயிர்ச் சிலிர்ப்புடைய முலைகள் தெங்கின் குரும்பைபோ லிருக்கும் சொல் வார்த்தை கண்டு பால் தேன் = கூறுகின்ற மொழியான து கற்கண்டு பால் தேனுங் கலந்தாற்போ லிருக்கும், மகா வித்பன்னி = மிகுந்த கல்வி ஞானமுடையவள, வடிவு அரம்பை = வடிவம் தெய்வ மகளிர் திருமேனிபோ லுள்ளது, ஊர் அரம்பை = துடை வாழைத் தண்டுபோ லிருக்கும், கண் அரம் = கண் அரம்போற் கூர்மை யானது, நிதம்பம் பையாகும் = அல்குலான து பாம்பின் படம்போ லிருக்கும், இவள் பரிந்து சேர்வாய் = தயவு கூர்ந்து இவளைத் தழுவுவாயாக, எ - று.

தலைவி கூற்று.

34. மெலக்கணக்காப் பொருந்துமோ மெனவேளை
மணங்குறிக்கும் வேளை பார்த்து
நிலக்கணக்கா மன்னம்புகுந்து குந்தாப்பாய
வென்மே னிரைத்தா னெண்ணிச்
சொலக்கணக்காக வழக்கா நானறிந்த
வளாதெரிந் தவளாதுயர மெல்லாம்
இலக்கணக்கா ரிகைதேர்ந்த குமாரவெட்ட
பூபதிபா லியம்பு வாயே.

உரை:—மெல கணக்காப் பொருந்துவோம் என = மெல்ல அதாவது சாவதானமாக முறையாகச் சேருவோமென்று, வேளை மணங்குறிக்கும் வேளை பார்த்து = உள்ளத்தில் இச்சை கொள்ளுகின்ற நேரத்தில், நில் காமன் = நிற்கின்ற மன்மதனுடைய, அக்கணம் அம்பு = கூட்டமாகிய அம்பு கள், குந்து குந்தாய்ப் பாய என்மேல் நிறைத்தான் = குவியல் குவியலாகப் பாயும்படி என்மீது வரிசையாகச் செலுத்தினான், எண்ணிச் சொல கணக்கா வழக்கா = எண்ணித் தொகையிடுதற்குந் கணக்கை வழக்கையது கடந்தது, நான் அறிந்தவளா தெரிந்தவளா = நான் அதன் இயல்பை அறியவும் மாட் டேன் கணக்கின் விவரம் தெரியவுமாட்டேன், என் துயரம் எல்லாம் =

என் துன்பங்கள் முழுவதையும், இலக்கணக் காரிகை தெரிந்த = இலக்கண நூலாராய்ந்து தேர்ச்சி பெற்ற, குமார எட்ட பூபதிபால் இயம்புவாயே = குமார எட்டபூபதி மன்னனிடம் இயம்புவாயாக, எ - று.

செவிலிக் கூற்று.

35. அரைத்தசந்தனம்பொருந்தாளமலியின்மேற்
கண்டுயிலாளரக்கன்மௌலி
நிரைத்தசந்தனம்பாலேதுடைத்த
மருதப்பன்வரநினையாளன்னை
இரைத்தசந்தனம்பசலைக்காற்றுமென்
ருளேபரவையிடத்திலேசென்
றுரைத்தசந்தனம்பாருக்குள்ளிலையோ
திவாகரனுரொளிகின்ருரே.

உரை :—அரைத்த சந்தனம் பொருந்தாள் = உரைத்த சந்தனத்தைப் பூசிக்கொள்ளமாட்டாள், அமளியின்மேல் கண் துயிலாள் = படுக்கையின்மேல் படுத்துத் தூங்கமாட்டாள், அரக்கன் மவுலி = ராட்சசனுகிய ராவணனுடைய முடிகளே, நிரைத்த சம் தன் அம்பாலே துடைத்த = ஒழுங்காய் விடுத்த தன்னுடைய நல்ல அம்பினுலே அறுத்தொழித்த, மருதப்பன் வர நினை வாள் = ராமன் அம்சமான மருதப்ப பூபதி தன்னிடம் வரும்படி எண்ணுகின்றவள், தன்னை இறைத்த சந்தன் அம்பு அசலுக்கு ஆற்றேன் என்ருள் = தன்னிடத்தில் ஒலித்துக்கொண்டு வருகிற மன்மதனுடைய பாணமலையைத் தான் தாங்க முடியாது என்ருள், பரவையிடத்திலே சென்று உரைத்த = கடலினிடம் போய்த் தூது சொன்ன, சந்தனம் = தூதனுகிய அன்னமானது, பாருக்குளில்லையே = இவ்வுலகத்தில் இல்லையோ, திவாகரனுர் ஒளிக்கின்ருரே = பகலவன் அத்தமிக்கின்ருரே, எ - று.

பாங்கிக் கூற்று.

36. அரமியஞ்சேர்ந்திளவாழைக்குருத்தை
விரித்ததிற்கிடத்தவதுவுஞ்சூடா
கரமியங்கொள்ளாதெழுந்துதரையில்
விழுந்தாளதனைக்கண்டுதாய்மார்
சரமியங்குதோவிலையோவெனமூக்கிற்
கையைவைத்தார்சத்யவாய்மைத்
திரமியங்குங்கிருவைமருதப்பனுக்குச்
செய்திசொல்லித்தெளிவிப்பீரே.

உரை :—அரமியம் சேர்த்து = சிலாப் பரப்பில் கொண்டுபோய் வைத்து, இளவாழைக் குருத்தை விரித்து = இளசான வாழை இலையைப் போட்டு,

அதில் கிடத்த = அதன்மேல் படுக்கும்படி செய்யவும், அது சூடாக = அது வெப்பமாய்த் தோன்றினமையால், ரமியங்கொள்ளா தெழுந்து தரையில் விழுந்தாள் = சுகப்படாமல் கிளம்பி வெறு நிலத்திலே விழுந்தாள், அதனைக் கண்டு தாய்மார் = அதையறிந்த அன்னைமார்கள், சரமியங்குதோ இல்லையோ என மூக்கில் கையை வைத்தார் = சுவாசம் இருக்கின்றதா இல்லையா என்று பார்ப்பதற்கு அவளுடைய மூக்கில் தங்கள் கையை வைத்துப் பார்த்தார்கள், சத்திய வாய்மைத் திறமியங்கும் = நிலைத்த உண்மையை உறுதியாகப் பயிலுகின்ற, கிளுவை மருதப்பனுக்கு இச் செய்தி சொல்லி தெளிவிப்பீரே = கிளுவை ஊரிலிருக்கும் மருதப்ப பூபதிக்கு இந்தச் சங்கதியைத் தெரிவித்து உண்மையை விளக்குவீராக, எ - று.

தலைவி கூற்று.

37. திருந்தலரிகலையடக்குங்கிளுவை மருதப்பசெயசிங்கமென்னைப்
பொருந்தலரிதாயிருந்தாற்பூத்தானஞ் செய்யாதேபோர்வேளோன்
வருந்தலரிகூவியலரிமாவலரி பூவலரிமாதர்கீழ்பால்
இருந்தலரிவாராமுன்னிரவிதனின் மதியம்வந்தாலென்செய்வாளே.

உரை: —திருந்தலர் இகலை அடக்கும் = பகைவர் முரண்பாட்டை ஒழிக்கும், கிளுவை மருதப்ப செயசிங்கம் = கிளுவை மருதப்பாகிய வெற்றித் தலைவன், என்னைப் பொருந்தல் அறிதா யிருந்தால் = என்னை வந்து அணைதல் இல்லாமற்போனால், போர் வேளோன் பூத்தானம் செய்யானே = சண்டையிடும் மன்மதன் என்னைக் கொலைசெய்ய மாட்டானே, வருந்தலர் இகுளை = தோழியர் துன்பப்படமாட்டார்கள், அலர் மாவலர் = பழி தூற்றுகின்ற வல்லமை யுடையவர்கள், ரிபூவலர் = பகைப்பதில் வல்லவர், இமாமாதர்க் கீழ்பால் இருந்து = அழகிய கீழ்த்திசையிலிருந்து, அலரி வாரா முன் = சூரியன் உதயம் செய்வதற்கு முன்னே, இரவு இதனில் = இராப் பொழுதாக இருக்கின்ற இக்காலத்தில், மதியம் வந்தால் = சந்திரன் உதயமானால், என் செய்வேனே = நான் என்ன செய்யக்கூடும், எ - று.

தலைவி பிரங்கல்.

38. வரைத்தூற்றுநெடுங்காட்டுவழிப்புலவோ
ரலையாமல்வளர்த்ததாய்போல்
உரைத்தூற்றுமலைபுரந்ததுங்கமரு
தப்பலெருநாளுஞ்சேரான்
கரைத்தூற்றுநறும்பாலுமன்னமும்
வேண்டேனதனைக்கண்டலோமா
தரைத்தூற்றுமெனவிடுத்துத்தாய்க்கிழவி
கூடநின்றுசலஞ்செய்தாளே.

உரை:—வரை தூற்று நெடுங்காட்டு வழிப்புலவோர் அலையாமல்=மலை புதர் முதலியன உள்ள நீண்ட காட்டு வழிகளில் கற்றவர்கள் திரியாமல், வளர்த்த தாய்போல் உரைத்து=வளர்த்த மாதாவைப்போல் ஆதரவு சொல்லி, ஊற்றுமலைபுரந்த துங்க மருதப்பன்=ஊற்றுமலையைப் பாதுகாத்த புனிதகுணமுடைய மருதப்ப வள்ளல் ஒருநாளும் சேரான்=ஒருநாள்கூட வந்தணையா திருக்கிறான், கரைத்து ஊற்றும் நறும்பாலும் அன்னமும் வேண்டேன்=சாதத்தைக் கரைத்தூவிடுகின்ற வாசனை உடைய பாலையும் சோற்றையும் நான் விரும்பமாட்டேன், அதனைக் கண்டலோ=அதனைப் பார்த்தல்லவா, தாய்க்கிழவி=பாட்டியானவள், மாதரைத் தூற்றுமென விடுத்து=என்மேல் பழிச்சொல் சொல்லும்படி சில பெண்களை ஏவி, கூட நின்று சலம் செய்தாளே=தானும் உடன்கூடிச் சினங் காட்டினாள், எ - று.

நற்றூ யிரங்கல்.

39. செருத்தாக்குமதப்புலியேதிருமலை
வேலப்பாநின்செவ்வாயூரல்
அருத்தாக்குமரிக்கமுதங்கசப்பாகு
மணைவேண்டாளையோவாழைக்
குருத்தாக்குமதைவிரித்துக்கிடத்தினுஞ்
சூடெனவெழுந்துகொள்வாள்காமக்
கருத்தாக்குமுதநாதன்கங்குல்வரக்
கண்டுமுனைக்கண்டிலாளே.

உரை:—செருத் தாக்கு மதப்புரியே=சண்டையில் எதிரிகளை அடிக்கின்ற வீரப்புலிபோன்றவனே, திருமலை வேலப்பா=திருமலையில் இருக்கும் வேலப்ப வள்ளலே, நின் செவ்வாயூறல்--உன்னுடைய சிவந்த வாயிலுள்ள தேன்போன்ற நீரை, அருத்து=பருகும்படி செய், ஆ=ஐயோ! குமரிக்கு=இளம் மாதுக்கு, அமுதம் கசப்பாகும்=அமிர்தமும் கைத்திருக்கும், அணை வேண்டாள்=படுக்கையை இச்சியாள், ஐயோ=பரிதாபம்! வாழைக்குருத் தாக்கும் அதை விரித்து கிடத்தினும் சூடென எழுந்து கொள்வாள்=வாழைக்குருத்தினால் செய்யப்பட்ட படுக்கையைப் பரப்பி அதில் படுக்க வைத்தாலும் அது வெப்பமாய் இருக்கிறதென்று சொல்லி அதிலிருந்து இளம்பி விடுவாள், காமக் கருத்தால்=காதல் எண்ணத்தினால், குமுத நாதன் கங்குல் வாக்கண்டும்=செவ்வல்லி மலர்க்கு நாயகனாகிய சந்திரன் உதிப்பதைப் பார்த்தும், உன்னை அவள் கண்டிலாளே=உன்னைப் பார்க்க அவளுக்குக் கிடைக்கவில்லையே, எ - று.

இகவுமது.

40. எடுத்துவரிமுறத்தினிலிட்டிழைத்தகுறி
பலித்ததெனவெண்ணித்தந்த
வடுத்துவரிதழுக்கேறுமெனக்கனிவாய்
மடுத்துறிஞ்சுமாதைப்பாடு

படுத்துவரிம்மாதரென்றுற்சொல்பவரார்
வளத்திலங்கைபதிமேற்சென்று
கடுத்துவரிதனப்பொருததிருமலை
வேலப்பனிதைக்கண்டிலனே.

உரை :—வரி எடுத்து = நெல்லை எடுத்து, முறத்தினிலிட்டு = சுளகில் வைத்து, இழைத்தகுறி பலித்ததென எண்ணி = செய்து பார்த்த குறியானது அனுகூலமாய் முடிந்ததென நினைத்து, தந்த வடு = தலைவனது பல்லின் குறியானது, துவர் இதழுக்கு ஏறும் என = பவளம்போன்ற தனது உதட்டில் பதியுமென்று பாவித்து, கனிவாய் மடுத்துறிஞ்சும் மாதை = கொவ்வைப் பழம்போன்ற வாயில் ஊறிய நீரைப் பருகுகின்ற இப்பெண்ணை, பாகுபடுத்துவர் இம்மாதர் என்றால் = இத்தப் பெண்டிர் சங்கடப்படுத்துகின்றார்க ளென்றால், சொல்பவர் யார் = தலைவனிடத்தில் இதைக் கூறுகின்றவர்கள் யார், வளத்தி லங்கைப் பதிமேல் சென்று = செல்வச் செழிப்புள்ள இலங்கை ஊரின்மேல் படை எடுத்துப்போய், கடுத்து உவரிதனைப் பொருத = சினத் துடன் கடலோடு சண்டையிட்டு வென்ற, திருமலை வேலப்பன் இதைக் கண்டிலானே = திருமலையில் உள்ள வேலப்ப வள்ளல் இந்தச் செய்தியைத் தெரியவில்லையே, எ-று.

தலைவி வண்டுவிடுதூது.

41. பொருந்தமரங்கசரத்துக்கல்லாம லம்புலிக்கும்புறம்போவென்ன
இருந்தமரஞ்சிதமொழியாளிப்பாடு படமுறையோவெமதாதாணி
கருந்தமருமெனையளியேயென்னளியே யாச்சியர்தங்கலையைவாரிக்
குருந்தமரங்குழைத்தேறுந்திருமலை வேலப்பனிடங்கூறுவாயே.

உரை:—என்னளியே = என்னுடைய வண்டே! பொருந்து அமர் = உண்டான சண்டை, அங்கச சரத்துக்கு அல்லாமல் = மன்மதனுடைய பாணத்தோடு மாத்திர மல்லாமல், அம்புலிக்கும் புறம்போ என = சந்திர னுக்கும் வேறுக இல்லை என்று சொல்லும்படியாக, இருந்து அமர் ரஞ்சித மொழி யாள் = இரண்டிற்கும் ஈடாய் இருந்து காதல் கொள்கின்ற இன்பந் தரும் சொல்லை உடையவர், இப்பாடுபட முறையோ = இவ்வாறு துன்பப் படுதல் நீதியா, எமதாதாள் நிகரும் தமரும் எனை அளியே = எமதாதர்களைப் போன்ற உறவினரும் என்ன தயவுடையவர்களாய் இருக்கின்றார்கள், ஆய்ச்சி யர்தம் கலையை வாரி = இடைச்சியர்களுடைய ஆடைகளை எடுத்துக் கொண்டு, குருந்தமரம் குழைத்து ஏறும் = குருந்தமரக் கிளைகளைச் சாய்வாகப் பிடித்திழுத்து அதன்மேல் ஏறிய கண்ணன் அம்சமான, திருமலை வேலப்ப னிடம் கூறுவாயே = திருமலை வேலப்ப வள்ளலிடம் தெரிவிப்பாயே, எ-று.

தலைவி பரங்கியிட மிரங்கல்

42. திருகலகுவாய்ப்பறந்துசிறகொடுக்கி
யிருந்துகடற்சேலைவாரிக்
குருகலகுவலையொதுக்குங்கூடலில்வாழ்
திருமலைவேல்கொலுவினீபோய்
இருகலகுதலைமொழியாளித்தனமா
லானுளென்றிசைத்தேயன்னம்
பருகலகுவளைத்தாரையாகிலுங்கேட்டா
ளெனச்சோபனஞ்சொன்மானே.

உரை:—மானே = தோழியே! குருகு = நாரைகள், திருகலகு வாய் பறந்து சிறகு ஒடுக்கி யிருந்து = சுழன்று எளிதாக மேலே பறந்து சிறகுகளை ஒடுக்கிக்கொண்டு, கடற்சேலை வாரி = கடலிலுள்ள சேல் மீன்களை வாரி எடுத்து, அலகுவலை ஒதுக்கும் = மூக்கினுலே பொத்துகளில் போட்டு வைக்கக்கூடிய, கூடலில்வாழ் திருமலைவேல் கொலுவில் நீ போய் = மதுரைப் பதியில் வீற்றிருக்கின்ற திருமலை வேலப்ப வள்ளல் கொலுவிருக்கும் சபையில் நீ சென்று இரு = உட்கார்ந்திரு, கல = கலக்கமுறவாடு, குதலை மொழியாள் இதனை மாலானுள் என்றிசைத்தே = மழலைச் சொல்லுடைய பெண்ணானவள் இவ்வளவு மயக்கம் கொண்டாள் என்று தெரிவித்து, அன்னம் பருகு = சாதம் உண்பாயாக, அல = அல்லது, குவளைத் தாரையாகிலும் கேட்டாளென = உனது நீலோற்பல மாலையாவது கொடு என வேண்டினுள் என்று, சோபனம் சொல் = மங்கள வார்த்தை செப்புவாயாக, எ - று.

நற்றாய் பிரக்ஞை.

43. சருக்கரைமுதுகனிதேன்கலந்ததமிழ்
முனிநிகர்வான்றறியார்பெண்டீர்
கருக்கரையமுனிவிசயகிரிவேலைச்
சின்னேபகனவானுசைப்
பெருக்கரையவளவலவென்றலைக்கேறி
மயக்கினதுபித்தமூர்ச்சைத்
திருக்கரையவுடதமெடுகரைத்துமெல்லப்
புகட்டமுதுசெலுத்தென்றாளே.

உரை:—சருக்கரை யமுதுகனி தேன்கலந்த தமிழ்முனி நிகர்வான் = சர்க்கரையும் அமுதமும் தேனும் பழமும் கலந்தாற்போன்ற சுவையுடைய தமிழின் தலைமுனிவராகிய அகத்தியரை ஒத்தவன், தறியார் பெண்டிர் = எதிரிகளின் மனைவிகளுடைய, கருக்கரைய முனி = கர்ப்பம கலங்கும்படியாகச் சிற்றம் கொள்ளுகின்ற, விசயகிரி மேலைச் சின்னேபகனவான் =

விசயகிரியிலுள்ள மேலைச் சின்னேபன் என்னும் பெரியவன் இடத்தி லுள்ள, ஆசைப் பெருக்கு அரைய அளவல=வேட்கை மிகுதியானது கூறு வதற்கு அளவில்லாதது, என் தலைக்கேறி மயக்கினது பித்தம=பித்த மானது சிரசில பாய்ந்து மயக்கத்தை உண்டாக்கிவிட்டது, மூர்ச்சை திருக்கு=சுவாசம் இல்லாத குற்றம் ஏற்பட்டது, அரை அவுடதம் எடு= அரைத்துக் கொடுக்கின்ற மருந்தை எடுப்பாயாக, கரைத்து மெல்லப் புகட்டு=அதனைத் தண்ணீரில் கரைத்து சாவதானமாக உள்செலுத்து, அழுது செலுத்தென்றுளே=சோற்றையும் தொண்டையிற் புகுத்து என்று கூறினுள், எ - று.

தலைவி வண்டு விடுதூது.

44. பொருவதற்குச் சிலைக்காமன் வருமுனமே
மதுரையிற் போய்ப் பொறிவண்டீர்காள்
செருவதற்குப் புகழ்விசயன் றிருமலைநரேந்திரன்
வரச் செய்வீரிங்கு
வருவதற்குத் தாமதித்தான் மாலையொன்று
கேளந்த மாலை தானுந்
தருவதற்கு மதியானேன் மையலையா
யினுந்திரும்பத் தரச் செய்வாயே.

உரை :—பொறி வண்டீர்காள்=புள்ளியுள்ள வண்டுக் கூட்டங்களே! பொருவதற்கு சிலைக்காமன் வரு முனமே=என்னோடு சண்டையிடுவதற்கு வில்லையுடைய மன்மதன் வருவதற்கு முன்னேயே, மதுரையில் போய்= மதுரைப்பதிக்குச் சென்று, செறு அதற்கு புகழ் விசயன்=போரில் கீர்த்தி பெற்று செயவானுகிய, திருமலை நரேந்திரன் வரச் செய்வீர் இங்கு= திருமலைராயனை இங்கே வரும்படியாகச் செய்யவேண்டும், வருவதற்குத் தாமதித்தால் மாலை யொன்று கேள்=அவர் வருவதற்கு காலங்கழிபுமானுல் அவர் அணிந்திருக்கும் மாலையைக் கேட்டு வாங்கி வா, அந்த மாலை தானும் தருவதற்கு மதியானேல்=அந்த மாலையைக் கொடுப்பதற்கு நம்மைத் தகுதி யாக அவன் மதிக்க வில்லையானுல், மையலை யாயினும் திரும்பத் தரச் செய்வாயே=அவன்பால் உள்ள எனது காதலையாவது மீளக் கொடுக்கும்படி செய்வாயாக, எ-று.

தலைவி தோழியோடு இரங்கல்.

45. தெந்தனம்பேசுங் கொழுநர்மயல் கொள்ளுஞ்
சேல்விழியீர் திரண்ட மேரு
பந்தனம்போற் றனமுடையீ ரின்சொலுரை
யாலுரைக்கும் படிநீர் கேண்மின்

எந்தனஞ் சோதவெங்க டேசுரெட்டன்
றனையழைக்க வெழுந்து போன
சந்தனஞ் சும்மாவந்தாற் பூசலா
மெனக்குமதன் றனக்குந் தானே.

உரை :—தெந்தனம் பேசும் கொழுநர் = வேடிக்கை பேசுகின்ற கணவர்கள், மையல்கொள்ளும் செயல் விழியீர் = மயக்கமடைதற்கு ஏது வாகிய சேல் மீன்போன்ற கண்ணை உடைய தோழிகளே, திரண்டமேரு பந்தனம்போல் தனமுடையீர் = உயர்ந்த மேருமலையின் அமைப்புப் போன்ற முலைகளை உடையவரே, இன்சொல் உரை யான் உரைக்கும்படி கீர் கேண்மின் = யான் சொல்லும்படியாக உள்ள இனிய வாசகத்தை நீங்கள் கேட்பீராக, எந் தனம் சோத வெங்கடேசு ரெட்டன்தனை = என்னுடைய கொங்கைகளை அணையாத வெங்கடேசுர ரட்ட பூபதியை, அழைக்க எழுந்து போன சந்தனம் சும்மா வந்தால் = அழைத்து வருவதற்குப் புறப்பட்டுப் போன தூது அன்னம் அவரை அழையாமல் வந்தால், பூசலாம் எனக்கும் மதன் தனக்கும் தானே = எனக்கும் மன்மதனுக்கும் சண்டை உண்டாகும், எ - று.

கற்ரு யிரங்கல்.

46. விருத்தப்பாகலித்துறையும்வெண்பாவுங்
கொச்சகமும்விரிவாய்ச்சொல்லக்
கருத்தப்பாவெனதுமகள்காமனர
விந்தமலர்க்கணையானெஞ்சில்
இருத்தப்பாலனம்வெறுத்தா
ளெனையுமவள்சகிதனையுமேசுருள்நீ
வருத்தப்பாத்திரமலவேயணைந்திடுவாய்
திருமலைவேல்வரிசைமாலே.

உரை:—திருமலை வேல் வரிசை மாலே = திருமலை வேலப்ப வள்ள லாகிய சிறந்த பெரியோனே! விருத்தப்பா கலித்துறையும் வெண்பாவுங் கொச்சகமும் விரிவாய்ச் சொல்லக் கருத்து = விருத்தம், கலித்துறை, வெண்பா, கொச்சகம் முதலிய பாடல் வகைகளை விரிவாக இயற்றிக் கூறும் கருத்துடையேன், அப்பா = அப்பனே! எனது மகள் = எனது மகளை, காமன் = மன்மதன், அரவிந்த மலர்க்கணையால் = தாமரைப் பூவாகிய அம்பைக் கொண்டு, நெஞ்சில் இருத்த = மார்பில் அழுத்தவே, பாலனம் வெறுத் தாள் = பால் சாதத்தை வேண்டாதவளானாள், எனையும் அவள் சகிதனையும் எசுருள் = என்னையும் அவள் தோழிமாரையும் வைகிறாள், நீ வருத்தப் பாத்திரமலவே = நீ அவளைத் துன்புறுத்தக் கூடியவனல்லவே, அணைந்திடு வாய் = அவளை (விரைந்து) தழுவுவாயாக, எ - று.

தலைவி பாங்கியை யிரத்தல்.

47. வீறுதரமேவலரைவென்ற வெங்கடேசுரெட்டன்மேவவேண்டி
நூறுதரமாகவண்டைத்தூதுவிட்டாளெனமருந்தாரணைந்தாள்கண்ணீர்
ஆறுதரமேற்பாயவனங்கன் பூவாளிமுலையானையூடே [ல்மாதே.
ஏறுதரமாச்செவியைத்துளைக்குதென்றே யோலமிட்டாளெனச்சொ

உரை :—மாதே = தோழியே! வீறுதர மேவலரை வெங்கடேசு ரெட்டன் = தனிப் பெருமை உண்டாகும்படி பகைவர்களைத் தோற்கடித்த வெங்கடேசர எட்டப்பநாயகி, மேவ வேண்டி = தன்னை யடைய விரும்பி, நூறு தரமாக வண்டைத் தூதுவிட்டாள் = நூறுதடவை வண்டினை யுன்பால் தூதாக அனுப்பினள், அனமருந்தாள் கொந்தாள் = சோறு உண்ணுது வருந்தினள், கண்ணீர் ஆறு தர மேற்பாய = கண்ணீரானது ஆறுபோலப் பெருக்கெடுத்தோடவும், அனங்கன் பூ வாளி = மன்மதனுடைய மலர்ப்பாணமானது, முலையானையூடே யேறுதர = தனங்களாகிய யானை களுக்கிடையே பாய்ந்து செல்ல, மா செவியைத் துளைக்கி தென்றே = வண்டானது செய்கின்ற ரீங்காரம் காதைத் துளைத்து வருத்துகிற தென்றே, ஓலமிட்டாள் எனச் சொல் = கதறினள் என்று கூறுக, எ-று.

நற்ரு யிரங்கல்.

48. இக்கோடிவளைப்பனெனவிருகோடியிளம்பிறைக்கீற்றெழுந்துவானில்
முக்கோடிவளைப்பமதனற்கோடி கணைதொடுத்தான்முன்னிற்பாளோ
கொக்கோடியிரையெடுக்குமிளசைநகர் செழிக்கவருங்குமணிவெட்டுத்
திக்கோடிப்புகழ்படர்ந்தவடமலையா கடமலைமுன்சென்றமாலே.

உரை:—கொக்கோடி இரையெடுக்கும் இளசை நகர் செழிக்கவரும் குமண = கொக்குகள் பறந்து போதுமான உணவு கிடைக்கப்பெறும் செழிப்புடைய இளசைப்பதியில் வாழுகின்ற குமணன் போன்ற வள்ளலே! எட்டுத் திக்கோடிப் புகழ் படர்ந்த வடமலையா = எட்டுத் திசையிலும் விரைந்து பரவிய கீர்த்தியை உடைய வடமலையப்ப பூபதியே, கடமலை முன் சென்ற மாலே = மத மலையாகிய (முதலையால் பிடிபட்ட) யானையைக் காப்பதற்கு முன்னே எழுந்தருளிய திருமாலின் அம்சமானவனே! இரு கோடி யிளம்பிறைக் கீற்றெழுந்து = இரண்டு கொம்புபோன்ற முனைகளை யுடைய பாலச்சந்திரன் உதயமாகி, வானில் முக்கோடி வளைப்ப = ஆகாயத் தில் திசை எங்கும் ஒளி வீசிச் சூழவும், இருகோடி வளைப்பனென = கரும்பை வில்லாக வளைப்பே னென்று வளைத்து, மதன் நாற்கோடி கணை தொடுத் தான் = மன்மதன் நானூறுகோடி அம்புகளைச் செலுத்தினன், முன்னிற்பாளோ = அதற்கு எதிரிலே இவள் நிற்க முடியுமா, எ-று.

இதுவுமது.

49. கெஞ்சுமாதங்கமுகம்பார்த்திரங்குந் திருமலைவேற்கிரியினுளீர்
அஞ்சுமாதஞ்சுமந்துபெற்றபலன் கிடைத்ததெனக்காறுமாதங்
கஞ்சுமாதந்தனைப்பெற்றிழந்தார் போற்றிருந்துகலங்குதேழை
நெஞ்சுமாதம்பலுக்குநேர்ந்தொருவன்பின்றொடர்ந்துநேர்கின்றுளே.

உரை:—கெஞ்சும் ஆதங்கம் முகம் பார்த்திரங்கும் = யாசிக்கின்ற துன்பத்தை யுடையவர்களுடைய முகத்தைப் பார்த்துத் தயவு செய்கின்ற, திருமலைவேற் கிரியில் = திருமலை வேலப்ப வள்ளலின் மலையிலே, நான் ஈர் அஞ்சு மாதம் சுமந்து பெற்ற பலன் = நான் பத்துமாதம் கருவில் தாங்கிப் பிறப்பித்ததனால் உண்டாகிய கன்மை, கிடைத்ததெனக்கு ஆறுமா = ஆகிய மகன் தங்குவானா, தங்கம் சுமா தந்ததினை பெற்றிழந்தார்போல் = சும்மா கிடைத்த பொன்னைக்கிடைத்தும் உடனே இழந்தவர்போல, ஏழை நெஞ்சு திரிந்து கலங்குது = ஏழையினுண்டய மனமானது அலைவுற்றுக் கலங்குகின்றது, மாது அம்பலுக்கு நேர்ந்து = என் பெண்ணானவள் இரகசியப் பழிச் சொல்லுக்கு இணங்கி, ஒருவன் பின்தொடர்ந்து நேர்கின்றுளே = காதலினால் ஒருவன் பின் செல்வதற்கு இசைந்து செல்லுகின்றுளே, எ-று.

பாங்கி காமனை நோக்கி யுரைத்தல்.

50. திடக்குவடக்கடக்களிற்றுன்கம்பள வல்லக்கர்குலன்தெற்குப்பூர்வ
குடக்குவடக்கடற்கரசன்மலையாண்டிராசன்முல்லைகொடுவந்துன்னை
மடக்குவடக்கனசெய்வண்மதப்பயலே யுனக்கினியொவ்வாதுபேரி
அடக்குவடக்கயமீனின்சடக்குநடக் காதினிமேலறிந்துபாரே.

உரை:—திடக்கு வடுஅகடக் களிற்றுன் = உறுதியான மலைபோன்ற அழகிய மதம் பொழிகின்ற ஆனையை உடையவன், கம்பளவல்லக்கர் குலன் = கம்பள வல்லக்கர் சாதிக்குத் தலைவன், தெற்குப் பூர்வ குடக்கு வடக்கு கடலுக்கு அரசன் = தெற்கு கிழக்கு மேற்கு வடக்கு என்னும் நாலுதிசைகளிலுமுள்ள கடலை யாளும் அரசன், மலையாண்டி ராசன் = ஆகிய மலையாண்டி ராசனது, முல்லை கொடு வந்து = முல்லை மாலையை வாங்கிக்கொண்டு வந்து, உன்னை மடக்குவன் = உன் மதத்தை அடக்குவான், தக்கன செய்வன் = தகுதியானவற்றைச் செய்வான், மதப்பயலே உனக்கினி ஒவ்வாது = மன்மதப் பையலே உனக்கு இங்கே பொருத்தமில்லை, பேரி அடக்கு = உன் முரசு அடிப்பதை நிறுத்திவிடு, வடக்கயமீனின் சடக்கு நடக்காது = உன்னுடைய கயல்மீன் கொடியின் பெருமிதம் நிலைபெறாது, இனிமேல் அறிந்துபாரே = இனிமேல் உனக்குத் தெரிந்ததைச் செய்து பார், எ - று.

தலைவி கூற்று.

51. இலக்காரமணியாள்கண்ணிமைபொருந்தாண்
மன்மதனுரெய்தபுண்ணில்
கலக்காரம்பெய்ததெனக்கதிர்மதியுஞ்
சுழன்றெரிப்பக்கனன்றுளென்றே
சொலக்காரம்மியமாகவிலக்கணநாற்
கவிப்புலமைத்தொன்னூலோர்க்குப்
பலக்காரமருள்விசயகிரிவேலாஞ்
சின்னுைபபூபதிச்செவ்வேட்கே.

உரை :—இலக்கண நாற் கவிப்புலமை தொன்னூலோர்க்கு = இலக்கண அறிவும் நால்வகைப் பாட்டுப்பாடும் திறமும் உடைய பழையநூல் தேர்ச்சிப் புலவருக்கு, பலக்காரம் அருள் = பல பொருள்களையும் வழங்குகின்ற, விசய கிரி வேலாம் சின்னுைப பூபதிச் செவ்வேட்கே = விசயகிரியில் இருக்கும் வேலப்பராகிய முருகனை ஒத்த சின்னுைப பூபதிக்காக, இலக்காரம் அணி யாள் = விளங்குகின்ற முத்துமாலையைத் தரித்துக் கொள்ளமாட்டாள், கண் இமை பொருந்தாள் = ஒரு சிறிதும் தூங்கமாட்டாள், மன்மதனுர் எய்த புண் ணில் = காமக் கடவுள் எய்து உண்டாகிய சிரங்கில், கலக்காரம் பெய்த தென = ஒரு கலம் அளவு காரமான சாமானைத் தூவினற்போல, கதிர்மதியும் சுழன்று எதிர்ப்ப = நில ஒளி வீசும் சந்திரனும் சுற்றிச் சூடுண்டாக்க, கனன் ருள் என்றே = வெந்து போகிறுள் என்றே, அக்கா ரம்மியமாகச் சொல் = அக்காளே நீ இனிமையாகத் தெளிவிப்பாயாக, எ - று.

தலைமகன் கூற்று.

52. இப்பளப் பாறையிற்படுக்கச் சொல்லுகிறீர்
செடிமறை வோவில்லைச் சூழ
உப்பளப் பாறையுமாச்சுக் கணவனே
வெருகோபி யும்மைக் கண்டால்
கொப்பளப் பார்க்கினும்பார்ப் பான்பேனப்
பார்க்கினும் பார்ப்பன் குணமில்லாத
தப்பளப் பாவிருக்குதையா கிளுவைமரு
தப்பமன்னு தமிழ்க்கோ மானே.

உரை :—கிளுவை மருதப்ப மன்னு தமிழ்க்கோமானே = கிளுவைப் பதி யில் வாழ்கின்ற மருதப்பனென்னுமரசனே ! தமிழ்த் தலைவனே, இப் பளப் பாறையிற் படுக்கச் சொல்லுகிறீர் = இந்தப் பள்ளமான கல் நிலத்திற் படுக்கும் படி கட்டளை இடுகிறீர், சூழச்செடி மறைவோ இல்லை = சுற்றிலும் மரஞ்செ

ஒன்றும் இந்த இடத்தை மறைக்கவில்லை, உப்பளப் பாறையுமாச்சு = உப்பளத்திடல்களே சுற்றிலும் இருக்கின்றன, கணவனே வெகு கோபி = புருடனே பெருஞ்சினமுடையவன், உம்மைக் கண்டால் கொப்பு அளப் பார்க்கினும் பார்ப்பன் = உம்மைப் பார்த்தால் கிலேயோடு தொலைத்தலாகிய கொலை செய்ய எண்ணினும் எண்ணுவான், பேணைப் பார்க்கிலும் பார்ப்பன் = பேன் பார்ப்பதுபோல எளிதாக எண்ணினும் எண்ணுவன், குணமில்லாத = நயமற்ற, தப்பு அளப்பால் இருக்குது அய்யா = தவறு கலந்த செயலாக இருக்கின்றது அய்யனே ! எ - று.

நற்ரு யிரங்கல்.

53. ஆரசந்திரணத்துமட்டுண்டிலா ளருவருத்துவிருவிருப்பாகியே
ஊரசந்திரவிற்பாதிசென்றுமே யுறங்கிலாண்மகட்கென்செய்வேனே
தீரசந்திரகாவியிடக்கயா சிங்கவுத்தண்டதூர்த்தண்டனேரண [யா
வீரசந்திரகிரிநகராதிபா வெங்கடேசுரவெட்டமராஜனே.

உரை :—தீர = தைரியமுடையவனே, சந்திரகாவி இடக்கயா = சந்திரகாவிக்கொடியை உடையவனே, சிங்க உத்தண்ட தூர்த்தண்டனே = சிங்கம்போன்ற உக்கிரமான பராக்கிரமம் உடையவனே, ரணவீர = போரில் வல்லவனே, சந்திரகிரி நகராதிபா = சந்திரகிரிப் பட்டணத்துக்குத் தலைவனே, வெங்கடேசுர எட்டம ராசனே = வெங்கடேசுர எட்ட மகாராசனே, ஆ = ஐயோ (என் மகள்), ரசம் திரணத்தும் அட்டுண்டிலாள் = ஒரு சிறிதுங் கூட நீரைக் கொதிக்கவைத்துக் குடிக்கமாட்டாள், அருவருத்து விருவிருப்பாகியே = உணவை வெறுத்து உடம்பில் ஊறல் கொண்டு, ஊர் அசந்து இரவில் பாதி சென்றுறுமே = ஊரார் அயர்ந்து தூங்கி நடு ராத்திரி கழிந்த பின்பும், உறங்கிலாள் = தூங்காதிருக்கிறாள், மகட்கு என் செய்வேனய்யா = என் மகளைக் குணப்படுத்துவதற்கு நான் என்ன செய்யக் கூடுமய்யனே, எ - று.

வெறி விலக்கல்.

54. தடக்கயத் தலரெல்லா மெடுத்துவேள்
சமரச்சோலையில் வந்தானென வதை
அடக்கயத் தையுந்தாயர் கொன்ருல்
வெறியாட்டுத் தானிவளாசைத் தீர்க்குமா
கடக்கயத் தடையார் புவிகைக்கொண்டு
கட்டுஞ் சந்திரகாவியிடா லெனும்
இடக்கயத் தன்னிலைநாட்டு மாமண்டலேசுரா
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

உரை :—கடக் கயத்து அடையார் = மதம் பொழிகின்ற யானையை உடைய பகைவர்களின், புவி கைக்கொண்டு = பூமியை வென்று தனக்குள் ளாகவே, கட்டும் சந்திரகாவி இடால் என்னும் இடக் கயத்தன் = அங்கே கட் டப்படுகின்ற ஒளிக் கதிர் வீசும் சந்திர காவிக்கொடியினை உடையவன், நிலை நாட்டு மாமண்டலேசுரா = நிலைபெற்ற உலக பூபதியே, வெங்கடேசுர எட் டேந்திரனே = வெங்கடேசுவர எட்டனென்னும் பெரும் செல்வனே, தடக் கயத்து அலரெல்லாம் எடுத்து = விசாலமான பொய்கையிலுள்ள பூக்களை எல்லாம் கொய்து, வேள் சமரச் சோலையில் வந்தானென = மன்மதன் போர் புரியும் பொழிலில் வந்து சேர்ந்தான் என்று கூற, அதை அடக்க அயதனை யும் தாயர் கொன்றல் = அதை அடக்குவதற்காக ஆட்டினை அன்னைமார் பலி இடுவித்தால், வெறியாட்டுத்தான் = வெறியாடுதலாகிய வேடிக்கையே அல் லாமல், இவள் ஆசையைத் தீர்க்குமா = இவள் மோகத்தை அது தணிக்கக் கூடியதா, எ - று.

செவிலி பிரங்கல்.

55. கலக்கை வாளியை யார்தடுப்பார்தென்றற்
காற்றுக் காற்றுவளோ மடவார்வசை
சொலக்கை வாய்பொத்திமெய்சோர்ந் திருக்கவுந்
தோகைமோகந் தொலையாது பாரையா
உலக்கை வாரியடிக்குங் கடாசலத்
துதயனே கணையொன்றின் மராமரத்
திலக்கை வாலியைப் பார்த்தெய்தமா
மண்டலேசுரா வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—உலக்கை வாரி அடிக்கும் கடாசலத்து உதயனே = உலக்கை களைத் தூக்கி எதிரிகளைத் தாக்குகின்ற மதமலைபோன்ற யானையின்மேல் விளங்குகின்ற சூரியன் போன்றவனே, கணை ஒன்றின் = ஒரு அரும்பிலே மராமரத்து இலக்கை = குறி வைத்த மராமரம் ஏழையும், வாலியைப் பார்த்து எய்த = வாலியையும் கவனித்து எய்து வீழ்த்திய, மாமண்டலேசுவரா = உலக பூபதியே, வெங்கடேசுர எட்டேந்திரனே = வெங்கடேசுர எட்டப் பெரும் செல்வனே, கலக்கை வாளியை யார் தடுப்பார் = ஒரு கலம் அளவு மிகுதியாய் உள்ள மன்மதன் கை அம்புகளை யார் தடுக்கக் கூடும், தென்றற் காற்றுக்கு ஆற்றுவளோ = தென்றற் காற்றின் கொடுமையை அவள் தாங்க முடியுமா, மடவார் வசை சொல்ல = பெண்கள் பழி கூறுவதற்காக, கை வாய் பொத்திக்கொண்டு உடம்பும் தளர்வடைய இருப்பதனால், தோகை மோகம் தொலையாது பார் ஐயா = நம்முடைய பெண்ணின் ஆசையானது ஒழியாது என்பதைக் கவனிக்கவேண்டு மய்யனே, எ - று.

தரயிரங்கல்.

56. குரங்கிக் காய்ந்திளந் தென்றலு மன்றிலுங்
கோபங் கொண்டதனுன் மாதரேதுசெய்
வரங்கிக் காபொர வாவென் றழைப்பர்
மறுத்துப் பேசவும் வாயிலை மாங்குயில்
அரங்கிக் காவென்றிருந்திசை பாடவு
மாற்றுமோமயலாற் றுதபே தைக்கே
இரங்கிக் காவிக்ரமார்க்கா செகமண்டலேசுரா
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

உரை:—விக்கிரமார்க்கா செகமண்டலேசுரா வெங்கடேசுர எட்டேந் திரனே = விக்கிரமாதித்தனே உலக பூபதியே வெங்கடேசு ரெட்டப் பெருஞ் செல்வனே! குரங்கி = (குரங்கு அல்லது மானைத் தன்னிடத்தி லுடைய) சந்திரனுடைய ஒளியால், காய்ந்து = வெம்பிப்போய், இளந் தென்றலும் அன்றிலும் கோபங்கொண்டதனுல் = மெல்லிய தென்றற் காற் றும் அன்றிற் புள்ளும் சினங் கொண்டால், மாதர் ஏது செய்வர் = பெண்டிர் அதற்கு யாது செய்யக்கூடும், அங்கு = அவ்விடத்தே, இக்கா பொரவா என்று அழைப்பார்கள் = காமனே சண்டை செய்வதற்கு வாவென்று கூப் பிடுவார்கள், மறுத்துப் பேசவும் வாயில்லை = அதனைத் தடுத்துப் பேசவும் வாயில்லை, மாங்குயில் = மாமரத்திற் றங்கும் குயில்கள், இக்கா அரங்கென்று இருந்து இசை பாடவும் = இப்பொழிலானது நாடகசாலையென் றெண்ணி இருந்து இசைப்பாட்டுப் பாடவும், மயல் ஆற்றுமோ = உண்டாகின்ற மோகம் தணியுமோ, ஆற்றுத பேதைக்கு இரங்கிக்கா = தாங்க முடியாத சிறு பெண் ணின்மேல் இரக்கம் வைத்து அவளைக் காப்பாற்றுவாயாக, எ - று.

இதுவுமது.

57. தானவாரணமுலையாளுக்குத் தானவாவெண்டளப்பத்திலேமையல்
ஆனவாறுமறியாளிவள்கண்ணீ ரானவாறுமறியார்மின்னிரந்தோ
வானவாகண்டலாமண்டலாதிபா வானவாவளவாமதுராபுரி
மீனவாவிசையாமீனகேதனு வெங்கடேசுரவெட்டமராஜனே.

உரை :—வான ஆகண்டலா = வானத்திலிருக்கும் இந்திரன் போன்ற வனே! மண்டலாதிபா = உலக பூபதியே! வானவா = சேரனே! வளவா = சோழனே! மதுராபரி மீனவா = மதுரையிலிருக்கும் பாண்டிய மன்னனே! விசையா = அர்ச்சுனனே! மீன கேதனு = மீனக் கொடியையுடைய மன் மதனே! வெங்கடேசுர எட்டமா ராசனே = வெங்கடேசுரெட்டப் பெரு மன்னனே! தான வாரண மா முலையாளுக்கு = மதயானையைப் போன்ற

பெரிய தனங்களையுடையாளுக்கு, அவா = விருப்பமானது, வெண் தளப் பத்திலேதான் = வெள்ளை நிறமான முல்லைத் தாரிலேதான், மையல் ஆன வாறும் அறியாள் = உன் பால் மோகம் ஏற்பட்ட வகையையும் தெரியமாட் டாள், அவள் கண்ணீர் ஆறு ஆன வாறும் அறியார் மின்னுர் = பாங்கிமாரும் அவளுடைய கண்ணீர் நதியான வகையையும் தெரியமாட்டார்கள், அந்தோ = பரிதாபம்! எ - று.

தலைவனுக்குச் செவிலி யுரைத்தல்.

58. துரையத் தந்தி தலைமுலை மேல்வைத்துத்
தோயுநா ளெந்தநாளோ விரகத்தை
விரையத் தந்தி வளவுஞ்செய் தாலிந்த
மெல்லியற்கென்ன சொல்லியான் தேற்றுவேன்
தரையத் தந்திவரை யேந்துமேகம் போற்றணிந்த
கொம்பு படத்தன் னிழலைப்பாய்ந்
திரையத் தந்தி நடாத்திய மாமண்ட லேசு
ராவெங்க டேசுரெட் டேந்திரனே.

உரை :—தரையத்து = உலகத்தில், அந்தி வரையேந்தும் மேகம்போல் = அந்திப் பொழுதிற் கதிரவன் மறையும் மலையானது சுமக்கின்ற மேகத்தைப் போல, தணிந்த கொம்புபட = தாழ்வான தன்னுடைய தந்தம் கீழே படிய, தன்னிழலைப் பாய்ந்து = நிழலைப் பார்த்து அதன்மேற் ரூவி, இரைய = சத்த மிடும்படி, தந்தி நடாத்திய = யானையைச் செலுத்திய, மா மண்டலேசரா = பெரிய உலக பூபதியே! வெங்கடேசர எட்டேந்திரனே = வெங்கடேச ரெட்டப் பெருஞ் செல்வனே! விரகத்தை விரையத் தந்து இவ்வளவுஞ் செய்தால் = மோகத்தை விரைவில் விளைத்து இவ்வளவு துயரப்படும்படி செய்தால், மெல்லியற்கு என்ன சொல்லி யான் தேற்றுவேன் = மென்மைத் தன்மையுடைய என் மகளுக்கு யான் என்ன ஆறுதல் சொல்லித் தெளிவிக்கக் கூடும், துரை யத்தம் = எஜமான் கையை, நிதலை முலைமேல் வைத்து = பசலை படர்ந்த தனங்களின்மீது பதித்து, தோயும் நான் எந்த நாளோ = புணரும் நான் எந்த நாளோ தெரியவில்லை, எ - று.

செவிலி யுரைத்தல்.

59. அந்திராமனமுன் மேலென்ருற்பக
லடங்குமோமையலாலுமையநீ
வந்திராமனம்பேதைக்குவேளம்பு
வச்சிராயுதம்போல்வந்துதைக்குமே

முந்திராமனம்பாலுண்டவாரிதிமுழக்கமே
சகியாளேயிளசைவாழ்
இந்திராமனுவேந்தாசெகமண்ட
லேசுராவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

உரை:—இளசை வாழ் இந்திரா மனுவேந்தா செகமண்டலேசுரா வெங்கடேசுர எட்டேந்திரனே = இளசைப்பதியில் வாழ்கின்ற தேவேந் திரன் போன்றவனே! மனுநீதி செலுத்தும் அரசனே! உலக பூபதியே! வெங்கடேசு ரெட்டப் பெருஞ்செல்வனே! அந்திராமனம் உன்மேல் என் ரூல்=மாலைக் காலமுதல் இரவெல்லாம் (என் மகளுடைய காதல்) உன் மேலுண்டாயிருக்கிற தென்ரூல், பகல் அடங்குமோ மயல்=மோகமானது பகற்பொழுதிலும் அடங்கி நிற்குமா, ஆனலும் ஐய நீ வந்திராமல்=ஆயினும் ஐயனே நீ அவ்விடத்தில் வந்து கலந்திருக்காததால், நம் பேதைக்கு வேள் அம்பு வச்சிராயுதம்போல் வந்து தைக்குமோ=நமது சிறு பெண்ணுக்குக் காமன் கணையானது வச்சிரப் படைபோல வந்து அழுந்துகின்றது, முந்தி ராமன் அம்பால் உண்ட=முன்காளில் இராமன் விடுத்த அம்பினல் கவரப் பட்ட, வாரிதி முழக்கமே சகியாளே=கடலின் ஒலியை அவள் பொறுக்க மாட்டாள், எ - று.

கற்ரு பிரங்கல்.

60. கொடிக்கத் தத்தும்மலையு மடக்கிநெற்குறியும்
பார்த்துக் குணம்பார்த்துப் பார்த்திந்தப்
படிக்கத் தத்துவளோசோரச்சோரு மென்பா
லனத்துக் குன்பாலனம் வேண்டுங்காண்
அடிக்கத் தத்துகளையும் பரப்பிமு
தண்டகூட் முகடும்படி ரென
வெடிக்கத் தத்தும்பரியா திருமலை
வேலுராஜ விவேக குலேசனே.

உரை:—அடிக்கு அத்தம் துகளையும் பரப்பி=காலடியால் அரிய வழி களிற் புழுதியைப் பரப்பி, மூதண்ட கூட முகடும் படர் என வெடிக்க= பழமையான அண்ட கூடத்தின் உச்சி படரென்று பிளக்கும்படி, கத்தும் பரியா=பாய்ந்து ஓடுகின்ற குதிரையை யுடையவனே! திருமலை வேலுராச விவேக குலேசனே=திருமலை வேலப்ப மன்னனுகிய அறிவுடைய குல முதல்வனே! கொடி கத்த=காகம் கத்துவதைப் பார்த்து, தும்மலையும் அடக்கி=தும்மல் வருவதையும் நிறுத்திக்கொண்டு, நெல் குறியும் பார்த்து= (வருவது தெரிவிக்கின்ற) நெல்லி னடையாளத்தையுங் கவனித்து, குணம் பார்த்துப் பார்த்து=உனது நற்குணமையை நினைத்து நினைத்து, இந்தப்

படிக்கு=மும்முறையாக, அத்தத்து வளை சோரச் சோரும்=கையிலுள்ள வளையல்கள் நழுவுவதினால் உடல் தளரப்பெறும், என் பால் அனத்துக்கு= என்னிடத்திலுள்ள அன்னம்போன்ற நங்கைக்கு, உன்பாலனம் வேண்டும் காண்=உன் பாதுகாப்பு அல்லது பாற்சாதம் அவசியமாகும், எ - று.

இதுவுமது.

61. பூசத்தந்திமுலையும்புண்ணுக்கினீர்
போதும்போதும்புழுகுஞ்சவ்வாதுமா
காசத்தந்திமதியுஞ்சுடுமென்றகாமப்பேய்
கொண்டகள்ளிக்கென்சொலுவேன்
மாசத்தந்திசையெல்லாமதிரவே
மந்தரத்தைமருப்பிட்டிடித்தள்ளி
வீசத்தந்திநடாத்துந்திருமலைவேலு
ராஜவிவேககுலேசனே.

உரை:—மா சத்தம் திசையெலாம் அதிரவே=பெரிய வோசை திக்கெங்கும் முழங்கும்படியாக, மந்தரத்தை மருப்பிட்டு இடித்து அள்ளி வீசு அத்தந்தி=மந்தர பர்வதத்தைத் தந்தத்தாலிடித்து அதனைத் தூக்கி எறிகின்ற அந்த ஆனையை, நடாத்தும்=ஏறி நடாத்துகின்ற, திருமலை வேலு ராச குலேசனே=திருமலை வேலப்ப மன்னனுகிய அறிவுடைய குல முதல்வனே! புழுகும் சவ்வாதும் பூசத்தந்து=புனுகும் சவ்வாதும் அணியும்படி கொடுத்து, இம்முலையும் புண்ணுக்கினீர் போதும் போதும்= இவள் தனங்களையும் நோவச் செய்தீர்கள் அவை இனி வேண்டியதில்லை, ஆகாசத்து அந்தி மதியும் சுடும் என்ற=வானத்தினிற் செல்லுகின்ற மாலைக் காலத்துச் சந்திரனும் எரிவுண்டாக்குமென்று சொல்லுகின்ற, காமப்பேய் கொண்ட கள்ளிக்கு என் சொல்லுவேன்=காதற்பேய் பிடித்த வஞ்சகிக்கு நான் என்ன சொல்லக்கூடும், எ - று.

இதுவுமது.

62. ஒராவுண்டுமிழுமதிப்பிள்ளை யூராவுறங்காதபெண்பிள்ளைமேல்
கூராவுகணைகடொட்டான்மதன் கும்பராசிகொழிப்பதுமுத்தமாம்
தூராவிதுடிப்பத்துடிப்பத்திண்டுணைக் காசலந்துண்டிக்கக்கண்டி
வீராகவராமதிருமாலைவேலு ராஜவிவேககுலேசனே. [க்கும்

உரை:—சூர் ஆவி துடிப்பத் துடிப்ப=எதிர்த்த வீரர்களுடைய உயிரானது பதைபதைத்துச் செல்லும்படி, திண் திணைக் காசலம் துண் டிக்கக் கண்டிக்கும்—வலிமையுள்ள இரண்டு கைகளாகிய மலைகள் அவர்க ளுடம்பைத் துண்டு துண்டாகும்படி துணிக்கின்ற, வீராகவ ராமா=

வீரபராக்கிரம முடைய ராமன் போன்றவனே! திருமலை வேலுராச விவேக குலேசனே=திருமலை வேலப்ப மன்னனுகிய அறிவுடைய குல முதல்வனே! ஓர் அரா உண்டு உமிழும் மதிப்பிள்ளை பூர=ஒரு பாம்பானது விழுங்கிக் கக்குகின்ற இளஞ் சந்திரன் ஆகாயத்தி னூர்ந்து செல்ல, ரா உறங்காத பெண்பிள்ளைமேல்=இராத்திரி தூங்காத சிறு பெண்ணின் மேல், கூர் அரவு கணைகள் தொட்டான் மதன்=கூர்மையாகத் தீட்டிய அம்புகளைச் செலுத்தினுன் மன்மதன், கும்பராசி கொழிப்பது முத்தமர்ம்= குடக்கூட்டம் போன்ற தனங்களின்மேல் துள்ளி விழுகின்றது முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகளாம், எ - று.

இதவுமது.

63. சங்கரா வையகமும் பழிக்குமாந்
தாயார்தூற்றி லெனும்பேதை நெய்முடை
அங்கரா வையழைக்குங் கழைக்குர
லணங்கவேளை யழைக்குமென் றேங்குமாம்
கங்கரா வையடர்வதுபோ லொருகைக்
கடாசலங் கால்சாயத் தாக்கிய
வெங்கரா வையிடறுந் திருமலைவேலு
ராச விவேக குலேசனே.

உரை:—கங்கு அராவை அடர்வதுபோல்=கருடன் பாம்பைத் தாக்குவதுபோல, கைக்கடாசலம் கால் சாயத் தாக்கிய=துதிக்கை யுடைய மதமலை போன்ற யானையைக் காலிழந்து சாகும்படி பிடித்த, வெங் காரவை இடறும்=கொடிய முதலையைக் கொன்ற விஷ்ணுவின் அமிசமான, திருமலை வேலுராச விவேக குலேசனே=திருமலை வேலப்ப மன்னனுகிய அறிவுடைய குல முதல்வனே! தாயார் தூற்றில் சங்கரா வையகமும் பழிக்குமாம்=அன்னைமார் பழிச்சொற் பரப்பினுல் சிவசிவா உலகத்தாரும் இகழ்ந்துரைப்பரென்று கூறுகின்ற, பேதை=சிறு பெண்ணானவள், நெய் முடை அங்க=நெய் நாற்றம் பொருந்திய தேகத்தையுடைய இடையர், ஆவை அழைக்கும் கழைக்குரல்=பசுவைக் கூப்பிடுவதற்கு ஊதும் மூங்கிற் குழலின் ஒலியானது, அணங்க வேளை அழைக்கும் என்று ஏங்குமாம்=மன்மதனை அழைத்து விடுமென்று அஞ்சுகின்றன், எ- று.

இதவுமது.

64. சந்தனத்தைவிடுக்குமுன்னேவில்வ
சந்தனத்தையலைப்பகைத்தெய்வன
சந்தனத்தைத்துலாக்குதுபாலுங்க
சந்தனத்தையுமப்படிச்செய்ததே

சந்தனத்தையணிதிண்புயாசலத்தாருவே
தண்டமிழ்க்கவிஞோர்தம்வ
சந்தனத்தைத்துசங்கட்டியீந்தரு
டந்தரனேமுத்துமந்திரிநரேந்தரனே.

உரை :—சந்தனத்தை அணி திண் புயா அசலத்தாருவே=சந்தனக் குழம்பணிந்த மலைபோன்ற வலிய தோள்களை யுடைய கற்பக மரம்போன்ற வள்ளலே! தண்டமிழ்க் கவிஞோர் தம் வசம்=குளிர்ந்த தமிழில் வல்ல பாவலரிடம், தனத்தைத் துசம்கட்டி ஈந்து அருள்=கொடிகட்டி வேண்டிய பொருளைக் கொடுத்தருளுகின்ற, தந்திரனே=சூழ்ச்சி வல்லவனே! முத்து மந்திரி நரேந்திரனே=முத்து மன்னனென்னும் பெயருடைய மக்கள் தலைவனே! சந்து அனத்தை விடுக்கு முன்னே = தாதாக அன்னத்தை அனுப்புவதற்கு முன்னமே, வில் வசந்தன்=வில்லினையுடைய மன்மதன், அத் தையலைப் பகைத்து ஏய் வசனம்=அந்த மாதைக் கோபித்து விடுகின்ற தாமரைப் பூங்கணையானது, தனத்தைத் தூளைக் குது=முலையை யூடுறுவிச் செல்கிறது (ஆதலால்), பாலும் கசந்து அனத்தையும் அப்படிச் செய்ததே=பாலும் கசக்க அன்னமும் அப்படியே வெறுக்கும் படி செய்துவிட்டது, எ - று.

இதுவுமது.

65. பூரிக்குஞ் சரமாவார மர்கொங்கை
பூவைதாங்கப் பொருதத் தொனிக்கடல்
பேரிக்குஞ்சர பம்போலுந் தென்றற்கும்
பெருமயக்குற் றுருகக்கண் டாங்குவேள்
நேரிக்குஞ்சர முங்கொண்டு வந்துபோர்
நிறைந்திட்டா னினிநீவந்து சேர்மத
மாரிக்குஞ் சரமீதாகு மிந்திரா
வன்யராய வசுவப்ப தூயனே.

உரை :—மதமாரிக் குஞ்சர மீதாகும் இந்திரா=மதமழை பொழியும் யானைமீதேறிச் செல்லும் இந்திரனே! வன்னியராய = வன்னியர்க்கு அரசனே! வசுவப்ப தூயனே=வசுவப்பனென்னும் புனிதமானவனே! பூரிக்கும்=பூரிக்கின்ற, சரமா ஆரம் ஆர்=சரமாக முத்து தங்குகின்ற, கொங்கை பூவை=முலைகளையுடைய மாது, அத் தொனிக்கடல் பேரிக்கும்=அந்த முழக்கமாகிய சமுத்திரத்தையுடைய முரசுக்கும், சரபம் போலும் தென்றற்கும்=சிம்புள் பறவை போன்ற தென்றற் காற்றுக்கும், தாங்கப்

பொரூஉ=மிகவும் ஆற்றூது, பெருமயக்குற்று உருகக்கண்டாங்கு = அதிக மயக்கங் கொண்டு மனமிளகுவதைப் பார்த்து, வேள் கேர் இக்கும் சரம் கொண்டுவந்து=மன்மதன் நோன கரும்புவில்லையும் பாணத்தையும் எடுத் துக்கொண்டு வந்து, போர் நிறைத்திட்டான்=அமர் விளைத்திட்டான், இனி நீ வந்துசேர்=இனிமேல் நீ வந்து அணைவாயாக, எ - று.

இதுவுமது.

66. நகத்துவா ரயிலாங்கண்ணி கொங்கைக
ணையவா ரறத்தைத்த வழித்தென்றல்
புகத்துவாரஞ் செய்தாலந்த வேளம்பைப்
பொறுக்கவாரம் புயக்கண்ணி தந்துசேர்
சகத்துவா ரஞ்செயுந் தென்னிளசை
ராசத்துவாரத் துக்கோர் மந்த்ரியாய்வந்த
மகத்துவாரஞ் சிதவசனு நரவாகனு
நம்வசுவப்ப தீரனே.

உரை:—சகத்து வாரம் செய்யும்=உலகத்தார் மீது அன்புவைக்கும், தென் இளசை=அழகிய இளசைப்பதியில் வாழும், ராசத்துவாரத்திற்கு ஓர் மந்திரியாய் வந்த=அரசன் வாயிலுக்கு ஒப்பற்ற அமைச்சனாக அமைந்த, மகத்துவா=பெருமை யுடையவனே! ரஞ்சித வசனு=இன்சொற் கூறு பவனே! நரவாகனு=ஊர்தியாகிய பல்லக்கிற் போகின்றவனே! வசுவப்ப தீரனே=வசுவப்பனென்னும் தைரியசாலியே! நகத்து ஆர்=மலைபோன் றுள்ள, அயிலாங்கண்ணி கொங்கைகள்=வேலையொத்த கண்ணையுடைய பெண்ணினது தனங்கள், நையம்=நையும்படியாகவும், வாரற=கச்சானது நெழியும்படியாகவும், தைத்தவழி தென்றல் போகத் துவாரஞ் செய்தால்= அம்பு பாய்ந்து சென்ற வழியாகத் தென்றற்காற்று செல்லுவதற்குத் துளை யேற்படுமானால், அந்த வேள் அம்பைப் பொறுக்க ஆர்=அந்தக் காமன் கணையைத் தாங்கக்கூடியவர்கள் யார், அம்புயக் கண்ணி தந்து சேர்= அழகிய புயங்களை லமைந்த உன் மாலையைக் கொடுத்து இவளைத் தழுவுவா யாக, எ - று.

இதுவுமது.

67. கருத்தவாவிலையாள்கரனுய்வருங்
காமனுடல்வாடாதின்றின்பத்தை
அருத்தவாவிலையாயினிப்பேதையே
வாவிதாங்கரிதாகுமையாகண்பார்

திருத்தவாவிலையாத்தன்னைநல்கிய
செந்தமிழ்க்குத்தியாகாநினைப்புலால்
மருத்தவாவிலையாரயில்வேற்கரா
வன்யராயவசுவப்பதீரனே.

உரை:—திருத்தவா விலையாத் தன்னை=அழகிய தப்பாது விலைமதிப் புடைய பசுவினை, செந்தமிழுக்கு நல்கிய தியாகா=செந்தமிழ்ப் பாட்டிற்குப் பரிசாகக்கொடுத்த வள்ளலே! நினைப்புலால் மருத்தவா=மாமிசக் கொழுப் பின் மணம் அகலாத, இலையார்=இலை வடிவுடைய, அயில்வேற் கரா=கூரிய வேலினையுடைய கையை யுடையவனே! வன்னிய ராய வசுவப்ப தீரனே= வன்னியகுலத் தலைவனுகிய வசுவப்பனென்னும் தீரனே! கருத்த=எஜ மானனே! வரா=வருவாயாக, விலையாள்கரனுய் வரும் காமனுல்=வில்லை யுபயோகிக்கின்ற கையனுய் வருகின்ற மன்மதனுல், உடல் வாடாது இன்று இன்பத்தை அறுத்து=தேகம் வாட்டமடையாதபடி ஆனந்தத்தை இப் பொழுதே ஊட்டுவாயாக, அவா இலையாயின் இப் பேதையோ ஆவிதான் கரிதாகும் ஐயா கண்பார்=உனக்கு ஆசையில்லையானுல் இச்சிறு பெண்ணுக்கு உயிர் தங்குவது இயலாததாகும் ஐயனே கண்ணுற்றிரக்கம் வைப்பாயாக, எ-று.

தலைவி பிரங்கல்.

68. நேற்றிருந்த நிலவுமந்நேர மென்னினைவிருந்த
நினைப்புமிளந் தென்றற்
காற்றிருந்த சுகமுமுன் னுணையென்
கருத்திருந்ததும் யாதென்று சொல்லுவேன்
சேற்றிருந்த செந்தாமரைப்பூ வின்மேற்
றிருவிருந்தது போலச் சிம்மாசனம்
வீற்றிருந்த துரையே திருமலைவேலுராச
விவேககு லேசனே.

உரை:—சேற்றிருந்த செந்தாமரைப் பூவின்மேல் திருவிருந்தது போல=சகதியில் முளைத்த சிவந்த தாமரைப்பூவின் மீது இலக்குமி வீற் றிருந்தாற்போல, சிம்மாசனம் வீற்றிருந்த துரையே=சிம்மாசனத்தி லெழுந் தருளி யிருந்த எஜமானே! திருமலை வேலுராச விவேக குலேசனே= திருமலை வேலப்ப மன்னனுகிய அறிவுடைய குல முதல்வனே! உன்னுணை= உன்னுணைப்படி, நேற்றிருந்த நிலவும் அந்நேரம் என் நினைவிருந்த நினைப் பும்=நேற்று அழகாக ஒளி வீசிய சந்திரனையும் அந்த வேளையில் எனது உளத்திருந்த காதல் எண்ணங்களையும், இளம் தென்றற்காற்றிருந்த சுக மும்=மெல்லிய தென்றற்காற்றினுலுண்டான இன்பமும், என் கருத்திருந்

தீதும் யாதென்று சொல்லுவேன் = என் எண்ணத்தில் முனைப்பும் இன்னவா
றிருந்ததென்று யான் கூற முடியாது, எ - று.

கற்ரு யிரங்கல்.

69. திருதராகவனந்தந்தகங்குலிந்
நேரத்தேமதனேறியவூர்திமேல்
வருதராகவனந்தந்தமங்கையை
மருவுவாய்மலர்மஞ்சத்தின்மீதிலே
விருதராகவனந்தந்தளஞ்செறிவேந்தன்
ராவணன்சென்னிபத்தீர்ந்திடப்
பொருதராகவனந்தந்தருஞ்செயபூபனே
வெங்கடேசுரெட்டேந்திரனே.

உரை :—விருதராக = போர் அடையாளங்க ளுடையவராக, அனந்தம் தளம் செறி வேந்தன் = அளவற்ற படைகளோடு கூடிய அரசனுடைய, ராவணன் சென்னி பத்து ஈர்ந்திடப் பொருத = இராவணனுடைய தலைகள் பத்தும் பிளவுபடும்படியாகப் போர் புரிந்த, ராகவன் = இராம னமிசமான, அந்தம் தரும் செயபூபனே = அழகுடைய வெற்றி மன்னனே! வெங்க டேசு ரெட்டேந்திரனே = வெங்கடேசுரெட்டச் செல்வனே! நிருதர் ஆக வனம் தந்த கங்குல் = அரக்கருடைய உடம்பின் நிறத்தைக் காட்டும் இரவில், இந்நேரத்தில் = இப்பொழுதே, மதன் ஏறிய ஊர்திமேல் விருதராக = மன் மதன் ஏறிவரும் தென்றற்காற்று மெல்லென வீச, மலர் மஞ்சத்தின் மீதிலே = பூம்படுக்கையின்மேல், வனம் தந்த மங்கையை மருவுவாய் = பாற் கடலிற் பிறந்த திருமகள் போன்ற பெண்ணை அணைவாயாக, எ - று.

குறிப்பு:—வனம் என்பது நீரையும் நிறத்தையும் குறிக்கும். நீரைக் குறிக்குமிடத்து திருப்பாற்கடலுக்கு இலக்கணையாய் வந்தது.

இதுவுமது.

70. தடக்கடக்கயலோவிடமோவிழி தாமரைக்குமிழோசிமிழோதிரண்
டிடக்கடக்குடமாமுலையாமத னெய்யவாடியுருகுதல்பாரையோ[ண்டு
உடக்கடக்குக்ரமாங்கும்பகன்னனை யுசிதவிந்திரசித்தைச்செயங்கொ
திடக்கடக்கயங்காத்தமனேகரா சீதராவெங்கடேசுரெட்டேந்திரனே.

உரை :—உடக்கு அடக்கு உக்ரமாம் கும்பகன்னனை = ஒருங்கு கூடிய சேனைகளை அடக்கக்கூடிய பராக்கிரமமுடைய கும்பகன்னனையும், உசித இந்திரசித்தை = சிறந்த இந்திரசித்தையும், செயம் கொண்ட = வென்ற, இடக்கடம் கயம் காத்த = உறுதியான (முதலை பிடித்த) மதயானையைக் காப்பாற்றிய, மனேகரா = மனத்திற்கு ரம்மியமானவனே! சீதரா = இலக்குமி

யைத் தாங்கினவனே! வெங்கடேசுர எட்டேந்திரனே = வெங்கடேசு ரெட்டப் பெருஞ் செல்வனே! தடக்கடக் கயலோ விடமோ விழி = பொய்கையிலுள்ள பெரிய கயல்மீனே அல்லது நஞ்சோ என்று சொல்லக் கூடிய கண்ணும், தாமரைக் குமிழோ சிமிழோ = தாமரை மொட்டோ அல்லது வெற்போ என்று சொல்லும்படியான, திரண்டு இடம் கடம் மா முலை = திரட்சியுடைய விசாலமான பரப்பையுடைய குடம்போன்ற பெரிய தனத்தையு முடையாள், மா மதன் எய்ய வாடி உருகுதல் பாரையா = பெரிய காமன் அம்பினுலெய்வதால் வாட்டமடைந்து உருகுவதைக் கவனி ஐயனே! எ - று.

இதுவுமது.

71. உரைக்கத் தத்துவத்துட் பொருளாகிய
வொருவன்கைவில்லுக் கொப்பாமிவள்கொங்கை
வரைக்கத் தத்துவசக்கரன்போரிது மட்டுண்டோ
வந்துமுட்டுதல் பார்க்கிலாய்
தரைக்கத் தத்துவஞாயுமெழுப்பிப் பூச்சக்ர
வாளத்தைத் தாக்கில் கடல்கடந்
திரைக்கத்தத்து வயப்பரியா மண்டலேசுரா
வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—தரைக் கத்தித் துவஞாயும் எழுப்பி = பூமி யதிரும்படியாகப் புழுதியைக் கிளப்பி, சக்காவாளத்தைத் தாக்கி = சக்கிரவாள கிரியைப் போய் முட்டி, கடல் கடந்து இரைக்க = பெரும்புறக் கடலுக்கப்பாற் போய் ஒலி கேட்கும்படியாக, தத்து வயப்பரி = பாய்கின்ற வெற்றிக் குதிரையை யுடைய, மா மண்டலேசுரா = பெரிய உலகத்திற்குத் தலைவனே! வெங்க டேசுர எட்டேந்திரனே = வெங்கடேசு ரெட்டப் பெருஞ் செல்வனே! உரைக்கத் தத்துவத்துள் பொருளாகிய ஒருவன் = சொல்ல வேண்டுமானுல் எல்லாத் தத்துவங்களுக்கும் உட்பொருளாகிய ஒப்பற்ற சிவபெருமானுடைய, கை வில்லுக்கு ஒப்பாம் இவள் கொங்கை வரை = கை வில்லாகிய மேருமலைக் குச் சமானமாகும் இவளுடைய தனமலை, கத்தத்துவசன் போரிது மட் டுண்டோ = மீன் கொடிக் கையனுகிய காமனுடைய சண்டைக்கு அவ வுண்டோ, வந்து முட்டுதல் பார்க்கிலாய் = தென்றற் காற்று தாக்குவதைக் கவனிக்கிறாய் இல்லை, எ - று.

செவிலி பிரங்கல்.

72. பண்ணப்பம்பரமன்னமுனுமலே
பாற்றுப்பம்பரஞ்சேர்ந்துமயல்கொடு
வண்ணப்பம்பரமாங்குயமீறிமேவவிரும்பம்
பரக்கண்ணினட்சேரையா

தண்ணப்பம்பரவைதுழ்பதியரசருங்கப்
பம்பரந்தேகொடுவந்தடி
விண்ணப்பம்பரமென்றேதொழுஞ்செக
வீரராமகுமாரவெட்டேந்த்ரனே.

உரை:—தண் அப்பு அம் பரவை சூழ் பதி யாசரும் = குளிர்ந்த நீரால் சூழப்பெற்ற உலகத்திலுள்ள மன்னர் பலரும், கப்பம் பரந்தே கொடுவந்து = தங்கள் திரைப்பணத்தை விரைவாகக் கொண்டு வந்து, அடி விண்ணப்பம் பரம் என்றே = பாதங்களுக்கு விண்ணப்பம் எங்களைக் காப்பது உமக்கே பொறுப்பென்று சொல்லி, தொழும் = வந்தனஞ் செய்கின்ற, செகவீராம குமார எட்டேந்திரனே = ..., பண் அப்பம் பரம அன்னம் = தயார் செய்த அப்பத்தையும் உயர்ந்த சாத வகைகளையும், பால் துப்பு = பாலுணவையும், உணுமலே = உட்கொள்ளாமலே, அம்பரம் சோர்ந்து = உடை நழுவும்படி, மயல் கொண்டு = மயக்கமாகி, வண்ணப் பம்பரமாம் குயமீறி = பம்பர வடி வுடைய கொங்கைகள் மேலெழுந்து, மேவ விரும்பும் = அணைய ஆசைப்படு கின்ற, அம்பு அரம் கண் இவள் = அம்பையும் அரத்தையும் போன்ற கண்ணையுடைய இவளை, சேர் ஐயா = ஐயனே இவளைத் தழுவுவாயாக, எ-று.

பாங்கி பிரக்கல்.

73. உன்னக்காவடிப்பூப்பறியாணதியும்புகாள்
வடிபாலையருந்தென
என்னக்காவடிவேண்டாமென்றேதினு
லேதுக்காவடியங்காமற்சேருவாய்
அன்னக்காவடியாற்கழுகாசலத்
தாதிக்காவடிமைத்திறம்பூண்டுக
வின்னக்காவடிவேலாவென்றுஞ்செக
வீரராமகுமாரவெட்டேந்த்ரனே.

உரை:—அன்னக் காவடியால் = அன்னக்காவடி எடுத்துக்கொண்டு சென்று, கழுகாசலத்து ஆதிக்கா = திருக்கழுகுமலையில் வீற்றிருக்கும் குமாரக் கடவுளுக்கு, அடிமைத்திறம் பூண்டு = தொண்டனென்னும் வகையி னின்று, கவின்ன = நன்றாக, (அழகாக) காவடி வேலா என்று = வடிவேல் முருகனே என்னைப் பாதுகாத்தருள்வா யென்று; உன் = தியானிக்கின்ற, செகவீராம குமார எட்டேந்திரனே = ..., உன் அக்கா அடி சென்று = சிறப்பாக தினைத்தற்குரிய நந்தவனத்தி னடியிற்போய், மலர் கொய்ய மாட்டாள் = ..., நதியும் புகாள் = ஆற்றிற்குச் செல்லமாட்டாள், வடி பாலை அருந்து என = வடித்த சுத்தமான பாலை அருந்து என்று சொன்னால், எனக்கா = அக்காளே, அடி வேண்டாமென்று கூறினாள் = அப்பாலை

எனக்குத் தேவையில்லை யென்று கூறினீர், ஏதுக்காவள்=அவள் எதற்குப் பயன்படுவாள், தியங்காமல் சேர்வாய்=அவள் திகைத்து வருந்தாமல் நீ அணைவாயாக, எ-று.

நற்ரு பிரங்கள்.

74. ஆரிச்சந்தநயம்படிப்பார்மத
னுலச்சந்தனக்குண்டாகியேயினும்
தேரிச்சந்தனமேசொலுவாயெனச்
செப்பிச்சந்தனங்கைதனைச்சேருவாய்
பூரிச்சந்தநம்விம்மியமாதரைப்
புலப்பச்சந்தனதாகவுளத்தில்வை
வேரிச்சந்தநமார்பகத்தாய்செக
வீரராமகுமாரவெட்டேந்த்ரனே.

உரை:—அம் தனம் பூரிச்சி விம்மிய மாதரை=அழகிய கொங்கைகள் பூரிக்கப்பெற்று விம்மி யழுத பெண்டிரின், புலப்பு அச்சம் தனமாக உளத்தில் வை=ஊடலும் பயமும் தன்னுடையனவாகக் கருதி அவர்களைக் கவனிக்கின்ற, வேரிச்சந்தநமார் பகத்தாய்=மணமான சந்தனம் பூசிய மார்பினை யுடையவனே! செகவீராம குமார எட்டேந்திரனே=....., ஆர் இச் சந்த நயம் படிப்பார்=யார் இந்தத் தனிப்பாட்டினை நயமாகப் பாடுவார்கள், மதனுல் அச்சம் தனக்குண்டாகியே=காமனுல் ஏற்படும் துன்பங் காரணமாகத் தனக்குப் பயமேற்பட்டும், பினும் தேரி=பின்னும் தெளிவடைந்து, இச் சந்தனமே சொலுவாயெனச் செப்பி=தனது அன்னமே நீ போய்த் தனதுரைப்பாயென்று விடுக்கின்ற, இச் சந்தம் நங்கைதனைச் சேர்வாய்=இந்த அழகிய மாதினைச் சேர்வாயாக, எ-று.

இதுவுமது.

75. சம்புதைக்குங் கருங்காலன் போற்கங்குல்
சாரவேலை யொலிக்குப் பயந்துநோக்
கம்புதைக்குமென் பெண்பிள்ளை மேலினிக்
காமராஜ னெடுத்துத் தொடுத்திடும்
அம்புதைக்கு முன்னேயணைந் தாவிவ
ளாவிதைக் குமிப்பூவி லிருக்குநம்
பும்புதைக்கு ணிதியெனவரய்த்த வெம்
புண்ணியா வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை:—நம்பும் புதைக்குள் நிதியென வாய்த்த=நம்பிய புதையலுக்குள் இருக்கின்ற பொருள்போல எங்களுக்கு அமைந்த, எம் புண்ணியா=

எங்கள் தருமவானே! வெங்கடேசர னட்டேந்திரனே=....., சம்பு உதைக்கும் கருங்காலன்போல் கங்குல் சார=சிவபெருமான் உதைத்துத் தள்ளிய கருநிறமுடைய எமன்போல இராத்திரி வந்து சேரவும், வேலை ஒலிக்குப் பயந்து=கடல் முழக்கத்துக்கு அஞ்சி, நோக்கம் புதைக்கும் என் பெண் பிள்ளைமேல்=கண்களைப் பொத்திக்கொள்கின்ற என் பெண்ணின் மீது, இனி காமராசன் எடுத்துத் தொடுத்திடும் அம்பு தைக்கு முன்னே= இனிமேல் மன்மத மன்னன் எடுத்துச் செலுத்துகின்ற கணையர்னது பதியும் முன்னமே, அணைந்தால் இவள் ஆவி தக்கும் இப்பூவில் இருக்கும்= நீ அவளைத் தழுவுவாயானால் உயிர் தரிக்கப்பெற்று இவ்வுலகி லிருப்பாள் எ - று.

இதுவுமது.

76. மாதானைவேந்தர்க்குமேலோன் பெரியசுவாமியையென்
மாதானைவேல்வரக்கண்டனள் கண்டுமயங்கியுஞ்சும்
மாதானையோவரக்காணே னெனதுவளவுக்குளம்
மாதானைபோச்சென்றுவந்தா வினிச்சொல்லவாயில்லையே.

உரை :—மாதானை வேந்தர்க்கு மேலோன்=பெரிய சேனையை யுடைய மன்னர்களுக்கு மேற்பட்டவனுகிய, பெரிய சுவாமியை=பெரிய சுவாமி யென்றவனை, என் மாது ஆனைமேல் வரக் கண்டனன்=என் மகள் ஆனை மீது பவனி வருவதைப் பார்த்தான், கண்டு மயங்கியும் சும்மா தான் வரக் காணேன்=பார்த்து மயல்கொண்டும் கெடுதியில்லாது வருவதை நான் காணவில்லை, எனது வளவுக்குள் அம்மா தானை போச் சென்று வந்தான்= எனது வீட்டுக்குள் அம்மா சேலை தொலைந்து போய்விட்டதென்று சொல்லிக்கொண்டு வந்தாள், இனிச் சொல்ல வாயில்லையே=இனி அவளுக் கனுகூலமாய்ப் பேசுவதற்கு இடமில்லை, எ - று.

தலைப்பெண் ணிரங்கல்.

77. அச்சங்கபாணிபதம்போற்றிச் செந்தமிழ்க்கன்பியற்றி
அச்சங்கமேவுந்திருமலை ராயனணைந்திலலுல்
அச்சங்கலாமதிக்கென்றிருந் தேனெந்தனகத்தைநூல்
அச்சங்கமாகத்துணைத்தான் மதப்பயலம்புகொண்டே.

உரை:—அச் சங்கபாணி பதம் போற்றி=அந்தச் சங்கத்தை யணிந்த கையையுடைய பெருமாளின் திருவடிகளை வணங்கி, செந்தமிழ்க்கு அன்பு இயற்றி = செந்தமிழிடத்திற் பற்றுவைத்து, அச்சங்கமேவு திருமலை ராயன்=அந்தத் தமிழ்ச் சங்கத்தை விரும்பும் திருமலைராய மன்னன், அணைந்திலனுல்=வந்து சேராமையால், அச்சம் கலாமதிக்கு என்றிருந்

தேன் = கலைகளையுடைய சந்திரனுக்கு நான் பயப்பட வேண்டுமென்று நினைத்தேன், என்றன் ஆகத்தை = என்னுடைய தேகத்தை, நூல் அச்சு அங்கமாக = நூலிழைச் சேர்ப்பின் வடிவமாக, மதப் பயல் அம்பு கொண்டே துளைத்தான் = காமனென்னும் சிறுவன் தன்னுடைய பாணத்தினால் துவாரஞ் செய்தான், எ - று.

தலைவி பிரங்கல்.

78. அத்திக்குதையன்றிருமலை வேலப்பனன்புசொல்லத்
தித்திக்குதையன்கருத்தென்ன மோமதிசென்றுணக்
குத்திக்குதையன்கதிர்காட்டு மோவிருகொங்கையின்மேல்
தத்திக்குதையமட்டேறுது காமன்சரங்கள்வந்தே.

உரை :—அத்திக்கு உதையன் = முதலை பிடித்த யானைக்குப் பிரசன்ன மாகிய திருமாலின் அமிசமான, திருமலை வேலப்பன் அன்பு சொல்ல = திருமலை வேலப்ப பூபதி அன்பான மொழி கூற, திதிக்குது = அது இனிமை தருகிறது, ஐயன் கருத்து என்னவோ = தலைவனது நோக்கம் யாதோ, இரு கொங்கையின் மேல் = இரண்டு தனங்களின்மீது, தத்தி = பாய்ந்து, காமன் சரங்கள் வந்தே = மன்மதனுடைய அம்புகள் தாக்கி, உதைய மட்டேறுது = பின்பக்கம் வரை ஊடுருவிச் செல்கின்றது, மதி சென்று = சந்திரன் மறைந்து, குணக்கு திகழிக்கு உதையம் = கீழ்த்திசையிலுதிக்கின்ற பகலவன், கதிர்காட்டுமோ = கிரணங்கள் வீசுமோ, எ - று.

செவிலி பிரங்கல்.

79. கல்வளைக்குண்டிவள்கைவளை போனதுங்காரிகையார்
சொல்வளைக்குந்தரம்போலத் தைப்பதுஞ்சொல்பவரார்
நல்வளைக்குஞ்சரியாஞ்செவிச் சானகிநாண்புனைய
மெல்வளைக்குஞ்சிலையானே திருமலைவேலப்பனே.

உரை:—நல்வளைக்குச் சரி ஆம் செவி = அழகிய வள்ளைத்தண்டுக் கீடான காதையுடைய, சானகி = சீதையை, நாண் புனைய = திருத்தாலி கட்டுவதற்கு, மெல் வளைக்கும் சிலையானே = இலகுவாக வில்லை வளைத் தொடித்தவனே ! திருமலை வேலப்பனே = திருமலை வேலப்ப பூபதியே ! இவள்கை வளை போனதும் = இவளுடைய கையி லணிந்த வளையல்கள் நழுவிப்போனதென்று, (இவள் கையிலுள்ள) கற்போன்று இறுகிய அல்லது வயிரக் கற்கள் அமைத்துச் செய்யப்பெற்ற வளையல்களுக்குஞ் சொல்லப்படுவதே, காரிகையார் சொல் - பெண்டிர் இகழ்ச்சி மொழி, குத்தரம் போல் அவளைத் தைப்பதும் = ஈட்டிபோன்று அவளைக் குத்தி வருத்துவதையும், சொல்பவரார் = (உன்னிடம்) தெரிவிப்பவர் எவர், எ - று.

இதுவுமது.

80. முடிக்குமருப்புக்சிசையரப்பைங் கூந்தலம்மூரிமதன்
பிடிக்குமருப்புக்கிலக்கல்லவே யெதிர்பேசுமொன்னர்
குடிக்குமருப்புக்கடலேற்று வித்துக்கொடிமதில்மாய்ந்
திடிக்குமருப்புக்களிற்ரு னினளசையிலெட்டமனே.

உரை :—எதிர் பேசும் ஒன்னர்=மாறிப் பேசும் சத்துருக்களின், குடிக்கு உமர் உப்புக்கடல் எற்றுவித்து=கீழ்வாழ்ந்த மக்களே முழக்கமான உப்புக்கடலுக்கு அப்பால் தீவுகளிற் கொண்டுபோய்விட்டு, கொடிமதில் பாய்ந்து இடிக்கும்=(அவர்களுடைய) கொடி கட்டிய அரண் சுவரினைத் தாக்கி அழிக்கவல்ல, மருப்புக் களிற்ரூன்=கொம்புகளுள்ள யானைகளையுடையவனுகிய, இளசையில் எட்டமனே=இளசைப்பதிவாழ் (வெங்கடேசுர) எட்ட அரசனே! முடிக்கு மரு புக்கு இசையா=சூடுகின்ற மருக் கொழுந்து தங்கிப் பொருந்தாத, பைங்கூந்தல்=இப்போது முளைக்கிற தலைமயிரையுடைய சிறு பெண், அம்மூரி மதன்=அந்த வலிய மன்மதன், பிடிக்கும் அருப்புக்கு இலக்கு அல்லவே=பிடித்தெய்கின்ற பூவரும்பாகிய கணைகளுக்குத் தக்க குறியாகமாட்டாளே, எ - று.

செவிலிக் கூற்று.

81. தடத்தத்தளிச்சிறுநாண்பூட்டி மாரசரந்தனமு
கடத்தத்தளித்தலைதோற்ருட்குத் தோற்றுகடாசலத்தை
நடத்தத்தளிக்குட்பதைத்துக் கிடக்குமொன்னர்கண்முறை
இடத்தத்தளிக்கப்பொரும்வெங்க டேசரெட்டேந்த்ரனே.

உரை:—கடாசலத்தை நடத்த=மதமலையாகிய தன் யானையைச் செலுத்தியவுடனே, தளிக்குள் பதைத்துக் கிடக்கும் ஒன்னர்கள்=தங்கள் வீட்டுக்குள் நடுங்கிக் கிடக்கிற வீரோதிகள், முறை இட தத்தளிக்க=குறையிரக்கவும் திண்டாடவும், பொரும்=சண்டையிடுகின்ற, வேங்கடேசர எட்டேந்திரனே—, மாரன்=மன்மதன், தடம்தத்து அணி சிறுநாண் பூட்டி=சோலையிற் பறந்து செல்கின்ற வண்டுகளைச் சிறிய நாண்கயிறுகத் தன் வில்லிற் கட்டி, சரம்=அம்புகளை, தலைமுகடு=முலையின் உச்சிமீது, அத்தித்து அளித்து=கையினல் எய்ய, அலை தோற்ருட்கு=வருந்தித் தோல்வியடைந்த என் மகளுக்கு, தோற்று=நீ பிரசன்னமாவாயாக, எ-று.

இதுவுமது.

82. செல்லுக்குமல்லுக்குநேரோதி மங்கலச்சித்தசவேள்
வல்லிக்கிணையிலைவல்லிக் கிணைகந்தமாதனஞ்சொன்
முல்லைக்குமானுக்குமாந்தளி ருக்குமிம்மூன்றினுக்கும்
பல்லக்குமேல்வருமன்னுவெட் டேந்த்ரபாண்டியனே.

உரை :—பல்லக்குமேல் வருமன்னு = சிவிகைமீது ஏறி வருகின்ற வேந்தனே! எட்டேந்திர பாண்டியனே—, செல்லுக்கும் அல்லுக்கும் நேர் ஒளி = மேகத்துக்கும் இருளுக்கும் நிகரான குழலுடையவளாகிய என் பெண்ணுக்கு, மங்கலம் சித்தசவேள் வல்லி இணையிலை = காமன் மனைவியாகிய மங்கலமுள்ள கொடிபோன்ற இரதியானவள் ஒப்பாவதில்லை, கந்தம் மா தனம் = வாசனை வீசும் பெரிய மூலையும, சொல் = வார்த்தையும், வல் இக்கு இணை = சூது கருவிக்கும் கரும்பின் சுவைக்கும் ஒப்பாகும், முல்லைக்கும் மாந்தளிருக்கும் இம்மூன்றினுக்கும் பல் அக்கு மேல்வரும் = முல்லையரும் புக்கு ஒப்பாகப் பல்லும் மான்விழிக்கு நிகராகக் கண்ணும் மாமரத்தின் தளிருக்கு ஒப்பாக உடம்பும் ஆக மூன்றுக்கும் மூன்று ஒப்பாக உள்ளன, எ - று.

செவிலி வண்டோடியது.

83. கவளவளைக்குக்களவுசெய் தோன்வஞ்சகப்பிணைமேல்
துவளவளைக்குஞ்சிலையான் மருதப்பதுங்கன்வரான்
தவளவளைக்குத்தடையிடு வாரில்லைசந்துசொல்ல
அவளவளைக்கும்பிடப்படு மோதண்ணளிக்குலமே.

உரை :—தண் அளிக்குலம் = குளிர்ந்த வண்டுக் கூட்டமே! கவள அளைக்குக் களவு செய்தோன் = ஒரு வாய் அளவு வெண்ணெய்க்காக அதனைத் திருடியவனும், வஞ்சப் பிணைமேல் துவள வளைக்கும் சிலையான் = கபடமான பெண் வடிவெடுத்துவந்த பேய் அசைந்து விழும்படியாக வளைத்த வில்லையுடைய வலுமான கண்ணனது அம்சமாகிய, மருதப்ப துங்கன் வரான் = மருதப்பனென்னும் புனிதவான் இவள்பால் வாவில்லை, தவள வளைக்குத் தடை இடுவார் இல்லை = இவளுடைய வெள்ளிய வளையல் கழலாதாடி அதற்குத் தடுப்பு வைப்பவர் இல்லை, சந்து சொல்ல = தூது கூறும்படி, அவள் அவளைக் கும்பிடலாமோ = தோழியைத் தலைவி வணங்குதல் கூடுமா? எ - று.

செவிலிக் கூற்று.

84. இந்திரச்செல்வன்றுரைபூலிக் காத்தப்பளிங்கிவள்பால்
வந்திலனின்னமும்வேள்கணை யாள்கண்வளர்ச்சிமு
கந்திரள்சானுவில்வைத்தது மகரகர்க்கடக
சந்திரயோகங்களாமட வீர்கணிதந்திடமே.

உரை :—மடவீர் = மாதரே! இந்திரச் செல்வன் = தேவேந்திரன் போன்ற ஐசுவரியம் உடையவனுகிய, துரை பூலிக்காத்தப்பன் = எஜமானன் பூலிக்காத்தப்பன் என்பவன், இங்கு இவள்பால் வந்திலன் இன்னமும் = இந்தவிடத்தில் இவள் பக்கமாக இன்னும் வரவில்லை, வேள் கணையால் தண்வளர் சசிமுகம் = மன்மதனுடைய அம்பால் தாங்கப்பெறுத சந்திரன்

போன்ற முகத்தை, திரள் காலினுள் வைத்தது=முழங்காலுக் கிடையில் வைத்துக் கொண்டது, மகர கர்க்கடக சந்திர யோகங்களாம்=மகரக் குழை யோடு கூடிய சந்திரமுகத்தை முழங்காலுட் காட்டுவதாம், கணிதம் திடமே = சோதிட பாஷையில் இவ்வாறு சொல்லுதல் உறுதியாய்ப் பொருந்தும், எ - று.

குறிப்பு :—மகரம்=குழை, கர்க்கடகம்=முழங்கால், (நண்டுபோலிருப் பது), சந்திரன்=முகத்தைக் குறிப்பது, யோகம்=சேர்க்கை.

தலைவி கடலொடு உரைத்தல்.

85. வெஞ்சத்தமரந்துலக்குந் திருமலைவேலுவந்தால்
வஞ்சத்தமரம்பலுக்குமஞ் சேனனனவாய்க்குமஞ்சேன்
நெஞ்சத்தமரங்கசப்போரை வெல்லுவனீயுமெனை
அஞ்சத்தமரஞ்செய்வாயோ வலைசெறியம்பரமே.

உரை:—அலை செறி அம்பரமே=அலைகள் மிகுந்த சமுத்திரமே, வெம் சத்தமரம் துலைக்கும்=விரும்பி ஏழு மாமரங்களை ஓரம்பினால் துவாரஞ் செய்த இராமனம்சமான, திருமலை வேலு வந்தால்=திருமலை வேலப்ப பூபதி என்பால் வருவாயின், வஞ்சத் தமர் அம்பலுக்கும் அஞ்சேன்=கபட மான சுற்றத்தார் கூறும் பழிச் சொல்லுக்குப் பயப்படமாட்டேன், அன்னை வாய்க்கும் அஞ்சேன்=தாயின் கடுஞ் சொல்லுக்கும் பயமில்லை, நெஞ்சத்து அமர் அங்கசப் போரை வெல்லுவன்=உள்ளத்திலே தங்கி மன்மதன் செய் கின்ற சண்டையிற் செயம் அடைவேன், நீயும் எனை அஞ்சத் தமரம் செய் வாயோ=நீ கூட நான் பயப்படும்படி ஒலிபெழுப்புவாயோ ? எ-று.

செவிலி பிரங்கல்.

86. புத்தியின்பேர்க் குள்ளாய்வேள் பொற்றொடிக்கு முன்புவந்து
சத்தியப்பேர் மீது சரந்தொடுத்தான்—நித்தம்
குருபதம்ப ராவு மனுகூலா பொன்மாது
மருவும்வெங்க டேசுரெட்ட மா.

உரை:—நித்தம் குருபதம் பராவுமனுகூலா=தினமும் ஆசாரியனது திரு வடிகளை வணங்குகின்ற குடியொழுக்க முடையவனே! பொன் மாது மருவும் வெங்கடேசா எட்டமா=திருமகள் தோளில் தங்கப்பெற்ற வெங்கடேசுவர எட்ட வேந்தனே! புத்தியின் பேர்க்குள்ளாய்=மதி (க்குடைக்குக்) கீழ் நின்று, வேள் = மன்மதன், பொன்தொடிக்கு முன்பு வந்து=தங்க வளையல் தரித்த தலைவிக்கு எதிரில் வந்து, சத்தியப் பேர்மீது சரந் தொடுத்தான்= அவள் மெய்ம்மீது அம்பு செலுத்தினான், எ - று.

குறிப்பு :—புத்தியின் பேர்—மதி=சந்திரன், சத்தியப்பேர்—மெய்= உடம்பு.

தலைவி பிரங்கல்.

87. அத்திதனே யூர்ப்பசுப்பே ராக்கிச் சினந்தடித்துச்
சித்தசனென் மேற்சமரஞ் செய்தானே—முத்தமிழ்க்கெந்
நாளும் பசுங்கனக நல்கிமுதல் வள்ளலென
வாழும்வெங்க டேசுரெட்ட மா.

உரை:—முத்தமிழ்க்கு எந்நாளும் பசும் கனகம் நல்கி=இயல் இசை நாடகத் தமிழ்ப்பாடல் பாடுவார்க்கு எக்காலத்திலும் புதிய பொன்னைப் பரிசாக அளித்து, முதல் வள்ளல் என வாழும்=முதல் ஏழு வள்ளல்களைப்போல வரையாது கொடுக்கின்ற கொடையாளியாய் வாழ்கின்ற, வெங்கடேசர எட்டமா=வெங்கடேசர எட்டமனே! சித்தசன்=மன்மதன், அத்திதனே=கடலை, ஊர்ப் பசுப் போராக்கி=நகர் ஆ=நகரா (மாசு) ஆகச் செய்து, சினம் தடித்து=கோபம் மிகுந்து, என்மேற் சமரஞ் செய்தானே=என்மீது போர் தொடுத்தான், எ - று.

தலைவி கூற்று.

88. மன்னன்வெங்க டேசுரெட்ட மாநிதிபாற் றூதுரைத்துக்
கன்னிதார் வாங்கிவரக் காண்கிலனே—மின்னுபசுஞ்
சொன்னவடி வாயிலங்குந் தோகை ரதிகணவன்
கன்னல்வளைத் தெய்யுங் கணை.

உரை:—மன்னன் வெங்கடேசு ரெட்ட மாநிதிபால்=அரசனுகிய வெங்கடேசர எட்டப் பெருஞ் செல்வனிடம், தூதுரைத்து=தூது சொல்லி, கன்னி=தோழிப் பெண்ணைனவள், தார் வாங்கி வரக் காண்கிலனே=அவனுடைய மாலையை இன்னும் பெற்றுக்கொண்டு வருவது தெரியவில்லையே, மின்னு பசும் சொன்ன வடிவாய் இலங்கும் தோகை ரதி=ஒளி வீசுகின்ற புதிய பொன்னின் உருவாய் விளங்கும் மயில்போன்ற சாயலை உடைய ரதி தேவியின், கணவன்=புருடனுகிய மன்மதன், கன்னல் வளைத்துக் கணை எய்யும்=கரும்பு வில்லை வளைத்துப் பாணங்களை (என்மீது) செலுத்துகிறான், எ - று.

செவிலி பிரங்கல்.

89. தண்ணமுத பாஷிதவிஸ் தாரன்வெங்க டேசுரெட்ட
புண்ணியவான் வந்து புணராநாள்—உண்ணமுது
மாமணத்தை யேகுமட வம்புவிட்டாள் பால்கொடுக்க
வீமனத்தை பேரெடுத்தாண் மின்.

உரை:—தண் அமுத பாஷித விஸ்தாரன்=குளிர்ந்த அமுதம்போன்ற பேச்சுடைய அறிஞனை, வெங்கடேசர எட்ட புண்ணியவான்=....., வந்து

புணரா நாள்=வந்து தழுவாதபோது, உண் அமுது மாமனத்தையே குமட்ட=உட்கொள்ளும் அன்னமானது பெரிய நெஞ்சைப் புரட்டுதலால், வம்பு விட்டாள்=கச்சு விட்டாள், கைத்து விட்டாள்=வெறுத்து விட்டாள், பால் கொடுக்க=பாலைப் பருகும்படி கொடுத்தால், மின்=பெண்ணானவள், வீமன் அத்தை பேர் எடுத்தாள் = பூவிலிருக்கும் அயன் அத்தையாகிய சத்தி யின் பேர் எடுத்தாள்=சத்தி அல்லது வாக்கியெடுத்தாள், எ - று.

நற்சு பிரங்கல்.

90. தண்டமிழ்தே ருத்தமத யாளுவெங்க டேசுரெட்ட
மண்டலிகண் கூடி மருவாநாள்—செண்டு
முலைமாலுட் கின்னமுது முன்கொடுக்க வாட்டுத்
தலையாலுண் மான்மயக்கத் தால்.

உரை:—தண் தமிழ்தேர் உத்தம தயாளு வெங்கடேசா எட்ட மண் டலிகன்=குளிர்ந்த தமிழ் நூல்களைக் கற்றுத் தெளிகின்ற உத்தமனாகிய அருளாளன் வெங்கடேசா எட்டாநிலத்தலைவன், கூடி மருவா நாள்=கூடித் தழுவாத நாளில், செண்டு முலை மாலுட்கு=செண்டுபோலத் திரண்ட தனங் களுடைய மாதுக்கு, இன்னமுது முன் கொடுக்க=சுவையான உணவை உண்ணும்படி முன்னே வைத்தால், மால் மயக்கத்தால்=பெரிய மோகத் தால், ஆட்டுத் தலையாலுள்=ஆடுபோல வேண்டாமென்று அசைக்கின்ற தலையை உடையவளாலுள், எ - று.

இதுவுமது.

91. தெள்ளுதமி ழுக்கருடி யாகிவெங்க ரேசுரெட்ட
வள்ளன்மே லாசைகொண்ட மாலுண்மேல்—துள்ளும்
கயவாளி வேடகுவரி கைமுரசா லுற்பங்
கயவாளி யேவாலே காண்.

உரை:—தெள்ளு தமிழுக்கு அருள் தியாகி = தெளிவான தமிழ்ப்பாடல் கூறுவார்க்குப் பரிசு கொடுக்கின்ற கொடையாளியாகிய, வெங்கடேசா எட்ட வள்ளல்=....., மேலாசை கொண்ட மாலுள்மேல்=பால் காதல் கொண்ட மாதின்மீது, துள்ளுங் கயவாளி வேட்கு=துள்ளி விளையாடும் அற்பக்குணவா லன மன்மதனுக்கு, உவரிகை முரசாலுல்=(பெரிய) கடல் கைக்கொட்டாகு மாலுல், பங்கயவாளி=(செருக்கிலுல்) தாமரை மலர்க்கணையை, எவாலே= செலுத்தமாட்டாலே, எ -று. காண் - அசை.

நற்சுப்க் கூற்று.

92. கொங்கைகும்ப கோணமா கூந்தலுமோ கூட்லா
தங்கும்விழி யம்பா சமுத்திரமா—பைங்கனக
மேருவெங்க டேசுரெட்ட மேந்த்ரா யிவள்சசிபுற்
ருருடையா ரூரிடைய தாம்.

உரை :—பைம் கனகமேரு = பசும் பொன் மலையாகிய மேருவைப் போன்ற, வெங்கடேசர எட்டம இந்திரா = ..., இவள் சசி = இவள் இந்திராணி போல்வாள், இடையது புல் தார் உடையாள் ஊர் ஆம் = இடையானது பனமாலை யணிந்த சோன் பதியாகிய வஞ்சியாம், (அதாவது வஞ்சிக்கொடி போன்றது,) கொங்கை = தனமானது, கும்ப கோணமா = குடம் போன்று வட்டமானது, கூந்தலுமோ கூடலாம் = குழலானது மிகுந்த இருள் போன்றது, (கூடு + அல் = கூடல்), தங்கும் லிழி அம்பா சமுத்திரமா = முகத்திற் பொருந்திய கண்ணானது அம்பு போன்றதா தடல் போன்றதா என்று ஐயுறத்தக்கது, எ - று.

மகளின் செய்கைக்குத் தாய் ஆச்சரியப்படுதல்.

93. மெய்யன்வெங்க டேசுரெட்ட வேந்தன்பாற் சந்துரைத்துத்
தையல்தண்ணி வாங்கித் தரவிலையே—கையதினற்
றுண்டித்தாண் மென்றுமென்று துப்பினண் மாரனையும்
கண்டித்தா ளச்சமற்றுள் காண்.

உரை :—மெய்யன் வெங்கடேசர எட்ட வேந்தன்பால் சந்து உரைத்த = உண்மையாளனாகிய வெங்கடேசர எட்ட மன்னனிடம் தூது சொல்லி, தையல் தண்ணி வாங்கித்தர = தோழியானவள் அவனுடைய மாலையை இவளுக்கு வாங்கிக் கொடுக்கவும், விலையே = கரமனது விலையே அதாவது கரும்பையே, கையதனல் துண்டித்தாள் = தனது கைகளினல் துண்டு துண்டாக்கினள், மென்று மென்று துப்பினள் = நன்றாகச் சுவைத்துத் துப்பினள், மாரனையும் = மன்மதனையும், கண்டித்தாள் = கட்டனஞ் செய்தாள், அச்சம் அற்றுள் = பயம் நீங்கப்பெற்றாள், எ - று. காண் - அசை.

நற்றாய் பிரார்த்தல்.

94. பூத்தூக்கி யுண்டவனைப் போந்தேறித் தொண்டவனை
மாத்தூக்கி யைத்தூக்கி வந்தானே—நேர்த்திதரும்
பொன்னு பரணு புயசயிலா தென்னிளசை
மன்னுகு மாரவெட்ட மா.

உரை :—நேர்த்தி தரும் பொன் ஆபரணு = அழகான தங்க அணிகள் அணிந்தவனே! புய சயிலா = தோளாகிய குன்றுகளை உடையவனே! தென் இளசை மன்னு = அழகிய இளசைப்பதித் தலைவனே, குமார எட்டமா = குமார எட்டமனே! பூத் தூக்கி = பூமியைத் தாக்குபவனுகிய பாம்பு, உண்டவனை = உண்ணுங் காற்றுடைய தென்றலை, போந்து ஏறித் தொண்டவனை = போய் வாகனமாகக் தொண்ட மன்னதன், மாத்தூக்கி = திருடனைச் சுமப்பதாகிய தாமரைப்பூவை தூக்கி வந்தான் = (எய்வதற்கு) எடுத்துக்கொண்டு வந்தான், எ - று.

வெறி விலக்கல்:

95 நீற்றரிமிழ்வா ணர்க்குநிதி நல்கும்வெங்க டேசரேட்ட
கேற்றவன்ரு ரன்றியரன் கோயிலின்முன்—உற்றகேடிகீ
காலைவிட்டப் பாலேநீங் காதமுனீ றுண்டுபட்ட
வேலையிட்ட தேது விடு.

உரை:—நல் தமிழ் வாணர்கட்கு நிதி நல்கும் வேங்கடேசர எட்டக் கொற்றவன்=தக்கத் தமிழ்ப் புலவர்களுக்குப் பொருள் ஈயும் வேங்கடேசுர எட்டப் வேந்தனது, தார் அன்றி=மாலை யல்லாமல், அரன் கோயிலின் முன் உற்ற கொடிக்காலே விட்டு அப்பாலே நீங்காதது=சிவன் கோயில் முன்னுள்ள கொடிமரத்தின் அடியை விட்டு வேறு பக்கம் விலகாதிருக்கிய காளையின் (ரிஷப ராசிக்கு), முன்=முன்னுள்ள மேஷம் அதிர்வது ஆடு, உண்டு பட வேலை இட்டது ஏது=பலியிட்டுத் தின்டுபடும்படி விடுவது எதற்கு? விடு=அப் பலியிடுதலே ஒழிக்க, எ - று.

இதுமதி.

96. கன்னன்வெங்க டேசுரெட்ட காண்டிபன்மேன் மாமோக
சன்னதங்கொண் டாட்குமுல்லைத் தாரல்லா—தென்னசெய்தீர்
தையன்முன்பூ முன்னட் சரமுற்ற தைத்தெரியச்
செய்யும்பே ரென்ன செயும்.

உரை:—கன்னன் வெங்கடேசர எட்ட காண்டீபன் மேல்=கர்ணனைப் போன்ற கொண்டயாளியாகிய வெங்கடேசர எட்டன் என்னும் அர்ச்சுனன் போன்ற வில்வீரன் மீது, மா மோகச் சன்னதம் கொண்டாட்கு=பெரிய மையல் வெறி பிடித்தவளுக்கு, முல்லைத்தாரல்லாது என்னி செய்தீர்=அவனுடைய முல்லை மாலையை வாங்கிக் கொடுப்பதல்லாமல் வேறு என்ன காரியஞ் செய்தீர்கள்? தையல் முன் பூ முன் அட்சரம் உற்றதை=பூவுக்கு முன் எழுத்தாகிய பு என்பது தையல்முன் சேர்வதால் உளதாகிய புதையலை, தெரியச் செய்யும் பேர்=மை அதாவது ஆடு, என்ன செய்யும்=(பலியிடுவதால்) என்ன நன்மை யுண்டாக்கும்? எ - று.

இதுமது.

97. தாண்டுபரி தூண்டுதிட சாலிவெங்க டேசரேட்ட
பாண்டியன்மே லாசைகொண்ட பைந்தொடியே—வேண்டியே
ஒன்றிரண்டாப் போக வொருத்தனியிங் கேன்கொணர்ந்தீர்
மின்றுயர்க்கென் செய்யும் விடும்.

உரை:—தாண்டு பரி தூண்டு திடசாலி=பாயும் குதிரையைச் செலுத்த வல்ல தரியவாளனை, வெங்கடேசர எட்ட பாண்டியன்மேல்.....=, ஆசை

கொண்ட பைந்தொடியை வேண்டியே = மோகங்கொண்ட புது வேளை யணிந்த மாதின் பொருட்டு, ஒன்று இரண்டாப் போக. ஒருத்தியை இங்கு ஏன் கொணர்ந்தீர் = பலியிடுதற்கு ஒரு ஆட்டை ஏன் கொண்டு வந்தீர்கள்? மின் துயர்க்கு என் செய்யும் = அப் பெண்ணின் துன்பத்தை நீக்குவதற்கு அது யாது செய்தல் கூடும்?, விடும் = அதை விட்டொழிக, எ - று.

இதுமுதல் நான்கு பாட்டுகள் அலர்க்குறி யுரைத்தல்.

98. கல்விகரை கண்டகும்ப கம்பன்வெங்க டேசுரெட்ட
வில்விசயன் றென்னிளசை வெற்பிடத்திற்—சொல்வதென
கட்செவியு மம்புலியுங் கங்கையுமோர் வெம்புலியிற்
பட்சமுற வைத்தார் பதி.

உரை :—கல்வி கரை கண்ட கும்பன் = தமிழ்க்கடலைக் கரை கண்டுணர்ந்த அகத்தியனையும், கம்பன் = கம்பனையும் போன்ற, வெங்கடேசர எட்ட வில் விசயன் = வெங்கடேசர எட்டனுகிய வில் வெற்றியாளன், தென் இளசை வெற்பிடத்தில் = அழகிய இளசைப்பதியின் மலையகத்தே, பதி = தலைவர், கட்செவியும் = அரவும் (பாம்பும்), அம்புலியும் = இந்துவும் (சந்திரனும்), கங்கையும் = நீரும், (ஆகிய மூன்றும் சேர்ந்த அரவிந்தம் தாமரை என்பதை) ஓர் வெம்புலியில் = ஒரு வேங்கைமீது, பட்சமுற வைத்தார் = பிரியப்படும்படி வைத்தார், (வேங்கை மரத்தின்மேல் தாமரைப்பூ காணப்பட்டது) இது திணை மயக்கம், எ - று.

99. சங்கநிதி யென்னத் தழைத்தவெங்க டேசுரெட்ட
சிங்க மிளசைச் செழுங்கிரியில்—அங்குகண்டேன்
மானிலத்தை முற்றுமொரு வள்ளனடு வாதியந்தந்
தானிருப்ப தேந்திநிற்கத் தான்.

உரை :—சங்கநிதி யென்னத் தழைத்த வெங்கடேசர எட்ட = விண்ணுலகிலுள்ள (நினைத்தது தரத்தக்க) சங்கு போன்ற நிதியை ஒத்த, செழிப்புடைய வெங்கடேசர எட்ட சிங்கம் இளசைச் செழும் கிரியில் = சிங்கம்போன்ற மன்னனது இளசைப்பதியின் வளமான மலையில், மால் நிலத்தை = மாலுக்குரிய நிலமாகிய முல்லையை, முற்றும் = முழுதும், ஒரு வள்ளல் நடு = பாரி என்ற சொல்லின் நடுவில், ஆதியந்தம் = ஆதி என்ற சொல்லின் முடி வெழுத்தாகிய—தி, தானிருப்பது = பாதிரி என்பது, வந்தி நிற்கத்தான் அங்கு கணடேன் = தாங்கி நிற்பதை அவ்விடத்திற் கண்டேன், (முல்லை மலரைப் பாதிரி மரம் தாங்கி நின்றது). எ - று.

100. தாலமுற்றும் வாழ்த்துமிந்த்ர தாருவெங்க டேசுரெட்ட
வாலகிருஷ்ண விம்பன் மணிவரையின்—மேலு
மருக்கமழு நன்மா மணியுமொரு சந்தி
இருக்கவிற் கண்டுகொண்டே னின்று.

உரை :—தாலமுற்றும் வாழ்த்தும் இந்திரதாரு வெங்கடேசர எட்ட= பூமி முழுவதும் போற்றுகின்ற கற்பக மரம்போன்ற வெங்கடேசர எட்ட னுகிய, வால கிருஷ்ண விம்பன்=இளங் கண்ணன்போன்ற வடிவினை யுடையவனது, மணி வரையின் மேலும்=அழகிய மலைமீது, மருக்கமழும்= வாசனைவீசும், கல் மா மனையும்=திருமகளின் கல்ல வீடாகிய தாமரையும், ஒரு சந்தி இருக்க=ஒரு மூங்கிலில் இருப்பதை, இன்று அதிற் கண்டுகொண் டேன்=இன்றைக்கு அவ்விடத்திற் பார்க்கலானேன், எ-று.

101. தங்கள்குல தீபமெனத் தாரணியோர் கொண்டாடும்
எங்கள்வெங்க டேசுரெட்ட மேந்த்ரன்வெற் பில்—செங்கணரி
உண்ட துடனவனின் றூதினதுஞ் சேர்ந்தவன்பேர்
கொண்டதின்மேற் கண்டேன் குறி.

உரை :—தங்கள் குலதீபம் என்னத் தாரணியோர் கொண்டாடும்=தங்க ளுடைய மரபின் ஒளியென்று ஞானிலத்தார் போற்றுகின்ற எங்கள் வெங்க டேசர எட்ட வேந்தன், வெற்பில் = மலையில், செங்கண் அரி = சிவந்த கண்ணையுடைய திருமால், உண்ட்துடன்=உண்டதாகிய பூமியைக் குறிக்கும் து என்பதுடன், அவன் நின்று ஊதினதும் = அவன் ஊதின சங்கைக் குறிக்கும் வளை என்பதும் சேர்ந்து குவளை என்பது, அவ்பேர் கொண்ட தின்மேல்=வின்டுவின்மேல் அதாவது மூங்கிலின்மேல், கண்டேன் குறி= ஒரு அறிகுறியா யிருப்பதைப் பார்த்தேன், (மூங்கிலின்மேற் குவளையைப் பார்த்தேன்) எ - று.

செவிலிக் கூற்று.

102. அழகிசக்க தேவிக் கனந்தம்பணி யல்குல்
விழையுங் குமாரவெட்ட வேந்தே—பழகுமொரு
கூந்தல்ல் கொள்ளகடரல் கூறுசொன்னேன் கனகம்
ஏந்துதன மாந்தளிர்மெய் யாம்.

உரை :—விழையும் குமார எட்ட வேந்தே = யாவரும் விரும்பத்தக்க குமார எட்ட மன்னனே! பழகு மொழி = படிந்த சொல்லுடைய, அழகி= அழகானவளது, சக்கு=கண், எவ=அம்புபோன்றது, அல்குல்=கடிதட மானது, அந்தம் பணி=அழகிய பாம்புப் படம் போன்றது, கூந்தல் அல்= குழலானது இருள்போன்றது, கொல் அடு ஆல்=வயிறு ஆலிலைபோன் றது, மெய் மாந்தளிர் ஆம்=மேனியானது மாமரத்தின் இல இலைபோன் றது, எ-று.

வெங்கடேசரெட்டம பூபதியிடம் வறுமையை யுரைத்தல்.

103. ஏகாம் பரரிடப்பே ரில்லாத தாழ்வுசொல்லப்
போகாது வேறு புகலிலையே—பாகாந்த
சந்த மதுரத் தமிழுக் ககத்யனென
வந்தவெங்க டேசுரெட்ட மா.

உரை :—பாகு ஊர்ந்த சந்த மதுரத் தமிழுக்கு அரசன் என = சர்க்கரைப் பாகுபோன்ற சுவையுடைய ஓசை இனிமை மிக்க தமிழைப் பரிகாசப்பதற்கு அகத்தியர் போல, வந்த வெங்கடேசுர எட்ட மா = எதிர்ப் பார், இடப்பேர் = கஞ்சி, இல்லாத தாழ்வு சொல்லப்போகாது = இல்லாத இழிவினை வெளியே சொல்லக் கூடாது (என்றவும்), கேடு புகழ் இல்லேயே = உன்னைத் தவிர வேறு ஆதரவு இல்லேயே, எ-று.

இதுவுமது.

104 தீரைக்கலைக்குத் தையலென்றே யிருபத் தேழென்
னரைக்கலைக் குத்தையல னேகம்—உரைக்கவொண்ணு
தந்தம்ப்ர சண்டா வரசர்சிரோ ரத்னமென
வந்தவெங்க டேசுரெட்ட மா.

உரை :—ப்ரசண்டா = உக்கிரமானவனே! அரச சிரோரத்னம் என வந்த = மன்னர் சிகாமணியாய் உதித்த, வெங்கடேசுர எட்ட மா = ... திரைக்கலைக்கு = அலையுடைய கடலிற் பிறந்த கலையுடைய சந்திரனுக்கு, தையல் இருபத்தேழு என்றும் = எப்போதும் மனைவியர் இருப்பத்தேழு (நட்சத்திரங்களாம்), என் அரைக் கலை = என் இடுப்பிலுள்ள ஆடைக்கு, தையல் அநேகம் = தைக்கப்பட்ட இடங்கள் பல, அந்தம் உரைக்க ஒண் ணுது = அதன் முடிவான தொகை எண்ணிக் கூறமுடியாது, எ-று.

செவிலி தன் தலைவியைத் தேற்றுவித்தல்.

105. சென்றலந்தார் சேர்முத் திருளப்ப பூபதிபான்
மன்றலந்தார் வாங்கி வருமளவும்—குன்றமுலை
ஏழா யிரம்பண்ணை யில்லுடம்பு வாடாதே
ஏழா யிரம்பண்ணை யில்.

உரை :—அலந்தார் சென்று சேர் முத்திருளப்ப பூபதி பால் = (தரித் திரத்தால்) துன்பப்பட்டவர்கள் போய்ச் சேரக்கூடிய முத்திருளப்ப மன்னனிடம், மன்றல் அம் தார் வாங்கி வரும் அளவும் = வாசனை வீசுகின்ற அழகிய பூமாலையை வாங்கி வருகிறவரையும், அம்பு அண்ணையில் = மன்மத பாணம் அண்டி வரும்போது, உடம்பு வாடாதே = மேனி தளர்வடையாது, ஏழாயிரம் பண்ணையில் = ஏழாயிரம் பண்ணையூரில், குன்றமுலை யேழாய் இரு = மலைபோன்ற முலையுடைய பெண்ணே இருப்பாயாக, எ-று.

கற்ற யிரங்கல்.

106. கூன்கலைநி லாவின் குளிர்ச்சிபொறுக் காதுகல்வி
மான்கலையில் லாமன் மருளுமா—தேன்கலையச்
சந்தநறுங் காவின்மந்தி தாவு மிளசைநகர்
வந்தவெங்க டேசுரெட்ட மா.

உரை :—மா தேன் கலே சுற்ற மறும் காவில்=பெரிய தேன் கூடுகள் உள்ள அழகிய வாசனே வீசுஞ் சோலையில், மற்றி தாவும்=குரங்குகள் பாய்கின்ற, இளசை நகர் வந்த = இளசைப் பதியிற் பிறந்த, வெற்றிவேலை எட்டமா=....., கூன்கலே நிலாவின்=வளைந்த பிறையையுடைய சந்திரனது, குளிர்ச்சி பொறுக்காது=குளிர்ச்சியாய்த் தோன்றும் இவ்விப்பத்தைத் தாங்கமாட்டாமல், கல்விமான்=கல்வியுடையவளாகிய என் பெண், கலேயில் ஏமல் மருளும்=உடையில்லாமல் எங்குமிருள், எ - று.

செவிலிக் கூற்று.

107. நீகா விதுரா நெருப்பா மிவட்குவிலக்
காகா விதுரா கதம்புரிவார் கன்னியர்கள்
வாகா வதுரா மராம்மரதி மாரவச்ர
தேகா விதுரா திருமலேவே லேந்திரனே.

உரை :—வாகா=புயவலிமை யுடையவனே, விதராமா=இராமச் சந்திரன் போன்றவனே! ரதிமரர=ரதியின் கணவனுகிய மன்மதன் போன்றவனே, வச்ர தேகா=வயிரமான உடம்புடையவனே, விதுரா=விதுரனைப் போன்றவனே, திருமலே வேலேந்திரனே = திருமலே வேலப்பருக்கு செல்வனே, இவட்கு=இந்தப் பெண்ணுக்கு, கன்னியர்=பாங்கிமார், ஆடு ஆவி தாராகதம் புரிவார்=இருக்கின்ற உயிர்களுக் கேடு செய்வார்கள், ராவிது=இரவிலுதிக்குஞ் சந்திரன், நெருப்பாம்=அக்கினிபோலத் துன்பந் தருவதாகும், (ஆதலால்) விலக்கு=அதனே நீக்கி, நீ கா=நீ காப்பாற்றியருளுவாயாக, எ - று.

நாகூர் முத்துப் புலவர்

பாடியது

கற்குபிரங்கள்.

1. தனதனக நடாத்தி யடர்ந்தபூச்
சரத்தைவாங்கித் தனத்திற் நெடுக்கத்
தனதனக தவிலான்மின்போன் மெய்ப
சந்தசந்து சந்தே சொலென்றுண்மினுள்
தனதன கணத்தொம்மெனப் பையினிர்த்
தம்புரிந்த சரண சரோருகா
தனதனக வனரும்ப்ர தாபனித்
தாரனே வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—தனதனு கணத்தொம்மென = தனதனு கணத்தொம் என்ற ஒலி யுண்டாகும்படி, பையில் நிர்த்தம் புரிந்த சாண சரோருகா = காளிங்க னென்னும் நாகத்தின் படத்தின்மீது கூத்தியற்றிய திருவடித் தாமரையை யுடைய கண்ணன் அமிசமானவனே! தனதனுக வளரும் பிரதாப வித் தாரனே = குபேரனுக வளர்கின்ற விரிந்த கீர்த்தி யுடையவனே! வெங்க டேசுர எட்டேந்திரனே = வெங்கடேசு ரெட்டப்பெருஞ் செல்வனே! தனது அல் ஆகம் நடாத்தி = இருளாகிய தனது யானையைச் செலுத்தி, அடர்ந்த பூ சரத்தை வாங்கி = நெருங்கிய மலராலாகிய அம்பை எடுத்து, தனத்தில் தொடுக்க = முலைமீது எய்வதற்கு, மதனது அனுகத வில்லா = மதனது கையில் வரப்போகிற கரும்பு வில் காரணமாக, மின்போல் மெய் பசந்து = மின்னற் கொடிபோன்ற உடம்பு பசலை படரப்பெற்று, அசந்து = தளர்ந்து, மினுள் = என் மகளானவள், சந்தே சொல் என்றுள் = னது அனுப்பு என்றுள், எ - று.

நற்று யிரங்கல்.

2. கனகனங்கம் பிளந்தளிர் கொந்தளகங்
களந்திருக் காயமின் மேன்மற்ற
கனகனங்கம் பிளந்தலை கண்டுகொங்
கைக்குளேவி னன்சேராத தென்கொலோ
கனகனங் கம்பளகோத் திராவருட்
காதலன்றனைக் காத்தடிமை கொண்ட
கனகனங் கம்பிளந்த நரசிங்க
காகுத்தா வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—கனகனம் = மிகுந்த பெருமையை யுடைய, கம்பள கோத் திரா = கம்பள நாய்க்க குடியிற் பிறந்தவனே! அருள் காதல்தனை காத்து அடிமைகொண்டு = திருவருளுக்குப் பாத்திரனை குழந்தையாகிய பிரகலா தனைக் காப்பாற்றித் தனது தொண்டனுகச் சேர்த்து, கனகன் அங்கம் பிளந்த நரசிங்கா = இரணியனது உடம்பைக் கீறிக் கொன்ற நரசிங்க அமிசமானவனே! காகுத்தா = இராமனமிச மானவனே! வெங்கடேசா எட்டேந்திரனே = ..., கனகனம் கம்பு = கனத்த மேகமும் சங்கும் கலந்தாற் போன்ற, கொந்து அளகம் = பூங்கொத்துக்களை யுடைய கூந்தலும், இளந் தளிர் கனம் = இளந்தளிர் போன்ற கழுத்தும் உடைய, திருக்காயம் மின் மேல் = அழகிய மேனியை யுடைய பெண்ணின்மீது, அகனகன் = மனத்தைப் பிறப்பிடமாக வுடைய காமன், இளந்தலை கண்டு = இவளது எளிய தன்மை யைப் பார்த்து, அங்கு அம்பு கொங்கைக்குள் எவினன் = அவ்விடத்தில் தனது கணையை மூலையினூடு செலுத்தினன், சோராத தென்கொலோ = ஈ இவளை அணையாதது எதனுல், எ - று.

வெறி விலக்கல்.

3. கட்கரிக்குமதனனவர்செயுங்காயந்தேர்ந்த
னரோவளவன்னைமார்
கட்கரிக்குமரிவாழ்கவேலன்முன்கட்டினுரதி
லென்னுமொன்னூர்க்குவி
கட்கரிக்குருவிக்குன்றுகண்ணருள்கர்த்தர்
தாளிணையைத்துதிநேமகா
கடகரிக்குநிருபாவிளசைவாழ்கருணைமால்
வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

உரை :—ஒன்னூர்க்கு விகட = விரோதிகளுக்கு எதிர்ப்புடையவனே! கரிக்குருவிக்கு அன்று கண்ணருள் கர்த்தர் = கருங்குருவிக்கு அக்காலத்தில் கிருபாகடாட்சம் வைத்த முதல்வனது, தாளிணையைத் துதி நேம = திருவடி யிரண்டையும் வழிபடுகின்ற நேமமுடையவனே! கடகரிக்கு நிருபா = மதயானைக்குத் தலைவனே! இளசைவாழ் கருணைமால் = இளசைப்பதியில் வசிக்கின்ற அருளும் பெருமையுமுடைய, வெங்கடேசுர எட்டேந்திரனே = ..., கடகர் இக்கு மதனனவர் செயும் காயந்து எய்ந்தனரோ = கடகமணிந்த பெண்கள் மன்மதனுண்டாக்குகின்ற புண்ணியல்பை அறிந்தார்களோ, வளவு அன்னைமார்கள் = வீட்டிலே இருக்கின்ற தாய்மார்கள், தகர் = ஆட்டினை, இக்குமரி வாழ = இக் கன்னியானவள் பிழைக்கும்படியாக, வேலன் முன் கட்டினுர் = வெறியாட்டு வேலன் சந்நிதியிற் கட்டி வைத்தார்கள், அது என்னும் = அதனால் என்ன நன்மை, எ - று.

செவிலி பிரங்கல்.

4. தந்தப்பாதுகடீர்மருங்கம்பிரு தாரையாமிந்தமாதைமின்னுர்சந்தம்
தப்பாதுகனற்றவரம்புவே டாளெளிக்கச்சரமுல்லைதாசரதி [தந்
தந்தப்பாதுகவிப்பட்டம்வாலியைத் தாக்கியேயவன்றம்பிக்குத்தந்து
தந்தப்பாதுகைதம்பிக்குநல்கியதாருவேவெங்கடேசுரெட்டேந்த்ரனே

உரை :—சரதம் தப்பாது = சொன்னசொற் றவறாம லிருக்கும் பொருட்டு, கவிப்பட்டம் வாலியைத் தாக்கியே அவன் தம்பிக்குத் தந்து = வாலியை எய்து கொன்று வானர மன்னன் என்னும் பட்டத்தை அவன் தம்பியாகிய சுக்கிரீவனுக்குக் கொடுத்து, தம் தந் பாதுகை தம்பிக்கு நல்கிய = தனது தந்தத்தாற் செய்த திருவடிச்சுவடைத் தம்பியாகிய பரத னுக்குக் கொடுத்த, தாருவே = கற்பக மரம்போன்ற வள்ளலே! வெங்க டேசுர எட்டேந்திரனே = ..., தகள் தீர் மருங்கு = குற்றமில்லாத இடை யும், தந்து அம்பு இரு தாரையாம் = தூலிழை போன்ற கண்ணீர் பெரிய தாரையாக விழப்பெறுதலு முடைய, இந்த மாதை = இந்தப் பெண்ணுக்கு,

மின்னார்=பாங்கிமார், சந்தம் தந்து அப்பாது கனற்றுவர்=சந்தனத்தைக் கொடுத்து தடவச் செய்யாது வெப்பப் படுத்துகிறார்கள், அம்புவேள் தான் ஒளிக்க=அம்பையுடைய மன்மதன் ஒளிக்கும்படியாக, அப்பா=அப்பனே! சாமுல்லை தா=முல்லைமாலை யீந்தருள்வாயாக, எ - று.

நற்குயிரங்கள்.

5. கனதனந்தன தாவலிலைத்தக் களிக்குமாலையோடின்னிலும்
சினதனந்தனமாற்கூறரிதரிதென்னுமல்குற் றிருவையணைகுவாய்
மனதனந்தனமாடைதமிழ்பகர் வாணர்க்கீந்தமிழ்ப்பரனே [ரனே.
தனதனந்தனவென்றுடுவேர்க்குடங்கி வாழ்வெங்கடேசுரெட்டேந்த்

உரை:—தமிழ் பகர் வாணர்க்கு=தமிழ்ப் பாடல்கள் கூறுகின்ற புலவர்க்கு, மனது அனந்தம்=மனக்கவலை கீழ்தம்படியாக, அனம் ஆடை சாந்து மகிழும் பிரதாபனே=உண்வும் உடையும் அளித்துச் சந்தோஷப் படுகின்ற கீர்த்தி யுடையவனே! தினதினந்தமென்று ஆடுவோர்=தனதன வென்ற தாளியோடு நடனஞ் செய்கின்ற பெருமானுடைய, அருள் தங்கி வாழ்=திருவருள் கிடைக்கப்பெற்று வாழ்கின்ற, வெங்கடேசுர எட்டேந்திரனே=...., அந்த கனிக்கு=அந்தச் சிறு பெண்ணுக்கு, கனதனம்=கனத்த முலையினது, தனது ஆவலினால் மா மலையாம்=தனது ஆசைப் பாட்டினால் பெரிய மலைபோல் பருத்திருக்கிறது, இடை மின்னிலும் சினது=இடுப்பானது மின்னலைப் பார்க்கிலும் நுட்பமானது, அனந்தன் நம்மால் கூறு அரிது அரிது என்னும்=ஆதிசேடனும் நம்மால் சொல்ல அரியதாகு மென்று சொல்லக்கூடிய, அல்குல் திருவை அணைகுவாய்=கடி தடத்தையுடைய இலக்குமி போன்றவளைச் சேருவாயாக, எ - று.

தனிவி பிரங்கள்.

6. இந்தக்கா வனங்கற்கோர் கவிகையா
வீருந்துகாந் துதியாரென்ன செய்குவேன்
பந்தக்கா வண்மம்ம கண்டப்பியேப்
படியங்கே குவன்பாங்கியென்றுள் கலி
சிந்தக்கா வனசத் திரசோமதி
யாகிசற் குணபரிக மனேகரா
சந்தக்கா வனஞ்சூழ் ளசைப்பதீத்
தானமால் வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை:—கலி சிந்த=வறுமை தொலையும்படியாக, கா அன் சந்திரசோலையும் அன்னசத்திரங்களும் அமைத்த, சோம தியாக=சந்திரனைப் போன்ற கொடையாளியே! சற்குண பாக மனேகரா=நல்ல பண்புடைய

பக்குவமான மனோரம்மிய முலையுவனே! சந்தத் தாவுனம் சூழ் இளைப்பதித் தானமால்=சந்தனச் சோலைகள் சூழ்ந்த இளை தருவில் வாழ்கின்ற ஈகைக் குரியவனே! வெங்கடேசர எட்டேத்திரனே=...., அக்கா=அக்காளே, இந்து=சந்திரன், அனங்கற்கு ஓர் கலிகையாய் இருந்த=மன்மதனுக்கு ஓர் தூதுபோலிருந்து, காந்துது=தெதுப்புகிறது, யான் என்ன செய்கு வேன்=யானென்ன செய்யக்கூடும், பத்தல் காவல் நம் அம்மை=கட்டுப் பாடான காவலா யிருக்கின்ற நம்முடைய தாயின், கண் தப்பி ஏப்படி அங்கே வருவன் பாங்கி என்றாள்=கண்ணுக்குத் தப்பிப்போய் தோழியே நான் அங்கே எப்படிச் சேருவேனென்று சொன்னாள், எ - று.

செவிலி கூற்று.

7. இருபந் தந்தமெனும் பொற்பயோதர
மென்னசொல் லரதிக்கெண் மடங்கிவள்
சொருபந் தந்தச்சிவிகையில் வந்தனர்
சொந்த மாகவுவந்தனை வாய்சுடர்
தருபந் தந்தமனியவெற் புப்பெற்றித்தாய்த்
துலங்கித் தனைநம்புவோர்க் கெலாம்
திருபந் தந்தமனதின்படிக் கருணேசனே
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

உரை:—கூடர் தரு பந்தம் தமனிய வெற்பு பெற்றிருப்=ஒளியுள்ள தேவர்த்தி பொன்மலை யென்னும் இயல்பினளும், தனை நம்புவோர்க்கெலாம்=தன்னை நம்பி வருகின்றவர்களுக்கெல்லாம், தந்தம் மனதின்படி திருபம் அருள் நேசனே=அவரவர்கள் விருப்பதின்படி கருத்தைக் குறிக்கும் ஏழுத்துக் கொடுத்தருளும் அபிமான முள்ளவனே! வெங்கடேசர எட்டேத் திரனே=...., அந்தமெனும் பொற்பயோதரம் இருபந்து=அழகின் வழி வென்று சொல்லும்படியான பொன்னிறமான முலைகள் இரண்டு பந்துகள் போல் இருப்பன, என்ன சொல்ல=அவளழகை யென்னென்று கூறுவது, ரதிக்கு ஏண்மடங்கு இவள் சொருபம்=இவளுடைய வடிவழகு ரதிதேவி யின் அழகிலும் எட்டுப்பங்கு சிறந்தது, தந்தச் சிவிகையில் வந்தனர்=யானைத் தந்தத்தால் செய்த பல்லக்கில் வந்தான், சொந்தமாக வந்து அனைவாய்=உன் சொந்தப் பொருளாகப் பாராட்டி மகிழ்ந்து கூடுவாயாக, எ - று.

தோழி கூறல்

8. தரகலாதனங்கன்சமர்க்கோலஞ்ச
மைந்துபாணமெய்தான்பூவலவர
கரகலாதனகும்பம்பொறுக்குமா
தன்னியேயெனைத்தான்பாரென்னுள்புல

வரகலாதனன்மார்க்கசிலாக்கிய
மாவசந்ததியாகவரோதயா
பிரகலாதனன்புள்ளத்திருந்தருள்
பெருக்குமால்வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

உரை :—புலவர் அகலாத நன்மார்க்க = கல்விமான்கள் நீங்காது இருக்கப் பெறும் நல்வழியில் நிற்பவனே ! சிலாக்கிய மா வசந்த = உயர்வுடைய மன்மதனே ! தியாக = கொடையாளியே ! வரோதயா = வரத்தாற் பிறந்தவனே ! பிரகலாதனன் உள்ளத்திருந்து அருள் பெருக்குமால் = பிரகலாதனுடைய மனத்திற் கோயில்கொண்டு அருளொளியைப் பெருக்குகின்ற விண்டுவினம்சமானவனே ! வெங்கடேசுர எட்டேந்திரனே = ..., தரு அகலாது = பூமாங்களை விட்டு நீங்காது, அனங்கன் சமர்க்கோலம் சமைத்து பாணம் எய்தான் = மன்மதன் போர்க்கோலங் கொண்டு அம்பு விடுத்தான், பூவல அரகா கலா = அந்த அம்புகள் மலரல்ல கற்களே, தனம் கும்பம் பொறுக்கு மா கண்ணியே எனைக் கண்பார் என்றுள் = அவற்றைக் குடம் போன்ற கொங்கைகள் தாங்க வல்லனவா ? பாங்கியே என்மேல் தயவு வையென்று சொன்னான், எ - று.

செவிலி கூறல்.

9. மாதமந்திரணம்போலிருந்ததை மலைக்கொப்பாகவளர்த்ததுமாரன்
சூதமந்திரவோருகமாமதி சேர்ந்துதானிந்தவேந்திழைவாடுமோ [கைச்
போதமந்திரசக்கினியைக்கவ்விப் பொழிலிற்றுவும்புகழ்க்கழுகாசல
வேதமந்திரமெய்க்குகனைத்தொழும் வெங்கடேசுரவெட்டமதீரனே.

உரை :—மந்தி போத ரசக்கினியைக் கவ்விப் பொழிலில் தாவும் = குரங்கானது இனிய சுவையுள்ள பழங்களைப் போதுமானபடி வாயாற் கவ்விக் கொண்டு சோலைகளிற் பாய்கின்ற, புகழ்க் கழுகாசல = கீர்த்தி மிக்க கழுகு மலையிலுள்ள, வேதமந்திர மெய்க்குகனைத் தொழும் = மறைமொழிப் பொருளாயுள்ள முருகனை வழிபடுகின்ற, வெங்கடேசுர எட்டேந்திரனே = ..., மா தமம் திரணம்போல் இருந்ததை = பெரிய இருளானது துரும்புபோலிருந்ததை மலைபோலப் பெரிதாக்கியது யாதெனில், மாரன் சூதம் = மன்மதன் கையிலுள்ள மாம்பூவாகும், அன்று இரவு = அந்த இராத்திரியானது, ஓர் யுகமாம் = ஒரு ஊழிபோல நீண்டு தோன்றிற்று, மதி சோர்ந்ததுதான் இந்த வந்திழை வாடுமோ = இந்த மாதானவள் அறிவிழந்து தளர்வானோ, எ - று.

தலைவி கூற்று.

10. வருதுகட்டுமுட்டெல்லாங்கடந்துபூ
வாளிவேள்கயவாழிமுரசம
திருதுகட்டுவசனமலமலைத்
தென்றலாங்கொடுந்தேரைநடாத்தியே

பொருதுகட்டுவதனத்திற்சாடவே
பூத்தொடுத்தனன்சந்திரகாவிடால்
விருதுகட்டுமதிபாவிளைசைவாழ்
வெங்கடேசுரெட்டேந்த்ரவசீகரனே.

உரை :—சந்திர காவி டால் விருது கட்டு மதிபா = சந்திரகாவி நிற முடைய ஒளி வீசும் கொடி கட்டிய பூபதியே! இளைசை வாழ் = இளைசைப் பதியில் வாழ்கின்ற, வெங்கடேசுர எட்டேந்திரனே = ..., வசீகரனே = வசீகர முடையவனே! கட்டுமுட்டெல்லாம் கடந்து பூவாளி வருது = எல்லாத் தடைகளையும் கடந்து மலரம்பானது வருகின்றது, வேள் கப்பம் ஆழி முரசம் அதிருது = ஆழமான கடலாகிய மன்மதனுடைய பேரிகை யானது முழங்குகிறது, கட்டு வசனமல்ல = இது பூனைந்து சொல்லும் சொல்லல்ல, மலைத் தென்றலாம் கொடும் தேரை நடாத்தியே = பெரிய மலை யிற் பிறந்த தென்றலாகிய வலிந்ததேரைச் செலுத்தி; பொருது = சண்டை யிட்டுக்கொண்டு, கண் தூவ தனத்தில் சாடவே = காம்புடையஇரண்டு மலை களிற் பதியும்படியாக, பூத் தொடுத்தனன் = மலரம்பு தொடுத்தனன், எ - று.

தோழி கூறல்.

11. தந்துகந்துகந்தாகந்தணிக்குநீர்த் தடமருங்குதனமல்குற்றையலே
முந்துகந்தாகணப்போழ்திலுன் மோகத்தூதுமொழிவனென்றேவந்தே
வந்துகந்துகந்தாகழுகாசலவாசகாவென வாழ்த்துமுன்பாகட்டுங்[ன்]
கந்துகந்துகந்தாகப்புரட்டுங் கடாசலாவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

உரை :—வந்து உகந்து = விரும்பிப் போய், கந்தா கழுகாசல வாசா என வாழ்த்தும் = கந்தனே! கழுகுமலையில் வாழும் பெருமானே! என்று துதிக்கின்ற, முன்பா = முதலாளியே! கட்டும் கந்து = தான் கட்டப்பட்ட தறியானது, கந்து கந்தாக = துண்டு துண்டாகும்படி, புரட்டும் கடாசலா = பிடுங்கி யெறிகின்ற மதமலைபோன்ற யானையை யுடையவனே! வெங்க டேசுர எட்டேந்திரனே = ..., தந்து மருங்கு = நூலிழை இடையாகவும், கந்துகம் தனம் = கந்து முலையாகவும் தாகம் தணிக்கும் நீர்த்தடம் அல்குல் = நல்ல தண்ணீர்ப் பொய்கை கடிதடமாகவுமுடைய, தையல் = மாதானவள், முந்து உகந்து = முன்னுக ஆசைப்படுதலால், கந்து ஆ = அதற்கு ஆதாவாக, கணப்பொழுதில் = கணநேரத்தில், உன் மோகத் தூது மொழிவன் என்றே வந்தேன் = உன்பால் அவளுக்குள்ள மையலைக் கூறுவதற்காகத் தூது வந்தேன், எ - று.

தலைவி பிரங்கல்.

12. நம்பரக்கரையானனராகிய
நாதர்முன்புநமைவேண்டிச்செல்கவென்றும்
பரக்கரையாயனுப்பத்தனதுருவிலா
மதன்யுத்தத்துக்கென்செய்வேன்

அம்பரக்கரையான திற்பரளயமன்றி
றங்கியடர்த்திலங்காபுரி
வம்பரக்கரையாசுதத்தால்வென்ற
மாதவாவெங்கடேசுரெட்டேந்திரனே.

உரை :—அம்பரக்கரை யானதில் பரளயம் அன்று இறங்கி = கடற்கரை யில் சேனையை அக்காலத்தில் இறங்கும்படி செய்து, இலங்காபுரி அடர்த்து = இலங்கைப் பட்டணத்தைத் தாக்கி, வம்பு அரக்கரை = பொல்லாத இராக்க தர்களை, ஆசுகத்தால் வென்ற மாதவா = அம்பினால் தோற்கடித்த விண்டு வின் அம்சமானவனே! வெங்கடேச எட்டேந்திரனே = வேங்கடேசா எட் டேந்திரனே! கம்பர் = ஏகாம்பரும், அக்கர் = நெற்றிக் கண்ணரும், ஐயானனர் ஆகிய = ஐந்து முகம் உடையவருமாகிய, கடவுள் முன்பு = பரமசிவன் சந்நிதி யில், நம்மை வேண்டிச் செல்க என்று = எங்கள் நன்மைக்காகப் போவாயாக என்று, உம்பர் = தேவர்கள், அக்கரையாய் அனுப்ப = ஆத்திரத்தோடு அனுப்பவும், தனது உருவிலா மதன் = போய்த் தன் உருவை இழந்த மன் மதனுடைய, யுத்தத்துக்கு என் செய்வேன் = போரை எதிர்ப்பதற்கு நான் என்ன செய்யக்கூடும், எ - று.

13. அத்தன் கண்ணுக்குத் தோற்றருன்றன் மாதலா
லரிபிர்ம்மாதிக்குந் தோற்ற னவன்மகா
எத்தன் மாமனே யென்றுந் தனையனென்
றேசொல்வோன்கணே யெய்யாம லெய்கிருன்
கத்தன் பூவுலகேழையு மேயொரு
கவிகைநீழலிற் காத்தருளும் பரி
சுத்தன் மன்னுங் குமராவெட் டேந்திரன்
சோதராவெங்க டேசுரெட் டேந்திரனே.

உரை :—கத்தன் = எசமானனாய், பூவுலகேழையுமே யொரு கவிதை நீழலிற் காத்தருளும் = பூவின் வடிவமுடைய ஏழு உலகங்களையும் ஒரு குடை நிழலில் வைத்துக் காப்பாற்றி யருளுகின்ற, பரிசுத்த மன்னன் குமார வெட்டேந்திரன் சோதரா = தூய ஒழுக்க நிலைபெற்ற குமார எட் டேந்திரனது உடன் பிறந்தவனே, வெங்கடேசுர எட்டேந்திரனே = ..., அத்தன் கண்ணுக்குத் தோற்றுன் = சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணி னால் அழிந்த மன்மதன், தன் மாதலால் = தன்னுடைய மனையாளாகிய ரதிக் கன்றி, அரிபிரமாதிக்கும் தோற்றுன் = திருமால் அயன் முதலிய தேவர் களுக்கும் தோன்றுதவன், அவன் மகா எத்தன் = அவன் பெரிய ஏமாற்றக் காரன், மாமனே = இலக்குமியின் தலைவனுகிய திருமாலே, என்றும் தன் அய்ய னென்றே சொல்லுவோன் = எப்போதும் தன் தகப்பன் என்றே கூறுகின்ற வன், கணையெய்யாமல் எய்கிறுன் = இளைக்காமல் அம்பு செலுத்துகிறுன், எ-று.

தொழி னது.

14. உபையராசியை யூரும்பி ரான்வள
ரோங்கனேருந் தனத்தாரு னேமகீர்ந்
துபையராசிய மரிய்க்கூட்டி வாவென்று
சொல்லியென்னையுன் பால்விடுத் தாள்பொன்னர்
சபையராசிற் சொரூபாவென் றீசரைத்
தன்கையாற்றெழுந் துங்கன்கை வீடணற்
கபையராசி யருள்வல்லவாபுக ழாகரா
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

உரை :—பொன்னர் சபையரா=பொன்னம்பலத்தில் நடனம் செய் கின்ற அரனே, சிற்சொரூப=ஞானவடிவனே, என்று=என்று துதித்து, ஈசரைத் தன் கையால் தொழுதுங்கன்=இறைவனைத் தன்னுடைய கையினால் வணங்குகின்ற சிறப்புடையோன், கைவீடணற்கு அபையராசி அருள் வல்லவா=கையினால் விபீடணனுக்கு அடைக்கலமாக இணக்கங் காட்டி அருள் செய்யக்கூடிய திறமையுடையவனே, புகழாகரா=கீர்த்திக்கு இருப் பிடமானவனே, வெங்கடேசுர எட்டேந்திரனே=....., உபையராசியை ஊரும் பிரான்=இரண்டாவது ராசியாகிய காளையை வாகனமாக உடைய சிவபெருமானது, வளர் ஒங்கல் சேரும் தனத்தாள்=உயர்ந்த மலையை ஒத்த முலையை உடையவள், உனை மகிழ்ந்து பையராசியமாய் கூட்டி வா என்று சொல்லி என்னை உன்பால் விடுத்தாள்=உன்னிடத்தில் உவகை கொண்டு மெதுவாக அந்தரங்கமாய் உன்னை அழைத்து வரும்படி சொல்லி என்னை உன்னிடம் அனுப்பினாள், எ - று.

தார் வேண்டல்.

15. சங்கதாதரளங்கால்கமுகதாதன்
கழுத்திணையென்றுட்குன்றுரின்று
துங்கதாதரத்தாமதஞ்செய்யிலித்தோகை
தேசத்தைதமாரன்வருத்துவான்
அங்கதாதரநீதூதுசெல்லென்ற
வார்ியாரணவிரியப்ரதாபனே
வெங்கதாதரவீமாசெயதரா
வெங்கடேசுரவெட்டமபூபனே.

உரை :—நீ தூது செல் என்ற ஆரியா=நீ தூது போக வேண்டு மென்று (பாண்டவர்களால் வேண்டப்பெற்ற) மேலோனே, ரணவீரியப் பிரதாபனே=போரில் வீரன் என்ற கீர்த்திக்கிய உடையவனே, வெங்க தாதர வீமா=கொடிய தண்டாயுதத்தை உடைய வீமன் போன்றவனே,

ஜெயதரா = வெற்றி பூண்டவனே, வெங்கடேசர எட்ட பூபனே = ..., தன் கழுத்துக்கு இணை = தன் கழுத்துக்கு ஒப்பானது, சங்கதர = சங்கு ஆகுமா அல்லது, தாளங்கால் கமுகு அதர = முத்துச் சொரிகின்ற கமுகா, என்றூட்கு = என்று சொல்லத்தக்க அழகுடையவளுக்கு, துங்க = சிறந்தவனே, உன் தார் இன்னு தர = உன்னுடைய மாலையை இப்போதே கொடு, அங்கது ஆதரம் = அங்கே அவளுக்கு அதன்மேல் அதிக ஆசை, தரத் தாமதஞ் செய்யில் அத்தொகை தேகத்தை மாரன் வருத்துவான் = நீ அதைத் தருவதற்குக் காலம் தாழ்த்தால் அப் பெண்ணின் உடம்பினை மன்மதன் துன்பப்படுத்துவான், எ - று.

செவிலி கூறல்.

16. பூவலாரை முதலான கற்பங்கள்
புரிந்துநிட்டை வசித்திருந் தாலுமென்
ஆவலாரை யும்விட்டுவி டாதந்த
வரிப்பிர்மா திகளாலுந் தானென்ன
மாவலாரை மலரதி ஞலெய்யின்
மங்கையுள்ள மயங்காதி ருக்குமா
மேவலாரை யடக்கிச்செ யம்பெற்ற
விசயனேவெங்க டேசுரெட் டேந்தரனே.

உரை :—மேவலாரை யடக்கிச் செயம் பெற்ற விசயனே = சத்துருக்களை யடக்கி வெற்றிபெற்ற அர்ச்சுனன் போன்றவனே! வெங்கடேசர எட்டேந்திரனே = ..., பூவலாரை முதலான கற்பகங்கள் புரிந்த = பூமியிலே வீளையும் வல்லாரை முதலிய பூண்டுகளிஞலாகிய ஆயுள் வீடிக்கும் மருந்துகளைத் தயார் செய்தருந்தி, நிட்டை வசித்திருந்தாலுமென் = நிட்டை கூடி வாழ்ந்திருந்தாலும் என்ன, ஆவல் யாரையும் விட்டு விடாது = இச்சையானது எவரையும் விட்டு நீங்குவதில்லை, அந்த அரி பிரமாதிகளாலும் தானென்ன = திருமால் அயன் முதலிய பெரிய தேவர்களாலும் அவர்களை விட்டு அது நீங்குவதில்லை, மாவலாரை மலராதிஞல் எய்யின் = பெரிய வல்லமை யுடைய பெருமானைப் பூவிஞல் மன்மத னெய்தானென்றால், மங்கையுள்ளம் மயங்காதிருக்குமா = அவனம்பிஞல் பெண்ணினுடைய மனம் மயல் கொள்ளாதிருக்குமா, எ - று.

தாயிரங்கல்.

17. அஞ்சக்கஞ்ச னங்கைபா லகனந்த
சோகமேவ வடர விடுகுமு
தஞ்சக்கஞ் சனமெல்லாங் கரைத்திரு
தனத்தைநீலத் தட்வரை யாக்கமால்

மிஞ்சக்கஞ்ச னத்தாழக்கு லுக்குமெய்ம்
மின்னேமேவி விரகத் தணித்திடாய்
வஞ்சக்கஞ்ச னகத்தைத் துணித்தவா
வாசவாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

உரை :—வஞ்சக் கஞ்சன் அகத்தைத் துணித்தவா = கபடமான கம்சனின் நெஞ்சைப் பிளந்தவனே! வாசவா = இந்திரனே! வெங்கடேசுர எட்டேந்திரனே = ..., அஞ்ச = அஞ்சும்படியாக, கஞ்ச நங்கை பாலகன் = தாமரைக் கிழத்தியாகிய திருமகளின் மகனுகிய மன்மதன், ஆவல் மேவ அடர விடு = ஆசையுண்டாகும்படி தாக்க விடுகின்ற, குமுதம் = குவளைப் பூவானது, சக்கு அஞ்சனமெலாம் கரைத்து = கண்ணிலுள்ள மையை யெல்லாம் கரைத்து, இருதனத்தை நீலித் தடவரை யாக்க = மையொடு விழுந்த கண்ணீரினுல் கொங்கைகள் பெரிய நீல மலைபோல் ஆகும்படி செய்ய, மால் மிஞ்ச = மயக்கம் மிகுவதால், கஞ்சனம் தாழ = கண்ணுடியுந் தோற்கும்படி, குலுக்கு மெய் பெண்ணே = பிரகாசத்தொடு அசைக்கின்ற உடம்பையுடைய பெண்ணே, மேவி விரகம் தணித்திட = அணைந்து மோகத்தைத் தீர்ப்பாயாக, எ - று.

தாயிரங்கல்.

18. கந்தரப்புயருஞ் சடையார்பகைக்
காமன்வந்துகணையேவவேமிஞள்
அந்தரப்புயலின்பேர்மிகுத்தன
ளணையின்மீதணைவாயணைவாய்பர
தந்தரப்புயங்கப்பணிமீதுதெய்தத்
தென்ருடுஞ்சரணம்புயாதிட
மந்தரப்புயபாரசெயதர
வாசவாவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

உரை :—பாரதம் தர = பாரதநூல் இலக்கணம் விளங்கும்படியாக, புயங்கப் பணிமீது = பாம்பின் படத்தின்மேல், தெய்தத்தென ஆடும் சரணப்புயா = தெய்தத்து என்னும் ஓசையுடன் நடனம் செய்த திருவடித் தாமரை யுடையவனே! திடமந்தர புய பார = உறுதியான மந்தரமலையை யொத்த தோள்களைத் தாங்குபவனே! செய தர = வெற்றியாளனே! வாசவ = இந்திரனே, வெங்கடேசுர எட்டேந்திரனே = ..., கந்தர் = உலகத்தைப் படைத்தவரும், அப்புயரும் சடையார் = கங்கை பொங்குஞ் சடையையுடைய வருமான சிவபெருமானது, பகை = எதிரியாகிய, காமன் வந்து கணை ஏவவே = மன்மதன் வந்து அம்பு தொடுக்கவே, மிஞள் அந்தரப் புயலின் பேர் மிகுத்தனள் = பெண்ணைவள் ஆகாயப் புயலின் போலிய மால் மிகுதி

யாகக் கொண்டனன், அணையின் மீது அணைவாய் அணைவாய்=படுக்கையின் மீது விரைந்து கூடுவாய், எ - று.

தோழி தூது.

19. அந்தரா சலவன்பன்றி போற்பகை
யார்ப்பரிக்க வவர்க்கிசைந் தெய்துமின்
பந்தரா சலனேபயந்தாள் வெறுப்பா
யுரைக்கிற் பலரென் சொல்லாருல
கந்தரா சலவாவூரின் வாய்மறைக்க
வுலைமூடியுண்டா கொண்ட காதல்தீர்
மந்தரா சலவாகா சயதராவாசவா
வெங்க டேசரெட் டேந்த்ரனே.

உரை :—மந்தராசல வாகா=மந்தர மலைபோன்ற தோள்களை யுடைய வனே! சயதரா=வெற்றியானனே! வாசவா=இந்திரனே! வெங்கடேசர எட் டேந்திரனே=....., அந்தரா=கீழ் மக்களாய், சலம்வன் பன்றியைப்போல் பகை யார்ப்பரிக்க=பலமான முள்ளம்பன்றியைப்போல் எதிரிகள் ஆரவாரஞ் செய்ய, அவர்க்கு இசைந்து=அவரோடு ஒத்து, எய்தும் இன்பந்தராசல னே=அவர்கள் பெறக் கருதும் நன்மையை அளிக்காத சினமுடையவனே! பயந்தாள் வெறுப்பா யுரைக்கில் பலர் என் சொல்லார்=அன்னை பகைத்துப் பேசினால் வேறுள்ளவர்கள் என்ன சொல்லமாட்டார்கள், உலகம் தரா சலவா=உலகம் துலாக்கோல் போலிருக்கிற தல்லவா, ஊரின் வாய் மறைக்க உலை மூடி யுண்டா=ஊர் வாயை மூட உலை மூடி யுண்டா, கொண்ட காதல் தீர்=என் மகன் கொண்ட மோகத்தைத் தீர்ப்பாயாக, எ - று.

தலைவி பிரங்கல்.

20. முனசநங்கை முகன்கண் ணிருந்துற
முற்றும் வெந்தவன் வந்திகல்செய்யவே
தினசநங்கைக் குதுகஞ்சி தட்டுது
சேலைசோர்ந் திருகாலையும் பின்னவே
இனசனங் கையதுகொட்டிக் கொட்டிவந்
தேசவே மயன்மீசுர மாகுது
வனசநங்கை மருவும் புயாசலா
வாசவா வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—வனச நங்கை மருவும் புயாசலா=தாமரையிலிருக்கும் வெற் றித் திருமகள் தங்கும் தோள்களாகிய மலையை யுடையவனே! வாசவா= இந்திரனே! வெங்கடேசர எட்டேந்திரனே=....., முன் அரசன் அங்கு

ஐமுகன் கண்ணிருந்து=முற்காலத்தில் ஆட்டை வாகனமாகவுடைய திக்கட வுள் ஐந்து முகங்களையுடைய கடவுளுடைய நெற்றிக் கண்ணிலிருந்து, உற=புறப்பட, முற்றும் வெந்தவன்=முழுவதும் எரிக்கப்பட்டவனுடைய மன்மதன், வந்து இகல் செய்யவே=வந்து போர் தொடுக்கவே, தின் அச னம் கைக்குது=தின்கின்ற சோறு கசப்பா யிருக்கின்றது, கஞ்சி தட்டுது= அன்னமும் உட்செல்லவில்லை, சேலை சோர்ந்து இரு காலையும் பின்னவே= உடை நெகிழ இரு காலிணைகளையும் பிணைந்து கொள்ளவே, இன சனம்= சுற்றத்தார், கையது கொட்டிக் கொட்டிவந்து ஏசவே=கை கொட்டி அடிக்கடி சிரித்து இகழவே, மயல் மீசுரமாகுது=மோகமானது மிகுந்த சுர மாக மாறிவிடுகிறது, எ - று.

செவிலி கூறல்.

21. படங்குமா தங்கரேக்காற் சமைத்திட்ட
பாரக்கொங்கைக் குறியுஞ் சமீபந்தான்
சடங்குமாதங் கழிக்குமுன் னுமிது
சமயங்கட்டித் தழுவா விடிலவா
அடங்குமா தங்கள் சித்த மென்பாக்கிய
மணையவேண்டு முன்னுண்மூல மென்னவே
தொடங்குமா தங்கமுன் வந்தமாதவா
துங்கனே வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—முன்னுள் மூலம் என்னவே தொடங்கு மாதங்க முன் வந்த மாதவா=முற்காலத்தில் ஆதிமூல மென்று அழைக்க ஆரம்பித்த யானைக்கு முன்னெதிரில் பிரசன்னமான திருமாலமிசமானவனே, துங்கனே=சிறந்த வனே! வெங்கடேசு எட்டேந்திரனே=....., படங்கு மாதங்க ரேக்கால் சமைத்திட்ட=மேலாடையானது உயர்ந்த தங்கத்தாளினால் ஆக்கப்பெற்ற, பாரக் கொங்கைக் குறியும் சமீபந்தான்=கனத்த தனம் பூப்படையா ளத்தை நெருக்கத்திற் காட்டுகின்றது, சடங்கு மாதம் கழிக்கு முன்னும்= பூப்புச் சடங்கு ஒரு மாதம் கழிக்கு முன்னே நிகழக்கூடியது, இது சமயங் கட்டித் தழுவாவிடில் அவா அடங்குமா=இந்த நோத்தி லிணைந்து முயங்கா விடில் ஆசை தணியுமா, தங்கள் சித்தம் என்=உங்களுடைய கருத்தியாது, என் பாக்கியம் அணைய வேண்டும்=என் நல்வினைப் பயன் வந்து கூட வேண்டும், எ - று.

தோழி தூது.

22. வாசக்காந் தண்மலர்க் கையினுலனை
வாரிவாரிப் பன்னீரொடு சந்தனம்
பூசக்காந்தல் பொருமலயர்ந்துவாய்
புலம்பத்தாமமும் வெம்பமின் னுர்களும்

ஏசக்காந்த முரைக்கிலென் செய்குவா
ளெய்துவாய் குறமாதுதெய் வானைக்கோர்
நேசக்காந்த ரருள்பெற்று வாழ்மனு
நீதனே வெங்கடேசுரெட் டேந்த்ரனே.

உரை :—குறமாது தெய்வானைகோர் நேசக் காந்தர் = குறப்பெண்ணை யெ வள்ளிநாயகிக்கும் தெய்வயானைக்கும் ஒப்பற்ற காதல் வைத்துள்ள மணவாளராகிய முருகர்து, அருள் பெற்று வாழ் மனு நீதனே = திருபையை யடைந்து வாழ்கின்ற மனுநீதி செலுத்துபவனே ! வெங்கடேசா ஏட்டேந் திரனே = ..., அனை வாசக் காந்தள் மலர்க்கையினுல் = தாயானவள் மணம் பொருந்திய காந்தட் பூப்போன்ற தனது கையினுல், வாரி வாரிப் பன்னீரொடு சந்தனம் பூசக் காந்தல் பொருமல் = பன்னீரோடு கலந்த சந் தனத்தை யள்ளி யள்ளித் தடவ அதனுல் வெப்பம் தாங்கமுடியாமல், அயர்ந்து வாய்ப் புலம்ப = தளர்ந்து தலைவலி முணு முணுப்ப, தாமமும் வெம்ப = மாலையும் சூட்டினுல் வாடிப்போக, மின்னுர்களும் ஏச காந்த முரைக் கில் = தோழிகளுமு ளனமாக வார்த்தை சொன்னுல், என் செய்குவாள் = அவள் என்ன செய்யக் கூடும், எய்துவாய் = விரைவில் வந்து அவளைக் கூடு வாயாக, எ - று.

இதுவுமது.

23. வந்துவாரவையநடத்திச்சிலை
வளைத்துச்சித்தசன்மாங்கணையேவப்பு
குந்துவாரவளவும்பிதிர்ந்திடக்குடைந்து
கொங்கைக்குடத்தையுமேயனே
வந்துவாரமதாக்கிவிட்டாலிந்தக்
கன்னியென்செய்குவாள்காண்கவியினுல்
சிந்துவாரமதிலணைகண்டவா
சீதராவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

உரை :—கவியினுல் சிந்துவார மதிலணை கண்டவா = குரங்குகளினுல் கடற்கரையதனில் மதிற் சுவர்போன்ற பெரிய அணையைக் கட்டுவித்த வனே ! சீதரா = இலக்குமியைத் தாங்குபவனே ! வெங்கடேசா ஏட்டேந் திரனே = ..., சித்தசன் = மன்மதன், வந்து வார வையம் நடத்திச் = தென்றலாகிய பெரும் தேரைச் செலுத்தி, சிலைத்து = வில்லை வளைத்து, மாங்கணை ஏவி = மாமரத்தின பூங்கள் அம்பாக விடுக்க, புகுந்து = அவை சென்று, வார் அவ்வளவும் பிதிர்ந்திட குடைந்து = கச்சு முழுவதும் உதிரும் படியாக ஊடுருவி, கொங்கைக் குடத்தையுமே அனேகம் தூவாரமதாக்கி விட்டால் = தனமாகிய குடதைதப் பல விடங்களில் தூளித்து விட்டால்,

இந்தக் கன்னி யென் செய்குவாள்=இந்தச் சிறு பெண் என்ன செய்யக்கூடும், காண்=நீ கவனிப்பாயாக, எ - று.

செவிலி கூறல்.

24. அரிசிராவணத்தாலடைத்துந்தொனி
யமருதில்லையதைமுனியுண்ணவும்
கரிசிராவகலப்பகலோன்வருங்
காலமானதெக்காலமென்றுடரும்
பரிசிராமுழுலோபகுடாரிநீ
பாரவில்வளைத்துக்கரதூஷண
திரசிராவிழவோர்பாணந்தொட்டவா
சீதராவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

உரை :—தரும் பரிசிரா முழுலோப குடாரி நீ=யாசகர்களுக்குப் பரிசளித்தும் தன்மை முற்றிலு மில்லாத லோபிகளுக்குக் கோடாரியாகின்றவனே! பார வில் வளைத்து=கனமான வில்லை வளைத்து, கர தூஷண திரசிரார் விழ ஓர் பாணம் தொட்டவா=கர் தூஷணன் திரசிரர் முதலியவர் சாகும்படி ஒப்பற்ற அம்பினை விடுத்தவனே! சீதரா=இலக்குமியைத் தாங்குபவனே! வெங்கடேசுர எட்டேந்திரனே=....., அரி சிராவணத்தால் அடைத்தும்=கடலைக் கல்லால் அடைத்தும், அதை முனி உண்ணவும்=அதை அகத்திய முனிவர் குடிக்கவும், தொனி அமருதில்லை=அதன் ஓசை அடங்கக் காணும், கரிசி இரா அகல=குற்றமுள்ள இராத்திரியானது நீங்க, பகலோன் வரும் காலமானது எக்காலம் என்றுள்=சூரியன் உதயமாகும் நேரம் எந்த நேரமென்று என் பெண் கேட்டாள், எ - று.

தார் வேண்டல்.

25. தொடுக்கவத் திரம்வேளது தானிந்தத்
தோகை மெய்யைத் துளைத்தூடுருவவே
கடுக்கவத் திரண்மேல் விழுமீயெனக்
கலங்குவாட் குன்னலங்க லின்றீகுவாய்
இடுக்கவந் திரங்காவென் றழைக்கவந்
திடங்கரைத் திகிரிக்கிரை யிட்டவா
உடுக்கவத் திரமில்லா தவர்க்கரு
ளுத்தமா வெங்கடேசுரெட் டேந்த்ரனே.

உரை :—இடுக்க வத்திரங்கா என்று அழைக்க=சிறிய முகத்தையுடைய யானை யென்னைக் காப்பாற்ற வா வென்றழைக்க, வந்து=அதற்கு எதிரிற்போய், இடங்கரைத் திகிரிக்கு இறையிட்டவா=முதலையைச்சக்காயுதத்திற்கு இரையாக்கினவனே! உடுக்க வத்திர மில்லாதவர்க்கு அருளும்

உத்தமா = கட்டுதற்குத் துணியில்வாதவர்களுக்கு ஆடையுதவுகின்ற உத்தமனே! வெங்கடேசுர எட்டேந்திரனே! = ..., வேள் அத்திரம்தொடுக்க = மன்மதன் அம்பு செலுத்த, அதுதான் இந்தத் தோகை மெய்யைத் துளைத்து ஊடுருவவே = அது இந்தப்பெண்ணின் உடம்பினைத் துவாரஞ் செய்து புறம்போகவே, கடுக்கவத்திரன்மேல் விழும் ஈ எனக்கலங்கு வாட்கு = செறிவான கோழைக் குவியல்மேல் விழுகின்ற ஈயைப்போலத் துன்புறுகின்ற இவளுக்கு, உன் அலங்கல் இன்று ஈகுவாய் = உன்னுடைய மாலையை இப்பொழுதே கொடுப்பாய், எ - று.

தலைவி பிரங்கல்.

26. சீதமா ரம்பனங்கன் ரெட்டான்றனத்
தினைத்துளைத்துத் தடாரிக்கு தந்தம்பு
சூதமாரம்பம் ராமாராமா வெனச்
சொல்லுவேன் சந்துசொல்ல விம்மாதர்க்குள்
நீதமா ரம்பலாதி செய்வாரெந்தன்
னேமக்கா மந்தணிமூல மென்னவே
போதமா ரம்பஞ்செய்ய முன்வந்தவா
போசனே வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—மூலமென்னவே போதம் ஆரம்பஞ்செய்யு முன்வந்தவா = யானையானது மூலமென்று தொடங்கிக் கூறுவதற்கு முன்னமேயே வெளிப்பட் டருளியவனே! போசனே = போசராஜனைப்போன்ற கொடையாளியே! வெங்கடேசுர எட்டேந்திரனே = ..., சீதம் ஆர் அம்பு அனங்கன் தொட்டான் = குளிர்ச்சி பொருந்திய மலரம்பினை மன்மதன் செலுத்தினான், தனத்தினைத் துளைத் தடாரிக்குது = அது மூலகளைத் துவாரஞ் செய்து ஊடுருவிச் செல்லுகின்றது, அந்த அம்பு சூதமா = அந்தக்கணை மாம்பூவா, ரம்பம் = அதுவாள்தான், ராமாராமா என்ன சொல்லுவேன் = அதன் வேதனையை என்னென்று கூறுவேன், சந்து சொல்ல இம்மாதர்க்குள் நீதமார் = தூதுபோவதற்கு இப்பெண்களுக்குள் முறையாக நியமிக்கப்படுதற்கு உரியவார், அம்பலாதி செய்வார் = தூற்றுதல் முதலாகிய எனம் பெண்கள் செய்வார்கள், எந்தன் நேமக்காமம்தணி = எனக்கு எப்போதும் ஒழுங்காக வுள்ள மோகத்தைத் தீர்ப்பாயாக, எ - று.

தோழி கூற்று.

27. பூசுகந்தந் தனத்திற் பொரிந்தது
பொருக்கெழும்பி யிப்பூவை தன்மாலுக்கே
நீசுகந்தந் தடங்க லின்றித்தர
நேமஞ்செய் திவள்காமந் தணித்திடாய்

தேசுகந்தந் தர்ர்வணன் சேய்தலை
சிக்கெனக் கொண்டுவா வென்றிலக்குவற்
காசுகந்தந்த ராமா பெரும்புக
ழாகரா வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—தேசுகந்து = புகழை வேண்டி, அந்த ராவணன் சேய்தலை சிக்கெனக் கொண்டுவா என்று = அந்த இராவணன் பிள்ளையாகிய இந்திரசித்தன் தலையை வெட்டிக்கொண்டு வாவென்று கட்டளையிட்டு, இலக்குவதற்கு ஆசுகம் தந்தராமா = இலக்குமணனுக்கு அம்பு ஈந்த ராமனே! பெரும் புகழாகரா = பெருங் கீர்த்திக்கு இருப்பிடமானவனே! வெங்கடேசர எட்டேந்திரனே = ..., தனத்திற் பூசுகந்தம் = கொங்கையில் தடவிய சந்தனமானது, பொருக்கெழும்பி பெரிந்தது = காய்ந்து சிதறியது, இப்பூவை தன் மாலுக்கே நீ சுகம் தந்து தந்து அடங்கல் இன்று = இப்பெண்ணின் வேட்கைக்குநீ இன்பங்கொடுத்தும் அது ஒரு பொழுதிலும் அடங்குவதில்லை, இத்தரம் சேமஞ்செய்தீ இவள் காமந்தணித்திடாய் = இம்முறை நியதியொன்று ஏற்படுத்தி இவள் ஆசையைத் தவிர்ப்பாயாக, எ - று.

நற்று யிரங்கல்.

28. பொருப்புக்குஞ் சரியாகப் புடைத்தெழும்பூண்
முலைக்கன்னி மீதேசமர் செய்யத்
துருப்புக்குஞ் சரியேறி மெய்யெங்கணுந்
துளைக்கமாரன் வளைக்கவவன் செங்கைக்
கருப்புக்குஞ் சரிசாம நிழற்றுந்திங்கட்
குடைக்குங் கலங்குவ ளோமன
விருப்புக்குஞ் சரிகாந்தற்கு வைத்தவா
வீரனே வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—மன விருப்பு குஞ்சரி காந்தற்கு வைத்தவா = உள்ளப்பற்றினைத் தெய்வயானையின் மணவாளனாகிய முருகப்பிரானிடத்துச் செலுத்தியவனே! வீரனே = ஆண்மையுடையவனே! வெங்கடேசர எட்டேந்திரனே = ..., பொருப்புக்குச் சரியாகப் புடைத்து எழும்பூண் முலைக்கன்னி மீதே = மலைக்குச் சமானமாகப் பருத்துக் கிளம்புகின்ற அணியணிந்த கொங்கைகளையுடைய சிறு பெண்ணின்மேல், சமர் செய்ய = சண்டையிட, துருப்பு = சேனைகளுடன், குஞ்சு அரி ஏறி = இளங் காற்றாகிய தென்றலின் மீதேறி, மெய் எங்கணும் துளைக்க = உடம்பு முழுதும் துவாரம் செய்வதற்காக, மாரன் வளைக்க = மன்மதன் வளைப்பதற்காக எடுத்த, அவன் செங்கைக் கரும்புக்கும் = அவனது சிறந்த கையிலுள்ள கரும்புவில்லுக்கும், சரிசாம நிழற்றும் திங்கள் குடைக்கும் = எல்லாச் சாமங்களிலும் சமமாக நிலவு வீசு

கின்ற பூரணசந்திரனுடைய அவனுடைய குடைக்கும், கலங்குவனே = அஞ்சு வானே, எ - று.

செவிலிக் கூற்று.

29. அடிதங்கச்சி யிவளென்ன மோதெரி
யாதுசிந்தைய யருகிரு ளிந்தா
பிடிதங்கச் சிவிகையி லிருந்தநம்பிள்ளை
தான்கிளிப் பிள்ளையல் லோமயல்
கொடிதங்கச்சிப் பரிபோற் சென்றேவரக்
கூறென்ருளிகல் கொண்டோ ரமர்கண்டு
துடிதங்கச் சிமையப்புயங் கொட்டுமுத்
துங்கனே வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—இகல் கொண்டார் அமர் கண்டு = பகை யேற்றவர்கள் போர் தொடங்குவதைத் தெரிந்து, துடி தங்கச் சிமையப் புயங்கொட்டும் = துடிக் கின்ற பொன்மலை போன்ற தோள்களைத் தட்டிய, உத்துங்கனே = மேலோனே ! வெங்கடேசா எட்டேந்திரனே = ..., அடி தங்கச்சி இவள் என்னமோ தெரியாது சிந்தை அயருகிருள் = ஏ தங்கையே இவள் யாது காரணத்தாலோ தெரியவில்லை மனந்தளர்ந்து சாய்கிருள், இந்தா பிடி = இதோ அவளைக் கைப்பற்று, தங்கச் சிவிகையில் இருந்த நம் பிள்ளைதான் கிளிப்பிள்ளை யல்லோ = பொற்பல்லக்கிலிருந்த நமது மகள் கிளிப்பிள்ளை போன்றவளல்லவா, மயல் கொடிது = மயக்கம் பொல்லாதது, அங்கு அச்சு பரிபோல் சென்றுவரக் கூறு என்ருள் = அங்கே காதலனை மட்டக் குதிரை போல் வரும்படி சொல்லுக என்ருள் எ - று.

தலைவி பிரங்கல்.

30. அரகதத்தை மதன்சிந்தை தன்னில்வைத்
தம்பரத்தை யடித்தார்ப் பரித்துமே
துரகதத்தைநடத்தியம் பாலுமென்று வதனத்தைத்
துளைத்து விட்டான் கொண்ட
விரகதத்தை யெவர்தணிப் பார்மலர்மெத்தை
மீதினில்வைத் தணைவாய் மணி
மரகதத்தை யணியும் புயாசலா
வாசவா வெங்கடேசுரெட் டேந்த்ரனே.

உரை :—மணி மாகதத்தை அணியும் புயாசலா = பச்சை மரகதத்தின மாலையைத் தரித்த மலைபோன்ற தோளை யுடையவனே ! வாசவா = இந்தி ரனே ! வெங்கடேசா எட்டேந்திரனே = ..., அரா = சிவசிவா ! கதத்தை மதன் சிந்தைதனில் வைத்து = மன்மதன் தன்னுடைய மனத்திற் சினம்

கொண்டு, அம்பரத்தை அடித்தார்=கடலாகிய மூரசையடித்து, ஆர்ப்பரித்தமே=ஆரவாரஞ்செய்து, துரகதத்தை நடத்தி=தன் கிளியாகிய குதிரையைச் செலுத்தி, அம்பாலும் எனது வதனத்தைத் தூளத்து விட்டான்=என்னுடைய இரண்டு கொங்கைகளையும் துவாரஞ் செய்துவிட்டான், கொண்ட விரகதத்தை எவர் தணிப்பார்=எனக் கேற்பட்ட மோசமாகிய கண்டத்தை உன்னைத் தவிர யார் நீக்குவார், மலர் மெத்தை மீதினில் வைத்து அணைவாய்=பூம்படுக்கையினில் தங்கிக் கூடுவாயாக, எ - று.

தாயிரங்கல்.

31. அனங்கனம் பனந்தந்தொட் மெய்பசந்த
சந்துவா டுவதல்லா லிடைக்கிரு
தனங்கனம் பனந்தாரா னிருக்குநற்
றலத்தின்பேர்க் கொடிதாங் காதுபெற்றதாய்
மனங்கனம் பனம்பின்போ மிருத்தந்த
மாதர்சொல்லும் வசைக்கிலக் காகிய
துனங்கனம் பனஞ்சேர் சூதமாயினுள்
வெங்கடேசுர வெட்ட நரேந்த்ரனே.

உரை:—வேந்தனே வெங்கடேசுர எட்டேந்திரனே=....., அனங்கன் அம்பு அனந்தம் தொட=மன்மதன் அளவில்லாத கணைகளைச் செலுத்தியதால், மெய் பசந்து அசந்து வாடுதலல்லால்=என் மகளின் உடம்பானது பசலை படர்ந்து தளர்ந்து வாட்டமடைவ தல்லாமலும், இடைக்கு இருதனம் சனம்=இரண்டு கொங்கைகளும் அவளுடைய இடைக்குத் தாங்க முடியாத கனமா யிருக்கின்றன, பனந்தாரான் இருக்கும் நற்றலத்தின் பேர்க்கொடி தாங்காது=பனம்பூ மாலையணிந்த சோனது தலைகளின் போகிய வஞ்சிக் கொடியாகிய இடை முலைகளைத் தாங்கமாட்டாது, பெற்ற தாய் மனம் கல்=இவளைப்பெற்ற தாயின்மனமானது கற்றன்மை யுடையது, அனம் மிகுத்துப் பின்போம் அந்த மாதர் சொல்லும்=அன்னங்கள் மிகுதியாகப் பின் தொடர்ந்து செல்லக்கூடிய அந்தப் பெண்கள் கூறும், வசைக்கு இலக்காகிய பின்=இகழ்ச்சிச்சொல்லுக்கு இடமாகிய மாதானவள், அங்கனம்=அவ்வாறு; பனம் சேர் சூதமாயினுள்=இலைகள் செறிந்த மாமரம்போல ஆயினுள். எ - று.

தாயிரங்கல்.

32. மாதவா வினமட்டலர் நின்புய
மாலைமாலை யகற்றுவ தாசடை
யாதவாவினன் சொல்லுந் துராகத
வன்னை வாயையடக் குவதார்மலர்ச்

சீதவா வினந்தங்கந் தரமெனுஞ்
செல்விக்கோர் மொழிசொல்லி யணைந்திடாய்
போதவா வினங்காத் தருண்மாதவா
போசனே வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—போத ஆவினம் காத்தருள் மாதவா = தக்கபடி பசுக் கூட்டங்களைக் காப்பாற்றியருளிய திருமாலின் அமிசமானவனே! போசனே = போசராசனைப்போன்ற வள்ளலே! வெங்கடேசுர எட்டேந்திரனே = ..., மாது அவாவின = மடந்தை விரும்பிய, மட்டலர் கின் புயமாமே = தேன் பொழியும் மலரிலுலாகிய உன் தோளிலணியப்பட்ட மாலையானது, மாலை அகற்றிடும் = அவளுடைய மயக்கத்தை நீக்கிவிடும், மாசடையாதவா = அழுக்கடையாதவனே! இன்னும் தூசுதம் சொல்லும் அன்னை வாயை அடக்குவதார் = இன்னும் அவதூறு சொல்கின்ற தாயின் வாயை மூடுகின்றவர்கள் யார்? மலர்ச்சீத வாவில் = பூக்கள் பொருந்திய குளிர்ந்த பொய்கையில், நந்து அம் கந்தரமெனும் = உள்ள சங்கானது அழகிய கழுத்தென்று சொல்லத்தக்க, செல்விக்கு ஓர் மொழி சொல்லி அணைந்திடாய் = பாக்கியமுடையவளுக்கு ஓர் உறுதிமொழி கூறிச் சேர்ந்திடுவாயாக, எ - று.

தாயிரங்கல்.

33. இருதனங் கனிக்குச் சிலேபோற்புடைத்
தெழுந்துவிம்மி யிறுமாந் திடக்கயல்
விருதனங் கனிக்குச் சிலைவாங்கிமா
விசைகொண் டூடுருவிப்பாய வாளியாற்
பொருதனங் கனிவர்க்க முண்ணுமன்மால்
பூண்டிருக்கச் செய்தான் றமிழ்வாணர்க்கு
வருதனங் கனிவாய்த் தருமன்னவா
வாசவா வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—தமிழ் வாணர்க்கு = தமிழ்ப் புலவர்களுக்கு, வரு தனம் கனி வாய்த் தரும் மன்னவா = மிகுந்த செல்வத்தை மனவருக்கத்தோடு கொடுக்கின்ற அரசனே! வாசவா = இந்திரனே! வெங்கடேசுர எட்டேந்திரனே = ..., கனிக்கு இருதனம் சிலேபோல் புடைத்து எழுந்து விம்மி இறுமாந்திட = இச்சிறு பெண்ணுக்கு இரண்டு கொங்கைகளும் மலைபோல் பருத்து இளம்பி மேலோங்கி இறுமாப்புக் கொள்ளவே, கயல் விருதன் = கயல்மீன் கொடியுடையவனுகிய, அனங்கன் = மன்மதன், இக்குச் சிலை வாங்கி = கரும்பு வில்லை வளைத்து, மாவிசை கொண்டு ஊடுருவிப் பாய = மிகுந்த விசைவோடு உட்புகுந்து செல்லும்படியாக, வாளியால் பொருது = அம்பினுற் சண்டைசெய்து, அனம் கனிவர்க்கம் உண்ணுமல் = சோறு பழ

வகைகள் முதலியவற்றை யருந்தாபடி, மால் பூண்டிருக்கச் செய்தான்= மோகங் கொண்டிருக்கும்படி செய்தான், எ - று.

தாயிரங்கல்.

34. என்னிலங்குச் சலராசராசருக் கேற்றதாமவ
ரிங்கேவர நீ போய்
முன்னிலங்குநங் காரியம் யாவையு
மொழியென்றுள் பைங்கிளிதான் மருதவாய்
நன்னிலங்கு வலயத்தீங் கீதென
நாட்டுந்தென்கருக் கோட்டைக் கதிபனே
பொன்னிலங்கு மணிமார்பனேதிட போகனே
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

உரை :—நன்னிலம் குவலயத்தில் ஈதென நாட்டுந் தென்கருக் கோட் டைக்கு அதிபனே=உலகத்தில் நல்ல வளமான நிலம் இதுவே என்று நிலைநாட்டப்பெற்ற தெற்கேயுள்ள கருக்கோட்டைப் பதிக்குத் தலைவனே! பொன்னிலங்கு மணிமார்பனே=இலக்குமி விளங்குகின்ற அழகிய மார்பை யுடையவனே! திடபோசனே=உறுதியான போசனைப் போன்றவனே! வெங்கடேசுர எட்டேந்திரனே=....., பைங்கிளி தான்=பசுங்கிளி போன்ற என் பெண், என் இலம் குச்சல=என் வீடு குச்சல்ல, ராசரா சருக்கு ஏற்றதாம்=மன்னர் மன்னனுக்குத் தக்கபடி யமைந்துள்ளது, இங்கே வர நின் போய் முன் நில்=அவர் இங்கே வரும்படியாக நீ போய் முன்னே நின்று, அங்கு நம் காரியம் யாவையும் மொழி என்றுள்= நம்முடைய செய்திகள் எல்லாம் அவருக்குச் சொல்லென்று கூறினள், மருவு வாய்=நீ அவளை அணைவாயாக, எ - று.

தலைவி கூற்று.

35. அரகராசலங்கொண்டபுண்டோன்முலை யானைவிம்மவதிற்றென்றரு
உரகராசலவன்குளிராதன லுருக்கினனந்தமாயற்கிம்மாதருந் [ரவே
தரகராசலராசியதாமயரானைனைப் புணர்வாய்மூலமென்றதோத்
திரகராசலங்காத்தசக்ரேஸ்வரா வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

உரை :—மூலமென்ற தோத்திரகாசலம் காத்த சக்கரேஸ்வரர்=ஆதி மூலமென்றும் துதித்த துதிக்கையையுடைய கைலைமலைபோன்ற யானையைக் காப்பாற்றிய சக்கராயுதத்தையுடைய திருமால்போன்றவனே! சீதாரா=இலக்கு மியைத் தாங்குபவனே! வெங்கடேசுர எட்டேந்திரனே!=....., அரகரா= சிவசிவா! சலங்கொண்ட புண்தோல் மூலையானை விம்ம=நீர்கோத்த சிரங்கு போல கொங்கைகளாகிய யானைகள் வீங்கவும், அதில் தென்றல் தாவவே=

அதன்மீது தென்றற்காற்றானது பாய, உர்கர் ஆசுவலவன்=பாம்புகளுக்குப் பயப்படுகிற சந்திரன், குளிராது அனல் உருக்கினான்=குளிர்ச்சி செய்யாது நெருப்புப்போல வெதுப்பினான், அந்த மாற்கு இம்மாதரும் தாகரா=அந்த மன்மதனுக்கு இந்தப் பெண்களும் இடைநடுவிலுள்ள மத்தியஸ்தர்களா, மயல்தான் சலராசியதாம்=என்னுடைய மோகந்தான் கடல் போலிருக்கிறது, எனைப் புணர்வாய்=என்னை அணைவாயாக எ-று.

செவிலி கூற்று.

36. கஞ்சரஞ்சப் பெடைபோலு மென்னடைக்
கமலத்தானிரு கண்ணினை யானது
பஞ்சரஞ்சக் கரவட் டுரைமுலைப்
பருப்பதத்தி லறுபதத் தூன்றெட்டான்
வெஞ்சரஞ்சப் பிரமஞ்ச கோளகை
மீதிருந்திந்த மின்னூ மேவுவாய்
வஞ்சரஞ்சப் பொருஞ்செய தோர்த்தண்டா
வாசவாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

உரை:—வஞ்சரஞ்சப் பொருஞ் செய தோர்த்தண்டா=கபடமான பகைவர்கள் பயப்படும்படியாகப் போர் புரிந்து வெற்றி யடைகின்ற வீரனே! வாசவா=இந்திரனே! வெங்கடேசுர எட்டேந்திரனே=....., மின்னடை கஞ்சர் அஞ்சப் பெடைபோலும்=மெல்லிய நடையானது பிரமனுடைய பெண் அன்னப் பறவையின் நடைபோல்வது, கமலத்தாள் பஞ்சு=அடித்தாமரைகள் பஞ்சுபோல மெதுவாயுள்ளன, இரு கண்ணினையானது அரம்=ஒத்த இரண்டு கண்களும் அரம்போலக் கூர்மையுடையன, உரை சக்கரவட்டு=சொல்லானது வெல்லக்கட்டி போலும் இனிமையுடையது (இத்தகையாளுடைய) முலைப்பருப்பதத்தில்=முலையாகிய குன்றின்மேல், அறுபதத்தான்=வண்டை நாணுகவுடைய மன்மதன், வெம் சரந் தொட்டான்=கொடிய அம்பினைத் தொடுத்தான், சப்ர மஞ்ச கோளகை மீதிருந்து இந்த மின்னூள மேவுவாய்=பூமிபோன்ற வட்டவடிவான அமளியின்மேலிருந்து இந்தப் பெண்ணைக் கூடுவாயாக, எ-று.

செவிலி கூறல்.

37. மாமனுக்கு மகனு கவந்தகா
மனுக்கும்பெற்று வளர்த்தவட்குங் கலைச்
சோமனுக்கு மினத்தார்க்கு மஞ்சிமெய்
சோர்ந்துவாடினள் சேர்ந்தணை வாயினி
தாமனுக்கு மினியகு மாரெட்ட
தருமனுக்குங் குமாரமுத் தேந்திர
பூமனுக்குஞ் சகோதர னேதிடபோஜனே
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

உரை :—தாமனுக்கும் இஞ்ரிய குமாரெட்ட தருமனுக்கும் குமார முத்தேந்திர பூமனுக்கும் சகோதரனே = தாமனென்பவனுக்கும் அறவாணுகிய குமாரெட்டனுக்கும் குமார முத்தேந்திர பூபதிக்கும் உடன் பிறந்தவனே! திடபோசனே = உறுதியான போசனைப் போன்றவனே! வெங்கடேசர எட்டேந்திரனே = ..., மாமனுக்கு = திருமகளின் கணவனுகிய திருமாலுக்கு, மகனுக வந்த காமனுக்கும் = பிள்ளையாக வந்த மன்மதனுக்கும், பெற்று வளர்த்தவட்கும் = பெற்று வளர்த்த அன்னைக்கும், கலைச் சோமனுக்கும் = கலைகளுள்ள மதிக்கும், இனத்தார்க்கும் = சுற்றத்தார்க்கும், அஞ்சி மெய் சோர்ந்து வாடினள் = பயந்து உடல் தளர்ந்து வாட்டமடைந்தாள், சேர்ந்தணைவாய் = இனிமேல் அவளை யடைந்து புணர்வாயாக, எ - று.

தாபிரங்கல்.

38. என்னவாவிது ராசியமாநடை யேலுமாமகள்
காவொடுகாண்மிகப்
பின்னவாவிதுராவனறுவவாபிரமனிப்படிச்
செய்தாலென்னுர்கள்வாய்
கொன்னவாவிதுராகதத்தென்றிசை குடிபுகக்
கையிற்கோதண்டம் வாங்கிய
மன்னவாவிதுராபுகழாகரா வாசவா
வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—ஒன்னுர்கள் வாய் கொன்ன = சத்துருக்களுடைய வாய்கள் தடைப்படவும், ஆவி தூராகத தென்றிசை குடிபுக = அவர்கள் உயிர்கள் துன்பந்தரும் தெற்குத் திக்கிலுள்ள உலகிற் போய்த் தங்கவும், கையில் கோதண்டம் வாங்கிய மன்னவா = கையில் வில்லினை யெடுத்து வளைத்த அரசனே! விதுரா = விதுரன் போன்றவனே! புகழாகரா = புகழ்க்கிருப்பிடமானவனே! வாசவா = இந்திரனே! வெங்கடேசர எட்டேந்திரனே = ..., என் அவா இது = என்ன வகையான வேட்கையிது, ராசியமாம் நடை ஏலுமா = இரகசியமான களவொழுக்கம் பொருத்தமாகுமா? மகள் காலொடு கால் மிகப் பின்னவா = என் பெண் காலொடு கால் பிணைந்து கொள்ளும்படியாக, ரா இது அனல் தூவ வா = இராத்திரியிற் றோன்றுஞ் சந்திரன் அக்கினியைச் சிதற வா? பிரமன் இப்படிச் செய்தாய் = அயன் இவ்வாறு படைத்தான், எ - று.

தோழி கூற்று.

39. சொலங்கக் காகொண்ட மோகத்தி
லல்வருஞ் சோபதாபந்தொலைக்க வென்றூட்குமே
விலங்கக் காமசரத்தா லும்பூந்தளிர்
மெய்யிளைத்தன எல்லாம லொப்பிலா

நலங்கக்காரி சுகக்காரி மேலவிந்
நாளுமே நல்லநா ளடையார்மனம்
மனங்கக்கால் கொண்டடர்பரி மேல்வரும்
வாசவா வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—அடையார் மனம் மலங்க=சத்துருக்களுடைய உள்ளங் கலங்கும்படியாக, கால்கொண்டு அடர் பரி மேல்வரும் வாசவா=காலினற் றூக்கும் குதிரை மேலேறி வருகின்ற இந்திரன் போன்றவனே! வெங்கடேசுர எட்டேந்திரனே=....., அக்கா=அக்காளே! கொண்ட மோகத்தினால் வரும் சோபதாபந் தொலைக்க=நான் கொண்டுள்ள வேட்கையினால் விளையும் தளர்ச்சி வெப்பத்தைத் தணிக்கும்படியாக, அங்கு சொல்=அவரிடங் கூறுவாயாக, என்றூட்கு=என்று சொன்ன தலைவிக்கு, விலங்கக் காம சரத்தாலும்=இடர்ப்பாடு செய்கின்ற மன்மதனுடைய அம்பினாலும், பூந் தளிர் மெய் இளைத்தனள்=அவள் அழகிய தளிர்போன்ற உடம்பு வாடப் பெற்றாள், அல்லாமல்=அல்லாமற்போனால், ஒப்பிலா நல் அங்கக்காரி=இணையற்ற நல்ல உறுப்புடையவன், சுகக்காரி=இன்பந் தருபவன், மேவ இந்நாளுமே நல்ல நாள்=அவளை யணைவதற்கு இந்த நாளுமே நல்ல நாளாகும், எ-று.

தாய்க் கூற்று.

40. சரந்தராதரங்கண்டாமதன்விடுத் தானெனது
குழந்தைதனியேமால்
பரந்தராதரளக்கச்சிறுக்கும் பொற்பார்
பயோதரபாரத்தைத் தாங்கவே
உரந்தராதரவம்போற்று வண்மருங்
கொசியுமுள்ளம்வசியாயணைந்திடாய்
புரந்தராதரணிக்கதிபா செயபூதரா
வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—புரந்தரா=இந்திரனே! தரணிக்கதிபா=பூபாலனே! செய பூதரா=வெற்றி மன்னவனே! வெங்கடேசுர எட்டேந்திரனே=....., மதன் சரம் தாதரங்கண்டா விடுத்தான்=மன்மதன் தன்னுடைய கணையைத் தாதம்மியம் பார்த்தா செலுத்தினான், அரா=சிவனே, எனது குழந்தை தனியே மால்பாந்து=என் பிள்ளை தனியே இருந்து மோகம் அதிகப்பட்டு, தளக்கச்சி இறுக்கும்=முத்துள்ளவாரினை யழுத்தும், பொற்பார் பயோதர பாரத்தைத் தாங்கவே உரந் தாது=அழகு பொருந்திய முலைப்பாரத்தைச் சுமக்க வலிமையில்லாது, அரவம்போல் துவல் மருங்கு உசியும்=பாம்புபோல நுடங்குகின்ற இடையானது ஒடியத்தக்கதாக விருக்கின்றது, உள்ளம் வசியாய்அணைந்திடாய்=அவள் மனத்தை யுன் வசமாக்கிக் கூடுவாயாக, எ-று.

செவ்விலி கூற்று.

41. பீலிக்குஞ்சர வங்களைக் கொத்திப்
பிடித்துத்தாக்கும்பெரும் பகை யின்றிக்கா
லாலிக்குஞ்சர பஞ்சிங்க மீதுசென்
றடிப்பபோல்வந் தடிக்குது தாயென்ற
நீலிக்குஞ்சர சப்பேச்சு மாச்சிவ
ணினைவுங்காணுங் கனவுமிங் கேயொரு
வாலிக்குஞ்சர மேவியராகவா வாசவா
வெங்கடே சுரெட் டேந்த்ரனே.

உரை :—ஒரு வாலிக்கும் சரம் எவிய ராகவா=ஒப்பற்ற வாலியைக் கொல்லும்படி அம்பு விடுத்த ராமனிசம் போலானவனே! வாசவா=இந்திரனே! வெங்கடேசுர எட்டேந்திரனே=....., பீலிக் குஞ்சு பெரும் பகை யின்றி கால் அரவங்களைக் கொத்திப் பிடித்துத் தாக்கும்=மயிற் குஞ்சுகள் மிகுந்த பகையில்லாமலே தங்கள் காலினால் பாம்புகளைப் பிடித்துக் குத்திக் கொல்லும், (அதுபோலவும்) ஆலிக்கும் சரபம் சிங்கமீது சென்று அடிப்பது போல்=ஆவாரஞ் செய்கின்ற சிம்புள் பறவையானது சிங்கத்தின்மேற் பாய்ந்து அதைக் கொல்வது போலவும், வந்து அடிக்குது=தென்றற் காற்று என்னைத் தாக்குகின்றது, தாயென்ற நீலிக்கும் சாசப் பேச்சுமாச்சு=அன்னையாகிய கொடியவளுக்கும் வேடிக்கைப் பேச்சுக் கிடமாயிற்று, இவள் நினைவும் காணும் கனவும் இங்கே=இவளுடைய எண்ணமும் சொப்பனமும் இவ்வாறே உள்ளன, எ - று.

தோழி கூற்று

42. அராவுக்கேகணை யேசெவி யென்பர
தல்லபெற்றவ னைக்கே மின்னுரும்வம்
பராவுக்கேகணை யேகுழ லாக்கிய
பண்ணுக்கேநொந்த பெண்ணுக்கி ரங்கியின்
றிராவுக்கேகணை மேற்சென்றி ருந்துநல்
லின்பலீலைசெய் தன்பாய் மருவுவாய்
மராவுக்கேகணை யேவிய ராகவா
வாசவாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

உரை :—மராவுக்கே கணை எவிய ராகவா=மராமரங்களின்மேல் அம்பு தொடுத்த இராம னிசமானவனே! வாசவா=இந்திரனே! வெங்கடேசுர எட்டேந்திரனே=, ..., அராவுக்கே கணையே செவியென்பர்=பாம்புக்குக் கண்ணையே காதென்று சொல்லுவார்கள், அது அல்ல பெற்ற அனைக்கே=அது மாத்திரமல்ல பெற்ற தாய்க்கும் அப்படியே உள்ளது, மின்னுரும் வம்

பர்=பெண்களும் குறும்புக்காரர், ஆவுக்கே கணையே குழலாக்கிய பண்ணுக்கே=பசுவின் பொருட்டு மூங்கிலினூற் செய்த குழலினின்று வெளிப்பட்ட இசையைக் கேட்டு, நொந்த பெண்ணுக்கு இரங்கி=உள்ளம் துயரமுற்ற மாதின்மேல் தயவு வைத்து, இன்றிரவுக்கு ஏகு=இன்றிராத்திரியே அவள்பாற் செல்வாயாக, அணைமேல் சென்றிருந்து கல்லின்ப லீலைசெய்து அன்பாய் மருவுவாய்=...., எ - று.

தலைவி கூற்று.

43. அல்லைமாலை மருதங்கி ளியைமின்
னுரைநால்வகைத் தானைய தாக்கிவிட்
டெல்லைமாலையும் விட்டடர்ந் தேறிநா
னிருக்குமாலயத் துட்புகுந் தேதன்கை
வில்லைமாலை விளைத்து வளைத்தம்பை விட்டு
வேண்மட்டு மீறினன் மேவுவாய்
குல்லைமாலை யணிமாலைப் போற்றிய
குமணனே வெங்கடேசுரெட் டேந்நரனே.

. உரை :—குல்லை மாலை யணி மாலைப் போற்றி வாழ்குமணனே=துளசி மாலை யணிந்த பெருமாலை வழுபட்டு வாழ்கின்ற குமணன்போன்ற வள்ளலே! வெங்கடேசுர எட்டேந்திரனே=....., அல்லை=இருளாகிய யானையையும், மாலை தென்றலாகிய தேரையும், மருதங் கிளியை=மருத நிலத்துக் கிளியாகிய குதிரையையும், மின்னர்=பெண்டிராகிய காலாட் படையையும், நால்வகைத் தானைய தாக்கிவிட்டு=நால்வகைச் சதுரங்க சேனையாக ஒழுங்கு படுத்திக்கொண்டு, எல்லை மாலையும் விட்டு=சூரியனையும் மாலைக் காலத்தையும் மறையச் செய்துவிட்டு, அடர்ந்து ஏறி=நெருங்கி மேற்சென்று, நானிருந்தும் ஆலயத்துட் புகுந்து=நான் தங்கும் வீட்டினுள் வந்து, தம் கை வில்லை வளைத்து=தன் கருப்பு வில்லைக் குனித்து, மாலை விளைத்து=மோகத்தை யுண்டாக்கி, அம்பை விட்டு=கணை செலுத்தி, வேள் மட்டு மீறினன்=மன்மதன் அளவு கடந்து விட்டான், மேவுவாய்=என்னை அணைவாயாக, எ - று.

நற்றாய் பிரங்கல்.

44. தடிக்கவில்லை முலைதிரண் டேமகள்
சமையவில்லை மணந்தான் குமுகுமென்
றடிக்கவில்லை பொடிபுனு கத்தர்சேர்த்
தணியவில்லை யதற்குமுன் மாரன்போர்
முடிக்கவில்லை வளைத்தார்கு முந்தைதான்
மோகந்தாங்க முடியாதொன் னூர்துடி
துடிக்கவில்லை வளைக்கும கோரவித்
துங்கனேவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

உரை :—ஒன்னூர் துடி துடிக்க = சத்துருக்கள் அஞ்சித் துன்பப்படும் படியாக, வில்லை வளைக்கும் அகோர உத்துங்கனே = வில்லை வளைத்துப் போர் புரியும் மிகுந்த ஆத்திரமுடைய மேலோனே! வெங்கடேசுர எட்டேந்திரனே = ..., மகள் முலை திரண்டே தடிக்கவில்லை = சிறு பெண்ணின் தனங்கள் திரட்சியடைந்து பெரிதாகவில்லை, சமைய வில்லை = பூப் படையவில்லை, மணந்தான் குழகுமென்று அடிக்கவில்லை = வாசனை வெளிப் பட்டுத் தோன்றவில்லை, பொடி புனுகு அத்தர் சேர்த்து அணியவில்லை = வாசனைத் திரவியப் பொடி புனுகு அத்தர் கலந்து பூசப்படவில்லை, அதற்கு முன் = இவைகள் நிகழ்வதற்கு முன்னுகவே, மாரன்போர் முடிக்க வில்லை வளைத்தால் = மன்மதன் சண்டை செய்வதற்காகத் தன் வில்லை வளைத்தானுனல், குழந்தைதான் மோகந் தாங்க முடியாது = அதனுலேற்படும் வேட்கையைப் பிள்ளையானது பொறுக்க முடியாது, எ - று.

செவிலி கூறல்.

45. மஞ்சலக் கணங்கன் புறவேகட்டி
மருவுதற் குளவா வைத்திருக்குநாள்
அஞ்சலக் கணலார்க்கே தெரியுநின்
னிவலோ வடங்கா திரங்காதவன்
நெஞ்சலக் கணப்பெற்றியின் வெண்ணெயா
நிலவில்வந்து கலவிசெய் வாயையா
பஞ்சலக்கணமுத் தமிழாகர பாஷிதா
வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—பஞ்சலக்கண முத்தமிழாகர பாஷிதா = எழுத்து சொல் பொருள் யாப்பு அணியென்னும் ஐந்திலக்கணத்தோடு கூடிய இயல் இசை நாடகமென்னும் முத்தமிழுக்கும் இருப்பிடமான சொல் வன்மையுடைய வனே! வெங்கடேசுர எட்டேந்திரனே = ..., மஞ்சு அலக்கு அணங்கு = அழகு திகழுகின்ற பெண்ணானவள், அன்புறவே கட்டி மருவுதற்கு = காதலோடு ஆலிங்கனஞ் செய்தணைவதற்கு, உள் அவா வைத்திருக்கும் நாள் அஞ்சு = மனத்தி லிச்சைகொண்டு காத்திருக்கும் நாள் ஐந்தாகும், அலக்கண் நலார்க்கே தெரியும் = அதன் துன்பம் பெண்களே அறிவர், நின் ஆவலோ அடங்காது = உன்பாலுள்ள மோகமோ தணியாது, இரங்காதவன் நெஞ்சல = தயவில்லாத வலுவுடைய வுள்ளம் உன்னுடையதல்ல, கணம் பெற்றியின் வெண்ணெயாம் = ஒரு கணப்பொழுதில் அது வெண்ணெய்போல இளகக் கூடியது, நிலவில் வந்து கலவி செய்வாய் ஐயா = நிலாக்காலத்தில் வந்து கூடியணைவாய் ஐயனே! எ - று.

தாயிரங்கல்.

46. சத்திக்கும் பணிலக்கையி னின்பெற்ற
தனையன்போர்க்கு வினையமின் னுரைச்சு
மத்திக்கும் பணியாம்நிரைத்துச் சரமாரி
பெய்யவென்மா னுரைதா னுரைக்
கத்திக்கும் பணிசோர்ந்ததுங் காண்கிலாள்
காதல்தீரவிப் போதணைவா யையா
எத்திக்கும் பணிவேந்தா மகாமண்ட
லேசுரா வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—எத்திக்கும் பணி வேந்தே=எந்தத் திக்கிலுள்ளவர்களும் தொழுகின்ற மன்னனே! மகா மண்டலேசுரா=உலக பூபதியே! வெங்கடேசு எட்டேந்திரனே=....., சத்திக்கும் பணிலக்கையினன் பெற்ற தனையன்=முழங்குகின்ற பாஞ்ச சன்னியத்தைக் கையிலுடைய பெருமானின் மகனுகிய மன்மதன், போர்க்கு வினைய மின்னுரைச் சுமத்தி=சண்டைக்குச் சூழ்ச்சியுடைய பெண்களைப் பொறுப்புக் கட்டி, கும்பு அணியாய் நிரைத்து=கூட்டங் கூட்டமாக அணிவகுத்து, சரமாரி பெய்ய=அம்பு மழை பெய்வதனால், என் மான் இளைத்தாள்=என் மகள் இளைத்துப் போனுள், உரைக்கத் திக்கும்=பேசச் சொல்தடுமாறும், பணி சோர்ந்ததும் காண்கிலாள்=கைகள் கழன்றதையும் பார்க்கவில்லை, காதல் தீர இப்போது அணைவாய் ஐயா=அவள் மோகந் தணியும்படி இப்பொழுதே அவளைக் கூடுவாய் ஐயனே! எ - று.

செவிலி கூற்று.

47. தனதுமெய்க் குமலரணை யானது
தழலிறைக்குந் தனச்சுமையா லிடை
மினதுமெய்க் குந்துவரு மிம்மானந்த
மேனகைக்கும் வெகுமிச்ச நானுண்மை
சொனதுமெய்க் குமரன்பொற் பதாம்புயந்
தொழுந்தொழும்பன் குமாரெட்ட பாண்டியன்
மனதுமெய்க் குழுயிர் துணைவாபுகழ்
வாசவா வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—மெய்குமரன் பொற் பதாம்புயம் தொழும் தொழும்பன்=உண்மை வடிவாகிய முருகக் கடவுளின் அழகிய திருவடித் தாமரைகளை வழிபடுகின்ற அடியாராகிய, குமாரெட்ட பாண்டியன்=குமார எட்ட பாண்டியனுடைய, மனது மெய்க்கும் உயிர்த் துணைவா=உள்ளந் திருப்தி

யடைவதற் கேதுவாகிய உயிர்போன்ற சகோதரனே! புகழ் வாசவர்= புகழையுடைய இந்திரனே! வெங்கடேசர எட்டேந்திரனே=....., தனது மெய்க்கு மலர் அணையானது தழல் இறைக்கும்=மகளுடைய உடம்புக்குப் பூம்படுக்கையானது கனல வீசுகின்றது, தனச்சுமையில் மனது இடை மெய்க்குந் துவளும்=இப் பெண்ணினுடைய இடையானது மூலைச்சுமை யைத் தாங்கப்பெறுமல் இளைத்துப்போய் அசைகின்றது, இம் மான் அந்தி மேனகைக்கும் வெகு மிச்சம்=இந்த மாது தெய்வப் பெண்ணாகிய மேனகை யைப் பார்க்கிலும் மிக உயர்ந்த அழகுடையவள், நான் சொனது உண்மை= நான் சொன்னது சத்தியம், எ - று.

நற்று பிரங்கல்.

48. இட்டங்கட்டிய வாறே யல்லாதுவே
றில்லைசிந்தையி தெல்லாஞ் சுவாமிய
திட்டங்கட்டிய பரஞ்சியாற் செய்த
சித்ரமஞ்சத்திற் சேர்வாய் தினஞ்சட்ட
வட்டங்கட்டி யங்கக் குடிக்கின்றரா
வணனை வென்றவன்புவைத்த வன்றம்பிக்குப்
பட்டங்கட்டிய ராமாநவரச பாஷிதா
வெங்கடேசு நெட்டேந்த்ரனே.

உரை :—தினம் சட்டவட்டம் கள் தீயங்கக் குடிக்கின்ற=எற்பாடும் கூட்டமும் அமைத்துக்கொண்டு கள்ளினை வெறி யுண்டாகும்படி அருந்து கின்ற, ராவணனை வென்ற=இராவணனைக் கொன்று வெற்றியடைந்து, அவன் தம்பிக்கு அன்பு வைத்து=அவனுடைய தம்பியாகிய விபீஷண னுக்கு, பட்டம் கட்டிய ராமா=விசுவாசம் வைத்து அவனுக்கு முடி சூட்டிய ராமனமிசமானவனே! நவரச பாஷிதா=ஒன்பது சுவையும் தோன் றப் பேசும் சொல்வன்மை யுடையவனே! வெங்கடேசர எட்டேந்திரனே= ....., இட்டங் கட்டியவாறே அல்லாது வேறில்லை சிந்தை=விருப்பப் படியே அமைந்த வழியே அல்லாமல் மனம் வேறு வழியிற் செல்லவில்லை, இது எல்லாம் சுவாமி யதிட்டம்=இதுவெல்லாம் எஜமானின் பாக்கியமே, அபரஞ்சிக்கட்டியாற் செய்த சித்ர மஞ்சத்திற் சேருவாய்=உயர்ந்த தங்கக் கட்டியினு லாக்கப்பெற்ற சித்திரமெழுதிய கட்டிலின்மீது அவளுடன் அணைவாயாக, எ - று.

நற்று பிரங்கல்.

49. பருதியானவ ரீராறு பேருங்கோ
பாக்கினி மிஞ்சிவருவது போன்மதி
வருதியானதற் காற்றே னென்றுனையோ
மலடிருந்து பெற்றேனிந்தப் பிள்ளையை

ஒருதியான மதுகுல தீபம்பேர்
ஞதித்துமோ கத்துக்குள் ளாகினூயா
குருதியான மறவாத வாபுகழ்க்
கொற்றவா வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—குருதியான மறவாதவா = ஆசாரியினுடைய கினைவை கீங்கா தவனே! புகழ்க் கொற்றவா = கீர்த்தி வேந்தனே! வெங்கடேசா எட்டேந் திரனே = ..., பருதியானவன் ஈராறு பேரும் கோபாக்கினி மிஞ்சி வருவதுபோல் மதி வருதல் = பன்னிரண்டு சூரியர்களும் கினத்தீ மிகுந்து ஒன்றுகூடி எழுந்தாற்போல, சந்திரனவன் உதித்து வருகின்றான், யான் அதற்கு ஆற்றேன் என்றாள் = நான் அதனைப் பொறுக்கமாட்டே னென்று என் மகள் சொன்னாள், ஐயோ மலடிருந்து பெற்றேன் இந்தப் பிள்ளையை = நெடுநாளாகப் பிள்ளை யில்லாதிருந்து இந்தப் பிள்ளையை நான் பெற்றேன், ஒருதியால் = இதை கீ ஓர்வாயாக, நமது குல தீபம்போல் உதித்து மோகத்துக்குள்ளாகினாள் ஐயா = எங்களுடைய குடும்ப விளக்குப் போலப் பிறந்து காமமயக்கத்திற்கு வசமானாள் ஐயனே! எ - று.

செவிலி கூறல்.

50. அம்பமா முனிவாய்முலைக் கண்ணைச்சல்
லடைக்கண்ணுக வனங்கனெய்யச் சொர்ன
விம்பமா முனிருந்த படிக்கிலை
மேனிமா கலைக்யானி யிவளையா
கம்பமா முனிதம்பெற வந்துதற்
காத்தவா வெகுநேர்த்தி யதாந்தமிழ்க்
கும்பமா முனிபோல்வந் துதித்தவா
கொற்றவா வெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

உரை :—கம்பமா = அசைவுடைய யானையானது, முன் இதம்பெற வந்து = முற்காலத்தில் முதலையினின்றும் விடுபட்டுச் சுகம் பெறுவதற்காகத் தோன்றி, தற்காத்தவா = அதனைக் காப்பாற்றியவனே! வெகு நேர்த்தியாந் தமிழ்க் கும்பமா முனிபோல் வந்துதித்தவா = மிகச் சிறந்த தமிழ் முனிவ ராகிய அகத்தியமுனிவர் போல் வந்தவதரித்தவனே! கொற்றவா = வெற்றி வேந்தனே! வெங்கடேசா எட்டேந்திரனே = ..., அம்பு அமா முனிவாய் முலைக்கண்ணைச் சல்லடைக்கண்ணுக அனங்கன் எய்ய = மன்மதன் கோபத் தால் அதிசயப்படும்படி கணைகளை யேவி முலைக்கண்களை மா அரிக்கும் கருவி யின் துவாரங்கள் போலத் துளைத்துவிட, மேனி சொர்ன விம்பமா முனிருந்த படிக்கில்லை = அவளுடைய உடம்பானது முன் தங்கப்பதுமையா யிருந்ததுபோல இப்போதில்லை, மா கலைக்யானி இவள் ஐயா = இவள் பெரிய கல்விஞான முடையவள் ஐயனே! எ - று.

இராமச்சந்திரக் கவிராயர்

பாடியது

ஐயா ரிகழ்ச்சி.

1. வணக்கம் வருஞ் சிலநேரங் குமரகண்ட
வலிப்புவருஞ் சிலநேரம் வலியச்செய்யக்
கணக்குவருஞ் சிலநேரம் வேட்டைநாய்போற்
கடிக்கவருஞ் சிலநேரங் கயவர்க்கெல்லாம்
இணக்கவரும் படித்தமிழைப் பாடிப்பாடி
எத்தனைநா டிரிந்துதிரிந் துழல்வேனையா
குணக்கடலே யருட்கடலே யசுரரான
குரைகடலை வென்றபரங் குன்றுளானே.

உரை :—குணக் கடலே=நற்குண சமுத்திரமே, அருட் கடலே=கிருபைக்கடலே, அசுரரான குரை கடலை வென்ற பரங் குன்றுளானே=ஓசையுடன் கூத்தாடி முழங்கும் கடல்போன்ற அசுரக் கூட்டத்தை யழித்து வெற்றி கொண்ட திருப்பரங்குன்றி லுறையும் பெருமானே! கயவர்க்கெல்லாம்=கீழான குணங்களுடையவர்களுக்கெலாம், வணக்கம் வரும் சில நேரம்=சில காலங்களில் வணங்கும் தன்மை யுண்டாகும், குமர கண்ட வலிப்பு வரும் சிலநேரம்=சில காலங்களில் குமரகண்ட இழுப்பு நோயுண்டாகும், வலியச் செய்ய கணக்கு வரும் சிலநேரம்=சில காலங்களில் வல்வந்தமாகத் தீர்க்கக்கூடிய கணக்குகள் தடையாக வந்து நிற்கும், வேட்டை நாய்போல் கடிக்க வரும் சிலநேரம்=சில காலங்களில் வேட்டை நாய் கடிப்பதுபோல இரவலரைக் கடியுங் குணமுண்டாகும், இணக்கம் வரும்படித் தமிழைப் பாடிப்பாடி=அவருக்கு ஒத்தமனம் ஏற்படும்படித் தமிழ்ப் பாடல் களைப் பல முறையும் பாடி, ஐயா=ஐயனே! எத்தனை நாள் திரிந்து திரிந்து உழல்வேன்=எவ்வளவு காலம் அலைந்தலைந்து அலுப்பேன், எ - று.

அருணைசலாய வள்ளலைப் பாடியது.

நற்றுயிரங்கல்.

2. மாசற்றிடு திருமேனியின் மறுவுற்றது போல
மாரப்பயல் கணைதைத்திட வந்தெய்தன னையோ
காசத்தனை புண்ணைனது துட்டத்தனை யளவாய்க்
கையத்தனை யாலின்மகண் மெய்யெத்தனைநோமோ

வாசற்படி கடவாதவண் மனதெப்படி யாளுள்
மதனன்சிலு கறியாதவ்ண் மயலெப்படி யாளுள்
ஆசைப்படு தாரோபுரு டரின்மேன் மடவார்கள்
அருணாசல ராயாதமி ழறியும் பெருமானே.

உரை :—அருணாசல ராயா தமிழறியும் பெருமானே = அருணாசலாய வள்ளலே! தமிழின் நயம் தெரிந்த தலைவனே! மாசற்றிடு திருமேனியின் மறுவுற்றதுபோல = சூற்றமற்ற அழகிய தேகத்தில் மறு தோன்றினாற் போல, மாரப் பயல் கணை தைத்திட வந்து எய்தினன் ஐயோ = பாணம் அழுந்தும்படியாக மன்மதனென்னும் சிறுவன் கணைகளை விடுத்தானையோ, காசத்தினை புண்ணுனது துட்டத்தினை யளவாய்க் கையத்தினை யாளுல் = சிறிய நாணய அளவாயிருந்த புண்ணுனது பெரிய நாணய அளவாய் விரிந்து உள்ளங்கை யளவு பெரிதாளுல், மகன் மெய்யெத்தனை நோமோ = புதல்வி யின் தேகமானது எவ்வளவு அதிகமாக வருந்துமோ, வாசற்படி கடவாதவன் மனது எப்படியாளுன் = வீட்டு வாசலுக்கப்பாற் போகாத பெண் எவ்வாறே உள்ளம் வேறுபட்டான், மதனன் சிலுகறியாதவன் மயல் எப்படியாளுள் = காமின் போரினைத் தெரியாதவன் எவ்வாறு இச்சை கொண்டான், ஆசைப் படுவரோ புருடரின்மேல் மடவார்கள் = பெண்கள் ஆடவர்மீது விருப்ப முடையவ ராவரோ ? எ - று.

பெரியம்மைமீது பாடியது.

3. புல்லுக் கட்டும் விறகுஞ் சுமந்தபேர்
பூர்வ காலத்துப் புண்ய வசத்தினுல்
நெல்லுக் கட்டும் பணக்கட்டுங் கண்டபின்
நீலக் கல்லிற் கடுக்கனும் போடுவார்
சொல்லுக் கட்டும் புலவரைக் கண்டக்கா
றூறிப் பாய்ந்து கதவை யடைத்தெதிர்
மல்லுக் கட்டும் மடையரைப் பாடவோ
மலையச் சாரலில் வாழ்பெரி யம்மையே.

உரை :—மலையச் சாரலில் வாழ் பெரியம்மையே = பொதிய மலைச் சார் பில் வீற்றிருக்கும் பெரியம்மையே! புல்லுக் கட்டும் விறகும் சுமந்த பேர் = புல்லுக்கட்டையும் விறகுக்கட்டையும் எடுத்து விற்றுப் பிழைத்தவர்கள், பூர்வ காலத்துப் புண்ய வசத்தினுல் = முற்பிறவியிற் செய்த நல்வினைப் பயனுல், நெல்லுக் கட்டும் பணக்கட்டும் கண்டபின் = மிகுந்த நெல்லும் பொன் னும் கைவரப் பெற்றபின், நீலக்கல்லிற் கடுக்கனும் போடுவார் = நீலமணி யாற் செய்த காதணியையும் அணிந்து கொள்வார்கள், சொல்லுக்கட்டும் புல வரைக் கண்டக்கால் = சொற்களாற் கவி புனையும் பாவலரைப் பார்த்தபோது,

தூறிப் பாய்ந்து கதவை யடைத்து=எசி யிகழ்ந்து சிறி வரவேண்டா மென்று தடுப்பதற்காக வீட்டுக் கதவைத் தாழிட்டு (அல்லது), எதிர் மல்லுக் கட்டும்=எதிர்த்து மல்லுத்தஞ் செய்கின்ற, மடையரைப் பாடவோ=மூடரைப் பாடுதல் தக்கதாகுமா? எ - று.

பழனியாண்டவர்மீது பாடியது.

நற்ரு பிரங்கல்.

4. வெண்ணெய்க் கட்டியுஞ் சீனியு மூட்டலாம்
விக்கிக் கொள்வதற்கென் செய்யலா மொரு
பெண்ணெய்க் கட்டிக் கொடுத்திட லாம்பிள்ளை
பெறுவ தற்குமுடன் படுவார் களோ
பண்ணெய்க் கட்டிய மென்மொழி யாளுந்தம்
படுக்கை வீட்டில்வந் தாளே யவடனைக்
கண்ணெய்க் கட்டி யணையாம லேன்விட்டீர்
கழனி சூழும் பழனியில் வேலரே.

உரை :—கழனி சூழும் பழனியில் வேலரே=வயல்கள் சுற்றியுள்ள பழனியில் வீற்றிருக்கும் வேல் தரித்த ஆண்டவரே! வெண்ணெய்க் கட்டியும் சீனியும் ஊட்டலாம்=ஒரு குழந்தைக்கு வெண்ணெய் உருண்டையையும் சருக்கரையையும் வாயிற் போடலாம், விக்கிக்கொள்வதற்கு என் செய்யலாம்=(அவற்றை விழுங்க முடியாதபடி) அதற்கு விக்கலேற்படக் கூடுமானல் அதற்கு யாது செய்யக்கூடும், பெண்ணைக் கட்டிக் கொடுத்திடலாம்=ஒரு மாதினை யொருவனுக்கு மணம் புரிவிக்கலாம், பிள்ளை பெறுவதற்கும் உடன்படுவார்களோ=மற்றொருவன் பிள்ளை பெறுவிப்பதற்கு உலகத்தார் சம்மதப்படுவார்களா, பண்ணைக் கட்டிய மென்மொழியாள் உன் தம் படுக்கை வீட்டில் வந்தாளே=இசையை வென்ற இனிய மெல்லிய சொல்லுடைய மங்கை உன்னுடைய பள்ளியறைக்கு வந்தாளே, அவள்தனைக் கண்ணைக் கட்டி அணையாமல் என் விட்டீர்=அவளுடைய கண்ணைக் கவர்ந்து கூடாமல் என் அவளைப் போகவிட்டீர், எ - று.

குருவப்ப பூபன்மீது பாடியது.

5. ஏதிலேவறியவர்க்குமினியகவிப் புலவருக்குமிரங்கியந்தப்
போதிலேதனங்கொடுக்குந்தஞ்சைநகர்க் குருவப்பபூபனெற்குக்
கோதிலேகிடந்துழலும்பலரிடத்திற் சென்றுதமிழ்கூருவண்ணங்
காதிலேயொட்டிட்டுந்தாடையின்மோ தக்கடுக்கன்ருனிட்டானே.

உரை :—ஏதிலே வறியவர்க்கும் இனியகவிப் புலவருக்கும் இரங்கி=எல்லாவற்றிலும் தரித்திர முடையவர்களுக்கும் இனிமையான பாடல்களைப் பாடுகின்ற கல்விமான்களுக்கும் தயை புரிந்து, அந்தப் போதிலே

தனங் கொடுக்கும் தஞ்சைநகர் குருவப்ப பூபன்=வேண்டிய அவ்வப் பொழுதே பொருளளிக்கின்ற தஞ்சைப்பதியில் வாழ்கின்ற குருவப்பனென் னும் நிலத்தலைவன், கோதிலே கிடந்துழலும் பலரிடத்தில் சென்று தமிழ் கூறுவண்ணம்=குற்றத்திலே தோய்ந்து திரிகின்ற கீழ்மக்கள் பலரிடத்தி லுஞ் சென்று அவரைப் புகழ்ந்து தமிழ்ப் பாட்டு சொல்லாதபடி, காதிலே ஒட்டிட்டு=செவியிலே இரகசியம் உபதேசித்து, தாடையில் மோதகன் னத்தில் அடிக்கும்படி, எற்குக் கடுக்கன் தானிட்டானே=எனக்குக் காதணி யணிவித்தான், எ - று.

நாகைக் காரோணர்மீது பாடியது.

நற்று யிரங்கல்.

6. வம்பிறைக்குங் கடம்பிறைக்கும் பெரும்பிறைக்கு
நிகராகா வளர்ந்த வொற்றைக்
கொம்பிறைக்குந் தாதையராங் கடனுகைக்
காரோணர் கொன்றை நல்கார்
அம்பிறைக்கும் விழிப்பரவை யாயர்குழல்
கொல்ல னுலையனலிற் காய்ந்த
செம்பிறைக்கும் வெண்பிறைக்குங் கரும்பிறைக்கு
மொருத்தி தனித்தென் செய்வாளே.

உரை :—வம்பு இறைக்கும்=மணங்கமழும், கடம்பு இறைக்கும்=கடப் பந்தாரணிந்த குமரப் பெருமானுக்கும், பெரும்பிறைக்கு நிகராக வளர்த்த ஒற்றைக் கொம்பு இறைக்கும்=பெரிய பிறை வடிவுடையதாக வளர்ந்துள்ள ஒரு கொம்புக் கடவுளாகிய விநாயகருக்கும், தாதையராம்=தகப்பனாகிய, கடல் நாகைக் காரோணர் கொன்றை நல்கார்=கடல் சூழப்பெற்ற திரு நாகைக் காரோணத்தில் வீற்றிருக்கும் பெருமான் என் மகளுக்கு அவ ருடைய கொன்றை மாலையைக் கொடுக்கிறாரில்லை, அம்பிறைக்கும் விழிப் பாவை=நீர் சிந்துகின்ற கண்ணையுடைய பெண், ஆயர் குழல் கொல்லன் உலை அனலிற் காய்ந்த=இடையருடைய புல்லாங்குழலி னுடைய உலைத்தீயில் வெதும்பியதால் ஏற்பட்ட, செம்பிறைக்கும்=செந்நீ ருக்கும், வெண்பிறைக்கும்=வெள்ளியபிறைச் சந்திரனுக்கும், கரும்பிறைக் கும்=கரும்பு வில்லையுடைய மன்மதனுக்கும், ஒருத்தி தனித்து என்செய் வாளே=தனியாய் இருக்கின்ற ஒரு பெண் என்னசெய்யக்கூடும், எ - று.

திருமயிலை வேங்கடசாமியென்னும் வள்ளலின்மீது பாடியது.

7. மூங்கிலிலே யொளித்திருந்தான் முக்கண் சாமி
முதியகடற் போய்ப்படுத்தான் முகுந்த சாமி
தாங்கமலப் பொகுட்டுறைந்தான் றலைநாற் சாமி
தட்வரையி லுழன்றுநின்ரு னகப்பன் சாமி

வாங்கியுண்ண வழிகாத்தான் வயிற்றுச் சாமி
வாணருக்கிங் குதவுவரார் மற்றோர் சாமி
ஓங்கியசீர் மயிலையிற்பொன் னப்ப சாமி
உதவியவேங் கடசாமி யுசித வேளே.

உரை :—மூங்கிலிலே ஒளித்திருந்தான் மூக்கண்சாமி=மூன்று கண்ணை யுடைய சிவபெருமான் (திருநெல்வேலியில்) மூங்கில் மரத்தடியில் சிவ லிங்கமாக வெளிப்படா திருந்தார், முருகுந்தசாமி முதியகடல் போய்ப் படுத் தான்=விண்டுவாகிய கடவுள் பழைய திருப்பாற் கடலிற் போய்ப் பள்ளி கொண்டார், தலை நால்சாமி தான்கமலப் பொகுட்டு உறைந்தான்=நான்கு தலையையுடைய அயன் தாமரைக் கொட்டையி லமர்ந்திருந்தார், தகப்பன் சாமி தடவரையில் உழன்று நின்றான்=தகப்பனாகிய சிவனுக்குப் பிரணவப் பொருளுரைத்த குமரக் கடவுள் அன்ற மலைமீது உலாவுவாராயினர், வாங்கி யுண்ண வழிகாத்தான் வயிற்றுச் சாமி=பெரு வயிறுடைய விநாயகக் கடவுள் நிவேதனத்தை யேற்றுண்பதற்குப் பாதைகளிற் காக்கும் கடவுளாக அமர்ந் தார், வாணருக்கு இங்கு உதவுவார் மற்றோர்சாமி=தமிழ் கற்றவர்களுக்கு இவ்வுலகத்தில் உபகாரஞ் செய்பவர் மற்றொரு எஜமான், (அவர் யாரெனில்) ஓங்கியசீர் மயிலையில் பொன்னப்பசாமி உதவிய வேங்கடசாமி உசிதவேளே= மிகப் பரவிய புகழையுடைய திருமயிலைப்பதியில் பொன்னப்பசாமி புதல்வர் வேங்கடசாமியென்னும் சிறந்த வள்ளலே, எ - று.

திருப்பரங்குன்றம் கற்பக விநாயகர்மீது பாடியது.

8. வஞ்சகத்தி லொன்றானத் துதிக்கை மிகத்
திரண் டானை வணங்கா ருள்ளே
அஞ்சரண மூன்றானை மறைபொழி நால்
வாயானை யத்த னுகித்
துஞ்ச வுணர்க் கஞ்சானை சென்னியணி
யாரூனைத் துகளெழா னைச்
செஞ்சொன் மறைக்கெட்டானைப் பரங்கிரிவாழ்
கற்பகத்தைச் சிந்தை செய்வாம்.

உரை :—வஞ்சகத்தில் ஒன்றானை=கள்ளமான உள்ளத்திற் சாராத வனை, துதிக்கைமிகத் திரண்டானை=அதிகத் திரட்சியுடைய துதிக்கை யுடையவனை, வணங்காருள்ளே அஞ்சரணம் ஊன்றானை=வழிபடாதார் நெஞ் சில் தமது அழகிய சிறுவடியைப் பதித்து வையாதவனை, மறைமொழி நால் வாயானை=மந்திரங்கள் செப்புகின்ற தொங்கும் வாயுடையவனை, அத்த னுகித்=உயிர்களுக்குத் தலைவனுகி, துஞ்ச அவுணர்க்கு அஞ்சானை=அழி கின்ற அசுரர்களுக்குப் பயப்படாதவனை, சென்னி அணி ஆரூனை=தலையில்

தரித்த நதியையுடையவனே, துகள் எழானே=குற்றந்தோன்றப் பெறாதவனே, செஞ்சொல் மறைக்கு எட்டானே=செம்மையான மொழிகளையுடைய வேதங்களுக்கு அப்பாற்பட்டவனே, பாங்கிரிவாழ் கற்பகத்தைச் சிந்தை செய்வாம்=திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக்கும் கற்பக விநாயகரைத் தியானிப்போமாக, எ - று.

அருணசலேசுவரர்மீது பாடியது.

தலைவி யிரங்கல்.

திரிபங்கி.

9. சலமேதோ சங்கந்தா பூணரந் தாமே
கலைதாநற் புங்கவன்வால் காணப்—புலவுடைய
சங்கரா கோணு கலாமதியக் கோடிர
சங்கரா சோணு சலா.

உரை :—நற்புங்கவன் மால் காண=தேவருட் சிறந்தவராகிய விண்டுவும் காணமுடியாத, புலவுடைய சங்கரா=ஊன் வாசனையுடைய அயன்றலையைக் கபாலமாகக் கையிலுடையவனே! கோணு கலாமதியக் கோடிர=குறைந்து அழிவுபடாத ஒருதலைச் சந்திரன் வைக்கப்பெற்ற சடைமுடியுடையவனே! சங்கரா=சுகங் கொடுப்பவனே! சோணுசலா=தழல் வடிவான மலையையுடையவனே! (அருணசலேசுவரா!) சலம் ஏதோ=நீ சினங் கொள்வது எதனாலோ, சங்கந்தா=வளையலை யளிப்பாயாக, பூணரம் தா=அணிகின்ற மாலையை யளிப்பாயாக், மேகலை தா=ஆடையை யளிப்பாயாக, எ - று.

தில்லைக் கோவிந்தாசர்மீது பாடியது.

வண்டுவிடுதூது.

10. சீரிலங்கு மாடகூட வீதிவீறு தில்லையான்
திருவிருக்கு மார்பனெங்க டிருமலைக்கு முன்புபோய்
நீரிருந்து மாலைகேளு மவன்மறுத் துரைக்கிலென்
னெஞ்சுசொல்லும் வார்த்தையாக நீங்கள்சொல்லும் வண்டுகாள்
வாரியொன்று பாயிரண்டு மாலைமூன்று நாலுவேய்
மதியமைந்து கங்குலாறு மாரனேழு வாடையெட்
டாரமொன்ப தன்றில்பத் தடங்களும் மொறுக்குமால்
அத்தனைக் கெலாமிலக் கெனுவியொன்று காணுமே.

உரை :—வண்டுகாள்=வண்டுகளே! சீரிலங்கு மாடகூட வீதி வீறு தில்லையான்=புகழ் விளங்குகின்ற மாடமும் கூடமுமுள்ள தெருவின் தனிச் சிறப்புடைய தில்லைப்பதியி லுள்ளவனுகிய, எங்கள் திருவிருக்கும் மார்பன்=எங்களுக்குரிய இலக்குமி தங்குகின்ற மார்பினையுடைய பெருமாளது, திரு

மலைக்கு முன்பு போய்=திருமலைக்கு எதிரிற் சென்று, கீர் இருந்து மாலை கேளும்=நீங்கள் காத்திருந்து அவனுடைய தாரினை வேண்டுங்கள், அவன் மறுத்துரைக்கில் என் நெஞ்சு சொல்லும் வார்த்தையாக நீங்கள் சொல்லும்= அவனில்லை யென்று கூறினால் என் மனமானது தெரிவிக்கிற செய்தியாக நீங்கள் கூறுங்கள், (அது யாதெனில்) வாரி யொன்று=கடலொன்று, பாய் இரண்டு=மலர்ப்படுக்கை யிரண்டாவது, மாலை மூன்று=அந்திப் பொழுது மூன்றாவது, வேய் நாலு=புல்லாங்குழல் நாலாவது, மதியம் ஐந்து=சந்திரன் ஐந்தாவது, கலங்குல் ஆறு=இவை ஆறாவது, மாரன் ஏழு= மன்மதன் ஏழாவது, வாடை எட்டு=வடக்கினின்று வரும் குளிர் காற்று எட்டாவது, ஆரம் ஒன்பது=முத்து மாலை ஒன்பதாவது, அன்றில் பத்து= அன்றில் புள்ளொலி பத்தாவது, அடங்கலும் ஒறுக்குமால்=இவை யனைத் தும் துன்பப்படுத்தும், அத்தனைக்கெலாம் இலக்கு என் ஆவி ஒன்றுங் காணுமே=அவ்வளவும் தாக்கும் குறி யொன்றாயிருப்ப என்னுவி போதுமா, எ - று.

திருவானைக்காவில் சிவபெருமான் பவனியைப் பாடியது.

11. ஓரானை வனத்தேதிரு வொண்ணுவ னிழற்கீழ்
உறையும்பெரு மான்வீதி யுலாவும்பவ னிக்கே
நேராக நடப்பேன்வலை பறிபோனது கேட்பேன்
நில்லென்று தடுத்தால்வகை சொல்லென்று மறிப்பேன்
போராணையை விட்டான்முலை யீராணையை விடுவேன்
பொழியம்பு தொடுத்தாலிரு விழியம்பு தொடுப்பேன்
தோராவழக் கிட்டால்வகை வாராவழக் கிடுவேன்
தொல்லைக்கணை கொண்டோவகை வெல்லப் பெறுவேனே.

உரை :—ஓர் ஆனை வனத்தே=தனிச் சிறப்புடைய திருவானைக்கா வென்னும் பதியின்கண், திருவெண்ணுவல் நிழல் கீழ்=வெள்ளிய நாவல் மரத்தினடியில், உறையும் பெருமான் வீதியுலாவும் பவனிக்கே=வீற்றிருக் கும் சுவாமி தெருவில் எழுந்தருளி வரும் ஊர்கோலத்திற்கு, நேராக நடப் பேன்=எதிராகச் செல்வேன், வலை பறிபோனது கேட்பேன்=கவர்ந்து கொண்ட வளையலைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்பேன், நில் என்று தடுத்தால்=....., வகை சொல் என்று மறிப்பேன்=வளையலைப் பெறு தற்கு உபாயம் கூறுகவென்று வழிமறிப்பேன், போராணையை விட்டால்= என்னோடு சண்டையிடுதற்கு யானையை அனுப்பினால், முலையீராணையை விடுவேன்=கொங்கைகளாகிய இரண்டு யானைகளை எதிராகச் செலுத்து வேன், பொழியம்பு தொடுத்தால் இருவிழி யம்பு தொடுப்பேன்=வில்லி லிருந்து விடுகின்ற கணையைச் செலுத்தினால் இரு கண்ணென்னும் பாணத்தை நான் விடுப்பேன், தோரா வழக்கிட்டால்=தோற்றுப் போகாத

படி விவகாரம் பண்ணினால், வகை வாரா வழக்கிடுவேன்=ஒரு வகையிலும் முடிவுக்கு வாராத விவகாரத்தை நான் செய்வேன், தொல்லைக் கூண கொண்டே வகைவெல்லப் பெறுவேனே=பழமையாகிய அன்பு கொண்டே முறையாக நான் வெற்றி யடைவேன், எ - று.

திருவாரூர் பிட்சாடண மூர்த்தியைப் பாடியது.

12. அடல்கொண்டெழு சூலப்படை யாரூர்ப்பெரு மானுர்
ஐயம்பக ரென்றேயெம தகவாசலில் வந்தார்
கடுகும்படி சென்றேபலி கொண்டேயெதிர் நின்றேன்
கைவந்தன மென்றுரிது கைவந்தன மென்றேன்
மடவன்னம தென்றுரிது மடவன்னம தென்றேன்
வல்லோதன மென்றுரிது வல்லோதன மென்றேன்
கொடுவந்தன மென்றுரிது கொடுவந்தன மென்றேன்
கொள்ளார்பலி செல்லாரவர் கோட்பாடறி யேனே.

உரை :—அடல் கொண்டெழு சூலப்படை ஆரூர் பெருமானுர்=ஆற்ற லோடு கிளம்புகின்ற சூலாயுதத்தையுடைய திருவாரூரில் வீற்றிருக்கும் கடவுள், ஐயம் பகரென்றே எமதகவாசலில் வந்தார்=பிச்சையோடு அல்லது சந்தேகத்தைச் சொல்லென்று எம்மில்லத்தின் வாசலுக்கு எழுந்தருளினுர், கடுகும்படி சென்றே பலி கொண்டே எதிர் நின்றேன்=விரைந்து சென்று பிச்சைச்சோறு வைத்துக்கொண்டு அவருக்கு எதிராக நின்றேன், கைவந்த னம் என்றுரிது=இது நமக்குக் கிட்டியது அல்லது கையினால் வணக்கமென்றுர், இது கை வந்த அனம் என்றேன்=இது கையிற் கொண்டு வந்த சாதமென் றேன், மட அன்னமது என்றுரிது=இளைய அன்னம்போன்ற பெண்ணே என்றுர், இது மட அன்னமது என்றேன்=இது மடமாகிய வீட்டிலுள்ள சோறு என்றேன், வல்லோ தனம் என்றுரிது=மூலையானது சூது கருவியோ என்றுர், இது அல்லோ தனம் என்றேன்=இது இராத்திரியிடும் பிச்சைச் சோறு என்றேன், கொடு வந்தனம் என்றுரிது=தாரும் உமக்கு வணக்கம் என்றுர், இது கொடு வந்தனம் என்றேன்=இதோ கொண்டு வந்தே னென்று சொன்னேன், கொள்ளார் பலி செல்லார் அவர் கோட்பாடு அறி யேனே=பிச்சைச் சோற்றை யேற்றுக் கொள்ளவுமில்லை போகவுஞ் செய் கின்றுரில்லை அவருடைய உள்ளக்கருத்து இன்னதென்று தெரியவில்லை, எ - று.

முறைமாறுகத் தோன்றப் பாடியது.

13. வீமனுக்கு மைந்தனுர் வேதனுகும்
வேதனுக்கு மைந்தனு ரீசனுகும்
காமனுக்கு மைந்தனுர் வீமன் தம்பி
கந்தனுக்கு மாமனுர் காமன்ருனே

மாமனுக்கு முன்றமையன் றந்தைகாலன்
வையகத்தி லிம்முறைமை வழங்கலாலே
ராமனுக்குச் சீதைதங்கை யாகவேண்டும்
ராவணனுக் குத்தகப்பன் ராமன்றானே.

உரை :—வீமனுக்கு மைந்தனுர் வேதனுகும்=பறவையாகிய கருடனுக்கு எஜமானனுகிய விஷ்ணுவின் மகன் அயனுவர், வேதனுக்கு மைந்தனுர் ஈசனுகும்=மூங்கிலிற் பிறந்தவர் சிவபெருமானுவர், காமனுக்கு மைந்தனுர் வீமன் தம்பி=கற்பகச் சோலையின் தலைவனுகிய இந்திரனுக்கு மகன் வீமன் தம்பியாகிய அர்ச்சுனன், கந்தனுக்கு மாமனுர் காமன் தானே=முருகப்பெருமானுக்கு மாமனுரா யிருப்பவர் இந்திரனே, மாமனுக்கு=குறிஞ்சித் தலைவனுகிய நகுலனுக்கு, முன் தமயன்=முற்பட்ட அண்ணனுகிய தருமருடைய, தந்தை காலன்=தகப்பனுர் எமனுவன், வையகத்தில் இம் முறைமை வழங்கலாலே=உலகத்தில் இம்முறை வைப்புப் பேசப் படுவதினுல், ராமனுக்கு=இராத்திரிக்குத் தலைவனுகிய சந்திரனுக்கு, சீதை தங்கையாக வேண்டும்=திருப்பாற்கடலி லுடன்பிறந்த இலக்குமியாகிய சீதை தங்கையாக இருத்தல் வேண்டும், இராவணனுக்குத் தந்தை ராமன் தானே=இரவினுடைய நிறத்தையுடைய மன்மதனுக்கு தந்தை இராமனுய் வந்த திருமாலே யாவன், எ - று.

பாக்குவெட்டி காணுது போனதுபற்றி பாடியது.

14. விறகுதறிக்கக்கறிநறுக்க வெண்சோற்றுப்புக்கடகுவைக்கப்
பிறகுபிளவுகிடைத்ததென்ரு லுலாரகப்பிளந்துகொள்ளப்
பறகுபறகென்றேசொறியப் பதமாயிருந்தபாக்குவெட்டி
இறகுமூளத்துப்போவதுண்டோ வெடுத்தீராயிற்கொடுப்பீரே.

உரை :—விறகு தறிக்க கறி நறுக்க=சிறு குச்சிகளைச் சமையலுக்காகத் துண்டுபடுத்தவும் காய்களைக் கறிகளுக்காக வெட்டவும், வெண் சோற்று உப்புக்கு அடகுவைக்க=வெறுஞ் சோற்றுக்கு உப்பு வேண்டும் போது ஈடுவைத்து உப்பு பெறவும், பிறகு பிளவு கிடைத்ததென்ரூல் நாலாரூகப் பிளந்துகொள்ள=அடகை மீட்டின பிற்பாடு கொட்டைப் பாக்குத்துண்டு கிடைத்ததென்ரூல் அதை நாலு அல்லது ஆறு சிறு பகுதிகளாக அரிந்துகொள்ளவும், பறகு பறகென்றே சொறியப் பதமாயிருந்த பாக்குவெட்டி=உடம்பில் தினவெடுத்தால் பறகு பறகு என்று ஓசை வரும்படி சொறிந்துகொள்ளவும் பயன்படுவதா யிருந்த பாக்குவெட்டியானது, இறகு மூளத்துப் போவதுண்டோ=இறகு கிளக்கப்பெற்றுப் பறந்து போவதுண்டோ, எடுத்தீராயிற் கொடுப்பீரே=....., எ - று.

திருவேங்கட நாதன்மீது பாடிய ஏழை வுத்திரம்.

15. இரவல னேயுனக் கில்லாத தென்ன விதயமென்ன
பரவுண வேது சுவையற்ற தென்னசொற் பான்மையென்ன
தரவுரை செய்திட வென்ரு னதற்கொன்றுஞ் சாற்றிலன்யான்
வரதிரு வேங்கட நாதாவென் றேன்பொன் வழங்கினனே.

உரை :—இரவலனே உனக்கு இல்லாதது என்ன = ஐயமெடுப்பவனே உனக்கு யாது இல்லை, உத்தரம் = திரு, இதயம் என்ன = உன் மன மெப்படி யிருக்கிறது (கொதிக்கிறதென்ற கருத்தில்) உத்தரம் = வேம், பரவுணவு எது = உணவுக்கு வேறு வழி யென்ன, உத்தரம் = கடன், சுவையற்றது என்ன = ருசியற்றுப்போனது என்னது, உத்தரம் = நா, சொற்பான்மை என்ன = நீ சொல்லக்கூடிய சொல் யாது, உத்தரம் = தா, தாவுரை செய்திட என்ரூன் = இதற்குத் தக்கபடி பதில் சொல்லுக என்ரூன், அதற்கு ஒன்றும் சாற்றிலன் யான் = அதற்குப் பதில் யாதும் சொல்லவில்லை (ஆனால்) வரதிரு வேங்கட நாதா என்றேன் = வரங்களை யளிக்கும் திருவேங்கட நாதனே என்று கூறினேன், பொன் வழங்கினனே = உடனே பொருள் தந்தான், எ - று.

தன் குற்றங் கூறியது.

16. கல்லாத வொருவனைநான் கற்ரு யென்றேன்
காடெறியு மவனைநா டாள்வா யென்றேன்
பொல்லாத வொருவனைநா னல்லா யென்றேன்
போர்முகத்தை யறியானைப் புலியே றென்றேன்
மல்லாரும் புயனென்றேன் சூம்பற் ரோளை
வழங்காத கையனைநான் வள்ள லென்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்ரூன்
யானுமென்றன் குற்றத்தா லேகின் றேனே.

உரை :—கல்லாத ஒருவனை நான் கற்ரூய் என்றேன் = படியாத வொரு வனைப் படித்தவனே என்று பாடினேன், காடு எறியும் மறவனை நாடாள் வாய் என்றேன் = வனத்தை வெட்டி எறிகின்ற மறக்குலத்தி லுள்ளவனை தேசத்தை யாளுகின்ற அரசனே என்றேன், பொல்லாத ஒருவனை நான் நல்லாய் என்றேன் = தீக்குணமுடைய வொருவனை நான் நற்குணமுடையவ னென்றேன், போர் முகத்தை அறியானைப் புலியேறு என்றேன் = போர்க் களத்தைப் பார்த்துத் தெரியாதவனை வேங்கைப் புலியென்றேன், சூம்பல் தோளை மல்லாரும் புயன் என்றேன் = தேய்ந்து ஒடுங்கிப்போன புய முடையவனை மல்லுத்தத்திற்குத் தக்க தோள்களையுடையவனே என் றேன், வழங்காத கையனை நான் வள்ளல் என்றேன் = கொடாத வஞ்சகனைக்

கொடையாளி யென்றுரைத்தேன், இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றான் = இவ்வாறு பொய்ப் புகழ்ச்சி யுரைத்தற்காக ஒருவன் எனக்குக் கொடுப்பதற்கு யாது மில்லை என்றான், யானு மென்றன் குற்றத்தால் எங்கின் றேனே = யானும் என் குற்றத்தை யுணர்ந்து போய்விடுபவனானேன், எ - று.

இடுக்கண்களெல்லாம் ஒருங்கு வருமெனப் பாடியது.

17. ஆவின மழைபொழிய வில்லம் வீழ
அகத்தடியாண் மெய்ந்நோவ வடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட்
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவ னெதிரே செல்லத்
தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்த ருழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தட்சணைகள் கொடுவென் ருரே.

உரை :—ஆ ஈன மழைபொழிய = பசுவானது கன்றுக்குட்டியைப் பெறவும் (அதற்குப் பக்குவம் பார்க்கப்போகும் சமயத்தில்) மழை பெய்யவும், இல்லம் வீழ = (அதே சமயத்தில்) வீட்டுச் சுவர் வீழ்ந்துவிட, அகத்து அடியாள் மெய் நோவ = வீட்டிலுள்ள ஏவலாள் வேலைசெய்ய முடியாமல் நோயுற, அடிமை சாவ = நிலத்தில் வேலை செய்யும் அடிமையாளன் இறந்துபோக, மா வீரம் போகுது என்று விதைகொண்டு ஓட = நிலத்திலுள்ள மழை யீரம் காய்ந்துபோய் விடுகிறதென்று தெரிந்து அதற்கு முன்னே நெல் வித்தை யெடுத்துக்கொண்டு விரைந்து செல்ல, வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ள = (இவ்வாறு செல்லும்போது) பாதையிலே நான் கடன் கொடுக்க வேண்டியவர்கள் தடுத்துக் கொடுவென்று கேட்க, சாவோலை கொண்டு ஒருவன் எதிரே செல்ல = இழவு செய்துகொண்டு ஒருவன் எதிரே ஓடி வர, தள்ள வொண்ணு விருந்துவர = கழிக்க முடியாத விருந்தினர் வரவும், சர்ப்பந் தீண்ட = அதே நேரத்தில் வீட்டிலுள்ள ஒருவரைப் பாம்பு கடித்துவிடவும், கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்க = அரசன் நிலவரி கேட்கவும், குருக்களோ தட்சணைகள் கொடு என்றாரே = ஆசாரியர் காணிக்கை கேட்டு வந்தார், எ - று.

வறுமையினால் அயினை நிந்தித்துப் பாடியது.

18. கல்லுத்தான் மண்ணுத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித் தானு
இல்லுத்தான் பொன்னுத்தா னெனக்குத்தான்
கொடுத்துத்தா னிரட்சித் தானு

அல்லேத்தான் சொல்லித்தா னுரைத்தா
னுவத்தா னுயோ வெங்கும்
பல்லேத்தான் றிறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்ருன் பண்ணி னனே.

உரை :—பதுமத்தான் = தாமரைப் பூவிலிருக்கும் அயன், கல்லேத்தான் மண்ணேத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானு =....., இல்லேத்தான் பொன்னேத்தான் = குடியிருக்க வீட்டையும் செலவழிக்கப் பொருளையும், எனக்குத்தான் கொடுத்தானு..., அல்லேத்தான் சொல்லேத்தான் = படுக்துயாரத்தைக் கூறி, ஆரைத்தான் நோவத்தான் = யாரை நொந்து கொள்வது, ஐயோ எங்கும் பல்லேத்தான் திறக்கத்தான் =....., புவியில்தான் பண்ணினனே = பூமியில் கம்மைப் படைத்து விட்டான், எ - று.

19. வஞ்சகர்பா னடந்தலேந்த காலிற் புண்ணும்
வாசருெறு முட்டுண்ட தலேயிற் புண்ணுஞ்
செஞ்சொல்லே நினேந்துருகு நெஞ்சிற் புண்ணுந்
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தே னப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலா லுதைத்தபுண்ணுங் கோப மாகப்
பஞ்சவரி லொருவன்வில்லா லடித்த புண்ணும்
பாரென்றே காட்டிநின்ருன் பரமன் ருனே.

உரை :—வஞ்சகர்பால் நடந்து அலேந்த காலிற் புண்ணும் = ஏமாற்றுகின்றவர்களிடத்திற் போய்த் திரிந்ததினு லேற்பட்ட கால் நோவும், வாசல் தொறும் முட்டுண்ட தலேயில் புண்ணும் = ஒவ்வொரு வீட்டு வாசலிற் போய் தலே தட்டியதினு லேற்பட்ட நோவும், செஞ்சொல்லே நினேந்துருகு நெஞ்சில் புண்ணும் = செம்மையான மொழியுடைய பாட்டை மதிப்பாரில்லேயே என்று எண்ணுவதா லுண்டாகும் என் மன வருத்தமும், தீரும் என்றே சங்கரன்பால் சென்றேன் அப்பா = ஒழிப்பீராக வென்று சிவபெருமானே வேண்டிக்கொள்ளப் போனேனேயா, பரமன் = அந்தப் பரமசிவன் கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் = பிரம்படியினுற் பட்ட நோவு சிறிதல்ல வுதையும், வேடன் கொடுங்காலால் உதைத்த புண்ணும் கோபமாகப் பஞ்சவரில் ஒருவன் வில்லால் அடித்த புண்ணும் = வேடராகிய கண்ணப்பர் தமது வலேந்த காலால் கண்ணைப் பொத்தியபோ துண்டான புண்ணும் கினங்கொண்டு ஐவரி லொருவனுகிய அருச்சுனன் வில்லினுலடித்த புண்ணையும், பாரென்று காட்டி கின்ருன் = கீ பார்ப்பாயாக வென்று அவற்றை எனக்குக் காண்பித்தான், எ - று.

மழவரங்கனை இகழ்ந்தது.

20. கள்ளிக்கேன் முள்வேலி கழுதைக்கேன்
கடிவாளங் கறுப்பில் லாத
உள்ளிக்கேன் பரிமளங்க ளுவர்நிலத்துக்
கேன்விதைக ளொடித்துப் போடும்
சுள்ளிக்கேன் கோடாலி துடைப்பத்திற்கேன்
கவசஞ் சும்மா போகும்
பள்ளிக்கே னதிவீர மழவரங்க
பூபனெனும் பட்டந் தானே.

உரை :—கள்ளிக்கேன் - முள்வேலி = கள்ளி மரத்திற்கு முள்ளினு லமைக்கும் வேலி எதற்கு, கழுதைக்கேன் வடிவாளம் = குதிரைக்குப் போடு கிற கடிவாளம் கழுதைக்கு எதற்கு, கறுப்பில்லாத உள்ளிக்கேன் பரி மளங்கள் = வெள்ளை உள்ளிக்குச் சுகந்த வாசனைப் பொருள்கள் என் கலக்க வேண்டும், உவர் நிலத்துக்கு என் விதைகள் = உப்புத் தரையில் விதை விதைப்பதால் என்ன பயன், ஒடித்துப் போடும் சுள்ளிக்கேன் கோடாலி = கையினு லொடிக்கக்கூடிய சிறு குச்சிகளுக்குக் கோடாலி எதற்கு, துடைப் பத்திற்கு ஏன் கவசம் = பெருக்குமாற்றுக்கு அதினை மூட அங்கி யெதற்கு, சும்மா போகும் பள்ளிக்கு ஏன் = பயனில்லாம லிருக்கின்ற பள்ளிக்குல அற்பனுக்கு எதற்கு, அதிவீர மழவரங்க பூபனென்னும் பட்டந்தானே = ..., எ - று.

ஆரோதன் மைந்தன்மீது பாடியது.

21. கயக்காவி நாறுங் குழம்பிற்பிர சண்டா
காரார் கொடைச்செங்கை யாரோதன் மைந்தா
இயக்காநின் மார்பிற் செழும்புன்னை யந்தார்
இப்போது நீநல்கி லென்பேதை மார்பில்
சயக்காம வேளம் புதையாது முத்துத்
தாமஞ் சுடாசந் தனம்பூசி னலும்
செயக்காது வேயோ செவிக்கும் பொறுக்கும்
தீயென்ன மீளாது திங்கட் கொழுந்தே.

உரை :—கயக்காவி நாறும் குழம்பிற் பிரசண்டா = குளத்திற் பூக்கும் குவளைப்பூ மாலையையும் வாசனை பொருந்திய சந்தனக் குழம்பையும் அணிந்த வீரனே ! காரார் கொடைச் செங்கை யாரோதன் மைந்தா = மேகம் போன்ற சுகையையுடைய செம்மையான கையையுடைய ஆரோதன் என் பவனுடைய புதல்வனே ! இயக்கா = கந்தர்வன் போன்றவனே ! நின் மார் பில் செழும் புன்னை அந்தார் = உன் மார்பி லணிந்துள்ள அழகான புன்

னைப்பூ மாலையை, இப்போது நீ நல்கில் = இப்போது நீ யளித்தால், என் பேதை மார்பில் சயக்காம வேள் அம்பு தையாது = எனது சிறு பெண்ணின் தனங்களில் வெற்றியுடைய மன்மதனது கணை அழுந்தாது, முத்துத் தாமம் சுடா = முத்து மாலையானது வெதும்பாது, சந்தனம் பூசினலும் செயக்காது = சந்தனத்தைத் தடவினலும் அது தின்புறுத்தாது, வேயோ செவிக்கும் பொறுக்கும் = புல்லாங்குழ லோசையைக் காது கேட்கக்கூடும், திங்கள் கொழுந்தே நீ என்ன மீளாது = இளஞ் சந்திரன் நெருப்புப்போலத் திரும்பி உதிக்கமாட்டாது, எ - று.

சிவந்தானென்னும் வள்ளலின்மீது பாடியது.

22. சொன்னமன்ன மாடைதந்தான் வீதியில்வெற்
றிலைமடித்துச் சுருளுந் தந்தான்
கன்னவின்மோ திரந்தந்தான் சரப்பணிதந்
தானிரட்டைக் கடுக்கன் றந்தான்
செந்நெல்விளை யூர்தந்தான் பேர்தந்தான்
மல்லையில்வாழ் சிவந்தா னுங்கட்
கென்னதந்தா னென்றவர்கட் கெத்தனையுத்
தரந்தந்தா னியம்பத் தானே.

உரை :—மல்லையில் வாழ் சிவந்தான் = மாபலி புரத்தில் வசிக்கும் சிவந்தானென்னும் வள்ளல், உங்கட்கு என்ன தந்தான் என்றவர்கட்கு = ..., எத்தனை உத்தரம் தந்தான் இயம்பத்தானே = எத்தனையோ வகை யாகப் பதில் சொல்வதற்கு உதவி செய்தான், சொன்னம் அன்னம் ஆடை தந்தான் = பொன் உணவு உடை யிவைகளைக் கொடுத்தான், வீதியில் வெற்றிலை மடித்துச் சுருளுந் தந்தான் = தெருவில் வெற்றிலையை மடித்து அதனைச் சுருளாகக் கொடுத்தான், கல் நவில் மோதிரம் தந்தான் சரப்பளி தந்தான் இரட்டைக் கடுக்கன் தந்தான் = இரத்தினக் கற்களிழைத்த கணையாழியும் தொங்கு பதக்கமும் சோடிக் கடுக்கனும் அளித்தான், செந் நெல் விளை ஊர் தந்தான் = நல்ல நெல் பயிராகின்ற விடங்களை யளித்தான், பேர் தந்தான் = பட்டமளித்தான், எ - று.

சீதாராமனென்னும் வள்ளலைப் பாடியது.
நடுவெழுத்தலங்காரம்.

23. அத்திரம்வே லாவல்லயமி ராசி யொன்றிற்
கமைந்தபெயர் மூன்றினிடை யக்க ரத்தால்
மெத்தநடுக் குற்றுனவந் தடைந்தே னிந்த
விதனமகற் றிடுமற்றை யெழுத்தோ ராறில்

பத்துடையர் னைத்தடிந்து பெண்ணுய்ச் செய்து
பரிவினுகர் வோனிருதாள் பணிந்து போற்றும்
சித்தசனே தெளியசிங்கன் றவத்திற் ரோன்றுஞ்
சீதாரா மப்பரல தியாக வானே.

உரை :—அத்திரம் வேலா வலயம் இராசியொன்றிற்கு அமைந்த பெயர் மூன்றில்=அம்பு கடல் பனிரண்டு ராசிகளில் ஒன்ருகிய கன்னி யென்ற இந்த மூன்று சொற்களில், இடை அக்காரத்தால் மெத்த நடுக்குற்று உனை வந்து அடைந்தேன்=இவற்றின் நடுவிலுள்ள எழுத்துக்களாலாகிய கடலுல் மிகவும் கலங்கி உன்பால் வந்து சேர்ந்தேன், இந்த விதனம் அகற்றிடு=இந்த வேதனையை ஒழித்து விடுவாயாக, மற்றை எழுத்தோராறில்=பிற எழுத்துக்கள் ஆறும், மூன்று சொற்களாக=அவற்றி லொன்ருகிய பழிகாரணமாக, பத்துடையானைத் தடிந்து=பத்துத்தலை இராவணனைக் கொன்று, பெண்ணுய்ச் செய்து=மற்றென்ருகிய கல்லை அகலிகையாக மாற்றி, பரிவின் நுகர்வோன்=மூன்ருவது சொல்லாகிய கனியைச் சவரி அன்பினுற் கொடுக்க உண்டவனுகிய இராமபிரானது, இருதாள் பணிந்து போற்றும்=இரண்டு திருவடிகளையும் வணங்கித் துதிக்கும், சித்தசனே=மன்மதன் போன்றவனே! தெளிய சிங்கன் தவத்தில் தோன்றும் சீதா ராம=தெள்ளிய சிங்க னென்பவர்க்கு வரத்தின் பலனுக அவதரித்த சீதா ராமனென்னும், பிரபல தியாகவானே=கீர்த்திபெற்ற கொடையாளியே, எ - று.

குறிப்பு :—மூன்று சொற்கள் பகழி, கடல், கன்னி என்பன.

உலோபியை இகழ்ந்து பாடியது.

24. கல்லாலயமாந்தேவருமாங் கழுதைகசட்பொதிசுமக்குங்
கடாவோவுழுதுபயிரிட்டற்காங் கட்டம்பன்றிக்கிரையாகும்
புல்லேறீசர்வாகனமாம் பொதியுஞ்சுமக்கும் பிணமெனிலோ
பூசிமுடித்துமறையோர்க்குப் பொருளாயீந்துபுகழெய்தும்
மல்லார்குட்டிச்சுவரெனிலோ மாடுமுறைஞ்சுமறைவாகும்
மதியாத்துடைப்பந்தானெனிலோ மாட்கூடந்தனைவிளக்கும்
அல்லாதுலுத்தன் றனக்கிணையா யாரையுரைப்பேன்புவிமீதில்
அவனைக்குறித்துக்கூறுமிடத் தவனுக்கவனேசரிதானே.

உரை :—கல் ஆலயம் ஆம் தேவரும் ஆம்=கல்லானது கோயில் கட்டவும் உதவும் தெய்வமாகவும் பாவிக்கப்படும், கழுதை கசடர் பொதி சுமக்கும்=கழுதையானது கீழ் மக்களுடைய சாமான் சுமைகளைத் தாங்கும், கடாவே உழுது பயிரிடற்கு ஆம்=எருமைக் கடாவானது உழவு வேலைக்குப் பயன்படும், கட்டம் பன்றிக்கு இரையாகும்=மலம் பன்றிக்குத் தீனியாகும்

புல் ஏறு ஈசர் வாகனம் = சிறிய காளையானது சிவபெருமானுடைய ஊர்தி யாகும், பொதியும் சுமக்கும் = பாரமும் தாங்கும், பிணம் எனிலோ பூசி முடித்து மறையோர்க்குப் பொருளே ஈந்து புகழ் எய்தும் = சவமானது வாசனைப்பொடி பூசிப் பூ முடித்து மந்திரங் கூறுகின்றவர்களுக்குத் தெட் சணை கொடுப்பித்துச் சிறப்பாகப் பேசப்படும், மல்லார் குட்டிச்சுவர் எனிலோ மாடும் உரைஞ்சும் = கல்ல குட்டிச்சுவாயின் அது மாடு உராய்ந்து கொள்வதற்கு இடமாகும், மறைவாகும் = எதாவது மறைப்பதற்கு ஒரு சாதனமாகும், மதியாத் துடைப்பந்தான் எனிலோ மாடகூடந்தீனி விளக்கும் = யாரும் பொருட்படுத்தாத பெருக்குமா றெனிலோ மாடமாளிகை களிலுள்ள குப்பையை அகற்றும், அல்லாது உலுத்தன் தனக்கு இணையாய் யாரையுரைப்பேன் புவிமீதில் = இவையெல்லாம் பயனுடையன வாதலின் யாதுபயனு மில்லாத உலோபிக்கு ஒப்பாக உலகத்தில் யாரைக் கூறலா மெனின், அவனைக் குறித்துக் கூறுமிடத்து = ..., அவனுக்கு அவனே சரி தானே = அவனே ஒப்பாவான், எ - று.

திருவாரூர்ப் பெருமான் பவனிகண்டு புள்ளிடங் கூறியது.

25. வீரவெண்டை யப்ரதாபர் தியாகராசர் கமலசூழ்
வீதிகண்டு பவனிகண்டு விந்தைகண்டு பந்தியாய்த்
தூரநின்ற பூவைகா ளடுத்துநின்ற கிள்ளைகாள்
துன்பமே யலாதுபாவி சுகமறிந்த தில்லையால்
மாரனம்பு பட்டகாய மாறுதில்லை யிரவெலாம்
மங்கைமார் தொடுத்தசண்டை மாறுதில்லை யென்செய்வேள்
ஆரிருந்து முதவியில்லை யென்றனுசை யொழியுமோ
அதுவுமில்லை விதியைநொந்து மாவதில்லை காணுமே.

உரை :—வீர வெண்டையப் பிரதாபர் = வெற்றிச் செம்பணிந்த பெரு வீராகிய, தியாகராசர் = ..., கமலசூழ் வீதிகண்டு = திருவாரூர்த் தெருவின் அழகைப் பார்த்து, பவனி கண்டு = அவர் ஊர்கோலம் வருவதைப் பார்த்து, விந்தைகண்டு = இந்த அதிசயங்களைக்கண்டு, துன்பமே யலாதுபாவி சுகமறிந்த தில்லை = பாவியாகிய நான் துயரமல்லாது இன்பமொன்றையும் அனுபவிக்க வில்லை, பந்தியாய்த் தூரநின்ற பூவைகாள் அடுத்த நின்ற கிள்ளைகாள் = வரிசையாய் அகன்று நின்ற நாகணவாய்ப் புட்களே! பக்கத்தில் நின்ற இளி களே! மாரன் அம்புபட்ட காயம் ஆறுதில்லை = காமன் கணை தைத்து ஏற் பட்ட புண்ணானது குணமாகவில்லை, இரவெலாம் மங்கைமார் தொடுத்த சண்டை மாறுதில்லை = இராத்திரியெல்லாம் பெண்டிர் நடத்திய போரானது ஒழியவில்லை, என் செய்வேன் = நான் யாது செய்தல் கூடும், ஆரிருந்தும் உதவியில்லை = உறவினர் யாரு மிருந்தாலும் துன்ப நீக்கத்திற்குத் தீணை

புரிவாரில்லை, என்றன் ஆசைத் தொழியுமோ அதவுமில்லை விதியை நொந்தும் ஆவதில்லை காணுமே=....., எ - று.

முருகர் மீது பாடியது.

சத்தபங்கி.

26. திமிரமருத புலாதிகளேதரு தேடரிதாய் மாறுஞ்
சென்னமகாமால் வசமேமதமுறு சிறுமையின் மதியாலே
குமரசிகாமணி யேகனிவாயருள் கூடெனவே கூறுங்
குருபரகோலா கலனேவிதியொடு குறுகிய மிடிதீராய்
நமதுவிநாயக தேவசகோதர நாடொறுமே தேறுந்
நவிமகள்சேர்வே டுவனேபுதுமண நறுமலர் புனைமார்பா
அமரர்பிரானருள் குஞ்சரிதோள் புணராட வனேமீறும்
மரகரவேலா யுதனேமுதுமறை யறுமுக முருகோனே.

உரை :—குமர சிகாமணியே=முருகப் பெருமானுகிய தேவர் தலைமணியாக விளங்குபவனே! கனிவாய் அருள் கூடு எனவே கூறும் குருபர=இரக்கத்தோடு கருணையைப்பெற்று உய்யக்கடவாயென்று உபதேசஞ் செய்யும் மேலான ஆசாரியனே, கோலாகலனே=ஆடம்பரமானவனே, நமது விநாயக தேவ சகோதர=நம்முடைய விக்கினேஸ்வரக் கடவுளுக்குத் தம்பியே, நான்தோறுமே தேறும்=ஒவ்வொரு நாளும் எல்லாவற்றையும் ஆய்ந்தறிகின்ற, நவிமகள் சேர் வேடுவனே=மான் புதல்வியாகிய வள்ளியம்மையை அணைகின்ற வேட வடிவங்கொண்டவனே, புதுமணம் நறுமலர் புனை மார்பா=நவமான மணமுடைய பூக்களினுல் அலங்கரிக்கப்பட்டதிரு மார்பினை புடையவனே, அமரர் பிரானருள் குஞ்சரி தோள் புணர் ஆடவனே=இந்திரன் மகளாகிய தெய்வயானையின் தோள்களை அணைத்த அண்ணலே, மீறும் அரகர=மேலான சிவபெருமானுக்கு உபதேசஞ் செய்யும் குருவே, வேலாயுதனே = வேற்படையைத் தரித்தவனே, முதுமறை அறுமுக முருகோனே=பழமையாகிய வேதங்களுக்குத் தலைவனுன ஆறு முகங்களை யுடைய குமரக் கடவுளே, திமிரம் அறுத புலாதிகளே தரு=இருள் நீங்காத ஐம்புலன் அந்தக்கரணங்கள் முதலியவற்றுலுண்டாகிய, தேடு அரிதாய் மாறும்=காணமுடியாததாய் மாறிமாறி வருகின்ற, சென்ன மகா மால் வசமே=பிறப்பென்னும் பெரிய மயக்கத்தின் வசமாகி, மதமுறு சிறுமையின் மதியாலே=செருக்கு மிகுந்த புல்லறிவினுலே ஏற்படும், விதியொடு குறுகிய மிடி தீராய்=வினைப் பயனுல் வருகின்ற தரித்திரத்தை யொழித்தருள்வாயாக, எ - று.

திமிரமருத புலாதிகளே தரு - தேடரிதாய்
மாறுஞ்சென்ன மகாமால்வசமே - மதமுறுசிறுமையின் மதியாலே
குமரசிகாமணியே கனிவாயருள் - கூடெனவே
கூறுங்குருபர கோலாகலனே - விதியொடு குறுகிய மிடிதீராய்

நமதுவிநாயக தேவசகோதர-நாடொறுமே
தேறுந்நவிமகள் சேர்வேடுவனே-புதுமணநறுமலர் புனைமார்பா
அமரர்பிரானருள் குஞ்சரிதோள்புணர்-ஆடவனே
மீறும்மரகர வேலாயுதனே-முதுமறை அறுமுக முருகோனே.

சத்தபங்கியின் பிரிவு.

கட்டளைக் கலித்துறை.

1. திமிர மருத புலாதிக ளேதரு தேடரிதாய்
குமர சிகாமணி யேகனி வாயருள் கூடெனவே
நமது விநாயக தேவச கோதர நாடொறுமே
அமரர் பிரானருள் குஞ்சரி தோள்புண ராடவனே.

கொச்சகம்.

2. தேடரிதாய் மாறுஞ் சென்னமகா மால்வசமே
கூடெனவே கூறுங் குருபர கோலாகலனே
நாடொறுமே தேறும் நவிமகள்சேர் வேடுவனே
ஆடவனே மீறும் அரகரவே லாயுதனே.

கலி விருத்தம்.

3. மாறுஞ் சென்ன மகாமால்வசமே
கூறுங் குருபர கோலாகலனே
தேறும் நவிமகள் சேர்வேடுவனே
மீறும் அரகரவே லாயுதனே.

சிந்தடிவஞ்சி விருத்தம்.

4. மதமுறு சிறுமையின் மதியாலே
விதியொடு குறுகிய மிடிதீராய்
புதுமண நறுமலர் புனைமார்பா
முதுமறை யறுமுக முருகோனே.

குறளடி வஞ்சி விருத்தம்.

5. சிறுமையின் மதியாலே
குறுகிய மிடிதீராய்
நறுமலர் புனைமார்பா
அறுமுக முருகோனே.

வெண்பா.

6. தேடரிதாய் மாறுஞ் செனனமகா மால்வசமே
நாடொறுமே தேறு நவிமகள்சேர்—வேடுவனே
ஆட்வனே மீறு மரகரவே லாயுதனே
கூடெனவே கூறுங் குரு.

இதுவுமது.

நவபங்கி.

27. அரிமரு காகரு ணைய னேதிட வாரணனே போதன்
அரியிமை யோர்சூழ் புனித புலவட் ரயிலமர் பொற்கரனே
கரிமுக னேயசகோ தரனே படிகா ரணனே நாதங்
கதியுற வேவா னவனே நலமிகு கயிலைய னற்குருவே
குரவலர் நீபம ணிப்புயனே வடிகூ ரமுதே யோதுங்
குருமணி சேர்மார் பினனே யுலகருள் குயிலுத வுத்தமனே
மரகத மாமயில் வாகனனே கொடிவா ரணனே கோதின்
மதியக மேவாழ் குமரா குலவிய மயிலைம லைக்குகனே.

உரை :—அரிமருகா = விண்டுவுக்கு மருமகனே! கருணையனே = அருள் தங்குங் கோயிலானவனே, திடவாரணனே = உறுதியான வேதப் பொருளானவனே, போதன் அரி இமையோர் சூழ் புனித = அயன் திருமால் முதலிய தேவர்கள் சுற்றி வழிபடுகின்ற தூயவனே, புலவு அடர் அயில் அமர் பொற்காரனே = ஊன் மணம் கமழும் கூரியவேல் தங்கும் அழகிய திருக்கர முடையவனே, கரிமுகன் நேய சகோதரனே = ஆனைமுகக் கடவுளின் அன்பான தம்பியே, படிகாரணனே = பூவுலகிற்குக் காரணமானவனே, நாதம் கதியுறவே = நாததத்துவம் முடிகின்ற இடத்திற்கு ஆதாரமானவனே, வானவனே = மேலான தேவனே, நலமிகு கயிலையன் நற்குருவே = நன்மைகள் மிகுதியுள்ள கைலைமலைக்கு அதிபதியாயுள்ள அரனுக்குப் பிரியமான ஆசாரியனே, குரவலர் நீபமணிப் புயனே = குரவம் பூமாலையும் கடப்ப மாலையுமணிந்த தோள்களை யுடையவனே! வடி கூர் அமுதே = வடித்தெடுத்த அறிவுக் கூர்மையுடைய அமுதமய மானவனே; உத்தம குருமணி சேர் மார்பினனே = சிறப்பாகப் பேசப்படுகின்ற உயர்ந்த நிறமுடைய இரத்தினங்களணிந்த மார்பினையுடையவனே, உலகு அருள் குயில் உதவு உத்தமனே = புவனங்களைப் படைத்த குயில்போலுங் குரலுடைய பார்வதி பெற்ற நன்மகனே, மரகத மாமயில் வாகனனே = பெரிய பச்சை மயிலை யூர்தியாகக் கொண்டவனே, கொடி வாரணனே = கோழிக் கொடியையுடையவனே, கோதில் மதி அகமே வாழ் குமரா = குற்றமற்ற அறிவினுள்ளே தங்குகின்ற

குமரக் கடவுளே, குலவிய மயிலைமலைக் குகனே=சிறப்புப் பொருந்திய மயிலை மலையில் வீற்றிருக்கின்ற குகப் பெருமானே! (இருதய கமலத்தில் வாழ்பவனே), எ - று.

அரிமருகா கருணையனே-திட-ஆரணனே
போதன்அரியிமையோர்தூழ் புனிதா-புலவடர்-அயிமர்பொற்கரனே
கரிமுகனேய சகோதரனே-படி-காரணனே
நாதங்கதி யுறவே வானவனே-நலமிகு-கயிலையனற்குருவே
குரவலர் நீப மணிப்புயனே-வடி-கூரமுதே
ஒதுங் குருமணிசேர் மார்பினனே-உலகருள்-குயிலுதவுத்தமனே
மரகதமாமயில் வாகனனே-கொடி-வாரணனே
கோதின் மதியகமே வாழ்குமரா-குலவிய-மயிலைமலைக்குகனே.

நவபங்கியின் பிரிவு.

சிந்தடிவஞ்சி விருத்தம்.

1. அரிமருகா கருணையனே
கரிமுகனேய சகோதரனே
குரவலர்நீப மணிப்புயனே
மரகதமாமயில் வாகனனே.

கலி விருத்தம்.

2. புலவடரயிலைமர் பொற்கரனே
நலமிகுகயிலை நற்குருவே
உலகருள்குயிலுத வுத்தமனே
குலவியமயில மலைக்குகனே.

கட்டளைக் கலித்துறை.

3. அரிமரு காகரு ணைய னேதிக ழாரணனே
கரிமுக னேய சகோதர னேபடி காரணனே
குரவலர் நீப மணிப்புய னேவடி கூரமுதே
மரகத மாமயில் வாகன னேகொடி வாரணனே.

கொச்சகம்.

4. ஆரணனே போத னரியினைமயோர் தூழ்புனிதா
காரணனே நாதங் கதியுறவே வானவனே

கூரமுதே யோதுங் குருமணிசேர் மார்பினனே
வாரணனே கோதின் மதியகமே வாழ்குமர.

சந்த விருத்தம்

5. போதன்னரியிமையோர்சூழ் புனிதாபுலவடரயிலிமர்பொற்கரனே
நாதங்கதியுறவேவானவனே நலமிகுகயிலையனற்குருவே
ஓதுங்குருமணிசேர்மார்பினனே யுலகருள்குயிலுதவுத்தமனே
வாரணனேகோதின் மதியகமேவாழ்குமரா.

கலி விருத்தம்.

6. போதன் அரியிமை யோர்சூழ் புனிதா
நாதங் கதியுற வேலா னவனே
ஓதுங் குருமணி சேர்மார் பினனே
கோதின் மதியக மேவாழ் குமரா.

குறளடிவஞ்சி விருத்தம்,

7. அயிலமர் பொற்கரனே
கயிலைய னற்குருவே
குயிலுத வுத்தமனே
மயிலமலக் குகனே.

8. திடவா ரணனே
படிகா ரணனே
வடிகூ ரமுதே
கொடிவா ரணனே.

வெண்பா.

9. ஆரணனே போதன் அரியிமையோர் சூழ்புனிதா
கூரமுதே யோதுங் குருமணிசேர்—மார்பினனே
வாரணனே கோதின் மதியகமே வாழ்குமரா
காரணனே நாதங் கதி.

எல்லீசுதுரை

பாடியது

இராமச்சந்திரக் கவிராயர்மீது பாடியது

1. செந்தமிழ்ச் செல்வனு மோரா யிரந்தலைச் சேடனும்யாழ்
சுந்தரத் தோடிசை வல்லோனும் யாவருந் தோத்திரஞ்செய்
கந்தனைச் சொல்லுங் கவிராம்ச் சந்த்ரனைக் கண்டுவெட்கி
யந்தர வெற்பிழி பாதாளந் தேடி யடங்கினரே.

உரை :—செந்தமிழ்ச் செல்வனும்=செம்மையான தமிழ்ந்தத் தலைவ ராகிய அகத்தியரும், ஓராயிரந்தலைச் சேடனும்=இணையற்ற ஆயிரந் தலையையுடைய ஆதிசேஷனும், யாழ் சுந்தரத்தோடு இசைவல்லோனும்= வீணை அல்லது யாழினை அழகாக வாசித்து இசை பாடவல்ல நாரதனும், யாவரும் தோத்திரஞ் செய் கந்தனைச் சொல்லுங் கவி ராமச்சந்திரனை= எல்லாரும் துதிக்கின்ற முருகனைப் பாடும் பாவலராகிய இராமச்சந்திர கவி ராயரை, கண்டு வெட்கி=பார்த்து நாணமடைந்து, வெற்பு இழி பாதாளம் அந்தரம்=மலையே மலையினும் பாதாளத்திலும் வானுலகத்திலும், ஓடி அடங்கினர்=விரைந்துபோய் ஒளித்துக்கொண்டனர், எ - று.

முற்றிற்று.

திருமகள் விலாச அச்சு நிலையம், சென்னை :—1948.